சின்னணஞ்சான் கதை

THE MISPLACED ROYAL ROMANCE

INSTITUTE OF ASIAN STUDIES
Chemmancherry, Chennai - 600 119.
INDIA

THE MISPLACED ROYAL ROMANCE
சின்னணைஞ்சான் கதை

General Editor

Dr. G. JOHN SAMUEL

Editor

G. UTHIRADAM

English Rendering

DR. R. RAJARATHINAM

INSTITUTE OF ASIAN STUDIES

Chemmancherry, Chennai – 600 119

INDIA

Silver Jubilee Celebration Series - 3

The Misplaced Royal Romance

சின்னணைஞ்சான் கதை

First Edition 2005, pp. 493

Publication No. 95

ISBN 81-87892 - 24 - 2

© Institute of Asian Studies
Price Rs. 400 US $ 40

Published with the financial assistance from the **UNESCO** under the **Memory of the World** project

Copies can be had from

Publications Division,
Institute of Asian Studies,
Chemmancherry,
Chennai - 600 119.
India.
Phone: (Off.) 24501851, 24500831, 24502212
(Res.) 24964831
Fax : 91-44-24964831
E-mail: ias@xlweb.com
World Wide Web site : http : // xlweb.com/heritage/asian

Composed by
Institute of Asian Studies, Chennai - 600 119.

Printed at Student Offset Services. Chennai - 1. ✆42052908

A System of Transliteration of Tamil

VOWELS

Short		Long		Dipthong	
அ	a	ஆ	ā	ஐ	ai
இ	i	ஈ	ī	ஔ	au
உ	u	ஊ	ū		
எ	e	ஏ	ē	ĀYTAM	
ஒ	o	ஓ	ō	ஃ	ḵ

CONSONANTS

Hard		Soft		Medial	
க்	k	ங்	ṅ	ய்	y
ச்	c	ஞ்	ñ	ர்	r
ட்	ṭ	ண்	ṇ	ல்	l
த்	t	ந்	n	வ்	v
ப்	p	ம்	m	ழ்	ḻ
ற்	ṟ	ன்	ṉ	ள்	ḷ
ஸ்	s	ஷ்	ṣ	ஹ்	h
		ஜ்	j		

Contents

		பக்க எண்
1.	பதிப்புரை	5 - 14
2.	Editor's Note	15 - 20
3.	ஆய்வுரை	21 – 54
4.	Critical Notes	55 - 77
5.	The Misplaced Royal Romance	
	(Text and commentary - Tamil & English)	79 - 456
6.	துணைநூற் பட்டியல்	457 - 461
7.	பாடல் முதற்குறிப்பு	462 –464
8.	சொல்லடைவு	465 - 498

பதிப்புரை

தமிழுக்காகவும் தென்னிந்திய மொழிகளுக்காகவும் பல தொண்டுகளைச் செய்துவரும் ஆசியவியல் நிறுவனம் வெளியுலகுக்கு வராமல் ஓலைச்சுவடிகளாகவும், வாய்மொழியாகவும் மறைந்து கிடக்கும் பல நூல்களை வெளிக்கொணருவதைத் தன் தலையாய கடமையாகக் கொண்டுள்ளது. இந்நிறுவனத்தின் சுவடித்துறை இதுவரை இருபத்தைந்திற்கும் மேற்பட்ட நூல்களைச் சுவடியிலிருந்து பதிப்பித்து வெளியிட்டுள்ளது.

இலக்கியம், அறிவியல் நூல்களை விட கதைப்பாடல்கள் பதிப்பிக்கப்படும் போது தமிழ்நாட்டின் பண்பாட்டு வரலாறும், சமூக வரலாறும் நன்கு அறியப்படுகின்றன. சமூகக் கதைப்பாடல்கள் பெரும்பாலும் சாதிக்கொடுமைகள், சமூகப் பழக்க வழக்கங்கள், கதை நடந்தகாலத்துச் சமுதாயச் சூழ்நிலை போன்றவற்றை அறியப் பெரிதும் உதவுகின்றன. எனவே அவற்றைப் பதிப்பித்து வெளியிடுவது இன்றியமையாததாகின்றது. 'இக்கதைப் பாடல்களைப் பதிப்பித்து வெளியிடுவதில் கால நீட்டிப்பு ஏற்பட்டால் கதைகள் காலப்போக்கிற்கு ஏற்ப கூட்டியும், குறைத்தும், மாற்றியும் எழுதப்பட்டுவிடும் : உண்மையான வரலாறு அழிக்கப்பட்டு விடும்' என்ற காரணத்தால் விரைந்து பதிப்பிக்க வேண்டியநிலையில் உள்ளோம்.

பதிப்புச் சுவடி

ஆசியவியல் நிறுவனச் சுவடித் துறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்ற

1. மாது பொன்னுருவி கதை (சுவடி எண். 46)
2. சின்னணஞ்சான் கதை (சுவடி எண் – 47)
3. சின்னணஞ்சி கதை (தாள்சுவடி – எண் – 7)

ஆகிய மூன்று சுவடிகளும் பதிப்பிற்கு எடுத்துக் கொள்ளபப்பட்டுள்ளன.

பதிப்பு நோக்கம்

பதிப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சின்னணஞ்சான் கதை, அரச குலத்தில் பிறந்த ஒருவன் வண்ணார் குலப் பெண்ணை விரும்பி அவளோடு வாழ்ந்தமையால் போர் ஏற்பட்டு அவன் வாழ்க்கை திசைமாறிப் போன வரலாற்றைக் குறிப்பதாகும். இக்கதை ஒவ்வொரு சுவடியிலும் ஒவ்வொரு விதமாக மாற்றம் பெற்று எழுதப்பட்டுள்ளது.

1. ஊருக்குத் தலைவரான நாடாரின் மகன் நாவித இனத்தைச் சேர்ந்த பெண்ணை விரும்பி மணந்ததினால், காதலனும், காதலியும் கொல்லப்படும் நிகழ்ச்சி விவரிக்கப்படுவதே சிவனணைஞ்சி கதை என்பது ஒரு கருத்து.[1]

2. தென்காசிப் பாண்டியன் சீவலமாறனின் தங்கையான பொன்னுருவியின் மகன் சின்னணஞ்சான் வண்ணார் குலப் பெண்ணை வசியம் செய்து வாழ்ந்தமையால் போர் ஏற்பட்டுத் தற்கொலை செய்து கொண்டு இறைவனிடம் வரம் வாங்கித் தெய்வமானான் என்பது மற்றொரு கருத்து.[2]

3. வண்ணார் குலப் பெண்ணை வசியம் செய்த சிவனணஞ்சான் தங்கள் குடும்பப்போர் ஒன்றில் சின்னணஞ்சியை இழந்து தோல்வியுற்று மாமனால் வெட்டிக் கொல்லும்படி ஆணையிடப்பட்டான் என்பது வேறொரு கருத்து. இது குறைப்பிரதி ஆதலால் வெட்டிக்கொல்லப்பட்டானா என்பது தெரியவில்லை.[3]

4. மற்றுமொரு சுவடி சின்னணஞ்சான் வெற்றி பெற்றான் என்றும் வண்ணார் குலப் பெண்ணான சின்னணஞ்சி இறக்கவில்லை என்றும் கூறுகிறது.[4]

5. சின்னணஞ்சியை வசியத்தால் மயக்கிய சின்னணஞ்சான் மீது சீவலமாறன் கோபமுற்று அவனைப் பிடிக்கப்ப படையை அனுப்புகிறார். கற்புகெட்டு நிற்பதைவிடத் தன் உயிரை மாய்த்துக் கொள்வதே நல்லது ' என்று எண்ணிச்

---

1 டாக்டர். ஏ.என். பெருமாள், தமிழில் கதைப்பாடல், ப. 143.

2 சிவனணைந்த பெருமாள் சுவாமி கதைப்பாடல் சுவடி, தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம்.

3 சின்னணஞ்சான் கதை சுவடி எண். 46, 47, ஆசியவியல் நிறுவனம்.

4 சின்னணஞ்சான் கதை சுவடி எண். 60, ஆசியவியல் நிறுவனம்.

சின்னணஞ்சானிடம் தன் கழுத்தை அறுத்துவிடுமாறு கூற அவனும் சின்னணஞ்சியின் கழுத்தை அறுத்துத் தன்னைக் கத்தியால் குத்திக்கொண்டு இறந்து போகிறான். பிறகு இருவரும் தெய்வமாகிறார்கள் என்பது வேறொரு சுவடி.[5]

6. இன்னொரு தாள் சுவடி சின்னணஞ்சி கதை என்ற தலைப்பில் முற்றுப்பெற்ற நிலையில் உள்ளது. இச்சுவடியில் வண்ணார் குலப் பெண்ணை வசியம் செய்த சின்னணஞ்சான், போரில் சின்னணஞ்சி இறக்க, சீவலமாறனின் தலையை வெட்டித் திருப்பாற் கடலில் எறிந்து விட்டுத் திருப்பாற் கடலில் நீராடியபின் மலைக்குச் சென்று எல்லா தெய்வத்திடமும் வரம் வாங்கி மணிகட்டிப்பொட்டலில் வந்து தெய்வமாகி வழிபாட்டுக்குரியவனாகிறார் என்று சொல்லப்படுகிறது.[6]

இப்படிப்பட்ட கதை வேறுபாடுகள் பல இருப்பதனாலும், வரலாற்றுச் செய்தியும், சமூகச் செய்தியும் இதில் பின்னிப்பிணைந்து கிடப்பதாலும் சின்னணஞ்சான் கதைப்பாடல் முனைவர் கு. நிர்மலாதேவி அவர்களால் பதிப்பிக்கப்பட்டு உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. அப்பதிப்பாசிரியர் ஆசியவியல் நிறுவனத்தில் 46, 47 எண் இடப்பட்டு பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள சுவடியையும், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடியையும் (எண். 376) பதிப்புக்கு எடுத்துக் கொண்டுள்ளார். நல்ல ஆய்வுரையும் எழுதியுள்ளார்.

46, 47–ஆம் எண்களில் இந்நிறுவனத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் இந்தச் சுவடியின் பதிப்பு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மூலம் வெளியாகி இருந்தபோதிலும் இதை இந்நிறுவனச் சுவடித்துறையின் வழி மீண்டும் பதிப்பித்து வெளியிட இயக்குநர் அவர்கள் இசைவு அளித்துள்ளார்கள். காரணம்,

1. இந்நிறுவனச் சுவடியில் தெளிவாக உள்ள சொற்கள், சொற்றொடர்கள், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவன வெளியீட்டில் பெருவாரியாகப் பிழைபட வெளியாகியுள்ளன.

---

5 சிவனணைஞ்சான் பெருமாள் கதை சுவடி எண். 376, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.

6 சின்ணைஞ்சி கதை (தாள் சுவடி – 7), ஆசியவியல் நிறுவனம்.

2. பல வரிகள் (ஒன்று முதல் 42 அடிகள் வரையில்) ஆங்காங்கே விடுபட்டு உள்ளன.

3. பாடல்களுள் பல இடங்களில் முன்னுக்குப் பின் மாறுபட்டுப் பதிப்பிக்கப் பட்டுள்ளன.

4. விருத்த நடை என்பதைக் குறிக்க சுவடியில் தனிக்குறியீடுகள் அமைத்துப் பல விருத்தங்கள் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் பெரும்பாலான விருத்தங்கள், விருத்தம் என்று காட்டப்படாமல் தரு, ஆசியப்பா, நடை போன்றவற்றோடு இணைத்து அதே அடிமுறையில் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

இத்தகு குறைபாடுகளை நீக்கித் தூய்மையான பதிப்பாகவும், பல இடங்களில் உள்ள எளிமையாக விளங்கிக் கொள்ளமுடியாத தொடர்களுக்கும், கருத்துக்களுக்கும் உரைவிளக்கம் கொடுத்து எளிய பதிப்பாகவும் கொண்டுவர வேண்டும் என்பது நிறுவனத்தின் நோக்கம்.

1. உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவன வெளியீட்டில் பிழைபட அமைந்துள்ள பகுதிகளுக்குச் சில சான்றுகள்.

அ. சுவடியில் கடவுள் வாழ்த்துப் பகுதியாக அமையும் தொடக்கப்பகுதியில் - அதாவது முதற் பாடலில் முதல் இரண்டு அடிகள் முறையே,

"பொன்னிலங்கு தென்கயிலை வாளுமர னாரும்
பூதல மழுந்ததிரு மாலுந்துணை யாமே"

என்று அமைகின்றன. இவற்றுள் 'வாளும்' என்பது 'வாழும்' எனவும் 'பூதல மழுந்த' என்பது 'பூதல மளந்த' எனவும் அமைய வேண்டிய சொற்கள், வழக்காற்றில் ழகர, ளகரங்கள் மாறுபட்டுள்ளன. ஆனால் சுவடியில் உள்ள இவ்விரு அடிகளும் முறையே,

"வெள்ளிலங்குந் தென்கயிலை வாழுமர னாரும்
பூதலம் பூந்ததிரு மாலுந்துணை யாமே"

என வெளியாகி உள்ளன. இவற்றுள் 'பொன்னிலங்கு' என்பது வெள்ளிலங்கு எனவும், 'அளந்த திருமால்' என்பது பூந்த திருமால் எனவும் அமைக்கப்பட்டு அவற்றிற்குப் பொருள் விளக்கமும் தரப்பட்டுள்ளது எவ்வாறு என்பது விளங்கவில்லை.

ஆ. "... மன்னனுட வேழமதுக் கொப்பாய்
பூவுலகில் மண்ணானைதான் சரியென்றாற் போல" (அடி – 27 – 28)

என்னும் உவமைத்தொடரில் 'மண்ணானை' என்பதை 'மண்ணனை' என்று கொண்டு மண்ணனை – 'மண்ணுணி' ஆகலாம் என்று பொருளும் தரப்பட்டுள்ளது. சுவடியில் உள்ள 'ணா' என்னும் வடிவம் ண கரமாகக் கொள்ளப்பட்டுப் பொருள் குழப்பமும் தரப்பட்டுவிட்டது.

இ. **"தெரிசனை மண்ணவென்று சித்தூர் தன்னில் வந்தாள்** என்னும் அடியை அடுத்து, **"சித்தூர் தன்னில் வந்து** அம்மை **சிவனார்** மகனைச் **சிந்தைசெய்து"**. என்னும் அறுசீர் விருத்த அடி தொடங்குகிறது. இந்த அடியை, **அத்தூர் தன்னில்வந்து** அடிமை**சிவனார்** மகனைச்**சிந்தை செய்து"** என **'சித்தூர்'** என்பது **'அத்தூர்'** எனவும் 'அம்மை' என்பது 'அடிமை' எனவும் பொருளும் அடியும் பொருத்தமின்றிப் பதிப்பாகியுள்ளன.

ஈ. இவற்றைப் போலவே,

பாலகன் றானில்லாமல்	என்பது **'பாலகனரு ளில்லாமல்'** எனவும் (54)
விருக்ஷத்துக்கும் பிள்ளைவுண்டு	என்பது **'வருஷத்துக்கும் பிள்ளையுண்டு'** எனவும் (73)
பேழையயிறோனே	என்பது **'ஏழையயிறோனே'** எனவும் (557)
நீகேட்டால்	என்பது **'தீகண்டால்'** எனவும் (803)
இடிந்த மதிலும்	என்பது **'இருந்த மதிலும்'** எனவும் (930)
சிவப்பால் நரம்பு	என்பது **'சிறுபால் நரம்பு'** எனவும் (1005)
ஏத்த ஆலிலை	என்பது **'செத்த ஆலிலை'** எனவும் (1006)

வெளியிடப்பட்டுள்ளன.

ஏற்ற ஆலிலை போலே திருவயிறு என்பது பொருள் பொருத்தமுடையது. செத்த ஆலிலை என்பது திருவயிறு என்பதற்குப் பொருத்த மில்லாததாகிறது. இதே போலே, பூதலம் அளந்த என்பதற்கு பூதலம் பூந்த என்பதும், மண் ஆனை என்பதற்கு, மண்ணனை என்பதும் இடிந்த மதில் என்பதற்கு, இருந்த மதில் என்பதும் அந்தந்த இடங்களுக்குப் பொருள் அமைதி தரவில்லை. மேலும்,

சுவடியில் உள்ள தொடர்	பதிப்பாகியுள்ள தொடர்	
காரு பிசானமும்	காரு பாசானமும்	(597)
சம்பா	சமைப்பார்	(1047)
அசல் வீட்டில்	சல்லி ஈட்டில்	(1170)
திருவன் கூறை	திருவன் உறை	(1184)
இவளிப்படி யிரங்க	வெளிப்படி யிரங்க	(1269)
கீழத்தெருவில்	தீபத் தெருவில்	(1579)
நால்பேருங்	நூல்பெருங்	(1030)
ஏத்தபிரான்	ஏத்த பிள்ளை	(2187)
எழுதிமுசியா தொருவன் ஓலை	எழுதி முசியாதொரு பன ஓலை	(2332)
முன்பிலே	முனையிலே	(2434)
தின்கும் பாக்கு	தின்கும் பாரு	(2537)
கண்காட்டியே	கண்கவடியே	(2556)

என்பன போன்ற நூற்றுக்கணக்கான பிழைகள் நூல் முழுமையும் அமைந்து கிடக்கின்றன.

2. செக்கடியிலீசருக்கு (184) என்னும் அடிக்குப்பின்,

"தென்காசி நாதருக்குத் திருமாலைச் சிறப்புமிட்டாள்
பூந்தாமரை முகத்தாள் பொன்னுருவித் தாயார் தான்
வித்தாரத் தபசுபண்ணி விரைந்துபலன் காணாமல்'

என்ற மூன்று வரிகளும்,

துடர்ந்தே பெண்கள் (206) என்னும் அடிக்குப்பின்,

"நடந்தாள் சிலம்பலம்ப – நாடக சங்கீதம் பாடிவர"

என்ற ஒரு வரியும்,

போனால் நடன சாலைவிட்டு (278) என்னும் அடிக்குபின்

"கண்டாளே கல்மடமும் – காடுங் குளங்கரை வோடைவிட்டு

....

எந்தன் தோழிமாரே யானுங்கூட வரமாட்டேன்"

என்பது முடிய 42 வரிகளும் மேலும் பல இடங்களில் பல அடிகளும் விடுபட்டுள்ளன.

3. ஏடு 11 இன் முதல் பக்கம் 'குமரா செந்தூர் வேலா குறத்தியுட மணவாளா' என்ற அடியுடன் முடிவடைகிறது. இது அச்சுநூலில் அடி எண் 400இல் அமைகிறது. அடுத்த 401 ஆவது அடியாக 15 ஆம் ஏட்டின் பின் புறமுள்ள 'தப்பாமல் சந்நதியிலிப்படித் திரிந்து' என்னும் அடி அமைகிறது. 11 ஆவது ஏட்டின் பின்புறமுள்ள அடிகள் 613 ஆவது அடியிலிருந்து தொடங்குகின்றன. இவ்வாறே 12, 13, 14, 15 ஆகிய ஏடுகள் முன், பின் முரண்பட பொருள் தொடர்ச்சியின்றிப் பதிப் பாகியுள்ளன.

இவ்வாறு பல மாறுபாடுகள் நூல் முழுவதும் காணப்படுகின்றன.

1. இக்குறைபாடுகளை நீக்கி நல்லபதிப்பாக வெளியிடுவது

2. உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட பதிப்பு முற்றுப்பெறாமலே உள்ளது. ஆசியவியல் நிறுவனத்தில் 'சின்னணஞ்சிகதை' என்ற தலைப்பில் உள்ள ஒரு தாள் சுவடியில் இக்கதை முழுமை பெற்றதாக உள்ளது. இவ்விரண்டையும் இணைத்துக் கதையை முழுமையாகத் தருவது. (ஒவ்வொரு சுவடியும் தனித்தன்மை வாய்ந்தது. எனவே வேறு சுவடியோடு இணைத்துப் பதிப்பிக்கக் கூடாது என்ற காரணத்தால் குறையாகவே பதிப்பிக்கப்படுகிறது என்பது உலகத்தமிழாராய்ச்சி நிறுவனப் பதிப்பாசிரியர் கூற்று. ஆனால் ஆசியவியல்

நிறுவனத் தாள் சுவடியும் 47ஆம் எண் சுவடியும் ஒன்றாக இருப்பதால் அவற்றை இணைத்துப் பதிப்பிக்கப்படுகிறது.)

3. தமிழ்மொழி அறியா உலகமக்கள் அனைவரும் படித்து அறியவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் ஆங்கில மொழிப்பெயர்ப்புடன் கொண்டுவர வேண்டும் என்னும் நிறுவனக் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு இந்நூலையும் மொழிபெயர்ப்புடன் வெளியிடுவது.

ஆகிய காரணங்களால் இந்நூல் மீண்டும் பதிப்பிக்கப்படுகிறது.

சுவடி பற்றிய செய்திகள்

46, 47 எண்ணுள்ள இரண்டு சுவடிகளுமே சின்னணஞ்சான் கதைதான் என்றாலும், ஏட்டில் கதைத்தலைப்பு இல்லாததால், அட்டவணைப்படுத்துவோர் முன்கதையில் பொன்னுருவி என்ற பெயர் வந்ததால் அதை மாது பொன்னுருவி கதை எனவும், பின் பகுதியைச் சின்னணஞ்சான் கதை எனவும் தலைப்பிட்டு விட்டனர். இவை இரண்டும் ஒரே கட்டில் உள்ளன. இதன் நீளம் 49 செ.மீ அகலம் 3 செ.மீ. மொத்த ஏடுகளின் எண்ணிக்கை 71, ஏடுகள் நன்னிலையில் உள்ளன. இறுதியில் வெற்றேடு வைத்து மேலும் கீழும் மரச்சட்டத்துடன் இடையே ஒரு துளையிட்டுக் கயிறு கோர்த்துக் கட்டப்பட்டுள்ளது. இச்சுவடி அகஸ்தீஸ்வரம் ஆறுமுகப்பெருமாள் நாடார் குடும்பத்தாரிடமிருந்து முனைவர் ஆ. தசரதன் அவர்களால் இந்நிறுவனத்திற்குப் பெற்றுத்தரப்பட்டது.

தாள் சுவடி எண் – 7 ஆசியவியல் நிறுவனத்தில் பணியாற்றிய நா.இராமச்சந்திரன் என்பவரால் கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டத்தைச் சேர்ந்த மணிக்கட்டிப் பொட்டலில் இருந்த அ. திருமால் நாடார் என்பவர் பாட ஒலிப்பதிவு செய்யப்பட்டு எழுதப்பட்டது. திருமால் நாடார் இக்கதையை வில்லுப்பாட்டாகப் பாடுவது வழக்கம். இவரிடம் பொன்னுருவி தவநிலை, பொன்னுருவி மசக்கை, சின்னணஞ்சிகதை, பிச்சைக்காலன் கதை, முத்தாரம்மன் கதை ஆகிய ஏடுகள் இருந்த போதிலும் ஏட்டைத் தரமறுத்துப் பாடி மட்டும் பதிவு செய்ய ஒப்புக்கொண்டார். இச்செய்தி தாள் சுவடியில் முதல் பக்கம் காணப்படுகிறது. இத் தாள் சுவடி செவ்வக வடிவமுடைய குறிப்பேடாகும். 83

பக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. பக்கத்திற்கு 28 முதல் 35 வரிகளுக்கு மிகாமல் எழுதப்பட்டுள்ளன. தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதப்பட்டுள்ளது.

எழுத்தமைதி

சுவடியில் எழுத்துக்கள் தெளிவாக எழுதப்பட்டுள்ளன. புள்ளியில்லாமலும், எகர, ஒகரக் குறில் நெடில், ா–ர வேறுபாடு இன்றியும், சில கூட்டெழுத்துக்களும் எழுதப்பட்டுள்ளன. ஆனால் பாடல்கள் அடிபிரித்து எழுதப்பட்டுள்ளன. நீளமான அடிகள் வரும் இடங்களில் சுவடி இரண்டு பகுதிகளாக பிரிக்கப் பட்டு எழுதப்பட்டுள்ளது. நீளம் குறைந்த அடிகள் வரும்போது மூன்று அல்லது நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒரு பகுதி எழுதியபின் அடுத்தபகுதி எழுதப்பட்டுள்ளது. ஒரு பகுதியில் 6 அல்லது 7 வரிகள் எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு அடியிலும் இறுதி எழுத்து சற்று விலகியுள்ளது.

சான்று

பொன்னிலங்கு தென்கயிலை வாளுமர னாரு ம்

பூதலமழுந்த திருமாலுந் துணை யா மே

ழகரம் ளகரமாகவும் (வாழும் > வாளும்) ளகரம் ழகரமாகவும் (செந்திவளர் > செந்தி வழர்) எழுதப்பட்டுள்ளது. செலவு > சிலவு, கேட்க > கேள்க, பார்த்தான் > பாத்தான், கொற்றியார் > கொத்தியார், சரஸ்வதி > சரசோதி, செயல் > சியல் என்பன போன்ற பல சொற்கள் பேச்சுவழக்கில் எழுதப்பட்டுள்ளன. வடமொழி எழுத்தாகிய ஸ, ஷ, க்ஷ போன்ற எழுத்துகளும் ஆளப்படுகின்றன. சான்றாக கன்னிபரமேஸ்பரியார், புருஷன், விருக்ஷம் போன்ற பல சொற்கள் உள்ளன. பாடல் முடிவினைக் காட்ட என்ற குறியீடும் பயன்படுத்தப் பெற்றுள்ளது.

பதிப்பில் செய்யப்பட்டுள்ளவை

1. பாடல்கள் முறைப்படி பிரித்து யாப்பமைதியோடு எழுதப்பட்டுள்ளன.
2. மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளிகள் இடப்பட்டுள்ளன.
3. எழுத்துப்பிழைகள் நீக்கப்பட்டு சுவடிச்சொல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

4. கதை ஓட்டத்தைப் புரிந்து கொள்வதற்காக ஒவ்வொரு பாடலுக்கும் சிறுசிறு தலைப்புகள் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளன.
5. ஒவ்வொரு பாடலுக்குப் பின்னும் அருஞ்சொற் பொருளும், பாடவேறுபாடும் கொடுக்கப் பட்டுள்ளன.
6. இவற்றைத் தொடர்ந்து ஆங்கில மொழி பெயர்ப்பும் தரப்பட்டுள்ளது.
7. நூல் ஆசிரியர், காலம், வரலாற்றுச் செய்திகள் சமூகச் செய்திகள் குறித்த ஆய்வுரை ஒன்று நூலுக்கு முன் அளிக்கப்பட்டுள்ளது.
8. பின்னிணைப்பில் சொல்லடைவும், பாடல் முதற் குறிப்பும் கொடுக்கப்பட்டுள்ளன.

நன்றியுரை

என்னை இப்பணியில் ஈடுபடுத்திய **முனைவர் ஜி. ஜான் சாமுவேல்** அவர்களுக்கு என் நன்றி என்றும் உரியது.

இந்நூல் வெளிவர உதவும் **யுனெஸ்கோ** நிறுவனத்தாருக்கும் என் நன்றி.

பாடலில் ஏற்பட்ட ஐயங்களைத் தெளிவுபடுத்தி உதவிய சுவடித்துறைத் தலைவர் **முனைவர் பூ. சுப்பிரமணியம்** அவர்களுக்கும் என் நன்றி.

பாடல்களைப் பிரித்துக் கொடுத்ததோடு பொருள் எழுதவும், ஆய்வுரை எழுதவும் உதவி செய்து அச்சுப் பிழையும் திருத்தி உதவிய **செல்வி ஆர்.ஜயலட்சுமி** அவர்களுக்கும், உடனிருந்து அச்சுப்பிழை திருத்தி உதவிய **திரு. என்.எஸ். சுந்தரராஜன், முனைவர் ஜி. செல்வலட்சுமி** ஆகியோருக்கும் கணினியில் பதிவு செய்த **திரு. எஸ். சரவணன், திருமதி. எஸ். தாரா, திருமதி. இரா. கீதா** ஆகியோருக்கும் என் நன்றி உரியது.

கோ. உத்திராடம்

Editor's note

The Institute of Asian studies has been rendering significant service to the cause of Tamil and other south Indian Languages by publishing several works contained in palm leaf manuscripts and oral tradition. The department of manuscriptology of the Institute has so far published more than twenty-five works based on palm leaf manuscripts.

In such a publishing venture, the publication of ballads serves a very useful purpose in the study and analysis of the social and cultural history of Tamilnadu. The ballads are veritable historical documents of the customs, social conditions and the oppressive caste factors of the period of occurrence of the events mentioned in the ballads. Only a timely publication of such ballads can prevent distortion of the facts and social milieu found in the original texts.

The edition taken up for publication

The following manuscripts kept and preserved in the department of manuscriptology have been taken up for publication

1. **Mātu Ponnuruvi Katai** - Palm leaf Manuscript no-46
2. **Cinnanañcān Katai** - Palm leaf Manuscript no-47
3. **Cinnanañcān katai** - Palm leaf Paper Manuscript no-7

The objective of this publication

There are different versions of the ballad **Cinnanañcān Katai** or the story of **Cinnanañcān** in the palm leaf manuscripts. It is the story of **Cinnanañcān** of royal lineage, during a washerwoman living with him and facing grave social consequences.

1) **Cinnanañci katai** narrates the story of the son of a local head man of *Nādār* community falling in love with a woman of *Nāvitar*(barber) community and marrying her. This inter caste marriage led to the killing of both of them.

2) **Cinnanañcān** the son of **Ponnuruvi** who was the sister of **Civalamāra Pāntiyan** of **Tenkāci** lured a washerwoman and married her defying the wishes of his uncle. This led to a war and **Cinnanañcān** committed suicide. Ultimately he became a deity by means of his penance and a boon obtained thereof.

3) An incomplete manuscript gives a different version. **Cinnanañcān** who lured a washerwoman and lived with her was ordered to be killed by his uncle in a family war that ensued. Whether that order was executed is not known as the manuscript is incomplete. It is stated that **Cinnanañcān** lost **Cinnanañci** in the war

4) Another manuscript says that **Cinnanañcān** emerged victorious in the war and **Cinnanañci** did not die in the war.

5) **Cinnanañcān**'s uncle sent an army to capture **Cinnanañcān** who lured **Cinnanañci** and lived with her, **Cinnanañci** fearing the loss of her chastity asked **Cinnanañcān** to behead and kill her. He accordingly killed her and committed suicide by stabbing himself. Both of them became deities thereafter.

6) A paper script, which is in a completed stage, provides yet another version of the story. This script is entitled '**Cinnanañci katai**'. In this version **Cinnanañci** died in the battle field and **Cinnanañcān** killed his uncle **Cīvalamāran**, beheaded him and threw the severed head in '*Tiruppār Katal*'. Then he went to a mountain-worshipped al deities there to obtain boons. He finally arrived at **Manikkattipottal** and became a deity to be worshipped. With such different versions intertwining history and folklore this ballad '**Cinnanañcān kataippātal**' has been already published by the **International Institute of Tamil Studies** as edited by **Dr. Nirmala Devi** (Manuscript no.376) who has also written a good critical note on the work.

The decision to republish this work under the auspices of the Institute of Asian Studies has been necessitated for the following reasons of omission and commission found in the publication of the International Institute of Asian Studies.

1. Many words and phrases that are quite clear in the manuscripts of I.A.S (No. 46 and No. 47) have been erroneously printed and published in the International Tamil Institute's edition.

2. Many lines (from 1 to 42) have been omitted here and there

3. The sequential order of the songs has been violated in the publication making it faulty.

4. Though there are specific indications of the *Viruttam* metre of several songs in the original manuscript of the ballad the edition clubs the *Viruttam* songs with songs of other meters such as *Taru, Āciriyappā* etc.

In order to rid the presentation of the original ballad of all the above mentioned errors the I.A.S has decided to bring out a new edition in a lucid manner with proper explanatory notes and commentaries for the difficult passages in the ballad.

The errors found in the contents and form of the edition brought out by the International Institute of Tamil Studies, have been listed meticulously with examples in the *Patippurai* (Tamil version of the editor's note) of this edition. In the present edition the textual and factual errors in respect of the prosody and contents of the ballad as found in the I.I.T.S edition have been rectified.

The edition brought out by the I.I.T.S remains incomplete because the paper script entitled "**Ci<u>nn</u>aṇañcā<u>n</u> Katai**" (kept in the I.A.S) has been omitted in that edition. Though the editor of the I.I.T.S. edition contends that each manuscript has its own individuality and there fore should not be clubbed with another script, the similarity between the

paper script and the palm leaf script N0.47 kept in the I.A.S has prompted us to combine both for publication. The I.A.S has also decided to have an English translation of the ballad to enable even those who do not know Tamil, read and appreciate it. The present edition contains both the translation and transliteration of the text of the ballad.

Textual variations found between the palm leaf manuscript entitled "**Ponnuruvi Tavanilai** (manuscript No. 171) and the earlier part of the paper script "**Cinnanañci Katai**" have been provided in this edition.

Some facts related to *manuscripts*

Both the manuscripts numbering 46 and 47 contain only the story of **Cinnanañcān** as the main theme but as the scripts were without titles, those who catalogued the scripts gave the title '**Mātu Ponnuruvi Katai**" to the 46th manuscript an d "**Cinnanañcān katai**" to the 47th script. Both the manuscripts are in the same bundle. Their length is 49cms and width 3cms. All the leaves of the scripts numbering 71 are in good condition.

A palm leaf is placed at the bottom. The leaves are holed at the centre and tied with a thread with wooden planks on the top and bottom. This manuscript was obtained from the members of the family of **Arumaukap perumāl Nātār** of **Akastisvaram** by **Dr. A. Dasarthan**, a former employee of I.A.S.

The paper script (No.7) of "**Cinnanañci Katai**" was transcribed from an audiocassette of its oral rendering by A.Tirumal nadar of **Manikattippottal** who used to render it in his **Villuppāttu** concerts. Though he had the palm leaf manuscripts of **Cinnanañcān Katai**, **Ponnuruvi** Tavanilai, **Ponnuruvi macakkai, Piccaikkālan Katai** and

Muttārammaṉ katai he refused to part with them. Therefore **Mr. Ramacahandran** a former employee of I.A.S made **Tirumāl Nādār** to render those songs orally and recorded them. The paper script is a rectangular diary containing 83 pages written on one side each page contains 28 to 35 lines not exceeding the upper limit.

Legibility of the writing

Letters are written quite clearly in the script and many letters do not contain the needed dots. In the case of some vowels like OT or og the writing does not differentiate properly the short and long forms. These are also instances of joining consonants and vowels in *Kūtteḻuttu* (join letter). But the songs are written in separate lines in proper sequence. The long lines are written in a two-fold arrangement of leaves whereas the short lines are written one below the other in 3 or 4 parts.

In each line the last letter is written separately and a little away from the rest of the line.

Example

Poṉṉilaṅku teṉkayilai Vāḻu maraṉāru	m
Pūtalamaḷanta tirumālum tuṇaiyā	mē

These lines of invocation contain the faulty substitution of for vice-versa. Several words of dialectal vogue are used. Sanskrit words and letters like (s - s) have also been liberally employed. There is a symbol to indicate the end of each song.

The editorial steps of this publication

1. The songs have been separated in proper sequence and prosodic propriety.
2. Consonants have been provided with dots.
3. Errors found in the palm leaf manuscripts have been removed.

4. The letters and words found in the original text have been provided in the footnotes.
5. To enable the readers understand the story line, each song is provided with a short title within brackets
6. Below the song meanings for difficult words and notes on textual variations have been given.
7. Following their steps regarding the Tamil text translation in English have been provided.
8. A critical note, containing details of the author of the work, the time of writing and the relevant historical and social events and circumstances, is there as a preface.
9. The annex at the end contains a glossary .

Acknowledgement

I am greatly indebted to Dr. **John Samuel**, Director, **Institute of Asian Studies** for giving me permission to edit **The Misplaced Royal Romance** and for giving me great encouragement.

I thank the head of the department of manuscripts Dr. **P. Subramaniam** and Miss. **R. Jayalakshmi** for their help in perfecting the editing of the poems and the research article. The librarians of the **International Institute of Tamil Studies** helped me to compare this work with the Tamil research papers on this subject. **Dr. G. Selvalakshmi** and The Associate Editor Mr. **N.S. Sundararajan** helped me in the proof reading and Mr. **D.Somasundaram** helped for correction. Mr.**S.Saravanan**, Mrs.**S.Thara** and Mrs. **R. Geetha** recorded everything in the computer. I thank all of them sincerely.

G. Uthiradam.

ஆய்வுரை

கதையின் தொன்மை

கதைகள் எப்பொழுது தோன்றின என்றே சொல்ல முடியாது. ஆதிமனிதன் காட்டுக்குச் சென்று திரும்பியவுடன், தன் அனுபவங்களைச் சொல்லும் போதே கதை தொடங்கிவிட்டது.[1]

"தொன்மை தானே சொல்லுங் காலை
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே" [2]

என்னும் தொல்காப்பிய நூற்பாவுக்கு உரையெழுதிய இளம்பூரணர் "தொன்மையாவது உரையொடு பொருந்தப்பெற்ற பழமைத்தாகிய பொருள்மேல் வருவன. அவை இராமசரிதம், பாண்டவசரிதம் முதலியவற்றின் மேல்வரும் செய்யுள்" என்றார்.[3]

பேராசிரியர் "தொன்மையென்பது உரைவிராஅய்ப் பழமையவாகிய கதைப் பொருளாகச் செய்யப்படுவது" என்றார் இத்தகு உரைகளிலிருந்தும் கதையின் தொன்மை புலப்படும்.[4]

கதைப்பாடல் என்றால் என்ன?

ஒரு கதையைப் பாடல் நடையில் கூறுவது கதைப்பாடல் எனப்படுகிறது. அஃது ஒரு கதையாகவோ பல உட்கதைகள் கொண்ட கூட்டுக்கதையாகவோ இருக்கலாம். இதுவே ஆங்கிலத்தில் "Ballad" எனப்படுகிறது. "Ballare" என்ற இலத்தீன் சொல்லினின்று இச்சொல் பிறந்ததாகும். இதற்கு "நடனம்" என்ற பொருளும் உண்டு. மேலைநாட்டில் இச்சொல் பல பொருளில் வழங்கி, 16ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே இச்சொல்லிற்குக் குறிப்பிட்ட வரையறை ஏற்பட்டது.

1. நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் வாய்மொழியாகப் பரவும் தன்மையன.

---

1 கலைக்களஞ்சியம் தொகுதி–3 ப.184 தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடு சென்னை – 1954.
2 தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல் (493)
3 தொல்காப்பியம், இளம்பூரணர் உரை நூற்பா–1493.
4 தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், பேராசிரியர் உரை, பக்–428.

2. பொருளிலும் வடிவிலும் நடையிலும் நாட்டுப்புற மக்களுக்கே உரியன.

3. ஒவ்வொரு கதைப்பாடலும் ஏதேனும் ஒரு கதை நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டது.

4. நாடக உத்தி (Dramatic theme) அமைந்து காணப்படுவது

5. கதைப் பாடல்களை இயற்றிய ஆசிரியர் யார் என்பது பெரும்பாலான பாடல்களுக்குத் தெரிவதில்லை.

6. சில கதைப்பாடல்கள் இசையோடும் நடனத்தோடும் இயைந்து பாடப் படுவதாகும்.

7. கதைப்பாடலில் கதையின் நிகழ்ச்சிப் போக்கு (Action) பாத்திரங்கள் (Characters) பின்புலம் (Setting) கரு (Theme) முதலியன முக்கியப் பண்புகளாக அமையும்.

8. கதைப்பாடல்கள் பாடுவதற்காகவே முதலில் எழுந்தன.

9. நாட்டுப்புற இலக்கியக் கூறுகளில் ஒன்றான திரும்பக் கூறும் பண்பைக் (Repetitions) கதைப்பாடலிலும் காணலாம்.

10. கதைப்பாடல்கள் பெரும்பாலும் நாட்டுப்புற மக்களின் பேச்சு மொழியிலேயே அமைந்திருக்கும்.[1]

மேலை இலக்கியச் சொல்லகராதி "Ballad" என்றால் 'நாடோடிப்பாடல்' என்ற விளக்கத்தினைத் தருகிறது.இருவகையான நாடோடிப் பாடல்கள் பற்றி இவ்வகராதி குறிப்பிடுகின்றது.[2] அவையாவன,

---

[1] சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, பக்-59-60.
[2] வை. சச்சிதானந்தன், மேலை இலக்கியச் சொல்லகராதி, பக்.20-21.

1. **வழிவழி வந்த பாடல்கள்**

மக்களிலக்கியமான நாடோடிப் பாடல்களின் ஆக்கியோர் பெயர்கள் தெரிவதில்லை. அவை பல நூற்றாண்டுகளாக வாய்வழியாகப் பாடப்பட்டு வந்து நிலை பெற்றவை.

2. **இலக்கிய வகை நாடோடிப் பாடல்கள்**

புலமை பெற்ற கவிஞன் ஒருவன் வேண்டுமென்றே முயன்று வடிவிலும் உணர்விலும் வழிவழி வரும் நாடோடிப் பாடலைப் போல் பாடும் ஒருவனிகப் பாடல் இலக்கிய வகை நாடோடிப் பாடல்கள்.

டபிள்யு. எட்கன் ரிச்மாண்டு என்பார் கதைப்பாடலை "Narrative Folk Poetry" என்றே குறிப்பிடுகின்றார்.

அவர் "பெரும்பாலான இலக்கிய வடிவங்களை அதன் அமைப்பை வைத்தே இனங்கண்டு கொள்ளலாம். நாவலைப் பார்த்தவுடனேயே அது நாவல் தான் என்று சொல்லி விடலாம். ஓர் அச்சடித்த கவிதையைப் பார்த்த உடனேயே அது கவிதை என்று சொல்லிவிடலாம். ஆயின் நாட்டுப்புறப் பாடலை இவ்வாறு சொல்லமுடியாது, வடிவத்தைக் கொண்டு நாட்டுப்புறப் பாடலை இனங்காண முடியாது. நாட்டுப்புறப்பாடல் எவ்வாறு பரவுகிறது என்பதை வைத்துத்தான் இனங்காண முடியும்" என்று குறிப்பிடுகின்றார். கதையைச் சொல்வதால் மட்டுமே அது கதைப்பாடலாகாது, எவ்வாறு அது ஆக்கப்பட்டது (Composed) ஆரம்பத்தில் அது எவ்வாறு பரவியது, காலப்போக்கில் என்னென்ன மாறுதல்களைப் பெற்றது என்பதை உள்ளடக்கியதே "Narrative Folk Poetry" என்று விளக்குகிறார்.[1]

இத்தகைய செய்திகளை அறியாமல் கதைப்பாடலைப் புரிந்து கொள்ள இயலாது என்கிறார். மேலும்

1. கதைப்பாடல்கள் ஒரே ஒரு கதைக்கூறை மையமாகக் கொண்டு அமையும்.

---

[1] W.Edsen Richmond, Narrative Folk Poetry, Richard M Dorson (Ed) Folklore and Folklife, P.85.

2. கதைகள் நாடகப் பாங்காக வளர்ந்து செல்லும்,

3. தற்சார்பற்றதாக அமையும்

என்று கதைப் பாடலுக்கு விளக்கம் தருகின்றார்.[1]

கதைப்பாடல்கள் தோன்றிய சூழல்

கதைப்பாடல்கள் தோன்றுவதற்குச் சாதியும், இனச்சூழல்களுமே (Communal Origins) காரணம் என்று மேனாட்டார் கூறுகின்றனர். ஒரு குறிப்பிட்ட இன அல்லது சாதி மக்களின் இயல்பூக்கம் காரணமாகக் கதைப்பாடல்கள் தோன்றுகின்றன என்பர்.[2] இக்கூற்று தமிழ்க் கதைப் பாடல்களுக்கும் பொருந்தும் எனலாம்.

கதைப்பாடல்களும், காப்பியங்களும் வளர்ந்த இடங்களைப் பற்றி ஆய்ந்த அறிஞர்கள் அவை முக்கியமாக, அரசியல் ரீதியாக எல்லைப்புற மக்களிடையே தோன்றுவதாகக் கூறியுள்ளனர்.[3]

கதைப்பாடல் பாடப்படும் சூழல்

தமிழ் நாட்டில் விழாக்காலங்களில் கிராமப் புறங்களில் கதைப்பாடல்கள் பாடப்படுகின்றன. கிராமப் புறமக்கள் கூட்டமாக அமர்ந்து இக்கதைப் பாடல்கதையைக் கேட்கின்றனர். விழாக்காலங்களில் கோவில் வளாகங்களிலும், திறந்தவெளி அரங்குகளிலும், ஊரின் தலைவாசலிலும், ஊர்ச் சாவடிகளிலும் இக்கதைப்பாடல்கள் பாடப்படுகின்றன. திருநெல்வேலி மாவட்டத்தில் விழாக்காலங்களில் வில்லுப்பாட்டு மூலம் கதைப்பாடல்கள் சொல்லப்பட்டு வருகின்றன.

---

1 Ibid, P.86
2 Ibid, P.86
3 Brenda E.F. Beck, The rec Twins, The Telling of a south Folk Epic, P.8.

கதைப்பாடலின் வடிவங்கள்

கதைப்பாடல்கள்

1. அம்மானை (ஆமையர் அம்மானை, இராமப்பய்யன் அம்மானை)
2. கதை (ஐவர் ராஜாக்கள் கதை, தம்பிமார் கதை, நீலசுவாமி கதை)
3. கதைப்பாடல் (கட்டபொம்மன் கதைப்பாடல், காத்தவராயன் கதைப்பாடல்)
4. கும்மி (சின்னமலைக் கும்மி, கட்டபொம்மன் கும்மிப்பாடல்)
5. குறம் (துரோபதை குறம், மின்னொளியாள் குறம்)
6. சண்டை (அபிமன்னன் சண்டை, கான்சாசிப் சண்டை)
7. சிந்து (பூலித்தேவன் சிந்து)
8. தவநிலை (இலட்சுயம்மன் தவநிலை, பொன்னுருவி தவநிலை)
9. தூது (புலந்திரன் தூது, கிருஷ்ணன் தூது)
10. போர் (கர்ணன் போர், கன்னடியன் போர்)
11. மாலை (அல்லியரசாணி மாலை, பவளக்கொடி மாலை)

இத்தகைய பொது வடிவங்களைத் தவிர சிறப்புப் பெயர்களைப் பெற்று வரும் கதைப்பாடல்களும் காணப்படுகின்றன. சான்றாக ஏணியேற்றம், பொன்னுருவி மசக்கை, பஞ்சபாண்டவர் வனவாசம், மாருதி விஜயம் போன்றவற்றைக் கூறலாம்.

கதைப்பாடல்களின் வகைகள்

மக்களிடையே வழங்கி வரும் கதைப் பாடல்களை நாட்டுப்புறவிய லறிஞர்கள், சுவடியியல் அறிஞர்கள் ஆகிய ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையாகப் பிரிக்கின்றனர்.

இதிகாசத் துணுக்குகள், சமூகக் கதைப்பாடல்கள், வரலாற்றுக் கதைப்பாடல்கள், கிராம தேவதைகளின் கதைப் பாடல்கள் என நான்காகப் பிரிப்பர் நா. வானமாமலை அவர்கள்.[1]

சோமலே அவர்கள் சமூகக் கதைப்பாடல்கள், காவிய கதைப்பாடல்கள், வரலாற்றுக் கதைப்பாடல்கள் என மூன்று வகைப்படுத்துவர்.[2]

செ.அன்னகாமு அவர்கள் சரித்திர சம்பந்தமானவை, புராண சம்பந்தமானவை, வீரச்செயல் சம்பந்தமானவை, காதற் கதைகள் சம்பந்தமானவை என நான்காக வகைப்படுத்துவர்.[3]

வீரகாவியக் கதைப்பாடல்கள், வரலாற்றுக் கதைப்பாடல்கள், புராணக் கதைப் பாடல்கள், சமுதாயக் கதைப் பாடல்கள், பிறவகைக் கதைப்பாடல்கள் என ஐந்தாகக் காண்பது முனைவர். பூ, சுப்பிரமணியம் அவர்களின் பகுப்பு முறை.[4]

புராணத் தொடர்பானவை, வரலாற்றுத் தொடர்பானவை, சமூகத் தொடர்பானவை என மூன்றாகவும் வகைப்படுத்தப்படுத்துகிறார் சு. சண்முக சுந்தரம் அவர்கள்.[5]

மு.அருணாசலம் அவர்கள் வரலாற்றுக் கதைப்பாடல்கள், புராணக் கதைப்பாடல்கள், சமூகக் கதைப் பாடல்கள் என மூவகையாகப் பிரிக்கின்றார்.[6]

புராணம், சமூகம், காவியம் ஆகியவற்றில் காதலும், வீரமும் பின்னிப்பிணைந்து காணப்படுவது உண்டு. எனவே இதிகாசச் கதைப்பாடல், புராணக் கதைப் பாடல் சமூகக் கதைப்பாடல் வரலாற்றுக் கதைப்பாடல் என நான்காகப் பிரிப்பது பொருந்தும்.

---

[1] நா. வானமாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள், ப. 5
[2] சோமலே, தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும் பக்.25
[3] செ. அன்னகாமு, ஏட்டில் எழுதாக்கவிதைகள் பக்.167
[4] முனைவர் பூ. சுப்பிரமணியம், கதைப்பாடல்கள் – சில அணுகுமுறைகள் (கருத்தரங்கக் கட்டுரை)
[5] சு.சண்முகசுந்தரம், நாட்டுப்புற இயல் – ஓர் அறிமுகம், பக்-142.
[6] M. Arunachalam, Ballad Poety, P. 93-94.

சமூகக் கதைப்பாடல்கள்

சமூகச் சிக்கல்களைக் கருப்பொருளாக கொண்டவை சமூகக் கதைப்பாடல்கள். சாதி அடக்குமுறை, கலப்பு மணமும் அதன் விளைவுகளும், தந்தைவழிச் சொத்துரிமையின் விளைவுகளால் பெண்படும் துன்பம், சுரண்டலுக்கு ஆட்பட்ட விவசாயி வேலையின்மையாலும் அதன் விளைவுகளாலும் செயல் குலைந்து கொள்ளைக்காரனாக மாறுதல் போன்றவை சமூகக் கதைப்பாடல்களின் அடிக்கருத்துக்களாகும் என்கிறார் நா. வானமாமலை.[1]

மேலும் அவர் சில பாடல்களைச் 'சமூகக் கதைப்பாடல்கள்' என்று குறிப்பிட்டு அவாற்றையெல்லாம் சமூகக் கருத்துக்களின் அடிப்படையில் ஐந்து வகைகளாகப் பிரிக்கின்றார்.

1. கலப்பு மணமும் அவற்றின் துன்பியல் விளைவுகளும் (முத்துப்பட்டன் கதை, மதுரைவீரன் கதை, சின்னநாடான் கதை)

2. சாதிய அடக்குமுறையும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சார்ந்த நாட்டார்கட்கு உயர் சாதிமக்களால் விளைவிக்கப்படும் கொடுமைகளும் (சின்னத்தம்பி கதை)

3. தாய்வழி, தந்தைவழிச் சமூகக் குழுவினருக்கிடையே தாய் வழியினர் தந்தை வழியினரிடம் மணவுறவு தேடும்போது ஏற்படும் சண்டைகள், (தோட்டுக்காரி, அம்மன் கதை, வெங்கலராஜன் கதை).

4. பெண்களுக்குச் சொத்துரிமை மறுக்கப்படுதலும் அதன் துன்பியல் விளைவுகளும் (நல்லதங்காள் கதை)

5. சாதி சமயக் கட்டுப்பாடுகளைக் கடந்த மனிதாபிமானம். (கௌதலமாடன் கதை)

---

[1] Vanamamalai. N. Studies in Tamil Folk Literatured, P.30

மேற்கண்ட ஐந்தில் 1, 2, 5 ஆகிய மூன்று கருத்துக்களின் அடிப்படையில் அமைந்தது பதிப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சின்னணஞ்சான் கதை.

நூலமைப்பு

இந்நூல் **காப்பு, அவையடக்கம், கதை** என்ற மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

காப்பு பகுதியில் ஆசிரியர் செங்கோட்டை நாட்டை அரசாண்ட மாது பொன்னுருவி கதை கூறுவதாகவும், சக்தியின் அருளால் உதித்த வலங்கை குலத்தில் உதித்த செங்கோட்டை நாட்டை ஆண்ட அரசனின் கதை கூறுவதாகவும் அதற்கு அரனாரும், மாலும், கணபதியும், கந்தனும், வள்ளி தெய்வானையும் சரஸ்வதியும் துணை செய்ய வேண்டும் என்றும் சொல்லுகிறார். இப்பாட்டு வில்லுப்பாட்டு என்பதை அறியுமாறு, "தாணுமலை நாதா வில்லினுரை உன் அருளினாலே சொல்லுதற்கு எனக்குத் தமிழும் அருளும் தரவேண்டும்" என்று வேண்டுகிறார். பரமசிவன் அருளால் உதித்த **அறுமுகவன்** சொன்னான் என்று தன் பெயரையும் குறிப்பிடுகிறார் ஆசிரியர்.

அவையடக்கம் பகுதியில் சூரியனுக்கு மின் வட்டம் நிகராகாது, பட்டத்து யானைக்கு மண் யானை ஒப்பாகாது, பொற்படிக்குக் கற்படி சரியாகாது. மயிலுக்கு வான்கோழி நிகராகாது என்னும் ஒப்பில்லா உவமைகளைக் கூறி, அது போல என்பாடல் பெரிய கவியாகாது பெரியோர்கள் இதிலுள்ள குற்றங்களைப் பொறுத்தருள வேண்டும் என்று கூறிப் பின்னர் "நாடான நாதிலே" என வில்லுப்பாட்டுப் பாணியில் கதையைத் தொடங்குகிறார்.

கதை நிகழ்ந்த காலம்

தென்காசி நாட்டில் செங்கோட்டைப் பகுதியை ஆண்டவன் செம்பவளராசன் என்பதும், இவன் அஞ்சு முடிமன்னவர் ஆண்ட பின்பு ஆண்டவன் என்பதும் சுவடியின் மூலம் தெரியவருகின்றன. இவனுடைய மனைவியின் தமையனான சீவலமாறன் என்பவன் தென்காசிப் பகுதியை ஆண்டதாகவும் தெரிகிறது.

சீவலமாறன் யார் என்ற வினாவிற்கு விடை கண்டால், கதை நிகழ்ந்த காலத்தை அறியமுடியும். சீவலமாறன் கதை என்ற ஒன்றை, உ.வே.சா. நூல் நிலையம் வெளியிட்டுள்ளது. அந்தக் கதையின் ஆசிரியர் சிதம்பரநாதர் என்பவர். இவருடைய காலம் கி.பி. 1572 ஒட்டியது. இதனைத் தென்காசிப் பக்கமுள்ள சாம்பவர் வடகரையைச் சார்ந்த மூலட்டானேஸ்வரர் கோயில் கல்வெட்டால் அறியலாம். ஐந்து பாண்டியர்கள் குறிப்பிடப்படுகின்றனர். ஒருவன் குலசேகரன் என்னும் சீவல்லபன் இவன் 1429 முதல் 1473 வரை அரசாண்டவன், இவன் சடையவர்மன் குலசேகர பாண்டியன் என்றும் குறிக்கப் படுகின்றான்.[1]

இரண்டாமவன் சடைவர்மன் சீவல்லபன் இவன் கி.பி. 1473 முதல் 1506 வரை ஆண்டவன் இவனுக்கு அழகன் பெருமாள் பராக்கிரம பாண்டியன் என்ற பெயரும் உண்டு.

மூன்றாமவன் சடையவர்மன் என்னும் சீவல்லபன் இவன் கி.பி. 1534 முதல் 1543 வரை ஆண்டவன். இவனுக்கு இறந்தகால மெடுத்தவன், பாண்டிராஜ்ய தாபனாச்சாரியன் என்ற பெயர்களும் உண்டு.

நான்காவதாக அதிவீரராம சீவல்லபன் இவன் கி.பி. 1566 முதல் 1605 வரை ஆண்டவன் இவனுக்கு சடையவர்மன் அதிவீர ராமபாண்டியன் என்ற பெயரும் உண்டு. ஐந்தாவதாக அதிவீரராம சீவல்லபனின் தம்பியாக மற்றொரு சீவல்லபன் குறிக்கப்படுகிறான்.

சீவலமாறன் கதையில் குறிப்பிடப்படும் சீவலமாறன் மேற்கண்ட பத்தியில் மூன்றாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள சடையவர்மன் சீவல்லபன் ஆவான். இவனுடைய காலம் விசுவநாத நாயக்கரின் காலம் (1529 – 1564).

சின்னணஞ்சான் கதையில் குறிக்கப்படும் சீவலமாறன் இவர்களுள் யாருமல்லன். கி.பி. 1753இல் அரசாண்ட சீவலவரகுணராமனாக இருக்க வேண்டும் இவன் அபிராம அதிவீரராமனின் தம்பியாகவோ, மகனாகவோ இருக்க வேண்டும். இவன் கி.பி. 1753இல் குற்றாலநாதர் கோயிலுக்கு அறக்கட்டளை அளித்துள்ளான்

[1] S.K.இராமராஜன், சீவலமாறன் கதை முகவுரை, பக்.15.

என்பது குற்றாலநாதர் கோயில் செய்யுல் பட்டயத்தால் தெரிகிறது. இப்பட்டயத்தில் இவன் இறந்தகாலமெடுத்த அழகன் பெருமாள் சீவல்லப வரகுணராம தேவதீட்சிதர் என்று குறிக்கப்படுகிறான். இவன் **சங்கீத சாகித்திய சார்வபௌமன்** என்ற விருதைப் பெற்றவன்.

இதை நிறுவுவதற்குரிய காரணங்கள்

1. 7 ஆம் எண்ணுள்ள தாள் சுவடியில் சின்னணஞ்சான் வரம் கேட்ட ஆண்டு கொல்லம் 950 என்று குறிக்கப்படுகிறது. இது கி.பி. 1774 – 1775 ஆகும்.

2. மேலே குறிப்பிடபட்ட ஐந்து பாண்டியர்களும் கி.பி. 1799க்கு முந்தியவர்களாயினும் சின்னணஞ்சான் கதையின் முற்பகுதியில் பொன்னுருவி பிள்ளையில்லாமல் ஊர்ஊராக அலையும் போது திருச்செந்தூரில் பழைய கோபுரவாசல் வந்தாள் என்று குறிப்பிடப்படுகிறது. (29 – 17).

கி.பி. 1779இல் திருச்செந்தூரில் புதிய கோபுரம் கட்டப்பட்ட பணிக்கு சிவகாசி நாடார்களும், பலபட்டைகளும் (பிறகுடிகள் பொருளுதவி வழங்கிய செய்தி திருவாவடுதுறை ஆதினச் செப்பேடுகளால் அறியக்கிடக்கின்றது. எனவே கி.பி. 1779க்கு முன்னர் தான் இக்கதை நடந்து இருக்க வேண்டும் என்பது தெளிவு.

முன்னர் குறிப்பிட்ட பாண்டியர்கள் யாவரும் பெரும் போரில் ஈடுபட்டவர்களாகவும், நிறைய நிபந்தங்கள் அளித்தவராகவும், பல தமிழ் நூல்களைப் பெற்றவராகவும், பாடியவர்களாகவும் பல விருதுகள் காணப்படுகின்றன. ஆனால் சின்னணஞ்சான் கதையில் குறிப்பிடப்படும் சீவலமாறன் மிகச் சதாரணமானவனாகக் காணப்படுகிறான்.

3. சுவடியில் பொன்னுருவி ஊர்ஊராகச் செல்லும் போது அழகப்ப முதலிமடம், கவுண்டர் மடம், ஆகியன குறிப்பிடப்படுகின்றன. அழகப்பமுதலியின் காலம் கி.பி.18ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலமாகும்.

4. சீவலி மகராசா என்று அழைக்கப்பட்ட பாண்டிய ராசாவும், இந்திரத்தலைவனாக அழைக்கப்பட்ட மறவர் தலைவன் திருவண்ணாத் தேவனும் இராச குலவருக்கு உரிய தேர்வடம் தொட்டுக் கொடுக்கும் உரிமையைப் பெற்றனர்

என்பது தொல்லியல் துறையினரால் கண்டறியப்பட்டுள்ள சங்கர நயினார் கோயில் செப்புப்பட்டயச் செய்தியாகும். திருவண்ணாத் தேவன் கி.பி. 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவன்.

5. சின்னணஞ்சான் வலங்கைக் குலத்தவன் என்றும், தாடாளன் என்றும் குறிக்கப்படுகிறான். இவ்விரண்டு சொற்களும் நாடாரைக் குறிக்கும் சொற்கள். அண்மையில் கண்டறியப்பட்ட கொங்குநாட்டுக் கருமாபுரம், பூந்துறை, திருமுருகன் பூண்டி, பெருந்துறைப் பட்டயங்கள் மூலம் நாடார்கள் தங்களைச் சந்திரகுலத்தவராகவும், சூரியகுலத்தவராகவும், நாடாள்வர் தாடாள்வார் பட்டம் உடையவராகவும், பூவேந்திய சோழர் வழியினர் என்றும் வாளால் வழிதிறந்தவர் என்றும் கூறிக்கொள்வதை அறியலாம். தாடாளர் என்பவர் நாடாரே (சான்றோர்) என்பது வைகுண்ட சுவாமிகளின் அகிலத்திரட்டு நூலின் மூலமும் அறியலாம். கி.பி. 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த குலசேகரப்பட்டணம் கல்வெட்டு குட்டம் சந்திர மார்த்தாண்ட பணிக்க நாடார் குமார வீரமார்த்தாண்ட நாடார் மற்றும் நிலைமைக்காரநாடார், மினைக்கெடன் முக்கந்தர் கள்ளச் சாணார், மலையாளத்துச்சாணார் ஆகியவரைப் பற்றியாகும். இக்கல்வெட்டில் நிலைமைக்காரராகிய நாடார், 'ஊரன்' என்று அழைக்கப் படுகின்றனர். அவர்களிடம் தண்டமோ வரியோ கொள்ளக் கூடாது என்று வரிவிலக்குச் செய்யப்பட்ட பிரபுக்களாகக் குறிக்கப்படுகின்றனர். இதற்குச் சற்று முன்னர் இவர்கள் தென்காசி நாட்டை ஆண்டிருக்க வேண்டும். 17, 18ல் குறுநில மன்னராக நாடார்கள் நாட்டை ஆண்டுவந்துள்ளனர்.

6. 1534–1543ல் இருந்த சீவலப்பன் தன் மகளை அச்சுத தேவராயருக்கு மணம் செய்து கொடுத்துள்ளான்.* ஆனால் சின்னணஞ்சான் கதைச் சீவலமாறன் தன் மகள் இன்பக் கனியைச் சிவனணஞ்சானுக்குத் தரவிரும்புகிறான்.

மேற்கண்ட காரணங்கள் இக்கதை நிகழ்ந்த காலம் 18ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்பதற்குத் துணைநிற்கின்றன. ஆய்வாளர்கள் யாரேனும் வேறு காரணம் காட்டி 16ஆம் நூற்றாண்டு என்று கூறினால் இக்கருத்து மறு ஆய்வுக்குரியது.

ஆசிரியர் காலம்

நிறுவனச் சுவடிகளுள் ஒன்றான சின்னணஞ்சி கதை என்னும் தாள் சுவடியின் (சுவடி எண். 7) முன்பக்கத்தில் திருமால் நாடாரிடம் இருக்கும் ஏட்டை எழுதியவர் அணஞ்சபெருமாள் நாடார் என்றும், கொல்லம் 950இல் (கி.பி. 1774) எழுதினார் என்றும் கூறப்பட்டுள்ளது. கொல்லம் 950இல் சின்னணஞ்சான் சிவனிடம் வரம் வேண்டிய பிறகு அணஞ்ச பெருமாளின் கனவில் தோன்றிக் கோயில் கட்டும்படி கூறியதாகப் பாடல் கூறுகிறது.

பெரியசிவ னணஞ்சபெருமாள் பேருறக்கம் உறங்கும் போது
பிறைசடையோன் உருவத்தில் ஒரரவும் கப்பறையும்
பஞ்சாட் சரத்துடனே பரமசிவன் போலவந்து
சிவனணஞ்ச பெருமாள் சாமி வந்து தெரிசனத்தில் சொல்லுவாராம் (130, 4–7).

இந்த அணஞ்ச பெருமாள் நாடாரின் பேரன், பேரனுக்குப் பேரன் ஆகியோரும் அணஞ்சபெருமாள் என்றழைக்கப்பட்டனர். திருமால் நாடாரின் தந்தை பெயர் அணஞ்ச பெருமாள் நாடார். அவருடைய தந்தையார் கனவில் சின்னணஞ்சான் தோன்றி உன்மகன் என் கதையைப் படிக்க வேண்டும் என்று கூறியதால் அணந்தபெருமாள் நாடாருக்குக் கல்வி கற்பிக்கப்பட்டது. இதன் பிறகே சின்னணஞ்சானுக்குக் கோயில் கட்டப்பட்டது. எனவே கோயில் கட்டப்பட்டகாலம் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியாகவும் கதை நடந்த காலம் கி.பி.18 ஆம் நூற்றாண்டாகவும் இருக்க வேண்டும். தந்தைக்குப்பின் ஏடுபடிக்கும் உரிமை திருமால்நாடாருக்குக் கிடைத்தது. மேற்கண்ட செய்திகள் 7ஆம் எண்ணில் உள்ள சுசுவடியில் உள்ளன.

எண்.46 ஆம் எண்ணில் உள்ள ஓலைச் சுவடியில் ஆசிரியர் பெயர் ஆறுமுகவன் என்றும் பரமசிவன் பாலன் என்றும் குறிக்கப்படுகின்றது.

"பார்கிறக்கும் பரமசிவன் றன்னருளா லுதித்த
பரமசிவ னருள்பால னறுமுகவன் சொன்னான் (பாடல் – 6)

அணஞ்ச பெருமாள் குலத்தில் ஆறுமுகம் என்ற பெயரும் வைக்கப்பட்டமை 'ஆறுமுகப்பெருமாள் மரபை ஈன்ற பொன்னணஞ்சான் புதல்வன்' என்பதிலிருந்து தெரிகிறது.

கி.பி. 1606இல் பாடப்பெற்ற வலங்கை நூல் எனும் **வெங்கலராசன் கதை** அகத்தீசுவரத்தை சார்ந்த ஆறுமுகம் என்பவரால் பாடப்பெற்ற வில்லுப்பாட்டாகும் இவர் 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

சின்னணஞ்சான் கதைப்பாடலின் ஆசிரியர் ப. ஆறுமுகம் என்பவர் 18ஆம் நூற்றாண்டினைச் சார்ந்தவராக இருக்கலாம். 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த குமாரசாமி நாடாரின் மகனாராகிய ஆறுமுகப்பெருமாள் நாடார் **அரவமுத்துவீரன் கதை** என்னும் நூலினை எழுதியுள்ளார். இவர், சின்னணஞ்சான் கதைப்பாடலின் ஆசிரியரான ப.ஆறுமுகம் என்பவருக்குப் பெயரராக இருக்கலாம்.

கதைச் சுருக்கம்

செங்கோட்டைப் பகுதியை ஆண்ட **செம்பவளராசன்** **தென்காசி** மன்னவனான **சீவலமாறனின்** தங்கையான **பொன்னுருவியைத்** திருமணம் செய்து கொள்கிறான். பொன்னுருவி குழந்தைப் பேறின்றிப் பெரிதும் வருத்த முறுகிறாள். மன்னன் செம்பவளராசன் பொன்னுருவிக்கு ஆறுதல் கூற பொன்னுருவி ஆறுதல் அடையாமல் குழந்தை வரம் வேண்டித் தவம் செய்யப் போகிறேன் என்று கூறுகிறாள். மன்னன் 'ஒரு பிள்ளையைத் தத்தெடுத்துக் கொள்' என்று கூற, 'தத்தெடுத்த பிள்ளை சொந்தப் பிள்ளைக்கு ஈடாகாது' என மறுத்துத் தவம் செய்யப் புறப்படுகிறாள்.

பல தலங்களுக்குச் சென்று குழந்தைவரம் கேட்கிறாள். தவமிருந்தும் பயன் கிடைக்காமல் மனவருத்தத்தோடு திரும்பும் போது மேரு மலையைக் காண்கிறாள். பல மலைகளைக் கடந்து மலைக்குறத்தியிடம் பொன்னுருவி குறிகேட்க அக்குறத்தி, பொன்னுருவியின் வரலாற்றைக் கூறி, குழந்தை இல்லாமைக்குக் காரணத்தைக் கூறுகிறாள்.

பரம்பரையினர் ஆண்ட இடத்தில் பகவதியம்மன் கோயில் சுவரும் மதிலும் இடிந்து கிடப்பதாகவும், அவற்றைக் கட்டிப் பூசை செய்தால் ஒரு ஆண் குழந்தை பிறக்கும் என்றும் குழந்தை பிறந்தாலும் முழுநாளும் அவனுடன் வாழமாட்டான் என்றும் ஒருத்தியால் அவன் அரசாள இடையூறு ஏற்படும் என்றும் குறி கூற, தோழியருடன் பொன்னுருவி மேலும் பல தலங்களுக்குச் சென்று தென்காசி திரும்புகிறாள்.

தென்காசியை அடைந்த பொன்னுருவி குறத்தி குறி சொல்லியதைக் கணவனிடம் கூற அவர் கல் தச்சர்களை வரவழைத்து பகவதியம்மன் கேயிலைப் புதுப்பித்துப் பூசை செய்ய ஏற்பாடு செய்கிறார். அதன் பின்னர் யாரோ வெற்றிலை தருவது போலவும், ஏடும் எழுத்தாணியும் எடுப்பது போலவும், சர்ப்பம் வருவது போலவும் பொன்னுருவி கனவு கண்டு தான் கண்ட கனவைக் கணவனிடம் கூற கனவில் சர்ப்பத்தைக் கண்டால் கர்ப்பம் அடைவாய் எனக் கணவன் கூறுகிறான். பின்னர் பொன்னுருவி கருத்தரித்து ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். அக்குழந்தைக்குச் சிவணணஞ்ச பெருமாள் எனப் பெயர் சூட்டுகின்றனர்.

சிவணணஞ்ச பெருமாள் குறிப்பிட்ட வயது அடைந்தவுடன் கல்விப் பயிற்சி, ஆயுதப் பயிற்சிகளைப் பெற்றதுடன், இருளனாயனிடம் வாள், சிலம்பம், தகடத்தொழில் ஆகியவற்றைக் கற்றுக்கொள்ளுகிறான். வாலிபப் பருவம் அடைந்த சிவனணஞ்சபெருமாள். ஆட்சியை ஏற்றுத் தென்சாசிப் படைவீட்டில் வீற்றிருக்கின்றார். அரசாளும் அந்நாளில் யானையேற்றம், குதிரையேற்றம் படிக்க விரும்புகிறார். யானை அலங்கரிக்கப்பட்டு அதன் மேல் பவனி வருகிறார். அப்போது வண்ணார் குலத்தில் பிறந்த திருமணமான சின்னணஞ்சி என்பவள் நடந்து செல்லும் அழகைக் கண்டு அவள்மீது ஆசை கொள்கிறார். தன் ஆசையை அவளிடம் கூறியபோது அவள் இணங்க மறுத்து விடுகிறாள்.

மறத்தலைவனை அவளிடம் தூது அனுப்புகிறான். அதிலும் வெற்றி கிட்டாததால் இறுதியாக மலைக்குச் சென்று இருளப்பனாயான் என்பவரிடம் செய்தியைக் கூறி வசிய மருந்து வாங்கி வந்து அதை வெற்றிலையில் வைத்துச் சிறுக்கன் கையில் கொடுத்து அனுப்புகிறார். சிறுக்கன் சின்னணஞ்சியைத் தேடிச் சென்று அவளிடம் கொடுத்துத் தின்னவைத்து அவளை மயக்க நிலையில்

தன்னிருப்பிடத்திற்கு அழைத்து வருகிறான். வசிய மருந்தால் உண்டான மயக்கத்தில் இருக்கும் சின்னணஞ்சியைக் சிவனணஞ்ச பெருமாள் கூடிக் களித்துத் தன்னுடன் நிலையாக, தங்கவைத்துக் கொள்கிறார். சின்னணஞ்சியும் உடலாலும், உள்ளத்தாலும் ஒன்றுபட்டுச் சிவனணஞ்சவருடன் தங்கி (இருந்து) விடுகிறாள்.

ஊருக்குள் மாத்தெடுக்கச் சென்ற சின்னணஞ்சியைக் காணாது வண்ணார்கள் காடு, மலை, ஆறு, குளம் ஆகிய இடங்களில் தேட, மாடவண்ணான் வருத்தமுற்று அவளுடைய தாய்வீட்டிற்குச் சென்று மாமியாரிடம் செய்தியைக் கூறுகிறான். அங்கும் சின்னணஞ்சி இல்லையெனக் கூற அவர்கள் இறுதியில் மன்னன் சீவலமாறனிடம் சென்று மாத்தெடுக்கப் போன சின்னணஞ்சியைக் காணவில்லை எனக்கூறிக் கண்டுபிடித்துத் தருமாறு முறையிடுகிறார்கள்.

மன்னன் சீவலமாறன் ஏவலர் சேவகர்களை அழைத்துச் சின்னணஞ்சியை கண்டுபிடிக்க ஆணையிடுகிறார். சேவகர்கள் சின்னணஞ்சியைத் தேடும் போது ஈடுபட்டிருக்கும் ஒருவன் பாத்திரங்களில் சோறும், கறியும் இரண்டு வாழையிலையும் சிவனணஞ்சான் கொலுவிருக்கும் மண்டபத்திற்கு எடுத்துக் கொண்டு செல்லுவதை அறிந்து உடன் தங்கியுள்ளவர் யார் எனக் கேட்க, அவன் வண்ணாத்தி சின்னணஞ்சி எனச் சொல்லக் கேட்டு மன்னனிடம் சின்னணஞ்சி இருக்குமிடத்தைத் தெரிவிக்கின்றனர்.

பின்னர் மன்னன் சீவலமாறன் மந்திரியையும், தன் தங்கையும் சிவனைஞ்சபெருமாள் தாயுமான பொன்னுருவியையும் அனுப்பி அறிவுரை கூறியும் “சின்னணஞ்சியை விட முடியாது” என உறுதியாக மறுத்து விடுகிறார் சின்னணஞ்ச பெருமாள். எனவே கோபங்கொண்ட சீவலமாறன் கீழ் சாதி பெண்ணுடன் ஆழ்ந்த காதல் கொண்ட சிவனணஞ்சவரைப் பிடித்து வருமாறு படைகளை அனுப்புகிறார்.

படைவீரரர்கள் கொலுமண்டபத்தைச் சுற்றி வளைத்து சிவணைஞ்சவரை வெளியே வாவென அழைக்கின்றனர். சின்னணஞ்சானின் ஆசிரியரான இருளனும் சிவனணஞ்சனும் வாசல் கதவைத் திறந்து படைவீரர்களுடன் போர் செய்கிறார்கள். போரில் பல படைவீரர்களும், சின்னணஞ்சியும், சிறுக்கனும் களத்திலேயே

மடிகின்றனர் இருளன் உயிருக்குப் பயந்து புறங்காட்டி ஓடக்கண்ட வண்ணார்கள் ஒட்டனிடம் செய்தி சொல்ல ஒட்டன் மன்னன் சீவலமாறனிடம் சென்று சொல்லுகிறார்.

மன்னன் சிவலமாறன் படையோடு புறப்பட்டு சிவனணஞ்ச;வருடன் போர் செய்கிறார். போரில் சிவனணஞ்சான் சீவலமாறனின் தலையை அறுத்துத் திருப்பாற்களடலில் எறிகிறான். பிறகு சிவனணஞ்சான் திருப்பாற்கடலில் நீராடிச் சிவனைக் காண, காடு, மலை, கடந்து வரம் வேண்டித் தவம் செய்கிறார். சிவபெருமாள் காட்சியளித்து வேள்வி செய்யச் சொல்லுகிறார். வேள்வி செய்து சின்னணஞ்சான் கைலாசம் அடைகிறார். பரமசிவன் தம் திருத்தொடையில் சின்னணஞ்சானை நிறுத்தி மறுபிறவியாகப் பிறக்க வைக்கிறார். பரமசிவன் திருத்தொடையில் மறுபிறவியாகப் பிறந்ததால் சின்னசிவன் என்று பெயர் வைத்து வரம் கொடுக்கிறார். வரம் பெற்ற பின்பு சின்னணஞ்சான் நான் எங்கே போக வேண்டும் எனக்கேட்க வலங்கை புரத்திலுள்ள மணிக்கட்டிலப் பொட்டலுக்குப் போவெனக் கூற சின்னசிவன் பல மலைகளையும், ஊர்களையும் கடந்து தாணுலிங்க ஈசுவரிடமும், மதுசூதனப் பெருமாளிடமும், வரம் கேட்க அவர்களும் சங்கரனார் கொடுத்த வரத்தையே கொடுக்கிறார்கள். சின்ன சிவன் மணிக்கட்டிப் பொட்டலுக்குப் போகிறார்.

மணிக்கட்டிப் பொட்டலுக்குச் சென்ற சின்னசிவன் அவ்வூரிலுள்ள பெரிய சிவனணஞ்ச பெருமாள் கனவில் தோன்றி கோயில் கட்டச் சொல்லுகிறார். பெரிய சிவனணஞ்ச பெருமாள் தான் கண்ட கனவை ஊர்மக்களுக்குக் கூற அவர்கள் நல்லநாள் பார்த்துக் கோயில் கட்டுகிறார்கள். பெரிய சிவனணஞ்ச பெருமாள் பூசை செய்ய சின்ன சிவன் தெய்வமாக, அக்கோயிலில் வீற்றிருந்து மக்களுக்குக் காட்சியளிக்கிறார் என்பது இக்கதைப்பாடலின் சுருக்கமாகும்.

பழக்க வழக்கங்களும் சமுதாயச் செய்திகளும்

அக்காலத்தில் சிறுவயதிலேயே திருமணம் செய்யப்பட்டதை இக்கதையின் மூலம் அறியமுடிகிறது.

'மாலையிட்டு மணம் புணர்ந்து வயசு பன்னிரண்டு செல்ல
பன்னிரண்டு திருவயசில் பாவைநல்லாள் திருப்பூத்தாள்' (11.9-10)

என்றவரிகள் பெண்ணுக்கு வயது வரும் முன்னரே திருமணம் செய்விக்கப்பட்டதைக் காட்டுகின்றன. சின்னணஞ்சியும் திருமணத்திற்குப் பின் தான் வயதுக்கு வந்தாள் என்பதை

"மாலையிட்ட நாள் முதலாய் வாழ்ந்திருந்தா ரிருபேரும்
சேலைசுத்தும் பெண்கொடியாள் தேன் மொழியாள் சின்னணஞ்சி
சாலமதி பூங்குழலாள் *சாமத்திய* மாகினாளே"

என்ற அடிகள் விளக்குக்கின்றன. பூப்பெய்தலைக் குறிக்கச் சாமத்தியமானாள் என்ற தொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது நோக்கத்தக்கது. குழந்தைப் பேற்றை எவ்வளவு முக்கியமாகக் கருதுகிறார்கள் என்பதைச்

'சிறுகுழந்தை பெற்ற பின்பு செத்தாலு மோச்சமூண்டு' (21.4)

என்ற தொடர் விளக்குகிறது. குழந்தையில்லாமலிருப்பது எவ்வளவு கொடுமை என்பதைப் பொன்னுருவி,

"கொள்ளிவைத்து குடம்சுமக்க குழந்தை ஒன்று வேண்டாமோ", (12.4)
"இருளி இருளி யென்று எல்லோரும் சொல்லுகிறார்", (12.9)
"வாழைக்குப் பிள்ளையுண்டு," (12.20)
"விருஷத்தும் பிள்ளையுண்டு," (12.21)
"எனக்குமட்டும் பிள்ளையில்லை," (12.22)
"மகனையெடுத்து மடிதனில் வைத்திராமல் மகாகோடி பாவங்கள்
நான் பாவி புரிந்தேனோ?" (14.23-24)

என்றெல்லாம் புலம்பி ஊர் ஊராய்த் அலைந்து தவம் செய்து இறக்கவும் துணிவதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

தத்துப் பிள்ளையைப் பிள்ளையாக மதிக்கவில்லை என்பதை,

"தெப்பெடுத்த பிள்ளையது என்தலையில் பல்லியல்லோ" (15.11)

"கோடிபணம் கொடுத்தாலும் கொண்டபிள்ளை என்பார்கள்
வாரிபணம் கொடுத்தாலும் வளர்த்தபிள்ளை என்பார்கள்" (15.14-15)

மேலும் ஈர உடையுடன் நாற்பது நாள் விரதம் இருத்தல், தரையில் உணவு வைத்து அருந்துதல், வலக்காலை எடுத்து வைத்து குடிபுகுதல், கருவுற்ற ஒன்பதாம் மாதத்தில் பொங்கல் வைத்தல், மங்கலப் பெருளாக நிறைநாழி. விளக்கு ஆகியவற்றை வைத்தல், மருத்துவச்சி பேரம் பேசுதல் யாராயிருந்தாலும் வேலை செய்தால் அவர்களுக்குத் தானம் கொடுத்தல், வாழையிலையில் பணம் வைத்துத் தருதல் ஆகிய பழக்க வழக்கங்களும் அறியப்படுகின்றன. பண்டமாற்று முறை வழக்கில் இருந்தது என்பதைச் சிறுக்கன் சின்னணஞ்சியிடம் பழஞ்சோறு வாங்கிக் கொண்டு வெற்றிலை தருவதால் அறியலாம். வண்ணாத்தியும் அரிசி வாங்குகின்றாள். மருத்துவச்சியும் பிரசவம் பார்த்து விட்டு ஆடை, நெல், தலைக்கு எண்ணெய், பொன் ஆகியவற்றைப் பெறுகின்றாள்.

கோயில் கட்டுதல் போன்ற பெரிய செயல்களுக்குப் பணம் கொடுத்து இருக்கிறார்கள். ஈத்துபுறை கட்டியவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இருளனிடம் முக்கிய மருந்து வாங்க சின்னணஞ்சான் வாழையில் பணம் வைத்துக் கொடுத்துள்ளான். இதிலிருந்து சாதாரண மக்களிடம் பணப்புழக்கம் அதிகம் இல்லை. அரசாங்கத்தில் பணப்புழக்கம் இருந்தது என்பதை அறியமுடிகிறது.

ஆசிரியின் பட்டறிவு

இந்நூலாசிரியர் ஒவ்வொரு தொழிலையும் பற்றி நன்றாக அறிந்துள்ளார் பெண்ணின் உடல்நிலை பற்றியும் தொழிலைப் பற்றியும் அக்கு வேறு ஆணிவேறாக அறிந்துள்ளார் என்பதற்கு இந்நூலே சான்றாகிறது. இரண்டாம் மாதத்தில் உதிரம் திரளுதல், மூன்றாம் மாதத்தில், உணவு வெறுத்தல், புளிப்பை விரும்புதல், கண்சோருதல், நான்காம் மாதத்தில் கணவனை வெறுத்துத் தூங்குதல், ஐந்தாம் மாதத்தில் தலைமயிர் குலைதல், ஆறாம் மாதத்தில், தனம் புலைத்தல், ஏழாம் மாதத்தில் தேமல் வருதல், வயிறு பெருத்தல், எட்டாம் மாதத்தில் எழுந்திருக்க முடியாமல் இருத்தல், மூட்டுக்கள் நோதல், உறக்கம் வராமல் இருத்தல் என

கர்ப்ப ஸ்தீரியின் உடல்நிலையை வர்ணிக்கிறார் ஆசிரியர். பொங்கல் சமைப்பதை அடுப்பில் உலை வைத்து அதில் நெல்பொரி, அரிசி, கற்கண்டு, சீனி, தேங்காய், போட்டு செய்ய வேண்டும் என்று விரிவாக விளக்குகிறார்.

மருத்துவச்சி பிரசவம் பார்க்க. எண்ணெய், புண்ணாக்கு, நனையத்தக்க பொன்னுருவி பருவட்டம், முக்காலி, இலை, எண்ணெய் ஒதிப்போட கிண்ணம், நான்காக மடிக்கப்பட்ட துவாலை, வென்னீர், விசிறி, புகையிலை ஆகியவற்றைக் கேட்கிறாள். குழந்தையை வாழையிலையிலே வாங்குதல், தாகம் வந்தால் வென்னீர் கொடுத்தல், வேர்வை வந்தால் விசுறுதல், ஜன்னி வராமல் இருக்கப் புகையிலையைப் பயன்படுத்தல் ஆகிய மருத்துவச் செய்திகள் இங்கு பேசப்படுகின்றன.

பிள்ளை வேண்டும் என்று தவமிருந்த பொன்னுருவி பிரசவ வேதனையில், 'கொடும்பகையோ, கடும் சனியோ, கொல்லவந்த கோலமிதோ' என்று பிள்ளையை வசைமொழி பேசுகிறாள். இங்கு பிரசவ காலத்தில் பெண்கள் வெறுத்துப் பேசுவார்கள் என்ற உலகியலைக் காண முடிகிறது. குழந்தை பிறந்தவுடன் காயம், மிளகு, திப்பிலி, சுக்கு ஆகியவற்றை அரைத்து மருத்துக் கொடுத்தாள், சேலை இறுக்கிக்கட்டி வயிற்றை அமுக்கினாள் என்பதையும், மஞ்சள் அறைத்துப் போட்டாள் என்பதையும், வாயிலே சுக்கைப் போட்டு ஊதினாள் என்பதையும், குழந்தை மேல் இருந்த கொப்பாடையை நீக்கித் தொப்புள் கொடியை அறுத்து மஞ்சள் நீராட்டினாள் என்பதையும் ஆசிரியர் படிப்படியாக விளக்குகிறார்.

சின்னணஞ்சான் வண்ணாத்தியை வசியம் செய்வதற்காக மலையில் இருக்கும் இருளப்பனாயான் என்பவனிடம் வசியமருந்து வாங்கினான். இவ்விடத்தில் ஆசிரியர் காத்துப் போல பறத்தி, கதவு தட்டி எழுப்பி, மேகவர்ணப் பச்சிலை, மாதர் உறவாடி, வட்டாரப் பாம்பாட்டி, வருத்திவைக்கும் மூலி, பெண்கள் எடுத்துவரும் சிவந்த நிழல்வாடி, கோங்குமரத்தின் பிசின், கைப்பிரளி மூலிகை, கையறுத்தான் பச்சிலை, காளையின் கோசோசணை ஆகியவற்றையெல்லாம் கூட்டிப்பொடியாக்கி இருளனாயான் மருந்து செய்தான் என்று கூறுவதிலிருந்து ஆசிரியர் பல பச்சிலைகளைப் பற்றியும் அறிந்திருந்தார் என்பது தெரிகிறது.

சிலம்பப் பயிற்சி தொடங்குமுன் குறுங்காற் சட்டையணிந்து காலில் கச்சைகட்டி உடலில் எண்ணைய் பூசிக் கொள்ள வேண்டும். தரைமெழுகித் தூய்மை செய்து முற்றின தேங்காயுடைத்து விநாயகனை வணங்கவேண்டும். முதலில் வலதுகாலை முன்னேவைத்து *வாஸ்தாநங்* கூறி, வட்டமிட்டுத் திரும்பிக் கையைத்தட்டிக் கும்பிட்டு அடவு வைக்க வேண்டும். தொடர்ந்து கம்பைக் கையிலே எடுத்து இடது கால முன்னேவைத்து ஏழடிமுன்னே எழும்பி இடசாரி, வலசாரியாகச் சென்று, பிறகுவலதுகாலை வலப்பக்கத்தில் வைத்து வலது *அடித்தகடம்* வீசுதல் வேண்டும். பிறகு இடதுகாலை இடப்பக்கம் வைத்து இடது அடித்தகடம் வீசுதல் வேண்டும். பின்னால் எழும்பிப் பின்னடிவீசி, மண்டியிட்டு வீசுதல் வேண்டும். இவ்வாறான தகடத் தொழில் விதி முறைகள் ஆசிரியரின் சிலம்பப் பயிற்சி அனுபவத்திற்கு எழுத்துக்காட்டுகளாகின்றன.

சிலம்பம் படிப்பதற்கு முன் தரைமெழுகி கண் கருத்த தேங்காய் உடைத்துக் கணபதியை வணங்கவேண்டும். உடல் முழுதும் எண்ணைய் இடுதல், சல்லம் இடுதல், பட்டுகச்சை சுட்டுதல், வலது காலை முன்னேவைத்து வாஸ்தானம் கூறுதல், வட்டமிட்டுக் கையைத் தட்டிக் கும்பிடுதல், அடவு வைத்துக் கம்பை எடுத்தல், இடது காலை முன்னே வைத்து ஏழடி முன் எழும்புதல், இடசாரி வடசாரி செல்லுதல், வலக்காலை வலத்தே வைத்து வலது அடி தகடம் வீசுதல், இடக்காலை இடதே வைத்து இடது அடி தகடம் வீசுதல், பின்னந்தம் எழும்புதல், பின்னடி வீச்சுக்கள் வீசுதல், மண்டிபோட்டு வீசுதல் ஆகிய தகடத் தொழில்கள் வரிசையாகக் கூறப்படுகின்றன.

வண்ணார் துணிவெளுக்கும் தொழிலும் இவ்வாறே படிப்படியாகக் கூறப்படுகின்றது. எல்லாத் துணிகளையும் அழகாக மடித்து வைத்துக் கொண்டு, கஞ்சிபோடுவதற்குப் பச்சரிசியும் நீலம் போடுவதற்கு நீலமும் கட்டிச் சுண்ணாம்பும் ஒவ்வொரு பொட்டலமாகக் கட்டிக் கொள்கிறான் வண்ணான். குழிதாழி, சட்டி, விறகு பிளக்க கோடாரி, உவர் மண் ஆகியவற்றை எடுத்துக் கொள்கிறான். கழுதை மேல் துணியேற்றிச் செல்லுகிறான். குழிதொழியில் நீர் ஊற்றித் துணிகளை நீர் அடித்து உவர் மண்ணும், சாணகமும், சாயமும் கலந்து வெள்ளாவியில் வைத்துத் தீமூட்டுதல், கறை, அழுக்குப் போன பிறகு தண்ணீரில் நனைத்து துவைத்து

நீலம், கஞ்சி போட்டு விரித்து உலர்த்ததுதல் வரை அனைத்துச் செய்திகளையும் ஆசிரியர் கூறுகிறார்.

கனவுகள்

கதைப்பாடல்களில் கனவுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. பண்டைய காலந்தொட்டு கனவுகள் தெய்வத்தன்மை வாய்ந்தவையாகக் கருதப்பட்டு வந்துள்ளன. கனவுகள் கடவுளின் தூதர் என்றார் ஹோமர் கனவு தெய்வீக எச்சரிக்கை என்றும் அதற்குக் கீழ்ப்படிய வேண்டுமென்றும் சாக்ரடீஸ் சொல்கிறார்.[1] நிறைவேறாத ஆசைகளை நிறைவேற்றுபவை கனவுகள் என்கிறார் உளவியல் அறிஞர் ஃபிராய்டு[2] ஆனால் எல்லாக் கனவுகளும் ஆசைகளை நிறைவேற்றுபவையல்ல என்றார் மேடர்.[3]

கதைப்பாடல்களில் காணப்பெறும் கனவுகளை நற்கனா, தீக்கனா என இருபிரிவுகளாகப் பிரிக்கலாம். சின்னணஞ்சான் கதையில் நற்கனவே நிகழ்கிறது. பொன்னுருவி குழந்தைப் பேறு வேண்டித் தவசிருந்த போது இறைவன் முனிவரைப் போல வடிவங்கொண்டு பொன்னுருவி கனவிலே தோன்றுகிறார். கனவில் தோன்றிய முனிவர் கையில் வெற்றிலைக் கட்டும், ஏடும், எழுத்தாணியும், மந்திரவாளும் இருப்பதாகக் கனவு காண்கிறாள். மேலும் பொன்னுருவி தான் உடுத்தியிருந்த சேலையில் ஒரு கிளியானது புழுவை எடுத்து வந்து கூண்டில் வைத்து ஊத அதன் குஞ்சானது பறப்பது போலவும், பாம்பானது தன் மடியில் படமெடுத்து ஆடுவது போலவும் கனவு காண்கிறாள்.

"கந்தமருங் குழலாளுக்கு கனாவுகாண வேணுமென்று
குஞ்சிநல்ல கடைபுரளக் குருமுனிபோல் வேசங்கொண்டு
சித்தாண்டார் வடிவாகத் திருசெவியில் சொல்லுவாராம்
... ...
பாம்புவந்து மடியேறிப் படமெடுத்து ஆடக்கண்டேன் (46 – 38 – 47)

---

1 Dr. V.I. Subramaniam, studies in Tamil long and Lit., P.9 Quoted in Evoluation and Evaluation of Epics in Tamils by Karisrajan P. 666.
2 Freud, Interpretation of Preams P. 165
3 R. Kasirajan Op. Ci. P. 667.

என்ற அடிகள் இதை விளக்குகின்றன.

சிவனணஞ்ச பெருமாள் சிவனிடம் வரம் பெற்று மணிகட்டிப்பொட்டல் என்னு் ஊரை அடைந்து, அவ்வூரில் உள்ள பெரிய சிவனணஞ்ச பெருமாளின் கனவில் பரமசிவன் வடிவில் தோன்றிக் கோயில் கட்டச் சொல்லுகிறார் என்பதை.

"பெரிய சிவனணஞ்சபெருமாள் பேருறக்கம் உறங்கும்போது
பிறைசடையோன் உருவதிலே ஓரரவும் கப்பறையும்
பஞ்சாட் சரத்துடனே பரமசிவன் போலவந்து
சிவனணஞ்ச பெருமாள் சாமிவந்து தெரிசனத்தில் சொல்லுவாராம்" (130 – 4 – 7)

என்னும் அடிகள் சுட்டுகின்றன.

நிமித்தங்கள்

நிமித்தம் என்பது வாழ்வில் நிகழவிருக்கும் நன்மை, தீமைகளைச் சில குறியீடுகளால் அறிவிப்பதாகும். நிமித்தங்கள் நன்னிமித்தம். தீநிமித்தம் என இருவகைப்படும். சில சமயம் இவை கனவிலும் தோன்றுவது உண்டு. அத்தகு கனவுகள் 'நிமித்தக் கனவு' எனப்படும். கதைப்பாடல்களில் பெரும்பாலும் தீ நிமித்தங்களே காணப்பட்டாலும் சில இடங்களில் நன்னிமித்தங்களும் காணப்படுகின்றன.

சின்னணஞ்சான் கதைப்பாடலில் பொன்னுருவி பிள்ளை வரம் வேண்டித் தென்காசிப் படைவீட்டைக் கடந்து செல்கின்றபோது ஆந்தையானது வலப்பக்கம் போவதைக் கண்ட தோழியர்கள் நல்லகுறி என்று கூறுகிறார்கள் என்பதை.

"ஆந்தையது வலம்போக யதுகுறியை தான்பாத்து" (16-25)
"கடந்தே யாந்தல் பறந்தோட கண்ட குறிதா னல்லதம்மே" (17-2)

என்ற வரிகள் பறவை நிமித்தத்தைக் கூறுகின்றன.

பொன்னுருவிக்கு பிரசவம் பார்க்க மருத்துவச்சி வரும்போது வழியில் சகுனம் காண்கிறாள். அப்போது கருடன் வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கம் செல்வதைக் கண்டு நல்லக்குறி என்று கூறுகிறாள் மருத்துவச்சி. இதனை,

"வாரபோது வழிதனிலே வந்தெதிப்பு பார்க்லுற்றாள்
வட்டமிட்டு கெருடாழ்வார் வலமிருந்திடம் பாய்ந்தார்
சட்டமாய் நல்குறிகள் தான்பார்த்தேன் தூதுவனே (54-29-31)

என்ற அடிகள் விளக்குகின்றன.

சின்னணஞ்சியிடம் வெளுத்த துணிகளைக் கொடுத்து மறுமாத்து வாங்கிவர மாடவண்ணான் அனுப்புகிறான். புறப்பட்ட சின்னஞ்சி சகுனம் கண்டு அஞ்சுகிறாள். இதனை,

"ஈட்டமாய் வெருகுசாட யிடமொரு காகமோட
கோட்டுமா முலையாள் தானுங் குசவனை யெதிரேகண்டாள்" (75-3-4)

இவ்வாறு சின்னணஞ்சி புறப்படும்போது கெவுளி சொல்லுதல், மங்கை தும்முதல், கோட்டான் கத்துதல், கூட்டமாய்ப் பூனைகள் வருதல், காகம் இடப்பக்கம் போதல், குயவன் எதிரே வருதல் போன்ற பல தீய சகுனங்களும் சொல்லப்படுகின்றன.

"தொல்லையோ வழியில் கண்ட தொடுகுறி கடையின் கூறோ" (79-3)

என்ற வரி சின்னணஞ்சி தான் கண்ட சகுனங்களைத் தடையாகக் கருதுகிறாள் என்பதைச் சுட்டுகிறது.

சிற்றிலக்கியத் தாக்கம்

சின்னணஞ்சான் கதை என்னும் இக்கதைப்பாடலில் குறவஞ்சி, தூது, உலா போன்ற சிற்றிலக்கியங்களின் கூறுகளைக் காணமுடிகிறது.

குறம்

பொன்னுரவி குழந்தைப்பேறு வேண்டி, பல தலங்களுக்குச் சென்று பலன் கிட்டாமல் மலைக்குச் செல்லுகிறாள். அங்கு மலைக்குறத்தி ஒருத்தி பொன்னுருவியைக் காண்கிறாள் குறப்பெண்கள் பொன்னுருவிக்கும் தோழியருக்கும் உணவும் வெற்றிலை பாக்கும் கொடுத்தார்கள். பிறகு குறத்தி குறி சொல்லத் தொடங்குகிறாள். குறி சொல்வதற்கு முன் தரைமெழுகிக் கோலமிட்டு, பிள்ளையாரை வைத்து, நிறைநாழி நெய்விளக்கு முதலியவற்றை வைத்து, அவல், பொரி, தேன், எள், பயறு, தேங்காய் ஆகியவற்றைப் படைத்து, சாம்பிராணி, தூபதீபம் காட்டி விட்டுப் பொன்னுருவியின் வலதுகையை நீட்டச் சொல்லிக் குறி கூறுகிறாள். வேலனையும், வள்ளியையும் துணைக்கு அழைக்கிறாள் "அரிச்சந்திரனுக்கும், பஞ்சபாண்டவருக்கும் நான்தான் குறி சொன்னேன்" என்று தன் பெருமையைக் கூறுகிறாள். அதன் பிறகு, "உன் ஊரு தென்காசி; உன் கணவன் செம்பவளராசன் ; நீ புறப்படும்போது வலப்புறத்தில் கெவுளி சொன்னது; அதனால் உன் கணவன் உன்னைப் போக வேண்டாம் என்று விலக்கினான்; பிள்ளையில்லாததால் நீ பேய் போல அலைந்தாய்; உறியிலே தயிர் இருக்கும் போது ஊரிலே வெண்ணெய் தேடுவார்கள்; உன் ஊரிலுள்ள பகவதியம்மன் கோயிலைக் கட்டிப் பூசை செய்தால் உனக்குப் பிள்ளை பிறக்கும்; அவன் வண்ணாத்தியால் தேசத்தை விட்டுப் போய்விடுவான்" என்று குறி கூறினாள்; அதற்குப் பரிசாகப் பொன்னுருவி காரை என்னும் கழுத்தணியைக் கழற்றிக் குறத்தி கழுத்திலே போட்டாள்; ஆபரணங்களையும் பொற்சரிகையும் கொடுத்தாள் என்பதனை,

"நிறைநாழி நெய்விளக்கு கொடுவாடி மகளே
நினைத்தகுறி சொல்வேனா னுன்கவலை தீர" (42-65, 66)

"வலதுகையை நீட்டுமென்று மாதுகுறி வுரைத்தாள்"
"கஞ்சமரும் பூங்குழலாள் பொன்னுருவி யம்மை (42-74)

காரைதன்னைக் கழத்தியவள் கழுத்ததிலே போட்டாள்" (43-52,53)

என்ற வரிகள் விளக்குகின்றன.

இது குறவஞ்சியில் தலைவிக்குக் குறத்தி குறி கூறுவதையும், ஆபரணங்களைப் பெறுவதையும் ஒத்து அமைந்துள்ளது. ஆனால் குறவஞ்சியில் குறத்தி தலைவியிடம் பாட்டுடைத் தலைவன் அவளை மணக்க வருவான் என்று குறி கூறுவாள். ஆனால் இங்குக் குழந்தை பிறக்கும் என்று குறி கூறுகிறாள்.

தூது

கதைப்பாடலில் தூது இலக்கியமும் முக்கிய இடம் வகிக்கிறது. தூது அரசியல் தூது, காதல் தூது என இருவகைப்படும். தூது பொதுவாக மனிதர்களை அடிப்படையாகக் கொண்டோ ஏனைய உயிர் மற்றும் உயிரற்றதுகளை அடிப்படையாகக் கொண்டோ அமையும். தமிழ் இலக்கியங்களில் தூது விரிவாகச் சொல்லப்படும். கதைப்பாடல்களில் சுருக்கமாகச் சொல்லப்படுகிறது. சின்னணைஞ்சான் கதையில் பல இடங்களில் தூது இடம்பெறுகிறது.

பொன்னுருவிக்குப் பத்து மாதம் முடிந்து பிரசவ நேரத்தில் சிறுக்கன் மருத்துவச்சியிடம் தூதாக அனுப்பப்படுகிறான். குழந்தை பிறந்த பிறகு தொட்டில் கட்ட மாந்தையரை அழைத்து வருமாறு தூதுவரை அனுப்புகிறான். சின்னணைஞ்சான் வளர்ந்த பிறகு சிலம்பம் படிப்பதற்கு இருளன் என்ற ஆயானை அழைத்து வரச் சிறுகனிடம் நீட்டோலை எழுதிக் கொடுத்துச் செய்தி சொல்லி அனுப்புகிறான்.

சின்னணைஞ்ச பெருமாள் உலா வரும் போது பெண்கள் கிளியைத் தூது விடுகின்றனர். சின்னணைஞ்சான் உலா வரும் போது சின்னணைஞ்சியைக் கண்டு அவள் மீது காதல் கொள்ளுகிறான். அவளைத் தன் அரண்மனைக்கு வருமாறு அழைக்க, அவள் வர மறுத்துவிடுகிறாள். பிறகு மறத்தலைவனைத் தூதாக அனுப்புகிறான்.

சின்னணைஞ்சியுடன் வாழ்ந்த சின்னணைஞ்சானைக் கூட்டிரவ சீவலமாறன் மந்திரியைத் தூதாக அனுப்புகிறான். தங்கை பொன்னுருவியை அழைத்து வருமாறும் சீவலமாறன் தூது அனுப்புகிறான். போரில் எல்லோரும் இறந்துவிட சின்னணைஞ்சானும், அண்ணாவியும் தங்கியிருக்க, படைகள் திரும்பி வந்த செய்தியை ஓட்டன் சீவலமாறனுக்குத் தெரிவிக்கிறான்.

உலா

தலைவன் ஒருவன் உலா வருதலும், அவனைக் கண்டு ஏழு பருவ மகளிரும் காதல் கொண்டு மனம் அழிதலும் உலா இலக்கியத்தின் பொருண்மையாகும். உலா பண்டைக் காலத்தில் காப்பியக் கூறாக இருந்தது. பிற்காலத்தில் தனி இலக்கியமாக வளர்ந்தது. சின்னணஞ்சான் கதையில் உலா, 'பவனி' என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது. அவன் உலா வரும் போது யானை எவ்வாறு அலங்கரிக்கப்பட்டது என்பதும், பெண்கள் எவ்வாறு ஆசை கொண்டார்கள் என்பதும் விளக்கப்படுகின்றன. ஆனால் பருவங்கள் குறிப்பிடப்வில்லை.

செஞ்சிலை தண்டை சிலம்பு புலம்ப தியங்கி வந்தா ளொருத்தி
மாவையுஞ் சந்தனம் மஞ்சளைப் பூசி மயக்கி வந்தா ளொருத்தி
வட்டத்தன மேல்குறு வேர்வையாக மயங்கி வந்தா ளொருத்தி (68.24-26)

என்று சொல்லப்படுகிறதே தவிர பருவங்கள் சொல்லப்படவில்லை.

நேர்த்திக்கடன்

நம்பிக்கை அடிப்படையில் வாழ்ந்துவரும் மக்கள், மனித முயற்சியால் சில நிகழ்ச்சிகள் நிறைவேறாதபோது இறைவனை நாடுகின்றனர். இறைவனிடம் தனக்கு வேண்டியவற்றைப் பெற முயல்கின்றனர். இப்பெறுதலின் விளைவே நேர்த்திக் கடன்கள் ஆகும். இன்ன நன்மை செய்தால் இன்ன செய்வேன் என்று வேண்டுகின்றனர்.

பொன்னுருவி குழந்தைப்பேறு வேண்டிப் பல தலங்களுக்குப் சென்று இறைவனிடம் முறையிட்டுப் பல வேண்டுதல்களைச் செய்கின்றாள். சிலவற்றை முன்னே செய்கிறாள். சிலவற்றைப் பின்னே செய்வதாக வேண்டிக் கொள்கிறாள். அவை பின்வருமாறு,

பொன் தருதல், அணிகலன்கள் செய்து கொடுத்தல், பிராமணர்க்குப் பசுக்களைத் தானமாகக் கொடுத்தல், துலாபாரதானம் செய்தல், சிவனின் கையிலுள்ள மான், மழு ஆகியவற்றைப் பொன்னால் செய்து தருதல், தம்பட்டம்,

வெங்கலப் பேரிகை செய்து தருகிறேன் எனல், சப்பரம், சந்திரக்குடை, தங்கப்பல்லக்கு, பொற்றேர், வில், திருவுருவம் ஆகியவற்றைச் செய்து கொடுத்தல், மண்டபம், மாளிகை, திருமதில், மணிமேடை, சிங்காசனம், மகரதோரணம், பூந்தல விதானம், கூரை ஆகியவற்றை அமைத்தல் குதிரை, குதிரையின் மேல் ஆள், ஆலித்தடிகாரர் ஆகிய உருவங்களைச் செய்து கொடுத்தல், குழந்தை பிறந்தால் இறைவன் பெயர் வைப்பேன் எனக்கூறுதல், தினந்தோறும் பூசை, மாதந்தோறும் நடைபெறும் சிறப்பு பூசை, திருவிழா, குருபூசை, சிவ பூசை ஆகியவற்றைத் தவறாமல் செய்வேன் எனக் கூறுதல் ஆகிய நேர்த்திக்கடன்களைக் காண்கிறோம்.

இன்றும் செல்வந்தராயிருப்பவர் இவை போன்ற வேண்டுதல்களைச் செய்வதையும், ஏழையாய் இருப்பவர், தீ மிதிக்கிறேன், கோயிலுக்கு நடந்து வருகிறேன், அங்கப் பிரதட்சிணம் செய்கிறேன், நாக்கில் அலகு குத்திக் கொள்கிறேன், தீச்சட்டி எடுக்கிறேன், வேப்பிலை ஆடை உடுக்கிறேன் என உடலை வருத்தும் வேண்டுதல்களைச் செய்வதையும் காணமுடிகிறது.

புராணத் தாக்கம்

பொன்னுருவி கருவுற்று இருக்கிறாள், சடங்கு முதலியன நடைபெறுகின்றன, தாய்மார்களும் தோழியர்களும் வாழ்த்தி ஆறுதல் கூறுகிறார்கள். கருவுற்ற பொன்னுருவி பத்து மாதத்தை அடைகிறாள். அதுவரை அவளுக்கு எந்தவிதத் தீங்கும் ஏற்படவில்லை என்பதைச் சுட்ட

"கூற்றை யுதைத்ததோர் சொக்கநாத ரருளாலே
கோதுகுலப் பொன்னுருவி மாதம்பத்து மானாள்" (49-15)

என்று கூறுகிறார் ஆசிரியர். பொன்னுருவிக்கு அருள்புரிந்த சொக்கநாதன் கூற்றுவனை உதைத்தவன் என்று சிறப்பிக்கப் படுகிறார். மார்க்கண்டேயர் வரலாற்றைக் கூறும் (கந்தபுராணம்–மார்க்கண்டேயப்படலம்) புராணச் செய்தி இங்கு இடம் பெறுகிறது.

வெளுப்பதற்குரிய புடவையும் வேட்டியும் துப்பட்டியுமாக அனைத்துத் துணிமணிகளையும் வெளுப்பதற்காக மூட்டையாகக் கட்டித் தலைமேல் சுமந்து கெம்பீரமாகச் சாலை வழியே நடந்து வருகிறாள் சின்னணைஞ்சி. அந்தக் காட்சி,

"குடைபோல மலையெடுத்த கோபாலக் குண்டோதரனைக்
கொல்லவந்த கோலமது போலவே" (83-3)

இருந்தது என்று கூறும் உவமைக் கூற்று கோவர்த்தன மலையை எடுத்துச் கோபாலர்களைக் காத்துக் குண்டோதரனை அழித்த திருமாலின் செய்தியை எடுத்துக் கூறுகிறது.

மறத்தலைவனைப் பார்த்து, நம் நாட்டு வடபகுதியில் துணிவெளுத் தெடுப்பான் பெற்ற மகள் சின்னணைஞ்சி என்னும் பெண்ணைப்போல வேறு ஒருத்தியை நான் இதுவரை கண்டதில்லை.

"கண்டவுடன் மதிமயங்கிக் காதல்கொண்டே னவள்மேலே
உண்டான செய்தியிது உன்னாணை யெனவுரைத்தார்" (92-13,14)

என்கிறான் சின்னணைஞ்சான்.

சின்னணைஞ்சான் சொன்ன மொழிகளைக் கேட்ட மறத்தலைவன் மிகவும் துன்பமுற்றவனாய் மன்னவனை நோக்கி,

"என்னமொழி சொன்னீர்காண் யிலங்குசிவ னணைஞ்சவரே
முன்னிருந்த மன்னவர்கள் மூதாக்க ளானவர்கள்
மன்னவனே யிப்படித்தான் வரம்புதப்பி நடந்தாரோ?" (92-17-19)

என வினவுகிறான் அதற்குச் சின்னணைஞ்சான்,

"வரம்புதப்பி நடக்கலையோ மலையிலொரு குறத்திதன்னை
உரம்பெரிய வடிவேல ருகந்தெடுத்துப் போகலையோ
கரந்தனிலே மழுவேந்துங் கடவுள்பர மேஸ்பரனார்
பரம்பதில்மீன் போட்டுவிக்கும் பரத்தியைக்கொண் டிருக்கலையோ"(92-20-23)

என்றெல்லாம் தன் நியாயங்களை எடுத்துக் கூறுகிறான் சின்னணஞ்சான். இக்கூற்றுகள் வேடனாக வந்து வள்ளியை மணந்த (கந்தபுராணம் – வள்ளியம்மை திருமணப்படலம்) செய்தியையும் சிவபெருமான் மீனவனாக வந்து வலைவீசி மீனவன் மகளாகிய பார்ப்பதியை மணந்த செய்தியையும் (திருவிளையாடற் புராணம் – வலைவீசின படலம்) உள்ளடக்கி நிற்கின்றன.

சின்னணஞ்சான் வேண்டுகோளின்படி மறத்தலைவன் சின்னணஞ்சியிடம் தூது செல்லுகிறான். அவ்வாறு அவன் செல்லும் செயல்,

"ஏத்தபிரான் சுந்தரர்க்காய்ப் பரவையிடந் தன்னில்
ஈஸ்பரனார் முன்தூது நடந்தவகை போலே" (93-14)

அமைவதாக இருக்கிறது என்னும் உவமைக் கூற்று சிவபெருமான் தூதுவனாகச் சென்ற பெரிய புராணச் செய்தியை உள்ளடக்கி நிற்கிறது (பெரியபுராணம் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்)

தூது போன மறநத்தலைவனிடம் சின்னணஞ்சி பலவாறு வாதமிட்டு மறுத்து உரைக்கிறாள். தான் தூது சென்று வந்த செய்தியை மன்னனிடம் கூறும் போது,

"தொழுது பணிந்து மறத்தலைவன் தூது போன துயரமெல்லாம்
எழுதி முசியா தொருபனை ஓலையில் ஏட்டி லடங்கவுமாட்டாது
முழுதும் உரைக்க வேணுமென்றால் முசியாதுராமர் கதைபோலே" (97-1-3)

என்னும் இராமாயணக் கருத்தை உவமையாகக் காட்டுகிறான். இவ்வுவமையில் இராமாயணம் என்னும் இதிகாசத்தில் உட்பொருளே முழுமையாக அடங்கிவிடுகிறது.சிவபெருமானை வணங்கி அதன் பயனாய்,

"நானிருக்கும் இடமதிலே நல்லவ ரிருக்க வேணும்
... ...
வாக்குந் தவறாமல் அருள்நோக்குந் தரவேணும்" (125-12-16)

என்றெல்லாம் வேண்டி, வேண்டிய வரங்களைப் பெற்று மணிக்கட்டிப் பொட்டலுக்கு வருகிறார் அணஞ்சவனார். இறைவன் ஆணைப்படி நாராயணனும் உடன் வருகின்றான். இச்செய்தியை,

"பஞ்சவர்க்குத் தூது சென்ற பாரளந்தோன் கூடவர" (127-5)

என்னும் அடி குறிப்பிடுகிறது. திருமால் கிருஷ்ண அவதாரத்தில் பாண்டவருக்காகத் தூது சென்ற இதிகாசச் செய்தியைப் புலப்படுத்துகிறது.

உவமைகள் – பொன்னுருவி

பொன்னுருவி குழந்தை வரம் வேண்டிப் பல தலங்களுக்குச் செல்லுகிறாள். பிள்ளைமடம் என்னும் மடத்தை விட்டு செல்லும் போது தன் நிலையைத் தானே சொல்லிக் கொள்ளுகிறாள். அந்த நிலையை.

"*புடவையிடையில்* அலைந்தாப் போல்" (18–3)
"நானொருத்தி *பேய்போலே* நாட்டுவழி *திரிகிறேன்* (21–2)

என்னும் உவமையால் தனக்குத் தானே கூறிக்கொள்கிறாள்.

இவ்வளவு அலைந்தும் பயன் இல்லாத நிலையில் இறைவனைப் பார்த்து,

"உத்தமனே வொன்றுமில்லா ஊமைபோ லானாய்" என்னும் கூற்றால் இறைவன் அருளாமையால் அவனை ஊமையாக உவமிக்கிறாள். குழந்தை இல்லா நிலையை எண்ணியெண்ணி அடியேன்,

"விசையத்த *பம்பரம்போல்* மெய்மறந்து வாடுறேனே
கயறத்த பம்பரம்போல் கட்டவிழ்ந்து விழுங்காலம்" (16–29,22)

என்னும் உவமைத் தொடர்களால் தனக்குத் தானே நொந்து கொள்ளுகிறாள். சோர்வுற்று இருக்கும் அவள்நிலை, "வாடிய பயிர்போல் முகம்வாடி புரண்டு எழுந்து வருகிறாள்" என்று உவமிக்கப்படுகிறது.

பிள்ளையில்லாமையால் அடியேன் இந்த உலகத்தில்

"ஆனைக்கால் பட்ட தேரையானேன்
ஆத்தில் கரைத்த புளியானேன்" (29–3)

என்று தன்னைத் தானே நொந்து கொள்கிறாள். பொன்னுருவி இறைவன் அருளால் கருவுறுகிறாள். குழந்தை வளரும் அவள் வயிறு

"ஏத்த ஆலிலை போலே திருவயிறு" (47–22)

என உவமிக்கப்படுகிறது. பிரசவ வேதனையைத் தாங்க முடியாமல் புலம்புகிறாள். அந்த நிலையில்,

"காளைகட்டுங் *கயிறதுபோல்* கட்டுவிட்டு வருகுதேடி" (56–13)
"பருத்திபடாப் பாடதிலும் பதின்மடங்கு பாடுபட்டேன்" (57–24)
"ஆயிரம்தேள் கொட்டும் விசமே பொறுப்பேனோ" (58–4)

என்று கூறித் துடிக்கிறாள். அந்தத் துடிப்பு நிலை காளை கட்டிய கயிறாகவும், பருத்தி படாத பாடாகவும் ஆயிரம்தேள் கொட்டும் விஷமாகவும் உவமிக்கப் படுகின்றது.

சின்னணஞ்சி

"கரும்பு வில்லுக் கிலக்கான காமனுட மோகினிபோல், (69–9)
"பேடையிள மயில்போல பிறந்தாளே சின்னணஞ்சி" (69–21)
"அளந்துகுறித் துருவாக்கி யச்சதிலே சேர்த்தால்போல"
"கட்டுந் தறியைவிட்டுக் கடராத ஆவினம் போல்" (69–72)
"வேப்பிலைபோல் விழிமடவாள் மெல்லிநல்லாள் சின்னணஞ்சி" (69–80)

என்னும் அடிகளில் சின்னணஞ்சி காமனுட மோகினியாகவும் இளம்பெண் மயிலாகவும் உருவகிக்கப்பட்டு அச்சில் சேர்த்த பொம்மையாகவும் உவமிக்கப்படுகிறாள். கொடி போன்ற இடை, ஆலிலை போன்ற வயிறு, வேப்பிலை போன்ற விழி ஆகியவற்றை உடையவள், கட்டுத்தறியைவிட்டு நீங்காத பசு என்றெல்லாம் உவமிக்கப்படுகிறாள்.

சின்னணஞ்சானின் விருப்பத்திற்கு இணங்கி உடன்வர மறுத்த சின்னணஞ்சியைச் சின்னணஞ்சான் தூக்கிச் சென்றுவிடுவேன் என்னும்பொழுது

"கோழிக் குஞ்சியை வாழ்கெருடன் சென்று
கொண்டு போனது போல் கொண்டு போகாட்டால்" (87–8)

என்னும் உவமையால் விளக்குப்படுகிறாள்.

மறத்தலைவன் சின்னஞ்சியைப் பார்த்து கூறும் கூற்றில்,
"மகாமேருவைச் சேர்ந்திருந்தால் காகம் பொன்னிறமே" (95–13)

என்னும் உவமை இடம் பெறுகிறது.

உருவகம்

"வாசமத்த பூவானேன் மதிலிடிந்த வீடானேன்
காயமத்த சீவனானேன் கரையிழந்த குளமானேன்
ஆசையத்த முரசானேன் ஊமைகண்ட கனவானேன்
தேசமத்த அகதியைப் போல் திரிந்துவுன் னிடத்தில் வந்தேன்"(35,37–40)

என்னும் அடிகளில் குழந்தை கிட்டாமல் வருந்தும் பொன்னுருவி தன்னை மணமற்ற பூவாகவும், மதிலிடிந்த வீடாகவும். காயமற்ற உயிராகவும், கரைகளில்லாக் குளமாகவும், ஓசையற்ற முரசாகவும், ஊமைகண்ட கனவாகவும், தேசமற்ற அகதியாகவும் உருவகித்துப் பேசுகிறாள்.

மரபுத்தொடர்கள்

மலைக்குறத்தி பொன்னுருவிக்குக் குறி சொல்லும் போது ஊரிலே பகவதியம்மன் கோயில் இடிந்துள்ளதையும், அதைக் கட்டிமுடித்துத் திருவிழா செய்தால் குழந்தை பிறக்கும் என்பதையும் இவற்றை விட்டுவிட்டு வீணாக வெளியில் திரிவதைக் கூறி,

"உரிதனிலே தயிரிருக்க ஊர் புகுந்து வெண்ணெய்
ஊர்தனிலே நீதிரிந்தால் கிடைக்குமோடி தாயே
வீட்டகத்தே விளக்கொளி இருந்து யிலங்கிடவே
வெளிதனில்போய் நீகேட்டால் கிடைக்குமோடி தாயே" (43–31–34)

என்று சொல்லும் அடிகளில் மரபுத் தொடர்கள் பலவற்றை எடுத்தாளுகிறார் ஆசிரியர்.

தூதுவன் பொன்னுருவிக்குப் பிரசவம் பார்க்க மருத்துவச்சியை அழைக்கிறான். அவள் நடக்க முடியாது எனக்கூறப் பதில் கூறும் தூதுவன் கூற்றில்,

"நீ கிழவி யானாலு நெஞ்சித்திடம் போய்விடுமோ
குப்பையிலே போட்டாலுங் குன்றிமணி மங்கிடுமோ
பசுக்கிழ டானாலும் பாலுருசி போய்விடுமோ" (54–3–5)

என்னும் தொடர்கள் இடம் பெறுகின்றன. பிள்ளையில்லாத நிலையில் தன்னைச் சொத்தைச் சுண்டைக்காயாக உருவகித்துக் கொள்ளும் பொன்னுருவி,

"சுண்டைக்காய் தன்னிலே சொத்தைப் போனால் கறிக்காமோ " (44–21)

என்னும் தொடரால் தன்னையே நொந்து கொள்ளுகிறாள். மலடி என்ற இழி சொல்லைப் பெற்று உயிர் வாழ்வதைவிட இறப்பதே நல்லது என்று எண்ணும் பொன்னுருவி,

"சோத்துக்கு முன்னே சுரணையல்லோ ரெம்பப் பெரிது" (44–36)

என்னும் தொடரால் தான் சுரணை உடையவளாகி உயிர்விட எண்ணுகிறாள். உயர்ந்த குலத்தைச் சார்ந்த சின்னணஞ்சானும் தாழ்ந்த குலத்தைச் சார்ந்த சின்னணஞ்சியும் ஒன்றாக முடியுமா என்பதைச்

"சுட்டமண்ணும் பச்சை மண்ணுங் துணையிதாமோ" (86–12)
"எட்டாப் பழத்துக்குக் கொட்டாவியிடச் சொல்லவில்லை" (86–16)

என்றுந் தொடர்கள் சுட்டுகின்றன.

மன்னன் கருத்தை ஏற்க மறுக்கிறாள் சின்னணஞ்சி. அவ்வாறு மறுத்துப் பேசும் சின்னணஞ்சியாகிய எலியைப் பூனை விட்டுவிடுமோ என்னும் கருத்தில் மறத்தலைவன்,

"பலியாதோ யெலிபாய்ந்தால் பூனையது விடுமோ" (95–17)

என்று சின்னணஞ்சியிடமே கூறுகிறான்.

மன்னவன் கருத்துக்கு இணங்குமாறு வற்புறுத்திய மறத்தலைவனை நோக்கி, சின்னணஞ்சி தன்னை நரியாகவும். மன்னனைச் சிங்கமாகவும் உருவகித்துக் கொண்டு,

"சிங்கத்தோடே வங்குநரி சேர்ந்து வாழ்ந்திடுமோ" (95–20)

என்று மறுத்துக் கூறுகிறாள்.

இதேபோலத் தன்னை உடலில் அணியமுடியாத பொன்னாகவும், வண்ணான் துறைக் கல்லாகவும் உருவகித்துக் கொள்ளும் சின்னணஞ்சி

"வங்கத்துக் காகாத பொன்னைத் தங்கமிடலாமோ
வண்ணான்கல் துறைக்குபோனால் மாணிக்கக் கல்லாமோ" (95–21)

என்று கூறுவதோடு தன்னை வருத்தத்துக் குள்ளாக்குகிறார் மன்னர் என்று நொந்து பேசுகிறாள்.

சுருங்கக் கூறின் இக்கதைப்பாடல் மிகச் சிறந்த ஒரு கதைப் பாடலாக அமைந்துள்ளது எனலாம்.

A Critical Notes

The origin of stories cannot be fixed with certainty in time frame. Perhaps it started with the most primitive man narrating his experiences to his fellow beings all returning from his forest expeditions. Scholarly commentators of **Tolkāppiyam** such as that the following lines.

" Tonmai tāṉē collun kālai
Uraiyōtu punarnta palanai mērrē"

indicate the ancientness or antiquity of story telling .

The stories of **Irāmar** and **Pāntavar** have been cited as the oldest examples by them

What is a Kataippātal?

The narration of a story in verse in known as **Kataippātal** or ballad. It may be a single story or a combination of many stories in English. The word 'ballad' is derived from the Latin expression 'ballare' which also means a dance. Even now a particular dance form is known as ballet. Only from the sixteenth century A.D. onwards the term ballad specifically referred to a poetic narrations of a story in western literature.

These are the following features as far as ballads are concerned

1. Folk songs of stories were spread by means of oral presentation or by word of mouth.
2. In content form and style ballads have rustic characteristics.
3. Each ballad is based on a particular story.
4. Ballads contain dramatic themes
5. The authorship of most of the ballads is not known exactly.
6. A few ballads are set to music and dance for presentation
7. The important features of a ballad are action, characters, setting and theme

8. Originally the ballads were meant for singing or musical presentation
9. The element of repetition found in folk literature is evident in ballads.
10. Ballads contain the dialectal peculiarities of the rural folk.

The western etymological and literary dictionaries define the term 'ballad' as a nomadic song. Two types of such nomadic songs are mentioned therein.

1. Songs handed down from generation to generation by means of oral music. The names of the composers or authors of such songs remain unknown.
2. Folk songs or nomadic songs that contain literary merit. In this category the authors are eraudite poets who attempt the medium of folksong for conveying their themes in that form.

W. Edson Richmond defines a 'ballad' as narrative folk poetry. He further observes that a novel or a poem can be easily identified by mere sight or cursory perusal a folk song cannot be thus identified. Mere poetic narration of a story does not make it a folk song or ballad. Other factors such as

The oral rendering of ballads

During festivals in the villages of Tamilnadu ballads are song and the rural folk gather at various places to sit and listen to the musical rendering of ballads. Generally people assemble at temple premises, improvised open air theatres, public sheds and choultries. Even now in Kanyākumari and Tirunelvēli districts ballads are rendered in **Villuppāṭṭu** during festivals. The circumstances of its composition and circulation among the contemporary folk and their descendants and the changes undergone in form and contents over different and succeeding periods are

to be examined to find out the authenticity of narrative of folk poetry. He also lays down certain guidelines in this regard.

1. Ballads or folksongs are based on a single storyline
2. They progress in a dramatic pattern
3. They are not subjective

The circumstances of the origin of ballads

Western scholars state that ballads originate from caste and communal factors, the dynamism of the people of a certain caste or community is responsible for the creation of ballads. This reasoning may well apply to the origin of Tamil ballads.

Scholarly research on the places of origin of ballads and epics tends to conclude that political factors prevalent among people living in border states are also responsible for the origin of such poems.

The various forms of ballads	Examples
1. Ammāṉai	Āmaiyar Ammāṉai, Vaikunta Ammāṉai
2. Katai	Tampimār katai, Nilacuvāmi Katai
3. Kataippāṭal	Kaṭṭapommaṉ Kataippāṭal
4. Kummi	Ciṉṉamalikkummi, Kaṭṭapommu kummippāṭal
5. Kuṟam	Turōpatai Kuṟam, Miṉṉoḷiyaḷ Kuṟam
6. Cantai	Apimaṉṉaṉ Cantai, Kāṉcākip Cantai
7. Cintu	Pūliuttēvaṉ cintu
8. Tavanilai	Ilaṭcumi ammaṉ Tavanilai, Poṉṉuruvi Tavanilai
9. Tūtu	Krisnaṉ Tūtu, Pulantiraṉ Tūtu
10. Pōr	Karṇaṉ Pōr, Kaṉṉadiyaṉ Pōr
11. Mālai	Alliaracāṇi Mālai, Pavaḷakkoṭi mālai

Apart from the above mentioned categories of ballads there are a few ballads who do not come under a poetic category. The following works are examples of such pieces. **Ēniyērran, Pañca pāṇtavar, Vaṉavācam, Poṉṉuruvi macakkai** and **Māruti Vijayam,**

The various kinds of ballads

Folklore experts and manuscriptologists categorize or divide ballads differently according to their perceptions.

Nā. Vāṉamāmalai divides ballads into four categories i.e., epic excertps, social ballads, historical ballads and ballads on village deities.

Cōma.Lē. mentions three kinds of ballads i.e., epic ballads, social ballads and historical ballads.

Ce. Aṉṉakāmu four kinds of ballads that are related to historical events, mythologies, heroic exploits and love stories.

Dr. P. Supramaniniam lays down five divisions of ballads based on heroic epics, historical events, mythological stories, social themes and other categories of action.

Cu. Caṇmukacuntaram states that mainly balllads are threefold in their contents i.e., mythological historical and social.

Mu. Arunācalam refers to seven types of ballads i.e., historical, mythological, social, love themes, other stories, **Villuppāṭṭu** and modern ballads.

In the final analysis as themes of love and heroism find their due place in epics and historical accounts we may state that the four main

categories of ballads are epic narratives, mythological ballads social ballads and historical ballads.

Social ballads

Social ballads contain themes based on social complexities and problems. The overpowering caste factors, intercaste marriages with their consequences, the woes of women in respect of paternal property rights and the exploited farm hands turning to dacoity on account of unemployment are some of the recurring major themes of social ballads according to **Nā. Vāṉamāmalai**. Some examples of such social ballads are given below.

1. Intercaste marriages and their tragic consequences. Examples **(Muttuppaṭṭaṉ Katai, Maturai Vīraṉ Katai, Ciṉṉaṉañcāṉ Katai)**
2. Caste domination and the suppression of low caste **Nātar** by the upper caste people. Example (**Ciṉṉattampikatai)**

3. Social groups based on maternal relationship quarrelling with the paternal social groups when the former seek marital alliance with the latter. Examples (**Tōṭṭukkāri Ammaṉ Katai, Veṅkalarācaṉ Katai)**

4. The denial of property rights to women and their tragic consequences. Example **(Nallataṅkāl Katai)**

5. Humanitarianism which transcends caste and religious barriers Example **(Kautalamātaṉ Katai) Ciṉṉaṉañcāṉ Kataippāṭal,** taken up for publication here deals with intercaste problems and the human interaction and reaction to such problems.

The structure of the work

This ballad consists of three-section i.e., invocation (**Kāppu**) declaration of modesty (**Avaiyaṭakkam**) and the story (**Katai**)

In the **Kāppu** section the author invokes the blessings of **Cakti, Araṉār, Māl, Kaṇapati, Kantaṉ, Vaḷḷi Teivayāṉai** and **Carasvati** to enable him to narrate the tales of **Mātu Poṉṉuruvi**, the queen of **Ceṅkōttai** and the king of **Valaṅkai** dynasty who ruled over **Cenkōttai** by the grace of Goddess **Cakti.** The author also states that his ballad is in the form of **Villuppāṭṭu.** In a particular line of the invocatory verses the author mentions his name as **Āṟumukaṉ.**

In the Avaiyatakkam section the author declares modestly that he has no pretensions to great poetic talent. By way of comparison he states that a glow worm cannot match the sun, a clay elephant cannot equal a real stone elephant, a stove **pati** (measuring bowl) is no comparison to a gold **pati** and a turkey cannot become a peacock. Hence he requests scholarly readers to put up with the errors in his work and pardon him. Then he commences the narration of the story in the **Villuppāṭṭu** pattern with the line,

> **Nāṭāṉa nāṭatilē nallā Teṉkācip paṭṭaṇattil**
> *(In* **Teṉkāci** *a good country among countries)*

The time of occurrence of the story

From the palmleaf manuscript we come to know that **Cempavaḷarācaṉ** ruled over the **Ceṅkōttai** region of **Teṉkāci** country after the reign of **Añcumuṭi** kings. His wife's elder brother **Cīvalamāṟaṉ** was at that time the ruler **Teṉkāci** region.

The identity of **Cīvalamāṟaṉ** will throw light on the time of occurrence of this story. Dr. U.Ve. Cuvaminatha Iyer library has published a book entitled **Cīvalamāṟaṉ Katai.** The author of this work is **Vicayanāraṇam Citamparanātar** who lived around 1572 A.D. This fact

is borne out by a stone inscription found in the **Mūlaṭṭānēcuvarar** temple at a place called **Cāmpūr (Cāmpavar) Vaṭakarai**.

The names of five kings known as **Pāṇṭiyars** with the common title of **Srīvallapaṉ** have been recorded as successive rulers from 1429 A.D. onwards in the following order.

1. **Kulacēkara Srīvallapaṉ** from 1429 to 1473 A.D. He is also known as **Caṭayavarmaṉ Kulacēkara Pāṇṭiyaṉ.**

2.**Caṭayavarmaṉ Srīvallapaṉ** from 1473 to 1506. He is also called **Aḻakaṉperumāḷ Parākkirama Pāṇṭiyaṉ.**

3.The next ruler in that dynasty **Caṭaiyavarmaṉ Srīvallapaṉ** from 1534 to 1543 A.D. His additional appellations were Iṟantakālametutavaṉ and **Pāṇṭiyarajyā Tāpaṉācūriyaṉ**

4.The fourth ruler in that line from 1566 to 1605 A.D. **Ativīrarāma Srīvallapaṉ** who was also known as **Caṭaiyavarmaṉ Ativīrarāmapāṇṭiyaṉ**

5.The fifth king was the younger brother of the fourth ruler

Cīvalamāṟaṉ mentioned in **Cīvalamāṟaṉ Katai** is identified as the third king mentioned in the above sequence i.e., **Caṭaiyavarmaṉ Srīvallapaṉ**. He lived as contemporary of **Vicuvanāta Nāyakkar** (1529 - 1564A.D.)

The chronological order of the five **Pāṇṭiya** king's mentioned above and the period of **Cīvalamāṟaṉ** inferred thereof cannot help us in fixing the period of rule of the **Cīvalamāṟaṉ** who figures in **Ciṉṉaṉañcāṉ Kataippāṭal**. The contradictory factors are as follows.

In the ballad **Cinnanañcān kataippāṭal** it is mentioned that **Ponnuruvi** in her pilgrimage seeking childbirth reached the entrance of the old tower of the temple at **Tiruccentūr**. The copper plate inscriptions of **Tiruvāvāṭuturai Ātīnam** (a religious matt of Tamilnadu) reveal the financial assistance provided by the **Nāṭārs** of **Civakāci** and people of other communities for the construction of a new temple tower in the year 1779 A.D. though the five **Pāntiya** Kings belonged to a much earlier period none of them can be identified as the **Cīvalamāṟācan** of the **Cinnanañcān kataippāṭal**. In the year 1753 A.D. a king by name **Cīvalavara Kuṇarāman** ruled over the region where the events of the story of the ballad had occurred. Supposed to be the younger brother or son of **Apirāma Ativīrarāman**. This ruler provided endowment to the **Kuṟṟālanātar** temple in the year 1753 A.D. this information is available from the copper plate inscription of the said temple. The inscription mentions the awards and titles conferred on him such as **Iṟantakālameṭutta Aḷakan perumāḷ Srīvallapa Varakuṇarāma Tēvatiksitar** and **Cānkīta Cākitiya Cārvapouman**

The reason for fixing the time of occurrence of the story

1. In the manuscript No.7 of the ballad the year in which **Cinnanañcān** sought a boon is mentioned as Kollam 950. This corresponds to the year 1774 to 1775 A.D.

2. The five early **Pānṭiya** Kings mentioned as rulers of **Tenkāci** region were great warriors who distinguished themselves in historic and big battles, they also provided munificent endowments for noble causes. They were scholars as well credited with the authorship of many works. The king **Cīvalamāṟan** who figures in our ballad is a simple and ordinary person without any impressive credentials.

3. When the childless **Ponnuruvi** goes on her pilgrimage seeking the boon of fertility and conception she arrives at the places called **Aḷakappamutali maṭam** and **Kavuntarmaṭam** of which the former existed towards the end of the 18th century A.D.

4. It is learnt from the copper plate inscriptions of **Cankaranayiṉār Kōvil** temple that a **Pāṇṭiya** king called **Cīvilimakarācā** and the **maṟavā** leader with the title **Intirattalaivaṉ** whose name was **Tiruvannāttēvaṉ** had the customary right of first touching of the **tērvaṭam** (the rope used to pull a chariot) during the festival.

5. In the ballad **Ciṉṉaṉañcāṉ kataippāṭal** the hero **Ciṉṉaṉañcāṉ** is said to belong to the **Valankai** community. He is also called as **Tātālaṉ** these two terms refer particularly the community of **Nāṭār**, the plate inscriptions recently identified at **Karumāpuram, Pūntuṟai, Tirumurukaṉ Pūṇṭi** and **Peruntuṟai** (all of **Konkunāṭu** or **Coimbatore** region) testify to the practice of **Nāṭār** community people claiming association with **Curiya kulam** (solar dynasty) and **Cantirakulam** (lunar dynasty) they also bore the titles if **Nāṭāḻvār** and **Tātāḻvār**. They called themselves the descendants of **Pūvēntiyacōḻar** and warriors who opened their path through their swords. The work **Akilatirattu** by **Vaikuṇṭacāmi** tells us that the term **Tātālvār** refers only to **Nāṭār**. An eighteen century stone inscription of **Kulacēkarapaṭṭiṉam** mentions the following names of various **Nāṭār** community sects. **Kuṭṭam Cantiramarttaṇṭap Paṉikka Nāṭār, Kumāravīramārttaṇṭa Nāṭār, Nilaimaikkāra Nāṭār, Minaiketaṉ, Mukkantar, Kaḷḷaccāṇār** and **Malaiyāḷāttuccāṇār**, Among the above mentioned **Nāṭār** sects the **Nilaimaikkāra Nāṭār** also known as **Ūraṉ** were said to have been exempted from taxation or penalty thereof. They were deemed aristocrats and they might have ruled over the **Teṉkāci** region as chieftains during the 17th and 18th centuries.

6. The **Cīvalamāṟaṉ** who ruled between 1534 and 1543 A.D. is said to have given his daughter in marriage to **Accuta Tēvarāyar**. But the **Cīvalamāṟaṉ** of our ballad wants to give his daughter **Iṉpakkaṉi** in marriage to **Ciṉṉaṉañcāṉ**

On account of the reasons mentioned above the time of occurrence of the story of our ballad can be fixed as the 18th century.

The period of the author

In the manuscript (No.7) of **Ciṉṉanañci katai** available at the Institute of Asian studies it is mentioned in the first page that **Aṇañcaperumāl nāṭār** is the author of that work which belonged to **Tirumāl Nāṭār**. The year of writing the work is mentioned as Kollam year 950 which corresponds to 1774 A.D. It is mentioned in the ballad that in that year **Ciṉṉanañcāṉ** after obtaining a boon from **Lord Civaṉ** appeared in the dream of **Aṇañcaperumāl** and directed him to construct a temple.

This **Aṇañcaperumāl Nātār**, his grandson and all the descendants of that family had the same name (**Aṇañcaperumāl**). The name of **Tirumāl Nāṭar's** father was **Aṇañcaperumālnāṭār** Ciṉṉaṇāñcāṉ is said to have appeared in the dream of his father and told him that his son should read the story of **Ciṉṉaṇañcāṉ**. Hence Anacaperumal Nātār was provided necessary education. Only afterwards the temple for **Ciṉṉaṇañcāṉ** was built. It may be inferred that the temple was constructed towards the end of the 19th century and the time of occurrence of the story was the 18th century A.D. The right of reading the manuscript was obtained by **Tirumāl nāṭār** herditarily after his father's demise. The above mentioned facts are mentioned in the manuscript No.7

In the palmleaf manuscript no.46. the author's name is mentioned as **Aṟumukavaṉ** and **Paramacivaṉ** Palan in Patal-6. The name **Āṟumukam** or **Āṟumukapperumāl** has been common in the family of **Aṇañcaperumāl.**

In the year 1606 A.D. a **Villuppāṭṭu** entitled **Valaṅkai Nūl** or **Veṅkalarācaṉ Katai** was composed by one **Āṟumukam**. He was a poet of the 17th century.

The author of **Ciṉṉaṇañcāṉ Kataippātal** i.e., **Pa. Āṟumukam** might have belonged to the 18th century. **Ārumukaperumāl nātār**, the

son of **Kumāraċāmi nāṭār** of the 20th century and the author of **Aravamuttu Vīraṉ Katai** might have been the grandson of **Pa. Āṟumukam** who wrote **Ciṉṉaṉañcāṉ Kataippāṭal**.

Synopsis

Cempavaḷarācaṉ who rules over the **Ceṅkōttai** region marries **Poṉṉuruvi** the sister of **Cīvalamāṟaṉ** the king of **Teṉkāci**

As **Poṉṉuruvi** is not blessed with a child for long she is griefstricken. She is unwilling to adopt a child as advised by her husband. She decides to go on a pilgrimage to holy strives and perform a penance seeking the boon of child birth.

Her pilgrimage and penance marked by due rituals and worship are of no avail. As she returns home in despair and disappointment she meets a gypsywoman (**Malaikuṟatti**) near **Mērumalai** the **kuṟatti** who is a soothsayer tells **Poṉṉuruvi** the reason for her barrenness and suggests the renovation of the ruined wall and ramparts of the **Pakavatiyammaṉ** temple of her ancestral kingdom. The gypsywoman assures **Poṉṉuruvi** that she will be blessed with a male child if she performs worship at the renovated temple. The **Kuṟatti** also warns **Poṉṉuruvi** that her son will not live long and will come to grief with a washer woman. **Poṉṉuruvi** returns to **Teṉkāci** with this prediction worrying her. **Poṉṉuruvi** apprises her husband of the utterances of the **Kuṟatti** and accordingly her husband arranges for the renovation of the **Pakavatiyammaṉ** temple and performance of regular worship therein. Meanwhile **Poṉṉuruvi** has a dream in which betel leaves are given to her, palm leaves and stylus are taken up and a serpent also appears. Her husband tells her that all there objects seen in her dream foretell her conception. **Poṉṉuruvi** conceives and gives birth to a male child who is named **Civaṉañcaperumāḷ**.

The royal child is brought up with due case and loving attention. He is trained in formal education as well as martial arts befitting a prince.

One **Irulaṉāyāṉ** is his trainer who teaches him fencing, **cilampam** and other martial arts. As the prince, known for short as **Ciṉṉanañcāṉ** attains youth he takes over the reins of rulership of his native kingdom at **Teṉkāci** where he stays at the **paṭaivīṭu** (barracks).

One day as he goes around **Teṉkāci** article and elephant he sees a beautiful washer woman. Her extremely good looks and graceful gait make him fall madly in love with her. She is a married woman and hence she rejects the prince's amorous advances. He sends his **maṟavā** leader as his emurasry to persuade her to accept his proposal. As that attempt also fails **Ciṉṉaṇañcāṉ** goes on a mountain trek and procures a puring potion which he packs in a betel leaf and administers to **Ciṉṉaṇañci**. She is in a trance under the effect of that medicine. **Ciṉṉaṇañcāṉ** takes her to his palace and keeps her there permanently as his mistress.

Meanwhile **Ciṉṉaṇañci's** husband **Māṭavāṉṉāṉ** and his relations frantically search for her. Unable to find her in any of the usual places of her visit or work and even at her parent's place. **Māṭavāṉṉāṉ** approaches the king of **Teṉkāci Cīvalamāṟaṉ** for help.

Under instructions from **Civalamāṟaṉ** his servants after hectic efforts locate the presence of **Ciṉṉaṇañci** in the company of **Ciṉṉaṇañcāṉ** at his royal audience chamber.

The annoyed king **Cīvalamāṟaṉ** who is the uncle of **Ciṉṉaṇañcāṉ** sends his minister first and then his sister **Poṉṉuruvi** (the mother of **Ciṉṉaṇañcāṉ**) to advise him to part company with the washer woman **Ciṉṉaṇañci**. But **Ciṉṉaṇañcāṉ** is adament and refuses to heed any advice in the matter of his relationship with the low caste woman. **Ciṉṉaṇañcāṉ** has along with him, his mentor **Irulaṉ āyāṉ**, **Ciṟukkaṉ** (an errand boy) and **Ciṉṉaṇañci** as companions.

As all attempts to persuade **Ciṉṉaṇañcāṉ** to see reason and sever his illicit relationship with the washer woman fail the enraged

Cīvalamāran̲ sends his soldiers to apprehend **Cin̲n̲an̲añcān̲** and bring him to his court. The king's soldiers surround the residence of **Cin̲n̲an̲añcān̲** and he comes out along with **Irul̲an̲** and fights the soldiers. In the deadly encounter that follows several soldiers of the king are killed. **Cin̲n̲an̲añci** and **Cir̲ukkan̲** die in that battle. **Irul̲an̲** also flees from the place.

On learning from the washermen about the outcome of the encounter **Cīvalamāran̲** personally leads an army to tackle his nephew **Cin̲n̲an̲añcān̲**. In a fierce fight that ensues **Cin̲n̲an̲añcān̲** gets the upper hand, beheads his uncle **Civalamāran̲** and throws the severed head in **Tiruppār̲kaṭal**.

Then **Cin̲n̲an̲añcān̲** bathes in **Tiruppār̲kaṭal** and in order to expiate his sins performs a penance to invoke the grace of Lord **Civan̲** and to meet that God for a boon. He treks through mountains and forests for that purpose. Lord **Civan̲** appears before **Cin̲n̲an̲añcān̲** and directs him to perform a **vēlvi**. The velvi is duly performed and **Cin̲n̲an̲añcān̲** reaches **Kailācam** (the abode of Lord **Civan̲**) where **Civan̲** places **Cin̲n̲anañcān̲** on his thigh and confers rebirth to him. The reborn **Cin̲n̲anañcān̲** is named **Cin̲n̲acivan̲** due to his rebirth from the thigh of **Civan̲**. **Cin̲n̲acivan̲** is directed by **Civan̲** to go to a place called **Maṉikkaṭṭipoṭṭal** in **Valankaipuram**. **Cin̲n̲acivan̲** then proceeds through mountainous terrains and jungles and on his way secures the boons and blessings of **Tāṉuliṅka Īsuvarar** and **Matucūtan̲aperumāḷ** who endorse the boon granted to him by Lord **Civan̲**.

Cin̲n̲acivan̲ reaches **Maṉikaṭṭipoṭṭal** and instructs **Periya civan̲an̲añacaperumāḷ** to construct a temple for him. **Cin̲n̲acivan̲** thus becomes the presiding deity and occupant of that temple. He showers benefits on the residents of that place.

Information on customs habits and social living Cin̲n̲an̲añcān̲ Kataippātal provides information on contemporary social life.

Ponnuruvi is described in the ballad as a twelve year old girl who attains puberty only after her marriage. **Cinnanañci** (the washer woman) also attains puberty only after her marriage.

Child birth was considered a great boon by women folk. Childlessness or barrenness was considered a curse. Childless women were looked down upon by all including close relations. The life '**Cirukulantai perrapinpu Cettālum motchamuntu**' in the ballad tells us that a woman can reach heaven after her death only if she begets a child. **Ponnuruvi** laments over her childlessness in several lines that are translated here.

" Is not a child necessary to light my funeral pyre? "
" They call me **Iruli** quite often"
" Even a banana has its offshoot"
" A tree too has its offshoot"
" Even a stone has a child"
" But I am alone childless"
" Have I committed billions of sins
To be deprived of a child on my lap
For me to coax and fondle? "

Ponnuruvi's remarks refusing the adoption of a child as suggested by her husband reveal the deeprooted beliefs and opinions prevalent in those days. An adopted child is not equal to one's own child. She says that that an adopted child does not enjoy the same status of one's own flesh and blood. An adopted child was generally treated with scant respect in those days. Many other customs and rituals are mentioned in the ballad. Observing a vow for forty days with wet clothes on one's person eating food placed on earthen floor, placing the right foot forward while entering a house, cooking **Ponkal** on the ninth month of a woman's concebtion, carrying lamps and **niraināli** (measuring vessel filled with grains) during social functions bargaining with the midwife over her fees for her

assistance during child birth, providing gifts to all those who perform any task and gifting money on a banana leaf are the customs and habits that we find in the ballad. The system of barter by which wages for the work done were paid in kind was prevalent. The **maruttuvacci** (midwife) who assisted **Po<u>nn</u>uruvi** at child birth received clothes, paddy, oil and gold for her services. The washer woman gets rice for washing clothes. **Ci<u>r</u>ukka<u>n</u>** (errand boy) exchanges betel leaves for cooked rice.

However major transactions by the rich and powerful people were in cash. For the construction of temples and buildings the labourers were paid in cash. **Ci<u>nn</u>anañcā<u>n</u>** hands over money in a banana leaf to **Iru<u>l</u>a<u>n</u>** for procuring the luring medicine. It may be inferred that ordinary people in those days did not have much money with them and hence resorted to bartering.

The author's fund of information

The author of the ballad seems to be quite well informed and knowledgeable on a wide range of subjects. He describes meticulously the anatomy of a pregnant women and the bodily changes that occur during conception, gestation and delivery. The stoppage of menstrual bleeding in the second month, loss of appetite and nausea during the third month, preferring sour tasting substances, eyes becoming lack lustre and tired avoiding husband's company at bed, dishevelled hair during the fifth month. Swelling of breasts during the sixth month, on the skin at the seventh month when the stomach, occurrence of fungal patches bloats joint pains making it difficult to get up and sleepless ness during the eighth month and after are the symptoms listed in the ballad.

The author reveals his culinary expertise while suggesting the ingredients for making **Poṅkal** and the recipe thereof.

The midwife demands several articles such as oil, oilcake, stool leaves, bowls towels hot water and handfan while rendering medical

assistance to **Ponnuruvi**, she even demands some tobacco to be readily made available in the event of **janni** (delerous fever) of the patient. The child is placed on a banana leaf after the delivery.

The labour pains of **Ponnuruvi** are also brought out in detail by the author. **Ponnuruvi** even curses the child inside her as an enemy with an intent to kill her. Here the author only reflects the general tendency of pregnant women who hate child birth on account of the acute labour pains. The author furnishes all the details of the post natal treatment of the child and mother. The cutting of umtilical Chord, removal of the **Koppādai** (the substance that covers the child's body), administering a mixture of herbal drugs to the mother , pressing her stomach and tightening the saree, applying turmeric paste etc are all described in vivid detail.

The same attention to detail is found in the martial training undergone by **Cinnanañcān**. The step by step movements, turns and twists of **Cilampam** (the art of wielding a stick as a weapon) are explained elaborately by the author. The proper garments to be worn for **Cilamapam** training the preparation of the venue, the sounds and gestures to be made, the footwork and movement of hands are all meticulously furnished, Even the proper hurling of **takatam** is explained in respect of the martial art of that name.

The author mentions all the details involved in the occupation of washermen. The entire process of laundering such as washing, beating on stones, rinsing, applying **Nilam** (blue tint) steaming the clothes in a big pot (**Vellāvi**) starching, drying etc are all mentioned.

All the ingredients used in the preparation of the **Vaciyamaruntu** (luring medicine) are furnished by the author, **Irulanāyān** prepares the medicine by mixing various herbs and grinding them, the author reels off the names of many herbs and seems to be aware of their potency and medicinal properties.

Dreams and omens

In folk ballads dreams and omens play an important role as narrative devices. Dreams were considered divine prediction or warnings of the future by Homer and Socrates but frend the great psychoconalyst defines dreams as reflections of the unfulfilled subconscious desires of human beings. Dreams only reflect our desires but do not fulfil them.

The dreams that occur in ballad may be divided as good and bad dreams. In **Ciṉṉaṉañcāṉ Kataippāṭal Poṉṉuruvi** has a good dream in which betel leaves, palm leaf and in places a worm in a cage on the saree of **Poṉṉuruvi**. A fledgeling of the parrot flies from there and a snake also raises its hood and sways on her lap. All there indicate imminent child birth to her. People of those days had immense faith in the effect of dreams. They felt happy when they had good dreams and became worried if they had bad ones. Towards the end of the story **Ciṉṉacivaṉ** appears in the dream of **Periyacivaṉaṉañacaperumāḷ** and disects the construction of a temple at **Maṉikaṭṭipoṭṭal Ciṉṉacivaṉ** appears in the guise of Lord **Civaṉ** with all the paraphernalia of that god in that dream.

Like dreams omens also influenced the mental process of the people of those days. Omens or anguries may be good or bad according to what they are believed to foretell symbolically. In Tamil such omens are Known as **Cakuṉam** or **Nimitam**. In our ballad both good and bad omens occur in the course of the story. When **Poṉṉuruvi** leaves **Teṉkāci** on her pilgrimage for childbirth an owl flies rightwards and that is considered a good angury.

As the midwife starts from her place to attend on **Poṉṉuruivi**'s Childbirth a **Karutaṉ** (Brahmanical Kite) Circles above darts from right to left. That is also regarded as a beneficial sign.

When **Ciṉṉaṉañci** is sent by her husband **Māṭavaṉṉāṉ** to collect clothes for washing several bad omens occur indicating disastrous

consequences. A lizard ticks, a crow flies leftwards. The woman herself sneezes. An owl hoots, cats arrive in large numbers and a potter comes opposite her. All there are supposed to indicate imminent danger or evil.

The elements of minor literature in the ballad

In this ballad we come across the features and elements of literary genres such a as **Kuravañci, Tūtū** and **Ulā**.

Kuram

Kuram or **kuravañci** in Tamil literature is a poetic form of dealing with kuravar (hill tribals) or gypsies and their lives and activities, in the landscape classification they belong to **kuriñci** (mountain) terrain. In our ballad a **malaikkuratti** acts as a soothsayer to **Ponnuruvi** when the latter is on her pilgrimage seeking childbirth. The **kuravā** damsels greet **Ponnuruvi** and her maids and offer them honey. **Tinai** flour, betel leaves etc. the **Malaikkuratti** mops the floor, lights a lamp, worships **Lord Vināyakā** with offerings of flowers fruits and coconuts and then looks at the plam of **Ponnuruvi** to make her predictions.

The **Kuratti** invokes the blessings and guidance of **God Murukan (Velan)** and **Valli** (the consort of **Murukan** and a **Kuravā** damsel). The **Kuratti** claims to have forecast the occurrences in the lives of **Ariccantiran** and **Pañcapāṇṭavar**. When she predicts the birth of a male child to **Ponnuruvi** the latter is pleased and showers gifts of jewels and lace to the **Kuratti**. This sequence in the ballad is exactly like the **Kuratti** acting as a soothsayer to the **Talaivi** (heroine) in **Kuravañci** poems.

Tūtu

In Tamil literary parlance the term **Tūtū** means message sent through living beings or even inanimate objects. The messenger who carries the message may be a man or woman, bird or beast or even lifeless

objects. In the ballad there are many instances such as a messenger being sent with a message to the midwife for bringing her to assist **Poṉṉuruvi** during her delivery, **Ciṟukkaṉ** sent to the trainer **Iruḷaṉ** to fetch him for training **Ciṉṉaṉañcāṉ** in martial arts **Ciṉṉaṉañcāṉ** sending his **Maṟavā** leader as an emissary to **Ciṉṉaṉañci** to convey his amorous intentions and **Cīvalamāṟaṉ** sending his minister to persuade Cinnanancan to part company with the washer woman. All these berspeak the tutu element in a pronounced manner in this ballad.

Ulā

Ulā is also Tamil literary genre wherein a Talaivan (hero) of royal lineage or noble birth goes on his rounds in his city and women of all age groups throng the procession route to have a glimpse of the hero. The admiring women fall in love crazily with the Talaivan. This literary element was first found in epics and later on became a separate genre. In this ballad the term pavani is used in lieu of the word Ula. The description of the adorned elephant astride which Cinnanancan goes on his Ula and the crazy actions and postures of womenfolk on seeing Cinnanancan are effectively described. However the specific age groups of the women are not mentioned in the ballad.

Vows and prayers

Most of the common people have faith n God and religious rituals. When human attempts fail to produce the desired results it is but natural to turn to God or any other superhuman agency. On such occasions people are prepared to make offerings in cash or kind in return for their answered prayers and fulfilled desires. Such offerings are known as **Nērttikaṭaṉ**. The offerings vary according to the status and capacity of the devotees. The devotees who belong to the higher and rich classes make their offerings in silver and gold ornaments whereas the poor ones fulfil their vows by means of physical pain and exertion like firewalking,

trekking long distance and fixing sharp hooks in the various parts of their bodies.

Affluences marks the devotional offerings of the higher ups in society but stoic endurance and physical effort are displayed by the less privileged folk. In our ballad **Ponnuruvi** offers gold, ornaments, cows to brahmins **tulāpāram** gifts (giving things equal to one's weight), **Capparam** (light weight Chariot), parasols, golden palanquin etc to **Lord Civan** and various other deities when she goes on a pilgrimage seeking child birth. She also arranges the conduct of regular **Pūcai** (worship) and periodical festivals in several temples and shrines which she covers during her pilgrimage

The impact of mythology

In the ballad the author introduces the mythological element in the course of narration of the events in the story. Such references and allusions are found in many places. Ponnuruvi safely completing her gestation period of ten months is attributed to the grace of **Cokkanātan** (**Lord Civan**) who kicked **Kūrravan** the God of death to save **Mārkkantēyan**

Cinnanañci the washerwoman carries a huge headload of clothes and garments. That massive bundle of clothes is compared to the **Kōvartanā** mountain which was lifted by **Lord Krisna** to protect the **āyar** (Cow herds) from the wrath of **Kuntōtaran**.

In the dialogue between **Cinnanañcān** and his **marattalaivan** (**maravā** leader) the latter tries to dissuade the former from his immoral craze for a married washer woman of lower caste. When the **Maravā** leader refers to the moral purity of **Cinnanañcān**'s royal ancestors who avoided such amorous adventures **Cinnanañcān** counters that admonition citing the example of Lord Murukan who married a **Kurava** lass, **Valli** by adopting disguises and tricks. He says that **Lord Civan** also came as a

fisher man to win the hands of **Pārvati**. Besides these references to **Kantapurāṇam** and **Tiruviḷaiyāṭal purāṇam** there is a references to **Lord Civaṉ** acting as an emissary between **Cuntarar** and **Paravai**. This simile reveals the impact of Periyapurāṇam. The **maṟavā** leader's attempts to persuade **Ciṉṉaṉañci** to become the concubine of **Ciṉṉaṉañcāṉ** fail and he returns to report the failure of his mission. In that contact he observes that his failed efforts and the indignity suffered as a messenger are too many to be spoken or written. According to him those experiences will be as many as in the epic **Irāmāyaṇam**,**Ciṉṉaṉañcāṉ** after his rebirth as **Ciṉṉacivaṉ** on the thigh of **Lord Civaṉ goes to Maṇikkaṭṭippoṭṭal, Lord Nārāyaṇaṉ** accompanies him as instructed by **Lord Civaṉ**. Here that author alludes to the role played by **Nārāyaṇaṉ** (as **Krisnaṉ**) as an emissary of **Pāṇṭavar** in the epic **Makāpāratam**.

Similes in the ballad

In any poetic work figures of speech are employed to enhance the beauty of expression. In this ballad also we come across similes in several contexts. **Poṉṉuruvi** compares her wanderings from place to place as a pilgrim in the following lines.

Puṭavai itaiyil alaintāṟpōla (18-3)
(Like a saree loosely moving about at the waist)
Nāṉ orutti pēypōlē Nāṭṭu vaḻi tirikiṟēṉ (21-2)
(I am a person who roams like a ghost over this land)

Poṉṉuruvi even chide God for not granting her the boon of a childbirth.

"Uttamaṉē oṉṟumillā Ūmaipōl āṉāy
(Oh! Virtuous one! Thou hast become a dumb nonentity)

In yet another context out of self pity over her plight of childlessness she compares herself to a *pamparam* (top) without momentum and drifting one at that with out a rope. She feels like a toad trampled by an elephant and a

lamp of tamarind dissolved in a river. Her miserable condition is also compared to withering crops, we have a spate of similes in our ballad when **Poṉṉuruvi** conceives and is delivered of the child later. Her abdomen during the period of gestation is compared to a banyan leaf. **(ētta ālilai pōlē tiruvayiṟu)**.

In a series of similes the labour pains of **Poṉṉuruvi** are vividly described. She laments that her pains are more acute than the venomous sting of thousand scorpions. The suffering of cotton while it is beaten and the condition of a rope to which a bull is tethered are employed as similes by way of comparison to her labour pains.

In the description of **Ciṉṉaṉañci**'s ravishing beauty we come across similes in succession. She is like the **Mōkiṉi** (a divine damsel) targeted by **kāmaṉ**'s sugarcane bow. She is a pea-hen peahen. She with her beautiful shapely waist and banyan leaf like abdomen looks like a measured woman taken out of a mould. She also resembles a cow in its leash. **Ciṉṉaṉañcāṉ** threatens **Ciṉṉaṉañci** that he will at all costs grab her like a **Karuṭaṉ** snooping on a chicken and lifting it as a prey.

The **Maṟavā** leader in a context observes that even a crow will attain a golden hue if it goes near the **Mēru** mountain

Metaphors in the ballad

The childless **Poṉṉuruvi** in a string of metaphors brings out her plight poignantly. She says that she has become a flower without fragrance, a house with its ramparts in ruins, a life with out a mortal frame, a pond without banks, a drum devoid of sound, a dream of a dumb person and a fugitive deprived of nationality

Adages in the ballad

We find several adages or proverbial expressions in the ballad. The author employs such conventional expressions in many places.

When the **malaikkuṟatti** forecasts the birth of a child to **Poṉṉuruvi** she suggests the renovation of the local **Pakavatiyammaṉ** temple at **Poṉṉuṟuvi**'s native place. As the solution of **Poṉṉuṟuvi's**

problem can be found at her own place why should she roam all over the world seeking relief? In that context the **kuratti** observes that **Ponnuruvi** need not seek butter elsewhere when she has in her own place the curd to be churned. When she has the lamp at her own house she cannot seek light from others outside.

The messenger of **Ponnuruvi** who persuades the midwife to assist in child birth indulges in cajoling flattery. He tells the midwife, that though she is an old woman she is strong willed, she is an unfading **Kunrimani** (crab's eye) even if dumped in garbage and an old cow with its milk tasting no less sweet. **Ponnuruvi** calls herself a **Cottai Cuntaikkāy**(a bitter berry decayed and worm ridden) unfit for cooking as she is childless, she in extreme self pity exclaims that it is one's sensitivity (**Curanai**) which is more important than one's food. She would rather die than live as a **malati** (barren woman). Adages are used to emphasize the differences in caste and status between **Cinnanañcān** and **Cinnanañci** **Cuttaman** (baked earth) and **paccai man** (raw soil) cannot be fixed together and it is but futile to aspire for a forbidden fruit.

The **maravā** leader tells the adamant **Cinnanañci** who refuse **Cinnanañcān**'s offer that however much the mouse leaps and dodges, the cat will ultimately catch the prey.

Cinnanañci tells the **maravā** leader that **Cinnanañcān** who is a lion should not demean himself for the company of a small fox like her.

She also calls herself gold unfit for making jewels. She asks how a washerman's beating stone can adorn the royal personage of **Cinnanañcān** like a precious ruby. Thus the figures of speech in the ballad enhance its descriptive excellence

சின்னணஞ்சான் கதை

(காப்பு)

1. பொன்னிலங்கு தென்கயிலை [1]வாழுமர னாரும்
   பூதல [2]மளந்ததிரு மாலுந்துணை யாமே
கன்னிபர மேஸ்பரியா ளீன்றேடுத்த பாலன்
   கணபதியுஞ் [3]செந்தில்வளர் கந்தன்துணை யாமே.

குறிப்புரை : பொன்னிலங்கு – பொன்போல் விளங்குகின்ற. **அரனார்** – சிவனார். **பூதலம்** – பூமி. **பூதலம் அளந்த திருமால்** – வாமன அவதாரத்தில் மாவலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண்கேட்டுத் திருவிக்கிரம அவதாரம் எடுத்துப் பூமி முழுவதும் ஓர் அடியாலும்,வானம் முழுவதும் ஓர் அடியாலும் அளந்த திருமால். **கணபதி** – விநாயகன். **செந்தில்வளர் கந்தன்** – திருச்செந்தூரில் கோயில் கொண்டுள்ள முருகப் பெருமான்.

சுவடிச்சொல் : 1.வாளும் 2. அழந்த 3. செந்தில் வழர்.

THE MISPLACED ROYAL ROMANCE

CIṈṈAṆAÑCĀṈ KATAI

Invocation

May *Araṉār* [1] who at golden *Teṉkayilai*[2] doth abide,
And *Tirumāl* [3] who did measure the earth entire,
Be pleased to help,
May **Kaṇapati** [4] the child begotten by *Kaṉṉiparamēsvari* [5]
And **Kantaṉ** [6] who hath his resort at **Tiruccentūr**
Be of help

1. **Araṉār** - Lord **Civaṉ** of Hindu Trinity and God
2. **Teṉkayilai** - The abode of **Civaṉ** in the south of destruction
3. **Tirumāl** - Lord **Viṣṇu** of Hindu Trinity and God of protection
4. **Kaṇapati** - A Hindu God

5. **Kanniparamēsvari** - Consort of Lord **Civan** and mother of **Kanapati** and Kantan
6. **Kantan** - A Hindu God

2. வந்தருள வேணுந்தெய்வ யானைவள்ளி தாயே
   மாதுபொன் னுருவிகதை வையகத்தில் கூற
   தெந்தமிழுங் காவியமுஞ் சீருந்தவ றாமல்
   செல்விசர சோதியேவுன் 'செயல்தரவே வேணும்.

தெய்வயானை – தேவேந்திரன் மகள் முருகனின் மனைவி. **வள்ளி** – வள்ளிக் கிழங்கை அகழ்ந்த குழியில் குறவர் தலைவனால் கண்டெடுக்கப்பட்டு வளர்க்கப்பட்ட முருகனின் மனைவியானவள். முற்பிறப்பில் முருகனை அடையத் தவம் செய்த அமுதவல்லி. சுந்தரவல்லி என்ற இருவரும் வள்ளி. தெய்வயானையாகப் பிறந்தனர். இவர்கள் சித்தாந்திகளால் இச்சாசக்தி யாகவும்,கிரியாசக்தி யாகவும் வருணிக்கப்படுகின்றனர். **பொன்னுருவி** – செம்பவளராசன் மனைவி. **சரசோதி** – சரஸ்வதி, கலைமகள்.

சு.சொ. : சியல்.

Do please arrive benignly and bless
Oh! **Teyvānai** [1] and mother **Vaḷḷi** [2]
To narrate the tale of **Ponnuruvi** [3] in this world of ours
Oh! **Carasvati** [4] enable me in the task to narrate
Without any lapse in the *Tamiḷ Kāviyam*[5] chaste and its *Cir*[6]

1. **Teyvānai** - The consort of **Kantan** or **Murukan**
2. **Vaḷḷi** - The consort of **Kantan** or **Murukan**
3. **Ponnuruvi** - The heroine of this ballad
4. **Carasvati** - Hindu Goddess of learning
5. **Kāviyam** - Epic
6. **Cir** - Metrical foot

3. வேணுந்தமி ழெந்தனக்குத் தாணுமாலை நாதா
   வில்லினுரை வுன்னருளி னாலேசொல் லுதற்கு
   ஆணுவமாய்ச் செங்கோட்டை நாட்டையர சாண்ட
   அம்மைகதை பாடவுன் னருள்தரவே வேணும்.

தாணு மாலை நாதா – சுசீந்திரம் கோயிலிலுள்ள இறைவனான தாணு மாலையன், தாணு – சிவன். மால் – திருமால். அயன் – பிரமன். **வில்லினுரை** – வில்லுப்பாட்டு. **ஆணுவமாய்** – பெருமிதமாய். **செங்கோட்டை நாட்டையர சாண்ட** – செங்கோட்டை என்னும் நாட்டை அரசாண்டவன், செம்பவளராசன். **இவன்** மனைவி பொன்னுருவி. **அம்மை கதை** – பொன்னுருவி கதை.

Tamiḷ I need, Oh! Lord **Tānumālayan̲**[13]
To render in *Villuppāṭṭu*[14] by grace Thine
The story of the great woman
Who did rule over **Ceṅkōṭṭai**[15] with glorious pride

1. **Tānumālayan̲** – God at Suchintram, who is three in one i.e., **Tānu** – aran̲,
 Māl - Tirumāl, **Ayan̲** – Piraman̲
2. **Villuppāṭṭu** – Folksong rendered with the help of a bow like instrument.
3. **Ceṅkōṭṭai** – A place near **Ten̲kāci**.

4. தருவாயெனக் குன்னருள் தாயே சரசோதி
 சந்ததியும் பாக்கியமுந் தவறாமல் தருவாய்
உருவாக யெவ்வுயிரு மொன்றாக நின்று
 உத்தமியே அத்தரிடம் 'வாழும்சிவ காமி.

சந்ததி – வாரிசு. **பாக்கியம்** – நற்பேறு. **உத்தமி** – நல்ல பெண். **அத்தர்** – சிவன். **சிவகாமி** – சிவனால் விரும்பப்படுபவள். உமையம்மை.

சு.சொ 1. வாளும்

Bestow Thy grace, Oh! Mother **Carasvati**
Do grant me without fail progeny and fortune good,
For all living beings to stand united in creation theirs,
Oh! **Civakāmi**[1] who doth reside in *Attar*[2]

1. **Civakāmi** - One of the names of the consort on his person
2. **Attar** - **Civan̲** who accommodates his consort in his person

பாடுவோரும் பாடப் பெறுவோரும்

5. அத்தரிடம் வாழுகின்ற நித்திய கலியாணி
அம்மை யபிராமி திரிசூலி சிவகாமி
பத்திரமா காளியருள் புத்திரனென் றேதான்
பாருலகிலே வலங்கை குலத்துதித்த செல்வன்.

அத்தர் – சிவபெருமான். **நித்தியகலியாணி** – பார்வதி அம்மை. **அபிராமி, திரிசூலி, சிவகாமி**– உமையம்மையின் வேறுபெயர்கள். **புத்திரன்** – மகன். **வலங்கை குலத்துதித்த செல்வன்** – காளியால் வளர்க்கப்பட்ட பிள்ளைகள் என்றும் வலங்கை உய்யக் கொண்டார்கள் என்றும் அழைக்கப்பட்ட (நாடார்) குலத்தைச் சேர்ந்த மன்னன் செம்பவளராசன்.

Oh! **Nittiyakaliyāni** accommodated in *Attar*
Oh! Mother **Apirāmi, Tiricūli, Civakāmi**
The descendent of *Valankai*[1] dynasty in this world of ours
Which claims upbringing by **Pattirakāli** [2]

1. **Valankai** - The name of a royal dynasty
2. **Pattiramākāli** - A Hindu Goddess

6. சீர்சிறக்குஞ் செங்கோட்டை நாட்டடையாண்ட மன்னன்
செல்விபொன் னுருவியம்மை[1] செந்தமி முரைத்தேன்
பார்சிறக்கும் பரமசிவன் றன்னருளா லுதித்த
பரமசிவ னருள்பால னறுமுகவன் சொன்னான்.

சீர் – செல்வம். **பொன்னுருவி** – செம்பவளராச மன்னனின் மனைவி. **பார்** – பூமி. **பரமசிவன்** – அறுமுகவனின் தந்தை. **அறுமுகவன் சொன்னான்** – பொன்னுருவிக் கதையை அறுமுகவன் சொன்னான்.

சு.சொ. 1. செந்தமிழுரைத்தேன்.

Here I did narrate in Chaste Tamil,
The tale of **Po<u>nn</u>uruvi** the consort,
Of the king who ruled over **Cenkōṭṭai**,
As told by **Ā<u>r</u>umuka<u>n</u>** [1] who was born,
Out of the grace being of **Paramaciva<u>n</u>**
Who this earth doth adorn

1. **Ā<u>r</u>umuka<u>n</u>** - *Sixfaced* **Muruka<u>n</u>**

(அவையடக்கம்)

7. சொன்னதமி ழென்னவகை போலவேதா னானால்
சூரியற்கு வீரியஞ்சொல் மின்வட்டம் போலே
பொன்னுலகில் மன்னனுட வேழமதுக் கொப்பாய்
பூவுலகில் மண்ணானைதான் சரியென்றாற் போல,

சூரியனுக்கு வீரியஞ் சொல் மின்வட்டம் – சூரியனிடம் சென்று, 'என் ஒளியே பெரிது' என்று வீரம் பேசும் மின்மினி போல (உலகத்தில் புகழ் பெற்ற அறிஞர்கள் மத்தியில் இக்கதை அடியேன் கூறுகிறேன்) **பொன்னுலகில் மன்னனுட வேழம்** – தேவருலகத்துத் தேவேந்திரனின் வெள்ளையானையாகிய ஐராவதம். **பூவுலகில் மண்ணானை** – பூவுலகத்தில் மண்ணால் செய்யப்பட்ட யானை. தேவேந்திரனின் வெள்ளை யானைக்கு மண் யானை ஒப்பாகாது என்று பொருள்.

Apologia

The *Tamiḷ* of my narration is such
As a meagre challenge of the glowworm against the sun,
And as poor in comparison as a clay elephant here on earth,
With the famed elephant of **Intira<u>n</u>** [1], the chief of heaven

1. **Intira<u>n</u>** - The chief of Tēvars of heavenly beings

8. முன்னமே [1]தமிழ்ப்புலவர் சொன்னவுரை கேட்டு
மொழிந்த தமிழானதுக்கு மோசங்கள் வாராமல்

பொற்படிக்கு கற்படி சரியென்றுரைத் தாக்கால்
பொன்னுக்கிணை யாக கருங்கல்லுஞ் சரியாமோ.

மொழிந்த – சொன்ன. மோசங்கள் – தவறுகள். பொற்படி – பொன்னால் செய்யப்பட்ட வாயில் படி. கற்படி – கல்லாலாகிய படி. பொன்னுக் கிணையாக கருங்கல்லுஞ்சரியாமோ? பொன்னால் செய்தபடியும் கருங்கல்லால் செய்தபடியும் இரண்டும் ஒன்றாகுமோ என்று பொருள்.

ச. சொ. தமிள்

To ensure that no lapses occur,
In the tradition prescribed by Tamil poets of yore,
If we state that ***Porpaṭi***[1] and ***Karpaṭi***[2] are but equal in weight,
Will it be proper to equate gold and granite?

1. **Porpaṭi** - A measure made of gold
2. **Karpaṭi** - A measure made of stone

9. அப்படிப்போல் நானுமறியா துரைத்த தெல்லாம்
ஆனாலும் தமிழ்ப்புலவ ராதரித்துக் கொள்வீர்
வண்ணமயி லாடக்கண்டு தன்னிறகை விரித்து
வான்கோழி யானதுவும் சரியென் றுரைத்தாப்போல்,

வண்ணமயிலாட.......... போல் – வண்ண மயிலானது தனது தோகையை விரித்து ஆடுவதைக் கண்ட வான்கோழி இறகை விரித்து ஆடுவது சரியென்று கூறுவது போல.

All that I have narrated in ignorance thus,
Do please bear with and accept, Oh! Tamil poets,
As a turkey which unfolds its feathers in a display rain,
To imitate a peacock a dancing in plumes bright

10. பொன்னுலகில் பெரியோர்க ளுரைத்தசொல்லைக் கேட்டு
[2]புகழ்ந்துரைத்தேன் பொன்னுருவி யம்மைகதை தன்னை

பொன்னுருவி யம்மைகதை பூவுலகில் கூற
பெரியோர் பொறுத்தா தரித்துக்கொள் வீரே.

ச.சொ.புகள்ந்து

Having listened to the words of the elderly wise,
In this golden world,
Have I attempted this laudatory narration,
Of the story of **Po<u>n</u>nuruvi**,
I crave your indulgence, Oh! Great ones
For this narration here in this golden world

(தென்காசி நாடும் பொன்னுருவி திருமணமும்)

11. நாடான நாடதிலே நல்லதென் காசிநாட்டில்
தேசமான தேசத்திலே செங்கோட்டை யானதிலே
ஊரான ஊரதிலே உத்ததென் காசியிலே
அஞ்சிமுடி மன்னவர்க ளாண்டிருந்து [1]போனகாலம்
ஆண்டிருந்தார் செம்பவளராசன் ஆயிழையாள் பொன்னுருவி
[2]அய்பேருக்கு முடன்பிறந்தா ளாயிழையாள் [3]பொன்னுருவி
மங்கைநல்லாள் பொன்னுருவி வாழ்ந்திருக்கும் நாளையிலே
[4]வாமுஞ்செம் பவளராசன் மங்கையரை மாலையிட்டார்
மாலையிட்டு மணம்புணர்ந்து வயசுபன்னி ரண்டுசெல்ல
பன்னிரண்டு திருவயசில் பாவைநல்லாள் திருப்பூத்தாள்
திருப்பூத்த கலியாணம் சேரவங்கே தானடத்தி
விருப்பமுத்த பொன்னுருவி மெல்லிநல்லாள் வாழ்ந்திருந்தாள்.

தென்காசி – திருக்குற்றாலத்துக்குத் கிழக்கே சுமார் 5.கி.மீ. தொலைவில் சிற்றாற்றின் கரையிலுள்ள ஊர். வடநாட்டில் புகழ்பெற்ற காசி இருப்பது போன்று. தென்நாட்டிலும் ஒரு காசி அமைய வேண்டும் என்று கருதி அரிகேசரி பராக்கிரம பாண்டியன் தென்காசி நகரையும், நடுவில் விசுவநாதர் கோயிலையும் அமைத்ததாகத் தெரிகிறது. **செங்கோட்டை** – தென்காசியின் ஒரு பகுதி. **அஞ்சிமுடி மன்னவர்கள்** – ஐவர்

ராசாக்கள் என்று அழைக்கப்பட்ட (1). குலசேகர பாண்டியன் (2). கோமாறன் வீரபாண்டிய தேவர். (3) கோமாறன் ஜடாவர்மன் பராக்கிரம பாண்டிய தேவர் (4). ஜடிலவர்மன் குலசேதர பாண்டிய தேவர். (5) ஜடாவர்மன்விக்ரம பாண்டிய தேவர் என்ற இந்த ஐந்து சகோதரர் ;ளே தென்காசியைப் புகழோடு ஆண்ட பஞ்ச பாண்டியர்கள். **செம்பவளராசன்** – தென்காசி நாட்டை அரசாண்ட மன்னன். **ஆயிழையாள்** – தேர்ந்தெடுத்த ஆபரணங்களை அணிந்த பொன்னுருவி. **திருப்பூத்தாள்** – வயதுக்கு வந்தாள், பூப்படைந்தாள்.

சு.சொ 1. போங்காலம் 2. ஐபேர்க்கும் உடம்பிறந்தாள்

பா.வே3. பொன்னுருவியம்மை 4. வாழும் பொன்னும் பெருமாளும்.

The land of Tenkāci and Ponnuruvi's wedding

In the land of **Tenkāci**[1] distinguished among land,
In the **Cenkōṭṭai** country thus noted among countries,
In **Tenkāci** particular among *Ūrs* such,
Where after crowned **monarchs five**[2] had, reigned and gone
Cempavaḷarācan[3] did rule over the land
Ponnuruvi the bejewelled damsel,
And beloved sister as well to her brothers five,
When the virtuous **Ponnuruvi** lived there thus
Cempavaḷarācan did marry her
After the garland wedlock as she did complete
Years twelve in passing age,
At the age did she attain puberty hers
Happily lived the beloved **Ponnuruvi** the slim and virtuous
As her coming of age was celebrated but fittingly

1. **Tenkāci** - The name of the capital and the country in this ballad
2. A reference to the five **Pāṇtiya** kings who ruled the country
3. The king of **Tenkāci** and the husband of **Ponnuruvi**

(பொன்னுருவி பிள்ளையில்லாமையால் இறைவனிடம் முறையிடுதல்)

12. வாழ்ந்திருக்கும் [1]அந்நாளில் மக்களில்லை யெனவுரைத்தாள்
பாலகன்றா னில்லாமல் பாவைநல்லாள் தான்மலங்கி

[2]மக்களில்லா வாழ்வதுதான் பொற்றவற்கு மாகாது
கொள்ளிவைத்துக் குடஞ்சுமக்கக் குழந்தையொன்று வேண்டாமோ
வேண்டாமோ யென்கணவர் மேதினியோர் தங்கள்முன்னே
மாய்த்திடுவேன் யென்னுயிரை மகாதேவா நானோருபெண்
ஆண்டபடை கரிபரியும் [3]அரசாளப் பாலனில்லை
மலடி மலடியென்று [4]மாநிலத்தோர் சொல்லுகிறார்
இருளி இருளியென்று யெல்லோருஞ் சொல்லுகிறார்
இருளியென்ற யென்வயிற்றி [5]லிளவரசர் தரியாரோ
என்றுமந்த பொன்னுருவி [6]யேந்திழையாள் தான்மலங்கி
முத்தத்திலே முருங்கைநாட்டாள் மொய்குழலாள் பொன்னுருவி
முருங்கையது காய்க்காமல் முழுமலடா யிருந்ததென்ன
இத்தனைக்கு மாபாவம் செய்தேனோ யீஸ்பரனே
பக்கத்தில் வாழையது பரிவினுடன் முழுமலடாய்
நான்றான் மலடிருந்தேன் நான்பாவம் செய்ததினால்
பெட்டகத்தில் புடவையதைப் [7]பிள்ளையது [8]கேட்கவில்லை
வாழைக்குமோ பிள்ளையுண்டு வாய்த்ததள்ளை பிள்ளையென்றும்
விருத்தும் பிள்ளையுண்டு மிக்கபூகா யானதேல்லாம்
கல்லுக்கும் பிள்ளையுண்டு கருதியம்மி குழவியென்றும்
இருபத்திரண்டு திருவயசி [9]லிளமலடாய்ப் பொன்னுருவி
குருவினிட உபதேசம் குன்றாமல் மனதிலுன்னி
முப்பத்திரண்டு வயசுமட்டு முழுமலடாய் மொய்குழலாள்
முன்னெத்தி நரைத்தேனே முகங்களெல்லாஞ் சுரித்தேனே.

பாலகன்– மகன். **பாவை நல்லாள்** – பொன்னுருவி. **மலங்கி** – மனங்கலங்கி, குழம்பி. **வையகம்** – உலகம், பூமி. **கொற்றவர்** – அரசர். **கொள்ளிவைத்தல்** – பிணத்திற்குத் தீ வைத்தல். **குடஞ்சுமக்க** – பிணத்திற்குத் தீ வைப்பதற்கு முன் குடத்தைத் தோளில் சுமந்து பிணத்தை மூன்றுமுறை சுற்றிவருதங். **மேதினி** – பூமி. **மாய்த்திடுவேன்** – போக்கிடுவேன். **மகாதேவர்** – அஷ்டமூர்த்திகளிலொருவர், சிவபிரான். **கரி** – யானை. **பரி** – குதிரை. **இருளி, மலடி** – மகப்பேறில்லாதவள். **ஏந்திழையாள்** – ஆபரணங்களைப் பூண்ட பெண். **முத்தம்** – வீட்டின் முன்புறம். **முருங்கை** – முருங்கை

மரம். மொய்குழலாள் – வண்டுகள் மொய்க்கின்ற நீண்ட கூந்தலை உடையவள். **மாபாவம்** – மிகுதியான பாவம். ,**ஈஸ்வரன்** – சிவபெருமான். **பரிவினுடன்** – அன்புடன். **பெட்டகம்** – மரம் அல்லது இரும்பால் செய்யப்பட்டப் பெட்டி. **வட்டில்** – உண்கலம், கிண்ணம். **சாதம்** – சோறு. **தள்ளை** – தாய். **விருடம்** – மரம் (மரத்திற்குக் குழந்தைகள் பூ,காய், கல்லுக்குப் பிள்ளையாக அம்மிக் குழவி சொல்லப்பட்டுள்ளது). **உன்னி** – நினைத்து. **சரிதல்** – சுருங்குதல்.

சு.சொ 1. மன்னாழில் 2. மக்கழில்லா 3. அரசாமும் 4. மானிலத்தோர் 5. இழவரசர் 6. ஏந்திளையாள் 7. பிள்ளயது 8. கேள்கவில்லை 9. இழமலடாய்.

Ponnuruvi laments her childless plight and prays to God

As she lived thus did she express her plight miserably
With out a child of her own
Agonized over the absence of an infant male,
Mused she that life barren without children
Would not be auspicious to the king,
"Is not a son quite essential
To light the funeral pyre and perform related rites?
My life shall I end in my consort's presence
And that of others as well
Oh! **Makātēvar**[1], a girl am I,
Without a child to rule over the armies, elephants and horses to boot
People in the state call me a *malaṭi*[2]
Iruḷi[3] am I nicknamed by one and all,
Will not the womb of this dark woman
Conceive and accommodate a prince ever?"
Thus lamenting in anguish did **Ponnuruvi**
Plant *Muruṅkai*[4] in the front yard of her house,
Oh! The tree planted thus did not yield
And did remain barren (like her)
'Am I a sinner, so grave Oh! God she did exclaim
Even the banana beside the *Murunkai* is equally barren

As if to keep fond company
Barren I am as I have sinned
No child doth ask for the saree in my box,
No boy there is to eat rice mouth full out of the platter
Even the plantain hath its progeny in flowers and fruits
The harad stone too has *ammi*[5] and *Kuḷavi*[6] carried out of it
At the age of twenty- two **Ponnuruvi** was but barren and young,
Patient she remained with wise counseling in her mind;
Even at two and thirty did she remain totally barren,
Bitterly did she lament,
"Greyed are my locks over the forehead,
Wrinkled am I all over my face"

1. **Makātēvār** - Lord **Civan**
2. *Malaṭi* - A barren childless woman
3. *Iruḷi* - A dark inauspicious woman
4. *Murukai* - A drumstick tree
5. *Ǡmmi* - A stone slab for grinding
6. *Kuḷavi* - A grinding stone roller- The word also means "a child", the word *Kuḷavi* is used as a pun in the context

(சேறாட, சோறூட்ட, பிள்ளையில்லையே எனக் கலங்குதல்)

13. [1]இட்டயெழுத் தின்படியே யிறையவனார் கல்பனையோ
தொட்டுவலக் கைபிடித்து சுத்திவந்த பாவமிதோ
முன்செய்த தீவினையோ முதல்வன் செய்ததுவோ
பின்செய்த பொல்லாங்கோ [2]பிள்ளையில்லாப் போனதெல்லாம்
மதகரியும் வாள்படையும் வையகம்உண் டாகிலென்ன
[3]விதமுடைய பொன்னுமுத்தும் வேண்டுமட்டும் தேடிலென்ன
சதகோடி திரவியங்கள் தானுமிகப் படைத்தாலும்
மதலையில்லா வாழ்வதுதான் [4]வாழ்வதிலும் வாழ்க்கையில்லை
[5]புருஷனுக்குப் பின்புசெல்லப் பிள்ளைகன கத்கமல்லோ
விதிவசமோ [6]முன்னாளில் வேதனிட்ட [7]கல்பனையோ

[8]மழைபொழிந்து மண்ணுருகி [9]வழிந்தோடும் இளமணலில்
[10]வளையலொலி வோசையிட மற்றுஞ்சிறு பிள்ளைகளும்
[11]மண்ணளைந்து [12]சேறாடி மகன்மடியில் (வந்து) யேறானோ
மண்ணைத் [13]துடைத்தெடேனோ மடியில்வைத் தூட்டேனோ
சேறாடி சதங்கைத்தண்டை சேர்ந்தவரை வடம்புரள
வீறாடி நடந்துவரும் (விள்ளை) [14]விளையாட்டைக் காணேனோ
[15]திண்ணைமனை தனிலிருத்திச் சிறுகலத்தில் சோறுமிட்டு
உண்ணுமுண்ணு மகனேயென்று ஊட்டேனோ மடியில்வைத்து
நல்லோர் [16]மனைதனிலே நாமிருபேர் பெண்பேசி
சாலநல்ல கலியாணம் சாஸ்திரங்கள் தான்முடித்து
கோலத்தோடே மகனார்நம்மைக் கும்பிட்டுகை தொழும்போது
[17]மாலைக் கழுத்தோடே மகிழ்ந்துமுத்தங் கொள்ளேனோ ?

(பிறர்வந்து குற்றம் சொல்லப் பிள்ளையில்லையே எனல்)

[18]வேல்கண்விழி மடவார்கள் மெல்லியர்கள் [19]பந்தலின்கீழ்
பால்கொச்சையாய் நாறுதென்று பகராரோ [20]யென்மேலே
மதுரமொழி மடவார்கள் மலடியென்று சொல்லயிலே
சரீரமெல்லாங் [21]குழறுதய்யோ சம்பிமுகம் வாடுறேனே
ஈரல் கருகுதய்யோ யேலும்புகழ லாகுதய்யோ
தெருவதிலே பந்தடித்துச் சிறுவர்விளை யாடுகையில்
[22]உன்பிள்ளை யடித்துதென்று வொருவர்வரக் காணேனே
முறத்தா லடிப்பேனென்று முறங்கொண்டு செல்லேனோ
பொன்னைமெத்தப் படைப்பானேன் புத்திரன்தா னில்லாமல்
பணத்தைரெம்பப் படைப்பானேன் பாலகன்றா னில்லாமல்

(இடுகாட்டில் கடன் செய்யப் பிள்ளையில்லையே எனல்)

எந்கன்மனை [23]தனில்வளர்ந்து இடுகாட்டில் போம்பொழுது
நீர்க்குடமுந் [24]தலையில்வைத்து நெட்டோல மிட்டமுது

[25]கோற்குமந்தக் கனல்மூட்டி கொள்ளிவைக்க வேண்டாமோ
வேண்டாமோ யென்கணவர் மேதினியோர் தங்கள்முன்னே
பெத்தெடுப்பர் தங்கள்முன்னே வெத்துடம்பாய் [26]நிற்பேனோ
என்றுசொல்லிப் பொன்னுருவி [27]யேங்கியித் தோட்டித்தாள்
ஆண்டவனே தஞ்சமென்று [28]யடிதொழுது தானிருந்தாள்
நன்றிசேர் புகழ்படைத்த நாயகரே யென்கணவா
நாட்டிலுள்ளோர் தங்கள்முன்னே நானுமுடம் பெடுத்தேனே
குன்றாது செல்வமது [29]குழந்தைநமக்குப் பிறந்தால்
குறையல்லவோ யிதுநமக்குக் குழந்தையொன் றில்லையானால்.

இட்டஎழுத்து – இறைவன் எழுதின எழுத்து. **கல்பனை** – கற்பனை. **தொட்டு வலக்கை பிடித்து** – திருமணத்தின் போது கணவனின் வலக்கையை மனைவி பிடித்தல். **முதல்வன்** – முன்னவன், கடவுள். **பொல்லாங்கு** – தீங்கு. **மதகரி** – மதமுடைய ஆண்யானை. **வையகம்** – உலகம். **சதகோடி** – நூறுகோடி. **திரவியம்** – பொருள். **மதலை** – மழலை, குழந்தை. **புருஷன்** – கணவன். **வேதன்** – பிரமன். **மண்ணளைந்து** – கைகளால் மண்ணைத் துழாவி. **சதங்கை** – சலங்கை. **காலணி. கண்டை** – மாதர் காலணிகலுள் ஒன்று. **வடம்** – மணிவடம். **சிறுகலம்** – சிறிய உண்கலம். **நல்லோர்** – அறிஞர் உத்தமர். **சால** – மிகுதி. **கலியாணம்** – திருமணம். **சாஸ்திரங்கள்** – சடங்குகள்) **வேல்கண்** – வேல் போன்ற கண். **மடவார்** – பெண்கள். **பகராரோ** – கூறுடாட்டாரோ. **மதுரமொழி** – இனிமையான சொற்கள். **மலடி** – மகப்பேறில்லாதவள். **சரீரம்** – உடல். **குழறுதல்** – நடுங்குதல். **சம்பி** – சுருங்கி. **கழல்** – நெகிழ்தல் விலகல். **முறம்** – தானியங்கள் புடைக்க உதவும் கருவி. **மெத்த** – மிக. **புத்திரன்** – மகன். **ரெம்ப** – ரொம்ப என்பதன் பேச்சு வழக்கு. **பாலகன்** – மகன் குழந்தை் புத்திரன். **இடுகாடு** – பிணத்தைப்புதைக்கும் இடம். **நீர்க்குடம்** – இறந்தவர்களுக்குக் கொள்ளி போடுவதற்கு முன் சுமக்கும் நீர்க்குடம். **நெட்டோலம்** – நீண்ட வோலம். **கனல்மூட்டி** – நெருப்புமூட்டி. **மேதினி** – பூமி. **தஞ்சம்** – அடைக்கலம். **நாயகர்** – எசமான் அரசன். **குன்றாது** – குறையாது.

பா.வே 1.இட்ட விதிகட்டளையோ 4. மாயிமால் வாழ்வதுவோ 5. புதியநல்ல மணங்களிலும் பிள்ளைமணம் அதிகமணம் 7. கட்டளையோ 8. மழைகள் பெய்து மண்ணுருகி வடிந்தோடும். 12. விளையாடி 13. துடையேனோ 15. திண்ணயதில் தனிலிணருந்தி செறுகலத்தில் 17. மாலைக்கழுத்தோடே மகனை மகிழ்ந்து கெட்டிக் 18. வேல்க்கொச்சை 19. ஙினப்பாத்து 20. ஒரு வார்த்தை 25. கோர்க்குடம்தான் உடைக்க..... பிள்ளையில்லை 26.நிக்குறனே 27. ஏங்கி மெத்த பரதவித்து 28. அரசனை வந்தடி 29.குழந்தை ஒன்றில்லாத பாவம்.

சு.சொ. 2.பிள்ளயில்லாப் 3.விதமுடைய 6. முன்னாழில் 9. வளிந்தோடும் யிழமணலில் 10. வழையலொளி 11. மண்ணழுந்து 14. விளயாட்டை 16. மனதனிலே 19. பந்தலின் கீள் 21. குளறுதய்யோ 22. உன்பிள்ள 23 தனில்வழுர்ந்து 24. தலயில்

Po<u>nn</u>uruvi perturbed over her missing the pleasures of a child's growth and pranks

"Is this what God has detined for me in imagination His?
Or did I sin in holding my spouse's light hand,
And going round during the wedlock mine?
Is it due to my misdeeds past or the act of God?
Or the remet of later evil any
How come this barren child lessers of mine
What is the use of rogue elephants and an army of swordsmen,
In this world
I what avail is collecting gold and pearls
To our hearts content?
Even if endowed with treasures in billions[1],
Life without a child is not worth living
Is not a child important after one's husband?
Is it my fate or **Piramaṉ**'s[2] will pre- ordained?
When it rains and the tender melting sand moves,
When other children with the bangles in their hands clamouring
Fiddle around with the sand
Won't my son with such sandy hands
Rush to rest in my lap
Won't I ever wipe that sand
And feed my son on my lap?
Won't I see my child's vigorous return,
After joyously playing with sand
With his necklace rolling over his anklet?
Won't I seat my son in the piallared[3] house?
And urge him to eat, with a bowl full of rice
In my hand
We two at a venue proper,

After fixing a bride for our son at the betrothal
And solemnizing the marriage with all rituals proper,
When our son seeks our blessings with garlands adorning his neck,
And with his joined hands reverential in worship
Won't I gladly receive the kiss of my garlanded son?

No complaints about pranks as there is no child

Won't the sharp lanceeyed damsels slim under the *pantal*[4]
Ever complain that I stink of location stale?
When the sweet tongued maidens called me a *Malati*
Oh! My body doth tremble and my face in despair doth wither
My liver is charred and my bones are ablaze
When boys play ball in the street
None there is to come to me and complain
"Your son has hit the ball (at us)"
Won't I go with a winnow in my hand,
Threatening to beat him with?
Why this gold aplenty with out a son,
And why on earth so much wealth sans a male child?

No son to perform the funeral rites

When my body is borne to be cremated after death,
Should not my son grown at my house,
Carry the ritual pot of water on his head,
Weep loudly and wail long
And light the funeral pyre for cremation praper?
Am I to stand ever, with a body sterile,
In the eyes of my spouse and the worldly folk
And in the presence of those who beget children?
Thus lamenting **Ponnuruvi** with her abdomen shrunk,
Longing for a child did seek refuge.

At the feet of God in prayer,
'With my husband having earned fame and loyalty
Amidst his countrymen why was I born like this?
An asset undiminished it will be,
If a child is born to us
A lot it will ever be to have no child at all

1. **Billion** - One hundred crores
2. **Piraman** - Hindu God of the Trinity, the God of creation
3. **Pial** - A raised platform in the front portion of a house known as *tinnai* in Tamil
4. *Pantal* - A shed with a flatly thatched roof

(முற்றத்தில் விளையாட மகனில்லையே எனல்)

14. [1]இன்ப முள்ளதொரு நல்மனைப் பயின்றேதான்
எல்லோற்கு மன்னமிட்டே யகமகிழ வேண்டாமோ?
அல்லனைய குழலார்கள் கூட்டத்தி லேல்தாதன்
அன்பாய் மகனையும் முன்பாயெடுத்து நில்லேனோ
முன்பாக முத்தத்திலென் மகன்தன்னை யிருத்தி
[2]முன்பில் விளையாடக் கண்டுமகிழ வேண்டாமோ?
வல்ல மகனை [3]மடிமே லெடுத்திருத்தி
மகனே யெனச்சொல்லி வாய்மொழி[4]கேட்க வேண்டாமோ ?

(தொட்டிலிலிட, தாலாட்டுப்பாட, பள்ளிக்கனுப்பப் பிள்ளையில்லையே என அழுதல்)

நல்ல மகனை மணித்தொட்டில் மேலேகிடத்தி
நாடி விளக்கேத்தி வோடியே தாராட்டேனோ?
அன்பாய் மகனுக்குக் கிங்கிணிநூ புரங்கொஞ்ச
ரும்பா வினைகாண வேண்டாமோ
பாவினையாக மகனாரைப் பள்ளிக்கு வைத்து
[6]பள்ளிபுகுந்து படிப்பது [7]கேட்க வேண்டாமோ

ஆவலுடன்பல வாயுதவித்தை யுங்கற்று
[8]அங்கத்தில் வென்றிடுஞ் சங்கீதங் காணவேண்டாமோ.

(கலியாணம் செய்யவில்லையே எனல்)

மேவு மடவாரை மியக்கக் கலியாணஞ்செய்து
வெற்றி முரசுக [9]ளொக்கவதிர்ந் திடவேதான்
[10]தாபமா யுள்ள சடங்குபலது முகித்து
[11]தாயாரைக் கைதொழ வாசையினால் மகிழ்வேனோ
ஏனோநமக்கு மதலைதா னில்லாத பாவம்
ஏந்திழையா ளந்தப்பொன் னுருவித்தாயார் சொல்வாள்
மகனை யெடுத்து மடிதனில்நான் வைத்திராமல்
மகாகோடி பாவங்கள் மாபாவிநான் புரிந்தேனோ
தேனார் மொழியாள் திகைத்தந்தப் [12]பொன்னுருவித்தாய்
செப்பிடவுமுடி மன்னவனை [13]முகம் நோக்கி

(மன்னன் தேற்றுதல்)

செய்யாத தீவினை செய்தபடியே வுண்டானால்
சிந்தை கலங்கினால் வந்தவினை விடுமோதான்
மெய்யற்கு மெய்யாக [14]வீத்திருந்த வுமைதேவர்
[15]விதித்த விதிப்படி மின்னனையே சலியாதே
உய்யும் புவிதனி லெத்தனையோ பிள்ளையில்லார்
உடையோன்விதித்த விதிப்படி வொண்ணுதலே யென்றார்.

அன்னம் – உணவு. **குழலார்** – பெண்கள். **முத்தம்** – முற்றம், வீட்டின் முன்வெளி. **அருத்தி** – நிறுத்தி. **நாடிவிளக்கு** – விளக்கு வகையில் ஒன்று. **கிங்கிணி** – கிண்கிணி, கிலுகிலுப்பை. **சதங்கை. நூபுரம்** – காற்சிலம்பு, பாதகிண்கிணி. **பாவினை** – பாவனை, நடையழகு. **ஆயுத வித்தை**– படைக்கலத்தில் தந்திரத் தொழில். **மடவார்** – பெண்கள். **சடங்கு** – கிரியை செய்முறை. **மதலை** – குழந்தை **முயக்க, மியக்க** – சேர.

மகாகோடி – லட்சங் கோடானு கோடி. **உமைதேவர்** – சிவன். **மின்னனையே** – மின்னலை ஒத்தவளே. **சலியாதே** – துக்கப்படாதே. **உடையோன்** – கடவுள்.

பா.வே. 1.இன்னிலம் தன்னிலே நன்மகனே பயின்றெடுத்து 2.மகன் முஞ்சி 3.எடுத்து மடிமீதில் வைத்து 5. மகன் ஆதரவாய் 6. மகன்பள்ளி 8. மகன் அங்கத்திலேவரும் 9. அதிர வேண்டாமோ 10.தாவமோடுள்ள 11. மகன்தாயாரை 12. பொன்னுருவியம்மை 13. முகம்வாடி 14. வீத்திருக்கும் உம்பர்தேவன் 15 விதித்தது தப்பாது மின்னினங்கே சடையாதே.

சு.சொ. 4.கேள்க 7. கேழ்க்க.

No child is there to play in the front yard

Am I not to rejoice feeding all
After begetting a worthy son?
Amidst a crowd of kindred children,
Won't I stand in the forefront?
Lovingly with my son?
Should I not witness but joyously?
My son placed in the *Murram*[1] playing in the front?
Resting my son on lap mine,
And listen to what he lisps?

No child for me to put in the cradle, sing lullaby or send to school
Won't I lay my worthy son in a cradle gem studded?

Light a lamp and swing the cradle a running
And singing a lullaby?
Should I not see the graceful gait?
Of my son walking with rattlers and surrounding anklets?
Should I not send my son to school but properly?
And listen to what he doth read there?
Am I not to see his eager learning of martial arts
And delight in the music of his victorious prowess?

No son for me to perform his marriage

Won't I perform his wedlock with girls suitable,
And as the victorious drums rumble in union
Won't I conduct many a ceremony there of eagerly
And with affection rejoice,
When my son with joined palms pays me obeisance?
Why for us this sinful plight sans a child?
Po<u>nn</u>uruvi the dainty damsel doth in grief utter,
'Have I committed sins in trillion,
For not having a child on my lap?
As **Po<u>nn</u>uruvi** did speak thus in a daze
Looking at the face of the king

The king consoles her

Though no misdeed has been committed now,
The *vi<u>n</u>ai*[2] past will have its impact,
And won't leave on account of agony ours,
Oh! Damsel who resembles lightning
What the consort of **Umai**[3] hath destined,
Verily as truth (will but occur)
Vex not childless folk so many on this earth,
Just suffer their fate in resignation mute".

1. **Mu<u>rr</u>am** - The front yard of a house
2. **Vi<u>n</u>ai** - Good or bad deeds of human being
3. **Umai** - The consort of Lord Civa<u>n</u>

(பொன்னுருவி ஆறுதல் அடையாமல் தவம் செய்யப் போகிறேன் எனல்)

15. உரைத்திடவே மன்னவனு [1]முரைகுளறி வாய்வெருவி
வரைத்தடஞ்சேர் [2]பொன்னுருவி மன்னவனோ டேதுசொல்வாள்

நடைதனக்குத் சோம்பினபேர் நயமறிய மாட்டார்கள்
சந்ததிக்குத் தவம்புரிய தார்குழலார் போறேனென்றாள்
மைந்தனுக்குத் [3]தவமிருக்க மன்னவனே போய்வாறேன்

(மன்னன் மறுமொழி கூறிப் பிள்ளையைத் தத்தெடுத்துக் கொள்ளலாம் எனக் கூறுதல்)

என்னசொன்னாய் பெண்கொடியே [4]யேதுமில்லாத காரியத்தை
நம்மைப்போல் பிள்ளையில்லார் நாட்டகத்தில் மெத்தவுண்டு
நாட்டுக்குப் பாட்டோலை காட்டாதே நன்னுதலே
[5]உத்தபுகழ் பட்டணத்தி லுனத்கேத்த பாலனுண்டால்
[6]சொல்வாயே பெண்கொடியே தெப்பெடுத்து நான்தருவேன்

(தத்தெடுத்த பிள்ளை சொந்தப் பிள்ளைக்கு ஈடாகுமோ எனப் பொன்னுருவி கூறுதல்)

தெப்பெடுத்த பிள்ளையது [7]என்றலையில் பல்லியல்லோ?
வளத்தாள் பிள்ளையது வாசல்நடைப் பல்லியல்லோ?
[8]பெத்தாத்தாள் பிள்ளையென்றாவ் புழக்கடையில் நீர்க்குதவும்
கோடிப்பணங் கொடுத்தாலும் கொண்டபிள்ளை யென்பார்கள்
வாரிப்பணங் கொடுத்தாலும் வய்த்தபிள்ளை யென்பார்கள்
கொத்துக்கோட்டை மச்சேறுமோ கொண்டமோர் கடைவார்களோ?
இறுமாந் திருப்பதேல்லாம் இழுக்கல்லவோ யென்கணவா?
மாறுபடா தென்காசி [9]மனுசருக்கு வசையல்லவோ?

(பொன்னுருவி தவம் செய்யத் தோழியர்களை அழைத்துத் கொண்டு புறப்படுதல்)

ஏழுநல்ல தோழிமாரை [10]யேந்திழையாள் வரவழைத்தாள்
கெட்டுப்பெட்டி தனையவிழ்த்துப் பட்டுப்பரு வட்டமெடுத்தாள்

பணிச்சேலை யுள்ளதெல்லாம் பகுத்தாக யெடுத்துடுத்தாள்
மாணிக்கக் கோமேதகம் வயிரம்வயி டூரியங்கள்

ஆணிப்போன் [11]திரவியங்க ளழகுமணி லெத்தினமும்
காணிக்கை போடவென்று [12]கனமுத்தைத் தானெடுத்து

பர்த்தாவைத் தான்தொழுது பாதத்தி லடிவணங்கித்
தானுமந்தத் தோழியருஞ் சகலபணி பூண்டுகொண்டு

[13]அன்னசுத்தத் தாரையெல்லா மடிதொழுது தான்வணங்கி
தென்காசிப் படைவீடுவிட்டுத் தெருவதிலே செல்லுவாளாம்.

உரைகுளறி – வார்த்தை குழறி. **வாய்வெருவி** – நாக்குத்தடுமாறி. **நயமறிய** – நன்மையடைய. **சந்ததி** – வாரிசு. **தார்குழலார்** – மாலையணிந்த கூந்தலையுடைய பொன்னுருவி. **மைந்தன்** – மகன். **பாட்டோலை** – பாடல் எழுதப்பட்ட ஓலை. **உத்தபுகழ்** – உற்றபுகழ். **தெப்பெடுத்தல்** – தத்து எடுத்தல்,பிறர் பிள்ளையைத் தன் பிள்ளையாக வளர்த்தல். **என்றலையில் பல்லியல்லோ** – என் தலையில் பல்லியல்லவா? பல்லி தலையில் விழுந்தால் கலகம். தத்துப்பிள்ளையால் கலகம் தான் வரும் என்று பொருள். **பெத்தாத்தாள்** – பெற்ற அன்னை. **புழக்கடை** – தோட்டம். **கொண்ட பிள்ளை** – தத்தெடுத்தபிள்ளை. **கொத்துக்கோட்டை மச்சேறுமோ** – கூலியாகப் பெறும் நெல் சிறிய அளவினதாதலின் மச்சில் (தானியங்களைச் சேர்த்து வைக்கும் அறை) சேர்த்த வைக்க முடியுமோ என்பதாம். **கொண்ட மோர் கடைவார்களோ** – விலைக்கு வாங்கிய மோரைத் திரும்பவும் கடைவார்களோ. **இறுமாந்து** – செருக்குற்று. **வசை** – இகழ் **பருவட்டம்** – சேலை. **பணிசேலை** – அலங்காரச் சேலை. **பகுத்து** – பகட்டு, ஆடம்பரம். **திரவியம்** – பொருள். **காணிக்கை** – தட்சிணை, வெகுமானம். **கனமுதல்** – மிகுந்த பணம். **பர்த்தா** – கணவன். **மன்ன சுத்தத்தார்** – அன்ன சுற்றத்தார், பங்காளிகள். **படைவீடு** – தென்காசி அருகிலுள்ள ஊர்.

பா.வே. 1. உரைகுளறி வாய்வெருகி 2.பொன்னுருவியம்மை. 3.தவம்புரிய மன்னவனே போறேனென்றாள் 4. யிதிமுன்னில்லா 5.ஒப்பரிய பட்டணத்தில் உம்க்கேற்ற பாலகனை 6. செப்பாயோ... தாரேனென்றார் 7. தெருத்தலையில் 8. பெற்றெடுத்த 9. மனிதருக்கு வசையாகும் 11. திரவியமும் அணிவயிரச் சரப்பணியும் 12. கைமுதலைத் தானெடுத்தாள் 13. அன்னச்சுத்ததாரதனையும் அடிதொழுது வழியனுப்பி.

சு.சொ. 1.உரைகுழறி 10. யேந்திளையாள்.

Ponnuruvi is inconsolable and proposes to go on penance

As the king doth thus console her
Ponnuruvi faltering speech and trumbling for expression,
Doth inform the king,
Those who are too lazy to walk
Will never realize the pleasure of the effort
Leave I shall for a penance proper,
Seeking progeny in prayer mine
For a son shall I perform penance such?
Thus did observe the damsel of locks long and lustrous

The king tries to dissuade her and suggests adoption of a child

'What did you say' the king did exclaim
'Oh! Creeper like damsel, for a trivial matter not so serious,
These are plenty of barren couple like us
In this world of ours,
Sing not an adieu for country thus,
If there is a proper child in our city of repute,
Adopt that child I shall and give it to you

Ponnuruvi says that an adopted child cannot be equated with one's own child

A child adopted is but a lizard[1] fallen on one's head,
The child thus brought up is like a lizard at the entrance
Only the child begotten will irrigate garden ours
Even if money is offered in billions in exchange
People will call it a child acquired,
Even if money is given aplenty
It will be called but a foster child
Will grains earned in small measure,
Ever reach up to the barn at the loft?

Will folk ever churn butter- milk bought out side?
To obtain butter?
Oh! Consort mine, is not wanton pride a disgrace
And a matter for rebuke to the **Tenkāci** man steady and blemishlers?

Ponnuruvi leaves for her penance along with her maids

The damsel did summon seven of her maids chosen,
Opened she the tied box and took out silk sarees,
Gorgeous sarees did she select for her to wear
Rubies, Carbuncles, diamonds and sapphires did she take
And sterling gold treasures and gems as well
To offer as homage for penance hers
Obeisance did she pay at the feet of her spouse
Her maids and she with finery adorned,
Prostrating at the feet of Kith and Kin all,
Left she the camp of **Tenkāci** fortified
And was out on the street

1. **Lizard** - A lizard falling on one's head is an ill omen indicating imminent death

(தெய்வங்களுக்குச் சிறப்பு செய்து தவமிருத்தல்)

16. ஆதித்த பகவானுக்கு [1]அடையமுது நேருவாளாம்
சூரிய பகவானுக்குச் சுத்தப்பொங்கல் நேருவாளாம்
அரசின்[2]கீழ் நாதருக்கு அரியபட்டு நேருவாளாம்

[3]செக்கடியி லீசருக்குத் தேருவைக்க நேருவாளாம்
தென்காசி நாதருக்குத் திருமாலைச் [4]சிறப்புமிட்டாள்

[5]பூத்தாமரை முகத்தாள் பொன்னுருவித் தாயார்தான்
வித்தாரத் தபசுபண்ணி விரைந்துபலன் காணாமல்

தென்காசி வூருமிட்டுச் [6]சேயிழைமார் சூழ்ந்துவர
பொன்னிட்ட வளைபுகுந்து தோணிதலைச் சுமடாய்

[7]அழகுதண்ணீ ராறுமிட்டு ஆனைக்கால் பாலமிட்டு
தொழுதுநின்று மடவார்கள் சூழ்ந்துநின்று குரவையிட

சிலம்புதண்டை யோலமிட செந்நெல்வயல் தடமுமிட்டாள்
வலம்புரிச்சங் கோசையது வானமட்டு மோசையிட

கொந்தகங்கள் குடையிடவே [8]கூந்தல்குலைந் தலைந்துவர
[9]மைவிழி மடவார்கள் வழிநடைகொண்டே நடநடந்தார்
கந்தமரும் பூங்குழலாள் [10]கன்னிநல்லாள் பொன்னுருவி

வாழ்ந்திருக்கப் பேறுதாரு மாயனே நாராயணரே
தாழ்ந்திருந்தா லந்தரத்தோர் தலையெடுக்க வொட்டார்கள்

வசைக்குமிது யிடையாச்சே வாய்பிளக்கப் போகாது
விசையத்த பம்பரம்போல்மெய்மறந்து வாடுறேனே

கயறத்த பம்பரம்போல் கட்டவிழ்ந்து [11]விழுங்காலம்
உயிரத்த காலமெனக் கொருகுழந்தை வேண்டாமோ?

வாழ்ந்திருக்குங் காலமதில் வல்லவரு முதவியுண்டு
தாழ்ந்த காலமொருவர் தான்பார்க்க மாட்டார்கள்

[12]ஆந்தையது வலம்போக யதுகுறியைத்தான்பார்த்து
சாந்தணிந்(த) வேல்விழியாள் [13]சாலைவழி யாய்நடந்தாள்.

ஆதித்த பகவான் – சூரியன். **அடையமுது** – அடைப்பாயாசம் இனிப்புப்பொருள். **நேருவாளாம்** – வேண்டுவாளாம். **பொங்கல்** – சமைத்தல். **அரசின் கீழ்றாதர்** – அரசமரத்தடியின் கீழ் அமர்ந்துள்ள விநாயகன். **அரியபட்டு** – அருமையான பட்டுத் துணி. **செக்கடியிவீசர்** – செக்கடியில் அமர்ந்த ஈசர். **மாலை** – பொன்னால், பூவால், மணியால் தொடுத்த மாலை. **பூத்தாமரை முகத்தாள்** – தாமரையைப் போன்று விளங்குகின்ற முகத்தையுடைய பொன்னுருவி. **வித்தார** – மேலான. **தபசு** – தவம். **விரைந்து** – வேகமாய். **பலன்** – பயன். **சேயிழைமார்** – பெண்கள். **தோணி** – படகு. **ஆனைக்கால் பாலம்** – யானைப் பாலம், நாகர்கோயிலுக்கும் சுசீந்திரத்திற்கும் இடையே இடலாக்குடி என்னும் ஊரிலுள்ள ஒரு பாலத்தின் பெயர். **அட்டு** – விட்டு, கடந்து. **தொழுது** – கும்பிட்டு, வணங்கி. **மடவார்** – பெண்கள் **குரவையிட** – சத்தஞ்செய்ய. **சிலம்பு** – காற்சிலம்பு. **தண்டை** – காலணி. **சென்னல்** – செந்நெல். **வயல்** – மருத நிலம், கழனி. **தடம்** – வழி, ஒற்றையடிப் பாதை. **வலம்புரிச் சங்கு** – வலமாகச் சுழித்துள்ள சங்கு வகை. **கொய்தகம்** – கொய்சகம், ஓரங்கொய்து சுருக்கப்பட்ட உடை. **பேறு** – குழந்தைப்பேறு. **மாயன்** – திருமால். **எந்தரத்தோர்** – என் வயது வந்தோர். **விசையத்த பம்பரம்** – வேகமற்ற பம்பரம் சுழலாமல் நின்று

விழுவதைப் போல நானும் மயங்கி நின்றேன் என்று பொருள். **கயறத்த பம்பரம்** – கயிறில்லாத பம்பரம். **உயிரத்த** – உயிரற்ற. **வல்லவர்** – வலிமையுள்ளவர். **ஆந்தையது வலம் போக** – ஆந்தை வலப்பக்கம் போனால் நன்மை விளையும் என்பது தென்மாவட்ட மக்களின் நம்பிக்கை.

பா.வே 1.சுத்துபொங்குவாலை 2.கீழ்னாயகர்க்கு அதியபட்டு 3. செக்கட்டிா பிள்ளையார்க்கு சேருவிடை 4. சிறப்புமிட்டு 5. போர்த்தாமரை 6. தோழியர்கள் பிடைசூழ 7. அமுத கண்ணீராறுமிட்டு 8. சூந்தற் குலைந்தவிந்து விழ. மைவிழிகள் போராட 10. கார்கை பொன்னுருவியம்மை 12. ஆந்தலது.

ச.சொ. 2.கீள்நாதருக்கு 6.சேய்யிளைமார் 11. விளுங்காலம் 13. சாலைவளி.

Performing penance after honouring deities

To **Ātittaṉ**[1] did she offer *aṭaiyamutu*[2]
Pure *Porikal*[3] she promised to the sun god
To the Lord seated under the pipal tree
She did offer silk pure and fine
Poṉṉuruvi the lotus faced dame
Did also adorn with garland the god of **Teṉkāci**
Inspite of her penance vigorous and austere
As she could not have quick result any
Leaving **Teṉkāci** with damsels surrounding her,
Crossing the river as well of water so fine,
By boat with headload theirs
With the damsels around in worship ululating
And with her *cilampu*[4] and *taṇṭai*[5] in resonance
Did she tread on paddy fields in the beaten track?
With right whorled conchs blowing so loud
As to reach the skies
With their saree pleats like umbrellas unfolding
And their locks untied and dishevelled
The damsels with adorned eyes walked in their path proper
Poṉṉuruvi the virgin virtuous of locks fragrant with f lowers,

Did entreat
"Oh! *Māyōn̲*[6], Oh! **Nārāyanan̲**[7],
Do please the grant me the boon to live with a purpose,
If I but descend in state mine
Our peers will simply suppress us
This plight gives room for rebuke disdainful
Like a top sans the momentum of spin,
Do I languish in numbers all over?
Don't I need a child when I fall lifeless?
Like a top with its rope removed?
When we prosper even the strong will support,
None there will be to mind or oblige
When we decline and fall"
As an owl flew to her right,
Deeming it as an omen the lanceeyed damsel
Adorned with *Cāntu*[8] on her forehead
Did wend her way in the streets
On mission hers

1. **Ātitan̲** - One of the names of the sun god
2. **ataiyamutu** - A kind of pancake
3. **Porikal** - Cooked rice
4. **Cilampu** - Anklet
5. **tantai** - Ornament worn in one's legs
6. **Māyōn̲** - One of the several names of Lord **Visnu**
7. **Nārāyanan̲** - Another name of **Visnu**
8. **Cāntu** - A black fragrant paste mark worn on the forehead

அறுசீர் விருத்தம்

17. நடந்தார் பெண்க ளனைவோரும் நாமள் வார [1]வழிதனிலே
கடந்தே யாந்தல் [2]பறந்தோட கண்ட குறிதா னல்லதம்மே
மடந்கைக் குழலாள் பொன்னுருவி வாடும் கவலை தீருமினி
துடர்ந்தே பெண்கள் முன்னும்பின்னும் சுருதி யாக [3]வழிநடந்தார்.

ஆந்தல் – ஆந்தைத் தென்மாவட்ட வழக்கு. **குறி** – சகுனம் **மடந்தை** – பெண். **குழலாள்** – நீண்ட கூந்தலை உடைய பெண். **வாடும்** – வருந்தும். **கவலை** – துன்பம். **தீரும்** – நீங்கும். **துடர்ந்தே** தொடர்ந்தே என்பதின் பேச்சு வழக்கு. **சுருதி** – ஒத்து. வேதம்.

சு.சொ. 1. வளிதனிலே 2. பறந்தோட்ட 3.வளிநடந்தாள்.

Thus did walk damsels all in path
And as the owl did fly past them
They did console **Ponnuruvi**
A good omen this which augurs well,
Stop worrying they did exhort the damsel of tresses fine
Thus the damsels walked ahead and behind her
In constant company and union perfect

(பொன்னுருவி கரையாளன் மடம், செட்டியார்மடம், வெள்ளைமடம், உருக்கிரும்பூசி மடம் ஆகிய ஊர்களுக்குச் செல்லுதல்)

18. நடந்தாள் [1]சிலம்பலம்ப – நாடக சங்கீதம் பாடிவர
விடந்தாங்கு [2]மென்முகத்தாள் – விதியின் பயனா லறிவழிந்து
[3]பிள்ளை மடமும்விட்டு – [4]புடவையிடையில் அலைந்தாப் போல
வாடை [5]தென்றல் வீச – [6]வழிநடந்தாள் [7]அம்மை பொன்னுருவி
[8]வாகாய்க் [9]கரையாளன் – மடமுஞ் [10]செட்டியார் மடமுமிட்டு
[11]தேசப் பரிநடந்து – தேவர்மட நாவல் குளத்தில்வந்து
[12]கட்டுச் சாதமுண்டு – கைவிளக்கிப் பாக்குத் தின்றுகொண்டு
[13]வெயில்கள் எழும்புமுன்னே – வெள்ளை மடங்கடந் தம்மைசொல்வாள்
[14]குழந்தை விளையாட்டும் – மகன்கோலத்தை எப்போது காண்பேனடி?
அலைந்து திரியாமல் – [15]ஆண்பிள்ளை யாருதரு வாரோ?
சடைத்து யிருந்தாலும் – சாகுமட்டும் ஆசைதீ ராது
படைத்தா னில்லையோ – பிரமன் என்னைப் பாவியாய்வைத்த படிதானோ
ஒத்தக்கண் பொத்தைவிட்டு – உருக்கிரும்பு ஊசிமடத்தில் வந்தார்
வேனல் பொறுக்கரிதாய் – வேர்வையெடுத்தம்மை மெய்மறந்து

சரிந்தாள்தோழி மடியில் – தையலர்க்கு மனம் வேறாகி
இளைப்போ பெரிதாச்சி – [16]இத்தரை தூரம் நடக்குமுன்னே
[17]அயர்ந்து வருகுதேடி – அய்யோ நானினி [18]என்ன செய்வேன்
சமர்த்தி வலக்காரம் – [19]சாற்றுகிறேன் கேளுந் [20]தோழிமாரே
பிள்ளையிருந்த துண்டாலும் – பீடைவராது [21]பில்லு முண்டு
கொள்ளியில் லாதபடி – சுடுபோல் ஆவி குலைந்ததேடி
புள்ளிக்காரி யெனவே – [22]பெருமையாய் வையார் சிலபேர்
[23]அல்லல்பட்டே யவளும் – அந்தியாகும் மட்டுஞ் சந்தியிலிருந்து
கல்லும் பருமணலும் – காலை மிதிக்கவொட் டாதபடி
மெல்ல நடந்தம்மைதான் – விசிறிய [24]கைவளை யோசையிட
ஆடை [25]துவண்டசைய – வளர்ஆ பரணமது தானாட
மாலைக் குழல்முடித்து – மல்லிகை பிச்சி மலரணிந்து
நெத்திப் பிறைக்கிணங்க – நேர்விழி இரண்டுக்கு மையெழுதி
[26]கச்சுக் [27]களபதனம் – கனதனம் இரண்டும் [28]பளபளன
[29]அச்சுப் பெறுநுதலாள் – ஆலங்குளம் அதுதன்னில் வந்தாள்.

சிலம்பு – காலில் சிலம்பு ஒலிக்க. **நாடக சங்கீதம்** – கதை தழுவி வரும் கூத்துப்பாட்டு. **மென்முகத்தாள்** – மென்மையான முகத்தை உடையவள். **அறிவழிந்து** – புத்திகெட்டு. **பிள்ளை மடம், தேவர்மடம், ஊசி மடம்** – தென்காசிக்கருகே உள்ள ஊர்கள். **வாடை** – வாடைக்காற்று. **தென்றல்** – தென்காற்று. **கட்டுச்சாதம்** – கட்டுச்சோறு, வழிவுணவு. **வெயில் எழும்பு முன்னே** – வெய்யில் மிகுதியாகு முன்னே. **வடைத்து** – வருத்தமுற்று. **வேனல்** – கானல், வெப்பம். **பொறுக்கரிதாய்** – பொறுக்கமுடியாமல். **மெய்ம்மறந்து** – தன்னை மறந்து. **சரிந்தாள்** – சாய்ந்தாள். **தையலர்** – பெண்கள். **இளைப்பு** – களைப்பு. **தூரம்** – தொலைவு. **அயர்ந்து** – தளர்ந்து, சோர்வுற்று. **சமர்த்தி** – சமர்த்துள்ளவள். **வலக்காரம்** – வழக்கம். **சாற்றுகிறேன்** – சொல்லுகிறேன். **பீடை** – துன்பம். **வில்லு** – தர்ப்பை, கருமகாரியம் செய்வகற்குத் தர்ப்பைப்புல் பிடிப்பது வழக்கம். **குலைந்து** – அழிந்து. **புள்ளிக்காரி** – கொடுமைக்காரி. **அந்தி** – மாலைப் பொழுது. **சந்தி** – பல தெருக்கள் சந்திக்கும் இடம். **குழல்** – கூந்தல். **விழி** – கண். **மையெழுதி** – மைதீட்டி. **கச்சு** – இடைக்கட்டு, **களபதனம்** – கலவைச் சாந்து பூசப்பட்ட மார்பு. **கனதனம்** – கனத்த மார்பகம். **அச்சுப் பெறுநுதலாள்** – அச்சடித்தது போன்ற அழகான நெற்றியை உடையவள்.

பா.வே. 1. சிலம்பொலிக்க 2. மென் தனத்தாள். 4. பூசப்புசலிலசைந்தாற்போல 5. தளிரிவீச 7. பொன்னுருவியம்மை 8.வாசிக் 10 செட்டியூர் 11.தேசிப் 12. கட்டும் அமுதை உண்டு கைவிளக்கி பாக்குப் போட்டுக்கொண்டு 13. வேனல் 14. என்றைக்கு காண்பேனோ 15. இவ்வளவு தூரம் 17. அசைந்து . . .யினி னானும் என்ன செய்யவேன் 21. பிலனும் உண்டு 22. பெருமையை வைத்துச் செறுமை வைத்தாய் 23.அவளல்லற்பட்டு.

சு.சொ. 3. பிள்ளமடம் 6. வளிநடந்தாள் 9. கரயாளன் 15. ஆண்பிள்ள 18. எந்த 19. சாத்துகிறேன் 20. தோளிமாரே 24. கை வளயோசையிட 25. துவண்டசய 26. கச்சி 27. கழபதனம் 28. பழபழென 29. அச்சி.

Ponnuruvi goes to various places near Tenkāci

Walked she with her anklets tinkling,
To the accompaniment of theatrical songs by the damsels,
The tender faced damsel bereft of reasoning intellect
As her destiny would have it
Left **Piḷḷaimatam**[1] like a saree loosened at the waist
And as *Vāṭai*[2] and *tenral*[3] did blow alternately,
Ponnuruvi continued in her way
Properly did she reach **Kacayāḷanmaṭam**[4]
And **Ceṭṭiyārmaṭam**[5] and leaving them accordingly
Walked she **Tēvarmaṭam**[6] where
At the **Nāvalkuḷam**[7] she ate the packed food,
Washing her hand, then and chewing betel nuts,
She did reach **Veḷḷaimaṭam**[8] before the sun started searching
And did lament
"When shall I see my Child's pranks playful
When can I see my son in his shape proper?
Who will bestow a male child with out going places?
Even if I remain in agony till death
My desire will not be fulfilled
Is there no god? Did **Piraman** create me a sinner?
Leaving **Ottakkanpottal**[9] did she arrive?
At **Ūcimaṭam**[10] where unable to bear the *Vēnal*,[11]
Sweating all over did she slide exhausted,
On the lap of her maid

Her mind upset and gasping much,
(She did state)
"Tired am I even before I have come this far,
Ho! What shall I do hence?
Oh! My *Tōḻis*, do listen to me
State I shall the practice conventional
If a son is there no misery will occur,
As he will hold the ritual grass at the funeral,
Shattered is my life like a mere skeleton,
With no prospect of a proper pyre for me
No pride for me amidst folk some,
As a woman with children of her own"
Thus was she anguished till dusk
And at the *canti*[12] did remain
Then walked she ever so gently
Without treading on stones and sand large grained
Her bangles jingling as she her hands waved
Her garments hanging but loosely
And her Ornament, as well moving
Tying her locks with *Picci*[13] flowers to adorn
Lining her eyes both to match
The curved crescent of her forehead
And with her brassiered breast big,
Smeared with fragrant paste and shining
Thus the damsel of dainty forehead
Did arrive at **Ālankuḷam**[14]

1. **Piḷḷaimaṭam** - The name of a place
2. *Vāṭai* - Northernwind
3. *teṉṟal* - Southern breeze
4 -10. Name of the Places
11. *Vēṉal* - heat
12. *canti* - The junction of roads
13. *Picci* - A variety of Jasmine
14. **Ālankuḷam** - The name of a place

அறுசீர் விருத்தம்

19. வந்தா ளாலங் குளமதிலே மடவார் நின்று குரவையிட
செந்தா மரைபோல் பொன்னுருவி சிறக்க மனசு [1]களிகூர்ந்து
கொந்தார் குழலார் [2]மனமகிழ [3]குழந்தைப் பதவி புரியுமய்யா
கந்தா வுனது பதமெனவே கனிவாய் மொழியா ளேதுசொல்வாள்.

குரவையிட – சத்தஞ் செய்ய. **செந்தாமரை போல் பொன்னுருவி** – செந்தாமரை மலர் போன்ற முகத்தையுடைய பொன்னுருவி. **களி** – மகிழ்ச்சி. **கொந்தார் குழலார்** – கொத்தான அழகிய பூக்களைக் கூந்தலில் அணிந்தவர்கள். **கந்தா** – கந்தனே! **கந்தன்** – முருகக் கடவுள்.

சு.சொ. 1. கழிகூர்ந்து 2.மனமகிள 3.குளந்தைப்.

Arrived she at **Ālankuḷam** as her maids,
Did stand and ululate in chorus,
For the fair lotus faced **Ponnuruvi** to be joyous in mind,
Oh! **Kantā**[1] do please grant the boon of a child
To the damsel with her locks adorned with flowers
At thy feet we implore"
The sweet and soft- spoken damsel did then state

[1] **Kantā** - Lord **Muruka**

(ஆலங்குளம் வீரமாகாளி கோயில் செல்லுதல்)

20. ஆலங்குளந் [1]தன்னில்வந்து பொன்னுருவித் தாயார்
[2]அருகில்நின்ற தோழிமாரோ டேதுமொழி சொல்வாள்
வரையடங்க [3]ஏழுலோக மாண்டதிரி சூலி
[4]வாக்குத்தவ றாதவம்மை பத்திரமா [5]காளி
தடவரையி [6]லாவினங்கள் மேய்த்தவன் [7]தங்கையாம்

தர்மவாட்டி யிவளொருத்தி புண்ணியவாட்டி யென்ன
காளியுட கோவில்நாமள் போவோமென்று சொல்லி
கன்னியர்கள் கைபிடிக்து முன்பதிலே வந்தார்
கொள்ளியில்லை யென்றுசொன்ன வார்த்தைதனைக் கேட்டு
கொண்டவேக மண்டைமுட்டிக் கோவில்தேடி வந்தேன்
[8]பூச்சக்கற் றாடையுமொரு பொற்கலையு மிடுவேன்
புள்ளிக்காரி [9]யல்லவென்று யெண்ணிக்கொள்ள வேண்டாம்
கலையேறு மாகாளி யலைவிதம் பண்ணாதே
காணிக்கைக்கு முப்பதுபொன் [10]மாணிக்கமுந் தருவேன்
[11]முழுகிமூன்று நாள்வரைக்கும் [12]தவசுபண்ணிக் கொண்டு
[13]முழுதும் விரதமிருந்தும் மோச்சமது காணாள்
அச்சுதமடி [14]தோழியரே வாய்த்த கருமங்கள்
அம்மையொன்றுஞ் சொல்லாமல் சும்மாயிருந் தாளே
சடைத்திருந்தால் [15]மனதிலுள்ள பீடைகள் தீராது
சாகுமட்டுந் [16]தவசிருந்து ஆகுமட்டும் பார்ப்போம்
[17]மல்லடந்த பூங்குழலாள் சொல்லிரக்க [18]முடையாள்
மாகாளி வீரமா காளிகோவில் விட்டாள்
உல்லாச மாய்நடந்து [19]மானூரு விட்டு
[20]உறுதவசு பண்ணவென்று திருமனசு கூர்ந்தாள்.

ஆலங்குளம் – தென்காசி வட்டத்திலுள்ள ஓர் ஊர். **வரை** – மலை, மலைகள் ஏழு, இமயம் ஏமகூடம், கயிலை, நிடதம், நீலகிரி, மந்தரம் விந்தியம். **ஏழுலோகம்** – பூலோகம், சுவர்லோகம், புவர்லோகம், மகாலோகம், ஜனலோகம், தபோலோகம் சத்தியலோகம் ஆகியவை. **திரிசூலி, மாகாளி** – பார்வத். **ஆவினங்கள் மேய்த்தவன்** – பசுக்கூட்டங்களை மேய்த்தவன் கண்ணன். **தர்மவாட்டி** – தர்மம் செய்தவள். **கொள்ளியில்லை** – பொன்னுருவி தனக்கு இறந்த பிறகு. கொள்ளி வைக்க மகன் இல்லையே என்று எண்ணுதல். பூச்சக்கற்றாடை < **பூச்சிற்றாடை** – பூவினால் செய்தணியும் ஆடை. **பொன்கலை** – பொன்னாடை. **காணிக்கை** – தட்சணை வெகுமானம். **மாணிக்கம்** – சிவப்புக்கல் நவமணியினொன்று. **முழுகி** – தலை குளித்து, **தவசு** – தவம். **விரதம்** – நோன்பு. இன்றியமையாதவற்றிற விலக்கியிருத்தல். **மோச்சம்**

– மோட்சம் என்பதன் பேச்சு வழக்கு. நற்கதி அடைதல். **கருமம்** – பாவம் வினை. **சடைத்தல்** – கிளைத்து நெருங்குதல். **பீடை** – துன்பம். **பூங்குழலாள்** – வளமான பூக்களை அணிந்த நீண்ட கூந்தலை உடையவள்.

பா.வே. 1. தனிலே வந்த பொன்னுருவியம்மை 2.அடிதொழுது நமக்கரித்து துயரமெல்லாம் சொல்வாள் 3. ஏழுபுவியும் ஆண்ட செறி சூலி 4. வாக்குத் தவறாக துக்கை பத்திரம்மைகாளி 6. ஆவி நிரை 8. பூச்சக்கர குடையும் 9. யிவளெனவே 10. மாணிக்கமு கொடுத்தாள் 11. முழுதும் 13. முழுகியொருசந்தியுண்டு 15. மனதினுட பீடையொழியாது 16. தவசுபண்ணி 7. மன்று நந்த 19. மானுரு கண்டு 20. ஒருதவசு.

க.சொ. 5. காழி 7. தங்கயாம் 12. தவசிபண்ணி 14. தோளியரே 18. முடயாள்.

She goes to the shrine of Viramākāli[1] at Ālankulam

Arriving at **Ālankulam** did **Ponnuruvi**
Address her maids standing near by
"**Tiricūli**[2] who ruled over worlds seven taming the mountains
That **Pattiramākāli**[3] who never went back on her words,
The sister of **Kannan**[4] who did graze herds of cows
Beside the mountain,
Lady divine of Charity and virtue is she
Let us go to the shrine of **Kāli** such
Holding the hands of her maids
Did **Ponnuruvi** walk ahead?
Stung by the remarks that there is none
To light my pyre did I rush?
To the temple here in haste and huff
Offer I shall a flowery frock and *Ponnāṭai*[5]
Take me not amiss as I have no child,
Oh! **Mākāli**, do not make me roam
Thirty ***Pon***[6] and rubies shall I offer Thee,
Performed she penance but properly
After duly dipping in waters holy for three days
And fasted as well
But alas! No salvation in sight was there

Oh! Maids all the rites prescribed had been performed
But still the mother did remain silent
Aberrations will never cease in minds ours
If we allow them to branch and spread
Let us perform penance till we die
And wait and watch what doth happen?
The soft- spoken damsel decked with flowers
Did leave the shrine **Viramākāli**
Walked she further leaving **Mā<u>n</u>ūr**[7] as well
Determined was she to continue her penance

1. **Viramkali** - Hindu Goddess
2. **Tiricūli** - Goddess who sports a trident
3. **Pattiramākāli** - Kali the fierce of goddess
4. **Kanna<u>n</u>** - Lord **visnu** as **Krisna<u>n</u>**
5. *Ponnāṭai* - Gold lace shawl
6. *Po<u>n</u>* - Gold coin
7. **Mā<u>n</u>ūr** - The name of a place

(ஆலடிப்பட்டி அரசிக்கரைக் கிட்டிணரை வணங்குதல்)

21. மானூரு அம்பலத்தில் வாழ்ந்திருக்கும் தெய்வகமே
நானொருத்தி பேய்போலே [1]நாட்டுவழி [2]திரிகிறேன்

அறுபதுபோய் கிறுகிறுத்தா லாரிருந்தே ஆர்போயென்
சிறுகுழந்தை பெற்றபின்பு செத்தாலு மோச்சமுண்டு

கொன்றைசூடி யென்னையுநீ கூத்தாட்டு பாராதே
இன்னமொரு மாசத்திலே யிருநூறு பொன்தருவேன்

என்றமுது பொன்னுருவி இருந்தும்பலன் காணாமல்
தன்னையறி யாமல்கண்ணீர் தான்பாய வேநடந்தாள்

ஆலடிப் பட்டிதனி [3]லரசிக்கரைக் கிட்டிணரே
[4]மாலயனே கலியுகனே மலடிமுகம் பாரீரோ

மானுமழுவு முமக்கு [5]வாகனமும் பொன்னாலே
[6]தேன்மொழியாள் திருத்தவசு செய்துபலன் காணாமல்

கதிரவன்றா னுதிக்குமுன்னே [7]கரும்புலியூர் தான்கடந்து
அதிர்முரசுப் பணிமாற வடுத்தமாற நதிகண்டார்.

மானூர் – தென்காசி அருகில் உள்ள ஊர். இவ்வூர்பாண்டியர் வரலாற்றில் குறிப்பிடத்தக்க சிறப்புடையது. உத்தரமேரூர் கல்வெட்டு போல் குறிப்பிடத்தக்க கல்வெட்டு இங்குள்ளது **அம்பலம்** – சபை. **பேய்** – பிசாசு. **அறுபது போய்** – அறுபது வயது கடந்து. **கிறுகிறுத்தல்** – தலைசுழற்றுதல். **செத்தல்** – இறத்தல். **கொன்றைசூடி** – *கொன்றை மலரணிந்த சிவன்.* **கூத்தாட்டு** – *நடனம்.* **மாசம்** – *மாதம் என்பதின்* பேச்சு வழக்கு. **பலன்** – சிவதரும முதலியவற்றான் வரும்பேறு. **ஆலடிப்பட்டி.** மானூரை அடுத்துள்ள ஊர். **கிட்டிணன்** – திருமால், **மாலயன்** – திருமால், பிரமன். **கலியுகன்** – பெருமாள். **மலடி** – மகப்பேறில்லாதவள். **மானும் மழுவும்** – சிவன் தனது கைகளில் ஏந்தியுள்ள மானும். மழுவும். **வாகனம்** – சிவனின் வாகனம். காளை. **தேன்மொழியாள்** – இனிமையான மொழியை உடைய பொன்னுருவி. **கதிரவன்** – சூரியன். **கரும்புலியூர்** – மானூரிலிருந்து ஸ்ரீவைகுண்டம் செல்லும் வழியில் உள்ள ஊர். **அதிர் முரசு** – ஒலிக்கின்ற முரசு.

பா.வே. 2. திரிவேனோ 3. அரியரிகிட்டிணரே 4. மாயனே கலியுகரே மலடிமுகம் பாரும்மென்றாள் 5. பொன்னாலே விடுவேன் 6. தேனனையாள் 7. கரும்வுளி ஊத்துங்கடந்து

சு.சொ. 1. நாட்டுவளி 6. தேன்மொளி

Worshipping Lord Krisnā at Ālatipatti[1]

Oh! God who doth reside at the *ampalam*[2] in **Mānūr**
Wandering am I like a ghost in this land,
When I am past sixty what if my head reels in a daze?
Even if I die after begetting a child now,
Eternal bliss I shall attain
Oh! Lord adorned with *Konrai*[3] flowers
Amuse not thyself witnessing my frantic dance
Offer thee I shall *Pon* two hundred in a month from now
Though she did lament thus
It was of no avail and she walked
Unaware of her flowing tears
Oh! **Aracikkarai Kirusna**[4] of **Ālatippatti**
Oh! *Mālayan*[5], *Kaliyukan*[6]

Won't you please see this pitiable *malati*'s mein?
Offered she in gold the *mān*[7] and *Maḷu*,[8]
And the *Vākanam*[9] too, but to no avail
Leaving **Karumpuliyūr** ere sunrise
As drums rumbled the change of guard,
She did pass the next river on her way

1. **Ālatipatti** - The name of a place
2. *Ampalam* - Hale
3. *Konrai* - The name of a tree
4. **Kiruṣṇā** - Lord **Viṣṇu**'s incarnation
5. The name of the Lord **Viṣṇu**
6. The name of the Lord **Viṣṇu**
7. *Mān* - Deer
8. *Maḷu* - Axe
9. *Vākanam* - moune

விருத்தம்

22. கண்டாள் கமலத் [1]தொடையோனைக் கவ்வை மொழிவா யகத்தவனே
உண்டா [2]யமிர்தந் தனைக்கடைந்து வுண்ணும் படிக்கு [3]வமுதளித்தாய்
[4]வெண்டா மரையை யிடத்திருத்தி விரைந்தே பரணி சுமந்தோனே
தண்டா நுதலாள் பொன்னுருவி தவசு இருக்கத் தான்போனாள்.

கமலம் – தாமரை. **தொடை** – மாலை. **கமலத்தோடையோன்** – தாமரை மலரையணிந்தவன். **கவ்வைமொழி** – ஆரவாரமிக்க மொழி. **அமிர்தம்** – அமிழ்தம். **வெண்டாமரை** – மலைமகள். **இடத்திருத்தி** – இடப்பக்கத்தே இருத்தி. **பரணி** – புகழ் **பரணிசுமந்தோன்** – தக்கயாகப் பரணியை அடைந்தவர் சிவன்.

சு.சொ. 1. துடையோனை 2. யதுர்தங் 3. வழுதழித்தாய் 4.வெண்டாமரயை

Lord **Piraman** of lotus garland and words vigorous
She did see
Oh! Lord **Civā**, thou did (deadly Poison) swallow
To enable **Tēvars**[1] churn and part take **ambrosia**[2] divine

Hold thou did thy lotus like consort at left on Thy person
Oh! Thou who did attain *Parani*[3] as well,
Po<u>nn</u>uruvi the damsel of forehead elegant
Did proceed to perform her penance further

1. **Tēvars** - Heavenly beings
2. **Ambrosia** - Divine nectar
3. *Parani* - Victory in the **Yākam** of **Taksa<u>n</u>**

(தனக்குப் பிள்ளை தந்தால் பிராமணர்க்குப் பால் பசுவும், கோயில் கொட்டகையும், எடைக்கு எடை பொன்னும் தருவேன் எனல்)

23. போனாள்நடன சாலைவிட்டுப் – புத்தன் குறிச்சிக்குத் [1]தெற்காக
[2]கண்டாளே கல்மடமுங் – காகரடுங் குளங்கரை வோடைவிட்டு
[3]கேட்டு நடந்தவர்கள் – உத்தசீத பாலூரும் விட்டு
ஆடுந்திருக் கூத்துத் தில்லை – அம்பலத்தாரே நெல்லைப் பதியில்
[4]நமக்குத்தவ மெனவேதெரு – நாலுஞ்சுத்தித் தியானஞ் செய்து
தமக்குத்தவ மெனவே தெப்பந் – தன்னில் [5]விழுந்து கரையேறி
சங்கீதமண் டபத்தில்சென்று – [6]சாஷ்டாங்கஞ் செய்துயெழுந் திருந்து
அங்காரநம்பி திப்பத்தீர்த்தம் – [7]ஆடித்திரு நீறுதான் வாங்கி
மானேவடி வாளேயிந்த – வையக [8]மேழு [9]மளந்தவளே
[10]ஆறுமுகத் தோனும்பின்னு – மாறுதலைப் பிள்ளை பெற்றவளே
மரம்போ லிருப்பேனோ – [11]வையகத் தோர்கள் வசையாரோ
[12]தவமிருந்து நானலைய – சங்கலியோ யம்மா மகமாயி
[13]சூழுந் திருமதிலுந் – [14]தென்னந்தோப்பு திருமதிலும் கல்லாலே
ஆடும்பிரா மணர்க்குபதி – னாயிரம் பால்பசு தானமிட்டாள்
குறுணிப் [15]பணமளந்து – கோவில் கொட்டகை [16]முடித்திடுவேன்
தாரணியில் நல்லபிள்ளை – தந்தா லிடைக்கிடை பொன்தருவேன்
கல்லோ [17]திருமனசுநெல்லைக் – காமாச்சி யாகிய சீமாட்டி

உல்லாசம் சொல்லுசொல்லு – வொருகோட்டை [18]பணந்தந்து கும்பிடுவேன்
சும்மா யிருக்கிறாய்கண் – துஞ்சா திருந்துநான் கெஞ்சுகிறேன்
ஆமல்ல சென்று சொன்னால் – அம்மா வுனக்குவில் லங்கமுண்டோ
தரமாட்டோ மென்றிருந்தால் – தாங்கமாய்ச் சீவனை வாங்கிக்கொள்வாய்
என்றந்தக் கோவில் தன்னில்– ஏழெட்டு மாச [19]மிருந்தலுத்து
ஒன்றுங்கிடை யாமல்நெல்லை – ஊர்விட்டுச் சாலை [20]வழியாக
பாளையங் கோட்டைவிட்டு – பரபரப்பாய் [21]வழிதா னடந்து
தாசிமடத்தில் வந்து – சற்றே யிருந்து தகையாறி
சாலை [22]வழியாக அவர்தானே வருகிற பாதையிலே
காடுங் கருங்குளமும் – கண்ணிய செட்டிகுளம் பண்ணைவிட்டு
வாடாத மாந்தோப்பில் – மங்கை சேரவே யேங்கியுண்டு
காட்டுப் பெரும்பாதை – தாமரை வோடைத் தலத்தைவிட்டு
தீட்டும் [23]புகழுடையாள் – ஸ்ரீவை குண்டப்பதி சென்றுகண்டாள்.

புத்தன் குறிச்சி. கல்மடம், சீதப்பாலூர் – தோவாளை அருகிலுள்ள ஊர்கள். **உத்த** – உற்ற என்பதின் பேச்சு வழக்கு. **பதி** – இடம், **தியானம்** – ஐம்புலனடக்கிச் சிவயோகஞ்செய்தல். **தெப்பம்** – குளம். **சாஷ்டாங்கம்** – உடல் முழுதும் நிலத்தில் பட வணங்குதல். **அங்காரநம்பி** – ஒரு கடவுள். **தீர்த்தமாடி** – நீராடி. **திருநீறு** – விபூதி. **வையகமேழு** – பூலோகம், புவர்லோதகம், சுவர்லோகம், மகாலோகம், ஜனலோனம், தபோ லோகம், சத்தியலோகம் என்பன. **ஆறுமுகன்** – முருகன். **ஆறுதலைப்பிள்ளை** – ஆறு தலையை உடையவன். **வையகம்** – உலகம். **வசை** – இகழ்ச்சி. **சங்கதி** – சரித்திரம்,வரலாறு. **பிராமணர்** – அந்தணர். **தானம்** – ஈகை, கொடை. **குறுணி** – மரக்கால். **கொட்டகை** – விதானம். **தாரணி** – பூமி. **சீமாட்டி** – செல்வத்தையுடையவள். **உல்லாசம்** – உள்ளக்களிப்பு, மகிழ்ச்சி. **கோட்டை** – இருபத்து நாலு மரக்கால் கொண்ட ஓரளவை. **வில்லங்கம்** – தடை. **சீவன்** – உயிர். **மாசம்** – மாதம் என்பதின் பேச்சு வழக்கு. **நெல்லை** – திருநேல்வேலி. **பாளையங்கோட்டை** – திருநேல்வேலியிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் 3கி.மீ தொலைவில் அமைந்த ஊர். **தாசிமடம்** – பாளையங்கோட்டை அருகில் உள்ள ஊர். **கருங்குளம், செட்டிகுளம்** – பாளையங்கோட்டை அடுத்துள்ள ஊர். **தகையாறி** – இளைப்பாறி. **ஸ்ரீவைகுண்டம்** – திருநெல்வேலி – திருச்செந்தூர்சாலையில் 26. கி.மீ. தொலைவில் உள்ளது. 108 வைணவத்தலங்களுள் ஒன்று.

பா.வே. 2.கரத்தையுமிட்டு சீவலகாருங் குளங்கரை 3. ஓடி நடந்தவர்கள் 4.தேரும் திருநாள் நடத்தும் 6. சாட்டாங்கம் பண்ணி 7. திருநீறு பூசிக்கொண்டு 8. யீன்ற வயிற்றோனே 10. ஆனைமுகவனுக்கு பின்னு 11. என்ன 12. தரங்கெட்டு நானலைய இது 16. முகித்திடுவேன் 17. திருமனது நல்ல காமாச்சி 18. பணம் வைத்து 19. யிருந்தலைந்து.

க.சொ. 1.தொக்காக 5.விளுந்து 9. மழுத்தவளே 13. சூளுந் 14. தெந்நன்தோப்பு 15.பணமழந்து 20. வளியாக 21. வளிதா 22. வளியாகயவர் 23.புகளுடையாள்.

She offers milch cows to Brahmins , shed for the temple and gold equal to her weight in exchange for the boon of a child

Left she *Naṭaṉacālai*[1] for **Puttaṉkuṟicci**[2]
And then on to **Kalmatam**[3] further south,
Passed jungles ponds streams and their banks
Walked they making enquiries on the way
And left **Citappālūr**[4] as well
Hoping that the Lord who doth dance at **Tillaiampalam**[5],
Would help at **Nellai**[6]
They did go round the streets four there
And prayed as well
To seek such help divine they did bathe in the holy tank,
And then did proceed to the music hall on its banks
Where they prostrated and rose then
To obtain holy water and *Ātittiruniṟu*[7] at the sanctum of
Arikarananti[8]
Oh! Doe like Goddess who hath measured
All the worlds **seven**[9]
Oh! Goddess who hath begotten the six- faced God
And also the God with a head oddly shaped
Will I remain like a mere tree?
Won't the worldly folk blame me?
Is it lot mine to roam in pursuit and penance?
Oh! Mother **Makamāyi**[10] build I shall
Ramparts in stone for temple thine and the coconut grove
Offered she to the Brahmins milk cows ten thousand

With money by the bushel shall I put up?
Shed for the temple as well
Gold I shall give by weight for weight mine
If I am favoured with a son proper
Oh! **Kāmāṭci**[11] of **Nellai**
Art thou stone hearted?
Do tell me glad tidings, offer I shall money,
One **Kōṭṭai**[12] and worship
I entreat pitiably in prayers sleepless
But thou remain silent
Will it encumber you if you say yes or no?
If thou art not inclined to grant my desire,
Then take away my life for certain
Thus pleading and praying did she stay?
At that temple for months seven or eight
Vexed she was without prospects any
Left she then **Nellai** and **Pālaiyaṅkōṭṭai**[13]
Walked she along the road brisk and excited,
Reached **Tāccimaṭam**[14] and rested there a while,
Passing_**Karuṅkuḷam**[15] and **Ceṭṭikuḷam**[16] and the farms therein
The damsel did reach the mango grove evergreen
And after a re- past to relieve the longing for food,
Left she the jungle path long,
Thus the damsel of fame notable did reach **Srivaikūṇṭam**[17]

1. Name of places
2. Name of places
3 .Name of places
4. Name of places
5. **Tillaiampalam**- **Chidambaram** where Lord **Naṭrāja** dance
6. **Nellai** - **Thirunelvēli**
7. *āṭṭiruniru* - Holy ash offered in **Civaṉ** temples
8. **ārikaranampi**- Name of the **God**
9. **Seven** worlds - Pūlōkam, Puvarlōkam, Cuvarlōkam, Makālōkam, Jaṉalōkam, Tapōlakam and Catiyalōkam.
10. **Makamāyi** - Hindu Goddess.

11. **Kāmātci** - Hindu goddess at **Tirunelvēli**
12. *Kōttai* - A large measure
13. Name of the places
14. Name of the places
15. Name of the places
16. Name of the places
17. Name of the places

(ஸ்ரீவைகுண்டம் செல்லுதல்)

24. கோபுரமுங் கொடிமரமுங் [1]கோவிலையுஞ் சுத்திவந்து
[2]கோதையர்க ளப்போது கொண்டாடி மனமகிழ்ந்து

ஸ்ரீவைகுண்டப் பதிதனிலே திரும்பியவளும் வந்திருந்து
அரிவைகுண்ட நாதருக்கு அபயமபய மென்றே[3]விழுந்து

சந்ததிதா னில்லாமல் தாவித்துவந்து புலம்புகிறேன்
சந்ததிதான் தரவேணுந் தலைவனெனக்கு வரவேணும்

[4]வண்ணமணித் தாழ்வடமும் வயிரமணி தாழ்வடமும்
மரயானைச் சப்பிரமும் வாகுடன் சந்திரக்குடையும்
வாகுபெறத் தினம்பூசை வைத்தடியாள் தருவேனே

[5]உன்னைதெய்வ மென்றுசொல்லி மண்ணுலகோ ரறியவந்தேன்
உத்தமனே யொன்றுமில்லா ஊமைபோ லானாய்

இந்தவிடம் விட்டுஆற்றங் கரையிடத்தி லிருந்தால்
எந்தன் [6]தோழிமாரே யானுங்கூட வரமாட்டேன்

அங்குமிங்கு மில்லாம [7]லலையத்தக்க விதியாச்சே
[8]ஆற்றங்கரைக் கயமதிலே வீத்திருக்கப் போறேனென்றாள்.

கோபுரம் – கோயிலின் வாயில் மேலே உள்ள உயர்ந்த அமைப்பு. **சொடிமரம்** – கொடிக்கம்பம், **கோதையர்கள்** – பெண்கள். **அரி வைகுண்டநாதர்** – வைகுண்டத்தில் உள்ள திருமால். **சந்ததி** – வாரிசு. **புலம்புகிறேன்** – அழுகிறேன். **தாழ்வடம்** – முத்து, முதலியவற்றால் அமைந்த மாலை. **வயிரமணி** – நவரத்னங்களில் ஒன்று. **மதயானை** – மதம்பிடித்த யானை. **சப்பிரம்** – சப்பரம். **வாகுடன்** – அழகுடன்.

சந்திரக்குடை – இறைவனுக்குக் கவிக்கக்கூடிய குடை. **மண்ணுலகு** – பூமி. **உத்தமன்** – மேலானவன், இங்கு விஷ்ணு. **கயம்** – குளம்.

பா.வே. 5.உன்னையன்றி தெய்வகமே.

சு.சோ. 1.கோவிலயுஞ் 2.கோதயர்கள் 3.விளுந்து 4.வந்நமணி 6.தோளிமாரே 7.அலயத்தக்க 8.ஆத்தங்கரை.

She reaches Srivaikunṭam

She did go round the tower and the flag mast
At the temple along with the other damsels joyously
At the holy shrine of Srivaikuntam did she,
Prostrate seeking refuge from Lord **Tirumāl** there,
"Without any heir do I languish and lament
Grant me a son, to me a leader bestow,
Offer I shall to Thee,
Gems and diamonds as *tālvaṭam*[1] stringed,
A Capparam[2] designed like an elephant
And a parasol shaped moonlike
Shall I offer besides daily worship?
Proclaiming thee as god for the worldly folk to wit,
Have I gone over here. Oh! Lord exalted,
But dumb thou remain not answering prayers mine,
Oh! My maids if from here you go to the river bank
I won't accompany you
Destined am I to roam here and there
Stay I shall at the tank near the river bank

1. *Tālvaṭam* - A low hanging garland
2. *Capparam* - A light chariot

(பலன் காணாமல் திருச்செந்தூர் செல்ல நினைத்து ஆழ்வார் திருநகரி அடைதல்)

25. மங்கையந்தப் படியுரைக்கச் [1]செங்கையினா லணைத்து
மாத்தமில்லாத் தோழி தேத்தமெடுத் துரைத்தாள்

அழுங்குவது தகுதியல்ல விளம்பிய சொல்கேளாய்
ஆண்டவனார் [2]விளையாட்டை யாரறியப் போறார்?
[3]விழுந்தபல்லு நிமிர்ந்தபல்லு இன்னும்வரவு மில்லை
[4]வெள்ளைநரை யானதொன்றும் வெளியில்வர வில்லை
மலைபோல உசர்ந்தகொங்கை தலைசாய வில்லை
மடக்கொடியே பதினாறு வயசுவர வில்லை
கோப்புடைய திருச்செந்தூர் [5]வரைக்குஞ் சென்று
குழந்தைகொண்டு [6]வரவென யெழுந்திருந்து போனாள்
பூப்புடையா ளவளுடைய தோப்பதுவுங் கடந்து
பொருளேந்திக் கடந்தேறித் திருநகரி கண்டாள்.

மங்கை – பதின்மூன்று வயதுடைய பெண். **மாத்தம்** – மாற்றம் என்பதின் பேச்சு வழக்கு. **தேத்தம்** – தேற்றுதல், துணிவு, தேற்றம் என்பதின் பேச்சு வழக்கு. **அழுங்குவது** – வருந்துவது. **விளம்பிய** – சொல்லிய. **வெள்ளை நரை** – வெளுத்த மயிர். **உசந்த** – உயர்ந்த என்பதின் பேச்சுவழக்கு. **கொங்கை** – பெண்களின் மார்பகம். மடக்கொடி – பெண். **கோப்பு** – பெருமை. **தோப்பு** – சோலை. **திருநகரி** – ஆழ்வார் திருநகரி. ஸ்ரீவைகுண்டத்திலிருந்து 5. கி. மீ. தொலைவில் உள்ளது. நூற்றெட்டு வைணவத் திருப்பதிகளுள் ஒன்று. நம்மாழ்வார் திருத்தலம். இங்கு உறங்காப்புளி என்று ஒரு புளியமரம் உள்ளது. இதில் தான் நம்மாழ்வார் அமர்ந்திருந்தார் என்பது வரலாறு.

பா.வே. 5.பதிவரைக்கும் சென்று 6.வரவேணும் எழுந்து நடந்தாரே 7.பூப்புடையா ரவருடைய.

சு.சொ. 1.செங்கயினால் 2.விளயாட்டை. 3.விளுந்தபல்லு 4. வெள்ள நரை.

No divine favour at Srivaikuntam and hence she leaves for Tiruccentūr

As the *Mankai*[1] did declare thus
Her companion constant uttered in consolation
"If does not behove thee to languish
Do listen to words mine,
Who can divine the pranks of God?
Your teeth have not fallen as yet,

Nor are grey hairs visible on thy head
Mountainous breasts thine are erect still without sagging
Oh! Creeper like lass, you are not sixteen yet,
Go to the famed **Tiruccentūr**[2]
To bring forth a child
Then did the damsel pass the grove
And with belongings hers did reach **Tirunakari**[3]

1. *Mańkai* - A young woman
2. **Tiruccentūr** - A sea side shrine of Lord **Murukan̲**
3. **Tirunakari** - **Āḻvārtirunakari** a Vaishnavite shrine

(நாட்டுக்கும், வீட்டுக்கும் பிள்ளை கொடு எனல்)

26. செட்டிச்சி பிள்ளையாகப் புளிக்குள்ளே
திருநடனம் [1]செய்துநின்ற தெய்வமே
[2]அட்டவந்தனஞ் செய்து தருகிறேன்
அரிகிருஷ்ணா நாராயணா வென்றாள்
கொட்டுந் தம்பட்டம் வெங்கலப் பேரிகைக்
குதிரைமே லிட்டம்மானந் தருகிறேன்
நாட்டுக்குமெந்தன் வீட்டுக்கு மாகவே
நல்லபிள்ளை தரவேணுந் தெய்வமே
தொட்ட காரியந் [3]தோற்றுப் போகாமலே
சுந்தரப்பிள்ளை தந்துதுணை செய்வாய்
இப்படிச்சொல்லி முப்பது நாளதாய்
இருந்துமே பலன்காணாமல் போகினாள்
[4]செப்பமாய் நடசாலை கடந்துதான்
[5]சேரவே தென்திருப்பதி செல்லுவாள்
தீர்த்தமாடித் தெருச்சுத்தி வந்தபின்
தெண்டனிட்டுத் திருப்பாதம் சேவித்தாள்

[6]கரையகத் தண்ணலே குழைக்காதனே
காத்துக் கொள்ள முழுதுங் கடன்கண்டாய்.

(கும்பிட்ட கைக்குக் கூலிகொடு எனல்)

[7]பாவநாசப் பராபரத் தெய்வமே
பத்துமாசந் திருநாள் நடத்துவேன்
கும்பிட்டகைக்குத் கூலிகொ டென்றுதான்
கூடிவந்த [8]தோழிகள் பேசினார்
அப்படியே பெண்களஞ்சாறு நாளதாய்
அங்கே யிருந்தும்பலன் காணாமல்
தப்பில்லாம லத்திருப்பதி யொன்பதும்
தவமிருந்து சலித்துவிட் டேகினாள்
[9]ஓடையும் வயல்காடுங் கடந்துபோய்
[10]உத்தரநாட் டாத்தியம்மன் சிவாலயம்
[11]மாடமண்டக வாசல் முகப்பிலே
[12]வந்துகும்பிட்டேன் மனக்குறை தீரம்மா
வரம்நீக்கி மகன்றரு வாயம்மா
மாசமூன்றுந் திரிந்தொன்றுங் கண்டிலேன்
மல்லுகெட்டி பிச்சைவாங்கு வாருண்டோ
மாதாவேயென்று [13]வழிநடை கொண்டாள்.

செட்டிச்சி – செட்டிப்பெண். **அட்டவந்தனம்** – அட்டபந்தனம்,. கருங்குங்கிலியம், வெள்ளைக்குங்கிலியம், சுக்காங்கல், தேன்மெழுகு, செம்பஞ்சு, மைசாட்சி, கொம்பரக்கு, காவிக்கல், வெண்ணெய் இவ்வெட்டையும் எடைப்படி வேர்த்து முறைப்படி அரைத்துச் செய்வது. கோயில்களில் இறைவனைச் சுற்றிவைப்பது. **திருநடனம்** – திருத்தாண்டவம். **தம்பட்டம்** – ஒருவகைப் பறை. **பேரிகை** – முரசு. **தொட்டகாரியம்** – தொடங்கிய காரியம். **சுந்தரப்பிள்ளை** – அழகானபிள்ளை. **செப்பமாய்** – இணக்கமாய். **நடசாலை** – இருமருங்கும் மரங்கள் நிறைந்த வழி. **தென்திருப்பதி** – தென்திருப்பேரை, நவதிருப்பதிகளில் ஒன்று. **தீர்த்தமாடி** – நீராடி. **தெண்டனிட்டு** – வணங்கி. **திருப்பாதம்** – திருவடி. **சேவித்தாள்** – வணங்கினாள். **கலையகத் தண்ணல்** – தென்திருப்பேரையில்

உள்ள திருபால். **குழைக்காதன்** – மகர நெடுங்குழைக்காதர், தென்திருப்பேரைத் திருமால். **பாவநாசம்** – சிருநேல்வேலி மாவட்டத்தில் உள்ள ஒரு தீர்த்தம். **திருநாள்** – திருவிழா. **அஞ்சாறு** – ஐந்து, ஆறு என்பதின் பேச்சு வழக்கு. **திருப்பதிவொன்பது** – ஸ்ரீ வைகுந்தம், திருத்தொலைவில்லி மங்கலம், திருவரகுணமங்கை, திருப்புளிங்குடி, திருக்குளந்தை, திருக்கோளூர், திருத்தென்பேரை, திருக்குருகூரி, ஸ்ரீவரமங்கை, ஆகிய ஒன்பது திருப்பதிகள். **ஓடை** – நீரோடை. **வயல்காடு** – மருதநிலப்பகுதி. **உத்தலநாட்டத்தியம்மன்** – ஓர் ஊர். **மாசமூன்றும்** – மாதமூன்றும். **மல்லுகெட்டி** – வற்புறுத்தி.

பா.வே. 1.செய்தருள நின்றதோர் 2.அட்டமங்கலம் சாத்தித் 4.நடைசாலை கடந்து போய் 5.சேரத் தென்திருப்பேரையில் சென்றனள் 7. பாவனாயகா பாரபரா வஸ்த்துவே 10. உத்தநாட்டாத்தி அம்மன் சுவாலம் 11. மாடமண்டப 12. வந்துகும்பிட்டொரு சந்திவைத்தாள்.

சு.சொ. 3.தோத்து. 6.கரயகத் 8.தோளிகள் 9. ஓடயும் 13.வளிநடை.

Seeking a child for her home and her country as well

Oh! God who as the offspring of a *Cetti*[1] woman
Did sojourn and dance at the tamarind tree holy
Oh! **Arikirusnā,Nārāyanā,**
Aṭṭavantanam[2] shall I perform
Drum to beat and *pērikai*[3] in bronze
On horse mount fixed shall I offer thee,
Oh! God do but grant me a child proper,
For my home and country both
Bestow me a prince charming and so help me
As not to lose in my quest undertaken
Thus entreating did she remain there

For full thirty days in vain without benefit any
Then did she willingly leave,
Passing the road tree lined on sides both,
And did reach **Teṉtiruppērai**[4]
Bathing in the holy tank and going round the streets
She did prostrate and offer worship

There at the Lord's feet
Oh! Lord who doth abide at **Kanaiakam**
Oh! **Kuḻaikkāt ar**[5] do please protect me
If my bow thou hast seen

Answer my prayers? She entreats

Oh! Lord *Parāparam*[6] at **Pāpanācam**[7]
Festival for full ten days shall I conduct
Please grant the wage sought by us
In worship with our hands joined
Thus did the maids assembled there entreat,
And waited there for five or six days in rain
The nine holy shrines had they visited and worshipped
But in weariness did she leave without benefit any
Crossed she then streams and fields
And did reach the entrance of the **Civā** temple at *Uttaranāṭṭāṭti Ammaṉ*[8]
"Oh! Mother! I am here to worship thee,
Do relieve me of my grievance
Please grant me a son oh! Mother
Roaming am I for three months without result any
I cannot pester and seek alms said she and walked on her way

1. *Ceṭṭi* - A Hindu Community
2. *Aṭṭavantaṉam* - Eight fold worship
3. *Pērikai* - A kind of drum
4. **Teṉtiruppērai** - A vaishnavite Shrine, one of the Nine **Tirupatis**
5. **Kuḷaikātar** - The name of the deity at **Teṉtiruppērai**
6. *Parāparam* - transcendent god
7. **Pāpanācam** - Name of a place
8. *Uttaranāṭṭāṭtiammaṉ* - Name of a place

(குழந்தை தந்தால் தென்குரும்பை இறைவனுக்குத்
தங்கப் பல்லக்கு தருவேன் எனல்)

27. தந்திரமாக நடந்து கால்சடைத்து கைசடைத்து
[1]சாலை [2]வழிநடந்து சலித்தேன்
மத்தியான [3]வேளையிலே சுத்திச்சுத்தி யேதிரிந்து
[4]மதிகெட்டேன் யென்றலை விதிதான்

[5]இத்தரை பெண்களைப்போல் வீட்டி லிருந்திடாமல்
[6]யெதுக்குநான் வீணிலே நடந்தேன்
[7]கொத்துமலை கோவில்சூழ்ந்த கோயிலென்ற கோயில்
கூலியில்லா வேலைசெய்ய வந்தேன்

[8]கோதையர்க ளோடியோடி குட்டைநாட்டி லேகுரும்பை
கோபுரத் தடிதனிலே வந்தாள்
மாதுசெறி [9]தென்குரும்பை கோவில்வல மாகவந்து
[10]மண்டக முகப்பருகே வந்தாள்

காரண [11]வழியடிமை [12]யாகவே யடிதொழுது
காணிக்கையாய் மாணிக்கத்தை வைத்தாள்
தானுமந்த னாசைதீரச் சந்ததிதந் [13]தாலெனக்கு
தங்கப்பல்லக்குச் சமைத்துத் தாரேன்.

(பிள்ளை பாக்கியம் இல்லாமல் போனால் வேறொருவர் சிரியாரோ எனல்)

எண்ணில்லாத பெண்கள்முன்னே நானுமொரு பெண்ணெனவே
இறுமாந்து நிற்பதுக்கு மில்லை
[14]இத்தரைக்குப் பாடுபட்டுப் புத்திரனில்லாதே போனால்
எத்தனைபேர்க் குத்திரம்நான் சொல்வேன்

பித்தமீறி கொண்டுபோச்சு செத்துபோவே னானினிமேல்
    பெண்பழியைப் [15]பார்த்திலங்க [16]வேணும்
மெய்ப்புட னிருந்தும் [17]பிள்ளை பாக்கியமில் லாதேபோனால்
    வேறொருவர் நம்மைச் சிரியாரோ

ஆண்டவனார் கோவில்விட்டு முதலியழ கப்பனார்
    அன்னசத்திரங் கடந்து போனாள்
கால்நடைய தாகமெள்ள வந்துசந்தி [18]யுள்புகுந்து
    கதிப்புடன் பொங்கியம்மை வுண்டாள்
வேனலுள்ள மத்தியான வெயிலுக்குள் சாலையிலே
    விதிவச மென்றே யவளிருந்தாள். 15

தந்திரமாக – மெதுவாக, பதமாக. **சடைத்து** – களைத்து, சோர்ந்து. **சலித்தல்**– இளைத்தோய்தல். மத்தியானம் – உச்சிப்பொழுது. நண்பகல். **சுத்திச்சுத்தி** – சுற்றிச் சுற்றி என்பதின் வட்டார வழக்கு. **மதிகெட்டேன்** – அறிவிழந்தேன். **கொத்துமலை** – ஓர் ஊர். **கூலியில்லா வேலை** – ஊதியமில்லாத வேலை. **கோதையர்கள்** – பெண்கள். **குட்டைநாடு** – குட்டநாடு, கொடுந்தமிழ் நாடுகளுள் ஒன்று, கோட்டயத்திற்தும் கொல்லத்திற்தும் இடையில் உள்ள நாடு. **தென்குரும்பை** – திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர். **மண்டகம்** – மண்டபம். **முகப்பு** – வாசல். **காணிக்கை** – தட்சணை. **மாணிக்கம்** – நவமணியினொன்று. **தங்கப்பல்லக்கு** – தங்கத்தால் செய்யப்பட்ட சிவிகை. **சமைத்து** – செய்து. **புத்திரன்** – மகன். **உத்திரம்** – பதில். **பித்தம்** – மயக்கம். **செத்து** – இறந்து. **மெய்ப்புடன்** – உடலுடன். **பாக்கியம்** – பேறு. **சிரியாரோ** – நகையாரோ, பரிகாசம் பண்ணாரோ **ஆண்டவனார் கோவில், முதலியழகப்பனார் அன்ன சத்திரம்** – இடங்களின் பெயர்கள். **பொங்கி** – சமைத்து.

பா.வே. 1.சாட்டு வழிகேட்டுனான் சடைத்தேன் 3. வெயிலதிலே 4. மதிகெட்டவ னெழுதிவைத்தான் 5.எத்தனையோ 6. எதுக்காக வீணிலே மலைந்தேன் 7.கொத்துமலர் வோலை சூழ்ந்த கோவிலென்ற கோவில் தோறும் 9.தென்குறும்பூர் 10. மண்டகப்படியருதே சென்றாள் 12. யானெனவே தான் தொழுது 13. தந்தாலுமக்கு 14. எத்தனைக்கும் 16. வேண்டியதவமிருந்தும் 18 விம்மி விம்மியே அழுது போனாள்.

சு.சொ. 2.வளிநடந்து 3.வேளயிலே 8. கோதயர்கள் 11. வளியனுடமை 15.பாத்திரங்க 17. பிள்ள 19. உழ்புகுந்து.

Offering golden palanquin to the Lord at Tenkurumpai[1]

"Walked I but gingerly with my legs and hands worn out
Weary am I walking this along the roads,
Roaming round at noon I am off my wind,
It's but my fate
Why have I walked in vain thus?
Instead of remaining at home like the women on earth
Now have I gone over to the temple at **Kottumalai**[2]
Offering to work without wages
Thus did she reach **Kuttanātu**[3] quite?
And arrived at the base of the temple tower there
Going around the **Tenkurumpai** temple
She did reach the front of the *Mantapam*[4] there
Prayed she at the feet of the God therein,
And offered a ruby as homage
" A palanquin in gold shall I provide thee
If thou fulfill my desire and grant a child"

Won't people laugh at me if I am deprived the fortune of child bearing?

"Amidst the innumerable women folk
Unable am I to stand with my head held high?
Having suffered so much if I still have no son,
How can I answer the queries of persons so many?
Dazed in grief am I, I shall die hence
Have pity to avoid the charge of harming a woman
Won't people laugh at us
If we have bodies barren without children?
Leaving the temple of *āntavanār*[5]
She passed ***Mutalialakappanār Annacattiram***[6] as well
Walked she but slowly and entered therein
To cook her food and eat

At noon in the scorching heat did she remain?
On the road cursing her fate

1. Name of places
2. Name of places
3. Name of places
4. *mantapam* - A pillared open hall in a temple
5. *āntavanār* - The appelation of a deity
6. Name of place

விருத்தம்

28. இருந்து சாலை ரிணவிடமாய் யெண்ணி யெண்ணி மனசுநொந்து
சரிந்தாள் [1]தோழி மடிதனிலே சற்று முறக்கம் வாராமல்
வருந்தி உடம்பு உருகுதென்று மான்போல் மறுகி மானனையாள்
பொருந்திப் பயிர்போல் முகம்வாடி புரண்டங் [2]கெழுந்து வருவாளாம்.

மனசுநொந்து – மனம் தளர்ந்து. சரிந்தாள் – விழுந்தாள். உறக்கம் – நித்திரை, தூக்கம். வருந்தி – துன்பப்பட்டு. மறுகி – மனம்வருந்தி.

ச.சொ. 1.தோளி 2.கெளுந்து.

Deeming the road as a festering sore venomous
And anguished on that sure did she collapse
On her maid's lap but couldn't get a wink of sleep
Like a stricken deer did the doe like damsel suffer?
Stating that her body melted in pain
Withered was her face as she tossed
And rose then

(பறவைகளிடம் புலம்புதல்)

29. ஏந்தும் குழந்தைதா [1]னில்லையென்றால் – எந்தப் படியோநான்[2] பிழைக்கப் போறேன்
கையில் குழந்தைக்குக் கனவுகண்டு – கணவன் முகஞ்சென்று காண்பதெப்போ

ஆனைக்கால் பட்ட தேரையானேன் – ஆத்தில் கரைத்த [3]புளியானேன்
வருந்தி யழுகின்ற குரலோசை – மதுரங் [4]கிளிகளே கேளீரோ
திருந்தி ஒருத்திநான் பெண்பிறந்து – தேசப் பரதேசி யானேனே
வாராய் பேடையன்னந் தாராவே– மலடி முகத்திலே விழிக்கொணாதோ?
[5]வானில் பறக்கின்ற [6]கிளியினங்காள்– வாணாள் மறுக்கத்தைப் பாரீரோ
பிள்ளைக் கிரைதேடு [7]மயிலினமே– [8]பிழைக்கும் படிக்கொரு புத்திசொல்லு
என்று புலம்பியங் கழுதவளை– ஏந்தி யொருதோழி தேற்றுவாளாம்
அன்ன நடையாளே நீபுலம்பு – உழுகால் மிடைக்குமோ காடுகளில்
கொங்கைக் குடமிரண்டும் [9]தலையசைய– கோலசரப்பணி புரண்டாட
அம்மாள் பேட்டைதன் னருகாக [10]அய்யன்கோவில் கல்கோட்டையிலே
தர்ம மடங்களும் பனங்காடுந்– தருவை வீதியுங் கடந்தேகி
கவலை யொழிந்திது நமக்கெனவே– [11]கவுண்டர் மடமிட்டுத்
தான்போனாள்
இன்னம் வெகுதூர மிருக்குதென்று – எதிரே சொல்லிக்கொண்
டொருத்திவர
[12]சடக்கண் மடமிட்டுத் கிழக்காக – தாண்டுந் தூண்டுகோல்
மூர்த்திதன்னை
[13]படைக்கப் [14]பழமிளநீர் சொரிந்தே– [15]பழைய கோபுர வாசல்வந்தாள்.

ஏந்தும் – தாங்கும். **ஆனைக்கால்பட்ட தேரை** – யானையின் காலில் அகப்பட்ட தேரையானது நசுங்கிப் போகும். அதுபோல என் வாழ்க்கை நாசமாகிறது என்று பொருள். **ஆத்தில் கரைத்த புளி** – ஆற்றில் கரைத்த புளி யாருக்கும் பயன்படாதது போல என் வாழ்க்கை பயனற்றது எனக் கூறுகிறாள். **மதுரங்கிளி** – இனிமையான மொழி பேசுகின்ற கிளி. **திருந்தி** – திருத்தமாக, அழகாக. **தேசப்பரதேசியானேன்** – என்னுடைய தேசத்தை விட்டுப் பிறதேசம் வந்தேன். **பேடையன்னம்** – பெண் அன்னம். **தாரா** – ஒரு பறவை. **வாணாள்** – வாழ்நாள். **மறுக்கம்** – மனக்குழப்பம். **புத்தி** – அறிவுரை. **தேற்றுவாள்** – ஆறுதல் படுத்துவாள். **வரப்பணி** – கழுத்தில் அணியும் ஓர் ஆபரணம். **அய்யன் கோவில் கோட்டை** – சாஸ்தா கோயில் கோட்டை. **அம்மாள் பேட்டை, தர்ம மடம். பனங்காடு, தருவை வீதி** – ஸ்ரீவைகுண்டத்திலிருந்து திருச்செந்தூர் செல்லும் வழியில் உள்ள ஊர்கள். **கடந்தேறி** – கடந்து சென்று. **கவுண்டர் மடம், சடக்கன் மடம்** – திருச்செந்தூர் அருகில் உள்ள ஊர்கள்.

பா.வே. 1. இல்லாபிட்டால் 3. புளிபோலானேன் 5. வானிப்பேடை கா அன்னங்களே – வாணாள் மறுகுதே காட்டுக்குள்ளே 7. குருகினமே... புத்தி சொல்வீர் 9. தலையடே 10. ஜயன்கோவிக்கல் மேடை தன்னில் 11. கவரைமடமிட்டுத் 12. தடக்கன் மடம்மிட்டு 13. பரிவிநுடையதோர் வேலவர்தன் – 15. பழைய கோபுர வாசல் கண்டாரே.

சு.சொ. 2.பிளைக்க 3. புழியானேன் 4.கிழிகளே 6. கிழியினங்காள் 8.பிளைக்கும் 14. பழமிழுநீர் 15.பழய.

She addresses the birds on her plight

How shall I thrive without a child to carry in hands mine?
Just dreaming for a child on my hands
When shall I see my husband's face?
Like a toad trampled by an elephant's foot
Have I become and also like tamarind dissolved in a river
Oh! Parrots sweet won't you listen to the sad strains
Of this weeping woman?
The only woman am I to be born
To roam like a *paratēci*[1] leaving country mine
Oh! Swans and gardens would you not look even
At my face oh as I am barren?
Oh! Flocks of parrots flying in the sky,
Don't you see my anguish lifelong?
Oh! Peacocks in search of food for your young ones,
Do counsel me a course to live but properly
As she thus did lament and weep,
A maid of hers did hold her and console
"Oh! Damsel with a swan's gait
Can you attain what you desire by lamentation?
With her breasts moving and necklace rolling
Did she walk and pass **Ayyaṉkovil kalkōṭṭai**[2]
Near **Ammāpēṭṭai**[3] and the choultries therein
Passed as well the palm groves and Taruvai streets,
"Worries are over for us" thought she now

And passed **Kavuṇṭarmaṭam**[4] then
A long way is there still to go
Said a woman who came that way
Walked they towards east leaving **Caṭakkaṉmaṭam**[5]
And arrived near the entrance of the ***Mūrtti***[6] temple tower
With fruits and coconuts tender for worship there

1. *Paratēci*- Wandering mendicant or beggar
2 .Name of place
3. Name of place
4. Name of place
5. Name of place
6 .*Mūrti* - Deity, god enshrined in a temple or place

(திருச்செந்தூர் முருகனிடம் குழந்தை வரம் கேட்டல்)

30. [1]செந்தூரில் வந்தெங்கள் பொன்னுருவித் – தாயார் சிறப்பெல்லாம்
கண்டபோது
தெய்வத் தலமிது தானெனக் கண்டவள் – [2]சிந்தையுடன் மகிழ்ந்தாள்
[3]நந்தூர் பொழிவு மலவாக் கரையும் நன்னகர் கோபுரமும்
[4]நல்ல தெருவீதி ஞானவொளி– யான– நாயகி கண்டுநின்றாள்
கண்ட புதுமை யெல்லாம் – [5]களிகூர்ந்தவர் – கண்கண்ட தெய்வமென்று
கன்னிய ரொன்றாகத் தீர்த்தமு – மாடி – கரையேறி மாத்துடுத்தாள்
[6]உண்டொரு வேளை சந்நதி – வாசல் முகப்பதி லேயிருந்து
[7]ஒண்டொடி யாள்வி முந்தே– தொழுதுபணிந் தேதுரை – சொல்வாளாம்
ஆதர வான குமரப்பனே – செந்தி – லதிபனே [8]கடம்பா
[9]அநியாயங் கேட்டி ரங்காயோ– நீயு மமர பதிக்கரசே
[10]பாலகி நானொரு பாலகனுக்– [11]காகப் பாடுபட்டே னடியார்
[12]அப்பனே ஒப்பில் லாத – மணியே யருமைமக ளில்லாமல்
அங்கம் பறக்கிறது ஆவியுஞ் – சோருது– ஆறு முகத்தோனே
தப்பாமல் நீயெனக்கா யிரங்கியொரு சந்ததி – தந்த துண்டால்

[13]சப்பிர மஞ்சத் தேர்வைப்பேள் – திருக்கோவில் – தங்கத்தாலே முகிப்பேன்
ஒப்புரவாக முடிப்பே – னென்று சொல்லி– யுத்தவ மிருந்தாள்
உள்ள விதிப்படி யல்லா– லினில்லை – யென்றவள் வாடிவிட்டாள்
சுப்பிர மண்யசாமி யிப்படிச்– சொன்னால்– துணையெனக் காருபெண்ணே
[14]தோழியரே திருச்சந்நதி கண்டு– தொழுது– வணங்குமென்றாள்.

செந்தூர் – திருச்செந்தூர், திருநேல்வேலியிலிருந்து தென்கிழக்காக 57. கி.மீ. தூரத்தில் உள்ளது. **சிந்தையுடன்** – கருத்துடன். **நந்தூர்** – திருச்செந்தூர் அருகில் உள்ள ஊர். **அலவாக்கரை** – அலைவாய்க்கரை, திருச்செந்தூர் அருகில் உள்ள ஊர். **நன்னகர்** – நல்ல நகர். **தீர்த்தமாடி** – நீராடி. **மாத்துடுத்தாள்** – மாற்றுடை உடுத்தாள். **சந்நதி** – சந்நிதி, இறைவன் திருமுன்பு. **குமரப்பன், செந்திலாதிபன், கடம்பன்** – முருகப்பெருமானின் வேறு பெயர்கள். **அமரபதிக்கரசே** – தேவர்களுக்கு எல்லாம் அதிபதியாக விளங்குபவன் முருகன். **பாலகி** – பெண். **பாலகன்** – ஆண் குழந்தை புத்திரன். **பாக்கியம்** – குழந்தைப் பேறு. **பவுசி** – வாழ்வு, செல்வம். **அப்பனே** – தந்தையே. **அங்கம்** – உடல். **ஆவியும் சோருது** – உயிரும் சோர்கிறது. **ஆறுமுகன்** – ஆறு முகத்தை உடைய முருகக் கடவுள். **சந்ததி** – வாரிசு. **சப்பிரமஞ்சத்தேர்** – தோரண அலங்காரத்துடன் கூடிய தேர். **முகிப்பேன்** – முடிப்பேன். **ஒப்புரவாக** – ஒழுங்காக. **உத்த** – உற்ற என்பதன் பேச்சு வழக்கு மிகுந்த.

பா.வே. 1.செந்தூர்ப் பதிதன்னில் வந்து பொன்னுருவியம்மை சிறப்பேல்லாம் கண்டபோதே 2.சிந்தை களி கூர்ந்தாள் 3. நந்திபொழியும் அலவாக் கரையும் பொன் – நாயகர் 4. ஞானவொளி பரனொலி நாத தெருவீதியும் நாயகி கண்டனளே 6. உண்டொரு சந்தி உகந்து புதிந்தவள் 8. தெய்வமே 9. அனியாயம் கேட்டு அடியாளுக்கிரங்கும் – அமராபதிகாவலனே 10. வாதகினான்னொரு பாலனுக்காய் 11. கனபாடுபட்டிங்கு வந்தேன். 12. அப்பனே சுப்பையா ஒப்பில்லாத வேலனே அறுமுகத்தோனே 13. சப்பற மஞ்சத்தேர் விடுவேன் திருப்பணி. 14. தோழீயாரும் தாயாரும் திரும்ப தீர்த்தமு ஆடிச்சென்றார்.

சு.சொ. 5.கழிகூர்ந்தவள் 7. ஒன்றொடியாள் 9.அணியாயங் 14. தோளியரே.

Entreating Lord Murukan̲ at Tiruccentūr for a child

As our dame **Pon̲n̲uruvi** did arrive at **Tiruccentūr**
And witnessed all its features glorious,

She did realize that it was a divine resort veritable
And was joyous in her mind
Nantūr[1] and **Alaivāykkarai**[2] also did she see
And then the temple tower at **Tiruccentūr**
The well laid streets there as well
Did the damsel of sparkling wisdom surray
Joyous quite on seeing novelties all there
Here is God verily visible thought they

1. Name of place near **Tiruccentūr**
2. Name of place near **Tiruccentūr**

(குழந்தை பிறந்தால் உனதுபெயர் வைப்பேன் எனல்)

31. [1]சென்றாளே கடல்கரையில் தீர்த்தமாடி மாத்துடுத்தாள்
மாத்துடுத்து நடைதனிலே வந்துநின்றங் கேதுசொல்வாள்
குமராசெந் தூர்வேலா குறத்தியுட [2]மணவாளா
அமரர் பதிக்கரசே ஆறுமுக வடிவேலா
தென்காசி [3]நாடாளவொரு சிறுவனைநீ தந்ததுண்டால்
பிறக்கிற பிள்ளைக்குவுன் பேரிடுவேன் றப்பாது
ஈன்றெடுக்கும் பாலனுக்கு யிடைக்கிடைபொன் நான்தருவேன்
தேரதுவு முகித்துவைப்பேன் திருநாள் நடத்திவைப்பேன்
வருஷமாண்டு திருவிழாவு மாதாந்தக் கட்டளையும்
நடத்திவைப்பேன் நாமடியான் நல்மதலை தரவும்வேணும்
என்றுசொல்லி யருந்தவசா யிருந்தும்பலன் காணாமல்
இருந்தபதி [4]விட்டிலகி யேந்திழையும் தோழியரும்
ஆயிரங்கால் மண்டபமும் அகரத்தெரு வீதிகளும்
கடந்துபொன் னுருவியம்மை கரிமுகனார் கோவில்கண்டாள்
அரசடிவாழ் பிள்ளையார்க்கு அவலடைகள் காணாமல்
இருந்துபதி விட்டிளகி [5]யேந்திழையாள் தான்நடந்தாள்.

மாத்துடுத்தாள் – மாற்றுடை உடுத்தாள். **குமரன். செந்தூர் வேலன், குறத்திமணவாளன். அமராபதிக்கரசன், ஆறுமுக வடிவேலன்** – முருகக்கடவுளின் வேறு பெயர்கள். **தென்காசி** – பாண்டிய நாட்டிலுள்ள ஊர். **முகித்து** – முடித்து. **திருநாள்** – திருவிழா. **வருஷமாண்டு திருவிழா** – வருடத்திற்கு ஒரு முறை நடக்கும் முக்கியமான திருவிழா. **மாதாந்தக் கட்டளை** – மாதத்தில் நடக்கும் கார்த்திகை. அம்மாவாசை, சிவராத்திரி, பௌர்ணமி ஆகிய பூசைகள். **நல்மதலை** – நல்லபிள்ளை. **அருந்தவசு** – கடுமையான தவம். **பதி** – ஊர். **ஏந்திழை** – பெண். அணிகலன் அணிந்தவள். **அகரத்தொரு** – பிராமணர்கள் வசிக்கின்ற தெரு. **கரிமுகனார்** – யானை முகத்தை உடைய விநாயகன்.

பா.வே. 1. சென்றார் கடைக்கரைக் கோவினில் சிறந்த சமுத்திரத்தில்.

சு.சோ. 2. மணவாழா 3. நாடாழ 4. விட்டிழகி 6. யெந்திளயாள்.

" If a child is born tome I shall name it afte you"

Virgin damsel all did bathe in the *Tīrttam*[1] there
And did change their garments on its bank
Had their re- past and then from the sanctum front
The *tōtti*[2] wearing damsel did prostrate and pray
"Oh! **Kumarappan**[3] helpful, Oh! **Centilātipan**[4]
Kaṭampan[5] won't you have pity on me for this rank injustice
Oh! Lord of **Amarāpati**
A girl am I struggling frantically for an infant son,
Please grant me that good fortune,
To enable me walk with pride proper
Oh! Father, and Gem Peerless
Tense am I in limbs mine without a son beloved
Weary is my soul, Oh! **Ārumukan**
If only Thou in mercy grant me an offspring,
I shall offer thee a chariot decorated
And shall cover thy temple with plates of gold
Properly shall I discharge tasks there"
Thus did she declare and performed penance
But it is destiny that shapes one's
She mused in withering melancholy
" If **Lord Cuppiramaṇiyan**[6] doth thus deny the derive mine

Who else will help?
Let us worship at the holy sanctum, Oh! Maids"
Bathed she in the sea and on the shore
Then arrived she at the *naṭai*[7] of the temple
There she stood and said,
"Oh! **Kumarā**[8], **Centūr Vēlā**[9], **Consort of** *Kuṟatti*[10],
Oh! Lord of **Amarāpati**[11], **Āṟumuka vaṭi Vēlā,**
If thou kindly bestow me a son,
To rule over **Teṉkāci** country
I shall name him after Thee without fail,
Gold also I shall offer equal to the weight
Of the child thus born.
C hariot I shall give and festival I'll conduct
The annual festival and the monthly *Kaṭṭalai*
I shall conduct
Do please grant me a good child"
Thus did she entreat and performed penance austere,
But it was of no avail
The bejewelled damsel and her maids then,
Did leave passing the thousand pillared hall,
And the *akrahāram*[12] streets as well.
Poṉṉuruvi did then reach the temple,
Of the elephant faced god
Offered she *avalaṭai*[13] to that god under the *aracu* tree
Ho! That too yielded naught and the damsel
Did then leave the place and walked further

1. *Tīrttam* - Holy tank
2 . *tōtti* - Armlet
3. The other name of Lord **Murukaṉ**
4. The other name of Lord **Murukaṉ**
5. The other name of Lord **Murukaṉ**
6. **Cuppiramaṇiyaṉ** - Another name of Lord **Murukaṉ**
7. *naṭai* - Portals of a temple
8. Kumarā - The appellations of Lord **Murukaṉ**
9. The appellations of Lord **Murukaṉ**

10. The appellations of Lord **Murukan̲**
11. The appellations of Lord **Murukan̲**
12. akrahāram - Brahmin street
13. <u>avalaṭai</u> - Pancake made of beater rice

(குன்னியமலை அய்யன்கோயில் சென்று முறையிடுதல்)

32. [1]நடந்தார் தொடர்ந்தார் கடந்தாரே பெண்கள்
[2]நல்ல தோழிய ரடப்பம் பிடிக்க
குடம்போ லத்தனத் தாருடன் காடுவிட்டு
[3]குன்னிமலை அய்யனுட கோவிலிலே வந்தார்
என்று முழுப்பாவி யாகி யிருப்பேனோ
இரங்கா திருப்ப தேன்யென் றம்புரானே
அலைவித மாகநா [4]னுன்னுடைய கோவிலில்
ஆண்பிள்ளைக் காக அலைந்தோடி வந்தேன்
பொன்னாலே வாகன [5]மும்புலிக் குட்டியும்
[6]போதர வாகவடி யாளும் வைப்பேன்
எண்ணமெல்லா மெண்ணியே யேழெட்டு நாளாய்
எகுதின படியென்று யேதுங் காணாமல்
[7]தளிர்த்த அடன்காடு சாலை [8]வழியாக
தலைதூக்கி [9]வயல் கடந்தாளே

(கன்னிக்குறிச்சி கலியுகரிடம் முறையிடுதல்)

கன்னியர்க [10]ளிருபுறமுங் [11]குரவையொலி பாட
கன்னிக் குறிச்சியில் கலியுகரைக் கண்டாள்
[12]தெண்டம் பண்ணிச் சுந்தரநாச்சியைத் [13]தொழுது
[14]திருமால் பூசைச் சிறப்பது கொடுத்தாள்
[15]கலியுக வரதர் கலியாணி தனக்கு
காணிக்கை போட்டுக் கடிதாய் நடந்தாள்.

(குழந்தை இல்லாமைக்கு, முன்னோர்கள் செய்த வினைகாரணமோ எனல்)

மான்போலே நின்று மறுகியே சொல்லுவாள்
[16]வழிநடையிலே பொன்னுருவி யம்மை
[17]பாவமோ நான்செய்த [18]பழவினைகள் தானோ
பட்டாங்கு சொல்லப் பழநூ லறியேன்
முட்டான தேசமோ முன்பிறப் பதுவோ
மூதாக்கள் சேய்த பாவமோ வற்யேன்
கட்டவே தாலி கழுத்தைக் கொடுத்தேன்
கைதொட்டுக் காவலன் சுத்திவந் ததுவோ
பட்டபா டெல்லாம் விட்டுநான் சொன்னால்
பாவியுட சொல்லை யார்[19]கேட்கப் போறார்
[20]நஷ்டம் வராதுயினி பொன்னுருவி யம்மே
[21]நாமள் சந்நதி காணுவோ மென்றாள்

(கல்மாளிகை, காரளைகோவில் சென்று தென்காசி ஊராளப் பிள்ளை வேண்டும் என முறையிடுதல்)

கருங்காடு போலே மாங்காவு சூழ
[22]கல்மாளிகைக் [23]காரளைக் கோவில் கண்டாளே
[24]ஆதியான புத்திர [25]கருக்குமா லய்யா
அடியாளு மொருபிள்ளைக் காக வலைந்தேன்
பூமருவுந் தென்காசி [26]வூராளத் தந்தால்
[27]பொற்றேரும் விட்டுநான் பூசைக்குறை தீர்ப்பேன்
தெற்பமும் கெட்டித் திருநாள் நடத்துவேன்
சிவபூசை தவறாமல் குருபூசை செய்வேன்
[28]ஆதார மாகவுன் சந்நிதி வாசலில்
ஆலித்தடிக் காரர் பொன்னால் விடுவேன்

இப்படிச் சொல்லி யிருந்தம்மை நொந்து
ஈசன் விதியென்று யெழுந்து நடந்தாள்.

(சிவபுத்தர்புரத்தில் பிள்ளையாரை வேண்டுதல்)

படுவை யில்லங்குடி வைய்யன் கோயில்
பாங்கான சிவபுத்தர் புரமதிலே வந்தார்
பேழை வயிற்றோனே ஆனைமுகத் தோனே
புள்ளயாரே நானும் பெண்புத்தி யினாலே
பித்தமீறி வந்துவிட்டேன் செத்து விடாமல்
பேணியென்னைக் காத்துஅந்த வரந்தரவும் வேணும்
[29]அஞ்சி நாளாய்த் தவசியம்மன் புரிந்து
ஆதார மாகவொரு ஆண்பிள்ளை காணாள்
தாமச மில்லையினிப் பொன்னுருவி யம்மே
தந்திர மாக்கல் வெட்டங் குழியில்

(குழந்தை தந்தால் குதிரையும், குதிரைமேல் ஆளும் விடுவேன் எனல்)

மருதுமலை யய்யனே உனது பாக்கிசம்
மலடியா யெத்தனை [30]நாளி ருப்பேன்
குடியழிவு வாராமல் குழந்தையது தந்தால்
குதிரையுங் குதிரை[31]மே லாளும் விடுவேன்
அதினாலே வொருபலனு மாயிழை காணாமல்
அய்யனுட சந்நிதி [32]யிவ்வளவோ வென்ன
கல்லுங் கரும்பனை யாறுங் கடந்து
கனகமொழி மாதர் குரவை யொலிபாட
சாயங்கால வேளைச் சமைத்தமு துண்டு
சாத்தான் குளம்புதுக் குளமுங் கடந்தாள்
ஓட்டுடையும் பட்டமாஞ் சேரி கடந்து

ஓயாதே பாதையில் [33]உட்காந் திருந்தார்
கூடியே பெண்களும் ரகசியம் பேசி
குறவனுட கண்ணாறு விசய நாராயணம்
மருதுமலை நாயனைத் துதித்தருள பணிந்து
மாயனே நாரா யணப்பெரு மாளே
அலையாத படிமாய னருளிதோ வென்ன
அமுர்தமொழி மாதர் திருவிளம் யிரங்கலையோ
விதமான விசய நாராயணங் கடந்து
வீறாயக் குளங்கரை யாறதுவும் விட்டார்
தேச மெய்க்கும் [34]உகழ் தென்கரை மாலய்யன்
தெரிசனை பண்ணவென்று சித்தூர் தன்னில்வந்தாள்.

அடப்பம் – அடைப்பம், தாம்பூலம். **தம்புரான்** – தம்பிரான், கடவுள். **அடியாள்** – அடிமையாகிய நான். **குரவையொலி** – மங்கல ஒலி. **கன்னிக்குறிச்சி** – குன்னிமலை அருகில் உள்ள ஊர். **கலியுக வரதர்** – திருமால். **தெண்டம்பண்ணி** – வணக்கம் செய்து. **தொழுது** – வணங்கி, கும்பிட்டு. **கலியாணி** – திருமகள். **காணிக்கை** – வெகுமதி. **கடிதாய்** – வேகமாய். **மறுகி** – மனம் கலங்கி. **பழவினை** – ஊழ்வினை. **பட்டாங்கு** – அறிவு, அனுபவம். **பழநூல்** – பழைய நூல். **மூதாக்கள்** – முன்னோர்கள். முதியோர்கள். **காவலன்** – கணவன். **சுத்தி** – சுற்றி என்பதன் பேச்சு வழக்கு. **நஷ்டம்** – நட்டம். **மாங்காவு** – மாஞ்சோலை. **கல்மாளிகை** – ஓர் ஊர். **ஆதியான** – பழமையான. **பூமருவு** – பூமியில் நிலைபெற்ற. **பொற்றேர்** – பொன்னால் செய்யப்பட்ட தேர். **பூசை** – ஆராதனை. **தெற்பம்** – தெப்பம், தெப்பக்குளம். **திருநாள்** – திருவிழா. **சிவபூசை** – சிவார்ச்சனை. **குருபூசை** – குருமாருக்குப் போசனங்கொடுத்தல், குருவணக்கம். **ஆலித்தடிக் காரர்** – பூதம் போன்று பெரிய உள்ளீடற்ற உருவங்கள். (இதனுள்ளே மனிதர் புகுந்து ஆடுவர்) **நொந்து** – வருந்தி. **படுவை, இல்லங்குடி. சாத்தான் குளம்** – தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஊர்கள். **புதுக்குளம், ஓட்டுடை, பட்டமாஞ்சேரி, விசய நாராயணம், சிவபுத்தர்புரம்** – சாத்தான் குளம் வட்டத்திலுள்ள ஊர்கள். **பேழைவயிற்றோனே** – பெரிய வயிற்றை யுடையவனே. **யானைமுகத்தோன்** – யானை முகத்தை உடைய விநாயகன். **புள்ளயார்** – பிள்ளையார் என்பதின் பேச்சு வழக்கு. **குதிரையின் மேல் ஆள்** – குதிரையின் மேல் ஆள் அமர்ந்திருப்பது போன்று உருவச்சிலை. **கரும்பனையாறு** – தூத்துக்குடி அருகிலுள்ள ஓர் ஆறு. **மருதுமலை** – திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஊர். **திருவிளம்** – திருவுளம், இறையின் உள்ளம்.

பா.வே. 1. நடந்தார் கடந்தார் துடந்தாரே பெண்கள் 2. நல்ல தோழிமார் 3. குள்றுமலை அய்யனுட கோவிலிலே சென்றாள் 5. புலியும் புலிக்குட்டியும் 6. புகுந்த அடியான் மகிழ்ந்தே விடுவேன் 7. தழுத்த மரம் உடங்காடு 9. நவ்வலது தான் கடந்தாரே 11. குரவை ம்முழங்க 12. தெண்டம் பண்ணி நாச்சியாரை 14. திருமாலைக் கர்ப்பூரச் சிலவது கொடுத்தார் 15. கலியுக வாசனே 17. பாவமோ முன்செய்த பழவினை தானோ 20. நட்டம் வராதம்மா பொன்னுருவி தாயே 21. நாமளும் 23. காரா வீடுகண்டாளே 24. அரிகரா புத்திரா 25. ஒருமதலை 27. பேர்விட்டுத் தேர்விட்டு 28. ஆசாரம்மாக ஒம்முடைய சன்னதியில்.

சு.சோ. 4. நானன்னுடைய 8. வளியாக 10.விருபிறமுங் 13. 'தாளுது 16. வளிநடையிலே 18. முளவினைகள் 19. கேழ்க்க 22. கல்மாழிகை 26. வூராழ 29. அஞ்சிநாழாய் 30. நாழிருப்பேன் 31. மேலாமும் 32 யிவ்வழவோ 33. உழ்காள 34. புகள்.

Representation at Ka<u>nn</u>imalai Ayya<u>n</u> kōvil

Thus the damsels walked and walked on continuously
With the maids holding the *atappam*[1]
Leaving the forest on the way, **Po<u>nn</u>uruvi**
Along with the women of *Kutam*[2] like breasts
Reached the temple of **Ka<u>nn</u>imalai Ayya<u>n</u>**[3]
"Will I ever be a sinner complete?
Oh! **Tampurā<u>n</u>**[4] why art thou merciless?
Roaming for a male child,
Have I rushed to the temple Thine,
A golden mount and a tiger cub
Shall I offer thee?"
Thus did she pray and wait for days seven or eight
But as nothing did happen as her fate would have it,
Walked she along jungle dense on the road
And passed the fields as well

Praying to Kaliyukar at Ka<u>nn</u>iku<u>r</u>icci[5]

Flanked by ululating damsels on sides both,
Did she see **Kaliyukar**[6] at **Ka<u>nn</u>iku<u>r</u>icci**
Prostrated and worshipped **Cuntaranācci**[7] there

And performed a special *pūcai*[8] for **Tirumāl**
Offered homage to **Kaliyukavaratar**[9] and **Kaliyāṉi**[10] as well
Then walked she away from there quickly

She wonders whether the past deeds of her ancestors are responsible for her barrenness

Standing like a stricken deer on her way
Dame **Poṉṉuruvi** did utter,
"Is it any sin committed in my deeds past?
I know not how to cite chapter and verse
From scriptures or lore past
Was I born in a land of dunces in my birth early?
Or have my ancestors sinned?
I know not for certain
My neck did I willingly proffer for the *tāli*[11] to be tied,
The king did hold my hand and go round at the wedding
Who would ever listen to all my sufferings undergone
If I were to speak out my mind?
Her maid did however console her,
"Oh! Dame **Poṉṉuruvi,** we won't come to grief hence
Let us see the sanctum now"

Praying at Kāraḷaikōvil for a son to rule over Teṉkāci

Then did she reach **Kāraḷaikōvil** of granite structure
Surrounded by a mango grove dense as a forest dark
"Oh! *ātiputtirā, Mālayyā*
Wandered have I for a child
If Thou but grant me a son to rule over **Teṉkāci**
A golden chariot shall I offer thee
And remove that lapse in worship thine,
A float shall I make for Thee and conduct a festival as well,
Unfailingly shall I perform *Civapūcai*[12] and *Kurupūcai*[13]

In gold shall I mould *Āḻitaṭikkārar*[14] at the entrance
Of Thy sanctum"
Thus did she entreat in anguish
And rose to walk regretting her destiny

Praying to Piḷḷayār[15] at Civaputtarpuram

Passing **Patuvai**[16] and **Illankuti Aiyaṉkōvil**[17]
They did arrive at **Civaputtarpuram**[18]
"Oh! bowl bellied God, Elephant faced deity
Oh! *Piḷḷaiyār* in a bileous daze
Have I wandered this far?
Save me from death and grant me the boon,"
Penance did she perform for full five days there
In vain without assurance any of a son for her

Offering a horse mount and a horserider as homage for a child

Oh! Lord of **Marutamalai**[19], how long shall I be a *malati?*
Is it thy will?
If Thou bestow me a child to prevent the extinction of our lineage
Offer I shall a horse mount with a rider as well,
As her prayers yielded not any result,
"Is this the power of the sanctum here?
She wondered and passed stony terrain
And crossed as well the **Karumpaṉaiyāṟu** river
As the golden voiced damsels sang in ululation,
They did cook in the evening and had their repast,
Passed they then **Cāttaṉkuḷam**[20] and **Putukkuḷam**[21]
Ōṭṭutai[22] and **Paṭṭamāñcēri**[23] also they did pass
Rested they quite often on the road,
Whispering secrets among themselves then
Thus did they proceed to worship humbly,
The Lord at **Vicayanārāyaṇam**[24],

"Oh! *Māyan*[25], **Nārāyanapperumāl**[26],
Won't *Māyan* in his mercy stop our roaming spree?
Hasn't His mind melted for our plight?
The sweet voiced damsels thus did reflect
And left **Vicayanārāyanam** and the tank and river nearby,
Walked they towards **Cittūr**[27]
To worship **Mālāyan** at **Tenkarai**

1.. *atappam* - A pouch containing betel nuts, betel leaves etc
2.. *Kutam* - A vessel
3.. The name of the deity at **Kannimalai**
4. **Tampurān** - God
5. The name of a place
6. **Kaliyukar** - The name of the deity
7. **Cuntaranācci** - The name of the goddess
8. *Pūcai* - worship
9. **Kaliyukavaratar** - Lord Tirumāl
10. **Kalyāni** - Name of the goddess
11. *tāli* - A chain or cord tied around the bride's neck at a wedding
12. *Civapūcai* - Worship of **Civan**
13. *Kurupūcai* - Feeding *Kuru* or mentor
14. *Ālitatikkārar* - A huge and hollow demon like figure. Devotees will get these figures and dance during festivals
15. **Pillaiyār** - Lord **Vinayāka**
16 -24. Name of Places and Shrines
25- 26. Other names of **Tirumāl**
27. Name of Place and Shrine

விருத்தம்

33. சித்தூர் தன்னில் வந்துஅம்மை சிவனார் மகனைச் சிந்தைசெய்து
புத்தூ ருரையு கதியானே பேதைமுகம் பாராயோ
மத்தூர் சுத்திப் பதஞ்சேவித்தேன் மலடி மறுக்கம் பார்த்திரங்கு
இத்தூரம் நான்வந் தேனய்யா யிரங்கி பிள்ளை தாருமென்றாள்.

சித்தூர்,புத்தூர், மத்தூர் – நாகர்கோவில் அருகில் அமைந்த ஊர்கள். **சிவனார் மகனைச் சிந்தை செய்து** – சிவபெருமான் மகன் முருகனை மனதில் நினைத்து. **மதியான்** – பிறைச்சந்திரனை அணிந்தவன் சிவபெருமான். **பேதை** – பெண். **சுத்தி** –

சுற்றி என்பதன் பேச்சு வழக்கு. **பதஞ்சேவித்தேன்** – திருவடி வணங்கினேன். **மலடி** – மகப்பேறில்லாதவள். **மறுக்கம்** – மனக்குழப்பம்.

Arrived they at **Puttūr**[1] holding in minds theirs
The Son of **Civanār**
"Oh! Lord who doth abide at **Puttūr**
Won't you have pity on this damsel hapless?
Wandered have I over other places and worshipped there
Have pity on the plight of this *malaṭi*
This far have I come please grant me a child

1. **Puttūr** - Name of Place and Shrine

(பொன்னுருவி எடுத்து வந்த பொருட்கள் தீர்ந்துவிட்டதால் காணிக்கைப் பொருள்களை யாரிடத்தில் வாங்குவேன் எனல்)

34. சேவித்து நாலுதெருவும் வலமாக வந்து
சேயிழையா ளவள்கோவில் முகப்பதில் சென்றாள்
கற்பூர ஆலாத்தியேந்திப் பணிமாறுங் காலம்
[1]கட்டளைப்பூசை நடத்தியபின் கிட்டவே சென்றாள்
பெண்ணுக் கிரங்கியே பிள்ளைதர வேணுங்கோவே
என்று புலம்பி யிருந்தும்பல னில்லையென்ன
அடைய கருங்காடு ஈத்தங்கரை நாடுமிட்டாள்
மட்டில்லாப் பெண்கள் [2]மதுரங்கிளி போலலைந்து
மண்ணாட்டு [3]கேட்கவே வந்திங்கொரு வரைக்காணோம்
கட்டுந் திரவியங் கொண்டுவந்த தெல்லாமழித்தேன்
காணிக்கைக்கு முதல் யாரிடத்திலும் பண்ணவோ போறாய்
வட்டிக்குவேண்டி வலக்காரம் பண்ணவோ போறாய்
வள்ளியூர் தன்னில் மலையாமல் செல்வோமம்மே
கிள்ளை மொழியர்கள் அல்லும்பகலும் நடந்து
கீர்த்தியாய்ப் பொன்முடி பாண்டியன் கோட்டை கண்டார்.

சேவித்து – வணங்கி, **சேயிழையாள்** – ஆபரணங்களை அணிந்த பெண். **ஆலாத்தி** – ஆலத்தி, ஆரத்தி. **பணிமாறும் காலம்** – பூசை செய்கின்ற நேரம். **கட்டளை பூசை** – கோயிலுக்கு என ஏற்படுத்தப்படும் தரும பூசை. **கோவே** – அரசே, **பூமண்டலம்** – பூமி. **புலம்பி** – அழுது. **இடைய கருங்காடு, ஈத்தங்கரை** – வள்ளியூர் அருகில் அமைந்த ஊர்கள். **மதுரங்கிளி** – இனிமையாகப் பேசுகின்ற கிளி. **மண்ணாட்டு** – மனக்குறை. **திரவியம்** – பொருள். **காணிக்கை** – தட்சணை. **முதல்** – மூலதனம். **வேண்டி** – வாங்கி. **வலக்காரம்** – வற்புறுத்தல். **கிள்ளை மொழியார்கள்** – கிளி போல் பேசுகின்ற பெண்கள். **அல்லும் பகலும்** – இரவும் பகலும். **பொன்முடி பாண்டியன் கோட்டை** – ஓர் ஊரின் பெயர்.

சு.சொ. 1.கட்டளப்பூசை 2. மதுரங்கிழி 3. சேழ்க்கவே.

As the provisions brought by Po<u>nn</u>uruvi have been exhausted how can she replenish them?

She did worship the Lord and go round the streets four,
The bejewelled damsel reached then the entrance of the shrines
At the prescribed of *pūcai* with camphor burnt
By way of worship,
She did perform *Kaṭṭalai*[1] worship and went near the sanctum
"Oh! Lord, have pity on this woman and pray grant a child
Roamed have I all over the earth and gone over here"
Though she did lament thus there was no response,
She left **Iṭaiyakarunkāṭu**[2] and **Īttankarai**[3] as well
The helpless damsels like sweet voiced parrots
Wandered but vainly with none to listen to their grievance
"All the articles and provisions brought by me
Have I exhausted
From whom shall I borrow hence
For offering homage
Has she to go in for a loan with interest
And persist in the mission
Let us go to **Vaḷḷiyūr**[4] intact and alive"
Thus did the parrot voiced damsels walk day and night
And reached **Po<u>n</u>muṭi Pāṇṭiya<u>n</u> Kōṭṭai**[5]

1. *Kaṭṭaḷai* - Endowed or prescribed worship
2 - 5. Name of Places and Shrines

(மனைக்கும், வாழ்வுக்கும் பிள்ளை தர வேண்டும் எனல்)

35. வட்டமிட்டு மயிலாடும் வள்ளியூர் அதிலேவந்தாள்
வள்ளியூரில் மூன்றுமுகம் கொண்டாளைத் தெண்டனிட்டு

பெண்ணுக்குப் பெண்ணேதுணை பெருவழிக் குமையேதுணை
கண்ணுக்கு யிமையேதுணை காதுக்குப்பொன் றோடுதுணை

மண்ணுக்கு மனைக்குமெந்தன் வாழ்வுக்கும் பிள்ளைவேணும்
பெண்ணிரக்கம் பார்த்திரங்கும் பூமாதே பொன்மாதே

கண்ணிரக்கம் பார்க்கவேணும் கவுந்துகொண் டிருந்திடாதே
எண்ணிரக்கம் பார்த்ததுண்டா லேழுலெட்சம் பொன்தருவேன்

சுத்தரங்கு [1]மாளிகையுஞ் சூழநல்ல திருமதிலும்
பத்திபத்தியாக நன்றாய்ப் பசும்பொன்னால் மேய்ந்திடுவேன்

அத்தியுரித் தாடைசுற்று மரனிடத்தி லமர்ந்தவளே
சுத்திவொரு வாக்குரைக்கத் தவஞ்செய்தோ மில்லையடி

வள்ளியூர் தான்கடந்து [2]வானுதல்பொன் னுருவியம்மை
ஊட்டுபத்து குமாரர்பத்து நம்பிபத்து தளவாபுலம்
பாம்பன்குளம் பழையபதி பாவைநல்லாள் தான்கடந்தாள்

(பல்வேறு துறையும் கடத்தல்)

வெள்ளைத் தலைவோருக்கு விடலைகொண்டு சொரிந்திடுவாள்
வள்ளல் குழல்நுதலாள் வந்தாள்தொட்டிச்சி குளமதிலே

திட்டுக்கல்லு நடசாலை திக்கணம்கொத்தைக் காடுமிட்டு
கொட்டுவரை மடமாது குரவையொலி முகுமுகென

வாரியூர் பாலக்குளமும் வட்டக்கோட் டைகடந்து
காரிகைபொன் னுருவியம்மை கன்னியா குமரிகண்டாள்

கண்டாள்செய்த பாவந்தீர காரிகைப்பகவதி யம்மனைத்தான்
செய்தபால தோசந்தீர தீர்த்தமாட வேணுமென்றாள்

அரிசித்துறை [3]தகட்டுத்துறை யாயிழைமார் தீர்த்தமாடி
தரிசிமணி [4]யிட்டதுறை சங்கிலித்துறை யுங்கண்டாள்

தாண்டுவாங் கயறில்தீர்த்தம் [5]தடமுலைமார் தானாடி
பண்டுபோல் பகவதியாள் பாதம் பணியவென்று

கொண்டைக்குப் பூமுடித்துக் குமிர்தவண்ணப் பட்டுடுத்து
கெண்டைவிழி ரண்டதுக்குங் கெலுவிதமாய் மையெழுதி

தண்டைசிலம் போலமிட தங்கவளை கைவீச
வண்டணியும் பூங்குழலாள் மலர்ப்பாதந் தெண்டனிட்டு

சங்கைபெறத் தென்குமரி சக்தியென்றே வீற்றிருந்தாள்
எங்கேயெல்லாந் திரிந்தேனம்மா யென்துயரந் தீருவதரிது

அங்கங்கே திரிந்ததுவும் மலைந்துநான் சடைத்ததுவும்
பங்கயஞ்சேர் பகவதியே படுமறுத்தம் பார்க்கலையே

(பொன்னுருவி வருத்தவுரைகள்)

[6]தேசமதில் கோவிலெல்லாந் திரிந்தும்பலன் காணாமல்
வாசமத்த பூவானேன் மதிலிழந்த வீடானேன்

காயமத்த வீசனானேன் [7]கரையிழந்த குளமானேன்

ஓசையத்த முரசானேன் ஊமைகண்ட கனாவானேன்
தேசமத்த யகதியைப்போல் திரிந்துவுன் னிடத்தில்வந்தேன்

(குழந்தை தந்தால் வைகாசித் திருவிழாவும் மாதாந்தரக் கட்டளையும் நடத்துவேன் எனல்)

நாயகியே நீயெனக்கு நடுவல்லவோ [8]தென்குமரி
மாயமோ யிதுவுமென்ன மரம்போ லிருப்பேனோ

[9]காசினியை யாளவொரு கைக்குழந்தை நீதருவாய்
வைகாசி [10]திருவிழாவும் மாசாந்தம் நடத்திவைப்பேன்

நேசமுட னொருபலனும் நேரிழையாள் காணாமல்
வாருமம்மா தோழியரே மறுபதிக்கே போவோமென்றார்

கன்னியா குமரிவிட்டு கவ்வைமனம் புண்ணாகி
சென்னியுற வேவணங்கி செங்கொடிவா ழய்யனைக் கண்டாள்.

வள்ளியூர் – நாகர்கோயில் அருகில் அமைந்த, மலை முருகன் கோயில் உள்ள இடம். **மூன்று முகம் கொண்டாள்** – முத்தாரம்மன் எனும் பெண் தெய்வம் மூன்று முகம் உடையவள். **தெண்டனிட்டு** – வணங்கி. **உமை** – பார்வதி. **கவுந்து** – தலை குனிந்து, கவிழ்ந்து. **சுத்தரங்கு மாளிகை** – திருமதிலின் உட்பகுதியில் அமைந்துள்ள சுற்றுமாளிகை. **பத்தி பத்தியாக** – வரிசை வரிசையாக. **மேய்ந்திடுவேன்** – மூடிடுவேன். **அத்தியுரித் தாடைசுற்றும் அரனிடத்தில் அமர்ந்தவள்** – யானைத் தோலை உரித்து ஆடையாகச் சுற்றிய சிவனிடத்தில் அமர்ந்தவள் பார்வதி. **வாணுதல்**– ஒளி பொருந்திய நெற்றியை உடையவள். **ஊட்டுபத்து, குமார பத்து, நம்பிபத்து, பாம்பன் குளம், பழைய பதி** – நாகர்கோயில் மாவட்டத்திலுள்ள ஊர்கள். **வெள்ளைத் தலைவோர்** – வெண்மையான கூந்தலை உடையவர். **குரவையொலி** – பெண்களின் மகிழ்ச்சியொலி. **தோசம்** – தோஷம்,குற்றம். **குமிர்த வண்ணப்பட்டு** – நல்ல நிறமான பட்டு. **தண்டை, சிலம்பு** – காலில் அணியும் ஆபரணம். **தங்கவளை** – தங்கத்தால் செய்யப்பட்ட வளையல், **வங்கை** – மதிப்பு. **துயரம்** – துன்பம். **சடைத்தல்** – சடைதல், கிளைத்து நெருங்குதல். **பங்கயம்** – தாமரை. **படுமறுக்கம்** – மனக்குழப்பம். **வாசமத்த பூ** – வாசமற்ற பூ. **சாயமத்த** – காயமற்ற. **சீவன்** – உயிர். **ஓசையுத்த முரசு** – ஓசையற்ற முரசு. **ஊமை கண்டகனவு** – ஊமை கண்ட கனவு பிறரிடம் சொல்ல முடியாது, **தேசமத்த அகதி** – தேசமற்ற அகதி. காசினி – பூமி. **மாசாந்தம்** – மாதந்தோறும். **மறுபதி** – வேறு இடம். **கவ்வை மனம்** – துன்பப்பட்ட மனம். **சென்னியுற** – தலைகுனிந்து.

பா.வே. 3.தவிட்டுத்துறை ஆனைநரக்கிணறும் 4.தவிட்டுத்துறை சங்கிலி மாந்துறைதனிலே 5. தான் ஆடிக்கரை ஏறி. 6. தேசமெல்லாம் அலைந்து வந்தேன் திரிந்தும்பலன் கண்டேனில்லை 8. பகவதியே.

சு.சொ. 1. மாழிகையுந் 2. வாலுதல் 7. கலையினந்த 9. காசினியை யாழவொரு 10. திருவிளாவுக்

Seeking a child for homely life

Arrived she thus at **Vaḷḷiyūr** where,
Peacock in a circle dance,
And prostrated at the feet of the Goddess three faced there
"Only a goddess can help a woman,
Umai alone is but the guide to the great path of life,
As eyelashes protect the eyes and studs support the ears
I require a son for my soil and home as well
Oh! **Pūmātu**[1], **Poṉmātu**[2] merciful towards women,
Show me sympathy and open thy eyes
Be not indifferent with your head downcast,
If only Thou show me mercy
Seven lakhs *Poṉ*[3] shall I offer Thee
Thy palace and the ramparts all around
Shall I cover with rows of sterling gold?
Oh! Damsel seated on the left of the Lord **Araṉ**
Who is clad in elephant hide skinned
Roamed we have but not performed penance enough,
To elicit good tidings any"

Poṉṉuruvi of forehead luminous
Left **Vaḷḷiyūr** and pressed subsequently
Ūṭṭupattu[4], **Kumārarpattu**[5], **Nampipattu**[6]
Taḷavāpuram[7], **Pāmpaṉkuḷam**[8] **and Paḻaiyapati**[9]
The dainty damsel did pass all their places accordingly

She passes various Tūrais[10]

She did break coconuts for the Lord abiding amidst water,
The damsel long tressed did arrive at **Toṭṭiccikuḷam**[11]
Left she the path strewn with mounts of stones
And the forest of **Tikkaṇampottai**[12] as well
With the ***Kuṟavai***[13] of the damsels resounding
Passed she **Vāriyūr**[14], **Pālakkulam**[15], and **Vaṭṭakōttai**[16]
Poṉṉuruvi the young woman did then arrive at
Kaṉṉiyākumari[17]

For all the sins of her deeds to vanish,
Did she see **Pakavati Ammaṉ**[18] there
"Let us bathe in the holy waters here
To be redeemed from our sins and foibles"
Said she and bathed at **Aricittuṟai**[19] and **Takaṭṭuttuṟai**[20]
Taricimaṇi[21] **Iṭṭatuṟai**[22] and **Cankilituṟai**[23] also she did visit
The damsels wide breasted did bathe
At the holy tanks and climbed their banks
In order to worship the feet of **Pakavati Ammaṉ**
Sporting flowers on their *Kontai*[24]
And donning bright hued silk
Lining the fishlike eyes both with eye paint elegant,
Her anklets in resonance and waving her golden bangles
The damsel with flowers in tresses hers,
Did prostrate at the flowery feet of (the Goddess)
And felt that only the **Cakti**[25] of **Teṉkumari**[26]
Would provide her due respect. (in society)
"How many places have I roamed about
To have my grievance redressed?
My wanderings here and there and the vexation thereof
Oh! Lotus borne **Pakavati**, Thou hast not seen
That confusion mine

Po<u>nn</u>uruvi's sad utterances

"Going round temple all over the country
Have I become a flower without fragrance?
Like a house with its ramparts pulled down am I
Life without a mortal frame I have become
And a tank without a bund
A mute drum have I become and a dumb one's dream
Like a refugee without a country of his own
Have I wandered and sought you at last"

If a child is granted I shall conduct the *Vaikāci* festival and perform the monthly *kaṭṭalai* as well

"Oh! **Nāyaki**[27] aren't you neutral and fair to me?
Or is it the illusion caused by **Te<u>n</u>kumari**?
Am I to remain a barren tree forever?
Grant me but an infant to rule over the world
I shall conduct the *Vaikāci*[28] festival
And the monthly *Pūcai* as well"
As there was no response to her pleadings,
The aggrieved damsel was further hurt,
And said "Oh! My companion maids
Let us go to another place"
Thus they did leave **Ka<u>nn</u>iyākumari**
And did bow their heads in prayer
To the Lord abiding at **Ceṅkōttai**[29]

1. *Pūmātu* - Descriptive appellations of the goddess (Flower like and golden damsel)
2. *Pō<u>n</u>mātu* - Descriptive appellations of the goddess (Flower like and golden damsel)
3. *Po<u>n</u>* - Gold coin

4 -9. Names of Places	
10. *Turai*	- Tank band with flight of steps
11-12. Name of Places	
13. *Kuravai*	- Singing in a chorus
14 -16. Name of Places	
17. **Kanniyākumari**	- The lands end of India at the southern tip at the confluence of three oceans famous shrine of **Kumari**
18. **Pakavati amman**	- Name of a Hindu Goddess
19 - 23. Name of Places	
24. *Kontai*	- Hair do in a coil
25. **Cakti**	- *The gracious power*
26. **Tenkumari**	- The goddess **Kannyākumari**
27. **Nāyaki**	- Vocative of a goddess (Oh! Heroine)
28. *Vaikāci*	- The name of a month in Tamil Calendar
29. **Cenkōttai**	- Name of Place

விருத்தம்

36. [1]முன்னா ளென்னைப் படைத்தபடி முழுதும் பாவி யானேனையா
[2]இன்னா ளறிந்தே னில்லையென்று யேங்கி முகமு மிகவாடி
சொன்னான் சோத்யன் சாஸ்த்திரத்தைத் துணிந்து முன்னூல் பாராமல்
அன்னாள் கருவி லமைத்தபடி யல்லாமல் வருமோ யெனநடந்தாள்.

பாவி – பாவம் செய்தவள். **சோஸியன்** – ஜோசியன் – சோதிடர். **சாஸ்திரம்** – சோதிடப்புத்தகம். **முன்னூல்** – பழைய நூல்.

க.சொ. 1. முன்னாழென்னை 2. இன்னாழறிந்தே.

“Out and out a sinner have I become
As destined at my creation previous
I have not realized it yet” she pined
With her face in grief withered
“Unless my horoscope cast by the astrologer forecasts it
How can I conceive and get a child”
Said she and walked further

(பொன்னுருவி தெய்வேந்திரன் சுனை, ஒட்டன் கோவில், ஈத்தங் காட்டு மடம் சென்று தவம் செய்தல்)

37. நடந்தாள் கடந்தாளே பொன்னுருவி யம்மை
நன்னுத லார்கள் குரவைகள் பாட
தந்திர மாக [1]வழிநடந் தேதான்
[2]தானவளுங் கொட்டாரத் தூரு கடந்தாள்
அச்சங் குளத்துட னுச்ச மலையும்
ஆண்டா ருடமடம் வந்து கண்டாளே
கண்டந்தப் பொன்னுருவி யம்மையுந் தோழியும்
கட்டுடனே தெய்வேந்திரன் சுனையில் வந்தாள்
தெய்வேந்திர சுனையில் தீர்த்தமு மாடி
சிறப்புடனே [3]வந்தவளுந் தவமி ருந்தாள்
அதிநாலே வொருபசனு மாயிழை காணாமல்
தொட்டிப் பாலம்விட்டுச் சாலை வழியாகத்
துரிதமுட னொட்டன் கோவில் விட்டாள்
ஏழுதோழிமா ருடனே சாலை விட்டாள்
ஈத்தங் காட்டு மடம்வந்து கண்டாளே
வாகுபெறு தோழியருஞ் சாலை வழியாக
வழுக்கன் பாறையதுவும் வந்து கண்டாளே
மூங்கிலடி யிசக்கியம்மை கோவிலிலே வந்து
முப்பது [4]நாளாகத் தவசி புரிந்தாளே

('கூலிக்குப் பிள்ளை கொடு' என்று பொன்னுருவி வேண்டுதல்)

அதிளாலே வொருபலனு மாயிழை காணாமல்
அழகுடனே உப்பாறு தானுங் கடந்தாள்
மூங்கி லடியில் முளைத்த பெருமாளே
முழுது மலடியென்று வைத்த தென்ன

கைக்குழந்தை கொண்டு கணவன் முன்னே
காசினிதென் காசியிலே நான்போன துண்டால்
ஆண்டில் ரண்டு திருநாள் நடத்தி
அடியான் திருநாமப் பேரு மிடுவேன்
கூலிக்குப் பிள்ளை கொடுப்பாய் நீயய்யா
கும்பிட்ட கைரண்டுங் கூழயாய்ப் போச்சே
ஆமட்டுஞ் சொல்லி யழுது புலம்பி
அடையனே முத்திரி கிடையாமல் போனாள்
முழுதுநான் பாவியோ முன்சேய்த குறையோ
மூன்றுநாலு மாச மிப்படி யலைந்தேன்
தோழியர்தன் கூடவே பொன்னுருவி யம்மை
தோகையருங் கோட்டாறுப் பட்டணங் கண்டாள்.

(நாஞ்சில் நாட்டின் பெருமையைக் கூறல்)

மோருக்கு [5]முத்தளக்கும் நன்னாஞ்சி நாடு
முதியோர்கள் தங்கள்மொழி மறவாத நாடு
பாருக்குள் நெறிமுறை யுள்ள[6]புகழ் நாடு
பஞ்சவர்கள் [7]முன்னாளி லாண்டதொரு நாடு
காரு பிசானமும் விளையுமந்த நாடு
கவிஞோர்கள் கலிதீர்க்கும் [8]நாஞ்சிவளர் நாடு
பேரான மும்மாரி பெய்யுகின்ற நாடு
பெருமையது கூறத் துலையாத நாடு

(மனையாளவும், தேசமாளவும் மகனைத் தந்தால் வில்லுந் திருவுருவும் தருவேன் எனல்)

சோதனை யோயென் முகம்பார்த் தேது
சொல்பெரிய மாயனே நாரா யணனே

பேடை மயில்போல் அலைந்து திரிந்தேன்
பேடியா யுன்னுடைய கோவிலிலே வந்தேன்
சடைவு வைத்து நீ தள்ளி விடாதே
[9]சண்டாளப் பேய்தனைக் கும்பிட்ட பாவம்
[10]வாணாள் குறைந்து மதிகெட்டுப் போனேன்
மனையாள [11]ஒருமகனைக் கண்ணிலே காணேன்
[12]தேச மாளவொரு சிறுமதலை தந்தால்
சிங்கார வில்லுந் திருவுருவும் விடுவேன்
ஆனைமேல் பேரிகை பொன்னால் தருவேன்
ஆண்டவா வுன்பாதம் தந்தனுப்பு மையா
தப்பாமல் சந்நிதியி லிப்படித் திரிந்து
தலையி லெழுதின படியே யலைந்தேன்
பொற்புடைய பொன்னுருவி யிப்படி புலம்ப
பூவைநறுந் தோழியரே வாருமென்று போனாள்.

நன்னுதல் – நல்ல நெற்றி. **சுனை** – நீருற்று. **தீர்த்தமாடி** – நீராடி. **ஆயிழையாள்** – தேர்ந்தெடுத்த ஆபரணங்களை பூண்டவள். **துரிதம்** – சீக்கிரம். **தவசி** – தவசு. **திருநாள்** – திருவிழா. **திருநாமப்பேர்** – இறைவனின் பெயர். **கூழயாய்** – கூழையாய். குட்டையாய். **முத்திரி** – முத்திரை. **நாலு மாசம்** – நான்கு மாதம். **அலைந்தேன்** – திரிந்தேன். **பார்** – உலகம். **பஞ்சவர்கள்** – பஞ்ச பாண்டியர் என்று அழைக்கப்படும் ஐவர் ராசாக்கள். **காரு** – கார் நெல், **பிசானம்** – ஒரு நெல். **கலி** – வறுமை. **மாயன்** – திருமால். **பேடைமயில்** – பெண்மயில். **சடைவு** – மனத்தளர்ச்சி. **சண்டாளப்பேய்** – துரோகப்பேய். **வாணாள்** – வாழ்நாள். **மதிகெட்டு** – அறிவு கெட்டு. **சிறுமதலை** – சிறுபிள்ளை. **திருவுரு** – உருவ பொம்மை. **பேரிகை** – முரசு. **சந்நிதி** – மூலஸ்தானம். **பொற்புடைய** – அழகுடைய. **புலம்ப** – சொல்ல.

சு.சொ. 1. வளிநடந்தே 2. தானவழுங் 3. வந்தவகுந் 4. நாழாக 5. முத்தழக்கும் 6. புகள்நாடு 7. முன்னாழில். 8. நாஞ்சி வழர்நாடு 9. சண்டாழ 10. வாணால் 11. தொரு மகனைக் 12. தேசமாழ.

Ponnuruvi goes to Teyvēntiran cunai[1], Ottankōvil[2] and Ittankāttumatam[3]

Ponnuruvi walked and passed places several
With her maids singing *Kuravai* in achorus
Walking by gingerly on her way
The damsel did pass **Kottārattur**[4]
Accankulam[5], **Uccamalai**[6] **and Āntārmatam**[7] also
Did she visit on her way,
And along with her maids,
Arrived she at **Teyvēntiran cūnai**
Where she bathed and did perform austerities
Still she did not have benefit any,
The bejewelled damsel left **Tottippālam**[8]
Walked she quite fast and passed **Ottankōvil** too
She did reach **Ittankāttumatam**
Walked along the road with her companion proper
And did sight **Valukkanpārai**[9] on her way
Reached she **Mūnkilati**[10] where
At the temple of **Icakkiyammai**[11]
She did perform penance rigorous for full thirty days

Ponnuruvi offers wages to the Lord for a child

As the penance did not yield result any
The damsel did cross *uppāru*[12]
"Oh! **Perumāl**[13] who hath emerged at **Mūnkilati**
Why am I destined to be totally barren forever?
If only I were enabled to bear a child,
Two festivals per annum shall I conduct
For thee and the child will also
Be named after you
Oh! Lord grant me a child for wages in exchange,
Lo! My hands both have been worn out in worship"

Thus did she lament and cry utmost
But no positive signal did she get,
"Am I a sinner complete or is it a misdeed previous
Roamed have I for three or four months like this"
Thus lamenting did **Ponnuruvi** along with her maids
Did arrive at **Kōṭṭāṟuppattanam**[14]

Describing the greatness on Nāñcilnātu

Such a good country is **Nāñcilnātu,**
As pearls are bastered there for butter milk,
Where the elders forget not promises theirs
A country famed for its codes proper in the world
The land ruled in days of yore by the **Pāntiyā** kings five,
Where ***Kār***[15] and ***Picāṇam***[16] crops grow in fields,
A country, which relieves the poets of their distress destined,
Where it rains thrice a month,
A country which can boast of indescribable pride

If a child is granted to rule over the home and the country I shall offer a bow and an idol

"Is this a test rigorous? Oh! **Periyamāyaṉ**[17]
Nārāyanaṉ[18] do tell me
Have you but seen my face ever?
Wandered have like a peahen frantic,
And now have arrived at temple Thine
Like a *pēti*[19] wretched,
Leave me not in the lurch in displeasure Thine,
Having sinned in worshipping devils spurious,
Lessened is my life span and a nitwit have I become
Unable am I to see a child at home
If thou but bestow me an offspring to rule over the country,
I shall offer thee an elegant bow and an icon as well,
A drum made of gold on an elephant I shall give,

Oh! God shelter me in the grace of Thy feet
Wandered have I as per destiny mine
Sanctum after sanctum without fail in vain"
Thus did **Ponnuruvi** the dainty damsel lament
And did urge her maids to leave the place

1. **Teyvēntiran Cuṇai** - The name of a holy pond
2 - 10. Name of Places and Shrines
11. **Icakiyammai** - Name of Goddess
12. *Uppāṟu* - Name of a river
13. **Perumāl** - At Mūnkilati the icon of this God emerged by itself and not installed by anyone
14. Name of Place
15. ***Kār*** - The first crop of paddy (short term crop)
16. ***Picāṉam*** - The second crop of Paddy (long term crop)
17. Appellation of Lord **Tirumāl**
18. Appellation of Lord **Tirumāl**
19. *Pēṭi* - Coward

(நாகரம்மன் கோவிலில் தவசிருந்து பலன் காணாமல் பத்மநாபபுரம் செல்லுதல்)

38. நடந்தந்தப் பொன்னுருவி நாகரம்மன் கோவில்கண்டாள்
தீர்த்தமாடி மாத்துடுத்து [1]சேயிழையாள் தவசிருந்தாள்
அதினாலே வொருபலனு மாயிழையுங் காணாமல்
வாருமம்மா சோழியரே மறுபதிக்கே போவோமென்றாள்
சேயிழையுந் தோழியரும் செட்டிகுளந் தான்கடந்தார்
ஆட்டுவாணியர் மடமும் ஆயிழையாள் தான்கடந்து
நடந்துகடி தாகவேதான் நடுக்காட் டிசக்கி
இசக்கியம்மன் கோவிலிலே இருந்தாளே யருந்தவசாய்
இருந்தும்பலன் காணாமல் இனிப்போவோந் தோழியரே
பாவையர்க ளெழுந்திருந்து பஞ்சவர்கள் காடுமிட்டாள்
பரபரென வழிநடந்து பார்பதியா [2]ளகரமிட்டாள்
சோறுபல காரம்விக்கும் சுங்கன் கடையுமிட்டு

சுங்காள் கடையுமிட்டு துறட்டிகொட்டு மடமுமிட்டு
விறுவிறெனத் தானடந்து வில்லுருதி யுங்கடந்து
பேடைமயில் மாதுநல்லாள் புலியக்குறிச்சி விட்டாள்
பாவையருந் தோழியரும் பல்பநாபபுரம் வந்துகண்டாள்.

மாத்தடுத்து – மாற்று ஆடையணிந்து. **சேயிழையாள்** – ஆபரணம் பூண்ட பெண். **தவசி** – தவசு. **மறுபதி** – மறுஇடம். **செட்டிகுளம். ஆட்டுவாணிர் மடம்** – கன்னியாகுமரி மாவட்டம் தக்கலைக்கும் சுங்கான்கடைக்கும் இடையிலுள்ள ஊர். **சடிதாக** – விரைவாக. பாவையர் – பெண்கள். **நடுக்காட்டிசக்கி.** பஞ்சவர்கள் காடு, பார்வதியாளகரம், பர்வதிபுரம் – நாகர்கோவிலிருந்து மூன்று கி.மீ. தொலைவிலிலுள்ள ஊர்கள். **சோறு** – அன்னம், உணவு. **பலகாரம்** – தின்பண்டம். **விக்கும்** – விற்கும் என்பதின் பேச்சு. வழக்கு. **சுங்கான்கடை, துறட்டி கோட்டு மடம், வில்லுருதி, புலியக்குறிச்சி** – நாகர்கோவிலிருந்து பல்பநாபபுரம் போகும் வழியில் உள்ள ஊர்கள். **பேடைமயில்** – பெண் மயில். **விட்டாள்** – கடந்தாள். **பல்பநாபபுரம்** – பத்மனாபபுரம். தக்கலையின் அருகே உள்ள ஊர்.

சு.சொ. 1. சேயிளையான் 2. முகரமிட்டாள்.

Performing penance at Nākaramman temple in vain and leaving for Palpanāpapuram[1]

Walked she and reached **Nākaramman kōvil**[2]
Bathed she in the holy tank there and penance as well performed
As she did not gain any thing thereby
"Let us move to the next shrine" said she
Thus did the damsel and he maids pass **Cettikkulam**[3]
Āttuvāṇiyarmaṭam[4] also they passed next
Walked fast to the **Icakkiamman Kōvil**[5] at **naṭukkāṭu**
Rigorous penance did she perform there
Without positive benefit any
Then the damsels all passed **Pañcavarkāṭu**[6]
Hurried she with steps quick to **Pārpatiyāḷakaram**[7]
And reached **Cunkankaṭai**[8] where food and snacks are sold
Leaving there and passing **Turattikōttumaṭam**[9] as well,

Walked she vigorously an did pass **Villuruti**
The nice damsel resembling a peahen,
Did leave **Puliyakkuricci**[10]
And arrived at **Palpanāpapuram** along with her maids

1 - 10. Name of Place and Shrines.

(பத்மனாபபுரம் பெருமாள்கோயிலில் தவசிருந்து பலன் கிடைக்காமல் வேறு தலம் செல்லுதல்)

39. பல்புநாபப் பெருமாளுட கோவில்நடை தனில்வந்து
பாவை நல்லாள் பொன்னுருவி யம்மை
தென்காசி [1]நாடாள சிறுவனைநீ தந்ததுண்டால்
தேரது பொன்னால் முகித்து வைப்பேன்
வருஷமொரு திருவிழாவு மாசாந்த கட்டளையும்
வச்சிர மணிமேடை செய்து வைப்பேன்
என்றுசொல்லிப் பொன்னுருவி யிருந்தாள் அருந்தவசாய்
[2]ஏந்திழை யாளும் பலன்கா ணாமல்
வாருமென்று தோழியரைக் கூட்டிக்கொண்டு தாயாரும்
வாய்த்த மேலக் கோட்டைகடந் தாரே
சேரவே வழிநடந்து [3]சேயிழையுந் தோழியரும்
திருவட் டாறு தான்கடந் தாரே.
ஈஸ்பரன் செயலெனவே இலந்தையம் பலங்கடந்து
ஏத்த [4]களியக் காவிளை விட்டார்
குருபரன் [5]செயலெனவே கோதையருந் தோழியரும்
[6]குளித்துறை யாறுகடந் தாரே
பாவையருந் தோழியரும் பாரச்சாலை யுங்கடந்து
பாலைவழி யாகநடந் தாரே
[7]நேரிழையுந் தோழியரு மோடிவோடி யேநடந்து

நெய்யாற்றங் கரைகடந் தாரே
விணிஞத்தூர் தான்கடந்து மெல்லியருந் தோழியரும்
வீறுடனே நேமங்கடந் தாரே
காட்டூர் தனைக்கடந்து கரமனை யாறுமிட்டு
காரிகையாள் பொன்னுருவி யம்மை
சாலைக் கடைகடந்து தையலருந் தோழியரும்
சந்தோசமாய்த் திருவனந்தா புரம்வந்து கண்டாரே.

நடை – வாயிற்புறம், **முகித்து** – முடித்து. **மாசாந்தரக் கட்டளை** – மாதந் தோறும் நடைபெறும் சிறம்பு பூஜை. **வச்சிரமணிமேடை** – வயிரக்கல்மேடை. **ஏந்திழை** – பெண். **திருவட்டாறு** நாகர்கோயிலிருந்து கி.மீ தொலைவில் உள்ள ஊர். சங்கப்புலவர் இவ்வூரை வளநீர் வாட்டாறு என்று குறிப்பிட்டுள்ளனர். **இலந்தையம்பலம்** – திருவட்டாறு அருகில் உள்ள ஊர். **களியக்காவிளை, குளிக்குறை. பாரச்சாலை. நெய்யாற்றங்கரை. விணிஞத்தூர், நேமம், காட்டூர் கரமனை** – பத்மனாபபுரத்திலிருந்து திருவனந்தபுரம் செல்லும் வழியில் உள்ள ஊர்கள்.

க.சொ. 1. நாடாழ 2. யேந்தினை 3. சேயிளையும் 4. கழியங்கா 5. சியலெனவே 6. குழித்துறை 7. நேரிளையுந்.

Her penance at Palpanāpapuram does not yield anything and she leaves for other shrines

Reached she the aisle of **Palpanāpapuram** temple,
Ponnuruvi the good dame did offer there,
If thou but grant me a boy to rule over **Tenkāci**
I shall provide thee with a chariot in gold
A festival every year and the monthly *Pūcai* as well
And a diamond dais to boot shall I offer thee
Thus did **Ponnuruvi** declare and austere penance performed
As there was no response favourable
"Let us go " said she to her maids
And passed then **Mēlakkōṭṭai**[1] as well en route
Walked they all together, the damsel and maids

Did then leave **Tiruvaṭṭāṟu**[2]
Deeming her plight as the will of God,
They did pass **Ilantaiyampalam**[3] and **Kaliyakkāvilai**[4]
Reflecting that it was all the work of *Kuruparan*[5]
The damsel and her companions did cross the river
At **Kulitturaiyāṟu**[6]
Passing **Pāraccālai**[7] then the young woman and her maids
Did walk along the road
The bejewelled damsel and her maids
Did walk at a running pace
And passed **Neyyāttankarai**[8]
Then did they pass **Viniluttūr**[9]
The damsel slim and her companion's
Passed **Nēmam**[10] with vigour great
Leaving **Kāttūr**[11] and passing **Karamanaiyāṟu**[12] as well
Ponnuruvi and her friends did pass
They did then gladly arrive at **Tiruvanantapuram**[13]

1 - 4. Name of Place and Shrines.
5. **Kuruparan** - God
6 - 12. Name of Place and Shrines.
13. **Tiruvananthapuram** - The capital city of **Kēraḷā** State

(திருவனந்தபுரம் பெருமாளிடம் பொன்னுருவி பிள்ளையில்லாமைக்கு என்னதவறு செய்தேன் என்று கேட்டல்)

40. திருவனந்த புரத்தில்வந்து [1]சேயிழையாள் பொன்னுருவி
சிவபெருமான் தன்னைக் கண்டுஅடி வணங்கிநின்றாள்
அமுர்தமுண் வாயழகி பொன்னுருவி யம்மை
ஆயிழையாள் மனத்துயரஞ் சொல்லவே வாய்திறந்தாள்
தென்காசி [2]நாடாள யென்றன் பெருமாளே
சிறுவன்தரா திருப்பதென்ன யெந்தன் பெருமாளே
கொத்தைக் குறைத்தேனோ [3]யெந்தன் பெருமாளே

[4]குறைமரக்கால் வைத்தேனோ யெந்தன் பெருமாளே
பிச்சைக்கு வந்தவரை யெந்தன் பெருமாளே
பின்னேவரச் சொன்னேனோ யெந்தன் பெருமாளே
[5]பட்டறையில் நெல்லதிலே யெங்கள் பெருமாளே
பதரையள்ளிக் கலந்தேனோ யெங்கள் பெருமாளே
[6]நிறைய விளைந்ததிலே யெங்கள் பெருமாளே
நீர்ச்சாவி கலந்தேனோ யெங்கள் பெருமாளே
வைத்தவ ரடைக்கலத்தை யெங்கள் பெருமாளே
வயிறெரியப் பண்ணினேனோ யெங்கள் பெருமாளே
கோவிலுள்ள வுடைமைகளை யெங்கள் பெருமாளே
கொள்ளையிட்டுக் கொண்டேனோ யெங்கள் பெருமாளே
காணாமல் [7]குளங்கரையை யெங்கள் பெருமாளே
கருதிவெட்டி முறித்தேனோ யெங்கள் பெருமாளே
காணாத தேசமெல்லா நானலைந் தேனையா
[8]கைக்குழந்தை தாருமய்யா யெங்கள் பெருமாளே
உண்டுமென்று மில்லையென்று மெங்கள் பெருமாளே
ஒருவார்த்தை சொல்லிவிடு மென்றாரே.

திருவனந்தபுரம் – இன்றை கேரள மாநிலத்தின் தலைநகர் நாகர்கோவிலிலிருந்து 82 கி.மீ. தொலைவில் மேற்கே உள்ளது. திருவிதாங்கூர் வரலாற்றுடன் தொடர்புடையது. **அமுதகுண வாயழகி** – அமிர்தம் போன்ற வாயையுடைய பொன்னுருவி. **கொத்து** – உணவு. **மரக்கால்** – தானியங்களை முகந்தளக்கும் கருவியினொன்று. **பட்டறை** – தானியம் குவித்து வைக்கும் இடம். **பதர்** – சப்பட்டை, உள்ளீடற்ற நெல். **நீர்ச்சாவி** – வெள்ளக் கெடுதியால் உண்டாகும் நெற்பதர். **அடைக்கலம்** – அடைக்கலப்பொருள், ஒப்புவிக்கப்பட்ட பொருள். **உடமை** – பொருள்.

பா.வே. 3. எங்கள் பெருமாளே 8. அருள்மதலை.

ச.சொ. 1. சேயிளையாள் 2. நாடாழ 4. குறமரக்கால் 5. பட்டறயில் 6. நிறய 7.குளங்கரயை.

Ponnuruvi entreats the Perumāl at Tiruvanantapuram

Arriving at **Tiruvanantapuram** the damsel **Ponnuruvi**
Did stand before **Civaperumāl**[1]
Offering worship at his feet,
Dame **Ponnuruvi** the nectar mouthed beauty
Did open her mouth to express her mental anguish
Oh! My **Perumāl**, why haven't Thou
Given me a boy to rule over **Tenkāci**

What blunders have I committed to be barren without a child?

Have I short measured the **Kottu**[2] Oh! My **Perumāl**
Have I short measured with the ***Marakkāl***[3], my **Perumāl**
Did I send back those who sought alms Oh! My **Perumāl**
And asked them to come later Oh! **Perumāl**
At the binstorming paddy did I mix chaff Oh! My **Perumāl**
Or did I blend *Nīrccāvi*[4] along with grains
Abundantly yielded as produce, Oh! My **Perumāl**
Have I with articles mortgaged played false, Oh! **Perumāl**
And made the mortgagors fume in despair bitter ?
Did I ever plunder the belongings of temples **Perumāl**
Have I demolished any tank bund Oh! **Perumāl**
By breaching it my **Perumāl**
Roamed have I over hitherto unseen lands oh! Lord,
Oh! My **Perumāl** bestow me but an infant
Do tell me but one word Oh! **Perumāl**
Be it yes or no"
Thus did **Ponnuruvi** plead

1. **Civaperumāl** - Lord Civan
2. *Kottu* - A measure
3. *Marakkāl* - Volumetric measure used for measuring grains
4. *Nīrccāvi* - Grains damaged by floods

(பொன்னுருவி தவசிருச்து பலன் கிடைக்காமல் தன்னூருக்குத் திரும்புதல்)

41. வாருமம்மா தோழியரே வாழ்பதிக்கே போய்விடுங்கோ
இருந்ததினால் பலனுமில்லை இறந்திடுவேன் மலையதிலேபோய்
கடலதில்போய் விழுந்தாலுங் கடலுங்கைக் கொள்ளாதே
நஞ்சுதின்று செத்தாலும் நாட்டிலுள்ளோர்க் கேறாது
அப்போது தோழியர்க ளவரேது சொல்லுவாராம்
செத்தாலு முன்னோடே சேர்ந்தாலு முன்னோடே
[1]இருந்தாலும் முன்னோடே யிறந்தாலு முன்னோடே
வாழ்ந்தாலு முன்னோடே மடிந்தாலு முன்னோடே
என்றுசொல்லித் தோழியரு [2]மேந்திழையும் வழிநடந்தாள்
வடக்குமலை [3]மேருதன்னில் வந்துமலை [4]வளம்பார்த்தார்

வாழ்பதி – மக்கள் வாழ்கின்ற இடம். **நஞ்சு** – விஷம். **செத்தல், மடிதல்** – இறத்தல். **ஏந்திழை** – பெண். **வடக்குமலை** – வடதிசையில் உள்ள மேருமலை.

பா.வே. 1. இறந்தாலும் உன்கூடே யிறப்பதேயல்லாமல்

சு.சொ. 2. மேந்திளையும் 3. மேற்வுதன்னில் 4. வழம்பர்த்தர்.

Ponnuruvi returns home as her penances are of no avail

Said **Ponnuruvi** then,
"Come along my companions dear,
You may go to your place native,
For me it is of no use to live,
Die I shall on the mountain,
Even the sea won't take me if I drown therein,
My country folk won't accept,
If my life end by poison consumed"
As **Ponnuruvi** did speak thus her maids did reply,
"Live or die we shall only along with you,

Let us sink or sail but together"
Declaring thus the maids and the damsel,
Did walk on their way,
And arrived at **Mēru**[1] the mountain in the north,
And looked at nature's fertility there

1. **Mēru** - The name of a legendary mountain in the north

(மேரு மலைச் சிறப்பு)

42. மயிலாடுங் குயில்கூவும் மருதுணிகள் பூக்கும்
மந்திகருங் குரங்கினங்கள் சிந்தமல ரெறியும்
வடகாவு நடுவாவி மழைமார் பொழியும்
வாடைதென்ற லூடாட வான்சோலை காவும்
கண்ணாடிச் சோலைகளுங் காவுகளுங் கடந்து
காவுதனி லாரியங்கா வய்யனைத் தொழுது
பெண்ணரசி பொன்னுருவி கன்னியர்க ளோடே
போகவட காவுதன்னில் மகிழ்ந்தவர் கடந்தார்.

(தோழிகளுக்கு மலையைப் பற்றிப் பொன்னுருவி கூறல்)

[1]சொல்லரிய மலையிலுள்ள நல்லருமை யெல்லாம்
சொல்லுகிறேன் கேளுமடி தோழியரே யென்றாள்
பளிங்குநிலந் தனிலேவந்து பொன்னுருவி யம்மை
[2]பாதாள வாசல்கண்டு பயந்துநின்று சொல்வாள்
ஏழை விதியோ யெழுத்துவிதி தானோ
எல்லாரு மலைதனிலே இறக்கவேன்றோ வந்தோம்
மலையிலந்த வாழ்மிருகம் [3]வாய்பிளந்து நிற்க
மலடிதன்னைத் தின்பதுக்கு வருகுதேடி தோழி
மலையிலுள்ள குறவரிங்கே வழிவரவுங் காணோம்
மட்டுத்தப்பாய் பண்ணிப்போடு மலையிலிந்த மிருகம்

உம்பளனாய் வேலைகொண்டு சம்பள மில்லாமல்
உயர்மலைக்குள் வந்துநமக் கலைவித முண்டாச்சு
கருதி மனந்தான் கலங்கிவொருத்தி வந்தாளிங்கே
கருமலையில் கடுவாய்புலி தின்றுவிடுந் தோழி
அலம்பலில்லை சடைக்குவந்த அலைவிதமு மில்லை
ஆச்சுதெடி மலைக்குள்வந்த பூச்சியங்க ளெல்லாம்
விம்மிவிம்மி யழுதழுது பொன்னுருவி யம்மை
விதியின்பயனோ பிரமன் விட்டகுறை தானோ

(மந்தியின் விளையாடல்)

அருமையிமன் கனிவாய் திறந்துசொல்லு முன்னோ
அருகிருந்த மந்திகையைத் [4]தட்டிச் சிரித்தேதான்
பருவலையி லுயர்ந்தமரம் பாய்ந்துகுதித் தேறி
பழுத்தகனி தனைப்பறித்தே [5]பாலனேன்றே யிடுக்கி
சிரித்துக்கொண்டு [6]மந்தியுந்தான் சிறுவனான கனியை
சிநேகமுடன் [7]தின்னசென்று அம்மைகையில் கொடுக்க
மந்திகையால் கனிவாங்கிப் பொன்னுருவி யம்மை
மலடிமுகம் பார்த்துனக்கு [8]மனதிரக்க மாச்சோ
கவலையில்லை யினிநமக்குக் கவ்வையொன்று மில்லை
கடந்தோங்கு மாமலையுங் [9]காவுகளு மிட்டு
குமடுகளுந் தடவரையிங் [10]சூகையாறு மிட்டு
குறவர்குடில் நோக்கியவர் கெருவிதமாய் நடந்தார்.

(பல்வேறு மலைகளைக் கடந்து செல்லுதல்)

[11]சாய்வுமலை சருகுமலை சந்தனவாழ் மலையும்
தவசிமுனி யோர்கள்மலை [12]சன்யாசி மலையே
காவுதோறுங் காவிமயில் கவிபாடு மலையே

கருமலையில் சென்றேறி காரிகைமார் வரவே
வழிவரப்பொன் னுருவியம்மை வாய்த்த [13]துட்டமிருகம்
மங்கையரைக் [14]கண்டுநின்று மாறிவிழுந் தோட
அசையாத [15]மனமுடையாள் பொன்னுருவி யம்மை
அய்யோனான் [16]பாவமது செய்தேனோ சிவனே
பொல்லாதாள் நான்பாவி பிறந்துவளர்ந் தேனோ
பொற்கொடியாள் பொன்னுருவி புலம்பிவழி நடக்க
பிள்ளையில்லாப் பாவிதன்னைக் கொன்றாலும் பாலம்
[17]பிழைக்கும்படி [18]மலைமிருகம் மிளைத்துவிழுந் தோட
தின்றாலுஞ் சிவன்றனக்கு யேறாது [19]யென்று
தெய்வமலை [20]மிருகமது பிறங்காணித்து நிற்க
மற்றுமொரு மாமலையில் மங்கைவிரைந் தேற
மடிபிடியாய் கைப்படித்து மலையில் கொண்டு போனாள்.

குறப்பெண்கள் கொடுத்த உணவுகள்

கொடுபோய்க் குறப்பெண்கள்தான் கொடியிடைமார் தனக்கு
குத்தியில் தேன்கரும்புடனே சர்க்கரையும் கொடுத்தாள்
பருத்த [21]பலாக்கனியுடனே பருவாழைக் கனியும்
[22]பரபரப்பாய் சிறுகிழங்கும் பிடிகிழங்குங் கொடுத்தாள்
[23]கொடுத்தவகை தனைவாங்கிக் கொடியிடைமா ரருந்தி
குடிலுக்கப்பால் பருத்தமரம் [24]குளிர்ந்த நிழலதிலே
இருத்திவைத்துக் [25]குறப்பெண்கள்தா [26]னேந்திழைமார் தனக்கு
அரியதொரு அடக்காயும் பழுத்திலையும் கொடுத்தார்.

(குறத்தி குறி சொல்ல வேண்டிய பொருட்களைக் கொண்டு வருதல்)

தரந்தரமே தின்றவர்கள் [27]தங்கள்மன மகிழ்ந்து
தயங்காதே உந்தன் மனத்தின் கவலை தீரும்

[28]நிறைநாழி நெய்விளக்கு கொடுவாடி மகளே
நினைத்த [29]குறி சொல்வேனா னுன்கவலை தீர
தலைமெழுகிக் கோலமிட்டுத் தக்கமலர் போட்டு
தந்திமுகத் தைங்கரனைத் தனக்கெதிரே வைத்து
[30]விடலைபொரி யவல்தேனு மிக்கபய றெள்ளும்
விதம்விதமாய் முன்பதிலே வேறுவிதமாய்ப் படைத்தாள்
சமயமிது [31]வேளையிது தானுதவ வேணும்
சாம்பிராணி தூபதீபம் சண்டமிர்தம் போலே
வஞ்சியிடை [32]குறவர்மகள் தேக்கிலையி லிருந்து
வலதுகையை நீட்டுமென்று மாதுகுறி வுரைத்தாள்.

மருதுணிகள் – மருதோன்றி செடிவகை. **மந்தி** – பெண் குரங்கு. **காவு** – சோலை. **வாவி** – குளம். **வாடை** – வடக்கிலிருந்து வரும் காற்று. **பளிங்கு நிலம்** – கண்ணாடி போன்ற நிலம். **பாதாளவாசல்** – கீழுலக வாசல். **குறவர்** – குறிஞ்சி நில மக்கள். **மட்டுத்தப்பாய்** – ஏதாவது தவறு நடந்து விடும் என்ற பொருளில் வந்துள்ளது. **உம்பளமாய்** – உபகாரமாய். **கடுவாய்** – ஒரு புலி. **அலம்பலில்லை** – ஆரவாரமில்லை. **பூச்சியம்** – ஒன்றுமில்லாமை. **பருவரை** – பெரிய மலை. **சிநேகம்** – நட்பு. **கவ்வை** – துன்பம். **மாமலை** – உயர்ந்தமலை. **குமடு** – மலைப்பக்கம், குன்று. **தடவரை** – அகன்ற மலை. **குடில்** – குடிசை. **கன்யாசி** – துறவி. **காரிகைமார்** – பெண்கள். **துட்டமிருகம்** – கொடிய மிருகம். **மாறி** – அகன்று. **இளைத்து** – களைத்து **பிறங்காணித்து** – புறமுதுகுகாட்டி, பின்புறங்காட்டி. **மடிபிடியாய்** – மடிச்சீலை பிடித்து. **குத்தி** – மரத்தினால் செய்த சிறுகுடுவை. **சிறுகிழங்கு** – ஒரு கிழங்கு. **பிடிகிழங்கு** – ஒரு கிழங்கு. **அருந்தி** – உண்டு. **அடக்காய்** – வெற்றிலை, பாக்கு. **தரந்தரம்** – கூட்டம், **நிறை நாழி** – மங்கலக் குறியாக நெல் வைத்து நிரப்பிய நாழி. **கொடுவாடி** – கொண்டு வாடி. **நினைத்தகுறி** – முன்னறிந்து கூறும் நிமித்தம். **தந்திமுகத்தைங்கரன்** – யானை முகத்தையும், ஐந்து கரங்களையுமுடைய விநாயகன். **விடலை** – இளநீர். **பொரி** – நெற்பொரி. **சண்டமிர்தம்** – சண்டாமிர்தம், சண்டமாருதகம், பெருங்காற்று இங்கு மிகுதியாக என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. **வஞ்சியிடை** – வஞ்சிக் கொடியைப் போன்ற அழகிய இடையை உடைய பெண். **தேக்கிலை** – தேக்கமரத்தின் இலை.

பா.வே. 1. சொல்லிய மலையினுட 4. கொட்டியே சிரித்து 5. பாவிளையாகக்கொடுக்க 6. பால்கொடுத்து சிறுவன்கையில்கனியை 7. தின்னுமென்று மாங்கனியைக் கொடுக்க 8. மனதிரக்கமில்லையோ 9. காவுகளும் கடந்து 10. கூவையாறும்மிட்டு 11. சாகுமலை சரிகுமலை 12. சன்னாசி மலையும் 13 துஷ்டமிருகம் 14. கண்டு கொண்டு 16. மாபாதம் 18. மிருகம்மெல்லாம்

அடவில் 19. என்ன 20. மிருகம்மெல்லாம் 21. பிலாபழத்துடனே 22. பரிவினுடன் பிடிகிழங்கும் செறுகிழங்கும் 23. கொடுத்த பண்டம் தனைவேண்டி கோதைநல்லாள் குந் 25. குறத்தியவள். 27. தாகமெல்லாம் தெனிந்து 29. குறியானதேல்லாம் வகுத்துரைக்க வேறும் 30. கடலையவல் 31. வேளையினி தானுரைக்க வேணும். 32. குறத்தியவள்தேக்கிலையை விரித்து.

க.சொ. 2. பாதாழவாசல் 3. வாய்பிழந்து 15. மனமுடயாள் 17. பிளைக்கும்படி 21. பிலாக்கனியுடனே 24.குழிர்ந்த 26. ணேந்திளைமார் 28. நிறநாழி

The glory of Mēru mountain

Peacocks dance and Cuckoos sing,
Marutāṇi[1] blossoms there
Monkeys black throw flowers at the ***mantis***[2]
And flowers those fall on the ground
It doth rain in the northern grove and the central pond,
In showers heavy
With the north wind and southern breeze intertwined,
Glass like groves and other gardens as well,
Did they pass,
And worshipped the Lord at **Āriyaṅkāvu**[3]
The unique among *Kāvus*[4]
Ponnuruvi the queen among damsels
Along with her virgin maids did pass that northern grove

Ponnuruvi tells her maids what the mountain means to her

"Inform you I shall,
Of the features fine of this mountain indescribable
Do but listen to me, Oh! Maids"
Ponnuruvi arriving at that crystalline terrain
And afraid of the deep ravine resembling a hell hole
She doth utter,
"Is it the destiny ordained for this hapless one?
Have we all gone over to this mountain to die?
As the animal in this mountain stands,

With its gaping mouth I am afraid,
That it will swallow and eat this barren woman
No ***Kuṟavar***[5] residing in this mountain
Are to be seen anywhere here in this pali
Any wrong move on our part and the animal will kill us
Deeming it a task helpful without wages.
We have in rain wandered to this mountain high,
If a woman in her mind and feet exhausted,
Arrives here at this mountain dark, the tiger will eat her.
No commotion, no more wandering in a huff
In the mountain her eall will in a zero end
Sobbed and cried thus the dame **Poṉṉuruvi**
Is it the outcome of fate, or the lapse on **Piramaṉ**'s part?"

The pranks of a *Manti*

No sooner the sweet mouthed damsel did speak thus
Than a *manti* nearby did clapits hands and laugh
Leaping and jumping it climbed,
Up a tall tree on the mountain massive
Plucked a ripe fruit and came down gripping it
Like a boy laughing in friendship,
Gave the fruit to the dame to eat
Receiving the fruit from the monkey,
Poṉṉuruvi did exclaim,
"Have you taken pity on this *malati*
No more worries hence no further grief"
Left they the towering mountains and groves
Walked away from the hill side and mountain broad,
Left then **Kūkaiyāṟu**[6]
And walked they but proudly towards *Kuṟavar* habitations
they pass several mountains
The damsels did pass
Cāyvu malai[7], **Caṅkumalai**[8], **Cantaṉamalai**[9]

And **Canyācimalai**[10] where saints penance perform
And mountains where peacocks in groves,
Caw and cry songs theirs,
As the damsels did pass **Karumalai**[11]
On seeing them along with dame **Ponnuruvi**
A wild animal ferocious did stare at them
Stood for a while and took to its heels
Seeing the animal run **Ponnuruvi** of unruffled mind
Did utter,
"Have I committed sins so much? Oh! **Civan**
Even the animal wild at the mountain
Deems it a sin to kill a barren woman,
Lo! It runs away leaving me alive
It would not eat me and displease **Civan**
Hence does the animal stand showing its bank
Thus did **Ponnuruvi** lament and pass
Another mountain along with her maids
All of them holding the folds of their sarees in hands theirs

The kuravar damsels offer food to Ponnuruvi and her maids

As **Ponnuruvi** and her maids did reach,
The habitations of *Kuravar* folk,
The gypsy damsels there did offer in *Kutti*[12] bowls
Honey, sugarcane and sugar as well,
And also a jack fruit and bananas big,
Tubers, too like *cirukilanku*[13] and *piṭikilaṅku*[14]
They did offer excitedly,
Ponnuruvi and her maids did partake
The eatables offered thus,
And then the *kurava* damsels
Also enabled **Ponnuruvi** and her friends
To rest at the shade of a big tree

Near their hutment and offered them
Betel nuts and *Verrilai*[15] as well

The *kurava* woman brings the articles needed for soothsaying

After all of them thus gathered as a crowd did eat in delight
A *kuratti*[16] did declare
"Your mental anguish will be redressed
Worry not, Oh! daughter bring a *nāli*[17] filled with grain
And a ghee lamp too,
I shall your future foretell as desired by you
She mopped the floor and adorned it with *Kōlam*[18]
And covered with flowers as well
Then placing an icon of *Aiṅkaran*[19] elephant faced
She laid *viṭalai, Pori*[20], *aval*[21]
Honey, green and black gram grains
As offerings of various kinds
To invoke the God's help at the time proper
Incense and camphor did she burn
To raise clouds of smoke asin a storm
Thus did the *Kurava* damsel slim waisted as a creeper,
Holding a **teak**[22] leaf,
Asked **Ponnuruvi** to show her right palm
And started saying *Kuri*[23]

1. *Marutāni* - A plant with medicinal and pigmentation properties
2. *Mantis* - Female Monkey
3. *Āriyaṅkāvu* - Name of a place
4. *Kāvus* - Groove
5. *Kuravar* - A hill tribe or nomadic folk
6. *Kūkaiyāru* - Name of a place
7 - 11. Name of mountains
12. *Kutti* - The name of a tree
13 - 14. *Cirukiḻanku and Piṭikiḻanku* - Names of edible tubers
15. *Verrilai* - Betel leaf
16. *Kuratti* - A women of Kiwala tribe a sooth sayer here

17. *nāḻi* - A measure
18. *Kōlam* - Figures drawn on the floor in various designs with flour of coloured powder
19. **Ainkaran** - Lord **Vināyakar**
20. *Pori* - Puffed rice
21. *Aval* - Beaten rice
22. **teak** - Hard leaf
23. *Kuri* - Prediction or soothsaying

(குறத்தி குறி சொல்லுதல்)

43. [1]வள்ளிக்கன்று வேங்கைமர மானவடி வேலே
மலையிலுள்ள கன்னியரை வாழ்த்தஅவள் தொழுது
[2]வள்ளியம்மா யென்குறிக்கு வந்துதவு வாயே
பண்டுமுன்னாள் [3]நானுரைத்த குறிவதுப்பைக் கேளு
படிப்படியே சொல்லுகிறேன் [4]பொன்னுருவித் தாயே
அன்றுவொரு சொல்லுடைடய அரிச்சந்திர தாசன்
[6]அற்புதக் கோசிகனார்நல மருளிடுவா ரென்றேன்
விதியாலே [7]நளன்தனையும் வேண்டுஞ் சனிபிடித்து
விரைவினுடன் அவர்தமக்கு வருங்குறியைச் சொன்னேன்
பதியிழந்து [8]பாழ்மடத்தில் படுத்திருப்பா ரென்றேன்
பஞ்சவரு நூற்றுவரும் பாருலகாளும் [9]நாளில்
அப்படிப்போ லென்குறிதாள் பொய்யாதொரு நாளும்
அம்மேயுந்தன் குறிதனையுஞ் சொல்லுகிறேன் கேளு
ஒழுங்காகக் குறவர்மகள் ஒருபிடி நெல்வாரி
ஒருவித்துநீ குறியடியோ பல்வித்துக் குறியாதே
இங்கிதமாய்ப் பொன்னுருவி நீகுறித்த வித்தைதான்
என்னுடைய வலதுகைப் பெருவிரலி லிருக்கும்
அந்தவித்தை நீகுறித்தா யென்றுஅவள் சொல்ல
அருகிருந்த தோழியர்கள் திருமுகத்தைப் பார்த்தாள்

சந்தோசமாய் பொன்னுருவி தன்மனசு மகிழ்ந்து
தலையசைத்துக் கேட்டுக்கொண்டாள் தவக்குறத்தி சொல்லை

(தவக்குறத்தி பொன்னுருவியின் வரலாறு கூறல்)

உன்னூரு தென்காசிப் படைவீடு தாயே
உன்கணவன் செம்பவன ராசனேடி யம்மே
வரும்போது [10]வலக்கெவுளி கொன்னதுவும் உண்டு
[11]மணவாள னுன்னையுமோ விலக்கினத முண்டு
பிள்ளையொன்று மில்லாத வாட்டமதி னாலே
பெண்புத்தி கொண்டுநீயும் பேய்போலே யலைந்தாய்
காணிக்கைக்கு ஆயிரம்பொன் கைமுதலுந் தோத்தாய்
கண்டகண்ட கோவிலெல்லா மண்டை யுருண்டாயே
தேடின திரவியத்தை வீணிலே நீயழித்தாய்
தெய்வமது [12]உன்னளவு மில்லையேன்று போச்சே
உறிதனிலே தயிரிருக்க வூர்புகுந்து வெண்ணெய்
ஊர்தனிலே நீதிரிந்தால் கிடைக்குமோடி தாயே
வீட்டகத்தே [13]விளக்கொளி இருந்து யிலங்கிடலே
வெளிதனில்போய் நீகேட்டால் கிடைக்குமோடி தாயே
பண்டுமுன்னா ளுன்னுடைய காரணவ ராண்ட
பத்தியுள்ள கோவில்தன்னில் சத்தியுள்ள தெய்வம்
உலகாண்ட மகமாயி பகவதியாள் தனக்கு
திருக்கோவி லதனதிலே திருமதிலு மிடிந்து
சின்னாபின்ன மாகச் சுவரிடிந்து நிற்குதம்மா
குடிவழிக்கும் கிளைவழிக்கும் விட்டதோர் தெய்வம்
கோவங்கொண்டு வுன்மேலே யேதுவைக்க லாச்சு
அந்தமுடன் கோவில்கெட்டிப் பூசையது செய்தால்
அம்மாநீ மதலையொன்று [14]ஆண்பிள்ளையே பெறுவாய்

பிறந்தாலு முந்தனக்கு முழுதும் பிள்ளையில்லை
பெண்ணொருத்தி வண்ணாத்தியால் தேசமர சாளான்
சந்தோசமாய்ப் பொன்னுருவி தலையசைத்துச் சிரித்து
தாக்குடைய [15]குறமகளுக்கு வாக்கெடுத்து வுரைத்தாள்.

(தவக்குறத்திக்குப் பொன்னுருவி கூறிய மொழிகள்)

அயலறிய அஞ்சிமாச மானதுண்டால் தாயே
அங்கழைப்பே னுன்கிளைக்கு மாசாரம் செய்வேன்
குறத்திகுறி மெய்யானாக் குதிரைகொடை தருவேன்
குடுக்கைமுட்டப் பொன்றருவேன் குறமகளே வருவாய்
கஞ்சமரும் பூங்குழலாள் பொன்னுருவி யம்மை
காறைதன்னைக் கழத்தியவள் கழுத்ததிலே போட்டாள்
பூட்டிவைத்த பொற்கொடிமா ராபரண மெல்லாம்
பூசணங்க ளானதுடன் பொற்சரிகை கொடுத்தாள்
மஞ்சாருங் குறத்திமகள் வலதுகையைப் பிடித்து
வழியனுப்பிக் கொண்டுபெண்கள் வான்குரவை யிட்டார்.

பண்டு – முன்பு. **கோசிகனார்** – கௌசிக முனிவர். **நளன்** – நளமகாராசன். **பதியிழந்து** – ஊர் இழந்து. **பஞ்சவர்** – தருமர், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகியோர். **நூற்றுவர்** – துரியோதனன் முதலாக நூறு கௌரவர்கள். **வித்து** – வமிச வழி. **வித்தை** – தந்திரத்தொழில். **கெவுளி** – பல்லி. **மணவாளன்** – கணவன். **விலக்கினது** – நீக்கியது. **வாட்டல்** – வாடல், சோர்வு. **காணிக்கை** – வெகுமானம். **தோத்தாய்** – தோற்றாய் என்பதன் பேச்சு வழக்கு. **திரவியம்** – பொருள், பொன். **காரணவர்** – முன்னோர். **பத்தி** – பக்தி. **சத்தி** – சக்தி. **மகமாயி** – பகவதி, தென்காசியருகிலுள்ள பெண்தெய்வம். **சின்னாபின்னம்** – பொடிப்பொடியானது. **குடிவழி** – குலவழி. **கிளைவழி** – வம்ச வழி. **கோவம்** – கோபம். **ஏதுவைக்கலாச்சு** – காரணம், இன்ன காரணத்தன்னதாமென கூறுவது. **அந்தம்** – அழகு. **கெட்டி** – கட்டி. **மதலை** – பிள்ளை. **வண்ணாத்தி** – வண்ணாரப்பெண். **தாக்கு** – வலிமை, **வாக்கு** – சொல். **அயல்** – அருகிடம், அருகிலுள்ளோர். **அஞ்சி** – ஐந்து. **ஆசாரம்** – உபசாரம். **குடுக்கைமுட்ட** – சுரக்காய், பூசணிக்காய், தேங்காய்கொண்டு செய்யப்பட்ட குடுவை நிறைய. **காறை** – பெண்கள் கழுத்தில் அணியும் அணிகலனில் ஒன்று. **கழத்தி** – கழற்றி. **பொன்சரிகை** – பொன்னாலான இழை. **மஞ்சு** – இளமை, அழகு.

பா.வே. 1. வள்ளிக்காக 3. நான்வகுத்த 4. பொன்னுருவியம்மா 5. அரிச்சந்திரன் தவத்தை 6. ஆனதொரு கோசிகனார் ஆரத்து வகைபோலே.

ச.சொ. 2. வள்ளியமா 7. நழன்தன்னயும் 8. பாள் மடத்தில் 9. நாழில் 10. வலக்கெவுழி 11. மணவாழ 12. உன்னழவு 13. விளக்கொழி 14. ஆண்பிள்ளயே 15. குறமகழுக்கு.

Kuratti's sooth saying

Oh! **Vaṭivēl**[1] who did become a *Vēṅkai*[2] tree once,
For the sake of **Vaḷḷi**[3]
Oh! **Vaḷḷiammā** do help me in prediction mine,"
Thus did she pray in order to invoke their blessing
To the virgin damsels at the mountain there
"Listen to what I did forecast in the past,
Oh! Dame **Ponnuruvi** step by step
Shall I reveal to thee,
I did tell that the miraculous saint **Kōcikanār**
Would confer on **Ariccantirarācan**[4] who kept his promise
The benefits of his penance
I also did forecast that **Saturn**[5] would hold
Even **Naman**[6] in his grip and harass,
When the **pāṇṭavars**[7] five and **Kauravars**[8] one hundred
Vied for ruling over kingdom theirs,
I did predict that the **Pāṇṭavars** would lose
Their city and stay at a place ruined,
Thus my forecast never doth fail,
Hence listen to my *Kuri* on your future too"
The *Kurava* woman thus speaking,
Did take a handful of paddy grains,
And asked **Ponnuruvi** to pick just one grain
And not many,
As **Ponnuruvi** picked one grain accordingly
The *Kuratti* said
"You have but properly picked one grain,
From the gap of my right thumb,

As she uttered thus, **Poṉṉuruvi**
Did look at the faces of her maids there
And gladdened at heart did she nod her head
Listened she then to the prediction of the *Kuṟatti*

The *Kuṟatti* narrates an account of Poṉṉuruvi's past

"Oh! Mother the fortified **Teṉkāci** is thy place,
Your husband is **Cempavaḷarācaṉ** the king there,
When you left thy place a lizard on your right side
Did tick as if to predict thy plight,
Your husband too was estranged from thee,
In thy despair on being childless,
Thou did wander like a ghost veritable
Urged by the womanly indiscretion thine
A thousand *poṉ*[9] hast thou squanderd,
By way of offerings and lost all thy money
Wasted that hard earned money on hand
No God was there to help as far as you were concerned
With the curd to be churned,
In a pot placed in the *Uṟi*[10] that hung at home,
Thou did roam all over the town,
In search of butter,
Can you ever get light outside,
When the luminous lamp is at thy home itself?
In the holy temple at the place
Where your ancestors ruled,
Is the powerful deity **Makamāyi Pakavati**[11]
The ruler of this world
In that temple the ramparts are in ruins,
With the walls their lying crumbled,
Why should the deity, who forever protected,
Thy community and dynasty as well,

Be angry with you and what is the reason?
If you renovate that temple and offer *Pūcai,*[12]
You will be blessed with a child,
A male one at that,
But even though born to you,
He won't be your child entirely
On account of a washer woman"
Po<u>nn</u>uruvi did however hod her head happily
And laughed and spoke to the *ku<u>r</u>atti* strong

Po<u>nn</u>uruvi reply to the holy Ku<u>r</u>atti

"If I conceive and continue in the family way,
For full five months for all the neighbours to notice
There to my place shall I invite thee,
And be hospitable to thy clan as well,
If thy *Ku<u>r</u>i* proves true a horse shall I gift,
A *kuṭukkai*[13] full of gold shall I give as well,
Oh! *Ku<u>r</u>ava* damsel do come near"
Thus speaking dame **Po<u>nn</u>uruvi** did remove
The *kā<u>r</u>ai*[14] from her neck and put it
Around the neck of the *ku<u>r</u>atti*
Other ornaments she had on her chest
Also she gave along with flowers and gold lace
As the young *ku<u>r</u>atti* did hold the right hand of **Po<u>nn</u>uruvi**
And bade farewell, the damsels there
Did ululate in a chorus rising to the skies

1. **Vaṭivel** - An appellation of Lord **Murukan**
2. *Vēnkai* - A hard wood tree
3. **Vaḷḷi** - One of the consorts of **Murukan**
4. **Ariccantirarācan** - A legendary king who suffered greatly for the sake of truth
5. **Saturn** - A planet called *Cani* in Tamil
6. *Naman* - God of death
7. **Pāṇṭavars** - Royal factions in **Makābāratam**

8. **Kauravas**	- Royal factions in **Makābāratam**
9. *Poṉ*	- Gold coin
10. *Uri*	- A conical network of rope or chain suspended from the ceiling to hold pots or vessels
11. **Makamāyi Pakavati**	- The name of a goddess
12. *Pūcai*	- Worship
13. *Kuṭukkai*	- A hollow shell or vessel with a long neck
14. *Kārai*	- An ornament worn in one's neck

(பொன்னுருவி மேலும் பல தலங்களுக்குச் செல்லுதல்)

44. அம்பா சமுத்திரம் [1]போகவேணு மென்றுதங்கி
ஆதித்த வேளையில் சென்றாளே [2]சிங்களூர் தன்னில்
[3]பரமன் றிருவிளம் பாவநாசத் துறைதன்னில்
பாவையர் சித்திரதீர்த்தம் பணிந்து கொண்டாளே
[4]முத்தமிழ் பெற்ற[5]வகத் தீஸ்வர்வாழ் மலைதன்னில்
முற்றும்வல மாகச்சுத்தி யேகோலில் முகப்பில்
சித்திரைத் தீர்த்தம் திருநாள் [6]பணிவிடை கொண்டு
தேவச்சுடர் மணியென்று போய்த்தெண்ட னிட்டாளே
இத்தனை தூரமும் பத்தியே வந்ததுபாவம்
ஈசனே பாவனா யகரைக் [7]கண்டபோது
[8]நித்தியம் நித்தியம் செத்துப்பிழைத் ததுபோலே
நெஞ்சில் கவலைகள் கஞ்சிகுடிக் கொட்டுதில்லை
கொத்துச் சரப்பளி [9]மார்பிலேகோ தண்டராமன்
கோலமதயானை [10]கொண்டாடிக் கொண்டுதருவேன்

(வாயில் பொன்னிட்டுத் தீயிலிட மகன் இல்லையே எனக் கலங்குதல்)

முப்பதுஞ் சென்றால் முழுதுங்கிழவி யென்பார்கள்
முட்டுப்பட் டெத்தனை [11]நாளுக்கிருப்பேன் முதல்வா
செத்துக் கிடந்திடில் புத்திரனில்லாதே போனால்
சீத்துவக் கேடியைக் காட்டிலிழுத்தெறி யென்பார்கள்

வாயிலே பொன்னிட்டுத் தீயிலிடு வானைக்காணேன்
வந்துபிறந் தேனே [12]முந்தச்சகுனியைப் போலே
சுண்டைக்காய் தன்னிலே [13]சொத்தைப்போனால் கறிக்காமோ
தூரப்போனா லெந்தன்பாவத்தை யாரார் சுமப்பார்
[14]கோனாருவிட்ட குறட்டாடு போலவே சுத்தி
கோவிலுந் தெய்வமு மொக்கலே கும்பிட்டு வந்தேன்
[15]ஆனா லொருவருமிங் கேயிரங்கி னாரில்லை
ஆத்தில் முளைத்ததோர் கோரையைப் போலலைந்தேன்
இப்படிக் கும்பிட்டு [16]யேழெட்டு நாளாயிருந்து
ஏதும் பலனில்லை [17]வாருங்கோடி தோழிமாரே
செப்பமாய்ப் பொல்லாத [18]பேர்களைக் கூட்டியேவந்து
செத்துப் போகவென்றால் சற்றும்விடுகிறா ரில்லை
ஊதியங்கெட்ட வுடம்போடே ஊர்தனில் போனால்
[19]ஓட்டம் நடையத்து வீட்டில் கிடப்பது நன்றே.

(சாதிக்கு இழிவாக இறைவன் படைத்தான் என வருந்துதல்)

சாதிக்கிழிவாக வைத்துதே [20]தெய்வமும் நம்மைச்
சாகப் பயப்பட்டால் தகாது காரியமல்ல
சோத்துக்கு முன்னே சுணையல்லோ [21]ரெம்பப்பெரிது
தூங்கியொரு வீட்டில் வாங்கிக்குடிப்பது நன்றோ
வீட்டி லிருந்தார்க் [22]காலித்தரச் சோலியுமில்லை
விம்மிப் பெருமூச்சு விட்டெழுந் திருந்தாளே
[23]மங்கையர் கூடியெழுந் தவர்முன்னே நடக்க
வரும்போது திருமஞ் சனக்குடங் கண்டாள்
பங்கையப் பாதம் [24]வருந்தவே மெல்லநடந்து
பாவையர் சேர்தெப்பங் காணவேணு மென்றார்.

ஆதித்த வேளை – சூரியன் உதிக்கும் வேளை. **திருவிளம்** – திருவுளம். **பாவநாசத்துறை** – ஒரு நீர் வீழ்ச்சித் துறை. **பாவையர்** – பெண்கள். **தீர்த்தம்** – நீர், புண்ணிய தீர்த்தம். **முத்தமிழ்** – இயல், இசை. நாடகம் என்னும் மூவகைத் தமிழ். **அகத்தீஸ்வர் வாழ்மலை** – பொதிய மலை. **சுத்தி** – சுற்றி. **பணிவிடை** – தொண்டு. தேவச்சுடர் மணி – சிந்தாமணி. **தெண்டன்** – வணங்கல். **தூரம்** – தொலைவு. **பத்தி** – பற்றி. **நித்தியம்** – நாள்தோறும். **செத்து** – இறந்து. **கஞ்சி** – உணவு. **ஒட்டுதில்லை** – விருப்பமில்லை. **சரப்பளி** – கழுத்தில் அணியும் ஓர் ஆபரணம். **முப்பதுஞ் சென்றால்** – முப்பது வயது கடந்தால். **முட்டுப்பட்டு** – இடர்ப்பட்டு. **புத்திரன்** – மகன். **சீத்துவக்கேடி** – திறன் கெட்டவள். **தீயிலிடுவான்** – கொள்ளி வைப்பான். **முந்த** – முன்னால். **சூத்தை** – சொத்தை. **கோனார்** – இடையர். **குறட்பாடு** – ஆடு வகையில் ஒன்று. **ஆத்தில் முளைத்ததோர் கோரை** – ஆற்றில் முளைத்த கோரைப்புல்லானது அங்கும் இங்கும் அலைவது போல் நானும் அலைந்தேன் என்ற பொருளில் கூறப்பட்டது. **செப்பமாய்**– இணக்கமாய். **ஊதியம் கெட்ட** – பயனில்லாத. **நடையத்து** – நடையற்று. **சோத்துக்கு** – சோற்றுக்கு. **சுணை** – சுரணை. **இத்தரவோலி** – அத்தனை வேலை. **திருமஞ்சனக்குடம்** – அபிடேக நீர் கொண்டு வரும் குடம். **பங்கைய பாதம்** – தாமரை மலர் போன்ற பாதம்.

பா.வே. 1. சமபாமென்னவே தங்கி 2.சிங்கனூர் 3.டம்மை நத் சூழும் 5. அகத்திய மாமலைதன்னில் 6. விட்டகன்று. 7. உன்னைக் கண்ட போது. 8. நித்தமு தித்தலும் 10. கன்று கொணர்ந்து தருவேன் 11. நாளாயிருப்பேன் 12. அந்தச் சகுனியை 13. சூத்தையானால் 14. கோனாரைவிட்டுப் பிரிந்த 15. ஆனதினாலே 16.இருபது நாளாய் 17. வாதுக்கிருந்தேனே பெண்கா 18. செட்டிச்சிமார்களை 19. ஒட்டநடையன்றி வீட்டிலிருப்பில்லை அய்யோ 20. தெய்வம் மினைத்தான் 21. மெத்த பெரிது 22. யித்தனை தொல்லையில்லை 24. பங்குப்படர் மேலே வருத்தியே.

சு.சொ. 4. முத்தமிள் 9. மாபிலே 23. மங்கயர்

Ponnuruvi goes to many other shrines

Stayed she there deciding to go to **Ampācamuttiram**[1]
And left here at sunrise to reach **Cinkalūr**[2]
As god willed did the damsels at **Pāvanācatturai**[3]
Worship at **Cittiratirttam**[4]
In the mountain which is the abode of **Akattisvarar**[5]
Who did acquire *Muttamiḻ*[6],
Rightwards she did go round the temple entire,
And at the entrance of the temple she did undertake
The *Kaṭṭaḷai*[7] of *Cittiraitirunāḷ*[8] and prostrated
Before the *Tēvaccuṭarmaṇi*[9] there

"Oh! God, my sin has dogged me so far,
Even now on seeing **Pāvanāyakar**[10] I feel,
It is a daily struggle for me,
Between death and survival
With cares overwhelming my mind,
I have not been inclined to drink *kañci*[11] even
Offer I shall a string of *Carappali*[12]
To adorn the chest of **Kōtaṉṭarāmaṉ**
And an elephant too I shall give"

She feels sad at not having a son to cremate her properly

When a woman is past thirty people say,
That she is an old hag utterly,
Oh! Prime Lord how long shall I live thus castigated,
When I lie dead without a son people will say
"Drag away this barren woman and throw out"
There is none for me to put a gold coin in my mouth,
And light my funeral pyre
Ill born was I like the **Cakuṉi**[13] of yore,
If a *Cunṭaikāy*[14] is ridden with pestilent worms
Will it be of any use for cooking?
When I leave for that far away land
Who will bear my sins?
Like a goat, which has strayed away
From the *Kōṉār's*[15] flock,
Hare I gone round praying to God,
At shrines all that I have visited
But none to take pity on me
Like the *Kōrai* grass grown at a riverbed
Have I been tossed
Oh! Maids all our prayers and worship
On all there days seven or eight
Are of no avail let us go

Even if I wish to die in the presence
Of evil folk (who gossip on my bareness)
Lo! I am not allowed to die thus
Instead of going places along with this useless mortal frame,
It is better to lie low at home"

"God has created me as a blot on my community"

God has made me a disgrace to my community,
It is not proper if I fear death
Being sensitive to one's image
And being conscious of self respect
Is more important than one's need for food
Is it fair on one's part to merely sleep,
At home and demand food to eat?
If one remains at home there isn't much to do,"
Thus did she speak and sighed sobbing,
Then she got up and as her maids
Walked ahead she did see,
The pot containing holy water meant for *Tirumañcaṉam*[16]
The damsels walked slowly hurting their feet,
And did express their desire to see the *teppam*[17]

1 - 4. Name of place and shrines

5. **Akattīsvarar**	- Akattiyar a saint of great eminence and the original expounder of Tamil language
6. *Muttamiḻ*	- The three branches of Tamil i.e., *Iyal, Icai*, and *Nāṭakam*
7. *Kaṭṭaḷai*	- An endorsement
8. *Cittiraittirunāḷ*	- A festival in the Tamil month of *Cittirai*
9. *Tēvaccuṭarmaṇi*	- The title of the deity
10. **Pāvanāyakar**	- The appellation of the god
11. *Kañci*	- Rice gruel
12. *Carappaḷi*	- An ornament worn on the neck
13. **Cakuṉi**	- A character in **Makāpāratam**, an evil adviser
14. *Cuṇṭaikkāy*	- A small berry used as a vegetable

15. *Kōnār* - Communal title of a shepherd
16. *Tirumañcanam* - Holy bathing
17. *Teppam* - A float used in festivals

(பொன்னுருவியும் தோழியரும் தென்காசி திரும்புதல்)

45. [1]தெப்பக் குளமதில் தீர்த்தமு மாடி
[2]சிவனே பராபரத் தெய்வமே யென்ன
பாவமது [3]தீர்ந்துதே பாவ நாயகரே
பண்டுபோல தென்காசியில் [4]சென்று போறேன்
தென்காசி பாலம் [5]வடபாதை விட்டு
செட்டியார் [6]குளத்தூரு தன்னிலே வந்தார்
கல்லாறு கருணை [7]யாறுங் கடந்து
கடிதாக ஆழ்வார் குறிச்சியில் வந்தார்
[8]ஆனைக் காத்தய்யன் கோவிலில் சென்று
அடிபணிந் தாளே பொன்னுருவி யம்மை
பணிந்தம்மை அய்யனுட பாதத்தில் விழுந்து
[9]பாவையர் சேர வழிநடை கொண்டாள்
வாகைக்குளங் கிட்டிணா புரம் விட்டு
வந்தார் வடையத்தூர் நாடது தன்னிலே
கலியாணி யம்மனே [10]காளி திரிசூலி
கங்காளி பத்திர மாகாளி யம்மா
இனியா கிலும்பிள்ளை நீயே தருவாய்
யென்று அடிபணிந் தவளுந் தொழுதாள்
மண்டபம் சிங்கா வனமு மதிலும்
மகரதோ ரணம்பொன் னாலே விடுவேன்
கண்டார் மகிழவே [11]பூந்தல விதானம்
[12]கனகமுடிச் சப்பிரத் தேரொன்று விடுவேன்
அற்ப முனக்கிது வல்லவோ வம்மா

அடியாளுக் கொருபிள்ளை தந்தனுப் பென்றாள்
இப்படிச் சொல்லியே யேழெட்டு நாளாய்
இருந்தும் [13]பலனொன்றுங் காணாமல் போனாள்
தோரணம் பொத்தை [14]யிடையின் குளமும்
தோகையர்கள் சேரக் கடிதாய் நடந்தாள்
[15]மந்தாரஞ் சேரும் பொன்னுருவி யம்மை
மத்தாளப் பாறை தனைக்கடந் தாளே
குத்தால நாதர் குழல்வாய் [16]மொழியை
கும்பிட்டுப் பெண்கள் குரவை யிட்டாரே.
[17]காட்டா ளம்மனைக் கண்டு பணிந்து
[18]கர்மவினை தீராதோ கன்மவிதி தானோ
[19]வாரிட்ட பெண்கள் மடவார்கள் நின்று
மகிழ்ந்தங் கொருநாள் சிலவுங் கொடுத்தார்
ஏகாந்த மாகச் சிலம்பு புலம்ப
[20]எருது விழுந்தான் பாறையானது மிட்டு
ஒய்யாரப் பெண்கொடியாள் பொன்னுருவி யம்மை
ஊருந் தென்காசி [21]தன்னிலே வந்தாளே.

பண்டுபோல – பழமைபோல. **கடிதாக** – விரைவாக. **சிங்காசனம்** – சிங்காதனம், இருக்கை. **மதில்** – கோவில் திருச்சுற்றுச் சுவர். **மகரதோரணம்** – மீன் வடிவாயமைந்த தொங்கல். **பூந்தலவிதானம்** – பூ வேலைப்பாட்டுமன் கூடிய விதானம். **சப்பிரத்தேர்** – சம்பரமும், தேரும். **மந்தாரம்** – மந்தாரை, ஒரு பூ. **குத்தாலநாதர்** – குற்றாலநாதர். **குழல்வாய்மொழி** – குழல்வாய் மொழி அம்பாள். **கர்மவினை** – யாவவினை. **ஏகாந்தம்** – தனிமை. **சிலவு** – செலவு.

பா.வே. 2. தீ வாரணப்பூசை செய்து நிறைவேற்றி 3. துலைத்தேனோ 4. யின்றுநான் 5. தென் மடலப்பாதை 6. குளத்தூரன் பட்டியைக் கண்டார் 7. யாத்தங்கலைப் பக்கம் 8. ஆனைகாத்தா னையன் கோவிலே வந்து 11. புந்தல் விதானம் 12. கனமாளிகை 13. அதில்பலன் 15. மத்தாருமை விழி 16. மகிழ்ந்து 17. காட்டாளம்மன் தன்னைக் கண்டடி பணிந்து 18. கர்மம் அது தீராதே கர்ம வினைதானோ 19. வாசிட்ட கொங்கை 20. எருதுமுந்தான் பாறையும் கடந்தாள் 21. நாட்டிலே.

சு.சொ. 1. திற்ப்பகுளமதில் 6.குழத்தூரு 9. பாவயர் 10. காழி 14. யிடயன் குழமும்.

Po<u>nn</u>uruvi and her maids return to Te<u>n</u>kāci

They did bathe at the *Teppakkulam*[1] accordingly
And **Po<u>nn</u>uruvi** said then,
"Oh! Lord **Civā** Oh! *Parāparam*, Oh! **Pāvanāyakar**
I shall go back to **Te<u>n</u>kāci** as of old"
They did leave the northern road
Leading to **Te<u>n</u>kāci** bridge and did arrive
At **Ceṭṭiyārkulam**
Also passed they *Kallāṟu*[2] and *Karunaiyāṟu*[3]
And reached **Āḻvārkuṟicci**[4] but quickly
She did prostrate in worship at **Ā<u>n</u>aikāttayya<u>n</u>**[5] temple
Po<u>nn</u>uruvi did fall at the feet of both the Lord and His consort there
Then along with her damsels did she proceed on journey her's
Leaving afterwards **Vākaikkuḷam**[6] and **Krisnāpuram**[7]
Arrived she at **Kaṭaiyāttūr**[8] region and prayed
"Oh! Goddess **Kaliyāni**[9], **Kāli**[10], **Tiricūli**[11]
Kankāli[12], **Pattiramākāli**[13]
"At least hereafter grant me a child"
Thus entreating she did prostrate and worship
"With gold shall I adorn,
The hall, throne m*atil*[14] and *makaratōranam*[15]
At your temple,
A *Capparam*[16] and a chariot as well
With golden roof and flowery canopy
Shall I provide to the delight of spectators,
To you it is after all a meager request of mine,
Do please grant me a child"
Thus did she entreat and stayed there
For days seven or eight in vain
And left there and walked past
Along with her maids passing **Itaiya<u>n</u>kuḷam**[17]
Thus did **Po<u>nn</u>uruvi** decked with *mantārai*[18] flowers,

Pass **Mattāḷappārai**[19] as well
And prayed to **Kuttālanātar**[20] and **Kulalvāymoli**[21]
The damsels worshipped and ululated in chorus there
They did then see **Kāṭṭāḷamman** and worship that goddess
"Won't our *Vinai*[22] past leave us, is it out fate?
Mused the damsels with groomed locks and stayed,
Just for one day there
Then leaving **Erutuviluntānpārai,**[23]
As her strained anklets lamented aloud for attention,
Dame **Ponnuruvi** the creeper likes damsel elegant
Arrived at **Tenkāci** at last

1. **Teppakulam** - The temble tank where the float festival is held
2 - 3. Names of Rivers
4. Name of a shrine
5. Name of a god
6 - 8. Name of a places
9 - 13. The various of appellations of a Hindu Goddess
14. *Matil* - Wall surrounding a temple
15. *Capparam* - A light decorated Chariot
16. *Makaratōranam* - Fish shaped festoon
17. **Itaiyankulam** - Name of a place
18. *Mantārai* - A variety of flowers
19. **Mattālappārai** - Name of a place
20. Name of the god at **Kurrālam**
21. Name of the goddess at **Kurrālam**
22. *Vinai* - Deed or action
23. Name of a place

**(பொன்னுருவி, சென்ற விபரமும், மலைக்குறத்தி
கூறிய குறியும் கணவனிடம் கூறல்)**

46. தேரோடும் வீதிகளும் சிகரநாலு கோபுரமும்
வாரேறும் மடைப்பள்ளியு [1]மண்டபசிங் காசனமும்
காரேறும் பூங்குழலாள் கணவனுட முன்பில்வந்தாள்
கண்டார் செம்பவளராசன் [2]கன்னிகையாள் முகத்தழகை

சென்றாயே தவசிருக்கத் [3]திரும்பிவந்தா யென்றுசொல்லி
பெண்ணேநீ போனதினால் பிள்ளைப்பலன் கண்டதுண்டோ
[4]மனையாளே நானறியேன் வந்தவரலாறு சொல்லு
தேசமெங்குந் தவசிருந்தேன் சிறுவனைநான் [5]கண்டேனில்லை
தேடின திரவியத்தைத் [6]தேசத்திலே யழித்துவிட்டேன்
[7]கல்படர்ந்த பாடதெல்லாங் கடுகப்பொடியாய் நடந்தேன்
நடந்தேன் திரிந்தலைந்தேன் நானும்பலன் கண்டேனில்லை
கடந்துமலை தனிலேறிக் காட்டூடே வருகையிலே
கருங்குறத்தி [8]மகளொருத்தி கைப்பிடித்தா ளென்னைவந்து
மைவிழியா ளவள்வீட்டு வாசல்மட்டுங் கூட்டியேபோய்
வந்தவகை வாரதெல்லாம் [9]வகையாக யெடுத்துரைத்தாள்
அந்தமுட னூர்தனக்கு அனுப்பிவிட்டாள் போவெனவே
வாழ்ந்ததுவு மிருந்ததுவும் வையகத்தை யாண்டதுவும்
வச்செடுத்தாப் போலேயல்லோ மலைக்குறத்தி சொல்லிவிட்டாள்
திருக்கோவில் கட்டவேணுந் திருவிழாவும் நடத்தவேணும்
திருத்தவசு புரியவேணுஞ் சிறுவனைநான் பெறுவதற்கு
வார்த்தைகேட்டு [10]செம்பவளராசன் மாந்தையரை வரவழைத்து
[11]வந்துநின்று மாந்தையர்கள் [12]வரவழைத்த தெனக்கேட்டார்.

(கோவில் திருப்பணியும் பொன்னுருவி தவசும்)

இடிந்தமதிலும் தேருமிமைக்கு [13]முன்னே முடித்துவாரும்
கடுகமன்ன னுரைகேட்டுக் [14]கண்ணாளர் கூடிவொன்றாய்
[15]கல்மாளிகை யுடதேரும் கதிர்நொடியி லேமுகித்தார்
பூசைச் சிலவுக்கென்று [16]பொன்னூறு தான்கொடுத்தார்
ஆசையுடன் பால்பசுவு மமுதுசம்பா நிலமுமிட்டாள்
தஞ்சமெனக் கோவிலதில் தவசிருக்க வேணுமென்று
கிஞ்சுகமாய் நம்பிமார்கள் கெருவிதமாய்க் கொடியேற்றி

ஒன்பதாந் [17]திருவிழாவி லோடவைத்தார் தேர்தனையும்
அன்பாக அவள்மெழுகி யருந்தவசு தானிருந்தாள்
நனைத்தமுந்தி துவராமல் [18]நாற்பது(நாள்) தவசிருந்தாள்
சந்ததிதான் வேணுமென்றே தரைமெழுகி யசனமுண்டாள்
[19]மைந்தனது வேணுமென்று வலதுகையைப் பணயம்வைத்தாள்.

(பொன்னுருவிக்குச் சிவனார் தந்த கனவு)

முளைத்தமரம் தான்பூத்து முதுகெல்லாந் தானுதிர
[20]குழைத்துமஞ்சள் [21]குளித்தவுடன் கொண்டையெல்லாம் பூவுதிர
அந்தநல்ல வருந்தவசை [22]ஆதிசிவன் தானறிந்து
கந்தமருங் [23]குழலாளுக்கு கனாவுகாண வேணுமென்று
குஞ்சிநல்ல சடைபுரளக் குருமுனிபோல் வேசங்கொண்டு
சித்தாண்டார் [24]வடிவாகத் திருச்செவியில் சொல்லுவாராம்
கட்டுவெத்திலை கொண்டு கைதனிலே தரவுங்கண்டாள்
புத்தகமும் ஏடுங்கண்டாள் பொன்னின்எழுத் தாணிகண்டாள்
மந்திரவா ளுறைகளத்தி வாங்கெனவே தரவுங்கண்டாள்
உடுத்திருந்த சேலைதன்னில் உள்முந்தித் [29]தலையதிலே
[25]இடைசிறிய வெட்டுவாளி யெடுத்துவந்து வொருபுமுவை
குகையதிலே [26]வைத்தூதிக் குஞ்சியது பறக்கக்கண்டேன்
பாம்புவந்து மடியேறிப் படமெடுத்து ஆடக்ண்டேன்
கண்டுயம்மை கிடுக்கெனவே கன்னியரு [27]முழித்திளகி

(கனவில் கண்டதைக் கணவனிடம் சொல்லுதல்)

கண்டகனா வானதெல்லாங் கணவனுட முன்பில்வந்து
இறைிரவு வொருகனவு யென்கணவா கண்டேனான்
கண்டகனா வத்தரையும் [28]கணவனுக்கே கட்டுரைத்தாள்
[29]சற்பமது கண்டதுண்டால் கெர்ப்பமல்லோ பெண்ணரசே

செய்தவத்தால் பிள்ளையுண்டு தேன்மொழியே கதறாதே
பொழுததுதான் போனபோது புகுந்தடைத்தார் கோவிலைத்தான்
மகிழ்ந்தகுல மங்கையுட வயித்தில்கெர்ப்ப மவதரித்தார்
தரித்தகருக் குழிதனிலே சகலவுதிரமும் தான்திரண்டு
உருவாகக் கருவாகி உகந்து [30]*வளர்கின்ற* *நாளதிலே.*

மடைப்பள்ளி – அடுக்களை. **பூங்குழலாள்** – பூக்களை அணிந்த நீண்ட கூந்தலையுடைய பொன்னுருவி. **தவசி** – தவசு. **திரவியம்** – பொருள். **கருங்குறத்தி** – கருமையான நிறத்தையுடைய பெண் குறத்தி. **வையகம்** – உலகம். **மாந்தையர்** – தச்சுவேலை செய்வோர். **கடுக** – வேகமாய். **கண்ணாளர்** – கம்மாளர், சித்திரக்காரர். **முகித்தார்** – முடித்தார். **கதிர் நொடியில்** – சூரியன் உதிக்கும் நொடியில். **பூசை** – பூஜை, வழிபாடு. **சிலவு** – செலவு. **அமுதுசம்பா** – ஒரு வகை நெல். **தஞ்சம்** – அடைக்கலம். **கிஞ்சுகம்** – சிவப்பு. **அருந்தவசு** – நல்லதவசு. **நனைத்தமுந்தி** – நனைத்த முந்தானை. **துவராமல்** – உலராமல், காயாமல். **சந்ததி** – வாரிசு. **அசனம்** – உணவு. **பணயம்** – அடகு. **குஞ்சி** – ஆண்மயிர், ஆடவர் தலைமுடி. **வேசம்** – வேடம், **சித்தாண்டார்** – ஒரு தெய்வம். **கட்டுவெத்திலை** – கட்டு வெற்றிலை. **தலவு** – தண்டல், **ஏடு** – பனையேடு, சுவடி. **எழுத்தாணி** – ஓலையிலெழுதுங்கருவி. **களத்தி** – தழற்றி. **வெட்டுவாளி** – வெட்டுக்கிளி. **குகை** – கூடு. **முழித்திளகி** – விழித்தெழுந்து. **அத்தரையும்** – அத்தனையும் என்பதின் தென்மாவட்ட வழக்கு. **சற்பம்** – சர்ப்பம், பாம்பு. **தேன்மொழி** – தேன் போன்ற இனிய மொழியையுடைய பொன்னுருவி. **கோவில்** – அரண்மனை.

பா.வே. 1. மண்டப சாலை கடந்து 2. கன்னிமுக்க கோட்டறவை 3. திரும்பியிங்கே வந்ததென்ன 5. கெதிகண்டேனில்லை 6. தேடினபொன் 7. கல்படந்த வனங்க ளெல்லாம் கால்வருந்தவே நடந்தேன் 9. வகைப்படியே தானுரைத்தாள். 10. செண்பலனராசன் 11. வந்து அந்த மாந்தையரும் மன்னவரைத் தெண்டலிட்டு 13. முன்னே முடிக்க வேணும் 15. கல்லாலே மாளிகையும் கனகமணித் தேரதுவும் 16. பொன்னிரம்பவே கொடுத்தார் 18. நாப்பத்தொருநாள் 19. மைந்தனெனக் கருளுமென்று வரதுகையை நீட்டுவாளாம். 20. கொழைத்து 22. ஆதிசிவன் கண்டிரங்கி 23. குழலாளுக்கு கினாவு காண்பிக்க வென்று 24. போலயல்லோ தெரிசனத்தில் 25. எடை செறிய 26. வைத்ததிசயக் குஞ்சியது பொரிக்க 28. கணவனுடன். 29. சற்ப்பம்மது தீண்டுறது கெர்ப்பம்மல்லோ பெண்கொடியே.

சு.சோ. 4. மனயாளே 8. மதழொருத்தி 12. வரவளைத்த 14. கண்ணாழர் 15. கல்மாழிகை 17. திருவிளாவில் 20. குளைத்து 21. குழித்தவுடன் 23. குழலாழுக்கு 27. முழித்திளகி 30. வழர்கின்ற.

Po<u>nn</u>uruvi informs her husband of her pilgrimage and the *Ku<u>r</u>atti*'s predictions

At **Te<u>n</u>kāci** where chariots ply in the streets
And temple towers rise like mountain peaks
And the temple kitchen and the throne at the hall there
Are but located properly
Po<u>nn</u>uruvi the damsel with her flower decked locks
Did arrive before her husband
Cempavalarāca<u>n</u> looked at her mien beautiful And said
"Thou did leave here to perform penance
But you have returned now,
Have you been granted the boon of a child?
Oh! My dear wife,
Tell me all that happened as I am unaware"
(She replied)
"Penance I did perform all over the country,
Lo! A son for me I could not have in sight,
Hard earned money have I squandered
Over forests strewn with stones have I trodden hard,
I walked and roamed but to no avail,
As we were walking through a forest
After climbing a mountain,
A *Ku<u>r</u>ava* damsel dark complexioned with lined eyes,
Held my hand and led to me to her house
And did describe my past but accurately
And predicted my future as well
Then she did send me home here
How I lived as ruler's wife
And all that happened in my life
The *Ku<u>r</u>atti* did tell me as if she had seen it all
The holy temple I have to renovate,
And conduct the festival also I must ,
I have to perform further penance as well

To be blessed with a son"
On hearing words these from his wife
Cempavalarācan̲ did summon his artisans
Who arrived and awaited the king's bidding

The renovation of the temple and Pon̲n̲uruvi penance

The king did tell the carpenters and artisans,
"Renovate the ruined ramparts of the temple,
And get ready a chariot too,
Let the work be over but quickly"
The artisans on hearing the king's orders
Worked as a team so quickly
As if in a flash and finished the task bidden
And did devise a palace of stone and a chariot as well
Pon̲n̲uruvi on her part did allot a hundred *Pon̲*
For the *Pūcai* to be performed
Milch cows too did she provide and endowed *Campā*[1] lands
In order to perform penance
As a refuge at the temple
The priest there did hoist the red flag but proudly,
And plied the temple car on the ninth day of the festival,
She mopped the floor at the temple and started her penance austere,
With her drenched saree folds not allowed to dry,
She was on a vow strict for full forty days
Aspiring for a heir did she mop the floor,
And ate her food from the floor itself
To have a son she did pledge her right hand too

Pon̲n̲uruvi has a dream at the instance of Lord Civan̲

As a grown up tree did blossom.
And shower its flowers on her back

As the flowers fell all over the *Koṇṭai*[2]
Of **Ponnuruvi** who had bathed applying turmeric,
Lord **Civan** who did witness her penance austere,
Disguising himself as a saint short statured,
With locks flowing but profusely
In the shape of *Cittāntar* did **Civan** appear to speak in the ears,
He also did give her a bundle of betel leaves,
She saw in that dream of hers,
Books and *ētu*[3] and a stylus made of gold
She did see as well a magical sword,
Unsheathed and handed over to her
In the top fold interior of the saree worn by her,
She did see a locust bringing a worm
And blowing it into a nest
After which a fledgling was seen flying
A snake as well with a raised hood
Was seen climbing the steps
When **Ponnuruvi** did wake up startled from the dream of hers

She informs her husband of her dream

She did then appear before her husband
And informed him of her dream entire
"If a serpent thou hast seen, Oh! My queen,
It is a sign sure of conception imminent
You will be blessed with a child became of your penance,
Oh! Sweet voiced damsel be not agitated,"
As time passed and in due course
In the womb of the happy damsel of beautiful tresses,
All the blood seemed to collect,
And formed a shape foctal and grew but gradually
On days such

1. *Campā* - Paddy crop
2. *Koṇṭai* - Hair tied in a bunch or Knot
3. *ētu* - Palm leaf manuscript

(கர்ப்பமடைந்த பொன்னுருவியின் உடலில் ஏற்பட்ட மாற்றங்கள்)

47. நின்ற நாளில் இருபத்தெட் டாம்நாளில்
[1]நிச்செயமாய்த் திருப்பூ மறந்தம்மை
[2]நன்றியுடன் எங்கள் பொன்னுருவித் தாயார்
நாயகனே சரணமென் றேயிருந்தாள்
இருந்த போது ரண்டாந் [3]திங்களிலே
[4]இதமா யோடிவுதிரந் திரண்டுதாம்
பொருந்த மூன்றான திங்கள் பிறந்திட
போசனம் வெறுத்தே யிறங்காமலே
[5]இளநேரம் வெயில் வெறிக்கும் போது
இருகண்ணும் [6]விறியால் கிறக்கிடும்
[7]அளவில் லாத புளிப்பெல்லாம் போசனம்
அன்னங் காணும் [8]போழ்சத்தி பெருக்குமாம்
நாலு மாசம் பிறந்த பொழுதிலே
நாயகனை வெறுத்தங் [9]கிருந்தம்மை
வேலை வென்ற விழியுங் கிறாவியே
வெயில் தன்னிலே நித்திரை யாகினார்
மாலைத் திருமுடி தன்னி லணியாமல்
மஞ்சணையுங் கழுத்திலே பூசாமல்
சினத்த மங்கை [10]விழிநுத லாளுக்கு
சிறந்ததோ ரஞ்சி மாசம் பிறந்திட
அஞ்சி மாசம் பிறந்த பொழுதிலே
[11]அரைவயிறு கருவுரு வாகினாள்
கனத்ததோர் தலைமயிர் குலைந்திட
காரிகை மார்கள் வாரி முடித்திட
அனர்த்த முண்டேதிரு வயித்துக் கென்ன
அன்புடன் பெண்கள் சோதித்துக் கேட்டிட

சோதித்திது கேட்ட மங்கைமார் தன்னோடே
சொல்லுவாள் சற்றே லெச்சையுண் டாக்கியே
ஆதித்தன் வந்துதிக்குமந் நேரத்தில்
அப்போ சற்றே துடிக்கு துடம்பில்
ஆறு மாசம் பிறந்த பொழுதிலே
அயலறிந் தார்க ளாயிழை மாரெல்லாம்
விம்மி யேதனம் மேனி [12]புளகிதம்
வீறில்லா மாச மேழும் பிறந்திட
ஏழுமாசம் பிறந்த பொழுதிலே
[13]ஏந்திழைமா ரொருகுறி பார்த்திட
சித்திரம் போலத் தேமல் பிறந்திட
திருவயிற்றிலுங் கொங்கைகள் மார்பிலும்
மொந்தைசெப்புப் போலொத்த தனபாரம்
மோதித் தலைசற்றே சரியுமாம்
[14]குன்றுபோ லொத்த கொங்கைகள் ரண்டிலும்
கூட வேசிவப் பால்நரம் போடுமாம்
[15]ஏத்த ஆலிலை போலே திருவயிறு
[16]இலங்கும் பொன்னின் குடம்போல் [17]வளருமாம்
[18]தாழ்வு வராது பொன்னுருவி யம்மைக்கு
[19]தக்கதோர் பிள்ளை யாண்பிறக்கு மென்றார்
இப்படிப் பெண்கள் செப்பி யிருக்கவே
இவளுக்கு யெட்டு மாசம் பிறந்திட
எட்டு மாசம் [20]பிறந்த பொழுதிலே
எண்ணிப் பட்டாங்கு பார்த்திருந்தாள்.

திருப்பூ – மாதவிலக்கு. **நாயகன்** – சிவபெருமான். **ரண்டான** – இரண்டான. **திங்கள்** – மாதம். **உதிரம்** – இரத்தம். **போசனம்** – உணவு. **இளநேரம்** – காலைநேரம். **விறியால்** – வெறியால். **கிறக்கிடும்** – மயங்கிடும். **சத்திப்பு** – சர்த்திப்பு, வாந்தி. தென்மாவட்ட வழக்கு. **நாயகனை** – கணவனை. **வேலைவென்ற விழி** – வேல் போன்று

விளங்குகின்ற கண். **கிறாவி** – சொருகி. **நித்திரை** – உறக்கம். **திருமுடி** – தலைபாகம். **மஞ்சணை** – எண்ணெய்க் குங்குமம். **மங்கை** – பெண். **விழிநுதலாள்** – விழியையும், அழகிய நெற்றியையும் உடையவள். **அஞ்சிமாசம்** – ஐந்துமாதம். **அரைவயிறு** – பாதிவயிறு. **காரிகைமார்** – பெண்கள். **அனர்த்தம்** – துன்பம். **சோதித்து** – விசாரித்து. **லெச்சை** – இலச்சை, கூச்சம், வெட்கம். **ஆதித்தன்** – சூரியன். **துடிக்கிது** – பிறழ்கிறது. **புளகிதம்** – மகிழ்ச்சி, மயிர்ச்சிலிர்ப்பு. **ஏந்திழைமார்** – அணி யணிந்த பெண்கள். **குறி** – சகுனம். **தேமல்** – படர்சுணங்கு. **கொங்கை** – பெண்களின் மார்பு, முலை. **மொந்தை செப்பு** – ஒரு பாத்திரம். **ஆலிலை** – ஆல மரத்தின் இலை. **பட்டாங்கு** – உள்ளநிலைமை.

பா.வே. 1. நிச்சயமாய்த் திருப்பூவும் பூத்தாளாம் 2. நன்றனவே பொன்னுருவியம்மை 3. திங்கள் தன்னில் 4. இசங்கியோடி 5. இளநேரம் வெயல்கள் படும்போது 6. விறியாற்றுக் 8. கிலசத்திப் பெடுக்குமாம் 9. கிருப்பாளாம் 14. கூர்மையாகியே 15. இலங்கும் 16. ஏத்த 18. தவங்கள்மெய்க்கவே 19. தக்கபாலன் 20. கடந்த பொழுதிலே.

க.சொ. 5. இழநேரம் 7. அழவில்லாத புழிப்பெல்லாம் 10. விழிநுதலாழுக்கு 11. அரைவயறு 12. புழகிதம் 13. ஏந்திளைமார் 17. வழருமாம்.

Ponnuruvi conception

On the twenty eighth day after her due menstruation stopped,
Dame **Ponnuruvi** forgetful of her periods
Did remain in happy intimacy with her husband
In the second month the blood did collect but properly,
And as the third month commenced,
She hated food and was not inclined to eat
In the mornings when the sun rose to scorch,
Her eyes both would close in a daze
Things sour to the utmost became her food,
As on seeing any other food she would vomit
At the beginning of the fourth month then,
She did develop an aversion to her husband
And with her sea like eyes closing in a daze
Would sleep in day light broad
Not wearing garlands on her head

And without applying *Mañcanai*[1] on her neck
Would she remain but listlessly

The changes that occurred in Po<u>nn</u>uruvi's body

To the pregnant damsel with eyes and forehead beautiful,
When the fifth month commenced,
She attained *araivayi<u>r</u>u*[2] as the foetus inside
Did take shape,
As her locks abundant were disheveled,
Her maids groomed them and tied
And asked her
"You seem ailing what happens in thy stomach?"
As they did thus examine her and enquired,
The damsel did reply the enquiring maids
With a blush slight
"At sun rise nowadays I feel a quiver in body mine",
When the sixth month did start,
Much to the attention of neighbours all,
Her breasts swelled and body was in delight buoyant
As the seventh month did commence,
The damsels a sign could notice,
With *Tēmal*[3] like a design appearing on her person,
And as her *Montaiceppu*[4] like breasts
Knocked her chest and abdomen while moving
Her head would slide a little under their weight'
In her breasts swollen like hills veritable
Veins red could be seen but conspicuously
Her abdomen shaped like banian leaf elegant,
Did expand like a golden pot
"No decline for **Po<u>nn</u>uruvi** hence,
A bonny male baby will be born to her for certain"
As the damsels did predict thus,
The eighth month did arrive,

When she did reflect on the state
Of her own mind at that juncture

1. *Mañcanai* - A vermilion paste mixed with oil
2. *araivayiṟu* - The shape of the stomach after gestation for a period of five months
3. *Tēmal* - A fungal and discolored patch on the skin
4. *Montaiceppu* - A vessel

(கர்ப்பகால வேதனைகள்)

48. எட்டான மாசமதி லெழுந்திருக்கக் கூடுதில்லை
கட்டாக வென்னுடம்பு கருதிரெம்பச் சோருதேடி
பட்டாங்கு நானுரைக்கப் படுமறுக்கம் நீகேளு

ஒக்கஇப்போ விடுகுதேடி [1]வுள்நடுக்க மாகுதேடி
பக்கவிலாவு ரெண்டும் படைத்தெடுத்த குறுக்கெலும்பும்

சிக்கெனவே [2]யடிவயிற்றில் சிறுவன்விளை யாடுறதும்
சுக்கானும் பாய்மரம்போல் சுழலுதேடி யென்னுடம்பு

மோதிரங்கள் பூணுகின்ற மொழிகளெல்லா [3]நோகுதேடி
ஏதுசழன் வந்துதேடி யென்னுடைய தோழியரே
காதலுத்து வந்தசழன் கருத்தழிக்க வந்தததுவோ

தண்டைக [4]ளணிந்திருந்த கெண்டைக்கால் நோகுதேடி
பண்டு[5]முன்னா ளிதுநோவைப் பட்டறியேன் கேட்டறியேன்

[6]பாதசரம் பூணுகின்ற படங்களேல்லாம் நோகுதேடி
கூடாக யென்சீவன் [7]குறையுதேடி யென்வாணாள்

கட்டுவிட்டு வருகுதேடி கைதருவாய் தோழியரே
[8]திட்டுவாள் பயமென்பாள் சிவனைரெம்ப நொந்திடுவாள்

உடலோடே வுயிர்பொருந்தி உறக்கமுந்தான் வருகுதில்லை
கடலடித்த திரைபோலே கண்ணுறக்க [9]மற்றேனே

தவசிருக்கப் போனதுக்கோ [10]சனியைவலித்துக் கொண்டேன்
[11]அம்மாடி யென்னுயிர்தா னந்தரத்தே போகுதேடி

இனிநான் [12]பிழைப்பதில்லை யெடுபிடியாய் நோகுதேடி
[13]அனியாயம் பெருகிடவே யதுகடந்து யெட்டுமாசம்

ஒன்பதான மாசமது உதித்தெழுந்து பிறந்திடுமாம்
ஒன்பதா மாசமதிலே உடையவற்குப் பொங்கலிட்டாள்.

கூடுதில்லை – முடியவில்லை. **ரெம்ப** – ரொம்ப என்பதன் குமரிமாவட்டப் பேச்சு வழக்கு. **பட்டாங்கு** – நான்பட்ட பாடு. **படுமறுக்கம்** – பட்ட துன்பம், மனக்குழப்பம். **பக்கவிலாவு ரெண்டும்** – பக்கவிலா எலும்பு இரண்டும். **சுக்கான்** – கப்பலைத் திருப்பும் கருவி. **பாய்மரம்** – கப்பல் முதலியவற்றின் பாய்தூக்குமரம். **சுழலுதேடி** – சுற்றுதேடி. **பூணுகின்ற** – அணிகின்ற. **மொழிகள்** – விரல் மூட்டு. **சழன்** – துன்பம். **தண்டை** – மாதர் காலணிகளில் ஒன்று. **பாதசரம்** – ஒரு காலணி. **படம்** – பாதத்தின் முன்பகுதி. **சீவன்** – உயிர். **வாணாள்** – வாழ்நாள். **கட்டுவிட்டு** – தேகக்கட்டுவிட்டு. **திரை** – அலை. **தவசியிருக்க** – தவமிருக்க. **வலித்து** – அழைத்து. **அந்தரம்** – ஆகாயம்.

பா.வே. 1. உயிர் நடுக்கமாகுதடி 2. யடிவயித்தில் செறுவன் விளையாடுதடி 3. உழையிதேடி 6. பாடகங்கள்ளிட்டிருந்த 7. குறையுதெல்லோ வாணாளும் 8. திட்டிடுவான் அழுதிடுவாள் சிவனே மெத்த 9. வருகுதில்லை 10. சளம் வருத்தி 11. அன்பாக.

சு.சொ. 4. முணிந்திருந்த 5. முன்னாழிது 8. திட்டுவாழ் 12. பிளைப்பதில்லை 13. அணியாயம்.

The travails of pregnancy

At the month eighth she couldn't get up easily,
"My shapely body is exhausted quite
Listen to feelings mine on the sufferings
That I undergo,
Totally weak do I feel, I shiver inside too,
My ribs both and the waist bone,
Are but shaken as my son doth play in abdomen mine
Tossed is my body like a rudder and sail in a storm,
My ringworm knuckles ache
What pain is this, Oh! My maids
This pain caused by love doth harass my mind,

My *tanṭai*[1] worn ankles too ache,
Never have I suffered such pains in the past,
Also ache forelegs mine adorned with *Pātacaram*[2]
My **Civa<u>n</u>**[3] is hollow now and my days are numbered
Dismantled is my frame, Oh! My maids,
Give me your hands and help"
She would scold at times, 'I am afraid' she would say,
Blame she would Lord **Civa<u>n</u>** much,
"My life does not align with my body now
Unable to sleep am I,
Like sea tossed waves I lost my sleep
It is of my making, this *Ca<u>n</u>i*[4] miserable
As I have gone on penance
Oh! My mother, my life doth seem to fly in space,
I won't live anymore, it aches but severely"
As she did thus her travails reveal,
The ninth month did arrive in due course
On the ninth month did she offer *Ponkal* to the Lord.

1. *Tanṭai* - Anklet
2. *Pātacaram* - Ornament worn on one's fore leg's
3. **Civa<u>n</u>** - Life
4. *Ca<u>n</u>i* - Saturn a planet which causes misery to human beings when malefically aspected

(ஒன்பதாம் மாதத்தில் செய்த சடங்குகள்)

49. உடையவர் தனக்கொரு பொங்கலு மிட்டு
உண்மையாய் மங்கையர்க் குரைத்திட
வடிவேல் மார்பனுட பொன்னுருவி யம்மைதிரு
வயிறது வாழ்ந்து களிகூரவே
உலையடுப்பினில் வைத்து நிறைநாழி நெல்பொரி
ஒருகொம்ப னரிசியு மிட்டாள்

அண்டமாய் நிறைமரக் கால்பொரி கும்பம்
அன்பான கற்கண்டு சீனியும்
தட்டினார் தேங்காய் திவசமது தப்பாமல்
தான்[1]சமைப் பானையது யேத்தினார்
ஏத்தியே வுலையதி லன்பா யமுதுசம்பா
இட்டார் கொதித்திட் டிறக்கினார்
மாத்தவே பொன்னுருவி யம்மனு முழுகியே
வந்தார் பணிப்பட் டுடுத்தவர்
எழுகதிரோ [2]னொளியெனவே மாணிக்கக் கொப்பிட்டு
ரெத்தினப் பணிகாதி லிட்டாள்
பழுதறப் பச்சைநிற மொத்தகை ரெண்டிலும்
பவளம் வெள்ளிக் [3]கடைய மிட்டாள்
இட்டாரே பொன்னரைஞ்ஞான் இடைமணி மேகலைகள்
இரவிமதன் மையல் கொள்ளச் சாத்தினார்
பட்டினா லுத்தரீக மிட்ட லெட்சுமி
பங்கயப் பெண்ணென் றிருந்தவள்
இருந்தார்கள் சூழவே யேலங் குழலாளுக்கு
[4]ஏந்திழைமார் சடங்கு செய்யவே
மின்னனைய ரெத்தின விதப்பலகை யதன்மேலே
மேகவர்ண [5]மாந்தளிர் விரித்தனர்
அன்னையர்கள் தாதியர்கள் மூப்பியர்களும் மகிழ்ந்து
ஆண்பெறுவா யம்மேயெனத் தேத்தவே
கூற்றை யுதைத்ததோர் சொக்கநாத ரருளாலே
கோதுகுலப் பொன்னுருவி மாசம்பத்து மானாள்.

உலை – சமைப்பதற்குப் பானையில் வைக்கும் நீர், **நிறைநாழி** – படி. **கொம்பனரிசி** – அரிசிவகைகளுள் ஒன்று. **நிறைமரக்கால்** – குறுணி. **பொரி கும்பம்** – நெற்பொரி குவியல். **சீனி** – சர்க்கரை. **திவசம்** – ஒரு நாள். **சம்பா** – ஒரு வகை நெல். **பணிப்பட்டு** – அழகிய பட்டாடை. **எழுகதிரோன்** – உதிக்கின்ற சூரியன். **மாணிக்கக்**

கொப்பு – மாணிக்கத்தால் செய்யப்பட்ட காதணி. **பணி** – ஆபரணம். **கடையம்** – முழங்கைக்கு மேல் அணியும் ஆபரணம். **பொன்னரைஞ்ஞாண்** – இடுப்பில் அணியும் பொன்னாலான கயிறு. **இடை** – இடுப்பு. **மணிமேதலை** – இடுப்பில் அணியும் ஆபரணம். **மையல்** – மயக்கம். **சாத்தினார்** – அணிவித்தார். **உத்தரீகம்** – மேலாடை. **லெக்ஷ்மி** – திருமகள். **பங்கயப்பெண்** – தாமரையில் வீற்றிருக்கும் திருமகள். **ஏந்திழைமார்** – ஆபரணம் அணிந்த பெண்கள். **ரெத்தின விதப்பலகை** – ரெத்தினத்தாலாள ஆசனம். **தாதியர்** – தோழியர். **மூப்பியர்** – மூதாட்டி. **தேத்தவே** – தேற்றவே. **கோதுகுலம்** – உயர்ந்த குலம் என்பதன் கொச்சை வடிவம்.

சு.சொ. 1. சனப்பானயது 2. னொழியெனவே 3. கடய 4. ஏந்திளைமார் 5. மாந்தழிர்.

The ceremonies on the ninth month

Offered *ponkal*[1] thus to *uṭaiyavar*[2]
And she informed the damsels of the fact,
In order to pray for the happy growth of her child
And to invoke blessings for **Ponnuruvi**
She did place a pot on the oven,
Puffed paddy in full measure and *kompan*[3] rice as well
In the pot she did put,
Along with the heap of that *Pori* in full measure,
She added sugar candy and sugar as well,
Broke coconuts on days all without fail,
Thus did she cook with the pot boiling,
When they put therein *Campa* rice as well
Removed they the pot after all the stuff was cooked,
Then did **Ponnuruvi** bathe and change her garments,
And wore silks fine and ruby earrings
Sparkling like the rising sun,
Adorned she her ears with gems as well
In both here hands gone greenish
She did wear *Kaṭayam*[4] of coral and silver
Waist bands and *mēkalai*[5] in gold,
As would make **Rati**[6] and **Manmatan**[7] yearn for them
She was made to wear

Donning a shawl in silk did she look like
Lakshmi veritable on the lotus
Around that damsel of elegant locks,
Women were there to perform ceremonies due'
On a gem studded plank luminous like lightning,
Mothers, maids and old dames all,
Blessed her heartily,
"Thou will beget a male child" they said
By the grace of **Cokkan̲ātar**[8] who did kick **Kālan̲**[9]
Ponn̲uruvi did reach the tenth month
In her family way.

1. *Ponkal*	-	Cooked rice
2. *uṭaiyavar*	-	Name of a deity
3. *Kompan̲*	-	A variety of rice
4. *Kaṭayam*	-	Bangle like ornament
5. *Mēkalai*	-	Ornament around the waist
6. **Rati**	-	The wife of manmatan
7. **Man̲matan̲**	-	The god of love
8. **Cokkanātar**	-	Lord **Civan̲**
9. **Kālan̲**	-	The god of death who was once kicked by Lord Civan

(பொன்னுருவி ஈத்துப்புரை கட்டச் சொல்லுதல்)

விருத்தம்

50. [1]பத்து மாச முருவளர்ந்து பாலன் பிறக்க வரும்நாளில்
[2]கர்த்தர் விதித்த அருளாலுங் கன்னி செய்த தவத்தாலும்
அத்தர் [3]சித்த ரருள்மறவா [4]அன்ன நடையாள் பொன்னுருவி
விஸ்தா ரம்மா யீத்துப்புரை விரைவி னுடன்கட்ட வேணுமென்றாள்.

கர்த்தர் – கடவுள். **கன்னி** – பொன்னுருவி. **அத்தர்** – உயர்ந்தோர். **சித்தர்** – சித்தி பெற்றவர்கள் **விஸ்த்தாரம்** – பார்த்த இடம். **ஈத்துப்புரை** – குழந்தை பெறும் அறை,.

பா.வே. 1. பத்தான மாசம் கருத்தர்த்து பாலன் வயித்தில் வளர்ந்துருவாய் 2. கத்தன் விதித்த விதியாலும் 4. பொன்னுருவியம்மைக்கு.

சு.சொ. 3. சித்தரருழ்

Po<u>nn</u>uruvi proposes construction of *Īttuppurai*

As the foetus had grown for full ten months
And as the child was about to be born,
As ordained by God's grace and owing to the damsel's penance
With the blessings of *Attar*[1] and *Cittar*[2] as well,
Po<u>nn</u>uruvi the damsel swan gaited
Wanted immediate construction of an *Īttuppurai* broad and spacious

1. *Attar* - The exalted folk
2. *Cittar* - Those who have attained *citti* or miraculous power

(மன்னன் ஈத்துப்புரை கட்ட ஆணையிடுதலும் ஈத்துப்புரை கட்டலும்)

51. வார்த்தைகேட்டு செம்பவளராசன் மாந்தையரை வரவழைத்து
வந்துநின்று [1]மாந்தையர்கள் வார்த்தையேது சொல்லுவாராம்
ஈத்துப்புரை சித்திரகூடம் [2]இன்பமுடன் கட்டவேணும்
உரைகேட்டு மாந்தையர்கள் உத்தமனை தன்னில்சென்று
ஆயுதங்கள் வகைவகையாய் ஆசாரிமா ரெடுத்து
வழிநடந்து மாந்தையர்கள் மாமலைமேல் சென்றேறி
வானமதை [3]நோக்கியல்லோ வளர்ந்தமரம் தன்னைக்கண்டார்
இந்தமரம் நல்லமரம் யீத்துப்புரைக் கேத்தமரம்
ஒருமரங்கொண் டுள்ளபணி [4]வொக்கவேதான் முடித்திடலாம்
மரங்கள்வெட்ட வேணுமென்று மாந்தையர்கள் [5]மனமகிழ்ந்தார்
மரத்தடியில் சென்றுநின்று வாய்த்தமரந் தன்னைச்சாய்த்தார்
மரங்கள்தன்னைப் பணிப்படுத்தி வண்டியின்மேல் தானேத்தி
தென்காசிப் படைவீட்டில் [6]சேர்ந்ததல்லோ மரங்கள்வந்து
வாள்மேலே வாள்நிறுத்தி [7]வாள்மானந் தான்பார்த்தார்.
[8]சரிந்தம்மை பின்னோக சதுரவளை தானறுத்தார்.

பிடித்திருந்து பின்னோகப் பிடிபலகை தானறுத்தார்.
தோழிமார்க்குச் சாய்ந்திருக்கத் தூணுகடைந்தே [9]நாட்டி
[10]நாட்காலுந் தானாட்டி நல்லவளை மேலேத்தி
மந்திரிமார் வந்திருக்க மணிமாட கூடம்வைத்தார்.

(ஈத்துப்புரை கட்டியவர்களுக்கு வெகுமானம் கொடுத்தலும் குடிபுகுதலும்)

ஈத்துப்புரை [11]முடித்தபோது ஏத்தகண்ணாளர் தமக்கு
[12]சம்பளமும் வெகுமானம் தான்கொடுத் தனுப்புவாராம்
மாந்தையர் போனபோது வாணுதலாள் பொன்னுருவி
பாப்பார்கள் [13]வேதியற்கு பால்பசுக்கள் தாளமிட்டாள்
கோப்பான வேதியற்கு [14]கொண்டிற்கூலி கொடுத்தாள்
வலதுகால் முன்னேவைத்து [15]மாதுநல்லாள் குடிபுகுந்தாள்.

மாந்தையர் – தச்சுவேலை செய்கின்றவர். **ஈத்துப்புரை** – குழந்தை பெறுவதற்காகக் கட்டப்படும் ஓர் அறை. **சித்திர கூடம்** – சமஸ்தான மண்டபம். **உத்தமனை** – உற்றமனை தன்னுடைய வீடு. **ஆயுதங்கள்** – உபகரணங்கள், கருவிகள். **ஆசாரிமார்** – மரவேலை செய்கின்றவர். **மாமலை** – உயர்ந்த மலை. **சாய்த்தார்** – மரத்தை வெட்டிச் சாய்த்தார். **பணிப்படுத்தி** – அழகுபடுத்தி, செப்பனிட்டு. **சதுரவளை** – சதுரவடிவில் உத்திரம். **பிடிபலகை** – நால்விரல் அளவு கொண்ட பலகை. **தூண்** – தம்பம். **நாட்கால்** – முகூர்த்தக்கால். **நல்லவளை** – நல்ல உத்திரம். **மணிமாட கூடம்** – மணி மண்டப அறை. **வெகுமானம்** – உபசாரம், வெகுமதி. **வாணுதலாள்** – ஒளிபொருந்திய நெற்றியை உடையவள். **பார்ப்பார்கள்** – பார்ப்பனர்கள், அந்தணர்கள், பிராமணர்கள். **வேதியர்** – பார்ப்பனர். **கொண்டிற்கூலி** – கொட்டில் கட்டப்பொருள். **மாதுநல்லாள்** – பொன்னுருவி.

பா.வே. 2. இப்போ வைக்க வேணுமென்றார் 3. முட்டியல்லோ வளந்தமரம் தான் பார்த்து 4. ஒக்க நிறை வேற்றிடலாம் 5. மிககூடி 6. வந்துமரம் குவிந்திலவாம் 7. மாந்தயர்கள் மரமறுத்து 8. சரிந்திருந்து மெய்னோக சரிவளை தாள் சேர்த்தார் 9. நாட்டுவாராம் 10 நாலுகால் நாட்டுவாராம் வல்லவளையேற்றுவாராம். 11. முகித்தபோதுயியல்புடைய கண்ணாளர்க்கு 12. உம்பளமுதான் 13. தங்களுக்கு 14. குதிரைக்குடைதான் 15. மாதாவும்.

க.சொ. 1. மாந்தயர்.

The king orders construction of *Īttuppurai*

On hearing words such (from **Po<u>nn</u>uruvi***)*
Cempavalarāca<u>n</u> did summon the carpenters,
Who did arrive and wait for the king's orders
When the king did say,
"*Īttuppurai*[1] and *Cittirakūtam*[2] should be built"
*As the carpenters listened to the instruction such
They did go home and bring tools theirs,
Of various kinds,
And did proceed towards the mountain huge
Where they did see a tree grown straight and high,
Towards the sky
"This is a good tree perfect and proper
To construct the *Īttuppurai,*
With just this single tree can we complete task that,
Let us cut the trees"
Saying thus happily under the tree they stood,
And did cut the trees suited for their work
They did then design the timber in shapes elegant
And in carts did transport to **Te<u>n</u>kāci** fortified,
Placing one saw above another they did look up,
And saw the sky
A square beam did they desire for the damsel,
To slide when in back pain
As a hand hold for her during labour pain such
Did they make a plank as well,
For the maids attending on her,
They did carve and erect pillars to lean on
An auspicious mast too they did instal
And did also construct a storeyed *Kūtam*[3]
Which the ministers all assembled to witness

She rewards the carpenters and moves into the *Īttuppurai*

As the construction of *Īttuppurai* was thus over,
To the craftsmen who did complete the work,
Po<u>nn</u>uruvi the damsel of forehead elegant
Did offer gifts besides wages theirs,
She also did give milch cows,
To Brahmins and *Vētiyars*[4]
To the *Vētiyars* proper she did give *Konṭir̲kūli*[5]
Then did the damsel virtuous,
Place her right foot forward and enter *Īttuppurai*

1. *Īttuppurai* - A chamber for child birth (a Maternity ward)
2. *Cittirakūtam* - A decorated hall for the assembly of important people
3. *Kūtam* - Hall or place of assembly
4. *Vētiyars* - Scholars in scripture learning
5. *Konṭir̲kūli* - Money to construct sheds for cows

(பிரசவம் பார்க்க மருத்துவச்சியை அழைக்கச் சிறுக்கன் செல்லுதல்)

52. குடிபுகுந்த நாழிகையில் [1]கூண்டநோவு துடங்கிடுமாம்
[2]வாராயென் மன்னவனே வயிறுரெம்ப நோகுதுகாண்
எந்தயெந்த மருத்துவத்தை [3]இமைக்குமுன்னே கூட்டிவர
[4]எட்டுச்செட்டி யென்றொருத்தி இருப்பாள்ராச மருத்துவத்தை
[5]கற்பூர வடிவாளே கைமேலே கூட்டிவாரும்
வர்த்தைகேட்டு ராசமன்னன் வரவழைத்தார் [6]சிறுக்கனையும்
[7]சிறுக்கனைத்தான் வரவழைத்துச் செய்திசொல்லி அனுப்புவாராம்
நெத்தியிலே நீறணிந்து [8]நிறையசோறு பசியாறி
கச்சைகெட்டி நாமமிட்டு [9]கையருவாள் தோளில்வைத்து
இஞ்சிவிளை தான்கடந்து யெலுமிச்சித் தோட்டமிட்டான்
மஞ்சள்விளை தான்கடந்து [10]மருதாணித் தோட்டமிட்டான்
ஆயத்துறை [11]தான்கடந்து அமுர்தசம்பா நிலமுமிட்டான்

(சிறுக்கன் மருத்துவச்சியைக் கூப்பிடுதல்)

குத்துக்கல்லு மீதேறிக் கூப்பிட்டானே [12]மூன்றுசத்தம்
மருத்துவமே மருத்துவமே [13]வாடியென்று தான்விளித்தான்
[14]ஆரடவா தூதுவனே அங்குநின்று விளித்தவன்றான்
நானல்லவோ தூதுவன்றான் நாடிஉனைத் [15]தேடிவந்தேன்
[16]சேனைவென்ற விழியாளுக்குத் திருவயிறு நோகுதென்று
மானைவென்ற விழியாளே அருத்திவரச் சொல்லிவிட்டார்
[17]பொன்கழஞ்சி பெத்தொழியப் பிறகாலே வருகுவேனோ.

நாழிகை – விநாடி. **கூண்டநோவு** – கொண்ட வலி. **வயிறுரெம்ப நோகுது** – வயிறு அதிகம் வலிக்கிறது. **எட்டுச்செட்டி** – எட்டுச் செட்டி என்ற மருத்துவச்சி. **கற்பூர வடிவாளே** – கற்பூரம் போன்ற வடிவை உடையவளே. **சிறுக்கன்** – வாலிபன். **நீறு** – திருநீறு. **கச்சைகெட்டி** – ஆடையை இறுகக் கட்டி. **நாமமிட்டு** – வைஷ்ணவரிடும் நாமம். **கையருவாள்** – கை அரிவாள். **எலுமிச்சி** – எலுமிச்சம். **தோட்டமிட்டான்** – தோட்டம் விட்டான் என்றும் பொருள். தோட்டத்தைக் கடந்தான். **ஆயத்துறை** – ஓர் இடத்தின் பெயர். **அமுர்து சம்பர** – ஒரு வகை நெல். **நிலமுமிட்டான்** – நிலத்தைக் கடந்தான். **குத்துக்கல்லு** – நேராக நடப்பட்ட கல். **மூன்று சத்தம்** – மூன்று முறை குரல் ஒலி எழுப்புதல். **விளித்தான்** – அழைத்தான். **ஆரடவா** – யாரடா அவன். **தூதுவன்** – தூதன். **சேனைவென்ற விழியாள்** – படைகளை வென்ற அழகிய விழிகளை உடைய பொன்னுருவி. **மானை வென்ற விழியாள்** – தனது விழியால் மானை வென்றவள். **அருத்திவர** – உபசரித்து அழைத்துவர. **கழஞ்சி** – கழஞ்சு. பன்னிரண்டு பணவெடை கொண்ட நிறை.

பா.வே. 1. மெய்னோவு 2. வாராயென் தோழியரே வருத்தமதா யிருக்குதுகாண் 3. செள்றழைத்துக் கூட்டிரவ 4. எட்டடுக்கு செட்டி மகள் 5. கர்ப்புடை வடிவாளே கையோடே 6. ஒட்டனைத்தான் 7. ஒட்டனையும் வரவழைத்து உறுதி 8. நீர்ச் சோறு 9. கையில் செங்கோல் தொழுதெடுத்தான் 10 மருதனிவாழ் 11. சாயக்கல்லு அமுதசம்பாறிலம் சடந்தான் 12. மருத்துவத்தை 13. ஒறைரண்டு விளிவிளித்தான் 14. ஆரடா நீ தூதுவனே அங்கே நின்று விளிக்கிறது 15. கூட்டவந்தேன் 16. தென்னனை பொன்னுருவியம்மை.

சு.சொ. 9. தோழில் வைத்து 13. தான்விழித்தான் 17. பொன்களஞ்சி

Cirukkan goes to fetch a marutuvacci for the delivery

No sooner did she enter the *Īttuppurai*
Than the labour pains started

"Oh! My Lord my abdomen doth ache much,
There is but one midwife by name **Ettuccetti**
Royal *Marutuvacci*[1] she is with a figure like Camphor
Do bring her but immediately"
On hearing words these the king did summon,
A *Ci͟rukka͟n*[2] there and sent him with the tidings,
The youth thus bidden wearing *Tiruniru*[3]
On his forehead and eating quite heartily
With his garments worn but tightly
And sporting a *nāmam*[4] as well,
Passed he *Ĩñcivilai*[5] and the lemon grove too
Left he *Mañcalvilai*[6] and the mehendi garden also,
Then did he pass **Āyattu͟rai**[7] and the *amurtacampā*[8] field as well

Ci͟rukka͟n calls the _maruttuvacci_

Climbing a *Kuttukkallu*[9] there,
The *Ci͟rukka͟n* did summon the mid wife thrice
"Who are you calling me from there"
She did ask, "Art thou messenger any?"
He did reply,
"A messenger am I in search of you,
Have I come to seek service thine,
The damsel whose eyes did conquer armies,
Doth suffer from pain in abdomen hers
That damsel with eyes more beautiful than a deer's
Has sent me to fetch you there"
Will I come anywhere without wages mine
Paid in *Po͟n* by *Kal͟añcu*[10] proper?"

1. *Maruttuvacci* - Mid wife
2. *Ci͟rukka͟n* - Youth
3. *Tiruni͟ru* - Sacred ash
4. *Nāmam* - A vaishnavite mark worn on one's forehead
5 – 7 . Name of a places

8. *Amurtacampā* - A kind of paddy
9. *Kuttukkallu* - An erected stone
10. *Kalañcu* - A certain measure

(மருத்துவச்சி சிறுக்கனிடம் பேரம் பேசுதல்)

53. [1]ஒருகழஞ்சிப் பொன்தருவேன் [2]ஒண்ணுதலே மருத்துவமே
ஒருகழஞ்சிப் [3]பொன்னுக்கு ஊருவிட்டு வருகுவேனோ

இருகழஞ்சி பொன்தருவே னெழுந்திரேடி மருத்துவமே
இருகழஞ்சி பொன்னதுதா [4]னிருதரைக்குப் பரிகாரம்
மூன்றுகழஞ்சிப் பொன்றருவேன் மொய்குழலே [5]மருத்துவமே
மூன்றுகழஞ்சிப் பொன்னதுதான் முத்தத்தில் முருங்கைதரும்

நாலுகழஞ்சிப் பொன்றருவேன் [6]தட்டாதே மருத்துவமே
நாலுகழஞ்சிப் பொன்னதுதா [7]னடைப்படிக்கால் சிலவடவா

அஞ்சிகழஞ்சிப் பொன்றருவே [8]னாயிழையே [9]மருத்துவமே
அஞ்சிகழஞ்சிப் பொன்னதுதா [10]னருமையல்ல நீபோடா

ஆறுகழஞ்சிப் பொன்றருவேன் தட்டாதே [11]மருத்துவமே
ஆறுகழஞ்சிப் பொன்னதுதான் [12]சோறுகறிக்குப் பத்தாது

ஏழுகழஞ்சிப் பொன்றருவே னெழுந்திரேடி மருத்துவமே
ஏழுகழஞ்சிப் பொன்னதுக்கு இருப்பிளகி வருவேனோ

எட்டுக்கழஞ்சிப் பொன்னொத்தபோது கிட்டவந்து தலையசைத்தாள்
ஒன்பதுகழஞ்சிப் பொன்னொத்தபோது உபசரித்தாள் சிரித்துக்கொண்டாள்
பத்துகழஞ்சிப் பொன்னொத்தபோது படிகடந்து [13]வெளியில் வந்தாள்.

ஒண்ணுதல் – ஒளிபொருந்தி நெற்றியை உடையவளே. **தானிரு தரைக்கு பரிகாரம்** – தான் இருக்கின்ற இடத்துக்குச் சமானம். **மொய்குழலே** – அடர்ந்த கூந்தலை உடையவனே. **முத்தம்** – முற்றம், வீட்டின் முன் உள்ள இடம். **முருங்கை** – ஒரு மரம். **தட்டாதே** – மறுக்காதே. **நடைப்படிக்கால் சிலவடவா** – நடந்து செல்லுகின்ற வழிச் செலவுக்குக்கூட போதாது. **அஞ்சி** – ஐந்து. **ஆயிழையே** – ஆபரணங்களை

அணிந்தவனே. **அருமையல்ல** – அரியதன்மையல்ல. **சோறுகறி** – உணவு, காய். **இருப்பிளகி** – இருந்த இடத்திலிருந்து எழுந்திருந்து. **தலையசைத்தாள்** – வருகிறேன் என்று தலையசைத்தாள். **உபசரித்தாள்** – மரியாதை செய்தாள்.

பா.வே. 2. ஓவியமே 3. பொன்னதுதான் ஒருநேரம் கடைச்சிலவு 4. யிருந்தயிடம் தனில் வருமே. எழுந்திரடி 6. நன்னுதலே யெழுந்திரடி 7. நடையரங்கு முத்தெடுப்பேன் 9. அலக்கு டாதே எழுந்திரடி 10 மஞ்சள்க் குளிக்க பத்தாது 11. எழுந்திரம்மா 12. ஆசைமருமகனுக்கு ஆக்கிவிடப்பாத்தாது.

சு.சொ. 1. ஒருகளஞ்சி 8. ளாயியையே 13. அடிகடந்து வெழியில் வந்தாள்.

The midwife bargains for her wages

The *Cirukkan* did offer,
"One *Kalañcu Pon* shall I give, Oh! *Maruttuvacci*"
She did reply,
Shall I leave my place for just one *Kalañcu Pon*?"
"I shall give thee two *Kalañcu pon*
Do get up and come with me"
"The *Kalañcu pon* is adequate only here to attend
Where I live"
"Three *Kalañcu* shall I give,
Oh! midwife with locks dense"
"The *Kalañcu pon* the *murunkai*[1] tree'
At my *murram*[2] will give me"
"Four *Kalañcu* let it be, refuse not Oh! *Maruttuvacci*
Four *Kalañcu* will not suffice
Even for the expenses on the way"
Five *Kalañcu pon* I shall give oh! midwife bejewlled,
"Five *Kalañcu* is not an amount quite rare,
Begone thou fellow"
"Six *Kalañcu* shall I pay do not refuse Oh! Midwife"
Six *Kalañcu* is not enough for my rice and curry even"
"Make it seven *Kalañcu* do get up Oh! Midwife"
"Shall I leave my place for *Kalañcu* seven?"
When he offered eight *Kalañcu* she did come near and nod

As he increased it to nine *Kal̲añcu* she laughed
And did entertain him
And when the offer was fixed at ten *Kal̲añcu* finally
She did step forth and walk out

1. *Murunkai* - Drumstick (A Vegetable)
2. *Mur̲r̲am* - Front yard

(ஓட்டனிடம் மருததுவச்சி நடக்கமுடியாது எனக் கூறல்)

54. ஓட்டனோடே மருத்துவமுங் கேட்டாளே வொருவார்த்தை
நான்கிழவி யுன்னோடே நடக்கவுந்தான் மாட்டேனே
நீகிழவி யானாலு நெஞ்சித்திடம் போய்விடுமோ
குப்பையிலே போட்டாலுங் குன்றிமணி மங்கிடுமோ
[1]பசுக்கிழ டானாலும் பாலுருசி போய்விடுமோ
நான்மாட்டே நீபோடா [2]நல்லபுகழ் தூதுவனே
என்னைப்போலப் பலபேருண்டு இப்பெரிய பட்டணத்தில்
பாத்தழைத்துக் கொண்டு போநீ பாவைநல்லாள் பதறாமல்
இத்தனைபேர் மருத்துவத்தா ளிருந்தாலு மிப்போது
உன்னையல்லோ சொல்லிவிட்டா ளொண்ணுதலாள் பொன்னுருவி
பண்டுபோல நான்மகனே பரபரென நடக்கமாட்டேன்
காதவழி நடக்குமுன்னே கால்கடுக்கு முடலிளைக்கும்
வெயிலதிலே நடக்கமாட்டேன் விழுந்திடுவேன் வழிதனிலே
கைதாங்கிக் கொண்டுபோவேன் கன்னியரே வாருமென்றான்.

(மருத்துவச்சி கஞ்சி வைக்க வேணும் எனல்)

கூன்கிழவ னொருவனுண்டு கூடரண்டு குழந்தையுண்டு
கஞ்சிவைக்க வொருவரில்லை காலதாமச முண்டானால்
நான்வார தில்லையென்று நகட்டிமொழி பேசிவிட்டாள்

ஆனாலு மருத்துவமே [3]ஆபத்துக் குதவவேண்டும்
அறிவே னறிவேனடா அங்கேயுள்ள பெண்டுகளை
பண்டுநா னங்கேவந்து பட்டசழன் ரெம்பவுண்டு
தலைக்கெண்ணை தந்தாரில்லை தானேயந்தப் பெண்டுகள்தான்
துகிலாடை தாரேனென்றாள் சொல்படிக்குத் [4]தந்தாளில்லை
கொத்தியார்க்கு நிறைமரக்கால் [5]வித்தளந்து வைத்தாளில்லை
உள்ளபடி பதிவதிலும் ஒட்டிரெட்டி வாங்கித்தாரேன்
உரைத்தமொழி தனைக்கேட்டு [6]உத்தபுதழ் மருத்துவமும்

(மருத்துவச்சி புறப்படுமுன் நிமித்தம் பார்த்தல்)

இருகைக்கு வளைபூட்டி இலங்குமணிப் பட்டுடுத்தாள்
கெட்டுப்பெட்டி தனையவிழ்த்து பட்டுப்பருவட்ட மெடுத்தாள்
கூழைப் பிரம்பெடுத்தாள் கூனிக்கூனி வழிநடந்தாள்
[7]வாரபோது வழிதனிலே வந்தெதிப்பு பார்க்கலுற்றாள்
வட்டமிட்டு கெருடாழ்வார் [8]வலமிருந் திடம்பாய்ந்தார்
சட்டமாய் நல்குறிகள் தான்பார்த்தேன் [9]தூதுவனே
யெறுவதுமே [10]யாண்பெறுவாள் பேருமுண்டு யெந்தனுக்கு
பொன்னுருவி வீத்திருக்கும் புகழீத்துப் புரைதனிலே
அஞ்சாதே [11]யென்றுசொல்லி அறைபுகுந்தாள் மருத்துவமும்.

ஓட்டன் – ஓடிச்சென்று செய்தி சொல்லுபவன். **நெஞ்சி** – நெஞ்சு என்பதன் பேச்சு வழக்கு. **நெஞ்சித்திடம்** – மனவலிமை. **குன்றிமணி** – குன்றிச் செடியின் சிவப்பு விதை. **பசுக்கிழடு** – வயது முதிர்ந்த பசு. **பாத்தழைத்து** – பார்த்து அழைத்து. **பாவை நல்லாள்** – சித்திரப் பாவை போல் விளங்குகின்ற பெண். **ஒண்ணுதலாள்** – ஒளி பொருந்திய நெற்றியை உடையவள். **பண்டு** – பழமை. **பரபரென** – விரைவாக. **காதவழி** – ஏழரை நாழிகை வழி. **கால்கடுக்கும்** – கால் வலிக்கும். **கைதாங்கி** – கைபிடித்து. **கன்னி** – பெண். **கூடரண்டு** – உடன் இரண்டு. **கஞ்சி** – உணவு வகையில் ஒன்று. **காலதாமசம்** – காலதாமதம். **நகட்டி** – அகற்றுவதற்காக. **பெண்டுகள்** – பெண்கள். **பட்டசழன்** – பட்ட துன்பம். **ரெம்பவுண்டு** – அதிகம் உண்டு. **துகிலாடை** – சீலை துணி. **கொத்தியார்க்கு** – பிறர்க்கு. **நிறைமரக்கால்** – எட்டுப்படி கொண்ட ஒரு முகத்தல்

அளவு. **பதிவு** – வழக்கத்துக்கு மேலாக. **ஒட்டிரெட்டி** – ஒன்று இரண்டு. **உத்தபுகழ்** – உற்றபுகழ். **வளையூட்டி** – வளையல் அணிந்து. **இலங்குமணி** – பிரகாசிக்கும் மணி. **கூழைப்பிரம்பு** – நீளங்குறைந்த பிரம்பு. **கூனிக்கூனி** – வளைந்து வளைந்து. **வாரபோது** – வருகின்றபோது. **வந்தெதிப்பு** – எதிரே வருவது பார்த்தல், சகுனம் பார்த்தல். **கெருடாழ்வார்** – விஷ்ணுவின் வாகனமான கருடன். **சட்டமாய்** – உண்மையாய். **அஞ்சாதே** – பயப்படாதே.

பா.வே. 7. வாரதொரு வழிதனிலே வாய்த்தபலன் காணுறாளாம் 8. வரத்தே சுத்திய்டடத்தே வர 9. சடையாதே 10. ஆண்பிள்ளை தான் போறுமுண்டு நமக்கெனவே 11. மகளேளென்று சொல்லி.

க.சொ. 1. பசுக்கிளடானாலும் 2. நல்லபுகன் 3. ஆபத்துக்குதக 4. தந்தாழில்லை 5. வித்தழந்து 6. உத்தபுகள்.

The midwife tells the runner that she cannot walk the distance

The midwife then did tell the *ōttaṉ*[1]
"An old hag am I, I cannot walk along with you"
Replied the messenger,
"Though an old woman strong willed thou art
Kunṟimani[2] will not its luster lose and fade
Even if in garbage dumped
If the cow becomes old will its milk turn sour?"
"No, I won't come go away thou messenger renowned,
So many are there like me in this city big,
Seek one of them and take her,
To attend on the ailing damsel virtuous"
The messenger did persist,
"Even if there are midwives many,
Poṉṉuruvi did specify only thou among the lot"
"But walk I cannot briskly asin the past,
Before I walk but one *kātam*[3] my legs will ache,
My body will tire and I won't walk when the sun is hot
I may fall by the wayside"
The messenger did the midwife assure,
" I shall take you by holding thee in my hands
Do come oh! *Kaṉṉi*[4]

A hunch backed old man and children two as well
Are with me and nobody is there
To prepare food for them if there is any delay
Hence I won't come said she,
To get rid of the messenger,
"You have to help however in an emergency oh! Midwife
She said then
"I know, I know the womenfolk there
In the past I have gone over there and suffered a lot,
They did not give me oil for my head
Nor did they give me sarees as they promised
They did not give grains in full measure,
To others as well"
The messenger said,
"I shall get you twice your usual wages"
On hearing assurance such

The midwife looks for proper omens before leaving

The midwife famed did with bangles
Adorn her hands both and put on sparkling gems and silk
Opened her *Kattupetti*[5] and took out the *parivattam* silken
She did as well take out a cane short,
And walked with her back bent,
As she moved out she did look,
Who or what did come from the side opposite,
When she did look thus,
A *Karuṭāḻvār*[6] did dart above,
Flying from right to left.
"God omens have I seen verily
Oh! Messenger, she will a male child beget,
It'll be proud for me too to assist"
She did thus reach the *Īttuppurai*

Where **Ponnuruvi** stayed and entered the room
Asking **Ponnuruvi** not to have apprehensions any

1. *ōttan* - A runner who delivers messages
2. *Kunrimani* - A red and black seed used to weigh gold (crab's eye)
3. *Kāt·am* - A distance of ten miles
4. *Kanni* - Young woman
5. *Kattupetti* - A box which can be closed and tied
6. *Karutālvār* - The kite which is supposed to be the mount of Lord **Tirumāl**

(மருத்துவச்சி காலதாமதமாக வந்ததற்குக் காரணம் சொல்லுதல்)

55. ஓடியே தூதுவன்வந்த பொழுதில் வாராமல்
[1]உடனே துரிதமாய் வாராதிருப்பது யேது
கூட்டிக்கை யடிதொழுது மருத்துவத்தா [2]ளுரைப்பாள்
குழந்தைகள் அஞ்சாறுவுண்டு கஞ்சிக்கில்லை தாயே

புருஷனோடே பிள்ளையேழு நானு முதலாக
பொய்யல்ல [3]காணும்மானை ஒன்பது பேருண்டு
[4]பொறுத்திரு நானசல்வீட்டில் கடன்வாங்கிக் கொடுத்து
[5]புகழ்பெரிய [6]தூதுவனார் கூடவந்தே னானும்

வருகிற [7]தவர்களுக்கு வார்த்தை சொல்லிவந்தேன்
வாணுதலாள் பொன்னுருவி [8]திருவயிறு வாழ்ந்தாள்
தருகிறதோர் பொன்பணமும் பருவட்முளு [9]சேலை
[10]தலைச்சுமடாய்க் கெட்டிக்கொண்டு வாரேனென்று வந்தேன்.

திருவாணைப் படியே தரவேணு மம்மா
சீக்கிரமா யோடிவந்தேன் தாமசிக்க வில்லை
பொன்னுருவி தன்னோடே மருத்துவத்தா ளிருக்க
பொன்னரிய சித்திரகூடந் தன்னிலெழுந் தாளே.

(மருத்துவச்சி பிரசவம் பார்க்கத் தேவையான பொருட்களைக் கொண்டுவரச் சொல்லுதல்)

விளக்கினொடு [11]நிறைநாழி [12]கொண்டுவாடி மகளே
மிக்கயெண்ணை புண்ணாக்கு மஞ்சணையும் வேணும்
[13]நாவிலிட்டால் நனையத்தக்க பருவட்டமும் வேணும்
[14]நன்மையாக நூத்தெட்டுப் பொன்கட்டி வைக்கவேணும்

பெரியபொன்னுங் கலமுந் [15]திருவன்கூறை வேணும்
பெரியமுத்த பொத்தியார்க்கு [16]குறுணிநெல்லு வேணும்
[17]இருக்கவொரு முக்காலி இலையதுவும் வேணும்
எண்ணையோதிப் போடவொரு கிண்ணிவட்டில் வேணும்

நஞ்சுண்ட மனுசரைப்போல்கஞ்சி விசாரத்தால்
நாலுதட்டா வளையவொரு பூவாடை வேணும்
மஞ்சனைவேல் விழியாளுக்குத் தாகம்வந்தால் குடிக்க
பன்னீருச் செம்பதிலே [18]வென்னீரும் வேணும்

[19]தியக்கம்வரும் போதிலொரு வேர்வைவந்து தானால்
திருமுகத்தில் [20]வீசவொரு விசிறியும் வேணும்
[21]உடல்குளிர்ந்து நடுநடுங்கி வாரபோது குடிக்க
[22]உறப்பாக வொருசுங்கான் [23]புகையிலையும் வேணும்

எண்ணமில்லாத் தோழியர்கள் சொன்னதெல்லா மறிந்து
[24]ஏந்திழையாள் [25]கேட்டதெல்லா மெடுத்தவள் கொடுத்து
கொடுத்ததெல்லாம் வாங்கியவள் கொத்தியார்க்கு வைத்து
கொடியிடையாள் மருத்துவமும் வயிறுகளையும் பார்த்தாள்.

துரிதமாய் – விரைவாக. **கூட்டிக்கை** – இருகையும் சேர்த்து. **அஞ்சாறு** – ஐந்து, ஆறு. **கஞ்சி** – உணவு. **புருஷன்** – கணவன். **காணும்மாணை** – உன் மேல் ஆணை காண். **அசல் வீட்டில்** – அருகாமையில் உள்ள வீட்டில். **வாணுதலாள்** – ஒளி பொருந்திய நெற்றியை உடையவள். **திருவயிறு வாழ்ந்தாள்** – பிள்ளை பெறப் போகிறாள். **திருவாணைப்**

படியே – சொல்லிய படி, **நிறைநாழி** – மங்கலக்குறியாக நெல் வைத்து நிரப்பிய நாழி. **புண்ணாக்கு** – பிண்ணாக்கு. பருவட்டம் – பரிவட்டம், துணி. **நூத்தெட்டு** – நூற்றெட்டு என்பதின் பேச்சு வழக்கு. **பொன்** – ஒன்றே கால் மதிப்புள்ள ஒரு நாணயம். **கலம்** – உண்கலம். **திருவன் கூறை** – புதுப்புடவை. **குறுணி நெல்** – ஒரு மரக்கால் கொண்ட நெல். **கிண்ணி வட்டில்** – கிண்ணம். **விசாரத்தாள்** – கவலையுடையவள். **நாலுதட்டா** – நான்கு சுற்றா. **மஞ்சனைவேல் விழியாள்** – மேகம் போல் கரிய வேல் போன்ற விழியையுடைய பொன்னுருவி. **செம்பு** – ஒரு பாத்திரம். **தியக்கம்** – மயக்கம், சோர்வு. **உறப்பாக** – காரமாக. **சங்கான்** – புகை குடிக்குங் குழாய். **ஏந்திழையாள்** – அழகிய ஆபரணம் அணிந்த பெண்.

பா.வே. 1. ஒண்ணுதலே மருத்துவமே 2. சொல்வாள் 3. காண்திரு வாணைப்படி பதினாறு பேர்களுண்டு 4. பொறுதிக்கங்கே 6. பிறகாலே ஓடிவந்தேன் பொன்னுருவியம்மா 8. ஆண்மதலை பெறுவாய் 9. சேர 10. கொடுவரவேன் என்று சொல்லி 12. மரக்கால் வேணும் 13. நாலு தட்டாய் வளையதக்க 14. நாட்டமுடன் 15. திருவிளக்கு வர வேணும் 16. நிறை விளக்கு வேணும் 17. எனக்கிருக்க முக்காலியிலை பழுப்பு வேணும் 18. தண்ணீரும் 19. திசங்கி நிற்கும். வந்தாள் வீச 20 வீசப்பொன்னால் 21. உடல் நடுங்கி குளிர்ந்து வரும் நேரம் வந்தால் குடிக்க 22. உறப்பாக மூன்று சிங்காள் 25. கேட்ட பண்டம் எல்லாங் கொடுத்தாரே.

சு.சொ. 5. புகள்பெரிய 7. தவர்கமுக்கு 11. நிறநாழி 23. புகயிலையும் 24. ஏந்திளையாள்.

The midwife explains the reason for her delayed arrival

"Though the messenger did rush to you fast
Why did you not come urgently?"
As the midwife was thus queried she did reply
Joining her hands by way of obeisance courteous,
"Children five or six have I no food there is to eat,
With my husband children and I,
We are nine in all and I am not lying
I do swear by thee
Hence did I ask the messenger to wait,
Borrowed from my neighbour to feed (family nine)
And then did accompany thy messenger renowned
To the others who did my service seek
I did explain the reason to go over here,
As **Ponnuruvi** is about to beget a child
Go there I shall and return carrying as head load

Gold coins *parivattam*[1] and sarees
That they give me there
As assured by your orders thus
Thou shall reward me oh! Dame
The midwife did thus stay with **Po<u>nn</u>uruvi**
And along with her retired to *Cittirakūtam*

The maruttavacci requires certain articles for the delivery

"Oh! My daughter bring a lamp and a *niṟaināḷi*[2],
Oil oil cake and *mañcanai* too are needed,
A *parivattam* so then as will drench if put on the tongue,
Place gold coins a hundred and eight,
In a pouch but auspiciously and put aside,
A bowl and a saree new must be there,
To the elderly *Kottiyār*[3] a measure of paddy is needed,
A Three legged stool to sit and a leaf as well
A *Kiṇṇi* is required to contain the oil for dousing
With incantations auspicious,
To the damsel as worried as folk who have poison consumed,
A flowery garment long enough to drape her,
In full four rounds,
To quench the thirst of the lance eyed damsel,
Hot water must be ready in a rose water bowl
When she doth get dizzy and sweat
A fan must be handy there for fanning
When her body is chilled and she shivers
To smoke there should be a pipe with tobacco pungent"
As the midwife did instruct thus
Po<u>nn</u>uruvi with the help of her maids innumerable
Provided all that the *maruttuvacci* demanded
The midwife did receive them all
And distribute to the *Kottiyār* accordingly
Then did the midwife examine the abdomen of the damsel

1. *Parivattam* - A piece of cloth worn as a band
2. *Niraināḻi* - A measure filled with paddy
3. *Kottiyār* - Elderly women who assist the midwife

(பொன்னுருவி பிரசவ வேதனையால் அழுதல்)

56. ஆகோவென் றழுதா ளலறிமண்ணில் [1]விழுந்தாள்
ஓகோகோ மருத்துவமே இனிவுனக்கே பரமென்பாள்
பொன்போல் சரீரம்விசற்பாள் புவியில் புரண்டழுவாள்
புவியைப்படைத் தோனேயிந்த பொல்லாங்கெல்லாஞ் செய்தாய்
நஞ்சோ நடுவயிற்றில் நாதன்தரிப் பித்தாரோ
கெர்ப்பமென்றே யிருந்தேன் கிலேசமென் றறியாமல்
இருப்பேனோ பாருலகி லினிப்பாலகன் வேண்டாம்
முன்பாடு பட்டறியேனென்று மொழிவாள் குழறிடுவாள்
வாரூர் பெருமானே மங்கையுடை பாகர்
ஆரூர்ப் பெருமானே அபயம் உமக்கபயம்
வாழைத் தடைபோலொத்த வர்ணத்துடை யிரண்டும்
காளைகட்டுங் கயிறதுபோல் கட்டுவிட்டு வருகுதேடி
காலமே சிறுநாளில் கைப்பிடித்த கணவனை
மாலைதந்து அனுப்புமென்றந்த மணவாளனா ரெங்கே
மன்னா உயிர்கன்னுதே மரிப்பேன் மண்ணில் முழிப்பாய்.

சரீரம் விசற்பாள் – உடல் வியர்ப்பாள். **புவியில்** – பூமியில். **கெற்பம்** – கர்ப்பம். **கிலேசம்** – துக்கம். **பாலகன்** – மகன். **மொழிவாள்** – சொல்லுவாள். **வாழைத்தடை** – வாழைத்தண்டு. **துடை** – தொடை. **உயிர்கன்னுதே** – உயிர்போகுதே.

க.சொ. 1. விளுவாள்.

Po<u>nn</u>uruvi weeps in labour pain

Ponnuruvi cried aloud and screamed
Falling on the ground

"Oh! *Maruttuvacci* it is time for your to act
She would say
Sweat she would all over her body golden,
Roll on the ground and cry she would,
"Oh! Creator of earth why did thou create mischief this?
Is it poison in midriff mine created by the Lord?
Am I to suffer this and isn't the God neutral
I thought it was conception mere not knowing
It to be agony quite
Will I live any longer on earth
A son I don't need as I haven't suffered
Like this before"
Thus she would lament and prattle
"Oh! **Ārūr Perumāḷ**[1] consort of **Umai**[2]
Oh! Lord of **Ārūr** thy shelter dog seek as refuge,
My fair thighs both like plantain pith
Seem to disintegrate and snap,
Like the rope used to tether bullocks,
Where is my husband who in wedlock ours
Did hold my hands at my tender age?
Send him to me
Oh! King, my life doth ebb in pain
Die I shall, do come and see me"

1. **Ārūr Perumāl** - Lord **Civan** of **Tiruvārūr**
2. **Umai** - Consort of **Civan**

(பொன்னுருவி பிரசவ வேதனையில் கூறிய மொழிகள்)

57. இரங்கியவர் திருவுளமா யீசுரனார் தன்மேலே
மலங்கிமட வார்கள்சிலர் வாய்ப்பதற் கேதுசொல்வார்

ஈன்றறியேன் யெடுத்தறியே னேதும்பழி நானறியேன்
ஈன்றெடுத்த தாய்மாரே யெனக்குப்புத்தி [1]சொல்லியளோ

குடலையெல்லாம் பிடுங்கியொன்றாய்க் கூடுதேடி மருத்துவமே
அப்போது மருத்துவத்தா [2]ளவளேது வார்த்தைசொல்வாள்
இந்தவகை யெடுவிடியா யெடுக்குதேடி பின்னோவு

ஈசர்திரு வாக்குவுண்டு இக்குழந்தை யாண்பிள்ளைதான்
என்றுசொல்லி மருத்துவத்தை யேதுசொல்வாள் பொன்னுரவி

சாவேனோ பிழைப்பேனோ தாழ்குழலே மருத்துவமே
சாவதுக்குங் குறிசொல்லடி யாவதுக்குங் குறிசொல்லடி

குறிக்குமுன்னே கூன்பல்லிதான் குரலையிட்டுச் சொல்லிடுமாம்
நின்றநிலையில் சொன்னபல்லி நீலமென்னு மிடைசிவப்பு

எல்லையிது வென்குறிதா னெழுதிடலாம் செப்பேட்டில்
நல்லதம்மே உண்டைசொன்னே னடுக்கமுற வேணாமே

நடுங்குதம்மா [3]யெந்தனுடலம் நன்னுதலே மருத்துவமே
கொடும்பகையோ கடுஞ்சனியோ சொல்லவந்த கோலமிதோ
இடும்புசெய்யு மென்வயித்தி ரேதுபிள்ளை மருத்துவமே

மன்றாடித் தவமிருந்தேன் வரமளித்தாள் சாகவென்றோ
சாவதுக்கு லெக்கேயிது சனித்தபிள்ளை யால்வயிறு

நோவதுக்குங் குறைகளில்லை நுன்பலப்பட்டேன் னுடல்தான்
போவதுக்குக் குறிசொல்லடி பெண்ணேநீ மருத்துவமே

கொன்றையணியுஞ் சிவனே கூத்தாட்டுப் பாராதே
பண்டைவிதியோ சிவனே படுமறுக்கம் பார்க்கலையோ

பருத்திபடாப் பாடதிலும் பதின்மடங்கு பாடுபட்டேன்
ஒருவரெனக் குதயில்லை [4]வுடையவரே யென்றமுதாள்.

மலங்கி – கலங்கி. **மடவார்கள்** – பெண்கள். **தாழ்குழல்** – நீண்டகூந்தல், **கூன் பல்லி** – வயதான பல்லி. **குரலையிட்டு** – சத்தம்செய்து. **வென்துறி** – நல்லகுறி. **செப்பேடு** –

தாமிர சாசனம். **எந்தனுடலம்** – எந்தன் உடல், சரீரம். **நன்னுதலே** – பெண்ணே. **மன்றாடி** – வேண்டி. **லெக்கு** – இலக்கு, அடையாளம். **சனித்தபிள்ளை** – உண்டானபிள்ளை. **நுன்பலப்பட்டேன்** – துன்பப் பட்டேன். **கொன்றை** – சிவபெருமாள் அணியும் கொன்றைப்பூ. **கூத்தாட்டு** – நடித்தல். **புருமறுக்கம்** – மிகுதியான மனக் குழப்பம். **பருத்தி படாப் பாடு** – பருத்திப் பஞ்சு படும் துன்பத்தை விட மிகுதியான துன்பம். **பதின்மடங்கு** – பத்து மடங்கு. **உடையவரே** – கடவுளே.

க.சொ. 1. சொல்லயழோ 2. ளவழேது 3. யெந்தனுடடழம் 4. வுடயவரே.

Ponnuruvi's utterances while suffering from labour pains

Thus did she piteously pitch her faith in God
When some maids there did frantically falter
"Begotten I have not nor have I handled a child
I know not what to do,
Oh! Mothers who have begotten children,
Do suggest a way (to relieve the pains)"
Ponnuruvi did then lament,
"Intestines mine see but dismantled
And put again together, Oh! Midwife"
The *maruttuvacci* did remark,
"This back pain of thine is quite severe,
It is a male child for certain, as God hath said"
As the midwife did utter thus **Ponnuruvi**
Did in despair reply,
"Die or survive, I know not what will happen to me,
Oh! Midwife, do predict death or survival"
Ere the midwife could reply,
An old lizard did loudly tick
On hearing which the midwife did say,
The lizard which did tick in standing posture its,
Is bluish but red in the middle
And hence my *Kuri* will come true for certain
This in a copperplate can well be inscribed
It is all for good truly have I spoken,

You need not fear"
The damsel did reply,
"Oh! Midwife my body doth shiver however,
Is it enmity vengeful or Saturn severe
Or a shape designed but to kill me?
With my abdomen tormenting me thus
Can there be a child?
Entreating penance did I perform,
Has the goddess granted me a boon of death?
This is indication of death for sure,
A cursed child Saturn crossed is this,
Pains are there unabated, sufferings are many,
Oh! Midwife tell me the way to die
Oh! **Civan** who doth wear *Konrai*
Do not enact this play thine,
Is it my destiny past or hast thou not seen,'
The pains that I suffer?
Ten times more than what cotton suffers (while beaten)
Have I suffered?
None to help me, Oh! God" she cried,

(பொன்னுருவிக்கு மருத்துவச்சி ஆறுதல் கூறல்)

58. தவமே செய்தமகனால் பட்டசழனே வுலகறியும்
தாய்பத்து மாசம்சுமந்து பெற்றதறிவா ரிந்தவுலகோர்
அகமே யிதுநோவை மகனறியான் மருத்துவமே
ஆயிரந்தேள் கொட்டும் விசமே பொறுப்பேனோ
என்றுசொன்ன பொன்னுருவிக் குரைப்பாள் மருத்துவமும்
என்செய்வோம் நமக்குள்ள நோவிது வுனக்கோ சகலருக்கும்
புவியிலுள்ளோர் [1]கேட்க வாய்விட் டலறாதே நகையாமல்
பொன்னம்மா பதறாதே நீயும் புத்திரன் றன்னைப் பெறுவாய்
திட்டுவாள் பிடித்திடும் பேரையுஞ் சிவனேதஞ்ச மென்றாள்

சிறுவன்மேல் [2]மனம்வைப் பதைவிட செத்துப்போறது நல்லது
கூத்தவா யென்னைக் கொல்லவோ சிறுபிள்ளையா [3]யவதரித்தாய்
[4]கொடியா ளுன்னைப் பெறுமுன்னுயிர் கொண்டுபோ மெனமொழிவாள்
[5]ஆயிழை யாளிவள் படும்பாடு கண்டவையோ முறையென்பாள்
[6]அரனேபிசிசை போடுயென்பாள் அழுவாள் புரண்டிடுவாள்
சிலபேர் [7]புலம்பிடுவா ரதில்சிலபே ரமத்திடுவார்
சிவசிவாயென்ன செய்குவோமென்று [8]செம்பவளராசன் புலம்ப
இப்படியிவர்கள் புலம்ப யேதுசொல்வாள் மருத்துவமும்
ஏதுக்கு மஞ்சாதேயுங்க ளிப்போபெறு வாளெனவே
குலமான்போல் பொன்னுருவி [9]குமுர்தக் குடமுடைய
கோதைமார் பொன்னுங்கலத்திலர் கொண்டார்வாழை யிலைபோட்டு
உடனாகவே யிருந்ததோழி யொருத்தி யேந்திடுவாள்
உலகமது மகிழ்புதல்வ னுருட்டுவதிகமதாய்க் காணுதென்பாள்
சற்றுநேர நீங்கள் பொறுத்திருங்கோ சலியாதிவனும் பிறந்திடுவான்
சரியேநீ சொன்னாய் மருத்துவமே தாங்கயென்னால் முடியாதென்றாளே.

சழன் – துன்பம். **அகம்** – மனம். **விசம்** – விஷம், **சகலருக்கும்** – எல்லோருக்கும். **புவியிலுள்ளோர்** – பூமியிலுள்ளோர். **அலறாதே** – அழாதே, கதறாதே. **நகையாமல்** – சிரிக்காமல். **புத்திரன்** – மகன், **கூத்துவா** – கூற்றுவா, எமனே. **மொழிவாள்** – சொல்லுவாள். **ஆயிழையாள்** – ஆபரணங்களைப் பூண்ட பெண். **அரனே** – சிவனே. **அமத்திடுவார்** – அமைதிப்படுத்திடுவார். **குமுர்தக்குடம்** – கர்ப்பப் பையிலுள்ள தண்ணீர்க் குடம். **கோதைமார்** – பெண்.

பா.வே. 2. ஆசை வைப்பதே காட்டி 3. செனித்தாய் 5. அவள்தான் படும்பாடு 6. அம்மை உமையே பிச்சையிடம்பார் 7. அமுதிடுவார் சிலபேர் மசங்கிடுவார் 8. செண்பவளராசனுயிடைவார்.

சு.சொ. 1. கேழ்கவாய் 4. கொடியாமுன்னை 9. குமுர்தக்குடமுடய.

The midwife consoles Po<u>nn</u>uruvi

Said **Po<u>nn</u>uruvi** then,
“Sufferings these caused by the son,

For whom I did perform many a penance,
The world knows,
And the worldly folk also are aware.
Of the gestation for months ten and pangs of birth,
That women undergo,
But oh! Midwife my son inside
Will realise not my pains any,
It is like venomous scorpions a thousand stinging all at once"
The midwife did reply,
"What can we do for that it is so far all of us women,
Do not scream like this for all the worldly folk to hear
Po<u>nn</u>uruvi did however scold all
And to all those who tried to hold her
"Oh! **Civa<u>n</u>** is my refuge", said she,
"It is better to die than to contemplate a son,
Oh! *Kū<u>rr</u>uvā*[1] has thou as my son incarnated
To kill me?
Take away my life before this sinner begets you
Is it but proper to see a damsel suffer like this?
Oh! **Ara<u>n</u>**[2] I beg of you to provide relief"
Thus would she lament and cry,
And roll on the ground
(On seeing the damsels plight)
Some would weep and some others would console her
"Oh! **Civa Civa** What shall we do" cried the king,
As they did thus lament in chorus
The midwife did them assure,
"Fear not for anything, she will beget now"
As she said thus for the doe like damsel **Po<u>nn</u>uruvi**
Her placenta did rapture
The maids by her side did collect the fluid
In a golden bowl
And placed a plantain leaf there
As a maid by her side held it in her hands

"The son arriving for the world to rejoice,
Rolls much" said she
To which the midwife replied
"Wait for a while he will be born without trouble any"
Ponnuruvi then said
"Well said, Oh! midwife this is the limit,
Anymore pain I cannot bear"

1. *Kūrruvā* - God of death
2. **Aran** - **Civan**

(பொன்னுருவிக்குக் குழந்தை பிறத்தல்)

59. நொந்தே [1]திருவயிறு நொன்பலப்பட்டு வருகுதென்பார்
சந்து விடுகுதென்பாள் சரிந்தாள் தன்னுட தோழியர்மேல்
ஆத்தா மலங்தாதே [2]அவைப்பா ரெடுப்பா ரவையமென்பார்
அபயம் பகவதிக்கே சொக்க ரங்கயக்கண்ணிக் கவயமென்பார்
இவளிப் படியிரங்க எல்லோரு மண்மேல் [3]விழுந்தழுதார்
[4]மண்ணாள வேணுமென்று மகாதேவ னிட்ட விதிப்படியால்
பொன்னான திருவயிறு பிள்ளைபிறக்க தலைதெரிய
எண்ணங்கள் சாஸ்திரத்தில் இருபத்தேழு நட்சத்திரமதில்
பக்கமது சொல்லக்கேள் பஞ்சமிநல்ல சித்தயோகம்
ஒக்கவொரு முகூர்த்தங்கொண் டுத்திரநாளில் பிறந்திடுமாம்.

நொன்பலப்பட்டு – துன்பப்பட்டு. **சந்து** – தொடைச்சந்து. **சரிந்தாள்** – சாய்ந்தாள். **மலங்தாதே** – கலங்தாதே **அவையம்** – அபயம், அடைக்கலம். **பகவதி** – பார்வதி. **சொக்கர்** – சிவபெருமான். **அங்கயக்கண்ணி** – அங்கயற்கண்ணி, மதுரையிற் கோயில் கொண்ட மீனாட்சியம்மை. **மகாதேவன்** – கடவுள், தெய்வம். **விதிப்படியால்** – கட்டளையால். **இருபத்தேழு நட்சத்திரம்** – அசுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி என்பன. **பஞ்சமி** – ஒரு திதி அமாவாசை அல்லது பவுர்ணமிக்குப் பின்வரும் ஐந்தாம்

நாள். **சித்தயோகம்** – சுபயோகம். **முகூர்த்தம்** – இரண்டு நாழிகை கொண்ட நேரம். சுபவேளை. **உத்திர நாள்** – உத்திர நட்சத்திரம்.

பா.வே. 1. மெத்தனும்பலப்பட்டு. 2. என்றடிப்பாரபயங்கள் இட்டிடுவாள். 3. புரண்டமுவாள்.

சு.சொ. 1. திருவயறு 4. மண்ணாழ.

Po<u>nn</u>uruvi begets a child

"Oh! My stomach doth ache quite painful it is"
My thigh gaps seem to widen
Saying thus she did slide on her maids
"Grieve not, Oh! dame" said they
And hugged and held her,
"**Pakavati**[1] is our refuge
May **Cokkar**[2] and **Ankayar̲kanni**[3] come to the rescue"
As **Po<u>nn</u>uruvi** did suffer such
All others there cried falling on the ground
As Lord **Makātēvar**[4] did ordain the birth of a child
To rule over the world this,
The head of the child did show up accordingly
And the child was born then,
At the auspicious *Pañcami*[5] in *cittayōkam*[6]
When the ruling star ascendant at that time,
Was *Uttiram*[7] among the stars twenty- seven

1. Name of Goddess
2. Lord **Civa<u>n</u>** of **Maturai**
3. Goddess **Minākṣi** of **Maturai**
4. An appellation of **Civa<u>n</u>**
5. *Pañcami* - One of fifteen *titis*
6. *Cittayōkam* - An auspicious period on a particular day
7. *Uttiram* - The name of one of the twenty seven stars

விருத்தம்

60. புதல்வன் [1]பிறந்து [2]நிலத்தில்விழ பொங்கு கடல்போ லொலிமுழங்க
குதலை மொழியார் குரவையிட கொடிசே ரிடையார் மிகச்சூழ
மதலை பிறந்து [2]நிலத்தில்விழ [3]மயில்போல் மொழியாள் பொன்னுருவி
இதலை மொழியாள் தான்மயங்கி [4]யிருந்தாளே பஞ்சணை மீதே.

புதல்வன் – மகன். **குதலைமொழி** – மாதருடைய மொழி. **மதலை** – குழந்தை. **இதலை மொழியாள்** – குழறுகின்ற பேச்சையுடைய பொன்னுருவி.

பா.வே. 1. பிறந்தார் செம்பொன் கலமதிலே 3. உடலசைந்து மயில்சேர் விழியாள் 4. சரிந்தாள் செம்பொன் மலரணைமேல்.

சு.சொ. 2. நிலத்தில்விள.

As **Po<u>nn</u>uruvi** son was born and the child
Did fall on the ground,
As a sound like the rumbling of sea was heard,
As damsels sweet voiced did ululate,
And gathered around in numbers large,
Po<u>nn</u>uruvi resembling a peahen
Did falter and faint on *pañcanai* hers

(குழந்தை பிறந்த பின் நடந்தவை)

61. [1]பாலன் பிறந்து நிலத்தில் விழவே
பாவை [2]நல்லாளு மயங்கி விழுந்தாள்
[3]காய மிளகு [4]புளியுடன் சுக்கு
கடைச்சரக் கொன்றா யறைக்குத் திரட்டி
கூசாமல் [5]சேலையைக் கட்டி யிறுக்கி
கும்பிக் கடிக்கு மருந்து கொடுத்தாள்
மஞ்ச ளரைத்துத் திரட்ட வொருத்தி
வாயிலே சுக்கிட் டூத வொருத்தி

சாடியில் மஞ்சள் கலக்க வொருத்தி
தட்டிக் கவுத்திப் போட்டோட வொருத்தி
[6]கூடி யவியம் பரப்ப வொருத்தி
கொண்டுபோய்க் குண்டனி சொல்ல வொருத்தி
கட்டமண் தட்டி விழுந்தா ளொருத்தி
கைதட்டி நின்று சிரித்தா ளொருத்தி
கூப்பிட்டுச் சண்டை பிடித்தா ளொருத்தி
[7]குலாவிக் குடங்கொண் டோட வொருத்தி
[8]நாடாள வொருபாலன் பிறந்தான்
நல்லபிள்ளை வொருபாலன் பிறந்தான்
[9]தேசமாள வொருபாலன் பிறந்தான்
செல்லப் பிள்ளை யொருபாலன் பிறந்தான்
கொப்பாடை நீக்கிக் குழந்தை யெடுத்து
கொப்பி ளறுத்துக் குரவை யுமிட்டார்
பாலகன் றன்னையு மஞ்சள்நீ ராட்டி
பஞ்சணை மெத்தையில் கிடத்தி வைத்தார்.

பாலன் – மகன். **பாவை** – பெண். **நல்லாள்** – அழகுடையாள். **காயம்** – பெருங்காயம், கடைச்சரக்கு – மருந்துப் பொருள்கள். **சேலை** – புடவை. **கும்பிக்கடி** – வயிற்றுவலி. **சாடி** – ஒரு பாத்திரம். **விபரம்** – செய்தி. **குண்டனி** – குறளைச் சொல். **கட்டமண்** – கனமான – மண். **கூப்பிட்டு** – அழைத்து. **குலாவி** – கொண்டாட்டம், **கொப்பாடை** – பிறந்த குழந்தையின் மேலிருக்கும் சளி போன்ற பொருள். **கொப்பிளறுத்து** – தொப்புளறுத்து. **குரவை** – ஒலி.

பா.வே. 1. பாலன் வந்து கலத்தில் பிறக்க பைங்கொடியாளும் மசங்கிக் கிடந்தாள் 3. காய மலைக்கு மிளகு திர்ப்பலியும் 6. கூடி விசேஷம் பறைவாளொருத்தி 7. குண்டணி கோள்கள் சொல்ல.

சு.சொ. 2. நல்லாமு 3. காயமிழகு 4. புழியுடன் 5. சேலயைக் 8. நாடாழ 9. தேசமாழ.

The events that happened after the child birth

As the damsel did thus faint after the bonny boy
Did fall on the ground,
Kāyam[1] pepper and tamarind
Along with *Cukku*[2] and medicines
The midwife did mix and grind
And did give that paste to **Poṉṉuruvi**
After tightening her saree around stomach hers
As a remedy for *kumpikkaṭi* (stomach pain)
A woman did grind turmeric and collect the paste,
Another woman held *cukku* in her mouth
And blew it
A woman did mix the turmeric in a jar,
Yet another woman did empty the containers
Of article various and ran errand's
A woman did spread the news current and other information
Another woman did undertake the utterance of *kuntani*
A woman did trip on the burnt clay and fall
Whereas another did clap her hands and laugh at it
A woman did summon another to pick a quarrel,
Another woman did run with a *kutam* fondling others
A son is born to rule over the kingdom,
A good one he is to born thus
A son is born to rule over the country,
A beloved child he is to be pampered"
They did then remove the filmy mucus on the child
And as well did sever the umbilical cord,
Then did they ululate in joy
They bathed the boy in turmeric water
And did gently place him on the *Pañcaṇai* soft

1. *Kāyam* - Asafoetida
2. *Cukku* - Dried ginger

(குழந்தையைத் தாலாட்டலும், பெயர் வைத்தலும்)

62. எங்கள் [1]குடிவாழப் பிறந்தவனோ
ஈனா [2]யிளவாழை யீன்றகன்னோ
தங்கடங்கள் தீர்க்கவந்த தவத்துணையோ நீராரோ
கட்டிக்கரும்போ கனியோ கற்கண்டோ பெருந்தேனோ
துட்டர்குலம் வேரறுத்த [3]சோழர் குலத்தானோ
ஆருடைய பேரிடுவோ மருமையுள்ள மகனார்க்கு
மாமனய்யன் பேரிடவோ மச்சினத்தார் பேரிடவோ
சேரன்சோழன் பேரிடவோ தெய்வபாண்டி மன்னர் பேரிடவோ
சிவனிரங்கித் தந்தமகன் சிவனணைஞ்ச பெருமாளென்றார்
பேருமிட்டுக் குரவையிட்டுப் பெண்கொடிமா ரேவல்செய்ய
வாராருங் குழல்மடவார் மஞ்சள்னீ ராட்டுவாராம்
பாலூட்டி யுச்சிபொத்தி பாலகனைத் தான்வளர்த்தார்.

(மணித்தொட்டில் கட்ட தூதுவனை அழைத்தல்)

பாலனுக்குப் பள்ளிகொள்ள பைம்பொன்மணி தொட்டில்கட்ட
தொட்டில்கட்ட வேணுமென்று தூதுவனை [4]வரவழைத்தார்
தூதுவனை வரவழைத்துச் சொல்லுவாராஞ் சடுதியிலே
மாந்தையரை வரவழைத்து வரவேணும் தூதுவனே
தூதுவன்றான் சென்றபோது சொல்பெரிய மாந்தையர்கள்
மாந்தையர்கள் வந்துநின்று வார்த்தையது [5]கேட்கலுற்றார்

தங்கடங்கள் – சங்கடங்கள், வருத்தம். **துட்டர்குலம்** – தீயவர் குலம். **பைம்பொன்** – பசுமையான பொன். **சடுதி** – விரைவாக.

சு.சொ. 1. குடிவாள்ப் 2. யிழவாழை 3. சோனர் 4. வரவளைத்தார் 5. கேள்க்கலுற்றார்.

Singing lullaby and christening the child

"Art thou the one born for our race to prosper,
Are you the shoot tender of the plantain young
Which has not yielded fruit so far?
Are you the help provided by penance ours
To relieve us of sufferings ours?
Are you the sugarcane sweet, fruit, candy
Or honey abundant?
Are you the descendant of **Cōḻa** dynasty
Born here to eradicate races wicked?
By whose name shall we call our son dear,
Shall we call him by his uncle's name
Or by the names of *maccinattār*[1] ?
Shall we name him after the **cēra**[2] or **cōḻa**[3]
Or the **Pāṇtiya**[4] king divine?
Debating thus decide they did finally,
"As Lord **Civaṉ** hath granted the child in mercy His,
Let us call him **Civaṉanañca perumāḷ**
Thus naming and ululating
The damsels all did attend to their tasks,
Women with flowing locks did bathe the child
In turmeric water and fed him with milk
With loving care they did fondle the infant
Thus they did bring up the boy

Summoning a messenger to arrange for a cradle

They wanted a golden cradle gem studded to be made,
For the child to sleep but properly
They sent for a messenger and did tell him
"Oh! messenger bring the carpenters immediately,"

The carpenters did turn up on being thus summoned
And waited to listen to orders theirs

1. *Maccinattār* - Brothers in law
2. **cēra**, 3. **cōḻa**, 4. **Pāṇṭiya** - The three royal dynasties of ancient Tamil kings

(மாணிக்கத் தொட்டி சமைத்தல்)

63. மாணிக்க வலைவீசும் மாணிக்கத் தாலே
வண்மையாய் தொட்டில் சமையுமென் றாரே
என்ற பொழுதிலே தெய்வக் [1]கண்ணாளர்
இணையில்லா [2]உளியுடன் வாச்சிக மெடுத்தார்
குன்றுபோல் நின்றுலாவு மதயானையுட கொம்பை
மனமதிர விலைகொண்ட காவலு க..வாணி
மற்றுமொரு சந்தனப் பலகையது சேர்த்தார்
சேர்த்து நவரெத்தின முத்து மாணிக்கம்
செம்பவளம் பெரிய கோமே தகங்கள்
சீத்துவத் தும்னாலு திக்கிலு நிறுத்தி
சிறப்பாகவே மணித் தொட்டில் சமைத்தார்
சமைத்தாரே பட்டினா லெங்கும் பொதிந்தார்
அமைச்சர் [3]திருமாளிகையில் கொண்டு செல்லவே
அகமகிழ்ந்தார் தாதிமார் கள்முகம் நோக்கி
முகிர்த்தமது கண்டவர்க்குப் படிகொடுத்து
முத்த மிளக்கிப் பாலகனைக் கிடத்தி
பாலகன் தன்னை மணித்தொட்டில் மேலே
பாங்குடன் தாதியார் மந்திரி மாரும்
சாலுகை பஞ்சணை மேலே விரித்து
தன்பா லகனை யிதமாய்க் கிடத்தி

சீராகவே வந்து சேவிக்கும் பெண்கள்
சிறப்பாகவே யெடுத்துத் தாராட்டி வைத்தார்.

சமையும் – செய்யும் . **உளி** – வெட்டும் கருவி. **வாச்சிகம்** – வாய்ச்சி, வாசி எனப்படும் வெட்டுங்கருவி. **சீத்துவம்** – திறன். **சங்கை** – கனம். **தாதிமார்** – தோழிமார்கள். **முகிழ்த்தம்** – முகூர்த்தம். **முத்தமிளக்கி** – முத்தம்கொடுத்து. **கிடத்தி** – படுக்க வைத்து. **சாலுகை** – சால்வை, கம்பளம்.

க.சொ. 1. கண்ணாழர் 2. உழியுடன் 3. திருமாழிகையில்.

Making of the ruby cradle

"Make a cradle strong and elegant,
Studded with rubies of wavy glaze"
Thus they did tell the carpenters
On hearing instructions such the carpenters godly,
Did take their chisels and *Vācci*[1]
And chiselled and planed the tusks
Of mountainous elephants in musth
And did mould them as required
Then they did align with them,
A sandal wood plank so costly,
As to boggle one's mind
On all four sides then did they with craft,
Fix gems nine fold,
Pearls, rubies, corals and *Kōmētakam*[2] as well
They did set and designed the cradle but magnificently
In the sparkling cradle did they,
Cushion all over amply with silk soft
The ministers then did take the cradle to the palace
Gladdened were the maids and to the onlookers
Assembled for the function they did give *pati*[3]
Kissed they the child and in cradle laid,
The maids and ministers did duly spread
Shawls on the mattress

And laid the child ever so gently
In the gem studded cradle
The women who turned up to see the royal child
With reverence proper took the child in their hands both,
They did sing lullabies and swing the cradle.

1. *Vācci* - A spade like axe used by carpenters
2. *Kōmētakam* - A precious stone
3. *Pati* - Doled out wagesy

(குழந்தையைச் சீராட்டி வளர்த்தலும் கல்விப் பயிற்சி அளித்தலும்)

64. தாராட்டி ஆராட்டி சங்குமுத்தைத் தானமுத்தி
வாராட்டுந் தேன்மடவாள் வளத்தாளே பாலகனை

அருமையுள்ள மகன்றனக்கு அமுதூட்டித் தான்வளத்தாள்
ஒருகுழந்தை யானதுதான் ஒக்கரையில் பாலனது

தள்ளிநடை பாலகனுந் [1]தவழுங் குழந்தையுமாய்
தீட்டுமுடி யிறக்குவாராந் திருக்குடும்பி வைக்கிறாராம்
குத்திநன்றாய் வடித்திறக்கி குழல்காதில் குண்டலமாம்

அஞ்சுநல்ல திருவயதில் அழகுநல்ல பாலகனும்
கொஞ்சுங் குழந்தையது குடும்பிதனில் பூமுடித்து

திருவயசு ஆறேழு சென்றபின்பு பாலனுக்கு
குருவின்உப தேசம்வைக்கக் கூட்டிவந்தார் வாத்தியாரை

நன்னூலும் தொன்னூலும் அண்ணாவி வந்தார்காண்
பண்ணும் சிவஞான பஞ்சாஷர மஞ்செழுத்தும்

ஆகமங்கள் ஓதிவைக்க அண்ணாவி வந்தார்காண்
ஏகாந்தக் கூட்டமதி லெழுந்தருளி விநாயகரை

அருகுகொன்றை தும்பைமல ரணியுஞ்சிவன் மகன்றனக்கு
குறும்விடலை நிறைநாழி குவித்தார்மலர் தூபதீபம்

[2]தெச்சணைக்கு லெட்சம்பொன்னைத் திருமுன்பில் தான்குமித்தார்
பச்சிலையு மடைக்காயும் [3]பழமிளநீரும் படைத்தார்

அடவுடைய விடலைதன்னை யடித்துடைத்துத் தான்படைத்தார்
மடமடென்று சிவஞான மந்திரத்தை உச்சரித்தார்

சிவஞான முகிந்தபோதே சிவனணைஞ்ச பெருமாளுக்கு
அரிவிரி யேடதுவும் அண்ணாவி தானெடுத்து

ஓதிவைத்தார் பாலனுக்கு உலகிலுள்ளோர் தானறிய
அரியேடு கொன்றைவேந்தன் ஆத்திச்சுவடி எண்சுவடி

கற்றாரே பல்கலைநூல் கணக்குமுத லத்தனையும்
அள்ளிப்பொன் வெகுமான மாயானுக்கே கொடுத்தார்

கணக்கதுவு முடிந்தபோது கனகசிவ னணைஞ்சவனார்
இணக்கமுள்ள [4]தோழரோடே இவர்தெருவில் உலாவுவராம்.

(ஆயுதப் பயிற்சி கற்றுத் தருதல்)

தோழன்மார் தங்களிலும் சூரியனைப் போலழகாய்
[5]கோழையில்லை யிவர்தனக்குக் கொத்தவரும் பயப்படுவார்

இவர்வயசு ஈரேழு யிதமுடனே சென்றபோது
அவருடைய வாள்சிரம்ப மதுபடிக்க வேணுமென்றார்

தன்றரத்துத் [4]தோழரோடே தாடாள னேதுசொல்வார்
எந்தயெந்தப் பணிக்கனோடே யினிச்சிரம்பம் படிப்போமென்றார்

இருளனென்ற ஆயானோடே யினியடவு படிக்கவேணும்
மறுக்கவொரு சிறுக்கனைத்தான் வரவழைத்தார் சடுதியிலே

சிறுக்கன்கையில் நீட்டெழுதி செய்திசொல்லி யனுப்புவாராம்
சறுக்காமல் [6]வழிநடந்து தானே[7]புளியறைக் கோட்டையில்

பணிக்கரைத்தான் கூட்டிக்கொண்டு பரபரென ஓடிவாடா
மணிமுரசு வார்த்தைகேட்டு [8]வழிநடந்தார் சடுதியிலே

(பல்வேறு வித்தை கற்றுக்கொடுக்க ஆயானை அழைத்து வரல்)

ஓட்டமு நடையுமாக வொருநொடியில் செல்லுவானாம்
[7]புளியறையி லிலங்கப்புதை புகுந்தானே சிறுக்கனுந்தான்

சென்றுதகை யாறாமல் சீக்கிரம்நீட்டைக் கொடுத்தான்
நின்றுவாங்கி யொருகணக்கர் நன்றாய் வாசிப்பாராம்

பண்டுமுன்னாள் தென்காசிப் பதியாண்ட ராசமன்னன்
இன்றுஉம்மிடம் படிக்க யெழுதிவிட்டார் நீட்டதென்றார்

அன்றுஅவர் மகிழ்ந்து ஆயானுமேது சொல்வார்
நன்றுநன்று யென்றவர்தா னாமளிப்போ போலாமென்றார்

பதினெட்டுப் புத்திரரும் பணிக்கருமாய் [8]வழிநடந்தார்
அதில்சிரம்ப மடவுகம்பு அவருடையவாள் கேடயமும்

தகடப்பொந்தி தட்டாரி தான்பதினெட் டாயுதமும்
விகடமில்லாக் கள்ளவாளும் வெட்டுங்கத்தி கேடயமும்

கச்சைகெட்டி விதவிதமாய் கனகவர்ண விருதுபூட்டி
இச்சையுள்ள தென்காசி யிருளனாயான் செல்லுவாராம்

கண்டுசிவ னணஞ்சவரும் கைகுவித்துத் தான்தொழுதார்
நன்றுநன்று ராசமன்னா நானுமினி உந்தனக்கு
எந்தனுட தொழில்களெல்லா மினிஉனக்குத் தருவேனென்றார்

அன்றுதிரு மனமகிழ்ந்து ஆயானைக் கூட்டிக்கொண்டு

சென்றுமணி மேடையிலே சிறப்பாக வீற்றிருந்தார்.

சென்றுதகை யாறாமல் சீக்கிரம்நீட்டைக் கொடுத்தான்
நின்றுவாங்கி யொருகணக்கர் நன்றாய் வாசிப்பாராம்

பண்டுமுன்னாள் தென்காசிப் பதியாண்ட ராசமன்னன்
இன்றுஉம்மிடம் படிக்க யெழுதிவிட்டார் நீட்டதென்றார்

அன்று அவர் மகிழ்ந்து ஆயானுமேது சொல்வார்
நன்றுநன்று யென்றவர்தா னாமளிப்போ போலாமென்றார்

பதினெட்டுப் புத்திரரும் பணிக்கருமாய் [8]வழிநடந்தார்
அதில்சிரம்ப மடவுகம்பு அவருடையவாள் கேடயமும்

தகடப்பொந்தி தட்டாரி தான்பதினெட் டாயுதமும்
விகடமில்லாக் கள்ளவாளும் வெட்டுங்கத்தி கேடயமும்

கச்சைகெட்டி விதவிதமாய் கனகவர்ண விருதுபூட்டி
இச்சையுள்ள தென்காசி யிருளனாயான் செல்லுவாராம்

கண்டுசிவ னணஞ்சவரும் கைகுவித்துத் தான்தொழுதார்
நன்றுநன்று ராசமன்னா நானுமினி உந்தனக்கு
எந்தனுட தொழில்களெல்லா மினிஉனக்குத் தருவேனென்றார்

அன்றுதிரு மனமகிழ்ந்து ஆயானைக் கூட்டிக்கொண்டு
சென்றுமணி மேடையிலே சிறப்பாக வீற்றிருந்தார்.

தாராட்டி –இருகைகளிரும் ஏந்தி. **ஆராட்டி** –நீராட்டி. **சங்குமுத்தைத் தானமுத்தி** - சங்கினால் பாலூட்டி. **வாராட்டு** –கச்சணிந்த. **மடவாள்** –பொன்னுருவி. **வளத்தாளே** – வளர்த்தாளே. **வாலகன்** –மகன். **அமுதூட்டி** –உணவூட்டி. **ஒக்கரை** –இடுப்பு. **தீட்டுமுடி** –இறைவனுக்காக வைத்திருந்த முடி. **குடும்பி** –குடுமி –தலையின் உச்சி மயிர். **குத்தி** – காது குத்தி. **குண்டலம்** –காதில் அணியும் அணிகலன். **அஞ்சு** –ஐந்து. **குரு** –ஆசான். **உபதேசம்** –சமயபோதம், தீட்சை. **வாத்தியார்** –ஆசிரியர். **நன்னூல்** –நல்ல நூல். பவணந்தி முனிவர் செய்த இலக்கண நூல். **தொன்னூல்** –ஓரிலக்கண நூல், பழமையான நூல்கள். **நால்வேத சாஸ்திரம்** –இருக்கு. யசுர், சாம, அதர்வண வேதங்கள். **ஆறு** சாஸ்திரங்கள். **சிவஞான பஞ்சாட்சர மஞ்செழுத்து** –சிவனின் மேன்மையைக் குறிக்கும்

நமசிவாய என்னும் ஐந்து எழுத்து. **ஆகமம்** –ஞானம், தருமநூல். **அண்ணாவி** –ஆசிரியர். **ஏகாந்தகூட்டம்** –தனித்த அறை. **அருகு** –அருகம் புல். **கொன்றை** –கொன்றைப் பூ. **தும்பை** –ஒரு பூ. **சிவன் மகன்** –விநாயகன். **குறும்விடலை** –கூறைத்தேங்காய். **நிறைநாழி** –மங்கலக்குறியாக நெல் வைத்து நிரப்பிய நாழி. **தெச்சனை** –தெட்சணை, காணிக்கை. **லெட்சம்பொன்** –இலட்சம் பொன். **குமித்தார்** –குவித்தார். **பச்சிலை** –அடைக்காய் –வெற்றிலை, பாக்கு. **அடவுடைய விடலை**– முற்றிய தேங்காய். **முகிந்தபோதே** –முடிந்த போதே. **அரிவிரியேடு** –அரிச்சுவடி, எழுத்து வருக்கம். **கொன்றை வேந்தன். ஆத்திச்சுவடி** –ஔவை செய்த நூல்கள். **எண்சுவடி** –கணக்கேடு. **பல்கலை நூல்** – பல்வகைக் கல்வி நூல். **ஆயான்** –ஆசான், ஆசிரியர். **கொத்தவர்**–கொற்றவர், அரசர். **ஈரேழு** –பதினான்கு. **வாள்சிரம்பம்** –வாள்சிலம்பம். **தாடாளன்** –முயற்சியுள்ளோன். **பணிக்கன்** –படைக்கலம் பயிற்றுவோன். அடவு –முறை. **சிறுக்கன்** –வாலிபன். **சடுதி** –சீக்கிரம். **நீட்டு** –திருமுகவோலை. **சறுக்காமல்** –வழி தவறாமல். **புளியறைக் கோட்டை** –தென்காசி வட்டாரத்திலுள்ள ஓர் ஊர். **பரபரென** –சீக்கிரக்குறிப்பு. **மணிமுரசு** –அழகிய முரசு. **இலங்கப்புரை** –படைக்கலப் பயிற்சியளிக்கும் இடம். **தசையாறாமல்** –இளைப்பாறாமல். **பண்டு** –முன்பு. **பதி** –இடம். **போலாமென்றார்** –போகலாமென்றார். **புத்திரர்** –பிள்ளைகள். **அடவு கம்பு** – சிலம்பம். **தகடப்பொந்தி** –மரத்தினால் செய்யப்பட்ட வாள். **தட்டாரி** –கட்டாரி,குத்துவாள். **விகடமில்லா** –வேறுபாடில்லா. **கள்ளவாள்** –பொய்வாள். **கச்சை** –இடுப்பில் அணியும் பட்டை. **விருது பூட்டி** –வெற்றிச்சின்னம் அணிந்து. **இச்சையுள்ள** –விருப்பமுள்ள. **இருளனாயன்** –ஓர் ஆசான்.

ச.சொ. 1. தவளுங். 2. தெச்சணக்கு 3. யிழநீரும் 4. தோளரோடே 5. கோளயில்லை 6. வளிநடந்து 7. புழியரைக் 8. வளிநடந்தார்.

Bringing up the child with loving care and attention

Damsel **Po<u>nn</u>uruvi** did bring up her son,
Holding him in hands both and bathing him but properly,
Feeding him with milk in a *canku*[1]
Her beloved boy she did bring up providing food,
As her only child she carried him in her waist,
As a crawling child and then as a bouncing a toddler,
He did grow when they did shave his forelocks,
To fulfil that ceremony vowed to god
Then they did arrange this locks in a tuft
His ears they bored and fixed *Kuṉṯalam*[2] therein,
As the handsome boy attained the age of five,
In his *Kutumi*[3] did they wind flowers to adorn

In his *Kutumi*[3] did they wind flowers to adorn

The child's education

When they boy did complete years six or seven of age,
They did bring a teacher to be his mentor
To teach him **Na<u>nn</u>ūl**[4]and ancient works besides
The scriptures four and the incantation five lettered
Which doth stress the glory divine of Lord **Civa<u>n</u>**
To teach all these and ***ākamam***[5] as well
Arrived the teacher who was an expert indeed
He did arrive at the chamber solitary
And offered worship to **Vināyakar**
With *aruku*[6], *ko<u>nr</u>ai*[7] and *tumpai*[8]
Thus to the son of **Lord Civa<u>n</u>** did they
Place flowers and coconuts in a heap,
Paddy in full measure, incense and burning camphor too
They also did offer a *teccanai*[9] of *po<u>n</u>* a hundred thousand
Betel leaves and nuts, fruits and coconuts tender,
They did offer,
Coconuts did they break on the ground in pieces to shatter,
And then the teacher did chant *Civañā<u>n</u>amantiram*[10] duly,
After that *mantiram*[11] was over,
The teacher did take up *Ariccuvati*[12]
To initiate *Civa<u>n</u>anañcaperumāl* to the alphabets all
Then did the teacher follow it up,
With **Ko<u>nr</u>aivēnta<u>n</u>,**[13] **Ātticcūṭi,**[14] and **Eṇcuvaṭi**[15] as well
The boy was taught works all arithmetic inclusive,
Amply was the teacher rewarded with gifts of gold
As thus the golden hued **Civa<u>n</u>anañcā<u>n</u>** did complete
His education formal
He would stroll in the streets along with his favourite friends

The boy is provided training in handling weapons

Among his friends would he be handsome like the sun
Not a coward was he whom even kings would fear,
When he did attain the age of fourteen in due course,
Urged he was to learn fencing and *Cilampam*[16]
To his friends of equal standard
The enterprising lad would enquire
"From which *Panikkan̲*[17] shall we learn *cilampam*?"
They did reply
"A trainer by name *Irulan̲* is there
From whom you have to learn the method proper"
They did then summon a youth,
And sent him with a message written in *Nīṭṭōlai*[18]
"Go quickly without missing your way
To **Puliyar̲aikkōṭṭai**[19] and bring the *pan̲ikkar* fast here"
On hearing the ringing instructions such,
The *cir̲ukkan̲* did walk fast on mission his

The trainer is brought to teach various martial arts

Running and walking did he reach his destination in a trice
The youth did reach *puliyarai* and enter the *Ilaṅkappurai*[20] there,
Without taking rest any for fatigue his,
He did hand over the message,
A *Kaṇakkar*[21] there did receive and read clearly
"A descendent royal of the kings who ruled **Ten̲kāci**
In olden days wants to learn from you"
As he did thus read the *panikkar̲* was delighted,
"Well, well let us go now itself" said he
With his sons eighteen the *panikkar̲* did walk,
Taking along with them *cilampu*, *aṭavukkampu*[22]
The sword and shield, *Takaṭapponti*[23] as well
The dagger short and eighteen weapons allied,

A false sword indistinguishable from the real one,
With a cutting knife and a shield too
Wearing *kaccai*[24] but properly and sporting the *virutu*[25] golden,
Thus did *Irulan̲* the trainer reach **Ten̲kāci** but willingly
On seeing the *pan̲ikkar̲* **Civan̲anañcān̲**
Did bow and greet with hands folded
"Well, Oh! Prince royal, teach you I shall,
My arts all and provide full training"
The prince was happy on hearing assurance such,
And he did take the *panikkar* along with him
To the decorated daw to be seated there

1. *Canku* - A small feeding bowl made of conch
2. *Kunṭalam* - Ear ring
3. *Kuṭumi* - Tuft of hair
4. **Nan̲nūl** - A work on Tamil grammar
5. ākamam - Religious scriptures
6. Name of grass
7 - 8. Name of flowers
9. *teccaṇai* - Offering
10. *Civañān̲amantiram* - The five lettered incantation **Namacivāya**
11. *mantiram* - Incantation
12. *Ariccuvaṭi* - A primer Containing alphabet and numbers
13 - 14. Moral instruction works in Tamil By **Avvaiyār**
15. **encuvaṭi** - Table containing numbers (a primary work)
16. *Cilampam* - A martial art welding sticks
17. *Paṇikkar* - A trainer of martial arts
18. *Niṭṭōlai* - A lengthy palm leaf manuscript
19. **Puliyar̲aikōṭṭai** - Name of a place
20. *Ilankappurai* - Venue for training in martial arts
21. *Kaṇakkar* - A literate person
22. *aṭavukampu* - A stick used in *Cilampam*
23. *Takatapponti* - A wooden sword
24. *Kaccai* - Vest
25. *Virutu* - Medal

(இலங்குபுரை கட்டுதல்)

65. வீற்றிருக்கும் நாளையிலே சிவனணஞ்ச பெருமாள்
விஸ்தாரமாய்ப் படியரிசி வெத்திலைப்பாக்கும் கொடுத்தார்
[1]சாயறச்சை வேளைதன்னில் விடுதிவைத்து உண்டு
சட்டமாக யிலங்கப் [2]புரைகட்டி முசியென்றார்
மட்டில்லாத மந்திரிமார் மக்கள் புடைசூழ
[3]மலையடந்த [4]கண்ணாளர் [5]வரவழைத் தாருடனே
[6]தெண்டஞ்செய்து நமஸ்கரித்து பணிவிடை களேது
நன்றுநன்று நீங்களெல்லா மொன்றுபோலே [7]வந்து
[8]நல்லமரமாகப் பச்சைமூங்கில் வெட்டி வாரும்
குன்றுமலை யானதிலே [9]சென்றுமரம் பார்த்து
கோணலில்லா [10]யீரமூங்கில் கொடிப்பிரம்பு மறுத்தார்
தானமுட [11]னாளெடுக்கும் பாரந்தலைச் சுமடாய்
[12]தடவரை கடந்தவர்கள் நடைமேலே வந்தார்
[13]தேஞ்சொரியுந் தென்காசி பூங்காவனத் தருகே
தெற்பக்குள மட்டுக்கும் விலாசம் வேண்டிக் கண்டார்
[14]பச்சைக்கம்பு வெட்டிக்கெட்டி யிலங்கப்புரை முகித்து
பண்டகசாலை வேறேயொன்று பக்கத்திலே முகித்தார்.

(சின்னணஞ்சான் வாள்சிரம்பம் கற்குமுன் இறைவனை வழிபடுதல்)

மட்டில்லாத [15]வாள்சிரம்பம் கட்டுடனே படிக்க
மன்னர் தோழன்மார்கள் மக்களொன்றாகக் கூடி
கைதனிலே கண்கறுத்த தேங்காயை யெடுத்து
கணபதியே துணையெனவே தரைமெழுகி உடைத்தார்
சரீரமெல்லா மெண்ணையிட்டுச் சல்லட மணிந்து
சட்டமாகப் பட்டுக்கச்சை கெட்டி யழகாக

கைதனிலே தகடப்பொந்தி கட்டியே [16]யெடுத்து
கால்பகுந்து மெல்லவைத்துக் கரிமுகனைத் தொழுது
அண்ணாவி தெய்வனிலை [17]புத்திர னிலையில்
அடவுவடி மானத்தொழில் பலவிதமும் செய்தார்.

(வாள்சிரம்பம் கற்றல்)

வலதுகாலை முன்னேவைத்து வாஸ்தாரம் கூறி
வட்டமிட்டுக் கையைமெல்லத் தட்டிக்கும்பிட் டாராம்
சுவடுவைத்து அடிமான மடவுகளி லெழும்பி
சூழச்சூழ வாட்கம்பை மாறிப்பிடத் தாலே
இடதுகாலை முன்னேவைத்து யேழடி முன்னெழும்பி
இடசாரி வலசாரி யிருந்தெழும்பு வாராம்
தடதடென வடித்தகம்பைத் தாள்பிடித்துக் கொண்டு
தட்டிமாறு தொழில்கள்செய்யத் தகட மெடுத்தார்.

சாயறச்சை –மாலைப்பொழுது. **முசி** –முடி. **தெண்டம்** –வணக்கம். **பணிவிடை** – தொண்டு. வேலை. ***கோணலில்லா*** –வளைவில்லா. *சமடு* –சும்மாடு. ***சடவரை*** –அகன்ற மலை. **விலாசம்** –விசாலம், பரந்த. **செட்டி** –சட்டி. **முகித்து** –முடித்து. **பண்டகசாலை** –களஞ்சியம். **வாள்சிரம்பம்** –வாள் சிலம்பம். **கணபதி** –விநாயகன். **சரீரம்** –உடல். **சல்லடம்** –இடுப்பில் அணியும் குறுங்காற்சட்டை. **தகடப்பொந்தி** –மரவாள். **பகுந்து** – பிரித்து. வகுத்து. **கரிமுகன்** – விநாயகன். **வாஸ்தாரம்** – வணக்கம். **சுவடு** – அடையாளம். **இடசாரி** – இடச்சுற்று. **வலசாரி** – வலச்சுற்று. **தட்டிமாறு** > தட்ணடமாறு – அடிளை மாற்றிவைக்கும்.

பா.வே. 1. சந்தோசமயாயிருந்து 2. புரைகட்டவேணுமென்றார். 3. மாடாரை 6. தெண்டம்பணிந்து 7. சென்று 8. நல்லயீரல் பச்சைசூங்கில் வெட்டிவாருமென்றார் 9. சென்றவரும் பார்த்து 12. தடவரைகள் 13. தேன் கமழும் 14. பச்சைசூங்கில் 15. மலச்சிரமம் 16. எடுத்தான் 17. சட்ட நிலையில்.

க.சொ. 4. கண்ணாழர் 5 வரவளைத்தார் 10. யீரல்மீங்கில் 11. னாழெடுக்கும்.

Construction of *Ilankuppurai*

Civananañcaperumāl while seated thus,
Did give *paṭṭiyarici*[1] in plenty and betel leaves with arecanuts,
In the evening did they eat at the *vituti*[2]
And then he instructed his men to build *Ilankappurai*
And complete the construction but properly,
Surrounded by ministers and other folk innumerable
Did he summon carpenters and craftsmen at once
Arrived they but quickly and prostrated at his feet
And did enquire why they had been sent for so urgently
"Well, Well" said he "all of you go together
And cut green bamboos and bring them here"
They did go to the hill to select trees,
There they sawed the bamboos moist and straight,
And creeper cane as well,
With such load carried on their heads,
They did pass the mountain broad by foot
Near the honey showering garden at **Teṉkāci**
Upto the *teppakkulam*[3] a site broad,
Did they locate as desired
Then they did cut the bamboos to size
And tied them but properly
Thus did they complete the *Ilankappurai*
And also a *panṭakacālai*[4] near by

Ciṉṉanañcāṉ prays to God before learning martial arts

For the king to learn fencing and *cilampam*[5] properly,
His friends and other folk did assemble along with him,
Took in their hands coconuts with dark eye like spots,
Mopped they the floor and broke the coconuts there,
"May **Kanapati**[6] help" they prayed
Oiling his body all over and wearing *Callaṭam*[7]

And a silk *kaccai* as well elegantly,
Holding in his hands a *takaṭaponti*
Placing his legs apart but gently,
And praying to **karimukaṉ**[8]
With teacher held in status Godly
And the disciple as the son veritable
Thus did they perform the steps and movements various

Learning *cilampam* and fencing[9]

He did place his right foot forward
And did express his greetings reverential,
Moved he in a circle and clapped his hands gently,
And greeted with his hands joined
Then he in measured steps and movements aligned
Rolled the stick with his hands both in turns
Placed he the left foot forward and pounced a good seven feet,
He did rise and pounce left and right
Holding the stick that beat with a patter
He did take on the *takaṭam*,
To learn and perform that art different

1. *Patiarici* - Measured rice paid as wages
2. *Viṭuti* - Rest house
3. *Teppakkulam* - A temple tank where float festival is held
4. *Panṭakacālai* - Ware house or store room
5. *Cilampam* - A martial art of welding a stick as a weapon
6. **Kanapati** - **Vināyakar** a Hindu God
7. *Callaṭam* - Short trousers
8. **Karimukaṉ** - Another name of **Ganapathi**
9. **Fencing** - The martial art of handling a sword

(சின்னணஞ்சான் தகடத்தொழில் எடுத்தல்)

66. **பல்லவி**

இன்ன[1]மொரு தொழில் சொல்லவே கேளு
[2]இலங்கு சிவனணைஞ்ச பெருமாளே

அனுபல்லவி

எடுவு மென்றாரே தகடத் தொழிலை
இயல்வுடன் யிருளன் ஆயான் முன்னே

சரணம்

பொன்னிட்ட தகடம் பூவிட்ட தகடம்
புலித்தோ லுறைகள் கெட்டிய தகடம்

மின்னிட்ட தகடம் விருதிட்ட தகடம்
வீர மணியது கெட்டிய தகடம்

திருக்கைப் பரிசையாம் உடைவாளாம்
செம்பொன் னேறிட்ட [3]கட்டியலாம்

[4]கட்டியலுங் கையும் பாராய்
கையு மவருட மெய்யும் பாராய்

[5]வலது காலை வலத்தே வைத்து
வலதடி தகடம் [6]வீசிடு வாராம்

[7]இடது காலை யிடத்தே வைத்து
இடதடி தகடம் வீசிடு வாராம்

முன்னந்தம் யெழுப்பிடு வாராம்
[8]முன்னடி வீச்சிகள் வீசிடு வாராம்

முன்னந்தம் பத்தாள் புருஷம்
முதலடி வீச்சிகள் வீசிடு வாராம்

பின்னந்தம் எழும்பு வாராம்
[9]பின்னடி வீச்சிகள் வீசிடு வாராம்

[10]மண்டி போட்டு யிருந்து கொண்டு
மணிபல் வீச்சிகள் வீசிடு வாராம்

தகடத் தொழிலது செய்கிறார் பாராய்
[11]தாடாளன் சிவனணைஞ்ச பெருமாள்

[12]இருள னென்ற ஆயா னோடே
இன்ன மொருதொழில் [13]சொல்லவே கேளு

சன்னப் போருகள் செய்யவும் வேண்டாம்
[14]சபதஞ் சொல்லிப் பொருவோ மென்றார்

[15]ஆயா னென்று பார்க்கவும் வேண்டாம்
புத்திர னென்று [16]பார்க்கவும் வேண்டாம்

அண்ணாவி விரைந்து கூடி வந்து
அணைஞ்சவ ராசன் பிறத்திலே வொத்த

முன்னே வந்த வாளுட [17]முனையை
முனையுட வதிலே தட்டிவிட் டாராம்

பொன்னாங் குருவிச் [18]சிரம்ப மதிலே
பேர்போர் வேந்த னெழும்பு வாராம்

கோழிப் போரு பொருதாப் போலே
கூண்டுச் சிரம்பஞ் செய்கிறார் பாராய்

[19]ஒருகுத் ததுவும் மூன்று முறிவாய்
உடன்முறிந் திதுபணிக் கருக்கு

கனத்த வன்னியர் கண்டவர் நின்று
கையைப் பிடித்தவர் கண்ணிலே வொத்த

[20]இணக்கத் துடனே உடைவாள் வெட்ட
[21]இன்பனே வேந்தனைக் கண்டது மில்லை

போதும் போதும் [22]சிவனணைஞ் சவரே
பூரை யிட்ட போரது போதும்

உரமவாள் வெட்டின [23]பூரே பூரே
உடனே அணைஞ்சவர் மனது மகிழ்ந்து

ஆர முடனே அண்ணா விக்கு
அழகுடன் சிவன ணைஞ்சபெரு மாளும்

கால்நடையாய் வந்த வருக்குக்
கனத்த தண்டிகை தானுங் கொடுத்தார்

பதினெட்டுப் புத்திரன் மாரும்
பாவினை யாகவே போன பொழுது

அண்ணாவி [24]யிருளன் ஆயானும்
அழகு சிவன ணைஞ்சபெரு மாளும்

தென்கா சிப்படை வீடது தனிலே
தேசமர சாண்டு வீற்றிருந் தாரே.

எடுவும் –எடும். **தகடத்தொழில்** –சிலம்பாட்டம் போன்று ஒருவகை ஆட்டம். **பரிசை** – கேடயம். **கட்டியல்** –அழகிய வேலைப்பாடு மிக்க ஆயுதம். **முன்னந்தம்** –முன்பார்வை. **புருஷம்**– நான்கு முழு நீளம். **வீச்சி** – எறிதல். **பின்னந்தம்** –பின்பார்வை. **மண்டி போட்டு**– இருகால் முடக்கி நிற்கு நிலை, முட்டிபோட்டு நிற்கும் நிலை. **தாடாளன்** – முயற்சியுள்ளோன். **இருளன்** –படைக்கலப் பயிற்சி கற்றுத் தருபவன். **சன்னப் போருகள்** – ஆவேசமற்ற சண்டை, **சபதம்** –சூளுரைத்தல். **புத்திரன்** – மகன். **பிறத்திலே** – புறத்திலே. **கோழிப்போர்** – கோழிச்சண்டை. **வன்னியர்** –ஒரு சாதியார். **பூரையிட்ட** –

ஆவேசம் கொண்ட் சபதமிட்ட. பூரே பூரே –போதும் போதும். **ஆரம்** –பதக்கம். **தண்டிகை** –ஒரு கழுத்தணி.

பா.வே. 1. ஒருவிதம் 2. இணங்கும் 3. கட்டியயெல்லாம் 4. கத்தரிக்காய் 5. வலதுசுவடதை முன்னே வைத்து 6. வீசும் மென்னாரே 7. இடது சுவடுகள் முன்னே வைத்து 8. முன்தலை தட்டிவாடிடு 9. பின்தலை தட்டி பாறிடுவாராம் 10. பணிவலை 13. படியிமென்றாரே 14. சமுப்தம் 15. அண்ணாவி என்று நீர் நினைக்கவும் வேண்டாம் 16.நினைக்கவும் வேண்டாம் 18. பாச்சலதிலே 20 இணக்கத்துடன் நான் 21. இங்ஙணம் அரசரைக் 22. சிவணைஞ்ச பெருமாளே 23. பூரை என்றார்

க.சொ. 11. தாடாழன் 12.இருழன் 17. முனைய 19. ஒருகுத்ததுவும் 24. இருழன்.

Cinnanañcān performs *takatam* art

Pallavi[1]

"Oh! **Civananañca perumāl** luminous,
Do listen to yet another art, which I expound"

Anupallavi[2]

"Take up the *takatam* art now
In the presence of *Irulan* thy teacher"

Caranam[3]

"Gilt *takatam*[4] this flowery *takatam* as well
Takaṭam sheathed in tiger skin
Glittering *takatam* adorned with *virutu*
Takatam tied with a bell for valour,
With a shield to be held in hand
Along with the sword
And a *kattiyal* too gilded with crimson gold
See the hand and the *kattiyal*[5] it holds
See both the hand and the body of the holder
He doth place his right foot towards right,

And brand dishes the *takatam* rightwards,
Left foot he doth place on the left side,
And throws his *takatam* but left wards,
Looking front and raising the *takatam* forward
He will swish it in throws forward
Throw forward he will the *takatam*
To a distance of cubits forty,
Rise he will then looking backwards,
To make the backward throws of the *takatam*
Then kneeling on the ground will he
Perform throws of various kinds,
See for yourself the *takaṭam* art proper"
Civaṉanañca perumāl the learner industrious and diligent
With his trainer *Irulaṉ,*
Apprising him of yet another art,
"Do but listen,
No mock fights for us to perform,
Let us fight right earnest with a challenge
Do not mind a fight with your teacher
As I won't hesitate to fight with you
Though like my son art thou",
As the *Aṇṇāvi* speaking thus,
Tapped the back of the prince with the *takatam*
In a movement swift did he
Push away the edge of the sword,
The martial king did then rise and perform,
The art of *poṉṉānkuruvi cirampam*[6]
See how like a cockfight fierce he doth
Practise *Kūnṭuccirampam*[6]
In just one punch by him,
The *panikkar* felt shattered thrice,
The *vaṉṉiyar*[7] stout and hefly assembled there to witness,
Did grasp the prince's hand and place it in their eyes,
In wielding the sword as to art so properly,

Nobody else has been seen like this king
Enough, Oh **Civananañcār**
This fight ferocious will suffice,
Enough hast thou cut with thy sword,"
Delighted was **Anañcavar** on hearing this,
And rewarded his *Annāvi*[8] with an *āram*[9]
And a heavy *tantikai*[10] too was gifted to that trainer
Who had earlier arrived by foot
As the sons eighteen of the trainer
Did leave in postures proper,
With *Irulan* the expert trainer
The handsome **Civananañcaperumāl**
Stayed at the *pataivitu*[11] at **Tenkāci**
To rule over the country

1. **Pallavi**	- Refrain of a song
2. **Anupallavi**	- The second unit of a song
3. **Caranam**	- The third unit of a song
4. *takatam*	- The wooden sword
5. *Kaltiyal*	- An ornamental weapon of elegance
6 - Two kinds of *Cilampam* art	
7. *Vanniyar*	- A community of brave people
8. *Annāvi*	- Teacher or trainer
9. *āram*	- A necklace
10. *Tantikai*	- An ornament worn around one's neck
11. **Pataivitu**	- Military camp or barracks

(யானையேற்றம், குதிரையேற்றம் படித்தல்)

67. வீத்திருக்கும் [1]நாளையிலே சிவனணஞ்ச பெருமாள்
விஸ்தாரமாய் யானையேற்றுப் படிக்கவேணு மென்றார்
மேகத்தி லோடியது மீண்டுவரும் நம்புரான்
[2]வேணதுாள் பறக்கவோடி மீண்டுவருங் குதிரை
குப்பாய மிட்ட குதிரைப் படையும்
செப்பமாய் சிவன ணஞ்சவ ராசனை

சேவித்த மன்னவர் வாசித்த நேரம்
பாவித்து [3]பாளையங் கூடாரஞ் செய்து
பல்லக்கு பத்தி பத்தியாய்ப் படித்து
ஆவித்து நன்றா யடியுமோ திறந்து
ஆயிரந் தண்டக் காரரை நிறுத்தி
கோவிக்கல் வாச லணஞ்சவ ராசனை
உலாகொலுவி லிருந்து தெருப்பவனி காண
சேவிக்கும் பெரும்படை தன்னை [4]யழைத்து
சீக்கிரம் யிப்போது வாரு மென்றாரே
வாருமென்ற போது காலாள்க ளாயிரம்
[5]வாக்கான சேவுகர் நோக்குமுன் வந்தார்
ஊருத் தெருவில் பவனிகள் காண
உடனே மதகரி யொக்கவர வென்றார்
ஆருக் கடங்காப் பெரும்படை யெல்லாம்
அணஞ்சவ னார்சொன்ன போதில் வரவே

(யானையை அலங்கரித்தல்)

[6]சூரியப் பிரகாச முள்ள அணஞ்சவனார்
[7]துலங்குபொன் னானை யலங்கரி யென்றார்
அரிய நாட்டானைச் சூரிய வட்டம்
[8]அந்தானை தன்னை யலங்கரி யென்றார்
ஆனைக்கு நல்லதோர் குப்பாய மிட்டு
அழகாய் மணியுங் கழுத்திலே [9]பூட்டி
காலு நாலுக்குஞ் சிலம்பு தண்டையுமிட்டு
[10]கட்டுட னலங்கரித்தா ரானை தன்னை
வந்தமத யானைக்கு வீரமணி கெட்டி
வயிடூரியம் பச்சை [11]கோமேதக மணிந்தார்

ஆனைமேல் கூடாரம் சட்டையு மிட்டு
ஆரியப் பட்டாலே யானை விதானித்தார்
தேவாதி சிங்க னணஞ்சவ ராசன்
சிங்காரமா யானை கொண்டு வந்தாரே.

(சின்னணஞ்சான் யானைமேல் ஏறிப் பவனிவருதல்)

காயாம்பூ மேனி யணஞ்சவ ராசன்
கண்டந்த யானையைக் கொண்டாடிக் கொண்டார்
கூசாம லானைமேல் கும்பிட்டங் கேற
[12]கோவிலு [13]மேள வாத்தியங்கள் முழங்க
மாய வடிவ னணஞ்ச பெருமாள்
மதயானை மீதேறி தெருவில் பவனிவந்தார்.

வீத்திருக்கும் –வீற்றிருக்கும் என்பதின் பேச்சு வழக்கு. **விஸ்தாரமாய்** –விளக்கமாக. **நம்புரான்** –குதிரையின் பெயர். **வேண** –மிகுதியான. **தூள்** –புழுதி. **குப்பாயம்** –சட்டை, மேற்போர்வை. **சேவுகர்** –குதிரை ஓட்டுபவர். **செப்பமாய்** –இணக்கமாய். **சேவித்த** –வணங்கிய. **பாவித்த நேரம்** –பாசனை செய்த நேரம். **பாளையம்** –பாசறை. **கூடாரம்** –அம்பாரி. **பல்லக்கு** –சிவிகை. **பத்தி பத்தியாய்** –வரிசை வரிசையாய். **ஆவித்து** –பெருமூச்செறிந்து. **தண்டக்காரர்** –சேவகர். **கோவிக்கல்** –அரண்மனை. **கொலு** –அரசவை. **மதகரி** –ஆண் யானை.

பா.வே. 1. சூவளை 2. மேகத்திரள் போலே எழும்பி 5. வந்து கண்டாரை சந்தோசமாக 6. சூரியப்பிரகாரம் உள்ள அனணஞ்சவராசன் 7. தொலங்கு 9. கெட்டி 10. கடுக அலங்கரித்தார் கரிதன்னை 11. மரகத மாலை 12. கோவிலுக்குள் மேளவாத்தியங்கள்.

ச.சொ. 3. பாழையங் 4. அளைத்து 8. அந்தான 13. மேழ வாத்தியங்கள்.

The prince learns horse and elephant riding

As the prince did thus at **Teṉkāci** stay,
"Learn I must the art of riding an elephant" said he
There was *Nampurāṉ* the horse, which can fly on clouds
And return raising dust in great speed,
The saddled cavalry was there as well

Riders good were there in plenty for the horses
As many kings paid their courtesies to the prince,
They did set up camps and tents,
And paraded palanquins in rows many,
A thousand attendants as well were lined up
At the entrance of the palace,
And then they did invite the army huge,
To go over and see the procession royal,
At once a thousand men of the infantry there
Did come out in a trice
To see the procession on the streets,
They were asked to come with elephants as well,
The army such as can be controlled by nobody else,
Did arrive at the word **Anañcavaṉār**

Decoration of the elephant

Anañcavaṉār luminous like the sun
Did instruct the decoration of the elephant with gold
"Decorate the elephant with *Cūriyavattam*[1] said he
The elephant was adorned with a shawl good,
And a bell was tied in its neck but elegantly,
For all its legs four did they fix *cilampu*[2] and *tantai*[3]
Thus did they decorate the elephant properly'
They tied the bell valorous to the elephant
And adorned with precious stones as well
Then they did place the *howdah*[4] on the elephant
And covered the elephant with silk fine
Thus was brought the decorated elephant
For **Civaṉanañcāṉ** leonine and divine
To ride out in procession royal

Ci<u>nn</u>anañcā<u>n</u> astride the elephant in the royal procession

King **Civa<u>n</u>anañcā<u>n</u>** of complexion like a *kāyāmpū*
Saw that elephant and was pleased quite
With folded hands he prayed
And mounted the elephant without hesitation any
As he did thus mount the elephant,
The drums and musical instruments at the temple,
Did rumble in unison resonant
The shapely prince **Anañcaperumāl** of magical charm
Rode astride the elephant in a procession on the streets

1 - 3. Ornaments used to decorate the elephant
4. *Howdah* - A canopied seat on the back of an elephant

(உலாவைக் கண்ட பெண்களின் நிலை)

68. ஆனைக் கழுத்தி லணஞ்சவ ராச னழகாய்ப் பவனிவர
அந்தத் தெருவினில் கண்டமடவா ரவரைக் கண்டாசை கொள்வார்
சந்தோச மாக அணஞ்சவ ராசனுந் தானும் பவனிவர
[1]சதயம் பிறந்த நாளு [2]முகூர்த்தத்தில் தானும் பவனிவர
[3]வான லோகம் பூலோக [4]மகிழ்ந்திட வல்லயக் காரர்வர
[5]வந்தார் தெருவி வணஞ்சவ ராசன் மடவார்க ளாசை கொள்வார்
[6]அந்தத் தெருவினில் கண்டமடவா [7]ரவனுக்கே யாசை கொள்ள
[8]ஆளிலழக னணஞ்சவ ராச னவரைக்கண் டாசை கொள்வார்
ஓடி வருவார் பேணிக்கண்ட பெண்கள் நாணிப் போகாதபடி
ஓடி வந்தொக்க வொளித்து நின்றுபார்த்து வுள்ளாசை கொண்டிடுவார்
தேடித் திரிந்தா லிவரழகைப் போல தேசத்தில் கிட்டாது
சிங்கார வில்லுமம்புங் கையில் கொண்டு சங்கையாய் வாராண்டி
சங்கைக்கு நல்ல சமர்த்த [9]னிவன்காணுஞ் சமயிற் தாயக்காரன்
தன்னாசை யென்னையுங் கொல்லுதே பாவிகா ளென்னாசை[10]
தீரானோ

நெற்றியி லிட்ட பொட்டென்னை [11]மயக்குது நெஞ்ச முருகுதய்யோ
நேரிட்டு யென்னோடே சீரிட்டு யின்றைக்கு நித்திரை [12]கொள்ளானோ
புத்தி [13]மயங்குது போத மழியுது பொய்யல்ல தோழிப் பெண்ணே
பொன்னணஞ்ச பெருமாளென்னையுஞ் சேரானோ யென்னாசை [14]தீராதோ
என்னையிவன் வந்து யின்றைக்குச் சேராட்டால் யிறந்து விடுவேனான்
எத்தனைபேர் நீங்கள் சொன்னாலுமே நான்சற்றுங் கேட்ப தில்லை
மன்னன் சிவனணஞ்ச பெருமாளும் மயக்கிறான் பெண்களையும்

(சின்னணஞ்ச பெருமாளைக் கண்ட பெண்களின் அலங்காரம்)

மாறாடிப் பெண்கள் சீராடிக் கொண்டு மயங்கித் திரிவாரும்
சேலை யுடைகள் நெகிழ்ந்திடச் சிங்கிகள் சிங்காரம் பூட்டிடுவார்
[17]செஞ்சிலை தண்டை சிலம்பு புலம்ப [18]தியங்கிவந்தா ளொருத்தி
மாலையுஞ் [19]சந்தனம் மஞ்சளைப் பூசி மயக்க வந்தா ளொருத்தி
வட்டத்தன மேல்குறு [20]வேர்வையாக மயங்கி வந்தா ளொருத்தி
வம்புக் காரியவள் கொண்டை கலையவலியச் சென்றா ளொருத்தி
மருட்டி மயக்கிய மணி[21]மாதர் கூடி வந்தெட்டி பார்த்து நின்றார்
கட்டச்சி வட்டத்தனத் தாளொருத்தி காணிக்கை கொண்டு வந்தாள்
கைகாட்ட பெண்கள் வெகுசித்திரமாகக் கண்ணால்மருட் டிடுவார்
வாக்கும் நோக்கும் வடிவையுங் கண்டு மருந்து கொடுவருவர்
வாசகனே மகராசனே யின்றைக்கு வந்தொரு முத்தந்தாரும்
பேய்போலே நின்று திகைப்பாள் நடுங்கிப் புருஷனைக் காணாமல்

(சின்னணஞ்ச பெருமாள் அறிவுரை)

பொன்னணஞ்ச பெருமாளு மப்போது பெண்களைப் பார்த்துச் சொல்வார்
ஆசைகொண்ட பெண்கள்மோசம் போகாமலே அணஞ்சவர் கண்டு சொல்வார்
அகம்புடையா னவனில்லையோ உங்களுக் கழகான கன்னிகளே

(சின்னணஞ்ச பெருமாளிடம் தூதுவிடல்)

தாகமா யும்மோடே சஞ்சரித்தா லெங்கள் மோகமெல்லாந் தீரும்
சந்தோசமா யும்மை நாடித்தேடி வந்தோம் அஞ்சாவிதங்கள் செய்ய
ஆகம் முருகிது ஆசை பெருகிது ஆண்பிள்ளை சிங்கனுக்காய்
அன்பா யிருந்து மகநலம் பாராட்டிக் கொஞ்சி மகிழானோ
கீழத் தெருவி லணஞ்சவ ராசன் [22]கெம்பீரப் பவனிவர
[23]கிளிகளைத் தூது விட்டே சிலபெண்கள் [24]வழிகேட்டுக் காத்திருப்பார்
அழகன் பெருமா னணஞ்சவ ராசன் ஆனைக் கழுத்தில்வர
ஆண்பிள்ளைச் சிங்கன் பெண்கள் [25]மணவாள னணஞ்ச பெருமாளும்
[26]வீணாக நாமளவனுக் காசை கொண்டு வாணாளும் போகுதடி
வீரனவன் வாரபவனியைப் பார்த்து மெல்லிய கூடிச் செல்வார்
கூடி மடவார் குலவை யொலிக்கக் கூட்டக் களரியிலே
கூட்டப் படையெல்லாஞ் சேவித்துப் பின்வர குதிரைப் படைநெருங்க
நாட்டமாய்க் குஞ்சங்கள் போட்டு வரவே நடைதிமன் முழங்க
நாத னருளை நினைத்து அணஞ்சவர் நன்றாய்ப் பவனிவந்தார்

ஆனை –யானை. **பவனி** –உலாப்போதல். **மடவார்** –பெண்கள். **சதயம்** –இருபத்தேழு நட்சத்திரத்தில் ஒன்று. **முகூர்த்தம்** –இரண்டு நாழிகை கொண்ட நேரம், சுபவேளை. **வானலோகம்** –தேவலோகம். **பூலோகம்** –பூமி. **வல்லயக்காரர்** –ஈட்டி ஏந்துபவர். **பேணிகண்ட** –ஆசைகொண்டு பார்த்த. **நாணி** –வெட்கி. **தேசம்** –நாடு. **சங்கை** –வழக்கம்.

The reaction of the damsels on seeing the procession

As **Anañcavarācan̲** did thus arrive,
Astride the elephant in a procession so fine,
The damsels who saw him on the street,
Were enamoured of the prince
As the king did move in a happy procession,
On the auspicious day by *Catayam*[1] star marked
Heaven and earth were both delighted

And the lancers marched in the street.
The damsels were enamoured of **Anañcavarācaṉ**
Who among men was most handsome
They ran and rushed to see him
Hiding themselves and not leaving in shyness
Saw the prince and longed for him in their minds
"Even if we roam the country all over
We can never come across a handsome man like him,
See how he carries elegantly the beautiful bow
And the arrow to boot,
A smart one he is in tradition proper,
And a donor generous as well
Lo! A cute and killing desire for him do I have,
Won't he quell my desire
Th *Poṭṭu*[2] on his forehead dazens me much,
Lo! My mind doth melt in desire keen,
Won't but take me offering *Cīr,*[3]
And sleep with me today?
Confused am I in my mind with my senses lost,
I am not lying, Oh! My maid
Won't **Poṉṉaṉañcāṉ** unite with me
And won't my desire be fulfilled
If he does not mingle with me this day
Die I shall whatever damsels all of you
Advise me to the contrary,
Oh! how much doth this **Civaṉaṉañcāṉ** lure
And drive the damsels to distraction?

Damsels adorning themselves on seeing Ciṉṉaṉañcaperumāḷ

With their senses altered and in a celebrating mood,
The dazed damsels did roam,
With their sarees and garments slipping but loosely,
The *cinkis*[4] did themselves adorn,

With *cencilai*[5], *tantai*[6] and *cilampu*[7] whining on her legs
Did a damsel arrive hesitantly,
With a garland around and smeared with sandal and turmeric,
Arrived a damsel to lure,
Sweating over her breasts round,
Came a damsel in a daze,
Rushed forward a woman a mischievous but deliberately,
With her *kontai*[8] dishevelled
The damsel who thus lured and scared,
Stood there peeping for a glimpse
A damsel short had brought offerings as well,
Pointing with their hands they scared with their eyes attractive,
Seeing his eyes and hearing his words,
And admiring his person shapely,
They did bring *Vaciyamaruntu* too
"Oh! King do come and kiss me" said a damsel
And stood perplexed like a ghost veritable
In trepidation without seeing her husband

Ci<u>nn</u>anañcaperumāl's advice

Po<u>nn</u>anañcaperumāl doth then the damsels address,
Unwilling to let the damsels betray their husbands,
And lose morals theirs,
Anañcavarāca<u>n</u> thus inclined did ask
"Don't you have husbands thine, Oh! Damsels dainty?"
"If we live and mingle with you,
Our lust will be quenched,
Hence have we happily gone over,
Seeking your company for amours various"

The damsel's messages of love to Ci<u>nn</u>anañcaperumāl

The body melts and the desire swells,
For the sake of the *Cinkan*[9]
"Won't be show affection in his mind
And fondle me but coaxingly?
As **Anañcavarācan** arrived at the eaststreet
In a procession impressive and majestic,
Some damsels did send parrots as messengers.
And waited to know the route of the procession,
As the prince handsome arrived astride the elephant,
The leonine and manly **Anañcaperumāl,**
Whom damsels did desire as husband theirs
As he arrived the damsels did remark,
"In vain are we enamoured of him,
Only our days will pass in sheer waste,"
As the warrior did move in a procession,
The damsels thus did assemble and move
They did in glee ululate as well,
With army in large numbers marching in reverence behind,
With cavalry closing in
Adorned with bunches of flowers and stepping with thuds loud,
Thus by the grace of God,
Anañcavar did arrive in a procession perfect

1. *Catayam* - The name of a star in Hindu astronomy
2. *Poṭṭu* - A Mask worn on one's fore head
3. *Ctr* - Materials offered as gift in matrimony
4. *Cinkis* - Shameless women
5 - 6. Ornament worn by women on their legs
7. *Cialmpu* - Anklet
8. *Kontai* - Tuft of hair
9. *Cinkan* - A leonine and majestic man

(சின்னணஞ்சி வரலாறு)

69. நாடான நாடதிலே நல்ல[1]தென் காசியிலே
தேசமான தேசத்திலே தென்காசிப் பதிதனிலே

தென்காசிப் பதிதனிலே சிறந்தநல்ல படைவீட்டில்
மங்காத புகழ்படைத்த வடிவன்சிவ னணஞ்சவனார்

செங்கண்மத யானைகளுஞ் சேனைபெரும் படையுடனே
[2]திங்கள்முக யணஞ்சவனார் சிறந்திருக்கும் நாளையிலே

இருக்குமந்த ([3]நாளையிலே இளங்கொடியாள் வானுதலாள்)
கரும்புவில்லுக் கிலக்கான காமனுட மோகினிபோல்

முருக்கிதழ்வாய்ப்பெண்கொடியாள் [5]வெளுத்தெடுப்பான் பெற்றமகள்
மருப்புகழுஞ் சின்னணஞ்சி வந்தகதை கேளுமினி

(வண்ணான் குடியிருப்பு)

கேளுமிவள் வரலாறு கெருவிதமா யுள்ளவர்கள்
[6]வாழும் [7]வடநாடதிலே வன்னியர்கள் சீர்மைமட்டும்
ஏழுபிடாகை தனிலு மெடுத்தழுக்குத் [8]தான்வெளுத்து
ஆணழகன் துவரைவண்ணானரசுவிளை குடியிருப்பு

(துவரை வண்ணான் மாட வண்ணான்)

அரசுவிளை குடியிருப்பு வாத்தங்கரை வெள்ளாவித்துறை
கரைசிறந்த பதிதோறுங் [9]கையாச்சை காணிகொண்டு
வரைசிறந்த துவரைவண்ணான் [10]வாழ்ந்திருந்தான் மாடவண்ணான்

மாடவண்ணான் தான்பிறந்து வாலசிங்க னானபோது
தாடாண்டை யுள்ளசடையன் வண்ணான்தன் [11]மனைவிதன்வயற்றில்

(சின்னணஞ்சி பிறப்பு)

தேடரிய கருவலம்(போல் சிறந்தகற்பம் உருவளர)
பேடை[12]யிள மயில்போலே பிறந்தாளே சின்னணஞ்சி

பிறந்துநன்றா யவள்வளர்ந்து பேருஞ்சின் னணஞ்சியென்று
கறந்தபால்(போல்) [13]மனமுடையாள் [14]கன்னியர்சின் னணஞ்சி தன்னை

[15]அறந்தழைக்கத் துவரவண்ணா னாசையுடனே வளர்த்தான்
வளர்ந்தாளே [16]சின்னணஞ்சி [17]வார்ப்புருக்கி வார்த்தாப்போல்

(சின்னணஞ்சியின் அழகு)

[18]அளந்துகுறித் [19]துருவாக்கி [20]யச்சதிலே சேர்த்தாப்போல்
[21]குழந்தைகள்போல் சொல்லழகுங் [22]குமிழ்மூக்கு மொப்பினையும்

ஒப்பினையு முடலழகும் மொருபாகந் தலைமுடியும்
மெய்ப்பனைய பூந்தனத்தாள் [23]மேனியெல்லாந் [24]தளதளென
கல்ப்பனையாள் சின்னணஞ்சி கமலமுகத் தழகுகொஞ்ச

கொஞ்சுமொழி வாயழகுங் [25]குமிழ்மூக்கு மொப்பினையும்
அஞ்சனக்கண் வேல்விழியா [26]ளாடுகொப்புங் குழைக்காதும்

[27]துஞ்சுநுத லிட்டபொட்டுந் [28]திருநீத்துப் பூச்சழகும்
[29]மஞ்சளைப்பூ சங்கழுத்தில் மாலையிட்ட பொற்பணியும்

பணிசுமந்த பூந்தனமும் பச்சுடம்பு மொப்பினையும்
அணிவகுத்த [30]கொடியிடையு மாலிலைபோலே வயிறும்

கிளிமொழியாள் சின்னணஞ்சி கீழ்மாறிப் பார்த்தகண்ணும்
மணிபுகுந்த பூங்குழலும் வலத்தோளி லேற்றாப்பும்

ஏத்தாப்பு [31]நடையுடையும் [32]யிருகரத்தின் வீச்சழகும்
[33]மாத்தாப்பாய் சின்னணஞ்சி [34]வளையலிட்ட கையழகும்

(சின்னணஞ்சி திருமணம்)

பூந்தாமரைக் [35]கரத்தாள் பொற்கொடியாள் சின்னணஞ்சி
சின்னணஞ்சி வாள்விழியாள் தெய்வரம்பை போல்வளந்தாள்
பன்னிரண்டு திருவயதில் பாவைநல்லாள் நல்தனத்தாள்
[36]மண்ணுலகில் [37]வெளுத்தெடுப்பான் வண்ணார மாடனுக்குக்
கன்னியர்சின் னணஞ்சிதன்னை கருத்துடனே மாலையிட்டார்

மாலையிட்ட நாள்முதலாய் வாழ்ந்திருந்தா ரிருபேரும்
சேலைசுத்தும் பெண்கொடியாள் தேன்மொழியாள் சின்னணஞ்சி
சாலமத்த [38]பூங்குழலாள் சாமத்திய மாகினாளே

சாமத்தியச் சடங்குசெய்ய தன்னினத்தார் தான்கூடி
[39]சேமமதாய் வடநாட்டில் தென்காசி வண்ணார்கள்

பாவதிய குழல்மடவார் பூவையர்சின் னணஞ்சிதன்னை
மாமய்ய [40]னுறமுறையார் வந்துசடங்கு[41] (தான்) முகித்தார்

சடங்கதெல்லா முடித்ததற்பின் தையல்நல்லாள் சின்னணஞ்சி
மடந்தையரு மன்னவனு மகாசிநேக [42]மாயிருந்தார்.

(சின்னணஞ்சியின் அழகைக் கண்ட ஆடவர்நிலை)

அடந்ததென் காசியிலே யவரவர்கள் மனைதோறும்
நடந்துசென் றழுக்கெடுத்து நன்னுதலாள் வருநேரம்

[43]வரும்வழியில் சின்னணஞ்சி வடிவுகண்டங் காடவர்கள்
பெருவிரலை மூக்கில்வைத்துப் பேதலித்து நிற்பாரும்

ஒருவருண்டோ யிவள்தனைப்போ லொப்பமுள்ள பெண்ணெனவே
தெருவதிலே கண்டவர்கள் தியங்கிமதி மயங்கிடுவார்

கண்டாசைப் பட்டிடுவார் காமப்பேய் கொண்டிடுவார்
மன்றாடுஞ் சின்னணஞ்சி மையலினால் சிலபேர்கள்

கொண்டமைய லால்சிலபேர் [44]குளிர்பிடித்துத் தான்கிடப்பார்
இன்றுநம்மோ டேயிருந்து யிணங்கிமுகம் பாராளோ

[45]பாராளோ வாராளோ பஞ்சணையில் வந்திவள்தான்
நேராக வார்த்தைசொல்லி நிலையுடனம் மிடத்திருந்தால்
சீரான நாடுபரி திரவியமும் கொடுத்திடலாம்

(சின்னணஞ்சியின் நற்பண்புகள்)

கொடுத்திடிலு மொருவரிடம் கூசாமல் சென்றறியாள்
கடுத்தவரோ டுறவாடாள் கண்டவர்மே லாசைகொள்ளாள்

மிடுத்தனமாய்த் தன்கணவன் [46]வெளுத்தெடுப்பான் றன்னைவிட்டு
விட்டுப் பிரிந்தறியாள் வேத்தூரில் வங்கறியாள்

கட்டுந் தறியைவிட்டுக் கடராத ஆவினம்போல்
மட்டுவிட்டுக் கடரறியாள் வரம்புதப்பி நடக்கறியாள்

தப்பாசைக் காரரோடு சரசமிட்டு [47]விளையாடாள்
பட்டுடையு [48]மொப்பனையும் பணித்தமலர்க் குழலழகும்

[49]தனித்துவழி நடக்கறியாள் தன்னூரின் போக்கறியாள்
இனத்தில்வண்ணார் தன்னோடே யிருந்துவிளை யாடறியாள்

மனத்திலவஞ் சகமறியாள் வரம்புதப்பி நடக்கறியாள்
அற்புதஞ்சேர் விழியழகி யமுர்தகுண வாயழகி

வேப்பிலைபோல் விழிமடவாள் மெல்லிநல்லாள் சின்னணஞ்சி
ஒப்புரவா யழுக்கெடுத்து வூருசுத்தி வருநேரம்

ஊரிலுள்ளோர் தங்கள்முன்னே வொமுங்குதப்பி நடப்பறியாள்
பேருசொல்லி [50]விளித்தாலும் [51]பெருவழியில் நிக்கறியாள்

மூக்கறையர் போல்சிரிக்கும் முகடர்கண்ணில் முழிக்கறியாள்
வாக்கறியா வார்த்தைசொல்லும் வண்டரைக்கண் டுறவாடாள்

உரைசேரு மாத்ததிக முள்ளதங்கப் பொன்னதுபோல்
விரைசேருங் குழல்மடவாள் மெல்லிநல்லாள் சின்னணஞ்சி
அரசுவிளைக் குடியிருப்பு [52]ஆயிழைதன் மனையில்வந்தாள்.

செங்கண் –சிவந்த கண். **சேனை** –படை. **திங்கள்முடி** – சந்திரனைப் போன்ற பிரகாசமான தலைமுடி அணிந்தவன். **காமனுட மோகினி** –இரதி. **முருக்கிதழ்** – முருக்கம்பூ போன்ற சிவந்த இதழ். **வெளுத்தெடுப்பான்** –துணியை வெள்ளையாக்குபவன். **மரு** –வாசனை. **வடநாடு** – வடதேசம். **வன்னியர்** –ஒரு சாதியர். **சீர்மை** –சிறப்பு, செம்மை. **ஏழுபிடாகை** –ஏழு கிராமங்கள். **வெள்ளாவி** –ஆடையை வெளுக்க உதவும் நீராவி. **வாலசிங்கன்** –பன்னிரண்டு வயதுடைய வாலிபன். **தாடாண்மை**– முயற்சி. **கருவலம்** –பொக்கிஷம், கருவூலம் என்பதின் பேச்சு வழக்கு. **பேடையிளமயில்** –பெண்மயில். **வார்ப்புருக்கி** –இரும்பு முதலான உலோகங்களை உருக்கி வார்த்து. **அச்சு** –சிலை வடிக்கப் பயன்படும் உள்ளீடற்ற உருவம். **குமிழ்மூக்கு** –குமிழம்பூ போன்ற மூக்கு. **ஒப்பினை** –ஒப்பனை அணி செய்தல். **பூந்தனத்தாள்** –பூப்போன்ற மார்பகத்தை உடையவள். **கல்ப்பனையாள்** – கற்பனையாள். **கமலமுகம்** –தாமரை போன்ற முகம். **அஞ்சனம்** –மை. **கொப்பு** –மாதர் காதணியினொன்று. **குழை** –குண்டலம். **பச்சுடம்பு**– வளமான உடம்பு. **ஏற்றாப்பு** –ஏத்தாப்பு, மேலாடை. **தெய்வரம்பை** –தெய்வப் பெண். **பாவை நல்லாள்** –சின்னணஞ்சி. **சத்தும்** –சுற்றும் என்பதன் பேச்சு வழக்கு. **சாலமதி** – மிகுதியான அறிவு. **சாமத்தியம்** –சமைதல் பருவம் அடைதல். **சேமம்** –இன்பம். **குழல் மடவார்** – கூந்தலையுடைய பெண்கள். **பேதலித்து** –மயங்கி. **தியங்கி** –தயங்கி. மதி – அறிவு. **பஞ்சணை** –பஞ்சாலான மெத்தை. **பரி** –குதிரை. **திரவியம்** –பொருள். **வேத்தூர்** –வேற்றூர். **கட்டுந்தறி** – மாடு முதலிய கட்டுந்தூண். **கடாத** –அகலாத. **வரம்பு தப்பி** –எல்லை தாண்டி. **வஞ்சகம்** – சூழ்ச்சி. **சத்தி** –சற்றி. **முகடர்** –மூடர்,அறிவற்றவர். **வண்டர்** –குறும்பு செய்வோர். **ஆயிழையாள்** –தேர்ந்தெடுத்த ஆபரணங்களைப் பூண்டவள்.

பா.வே. 1. வடசீமையிலே 2. சிங்கமுடி 3. வேளையிலே 7. நாடதனில் 9. கைக்காசி 10. தனக்குதித்த 14. கன்னிநல்ல சின்னணஞ்சி 16. ஆயிழையும் 17. வாலபிராயம் ஆனதினால் தாள் வளர்ந்து 19. சுருவாக்கி 20. அச்சிரத்தைக் 21. குழந்தை போல் 22. அம்மை குமிழ்மூக்கும் 23. வெளுத்தெடுப்பாள் பெற்ற மகள் 25. அம்மை குமிழ் மூக்கும் பல்லழகும் 26. ஆடுபொன் 27. தொஞ்சு 28. துய்யலிட்ட 29. வஞ்சப்பூங் 30. கொடியிடையாள் 31. நடையுடையாள் 32. இருகரங்கை 33. மாராப்பான் 35. கிளியாள் 36. சாமத்திலே 38. பூங்கொடியாள் 39. சாமத்திலே

வடநாட்டுத் தென்னாட்டு 41. தான் முகித்தது போலே இருந்தாரே இருபேரும் 42. கிளிபிடித்து தானிருப்பார்.

க.சொ. 4. முருக்கிதள் 5. வெழுத்தெடுப்பான் 6. வாளும் 8. தான்வெளுத்து 11. மனவி 12. இழமயில் 13. மனமுடயாள் 15. அறந்தளைக்க 18. அழந்து 22. குமிள்மூக்கு 24. தழதழென 34. வளயலிட்ட 37. வெழுத்தெடுப்பான் 40. உறமுறயார் 43. வளியில் 44. குழிர் பிடித்து 45.வாராளோ 46. வெழுத்தெடுப்பான் 47. விளயாடாள் 48. மொப்பினை 49. துனித்து வளி 50.விளித்தாலும் 51. பெருவளியில் 52. ஆயிளை.

The tale of Ciṉṉaṇañci

Of all the countries a good one **Teṉkāci**
A good city **Teṉkāci** in that country among countries,
In **Teṉkāci** city such at a *pataivīṭu* proper
As **Civaṉaṉañcavaṉ** of repute unfading,
Along with redeyed rogue elephants and armies huge,
Did flourish with his locks moonlike
As he thus did stay there,
A damsel creepers like with forehead luminous
Looking like **Mōhiṉi**[1] fixed by **kāmaṉ**[2]
As a target veritable for his sugarcane bow
The creeper like damsel with flowery lips and mouth,
The daughter of a launderer she was
Do listen to the tale of that damsel such,
By name **Ciṉṉaṇañci**

The habitation of washermen

Listen to her tale,
In the northern region where live folk quite proud,
At that glorious *Vaṉṉiyar* belt exclusive,
Was there one *Tuvarai vaṇṇāṉ*
That washer man quite handsome
Who did collect dirty linen to clean and wash,
From villages seven in that area there,
Stayed he at **Aracuviḷai**[3] with its river banks

And a *turai*[4] to steam the clothes washed,
He did collect his wages and *kāṇi*
At the villages all there by the river bank

Māṭavannān the washerman

As the famed *Tuvarai vannān*[5] lived thus
When that *mātavannān*[6] in due course
Did attain his youth as a *Vālacinkan*[7]
At the juncture such there was born
To the wife of *Cataiyan vannān* the industrious one

The birth of Cinnanañci

Like a treasure so rare to seek,
In conception perfect did the foetus grow
And like a pea hen was born **Cinnanañci**
Born thus and brought up but properly
She was named **Cinnanañci**
Pure of mind was she like mild drawn fresh,
Tuvaraivannān cataiyan with affection deep
Did bring her up and she grew
Like a figure fine cast in a mould

The beauty of Cinnanañci

As if measured designed and fixed in a mould
Lisping like children and a nose like *kumil*[8]
A body beautiful with adornment to boot,
Locks so long measuring one *pākam*[9] full,
With flowery breasts and quite buxom as well,
Her mouth elegant in endearment soft spoken,
Matched with her *kumil* like nose
Her spear like eyes sharp lined with *añcanam*[10]

And her ears adorned with *koppu*[11] and *kuḻai*[12]
With a *poṭṭu* on her forehead smeared with *tirunīṟu*[13]
Wearing a *mālai*[14] in gold in her neck smeared with turmeric,
Her breasts bearing that ornament
Her body fine made up in fine trim,
With slim waist creeper like and an abdomen like a banyan leaf,
Parrot like in speech and downcast eyes roving,
Her locks groomed with *mani*[15] and flowers,
Sporting *ēttāppu*[16] on her shoulder right,
With a gait graceful wearing a garment such,
Her hands both moving but elegantly as she walked
Hands so fine with bangles therein

Ciṉṉanañci's marriage

Ciṉṉanañci of lotus hands like a creeper golden,
With her eyes sword like grew up like **Rampai**[17] divine
That damsel dainty of shapely breasts
As she did complete years twelve in age,
With *Mātavannāṉ* the washer man
Was she united in wedlock
As they both lived for a while as man and wife,
The sareedad **Ciṉṉanañci** the damsel honey voiced,
Endowed with flowery locks and wit sharp as well,
Ciṉṉanañci such did attain puberty then
To perform they ceremony to celebrate her puberty,
All the folk of her community did assemble,
The *Vaṇṇār*[18] of **Teṉkāci** were all there,
In attendance for the occasion to grace,
Along with her kith and kin like uncles hers,
All of them did join and celebrate that function joyous
After the ceremony was over but fittingly,
Ciṉṉanañci and her spouse lived in harmony perfect

Cinnanañci's beauty causes flutter among men

In **Tenkāci** the city densely populated,
As **Cinnanañci** walked house to house
To collect clothes to wash,
On seeing that damsel with a shape so fine
Men who saw her did place their fingers on noses theirs,
Amazed quite and dazed as well
"Is there anyone else like this woman proper?
Those who saw her on the streets,
Lured were they and confused in their minds
Enamoured were they and became lustful as well,
With infatuation for **Cinnanañci** would some of them.
Lie shivering as if in cold
'Won't she be with us today
And favour us with her friendly look?
Won't she glance thus and come to our beds?
If she speaks to us but favourably and remains with us
Land and wealth we can give to her"

The good traits of Cinnanañci

She won't approach without hesitation
Even those who paid generously
Kinship she won't have with anyone harsh,
Never will she part haughtily from her husband the launderer,
Or stay at alien places other than her home
Like the cows that never leave the *kattuntari*[19]
To which they are tied,
She won't step out of her bounds and leave her sphere limited,
Flirt she won't with men of infatuation evil,
Nor will she walk alone adorned
In her flowery locks and silks fine
Even with the folk of her own community,

She won't mingle and play in mirth
Knows she no deceit of mind,
Or deviation any in conduct hers,
The damsel such of eyes wonderful
And a nectarine month soft spoken
Eyes like neam leaves the tender **Ci<u>nn</u>anañci** such,
As she thus did go on her rounds
To collect dirty clothes from houses many
She won't exceed her limits in the presence of the town folk,
Even if called by her name tarry she won't in the high way
Glance she never will towards the stupid ones
Who loiter like *mūkkaṟaiyar*[20]
Avoid she will kinship any with the *mukaṭar*
Who would utter words indecent
Like sterling gold of much fineness,
Tested by touch stone **Ci<u>nn</u>anañci**
The tender damsel with groomed locks
And wearing ornaments as well
Did stay at habitation hers at **Aracuvilai**

1. **Mōkiṉi** - A legendary woman of great beauty
2. **Kāmaṉ** - God of love
3. The name of a place
4. *tuṟai* - Washing ghat
5. *Tuvariavannāṉ* - A sect of washer men
6. *Māṭavannāṉ* - The name of a washer man
7. *Vālacinkaṉ* - A twelve year old yout
8. *Kumiḻ* - The name of a flower
9. *Pākam* - A length of four cubits
10. *Añcanam* - Eyelotion
11 - 12. Earrings and ornaments for ears
13. *Tıruniru* - Sacred ash
14. *Mālai* - Necklace
15. *Mani* - Gems or ornamental stones
16. *ēttāppu* - Upper garment
17. **Rampai** - A divine damsel of great beauty
18. *Vaṇṇār* - Washermen

19. *Kattuturi* - The port to which animals are tethered
20. *Mūkkaraiyar* - The word literally means people with slashed noses but it refers to loafers here

விருத்தம்

70. வந்தாள் [1]மனையில் புடவைகொண்டு வண்ணார் மாடன் [2]மனமகிழ
[3]இந்தா வெனவே சுமடுதன்னை யிறக்கித் தரையில் [4]மெல்லவைத்து

கொந்தார் [5]குழலாள் மனமகிழ்ந்து [6]குறைய அமுது பசியாறி
சிந்தா மணிபோல் சின்னணஞ்சி சிறப்பாய் வெளியில் வந்தாளே.

புடவை –சேலை, வஸ்திரம். **சுமடு** – சுடை. **கொந்தார் குழலாள்** –பூங்கொத்துக்களைக் கூந்தலில் அணிந்த பெண்கள். **அமுது** –உணவு, சாப்பாடு. **பசியாறி** –பசிக்கு உணவு உட்கொண்டு. **சிந்தாமணி** –தேவமணியினொன்று.

பா.வே. 1. வெளியில் மனையதிலே 3. இந்தா பெரிய 4. கீழே வைத்து 5. குழலார்

சு.சொ. 1. மனயில் 2. மனமகிள 6. குறய அமுது.

Cinnanañci steps out of her home

Viruttam[1]

Arrived she at her house bringing sarees for washing
Much to the delight of **Mātan** the washer man,
Placing down that head load on the floor gently,
The damsel with locks adorned with bunches of flowers,
Happy in her mind she ate a little
To appear her hunger,
And stepped out in splendour like *cintāmani* veritable

1. *Viruttam* - The name of a metre in Tamil Prosody.

(மாடனும் சின்னணஞ்சியும் துணிவெளுக்க நீர்த்துறைக்குச் செல்லுதல்)

71. வந்தாள் வெளியிலே [1]சந்தோசமாய்ச் சின்னணஞ்சி
வண்ணானுந் தானும் மகிழ்ந்துதுறை தனில்போகி
பொந்தாரும் பூங்குழல் [2]கோதையர்கள் புடவையும்
குல்லாவுஞ் சல்லாரிச் சேலை[3]முழுப் பணிச்சேலை
சேலைபருக்கன் பருமுறி துப்பட்டி வேட்டி
[4]சித்திரப் பொற்சருகை தலைப்பாவு முருமாலும்
வாலைப் பருவம தாகியசின் னணஞ்சிதான்
வாக்குடன் சேலை வகைவகை [5]யாய்மடித்தாள்
[6]பருக்கன் பருமுறிச் சேலையைக் கீழேவிரித்து
பச்சரிசிக் [7]கஞ்சிவைத்து முடிந்து கொண்டாளே
கஞ்சிக்கரிசியுங் [8]கையிலே நீலமுங் கொண்டு
கட்டிச்சுண் ணாம்பொரு பொட்டணமாய்க் கெட்டிக்கொண்டாள்
வஞ்சிக் கொடியாளைக் [9]கொண்டவண்ணா னவன்றானும்
வாக்குடன் சேலை வகைவகையாக [10]மடித்தான்
[11]எடுத்துக் குழிதாழிச் சட்டியுங் கையிலிடுக்கி
ஏத்தாப்பாய் தோளிலோரு மாராப்புப் [12]போட்டான்
போட்டான் விறகுபிளக்கவே கோடாலி [13]தோளில்
போதரவா [14]யுவர்மண்ணும் பொதியேத்திக் [15]கொண்டான்
கோட்டானைச் சூவென்றடித்து நடத்தி வண்ணானும்
கொம்பனையாளோடு அன்பாய்த் துறைதனில் வந்தான்.

கோதையர் –பெண்கள். **குல்லா** –தலைத்தொப்பி. **சல்லாரிச் சேலை** –அலசற்சீலை. **முழுப்பணிச் சேலை** –முழுவதும் வேலைப்பாடுள்ள சீலை. **பருக்கன்** –மிருதுவற்றது. **பருமுறி** –பரும்புடைவை. **துப்பட்டி** –போர்வை. **சித்திர பொற்சருகை** –அழகுநிறைந்த பொற்சரிகை. **தலைப்பாவு** –தலைப்பாகை. **வாலைப்பருவம்** –இளமைப் பருவம். **வாக்குடன்** –மடிப்புடன். **பொட்டணம்** –பொட்டலம். **வஞ்சிக் கொடியாள்** –வஞ்சிக் கொடிபோன்ற இடையை உடைய சின்னணஞ்சி. **குழிதாழி** –பானை. **சட்டி** – ஒரு பாண்டம் **உவர்மண்** –உழமண், சவர்மண். **பொதி** –மூட்டை. **கோட்டானை** –கழுதை. **கொம்பனையாள்** –மரக்கொம்பு போன்ற சின்னணஞ்சி.

பா.வே. 1. சந்தோசமாகவே 3. சரப்பொளி சேலை 4. சித்திரப் போலே 6. பட்டு 8. கசவைக்கு 9. மணவாளன் தானும் 10. எடுத்தான் 11. எடுத்தொரு 12. போட்டு 14. மண்ணும் 15. கொண்டு.

க.சொ. 2. கோதயர் 5. யாகமடித்தாள் 7.சேலயை 13. தோழில்.

Mātan̲ and Cin̲n̲ananñci go to the washing ghat

Cin̲n̲anañci did step out in joy,
The washerman too accompanying her in delight,
They both did go to the turai for washing,
Sarees of women of locks elegant,
Caps and *Callāri*[1] sarees and sarees with designs all over,
Rough sarees blanket heavy and dhoties,
Turbans laced and with figures designed,
Urumāl[2] too in load theirs,
Cin̲n̲anañci the damsel young,
Did fold the sarees all but properly
Spread the *parukkan̲*[3] saree on the floor
Poured thick *Kañci*[4] made of raw rice therein
And tied in a pouch thus
Rice for *Kañci* and with *nilam*[5] in her hands,
Thick lime too she had in a packet tied
The washerman too who was her loving spouse
Did fold the sarees of various kinds
Taking a *tali*[6] deep and a pot in his hands
He did sport a *mārāppu*[7] as a garment
On the shoulder as an *ēttāppu*
With an axe as well on shoulder his,
To cut firewood asunder,
A load of *Uvarman*[8] too he placed
On his donkey and driving it with blows and shouts
Thus did he arrive at the *tu<u>r</u>ai*
Along with **Cin̲n̲anañci** horn like

1. *Callāri* - Porous and thin cloth
2. *Urumāl* - Long towel
3. *Parukkan̲* - Rough cloth
4. *Kañci* - Starch
5. *Nilam* - Blue powder
6. *tal̲i* - Big pot
7. *Marappu* - Cloth worn as Upper garment
8. *Uvarman* - Saline soil used in washing clothes

விருத்தம்

72. துறைதனில் வந்த போது தோகைசின் னஞ்சி வண்ணான்
விறகது [1]கீறிப் போட்டு வெள்ளாவிதான் [2]வளைய வென்றே
தரைதனில் விளைந்த உவரச் சாணியு முறிக்கிச் சேரை
கரையற வெளுக்க வென்றே கன்னியர் ஆற்றில் வந்தார்.

துறை –நீர்த்துறை. **விறகு** –மரக்கட்டைகள். **உவரச்சாணி** – உப்புமண். **கரை** – கறை – அழுக்கு.

பா.வே. 1. பிளந்து 2. வைக்க.

ச.சொ. 2. வழய.

Viruttam

Arrived the damsel **Ci<u>nn</u>anañci** and the washer man
At the *turai* when he did cleave the fire wood
To have *vellāvi*[1] (for the washed clothes)
With *uvarman* too taken from the earth
The damsel arrived at the river bank
To wash the sarees removing stains all

1. *Veḷḷāvi* - Steaming clothes

(ஆற்றங்கரையும் வெள்ளாவித் துறையும்)

73. ஆத்தங் கரையும் வெள்ளாவித் துறையும்
அழகான நல்ல [1]யிளமரத் தோப்பும்

ஊத்தங்கரையு மொத்த யாளுங் கிணறும்
ஒழுங்கொழுங்[2]காக வெய்யாவிக் கல்லும்

கல்லுந் துறையுங் கலுங்கு முகமும்
[3]கட்டான வட்டத் தருவையும் போக்கும்
அல்லும் பகலுந் தினந்தினம் வண்ணார்
அவரவர் கூடி [4]வெளுக்குந் தலமும்

வெளுக்குந் [5]தலத்தி லழுக்கையும் போட்டு
வெள்ளத் தையுங்குழி தாழியி லிட்டு
ஒழுக்கத் துடனந்த சின்ன ணஞ்சி[6]தான்
உத்தாரமாய்ச் சேலை கொய்து மடித்து

கொய்து மடித்துப் [7]பிடித்து நன்றாக
[8]கொஞ்சவே தண்ணீரில் மிஞ்ச நனைத்து
நெய்த [9]பருவட்டக் கோடிக ளெல்லாம்
நீரி லடித்துச் [10]சாணாகமு மூட்டி

சாணா கமுமுவர் மண்ணு முறிக்கி
சாயமுங் கெட்டி வெள்ளாவியில் வைத்தாள்
மானார் [11]குழல்மடவாள் சின்ன ணஞ்சி
வண்ணானுஞ் [12]சந்தோச மாக மகிழ்ந்து

வெள்ளாவிப் [13]பானைக்குத் தண்ணீரு மிட்டு
மேலே பருவட்டச் சேலை வளைந்து
கிள்ளை[14]மொழி யாளெனுஞ் சின்ன ணஞ்சி
கெம்பீர மாய்த்தீ யடுப்பிலே யிட்டாள்.

தீயாவி கொள்ளப் புகையுச்ச மேற
[15]தீட்டுக் கரையும் அழுக்கு [16]மிளக
[17]மாயக் குழலியெனுஞ் சின்ன ணஞ்சி
வைத்த வெள்ளாவி [18]நிறமொத்த போது

போதர வாய்ச் [19]சேலை யொக்க யிறக்கி
பொதிந்தெடுத் தானே [20]வெளுத்தெடுப்பானும்
ஆதர வாகவே சின்ன ணஞ்சிதான்
அப்பிலே தப்பி யடித்தாளே சேலை
அடித்தார் புடவை யிருபேரு மாக
ஆசு வெனவே அசந்து புலம்பி

[21]ஒப்பத்துடன் சேலை துப்பட்டி வேட்டி
ஒக்கவே [22]கொக்கிறகு போலே வெளுத்து
செப்பத்துட னந்த சின்ன ணஞ்சிதான்
சேலைக்கு நீரமுங் கஞ்சியும் வைத்து
வைத்துப் புடவை விரித்து [23]உலர்த்தி
வண்ணாத்தி யோடேதான் வண்ணானுஞ் சொல்வான்.

(சின்னணஞ்சியிடம் சேலையைக் கொடுத்து மறுமாத்து வாங்கிவர அனுப்புதல்)

[24]ஊரிலே சென்று சேலை கொடுத்து
[25]ஒப்பமுடன் கொத்து வாங்கிவா வென்றான்
சீக்கிரத்தில் வாடி சின்ன ணஞ்சிநீ
சேலை கொடுத்து மறுமாத்து வாங்கி
மாத்துடன் [26]கொத்துக் கரிசியுங் கொண்டு
[27]மால்மயங்கு மன்னே வாடி பெண்ணே
பூத்தான மாகவே [28]சின்ன ணஞ்சியை
போவென்று சொல்லி வண்ணானும்வழி யனுப்பலுற்றான்.

ஆத்தங் கரை –ஆற்றங்கரை என்பதின் பேச்சு வழக்கு. **ஊத்தங்கரை** –ஊற்றங் கரை. **ஒத்த** –ஒற்றை –ஒரு. **கலுங்கு** –கலிங்கு, நீர் வழியும் அணைக்கட்டு முகம். **தருவை** – பெரிய ஏரி. **அல்** –இருள். **குழிதாழி** – குழிந்த பானை. **உத்தாரம்** –அடுப்பு. **கொய்து** – சுருக்கி. **பருவட்டம்** –பரிவட்டம் சீலை. **கோடி** –வரிசை. **சாணாகம்** –சாணி. **கெட்டி** – கட்டி என்பதின் பேச்சு பழக்கு. **கிள்ளை** –கிளி. **தீட்டு** –அழுக்கு, மகளிர் சூதகம். **இளக** –நீங்க. **குழலி** –கூந்தலையுடையவள். **அப்பு** –தண்ணீர். **ஆசு** –வண்ணான் துணிதுவைக்கும் போது ஏற்படும் குரலோசை. **கொக்கிறகு** –இங்கு வெள்ளை நிறத்தைக் குறிக்கிறது. **உலர்த்தி** –காயவைத்து. **கொத்து** –உணவு. **சீக்கிரம்** –விரைதல். **மறு மாத்து** –சுத்தம் செய்த துணிகளைக் கொடுத்து விட்டு அழுக்குத்துணிகளை வாங்கி வருதல். **கொத்துக்கரிசி** –சோற்றுக்கரிசி. **மால்மயங்கு முன்னே** –இருள் வருவதற்து முன்னே. **பூத்தானம்** –அருமை பண்ணல், அருமை பாராட்டுகை.

பா.வே. 2. காகவே3. கட்டார 5. தலத்தினில் 6. தானும் 7. நன்றாய் 8. கொஞ்சம் 9. பரிவட்டம் 10. சாணாங்கி முறுக்கி வைத்து 11. குழலாள் மடவார் 12. சந்தோச மாகவே 13. பானைக்குள் 14. மொழியாள் சின்னணஞ்சி தான் 15. தீட்டும் கரையும் 17. மாய சுருவி என்றும் 18. நிறைபெத்த 19. ஒக்க சேலை 21. ஒப்பத்துடன் அந்த துப்படி 22. கொக்கது 23. உணர்த்தி 24. குடி காட்டிலே 25. கொத்தும் வாங்கி சீக்கரம் வாடி 26. சோத்துக் 27. மாலை மசங்கு முன்வாடி நீ என்றாள் 28. சின்னணஞ்சி தன்னை வன்னான் அனுப்பலுற்றானே.

சு.சொ. 1. யிழமரத்தோப்பு 4. வெகுக்குந் 16. மிழக 20. வெழுத்தெடுப்பானும்

The river bank and Vellāvitturai[1]

The river bank and the *Vellāvitturai*[1] there
With a grove beautiful of tender trees
The *ūttankarai*[2] with a well and one to attend
Vellāvi stones in a neat now placed,
Kallutturai[3] and *kalunku*[4] as well
A lake circular and compact with *pōkku*[5] proper,
And a *talam* where the washer men
Gather both day and night to wash and work
At that *talam*[6] did **Cinnanañci**
Pour water and put the clothes in the big pot hollow,
And before placing the pot on the oven
She folded the sarees and soaked them
In a little water to drench
And lashed the rough new clothes on the water

Treating in with *cānākam*[7]
And then she did add *uvarman* to the mix
Along with dye as well tied in the pack
She placed the package entire to be steamed
Ciṉṉanañci the damsel of locks elegant
Did happily along with her husband
Poured water into the *Vellāvi* pot
And covering it with a saree big and rough
The sweet voiced **Ciṉṉanañci** did make fire,
In the oven with vigour great
As the smoke went up and the fire generated steam,
The stains and dirt did melt,
The *Vellāvi* set by the damsel
Did wash the clothes but evenly in their shades
She removed the pot from the oven with care,
And took out the sarees one by one
Along with the washerman did she
Then beat the clothes on the stones
Both did beat the sarees,
Gasping for breath and raising vocal sounds thereby,
Thus they did wash sarees blankets and dhoties,
Washed them all as white as the feathers of a crane
Then did **Ciṉṉanañci** treat the sarees
With starch and *nilam*
After which she did the sarees unfold
And dried them but properly

Sending Ciṉṉaṉañci with washed sarees and Asking her to return with *maṟumāttu*

"Go to the town deliver the washed sarees
And return with *Kottu*[8] said the washerman
"Return quickly, Oh! **Ciṉṉanañci**
Deliver the sarees collect clothes for washing

And come with rice for *kottu*
Hurry and return before dusk, dear girl"
Lovingly did he thus send her to town
With concern earnest.

1. *Vellāvitturai* - The place where clothes are steamed
2. *Ūttankarai* - The place by the side of a fountain well
3. *Kallutturai* - The venue where clothes are beaten on stones
4. *Kalunku* - The dam from which water flows
5. *Pōkku* - Passage of water
6. *Talam* - Washing place
7. *Cānākam* - Cow dung
8. *Kottu* - Food

(சின்னணஞ்சி சகுனம் கண்டு அஞ்சுதல்)

விருத்தம்

74. [1]அனுப்பியே வண்ணான் நிற்க வழகுசின் னணஞ்சி தானும்
[2]தனுப்புமன் புடவை யெல்லாந் தலைதனி லெடுக்கும் போது
[3]மனுப்புடன் [4]கெவுளி சொல்ல மங்கைய ரிடத்தே தும்ம
[5]கனப்புடன் துள்ளிக் கோட்டான் [6]காவென விளிக்கக் கேட்டாள்.

தனுப்புடன் –விருப்பமுடன், குளிர்ச்சியுடன் என்பதின் தென்மாவட்ட வழக்கு. **கெவுளி** – பல்லி. **கனப்புடன்** –அழுத்தத்துடன், விரைப்புடன். **கோட்டான்** –ஒரு புள், கூகை. **கா** –ஒலிக் குறிப்பு. **விளிக்க** –அழைக்க.

பா.வே. 1. அனுப்பிய வண்ணானுக்கு அழகு 2. தனிப்புடன் புடவை தானும் 3. மணிப்புடன் 5. கணிப்புடன் 6. காவேன்று சத்த மிட்டு.

சு.சொ. 4. கெவுழி 6. விழிக்க கேட்டாள்.

Viruttam

Cinnanañci fears the ill omens
As the washer man did send her off and stand there
And when **Cinnanañci** placed the sarees on her head

A lizard did tick loudly and the damsel sneezeed as well
And vigorously did a *kōttan̲*[1] caw
Which she did hear

1. *kōttan̲* - A kind of an owl

விருத்தம்

75. [1]கேட்டவள் தடைகண் டஞ்சிக் [2]கிளிமொழி மனது நொந்து
வாட்டமாய் சின்ன ணஞ்சி(தானும்) வலதுகால் வைக்கும் போது
[3]ஈட்டமாய் [4]வெருகு சாட யிடமொரு காக மோட
கோட்டுமா முலையாள் தானுங் குசவனை யெதிரே கண்டாள்.

கிளிமொழி –கிளி போன்று மொழி பேசும் சின்னணஞ்சி. **வாட்டமாய்** –சோர்வாய். **ஈட்டம்** –கூட்டம். **வெருகு** –பூனை, மரநாய். **சாட** –அடிக்க. **இடமொரு காகமோட** –வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கம் காகம் செல்லுதல். **கோட்டுமா முலையான்** –யானைத் தந்தம் போன்ற தனத்தை உடையவள். **குசவன்** –குயவன்.

பா.வே. 1. கோட்டஅத் 3. இட்டமாய் 4. எருது.

சு.சொ. 2. கிழிமொழி.

Viruttam

On hearing ill omens such she feared obstacles imminent,
The parrot voiced damsel at such augury was anguished
As the worried damsel put her right foot ahead
Cats many did cross and a crow darted leftwards
The damsel with breasts like ivory elephantine,
Did also see a *Kucavan̲*[1] coming opposite her.

1. *Kucavan̲* - Potter

விருத்தம்

76. கண்டோங் கொடிய தடைநமக்குங் கால மிதுவே போராது
[1]சென்ற யிடத்தில் பகைவருமோ சேலை பருவட்டம பறிபோமோ

கொண்ட கணவன் [2]தனக்கேதோ [3]கொடியார் தமக்கு நமக்கேதோ
யென்று புலம்பிச் சின்னணஞ்சி [4]யிளமயில் போல [5]நடந்தாளே.

பா.வே. 1. சொந்த 2. தமக்கேதோ 3. கிளையார் 5. நடக்கலுற்றாளே.

க.சொ. 4. யிழமயில்.

Viruttam

"Hurdles vicious have I seen,
Not a good period for us now
Shall we incur enmity where we go,
Will the sarees and *parivattam*[1] be lost?
Will my husband come to grief?
Or does it bode ill for me?"
Thus lamenting did **Cinnanañci**
Walk but gently like a peahen young.

1. *Parivattam* - Head band

**(சின்னணஞ்சி நடந்து செல்லும் அழகுத் தோற்றமும்
தென்காசிப் பட்டணம் வந்து அடைதலும்)**

77. நடந்தாளிள மயிலதுபோல் –[1]அந்த
நன்னுதலாள் சின்னணஞ்சி
குடந்தாங்கு மென்தனத்தாள் –அம்மை
கோலமெழுதின சித்திரம்போல்
[2]அடர்ந்த இளந்தோப்பும் –அம்மை
ஆத்தங்கரை சுமைதாங்கிவிட்டு
படர்ந்த [3]யிடுகாடுவிட்டு –அந்த
பைந்தொடியாள் சின்னணஞ்சி
மடந்தைக் கிளிமொழியாள் –அவள்
மஞ்சணவாடையும் உடலழகும்

[5]அழகா லிலைவயிறு –அம்மை
ஆசாரச்சொல்லுங் கைவீச்சழகும்
[6]புகழான வாய்மலரும் –அம்மை
[7]பொங்காரப் பொட்டழகும்
[8]இளமான் மயிலதுபோல் –அம்மை
இங்கிதமான குறுநடையும்
நடையும் துடியிடையும் –அந்த
நாணயச் சொல்லுடன் ஒப்பினையும்
மடவாள் மதிமுகமும் –[9]வண்ண
வரிகுறிப் பொட்டழகும்
அடவான பொற்பணியும் –அந்த
ஆடும்பொப்பு [10]குழைக்காதழகும்
திடமாய் எடுத்துடுத்து –[11]முந்தி
சேலையில் கஞ்சி கசகசென
கஞ்சி சேலையுடுத்து –அம்மை
கையில் வளையல் கலகலென
வஞ்சிக் கொடியிடையாள் –அம்மை
மையிட்ட கண்ணும் மதிமுகமும்
கொஞ்சுங் [12]குயில்மொழியாள் –அந்த
கோதிமுடித்த தலையழகும்
முடியுந் துடியிடையும் –அந்த
முந்தாங்கிச் சேலையும் ஏத்தாப்பும்
பிடிபோல் நடையழகும் –அம்மை
பேடை மயில்போல் சின்னணஞ்சி
கடிதாய் வழிநடந்து –அவள்
[13]தென்காசி பட்டணத்திலே
மடியாமல் சின்னணஞ்சி –அம்மை
வாழிமயிலாள் வரும்நேரமதில்

(சின்னணஞ்சான் உலா வருதல்)

படைவீட்டுச் சேவுகனும் –அந்த
பக்கத்திலே நல்ல சிறுக்கனுமாய்
துடியான மண்டலிகன் –வெகு
தீரன் சிவனணஞ்ச பெருமாள்

பெருமாள் [14]குபேரனென்னும் –அந்த
பூலோகத் தெய்வேந்திர னெனவே
திருமால் அருள்மறவான் –வெகு
தீரன் சிவனணஞ்ச பெருமாள்
கருமா முகிலது போல் –சித்திர
காமன் சிவனணஞ்ச பெருமாள்
திருவான பூங்குழலாள் –அந்த
சின்னணஞ்சி வரும் வீதியிலே
வீதி தெருவதிலே –அவர்
வேந்தன் சின்னணஞ் சவனார்
சோதி மதிமுகத்தான் –கையில்
சிங்காரவில்லும் கையிலெடுத்துக் கொண்டு
மோதி வளர்ந்துநிற்கும் –அந்த
மிக்கான சோலை மரங்களிலே
[15]கோதுமலர் கிளியுங் –[16]கொண்டன்
சிறாளியும் சிட்டிகளும்
கூவுங்குயில் மயிலுங் –அங்கே
கோலநெடுந்தேர் வீதியிலே

(சின்னணஞ்சியைக் கண்டு சின்னணஞ்சான் மையல் சொளல்)

[17]தெருவில் இளமரத்தில் –சிட்டில்
    தரித்தவர் நிற்கையிலே
பருவயிள மடவாள் –அம்மை
    பக்குவமாகிய சின்னணஞ்சி
வரும்போ தவள்வடிவைக் –கண்டு
    மையல்கொண்டார் சின்னணஞ்ச பெருமாள்.

ஆத்தங்கரை –ஆற்றங்கரை. **சுமை** –பாரம். **ஆசாரச்சொல்** –உபசார வார்த்தை. **பொங்காரம்** –அழகிய. **இங்கிதம்** –மென்மையான. **மதிமுகம்** –மதிபோன்ற முகம், உவமைத்தொகை. **கொப்பு** –பெண்கள் அணியும் காதணியில் ஒன்று. **முந்தி** –முந்தானை. **கசகசென** –ஒலிக்குறிப்பு. **வளையல்**– கைவளை. **முந்தாங்கி** –முந்தாளை. **ஏத்தாப்பு** – மேலாடை. **பிடி** –பெண்யானை. **பேடைமயில்** – பெண்மயில். **மண்டலிகன்** –அரசன். **பூலோகம்** –பூமி. **காமன்** –மன்மதன். **சோதிமதி முகத்தான்** –ஒளிபொருந்திய முகத்தையுடைய சின்னணஞ்சான். **கொண்டன்சிறாளி** –குருவி வகை. **சிட்டு** – சிட்டுக்குருவி.

பா.வே. 2. நடந்த இளந்தோப்பு 3. பிராடும் விட்டு 5. அழகா நிலைபெயரும் 6. விளையான 7. பொட்டுபொங்காரமும் கண்மடலும் 9. வர்ண 10. குழல் காதழகும் 11. அந்த 12. குமிழ்மூக்கும் தென்காசிபுரமென்ற 14. அழகு போலெனவே 15. கொத்து 16. கொண்டங்கிளாத்தி.

சு.சொ. 1. முந்த 4. கிழிமொழியாள் 8. இழமான் 15. கோதுமலர் கிழியும் 17. தெருவிலிழமரத்தில்

The graceful gait of Cinnanañci

Walked **Cinnanañci** of forehead fine,
Like a peahen young,
The damsel with breasts soft,
Like a figure drawn in *Kōlam*[1]
Leaving the grove dense
And the *Cumaitānki*[2] in the river bank
Passed she the *itukātu* sprawling
The damsel parrot like in speech,
Smelling of *mañcanam*[3] and a body beautiful,
With leaf like stomach and of words hospitable

Her hands in movement graceful
Her mouth like a flower glorious
And her *poṭṭu* quite winsome,
Her gentle gait short stepped
Resembling that of deer and peahen young,
Gait such and with a waist slim,
Honest in words and with *oppaṉai*[4] proper
Moon like mien and her poṭṭu beautiful
Lined and striped in its mask,
Ornaments proper adorning her
Sporting *Kuḻāi* in her ears elegant
Wearing starched saree tightly quite,
Feeling the rustle because of the starch stiff,
Her bangles jingling in hand hers
The damsel with her waist creeper like,
Her eyes lined with *mai*[5] and her moon like face
Speaking like a cuckoo and with her locks groomed

Arrival at Teṉkāci

With her locks lovely and waist slim
Sporting a saree with *muntāṉai*[6]
And *ēttāppu*[7] to boot
Her gait impressive like that of a *piṭi,*
Ciṉṉanañci resembling a peahen
Did walk but briskly,
And arrived at **Teṉkāci** city
At the juncture such

Ciṉṉanañcāṉ arrives in a precession there

With a soldier of *pataivitu* on one side
And a youth on the other
The dynamic king **Civaṉanañcaperumāl**

The brave one quite,
Resembling **perumāl kupēra<u>n</u>**[8]
And like **Intira<u>n</u>**[9] divine on earth descended
He who would never forget **Tirumāl's**[10] grace
The warrior such **Civa<u>n</u>anañcaperumāl**
Cloud like was he
And as an illustration of **kāma<u>n</u>** did he look
Arrived **Civa<u>n</u>anañcava<u>n</u>** such,
In that road where **Ci<u>nn</u>anañci** of locks flowery
Was walking for her task,
The king of moon like face luminous,
Sporting a fine bow in his hand,
In that avenue long where,
Chariots ply and lined with trees dense as in a grove,
Where parrots peck at flowers,
And *Koṇṭa<u>n</u> ciṟāli*[11] and sparrows abound,
Cooing cuckoos and peacocks as well found there
In such a road picturesque,
Ci<u>nn</u>anañcā<u>n</u> longs for **Ci<u>nn</u>anañci**

As he stood for a while in that road,
Under a tree tender watching the sparrows,
Saw the damsel in the bloom of her youth,
Ci<u>nn</u>anañci the nice one,
Seeing her features and figure shapely,
Ci<u>nn</u>anañcaperumāl longed intensely for her

1. *Kōlam* - Designs drawn on floor
2. *Cumaitānki* - A structure on which loads can be placed
3. *Mañcanam* - A blend of oil and turmeric
4. *Oppa<u>n</u>ai* - Make up
5. *Mai* - Eye lotion
6. *Munttā<u>n</u>ai* - The free end of a saree (palla)
7. *ēttāppu* - Upper garment
8. *Perumāl kupēra<u>n</u>* - God of wealth
9. *Intira<u>n</u>* - The chief of Tevars or heavenly beings

10. *Tirumāl* - God of protection in Hinduism (Lord Visnu)
11. *Koṉtan Ciṟāli* - A kind of bird

(சின்னணஞ்சான் சின்னணஞ்சியின் அழகைப் பாராட்டல்)

78. மையல்கொண் டேங்கி மயங்கிவிட் டாரே
[1]மாரன் சிவனணஞ்ச பெருமாளும்
கையத் தெருவில் வில்லொரு புறஞ்சேரக்
[2]கண்டுவண் ணாத்தியைக் கொண்டாடிக் கொண்டு
கொண்டாடிக் காமக் [3]குளிரும் பிடித்துக்
கோமான் சிவன ணஞ்ச[4]பெரு மாளும்
மண்டலந் தன்னி லிவள்தன்னைப் போலே
வாக்குஞ் சுவடும் [5]வடிவில்லை யென்ன
வாக்குஞ் சுவடும் வடிவையுங் கண்டு
வண்ணாத்திக் காகவே யெண்ணப்பட் டாரே
தீரன் சிவன ணஞ்சபெரு மாளும்
சின்ன ணஞ்சியுட வொப்பினைக் கண்டு
ஒப்புடன் கொப்புங் [6]குழைக்காதும் பொன்னும்
உடலழகைக் கண்டு வுள்ளாசை கொண்டார்
செப்புத் தனமுஞ் சிறந்த முகமும்
தேசத்தி லிப்படியுங் [7]கண்ட தில்லை
இல்லை நமக்கு யிவள்தனைப் போலே
இப்படிப் பெண்ணொருத்தி (எங்கும்) கிடையாது
அல்லும் பகலு மிருந்துநம் மோடே
ஆசார வார்த்தைகள் பேசவா ராளோ
வாராளோ சின்னணஞ்சி யென்று சொல்லி
[8]வாயாலே சொல்ல யணஞ்சவ ராசன்
[9]தாராள மாகிய சின்ன ணஞ்சிதான்
தாழ்ந்த குலத்தில் பிறக்க விதியோ

விதித்த பிரமனுக் கேதுசெய் தாளோ
வெளுத்தெடுப் பான்குலத்தில் [10]படைத்தாரே
சிரித்த [11]முகச்சின் னணஞ்சியைக் கண்டு
சிவணைஞ்ச பெருமா ளாசை [12]கொண்டார்.

(சின்னணஞ்சியைப் பின் தொடர்ந்து, நிற்கச் சொல்லுதல்)

சின்னணஞ் சவனார் சிவனணஞ் சவனார்
[13]தீரன் முத்த ணஞ்சபெரு மாள்தான்
பொன்ன ணஞ்சவனார் [14]புகழணஞ் சவனார்
[15]போரில் பெரிய வணஞ்சவ ராசன்
பூவதில் வண்டு துடர்ந்தது போலே
பொன்னணஞ்ச பெருமாள் சின்ன ணஞ்சியை
கோயிலுங் கொட்டார வாசலு மிட்டு
குருவான நந்தி மடமுங் கடந்து
ஆவலுடன் பொன்ன ணஞ்ச பெருமாள்
அன்பாக வேசின் னணஞ்சியைக் கண்டு
[16]தாகத்துயர் காம மோகத்தி னாலே
தையலே [17]யேகாதே நில்லுநில் லென்றார்.

ஒப்பினை –ஒப்பனை. **குழை** –குண்டலம். **அல்லும் பகலும்** –இரவும் பகலும். **ஆசாரவார்த்தை** –உபசார வார்த்தை. **பிரமன்** –நான்முகன்,படைப்புக்கடவுள். **பூவதில் வண்டு துடர்ந்தது போலே** –பூவை நாடி வண்டு செல்வதுபோல். **கொட்டார வாசல்** –அரண்மனை வாசல். **மோகம்** –ஆசை. **யேகாதே** –போகாதே.

பா.வே. 1. வடிவன் 2. கொண்டு 5. வடிவையும் இல்லை 6. குழலது கண்டு 7. கண்டதுமில்லை 8. வாய்வெருவினார் 10. படைத்தான் 11. முகமுஞ் சின்னணஞ்சிகண்டு 12. கொண்டு 13. தீரன் முத்தணஞ்சவரும் 14. பேரார் 15. பேரால் 16. தாக மோகத்தீயினாலே 17. போகாரே.

க.சொ. 3. குழிரும் 4. பெருமாமும் 9. தாராழமாகிய.

Ci<u>nn</u>anañca<u>n</u> admires the beauty of Ci<u>nn</u>anañci

Dazed was he with longing for her
Civa<u>n</u>anañca perumāl dazed thus
With his bow inclined towards oneside,
Did see the washerwoman and admire her,
Not only admiring but also longing with lust feverish,
The king exalted did feel,
That there was none on earth,
Like her in word gait and shape
Thus did he think of the *Vannātti*[1]
The warrior **Civa<u>n</u>anañcaperumāl**
Seeing the adornment of **Ci<u>nn</u>anañci**
Her earnings and other ornaments in gold,
And looking at her body beautiful as well
He desired her in his mind
"With shapely breasts and a face so fine
None can be seen like her in this land
Never can I find another like her for me,
Will she but stay with me day and night
And speak to me words nice and dear
Won't she come to me this **Ci<u>nn</u>anañci**".
Thus did he rave and also remark,
"Oh! Is it an ivory of fate,
That this damsel of great good looks,
Was born in a community lowly?
How did she cause **Piraman**[2]
To fix her in a birth such
In the washing community?
Thus reflecting did the king **Civa<u>n</u>anañcaperumāl**
Long for the smiling damsel sweet
The king of valour and fame,
Who did distinguished himself in war"
Civa<u>n</u>anañcā<u>n</u> such,

Like a beetle seeding a flower honied,
Followed **Cinnanañci** but constantly in her path,
Passing the temple and the palace gates as well
And beyond the *Nantimaṭam*[3] too?
Then did he beckon **Cinnanañci** lovingly,
And with lustful desire unquenchable,
Asked her to stop
"Oh! Damsel do not go stop and tarry" said he.

1. *Vannatti* - Washer woman
2. **Piramaṉ** - God of Creation in Hinduism
3. **Nantimatam** - The name of a monastery or mutt

(சின்னஞ்சி திரும்பிப் பார்த்தல்)

விருத்தம்

79. நில்லென்று சொன்ன வார்த்தை [1]நேரிழை செவியில் கேட்டு
மெல்லவே திரும்பிப் பார்த்து விழியினா லருவி சாட
தொல்லையோ [2]வழியில் கண்ட[3]தொடுகுறி தடையின் கூறோ
[4]அல்லவோ சிவனே நானொன் றறிகிலே னென்று நின்றாள்.

நேரிழை –பெண். **விழியினா லருவி சாட** –கண்ணில் நீர் வர. **தொடுகுறி** –சகுனம்.

பா.வே. 3. கொடுந்தடை அதுவின் 4. அல்லவோ சிவனே நானும் அறியவோ வந்தேனென்று

சு.சொ. 1. நேரிளை 2. வளியில்.

Cinnanañci stops and looks back

Viruttam

On hearing the word "stop" the damsel
Did look back gently and her eyes with swelling tears
"What annoyance this, is this the hurdle
Which the omens did predict on my way?

Or is it something else?
Oh! **Civan**[2], I know not"
Thus did she muse and stop.

1. **Civan** - Hindu God (God of destruction)

(சின்னணஞ்சான் சின்னணஞ்சி தருக்கம்)

80. நின்ற மடமயில் சின்னணஞ்சி [1]முகம்நோக்கி
நேரிட்டு பொன்னணஞ்ச பெருமா [2]ளேதுசொல்வார்

கெண்டைகண் [3]மடமானே உன்னை நான்தேடி
கீழத்தெரு வெல்லாஞ் சுத்திதிரிந்து வந்தேனே

வந்தேனடி பெண்ணே சின்னணஞ்சி வுன்னைத்தேடி
வாழ்மயிலே நானும் வந்த கருமத்தைக் கேளு

நில்லென்று சொல்லி நெறுத்தாதேயுங் காண்சுவாமி
நேத்து வரைக்கும் துறைதனில்[4]நான் போகவில்லை

[5]வல்லவனே பொன்னின் சிவனணஞ்ச பெருமானே
வார்த்தை சொல்லிவிட்டால் மாத்துகொடுத்து விடேனோ

மாத்துக் [6]கல்லவேடி சின்னணஞ்சி வுன்னைத்தேடி
வாழ்மயிலே நானும்வந்த கருமத்தைக் கேளு

பூத்தான மாகவே [7]நாமிருபேரு மொன்றாக
[8]பூவணை மீதி லிருந்துநலஞ் செய்யவாடி

வாடியென் றென்னை மோடிபறைந் தீரே[9]வய்யா
வையக மெய்க்கதுரை மாலணஞ்ச பெருமாள்

தேடிய பொன்னுந் திரவியமுந் தருவேனான்
தேனே மரகத வாழ்மயிலே சின்னணஞ்சி

பொன்னும் பணமும் [10]புதையலெனக் கதுவேண்டாம்
[11]பேர்சொல்லிக் கஞ்சிகுடித்துப் பொறுத்திருப் போனான்

[12]வன்மருட்டுங் கண்மருட்டின் சித்திரம் போலே
வாக்குச் சொல்லி[13]விட்டாய் போக்கிவிடாதே நீபெண்ணே

பெண்ணுக்கு பெண்ணான ராசதுரை [14]மக்களுண்டு
பொல்லாத்துவர வண்ணாத்தியை [15]நீர்தொட வேண்டாம்

கண்ணுக்கு கண்மணி யாகியசின் னணஞ்சி[16]கேள்
காமனுக்குக் கண்கண்ட விடமறி யாயோ

கண்டவர்க் [17]கேறாத வண்டத்தனஞ் செய்யவேண்டாம்
கண்டார்க்கு முந்திவிரிக்குங் [18]கசுமாலி யல்ல

[19]திண்டு முண்டான விசனத்தைநீ பறையாதே
சித்திர வார்த்தைகள் மெத்தப்படித்தவர் போலே

மெத்தப் படித்தாலுஞ் சுத்தமில்லாச் சாதிநாங்கள்
[20]வேந்தன்வெறுத்ததுண்டா லெனக்கார் துணையுண்டு

பத்தித் துடர்ந்தவர உமக்கா சாரமில்லை
பண்புட னாளைநானு மன்புடன் [21]வாரேனென்றாள்.

கெண்டைகண் –கெண்டைமீன் போன்ற கண்ணை உடைய சின்னணஞ்சி. **சுத்தி** –சுற்றி என்பதின் பேச்சு வழக்கு. **கருமம்** –காரியம். **நெறுத்தாதே** –நிறுத்தாதே. **நேத்து** –நேற்று என்பதின் பேச்சு வழக்கு. **மாத்துக்கல்ல வேடி** –மாத்துக்கில்லையடி. **பூவணை** –பூ மெத்தை. **மோடி** –வேடிக்கை. **பறைந்தீரே** –சொன்னீரே. (மலையாளச் சொல்.) **வையகம்** –உலகம். **மெய்க்க** –மெச்ச. **திரவியம்** –பொருள். **மருட்டு** –ஏய்ப்பு, மயக்குதல். **சித்திரம்** –பேரழகு. **வண்டத்தனம்** –குறும்பு. **முந்தி விரிக்கும்** –முன்றானை விரிக்கும். **கசுமாலி** –கெட்டவள், அசுத்தமானவள். **விசனம்** –துக்கம். **பறையாதே** –சொல்லாதே. (மலையாளச் சொல்.) **மெத்த** –மிக்க. **பத்தித்துடர்ந்துவர** – பற்றித்தொடர்ந்துவர. **ஆசாரம்** –ஒழுங்கு.

பா.வே. 1. முகத்தினை 2. ஏதோ 3. கண்மடவாளே நானு 4. நானும் போகவில்லை 5. வல்லவன் பொன்னணஞ்ச பெருமாளே நானும் ஒரு 6. கல்லவடி 7. நாமளிருபேரும் 8. பூதலம் 9. ஐயா 10. போதையெனக்கது 11. ஒன்றுசொல்லி 12. ஒரு மருட்டு மருட்டின 13. வளி போகிடாதே பெண்ணே

15. நீரும் 16. கேளுசில 17. காகாத 18. கசமாரி இல்லை 19. திண்டுக்கு முண்டாண பிசாத்தி நீர் பறைந்திரே 20. வேந்தரே பொறுத்ததுண்டால் எனக்காருதுணையுண்டு 21. வாறேனென்றாளே.

ச.சொ. 14. மக்கமுண்டு.

The argument between Cinnananñcān and Cinnanañci

Looking at **Cinnanañci** the damsel graceful like a peahen,
Cinnanañcaperumāl staring in her face
Did speak to her
"Oh! deer like damsel with fish like eyes
I roamed the east street entire
In pursuit of you cirucuitously,
Thus did I arrive, do listen, Oh! Dear girl
To the purpose of my chase"
The damsel did reply,
"Oh! Lord do not stop me accosting thus,
Till yesterday I had not gone to the *turai*
If you had just sent word to me, Oh! mighty one
Won't I come and collect *māttu* at your place?
As she replied thus the king did say,
"Oh! **Cinnanañci** it is not for the *māttu*[1]
That I have stopped you,
Listen but to he reason for my being here
Come with me to adorn my flowery bed
To enable us both to unite there and rejoice"
"Oh! Sire are you kidding for fun mere
Oh! Lord of the earth"
"Gold and wealth earned by me
I shall give thee Oh! **Cinnanañci**
Honey thou art to me and an emerald peahen too"
"Not for me gold and money thine,
Treasure I don't need
Honestly earned *Kañci*[2] to drink will suffice for me"
"Skip me not with your eyes deceitful

Oh! Damsel picturesque,
Don't leave with just such words"
"Oh! Lord royal thou can have ever so many damsels
If thou so desire you need not touch,
This *Tuvaravannñtti*[3] mean and lowly"
"Oh! My **Cinnanañci** dear to me as the apple of my eye
Don't you know where **kàmaṇ** doth focus thus eyes?"
"Try not such mischief improper
Not a *kacumāli*[4] am I to mate with all I meet"
"Utter not such harsh words grievous,
As if thou art well read"
"Unclean folk we are even if well read,
If the king doth hate us who else will help?
It is not proper for you to follow me like this,
Come I shall to your place to collect clothes"
Thus said the damsel but politely.

1. *Māttu* - Clothes collected from houses for washing
2. *Kañci* - Rice gruel as lord food of the poor folk
3. *tuvaraivannātti* - Washer woman of a particular sect
4. *Kacumāli* - A woman loose morals or am impure woman

(சின்னணஞ்சவர் மாளிகைக்குத் திரும்புதல்)

விருத்தம்

81. நாளைநான் வாரே னென்று நன்னுதலாள் போன பின்பு
[1]வேளென்னு மதன வேந்தன் மெத்தவே மனது நொந்து
[2]ஆளிலு மழக னான அணஞ்சல ராசன் தானும்
வேளையி தல்ல வென்று விளங்கு[3]மா ளிகையில் வந்தார்.

நன்னுதலாள் – சின்னணஞ்சி. **வேளென்னு மதனவேந்தன்** –வேள் என்று பெயர் பெற்ற மன்மதன்.

க.சொ. 1. வேழென்னு 2. ஆழிலு 3. மாழிகையில்.

Ci<u>nn</u>anañcavar returns to the palace

After the damsel left saying,
That she would come the next day,
The **mata<u>n</u>avēnta<u>n</u>**[1] known as **vēl**[2]
Much angushed was he in his mind
Anañcavarāca<u>n</u> the handsome man
Arrived at his palace thinking,
That it was not he time opportune then

1. **Matanave<u>n</u>ta<u>n</u>**- Handsome and lustful king
2. **Vēl** - Annexalted person or a chief

(சின்னணஞ்சியை எண்ணி ஏங்குதல்)

82. [1]மாளிகைப்பூ [2]மேடையிலே மணிமாட மண்டபத்தில்
நாழிகைக்கு வந்திருந்து [3]நல்லசிவ னணஞ்சவனார்

[4]வாழிசைப்பூங் குழலியுட [5]வழமையொன்று முரையாமல்
[6]ஒன்றுமுரை யாடாமல் வுள்மனதுக் குள்ளடக்கி

அன்றுவிட்ட பெருமூச்சு [7]வலகைவிழி யெறிந்தாப்போல்
மூச்செறிந்து வாய்வெருவி மொய்குழல்[8]மே லாசையுற்று

வாச்சபுகழ் மலைமார்பன் வடிவன்சிவ னணஞ்சவனார்
காய்ச்சலுடன் [9]குளிர்பிடித்துக் கண்ணுறக்கம் வாராமல்

வாரேறும் [10]பூந்தனத்தாள் [11]மங்கையர்சின் னணஞ்சிதன்பால்
ஏரேறும் [12]மாளிகையில் யிலங்கியபூ [13]மெத்தயிலே

காரேறுங் குழல்சரிய கன்னிநலம் பாராட்டி
சீரேறுங் குழலிநம்மைச் சேராளோ சின்னணஞ்சி

சின்னணஞ்சி தன்னாலே சிநேகமதா யணஞ்சவனார்
வண்ணமுகம் [14]விழிக்காமல் மஞ்சத்தில்நீ ராடாமல்

அன்னந்[15]தண்ணீர் குடியாம லமுதேத்தங் கூடாமல்
[16]பன்னுதமிழ் கேளாமல் பாக்கிலையு மருந்தாமல்

திருந்தி மலரணையில் திருநீறும் பூசாமல்
[17]வருந்திரெம்பப் புலம்பலுற்றார் மாலணஞ்ச பெருமாளும்

புலம்புவாராந் தனித்திருந்து பொருள்பறிக்கக் கொடுத்தவர்போல்
நலம்புகழு மலைமார்பன் [18]ராசன்சிவ னணஞ்சவனார்

தலம்புகழ் [19]வொருகுடைக்குள் தரணியர சாளாமல்
[20]குலம்பகைக்க வேணுமென்றொரு கொஞ்சவண்ணான் பெண்ணாலே

பெண்ணாலே காதல்கொண்டு பேதலித்து முகம்வாடி
[21]*மண்ணாளுங் காவலவன் வடிவன்சிவ னணஞ்சவனார்*

எண்ணாத தெண்ணியெண்ணி [22]யேந்திழையா ளைத்தேடி
உண்ணாமல் தானிருந்தா ரொருபொழுது விடியுமட்டும்

விடியுமட்டுந் தானிருந்து வேந்தன்சிவ னணஞ்சவனார்
பிடிபோல் நடையுடைய பெண்மயிலைத் தேடலுற்றார்.

(சின்னணஞ்சியைத் தேடியலைதல்)

தேடரிய மலைமார்பன் சிவனணஞ்ச பெருமாளும்
கூடவொரு குடைக்காரன் கொஞ்சும்வெண்சா மரைக்காரன்

ஆகயிவர் மூபேரு மருளணைஞ்ச பெருமாளும்
தென்காசி யூருமிட்டு சின்னணஞ்சி தனைத்தேடி

காவுமரச் சோலைவிட்டு கரிமுகனார் கோவில்விட்டு
[23]சேவுமரக் காயர்வைத்த சிறந்தபள்ளி வாசல்விட்டு

வீதிநெடுந் தெருவுமிட்டு வெள்ளியணை யுங்கடந்து
[24]செய்திசொல்லத் தோழன்மாருஞ் சிவனணஞ்ச பெருமாளும்

(சின்னணஞ்சவர் பேராழிக்குளக்கரைக்கு வருதல்)

மாதுநல்லாள் சின்னணஞ்சி வாரபெரு [25]வழிதனிலே

பெருவழிக்கு நேர்வடக்கே பேராழிக் [26]குளக்கரையில்
[27]குருவின்மொழி மறவாத கோமான்சின் னணஞ்சவனார்

திருவிளமே செயலெனவே சின்னணஞ்சி தனைத்தேடி
இருவிழியால் தேடுவாரா மெங்கேவரு வாளெனவே

[28]இங்கேவரு வாளெனவே யிலங்குசிவ னணஞ்சவனார்
மங்கையர் சின்னணஞ்சி வரும்வாய்த்த பேராழிக்குளக்கரையில் வந்தாரே.

நாழிகை –இருபத்து நாலு நிமிடம். **வாழிசைப் பூங்குழலி** –வண்டுகள் இசைபாடுசின்ற பூக் களை அணிந்த கூந்தலை உடையவள். **வழமை** –வழக்கம். **அலகை** –பிசாசம், பேய். **வாய்வெருவி** –வாய்குழறி. **வாச்ச** –வாய்த்த என்பதின் பேச்சு வழக்கு. **குழல்** –கூந்தல் **சிநேகம்** –நட்பு, உறவு. **மஞ்சம்** –படுக்கை. **அன்னம்** –உணவு. **பாக்கிலை** –வெற்றிலைபாக்கு. **தரணி** –பூமி. **பேதலித்து** –வேறுபட்டு. **குடைக்காரன்** –நிழலுக்காகக் குடைபிடிப்பவன். **வெண்சாமரைக்காரன்** –வெண்சாமரை வீசுபவன். **கா** – பூந்தோட்டம், சோலை. **சேவு. . . விட்டு** –சேவு மரைக்காயர் என்பவர் அமைந்த பள்ளி வாசலாக இருக்கலாம் . வேறொரு சுவடியில் **பள்ளி வயல்** என்றுள்ளது. இது பொருத்தமாகத் தோன்றவில்லை. **கோமான்** –அரசன். **திருவினம்** –மனதில் நினைத்த எண்ணம்.

பா.வே. 2. பூமண்டபத்தில் 3. நதுலன் 4. வரிசை 5. வழமையொன்று சொல்லாமல் 6. ஒன்று உரையாமல் 7. அனலை வீசெறிந்தாப்போல் 8. ஆசை வைத்து 10. தனத்தாளாம் மங்கை சின்னணஞ்சி தன்னை 13. மெத்தையின் மேல் 14. இளகாமல் மஞ்சணநீர் 15. தண்ணி 17. வருந்திமெத்த 18. நகுலணஞ்ச பெருமாளும் 19. ஒருகுடைக்கீழ் தனியான ஆசனமாய் 20. குலம் வசிக்க வேணுமென்றோ 22. ஏந்திழையாள் தனைத்தேடி 23. சேவுமரகாய்வைபிட்ட சிறந்த பள்ளி வயலும் விட்டு 24. செய்தியுள்ள 26. குளக்கரையும் 27. குருமொழிகள் தவறாத கோமன் 28. எங்குவரு வாளெனவே இலங்குஞ்.

க.சொ. 1,12. மாளிகை 9. கழிர்பிடித்து 11. மங்கயர் 16. பன்னுதமிள் 21. மண்ணாமு 25. வளிதனிலே

He pines for Ci̲n̲n̲anañci

In the hall of the upper storey flowers decked
Arriving there in his palace in time proper,
Civa̲n̲anañcā̲n̲ not as usual speaking to the damsel,
Locks adorned with flowers,
Not speaking out and keeping everything to himself,
With pant up feelings and sighing like a ghost,
Its eyes ablaze,
Gasping and faltering with desire for the damsel,
The shapely **Civa̲n̲anañcā̲n̲** of chest mountainous,
Sleepless with fever and shivering cold,
Thinking of **Ci̲n̲n̲anañci** of tender breasts brassiered,
And lying in his flowery bed fine in his palace
He did muse,
"Won't the damsel **Ci̲n̲n̲anañci** be good enough
To extend her favours and mingle with me?"
Keen thus to befriend **Ci̲n̲n̲anañci,**
The king **Anañcava̲n̲** not looking at anyone,
And at the *mañcam*[1] not bathing,
Not eating food any nor drinking water,
Not listening to Tamil chaste,
And not chewing betel leaves and nuts
Not smeraing his forehead with *tirunīṟu*[2]
As was his wont,
Thus did grieve **Civa̲n̲anañcaperumāl** and lament much
Alone did he lament like one who had his belongings lost
Civa̲n̲anañcava̲n̲ār the famed king broad chested
Instead of ruling over his kingdom on earth
Under the aegis of his parasol royal
Did antoagonise his community dynastic
For the sake of a damsel among washing folk,
Infatuated with her and deranged in mind
His face did become pale

The ruler of the earth the shapely **Civananañcan**
His mind wandering with thoughts incoherent
And longing for the damsel
He did fast till it dawned
And then the king did commence
His pursuit of the damsel peahen like
Who walked like a *piti*[3]

Searching for Cinnanañci

Thus did **Civananañcaperumāl** of chest mountainous,
Along with an attendant holding the parasol royal
And another with the *Vencāmaram*
The king and the attendants both
This trio did leave **Tenkāci**
In pursuit of **Cinnanañci**
Leaving the grove dense with trees and the temple of **Karimukan**[4]
And leaving the mosque where **Cēvumaraikkar** lay buried
Leaving the road long and passing *velliyanai*
With his aides to inform and guide

Cinnanañcavar arrives at the bank of Pērālikkulam

On the highway where **Cinnanañci** would arrive
North of that highway on the banks of the tank
Known as **Pērālikkulam**
King **Cinnanañcan** who doth normally abide by his *kuru's*[5] advice
Did act now as his free will dictated,
Searching with his eyes both for **Cinnanañci**
Trying to find out where she would come,
Pitched upon the banks of **Pērālikkulam**
Where she was expected to arrive

1. *Mañcam* - Royal bed or soft mattress
2. *Tiruniru* - Sacred ash smeared on the forehead

3. *Piti* - A female elephant
4. *Karimukan̲* - Another name of the elephant faced God vinayaka
5. *Kuru* - Teacher

(சின்னணஞ்சி துணிவெளுக்கப் பேராழிக் குளக்கரைக்கு வருதல்)

83. இப்படி [1]வழிதனிலே யெங்கே[2]வரு வாளெனவே
யென்றணஞ்ச வனிருக்கும் நேரம்
ஒப்புடைய [3]மாதுமின்னாள் கற்புடைய சின்னணஞ்சி
ஊழிவிதி வார தறியாமல்

[4]மெய்ப்புடன் புடவையது துப்பட்டி வேட்டியுருமால்
[5]மேன்மை பெறவே வெளுத்துக் கெட்டி
[6]கெட்டிப் பருவட்டமொடு கட்டித்தலை மேலெடுத்து
கெம்பீரமாய்ச் சின்னணஞ்சி தானும்

[7]சிட்டி முறிச்சிக்கட்டி வீரவர்ண பட்டுடனே
சேலையு முடிந்து [8]தோளில் போட்டாள்
மட்டிருக்கும் வேல்விழியாள் [9]மங்கைநல்லாள் பெண்கொடியாள்
வாடை யுடைய நடையு மாக

நடையுந் துடியிடையும் நாணயக்கை வீச்சழகும்
நன்னுதலாள் தெய்வரம்பை [10]போலவே
[11]குடைபோல மலையெடுத்த கோபாலர் குண்டோதரனைக்
கொல்லவந்த கோலமது [12]போலவே

[13]கோலநெடு மால்துயிலு மாலமரச் சோலைவிட்டு
கொம்பனையாள சின்னணஞ்சி [14]தானுமே
ஏலநெடும் பூங்குழலாள் [15]சாலைவழி யுங்கடந்து
[16]யெல்ல வாரத்துக் கடையு மிட்டாள்

[17]ஒப்புடனே மாதர்சுனை யாடுங்சுரை யுங்கடந்து
ஓசைமணி [18]நாயன் கோவில் விட்டார்
[19]மாலைவட மார்பசைய மங்கையிளம் பெண்கொடியாள்
[20]வழிநடந்து [21]வாய்த்தபேராழிக் குளங்கரையில் வந்தாள்.

ஊழி விதி –ஊழ் விதி, பிராரத்துவ விதி. **கெட்டி** –கட்டி என்பதின் தென்மாவட்டவழக்கு **கெம்பீரம்** –மேன்மை, வீரம். **சிட்டி** –ஒழுங்கு. **முறிச்சிக்கட்டி** –முடித்துக்கட்டி. **வாடையுடை** – குளிர்ந்த உடை, நனைந்த உடை. **தெய்வரம்பை** –அரம்பை, இந்திரன் சபையில் ஆடும் அரம்பையைப்போல சின்னணஞ்சி. **குண்டோதரன்** –கண்ணனால் கொல்லப்பட்ட அசுரன்.

பா.வே. 3. மாது நல்ல 4. மெய்ப்புடனே பிடவ துகில் 5. வெண்மையுடனே வெளுத்து 6. கெட்டு பருவட்டமு மொருகுட்டித் தலைவேல் கொடுத்து 7. சிட்டுகளும் முறிச்சி கட்டுகிற வாளிபட்டு 9. மங்சையிளம் 10. சூபாலே 11. குடையாய் மலையெடுத்த கோபால சுண்டோதரன் 12. போலே 13. குல்லநெடு மாலை துகில் 14. தானும் 15. விழியாய் குடந்து 16. எண்பதித்துக் கடயம் விட்டாள் 17. ஒப்பமுடன் 18. நாயகன் கோவில் விட்டாள் 19. மாதுவட 21. பேராளி வாய்த்த.

க.சொ. 1. வளிதனிலே 2. வருவாழெனவே 8. தோழில் 15. வளியுங் 20. வளிநடந்து.

Ciṉṉanañci arrives at the bank of Pērāḻikkulam

As thus **Aṇañcavaṉ** waited for the damsel to arrive
The damsel luminous the chaste **Ciṉṉaṇañci**
Quite unaware of what fate had in store for her
Did tie sarees, blankets, dhoties and *Urumāl*
After washing them quite clean,
Tied them in a *parivattam*[1] as a head load
Knotting the bundle but properly
She placed on her shoulders
The sarees and silks of bright hue
Thus did the good damsel of spear like eyes
Walk majestically with wet clothes on,
In her gait graceful and waist slim,
That damsel forehead fine **Ciṉṉaṇañci**
Resembling **Rampai**[2] divine
And like **kōpālar**[3] who did lift a mountain like an umbrella

Like that god in carnal shape who came
To kill **Kuntōṭaraṉ** a demon vicious,
Leaving the grove of banyan trees where **Tirumāl**[5] did thus slumber,
And leaving **kaṭayam**[5] as well,
The damsel passed the *cālai*[6] there
And the *tuṟai* where women bathed
She did also leave **Nāyāṉkōvil**[7] of chiming bells
The creeper like damsel young walked on
And arrived at the banks of **Pērāḻikkuḷam**

1. *Parivattam* - Holy head band
2. **Rampai** - A divine damsel of great beauty
3. **Kōpālar** - Lord Krishṇa (The reference here is to a miracle performed by that god)
4. **Tirumāl** - Vishnu the Hindu god of protection
5. **Katayam** - The name of a place
6. *Cālai* - Road
7. **Nayāṉkōvil** - The name of a temple

விருத்தம்

84. வந்தாள் [1]குளத்தங் கரைதனிலே வானில் கதிரோ [2]னுதித்தாப்போல்
[3]செந்தா மரைபோல் சிறந்திலங்குங் தேனார் மொழியாள் சின்னணஞ்சி
கொந்தார் [4]குழல்சே ராசகுலங் கோமா னணஞ்ச பெருமாளும்
[5]இந்தா வந்தாள் நானினைத்த [6]யிளமா மயிலென் றேயெதிர்த்தார்.

கதிரோன் –சூரியன். **தேனார் மொழியாள்** –தேன் போன்று இனிமையாகப் பேசுகின்ற சின்னணஞ்சி. **கோமான்** –அரசன்.

பா.வே. 2. உதித்ததுபோல் 3. செந்தாமரையாள் 4. குழலார் 5. இன்னா.

க.சொ. 1. குழத்தங்கரை 6. யிழமாமயில்.

Viruttam

Arrived she at the tank bund,
Luminous like the rising sun,
Cinnanañci such like red lotus in fine bloom,
And honey sweet in words hers,
As she did arrive thus,
Anañcaperumāl the *Kōmān*[1] royal of locks dense
Did confront her saying
"The peahen of my thoughts constant,
She has arrived here and now"

1. *Kōmān* - A person of noble birth and exalted status

(குளக்கரையில் இருவரும் மீண்டும் தருக்கித்தல்)

85. எதிர்த்துநின்று வழிமறித்து [1]யிலங்குசிவ னணஞ்சவனார்
மதித்துவந்த யானைகள்போல் [2]வழிசெறுத்தங் கேதுசொல்வார்

நில்லுநில்லு போகாதே [3]நேரிழையே சின்னணஞ்சி
சொல்லவொரு வார்த்தையுண்டு துவரவண்ணான் பெண்கொடியே

போகாதே யென்றுசொல்லிப் [4]பெருவழிநீர் செறுப்பதெல்லாம்
ஆகாது காணுமக்கு யழிவுவருங் கண்டீரே

அழிவுவரு மென்றுரைத்த வாரணங்கே [5]சொல்லவுங்கேள்
[6]மொழிவதொன்று நீகேளு மோசம்வந்தாலும் விடுவதில்லை

விடுவதில்லை யென்றுசொல்லி வீணிலென்மே லாசைகொண்டால்
படுவதுதா னிச்செயமே [7]பாரளந்தோன் தன்னாணை

உன்னாலே படுவறது ஊழிவிதி யுண்டானால்
என்னாலே யாவதென்ன [8]யேந்திழையே சின்னணஞ்சி

சின்னமதி நுதலழகா சிவனணஞ்ச பெருமாளே
என்னமொழி சொன்னீர்கா ணிலத்திலுள்ளோர் [9]நகையாரோ
[10]புனத்திலிளங் கிளியாளே பொன்னணஞ்சி உன்னைவிடேன்

[11]கிளிபோல் மொழியாளே கிஞ்சுகவர் அஞ்சுகமே
வழிமேலே வுனைத்தேடி வாடியிருந் தன்மானே

மானே மரகதமே வஞ்சியற்கெல் லாமரசே
தேனே பசுங்கிளியே திகட்டாத தெள்ளமுதே

[12]அமுர்த குணத்தாளே வாசாரச்சொல்லாளே
[13]குமிர்த மொழியாளே கூவுங் குயிலாளே
துயிலோ வருகுதில்லை துயரொருநாள் மாறுதில்லை

மாறாத [14]காதலெந்தன் மனதைவிட்டுச் சின்னணஞ்சி
[15]ஆறாத படியதனால் ஆரணங்கே தேடிவந்தேன்

தேடிவந்தேன் புதைத்துவைத்த திரவியத்தை யெடுப்பவர்போல்
[16]கோடிமுகம் வாடாமல் கொலுவிருக்க வாடிபெண்ணே

கொலுவிருப்பு முங்களுக்கு [17]கோவில்தானு முங்களுக்கு
வலுவிருப்பு [18]மெங்களுட வண்ணார்க்குச் செல்லாது

செல்லாத யிடந்தனிலே சென்றதுண்டால் மோசம்வரும்
நில்லாத [19]காரணத்தை நிறுத்திவைத்தால் பிழைவரும்

[20]பிழைவருங்கா ணென்றுரைத்த பெண்ணரசி நீகேளு
வினைவதொன்று நீகேளு விதியைவெல்ல [21]வல்லவரார்

வல்லாண்மை [22]செலுத்திகிறாய் வடிவன்சிவ னணஞ்சவரே
உகமுடிய வேணுமென்றோ வூரிலமுக் கெடுக்கவந்தேன்

[23]அமுக்கெடுத்துவெளுப்பதுதா னயனெமுத்துக் கல்பனையே
[24]இமுக்கிலைகா ணெங்களுக்கு யெவ்வூரு மறியாரோ

ஊருசுத்தி [25]மாத்தெடுத்து வீடுகள்தோறுந் திரிந்து
ஆருமத்தார் போல்திரிந்து [26]யலைவதுவுமென் விதிதானோ

அலையாமல் கொலுவதிலே [27]யரசமன்னா நீரிருப்பீர்
துலையாத கல்போட்டுத் துகிலடிக்கும் சாதியல்லோ

கல்லதிலே மல்பொரவுங் [28]காரணமென் சின்னணஞ்சி
[29]அல்லனைய குழலாளே ஆடரங்கில் வாடிபெண்ணே

ஆடரங்கில் வாரதுக்கு [30]யம்மான்மார் மக்களுண்டு
[31]ஓகெடியம் பறையாம லூரகத்தே போங்களென்றார்.

இலங்கு –ஒளிரும். **மோசம்** –வஞ்சனை, தவறு. **நிச்செயம்** –உறுதி, மெய். **பாரளந்தோன்** –உலகத்தை அளந்தவன், திருமால். **ஊழிவிதி** –ஊழ்வினை. **நுதல்** –நெற்றி. **நகை** –இகழ்ச்சி. **புனம்** –வயல், கொல்லை. **அஞ்சுகம்** –கிளி. **மரகதம்** –நவமணியுளொன்றான பச்சையிரத்தினம். **அமுர்தம்** –அமிர்தம், அமிழ்தம். **குமுர்த மொழியாள்** –சின்னணஞ்சி. **துயில்** –உறக்கம். **துயர்** –துன்பம். **திரவியம்** –மொருள். **கொலு** –உல்லாச வீற்றிருப்பு. **பெண்ணரசி** –சின்னணஞ்சி. **வல்லாண்மை** –திறமை. **உகம்** –யுகம். **அயனெழுத்து** –பிரமன் எழுத்து. **கல்பனை** –கற்பனை. **சுத்தி** –சுற்றி என்பதின் பேச்சு வழக்கு. **ஆருமத்தார்** –அநாதை. **துகில்** –ஆடை. **மல்பொரவும்** –மற்போர் செய்வதைப் போல் துணிவெளுத்துத் துயருறுதலைக் கூறுகிறது. **ஆடரங்கு** – நடனம் ஆடுகின்று இடம். **அம்மான்மார்** –தாயுடன் பிறந்தவர்கள்.

பா.வே. 1. ஏங்குஞ் 2. வழிநடந்து 5. கேளு 6. முழுவதுந்தான் 9. பகையாரோ 12. அமிர்த 13. குமிர்த 14. குணத்தாளே 15. அடுத்தபடி அதனாலே 16. கோடிமுகம் மாறாமல் 17. கோயிமையும் உங்களுக்கு 18. பகைவருமே 19. காரியத்தை நிறுத்தி வைத்தால் வினைவருமே 20. வினைவருங்காண் என்றுரைத்த பொன்னனஞ்சி 21. வெல்லலாமோ 22. செலுத்துகிறீர் வேந்தன் 23. அரனெபத்துக் கற்பனையோ 25. அமுக்கெடுத்து ஊருகள் தோறும் அலைந்து 26. அலையவுந்தான் விதிவசமோ 27. அரசவரே 28. காரணமோ 29. அல்லரிய 30 உங்கள் அம்மான்மார் 31. ஓடியங்கே பறையாமல் உங்கள் ஊரிடத்தே.

சு.சொ. 2. வளி 3. நேரிளையே 4. பெருவளி 7. பாரழந்தோன் தன்னாலே 8. யெந்திளையே 10.புனத்தினிலும் கிழியாளே 11. கிழி போல் மொழி 24. இளுக்கிலை.

They both argue again

Blocking her way and confronting her,
Civananañcān like elephants in musth
Did tell her,

"Stop, leave not stop Oh! damsel **Ciṉṉaṇañci**
Just a word with you I shall have
Oh! Creepers like damsel of *Tuvaraivāṉṉāṉ* community"
She did counter,
"Stop me not like this standing in my way
It does not behove thee
Thou shall come to grief for sure"
He did reply,
"Oh! Damsel who doth predict disaster to me ,
Listen to what I speak and assert,
Even if mishap any doth occur,
I won't leave thee"
She did protest then,
"If you thus cling to me in desire vain,
Thou art sure to suffer, I swear by that God,
Who did measure the world with his feet"
He did argue,
"If I am destined to suffer on thy account,
I cannot help it, Oh! Damsel bejewelled,
"Oh! **Civaṉaṇañcaperumāḷ** of forehead crescent like,
What words did thou utter?
Won't people of this earth laugh in ridicule?"
(He did however persist and said)
"Oh! **Poṉṉaṇañci** parrot like damsel,
Pining for you have I waited in thy path
Oh! Deer like damsel Oh! Emerald queen of damsels all,
Oh! honey parrot green nectar not satiable,
Oh! damsel of disposition nectarine,
And of words proper and polite,
On! Cuckoo melodious of words soft spoken,
I don't get any sleep,
Nor doth my melancholy decrease,
My love for thee will never change or leave,
Hence Oh! damsel dainty, have I come in pursuit of thee,

As one in search of a treasure buried,
Have I come,
Oh! Dear girl, do come with me
Frown not come to be in *kolu*[1] exalted"
She did reply,
"To be in *Kolu* in company high,
Or to have temple honours and make *tāṉam*[2]
Are all for people like you,
Not for us *vannār*[3] lowly such honours great
If I stray from path mine and walk amiss
We will come t o grief it is wrong to stop me"
Oh! damsel fearing mishap grievous,
Do listen to me, and answer,
Who can conquer fate inevitable?"
She did protest still,
Thou art bullying the with strength thine,
Oh! **Civaṉanañcaperumāl** shapely,
Have I come to his place to collect clothes,
Only to meet this deluge like disaster?
Destined are we by *Āyaṉ* only to wash clothes dirty,
Not for us any disgrace thereby,
As the folk of all places are aware
Is it destiny mine to roam the town all over,
Go from house to house and collect clothes,
And thus like an orphan wander?
Thou art the king in a *kolu* to be seated,
But I do belong to the caste of folk,
Who beat sarees on stones and wash?"
He replied,
"Why should you strain and struggle with stones?
Oh! Damsel of locks elegant,
Do come to the dance hall with me"
She counter,
"To go to your dance hall,

Are there the children of your uncles
Go to thy place without teasing me"

1. *Kolu* - Royal court
2. *Tā<u>n</u>am* - Gift or largesse
3. *Vannār* - The community of washermen

(பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் ஒட்டுமோ எனல்)

86. ஊரிடத்தில் சென்று ஆரிடத்தி லிருந்தாலும்
உன்னுடைய [1]ஆசையொரு நாள்மறக் கொட்டுதில்லை
ஆசையுடனே [2]யடியாளைவைத் தாதரித்தால்
[3]அப்பிலே தப்பியடித்துப் புடவை தருவேன்
[4]தப்பிபுடவை சலுவை செய்து தரவேண்டாம்
தையலே யென்னுட மையலைத்தீர் சின்னணஞ்சி
[5]மையுமிருளு மழைக்கா லென்றுறக் கேட்டிருப்போம்
மத்தொன்றுமக்கும் [6]நானுத்திரஞ் சொல்லவு மாட்டேன்
உத்திரவார்த்தை யொருக்காலே [7]பேசுறாய் பெண்ணே
சுடம் ஒன்று[8]போடச் சுத்திரண்டு போட்டாப்போல்
சுத்திசுழத்திக ளேத்திகள் வேறுண்டும் போம்போம்
சுட்டமண்ணும் பச்சைமண்ணுங் [9]துணையி தாமோ
மண்ணைப் பிடித்தொரு பெண்ணுரு [10]வாக்குவர் முன்னே
வம்புக்கோ [11]துன்பம் வருத்தபிரமன் படைத்தார்
என்னைப் படைத்தவ [12]ருன்னையும் பெண்ணையுங்கண்டு
எட்டாப் பழத்துக்குக் [13]கொட்டாவியிடச் சொல்லவில்லை
இல்லை யென்றாலிந்த தொல்லை [14]கணக்கு வருமா
[15]ஏழைமதி பறையாதே [16]யேந்திழையே போடியென்றார்.

மறக்கொட்டுதில்லை –மறக்க முடியவில்லை. **அப்பு** –தண்ணீர். **தப்பியடித்து** –சீலையைத் தண்ணீரில் தப்பியடித்து. **சலுவை** –துணியைச் சலவை செய்தல். **தையல்** –பெண். **மத்தொன்று** –மற்றொன்று. **உத்திரம்** –உத்தரம், மறுமொழி. **சுட்டமண்ணும் பச்சை**

மண்ணும் –சுட்டமண்ணும் பச்சை மண்ணும் ஒன்றாகாது போல நாம் இருவரும் ஒன்றாக முடியாது என்று பொருள். **வம்பு** –சண்டை. **ஏழைமதி** –எழையறிவு. **பறையாதே** –சொல்லாதே (மலையாளச் சொல்)

பா.வே. 1. ஒரு நாளும் மறக்குதில்லை. 2. வைத்துத்திரிந்தால் 3. ஆத்திலே 4. தப்பிப் பிடவை சலுவையது தர மையல் உமக்குமே அதிகமாய் இருப்பின் 6. உத்தரஞ் சொல்லவும் 7. பேசினாய் 8. போட்டார் சித்திரம் 9. துணையீரம் போமோ 10. வாக்குவார் முன்னை 11. வழத்தார் பிரமன் படைத்து. 12. உம்மையும் என்னையுங் கண்டு 13. தொட்டைவிட 14. வழக்கு வருமோ 15. இளமதி.

சு.சொ. 16. யேந்திளையே போடியென்றாரே.

"Will raw soil blend with burnt earth?"

"Even if I go to my place and mingle with anyone
My desire for you can't be forgotten
Even for a day"said he
"If you but patronize me (as a washer woman)
Beat I shall the sarees in water to wash,
And bring them to your place" she replied
"Sarees you need not wash,
Appaese my desire for you, **Cinnanañci**"
"If you speak thus I won't reply,
To any statement of yours further"
"You retort Oh! young woman,
In double quick time,
If I lay a hall you lay two corridors around".
She did reply
"Many other women are there for you,
Go, go away,
Can raw soil keep company with burnt earth?
Did **Piraman**[1] create me as a woman,
With a handful of earth,
Only to suffer like this?
He did not create me and you,
For this encounter where,
You solicit a forbidden fruit unattainable"

He said then,
"If my desire for you is not destined,
Will such plight occur to me?
Thou art a poor woman
Persume not to advise me Oh damsel"

1. **Piraman** - God of creation in hinduism

(சின்னணஞ்சவர் வஞ்சினங் கூறுதல்)

87. உரைத்தா ளொருமொழி சிரித்தவர் [1]மகிழ்ந்து
உறுதியுடன் சிவனணஞ்ச பெருமாளும்
[2]தர்க்கிச்சி வார்த்தை பறைந்தாய்நீ யென்னோடே
தார்குழ லாளே [3]சின்னணஞ்சி யேநீ

[4]உக்கிர மான செய்தியும் வார்த்தையும்
[5]உன்னுடைய துடிதுடிப் பானதவும்
சக்கரம் விட்டு நால்பேருங் காணவே
சந்தியி லிட்ட[6]பம்பரம்போ லாக்காட்டால்

ஆட்டங் [7]கண்டுந்தன் மெட்டித் தனத்தைநான்
அட்டி சொன்னதுக் காகவே [8]நானுன்னை

[9]கோட்டி செய்துந்தன் பொட்டுக் குரைத்துநான்
கூத்துப் பார்த்துக் குரங்காட்டங் கொள்ளாட்டால்

வாழுங் [10]காஞ்சிபுரம் நகராள் கின்ற
[11]மண்டலத்துத் துரைமகன் நானல்ல
கோழிக் குஞ்சியை வாழ்கெருடன் [12]சென்று
கொண்டு போனதுபோல் கொண்டு போகாட்டால்
[13]பூமி சூழுலக மேழும் பொய்க்கவே
பொன்னுஞ் சிவனணங்ச பெருமாள்நா னல்லவென்றார்.

தக்கிச்சி –தர்க்கித்து –விவாதம் செய்து. **உக்கிரம்** –கடுமை கோபம். **சந்தி** –பலவழி கூடுமிடம். **மெட்டித்தனம்** –அகந்தைக் குணம். **அட்டி** –தடை. **கோட்டி** –கூட்டம். **காஞ்சிபுரம் நகர்** –திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஊர். **கெருடன்** –கருடன். **பூமிசூழுலக மேழும்** –பூலோகம், புவர்லோகம், சவர்லோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்திலோகம் என்பன.

பா.வே. 1. கேட்டு 2. தெக்கச்ச வார்த்தை பறையாதே என்று 3. பேசினதாலே 4. உக்கிர பார்த்தையும் செய்தியும் கேட்டு 6. பந்து 7. கொண்டுந்தள் மேட்டுத்தளத்தினால் 8. உன்னை. 9. தொட்டி செய்துதான் பொட்டு குலைந்து 10. கஞ்சிபுரரசாள்கின்ற 11. மண்டரிகள் 12. வந்து 13. புவியில்.

சு.சொ. 5. உன்னுடைய.

Cinnanañcān swears in anger

Laughing then did **Cinnanañacaperumāl**
Utter firmly to her,
"Oh! Damsel with locks elegant,
Thou hast argued with me word for word,
Thy message stern and words harsh,
And your dynamism to boot,
If I do not desrail them all
And make you spin like a top for all to see
For arrogance thine, in exchange of words with me
If I do not harass thee and disrupt
Your marital *Pottu* and like a monkey frenzied,
Gloat over that spectacle,
I am not the son of the lord royal
Who doth rule over **Kāñcipuram**[1]
If I do not pitch on you,
Like a **Kerutān**[2] swooping on a chick young,
I am not **Cinnanañcan** veritable,
This I do swear,
By all the sevenworlds that surround the earth"

1. **Kāñcipuram** - A town near Tirunelveli.
2. **Kerutā<u>n</u>** - A kite or bird known as the mount of **Tirumāl**. the Hindu god

(சின்னணைஞ்சியை விட்டு நாடு திரும்புதல்)

விருத்தம்

88. [1]என்றவர் வாது கூறி யேந்திழை [2]யாளை விட்டு
சென்றவர் தோழ ரோடே சீக்கிரம் [3]காஞ்சி நாட்டில்
[4]மண்டபந் தனிலே சென்று [5]மாளிகை புகுந்த போது
கண்டுபற் றுள்ளோ ரெல்லாங் கருத்துடன்போற்றி [6]நின்றார்.

வாதுகூறி –சபதஞ்செய்து. **ஏந்திழையாள்** –சின்னணைஞ்சி. **சீக்கிரம்** –விரைவு.

பா.வே. 1. என்றந்த வர்த்தை 3. தென்காசி 4. மண்டலம் 6. செய்தாரே.

ச.சொ. 2. யாழைவிட்டு 5. மாழிகை.

He returns to his country leaving Ci<u>nn</u>anañci

Viruttam

Thus did he swear and leaving the damsel dainty,
Did hurry to **Kāñci** along with his friends,
And entered the palace and arrived at the hall there,
When his wellwishers all did line up
Hailing him in attention earnest

(சின்னணஞ்சான் கொலுவிருக்கும் திருக்காட்சி)

89. [1]போற்றிவாழ்த்திக் கைதொழுதார் பொன்னணஞ்ச பெருமாளை
[2]போகப்பல வாத்தியங்கள் மேளங்கள் முழங்கிடுவார்
எதிர்த்துநின்று மந்திரிமார் [3]எண்டிக்கும் சேவிக்கவே
[4]இங்கிதத் தமிழ்ப்புலவர் சங்கீதங்கள் பாடிடவே
படிப்பாராம் ராமர்கவி [5]பைந்தமிழ்க் கவிவாணர்கள்
பக்கத்திலே வெஞ்சாமரைக் [6]காரரொரு தொகுதி

பக்கத்திலே வெஞ்சாமரைக் [6]காரரொரு தொகுதி
அடிப்பார் வாதுகார ரங்குமிங்கு நின்றுகொண்டு
[7]அய்யா பராக்கென்று மெய்யாய்க் கட்டியங் கூறிடுவார்
கட்டியங்கள் கூறிடுவார் கைவிளக்கு தானெடுப்பார்
கன்னியர்க ளாலத்திக ளேந்தியே வலம்வருவார்
[8]தட்டுமத் தாளத் தொனிகள் தட்டுவர் வட்டமிடுவார்
தத்திதத்தி யென்று சில தாசிப்பெண்க ளாடியே
ஆடுவாராம் பொன்னணஞ்ச பெருமாள் திருமுன்பிலே
[9]அரிசிப்பட்டிச் சனங்க ளங்கங்கே சேர்ந்துநிற்க
கூடுவாராம் பொற்பணியும் [10]செவ்வலரி மாலைகளும்
சித்திரச் சிவனணஞ்ச பெருமாள் திருமுன்பிலே
மேனிக்காத்துப் பக்கத்திலே வெஞ்சாமரை வீசிவர
வெட்டு முடைவாள் பரிசைக்கார [11]ரொருபத்தி
கானில் வடுகர் தொட்டியர் கர்நடர் தெலுங்கர்களும்
கட்டுடனே வெட்டும் பரிராவுத்தன் மாருஞ்சேர
சேரும் பரிசைக்காரர் தெக்கித்துப் பணிக்கன்மாரும்
சிங்களர் வங்களர் சிலசேவுகரும் சூழ்ந்துவர
பெருமைச் சிவனணஞ்ச பெருமாள் திருமுன்பிலே
பிள்ளைபோ லேவளத்த மறத்தலைவ னருகிருக்க
மறவன் வல்லாளதேவன் மாடப்பன் தூதோடும்வீரன்
வன்னியடி மறவனோடே மறத்தலைவன் முன்னேநிற்க
இறைவ ரடிபணிய யிலங்கு மணஞ்சவனார்
இப்படிக் கொலுவதாக யிருந்தார் சிங்காசனமதில்
சிங்காசன மானதிலே சிவனணஞ்ச பெருமாளும்
சிறப்பாய்க் கொலுவதாக தெய்வேந்திரன் போல்பவுசாய்
மெய்யான தேசத்தோர் போற்றும் விமலனையும் தொழுதுகொண்டு
வீரன்சிவ னணஞ்சபெருமாள் விரசாய்க் கொலுவிருந்தார்.

இங்கிதம் –இனிமை. **ராமர் கவி** –இராமாயணம். **கவிவாணர்** –புலவர். **வெஞ்சாமரை** –வெண்ணிறமுடைய கவரிமான்மயிரால் செய்யப்பட்ட விசிறி. **கட்டியங்கூறிடுவார்** –வருகையை அறிவிப்பவர். **ஆலத்தி** –ஆரத்தி. **மத்தாளம்** –மத்தனம், ஒரு பறை. **தொனி** –ஒலி. **பரிசைக்காரர்** –கேடகம் பிடிக்குந் தொழிலாளிகளின் வமிசத்திற் பிறந்த சாதியர். **வடுகர்** –ஒரு சாதியர். **தொட்டியர்** –ஒரு சாதியர். **தெக்கித்து** –தென்பாகத்து. **பணிக்கள்** –கூத்து முதலிய பயிற்றுவோன். **சேவுகர்** –சேவகம் செய்பவர். வளத்த –வளர்த்த. **பவுசாய்** –பெருமிதமாய். **விமலன்** –குற்றமற்ற கடவுள், சிவபிரான். **விரசாய்** – சிறப்பாக.

பா.வே. 1. போற்றி போற்றி 2. போக வாச்சியங்கள் போதரவாய் முழங்கிடவே 3.இருபுறமும் சேவிக்கவே 4. இங்கே தமிழ்ப்புலவர் சங்கீதம் பாடிவர 5. பாணர் வந்து 6. வீசுவார் குஞ்சமிடுவார் 7. ஐயா அபக்கென்று 8. தட்டி தட்டி மத்தளங்கள் பொட்டி வட்டமிட 9. அரிசிபெட்டி சனங்களெல்லாம் அங்கங்கே செருமிநின்று 10 செவ்வரள் 11. பத்திநிற்க.

சு.சொ. 1. போற்றிவாள்த்தி 5.பைந்தமிள்.

The grand royal court of Ciṉṉanañcaṉ

As some hailed **Poṉṉanañcaperumāl** with their hands joined,
In worship deferent,
Some did play several musical instruments,
And rumbled on drums,
Ministers came near him to greet with reverence,
As tamil boards did recite their muse sweet,
Poets well versed in Tamil chaste rendered **Rāmāyaṇam**[2]
On one side attendants holding *cāmaram*[3]
Did stand and fan,
On the other side heralds did shout *"parāk, parāk"*
Announcing the arrival of the king,
Standing here and there at different places,
They declared *kaṭṭiyam*[4] holding lamps in hands theirs,
Damsels virgin did go round with *āratti* plates
To the accompaniment of resonant drums
They did move in circles in the royal court,
Cortecans moving in rhythmic steps,
Did dance in the presence of **Poṉṉanañcaperumāl**
As the folk of **Aricippatti**[5] did assemble there in strength,

They did adorn the shapely **Civananañcaperumāl**
With *porpani* and *cevvalari*[6] garlands
As the fanners moved close to the king,
Fanning with their *cāmarams* white,
Attendants holding swords and shields
Did form a row proper there

Vatukar[7] *Tottiyar*[8] *Kannatar*[9] *Telunkar*[10]

And **Rāvuttars**[11] dexterous with cutting swords
All of them were lined up there
Besides the southern ***Panikkars***[12]
Cinkalar[13], ***Vankālar***[14] and a few other attendants as well
As the *mārava*[15] leader who did bring up the king
Like his son was also there.
Vallālatēvan the *mārava* warrior
And **Mātappan**, the runner who carried messages,
Were there besides standing behind the *maravā* leader
As thus all of them stood in the royal presence of **Cinnanañcān**
In deference and worship at his feet,
Civananañcaperumāl was seated in court royal
On a throne quite impressive,
As majestic as **Intiran** divine
Thus did **Civananañcaperumāl** hold court
Worshipping Lord **Vimalan** hailed by saints
With gusto and vigour did he hold *Kolu*

1. **Ramayanam** - A great epic narrating the tale of Lord **Rāma**
2. *Cāmaram* - Ornamental hand ban
3. *Kattiyam* - Announcement by an attendant of the arrival of kings
4. **Aricipatti** - The name of a place
5. *Cevvalari* - A kind of red flower
6. **Vatukar** - The people of a certain caste
7. **Tottiyar** - The people of another caste
8. **Kannatar** - People who belong to **Karnātaka**
9. **Telunkar** - People who speak telugu

10. **Ravuttar** - A sect among muslims
11. *Panikkars* - Martial folk from **Kērala**
12. **Cin kalar** - Sinhalese from **Srilanka**
13. **Vaṅkālar** - Bengal people

(கொலுவில் இருக்கும் சின்னணஞ்சவரைச் சேவுகர் வணங்குதல்)

90. விரசாய்க் கொலுவி லணஞ்சவராசன் வெகுமான மாயிருக்க
மிக்கான சேவுகர் பக்கத்திலே நின்று வேந்தனைக் கைதொழுதார்
தொழுது வணங்கிப் பணிவிடை கேட்டவர் தோத்திரஞ் செய்துகொண்டு
தொழுதவீரர் துரைமக்களெல்லாந் தொழுதுகொண்டு போனார்
போனபொழுது அணஞ்சவ ராசனும் பொன்னணஞ்சி யாலே
புத்திகலங்கிக் கிலேசமுத்தே மனம்புண்ணாக வெண்ணியெண்ணி
விஸ்தாரமான மலரணை மீதில்விழியுந் துயிலாமல்
வீரன்சிவ னணஞ்சபெருமாள் விசாரமுற் றங்கிருந்தார்.

வெகுமானம் –மேன்மை. **வேந்தன்** –அரசன். **பணிவிடை** –ஏவல். **தோத்திரம்** –வந்தனம், துதி. **புத்திகலங்கி** –அறிவு மயங்கி. **கிலேசம்** –வருத்தம், கவலை. **மலரணை** –மெத்தை. **விழியுந்துயிலாமல்** –கண்ணுறக்க மில்லாமல். **விசாரம்** –கவலை.

பா.வே. 1. வீத்து கொலுவில் 2. தோராத வீரர் 3. போனபோது 4. உறங்காமல்.

சு.சொ. 2. தொளுதவீரர்.

Servants pay their obeisance to Ci<u>nn</u>anañcā<u>n</u>

As **Anañcavarāca<u>n</u>** was thus seated in court royal,
With gusto in a state exalted
Servants in large numbers stood by his side,
And did worship the king with their hands joined
Bowing and greeting him they did politely enquire
The tasks to be performed by them
Thus did the servants and nobles alike
Along with warriors pray and worship him,
As they left after greeting him thus

Anañcavarācan was quite pertubed,
With confused thoughts on **Cinnanañci**
His mind quite wounded with a sense of shame,
His eyes not closing in sleep on his flowery bed broad,
Thus remained **Civananañcarācan** quite vexed in mind.

(சின்னணஞ்சான்மனத்துயருக்கான காரணத்தை மறத்தலைவன் கேட்டல்)

91. இப்படி விசாரமுற்று யென்னசெய்வோ மென்றுசொல்லி
யென்றணஞ் சவரிருக்கும் நேரம்
சொல்படி பணிவிடைகள் செய்துகொண் டருகில்நிற்கும்
தூதோடு மறத்தலைவன் சொல்வான்

கட்டுடனே உம்முடைய கமலமுகஞ் சடைத்து
கவ்வை யுற்று நீரிருப்ப தென்ன?
அட்டதிசை யெட்டுமொரு மட்டுப்படுத்தி வுலகை
ஆண்டிருக்கு மெங்கள் தம்பிரானே

தம்பிரானே [1]யெங்களுட பொன்னுமுடிக் காவலரே
தானுமக்கு வந்த குறையென்ன?
எம்பிரானையுந் தொழுது தம்பிரானே வீதியிலே
[2]யெழுந்தரு ளாதே யிருப்ப தென்ன?

(போர்க்களத்தில் வீரர் மடிந்தாரோ, ஆகமசாலை அழிந்ததோ எனல்)

என்னகுறை தானுமக்கு [3]வர்ணமுகம் வாடினது
யென்னோ டுரையுந் தம்பிரானே
[4]பென்னறை கருவூலங்கள் [5]பொக்கிஷ மழிந்ததுண்டோ?
போர்க்களத்தில் [6]வீரர் மடிந்தாரோ

[7]வீறுடனே நம்முடைய கோட்டையடந் தேறிசிலர்
வெட்டிச்சிறைகொண்டு போன துண்டோ?

[8]பாயும்பரி வாரணங்கள் வீறுடனெழுந்த துண்டோ ?
பன்னக சாலை யழிந்த துண்டோ?

மாத்தான் படையெடுத்துத் தோரணமுங் கட்டிக்கொண்டு
வந்த கப்பங் [9]கேட்டதா ரும்மோடே?
ஏத்த துரைமக்க ளெவராகிலு [10]மும்முடைய
யிட்ட சட்ட [11]மீறிநடந் தாரோ ?

அந்தணரை வந்திசெய்து தானங்கள் தனைத்தவிர்த்து
[12]ஆகம சாலை யழிந்த துண்டோ?
எந்தவகையோ வறியோந்தேவரீர் திருமனசு
இப்படிச் சடைத் திருப்ப தென்ன?

சித்தமுடனே தொழுது மந்திரி உரைத்தபோது
சிவனணஞ்ச பெருமா ளேது சொல்வார்
புத்தியுட னென்னுடை மந்திரி மறத்தலைவா
புதுமையுட னொருவார்த்தை புகலுகிறேன் கேளுமென்றார்.

கமலமுகம் –தாமரை போன்ற முகம். **சடைந்து** –வதங்கி. **கவ்வையுற்று** –துன்பப்பட்டு. **அட்டதிசை** –எட்டுத்திசை. **மட்டுப்படுத்தி** –அளவுபடுத்தி. **தம்பிரான்** –தலைவன். **எம்பிரான்** –எங்கள் தேவன். **வர்ணமுகம்** –குங்குமம் போன்ற அழகான முகம். **கருவலம்** –கருவூலம், நல்ல பணம். **பொக்கிஷம்** –பொக்கிசம், பணம். **பரி** –குதிரை. **வாரணம்** – யானை. **பன்னக சாலை** –பன்னசாலை – **பர்ணசாலை** – இலைவேய்ந்த குடில். **மாத்தான்** –மாற்றான், பகைவன். **கப்பம்** –திறை. **அந்தணர்** –பிராமணர். **வந்தி செய்து** –துன்புறுத்தி. **ஆகமசாலை** –பூசை விதிமுறைகள், சிற்பம், கட்டிடம், வேதம் ஆகியவற்றைக் கற்றுக்கொடுக்கும் பள்ளிக்கூடம். **சித்தம்** –உண்மை. **புத்தியுடன்** – அறிவுடன். **புகலுகிறேன்** –சொல்லுகிறேன்.

பா.வே. 2. எழுந்திராமல் 3. வண்ணமுகம் 4. பொன்னான 6. வீரர்பட்டு 7. வேறுடனே 8. மாறுபட வாணுபங்கள் வீறுடனே கடந்ததுண்டோ 9. கேட்டார் உம்மோடே 11. ஏறி 12. ஆலமான சாலை.

ச.சொ. 1. எங்கமுட 5. பொக்கிஷமளிந்த 10. மும்முடய்.

The *maravā* leader enquires the reason for Cinnañcān's vexation

As thus anguished did **Cinnanañcān** remain
The *maravā* leader standing near by
Attending to the instructions in service of the king
Did enquire
"Why art thou so worried,
As to make your lotus face pale,
Oh! Lord who controls all the directions eight,
Of this world as but one unit?
Oh! **Tampirān** our protector with a gold crown,
What is thy grievance?
Why haven't you stepped out on the streets
And worshipped our god?

Did soldiers perish in the battle field or was the Ākamacālai[1] destroyed?

What is thy discontent, which has discoloured thy mien?
Do tell me, lord,
Have your treasures and stocks of gold perished?
Did thy warriors perish in the battle-field?
Have some folk dared to storm our fortress
And hacked and imprisoned our men ?
Did our galloping horses and elephants,
Break their limbs in warfare vigorous ?
Did any foreigner invade with his banner tied aloft
And demand *Kappam*[2] from thee?
Have any nobles and officials of our land,
Breached thy laws and regulations?
Have *Antanars*[3] been harassed,
And charity has been avoided ?
Has the *Ākamacālai* perished ?

We know not what ails thee in thy mind
To make you so grief stricken?"
As thus the *maṟavā* minister did enquire with reserverence earnest,
Ci<u>nn</u>aṇañcā<u>n</u> did reply,
"Oh! My minister wise, thou leader of *maṟavās*
I shall tell you now a matter quite strange and new,
Do listen"

1. *Akāmacālai* - A center where scriptures sculpture and forms of worship are
2. *Kappam* - Compulsory pay mart or ransom
3. **Antanars** - Brahmins

(மறத்தலைவனிடம் சின்னணஞ்சான் மனத்துயரத்துக்கான காரணத்தைச் சொல்லுதல்)

92. கேளுமென்று மறத்தலைவனைத் தான்கிட்டவா [1]வென்றருகழைத்து
[2]வாழுமறத் தலைவனுடன் வடிவன் சிவனணஞ்சவனார்

சுத்துகையில் நின்றபேரைத் தூரநிற்கச் சொல்லிவிட்டு
ஆரொருவ ரறியாம லந்தரங்கம் பறைவதுக்கு

சிவனணஞ்ச பெருமாளுந் தீரன்மறத் தலைவனுமாய்
மவுன ரகசியமாய் மண்டபத்தில் வந்திருந்து

தந்திரமாய் மறத்தலைவா [3]தயவாய்நா னுன்னோடே
எந்தன்மனத் தங்கடத்தை நானுரைக்க நீகேளு

வாழுவட நாடுதனில் வண்ணான்மக ளென்றொருபெண்
[4]வேழமனை பூந்தனத்தாள் வெளுத்தெடுப்பான் பெற்றமகள்

ஆளிலழகான பெண்ணா ளன்னமென்னுஞ் சின்னணஞ்சி
சூழுலகில் கண்டதில்லை துவரவண்ணான் தன்மகள்போல்

கண்டவுடன் [5]மதிமயங்கிக் காதல்கொண்டே னவள்மேலே
உண்டான [6]செய்தியிது உன்னாணை யெனவுரைத்தார்.

(மறத்தலைவனின் மறுமொழி)

சொன்னமொழி யானதெல்லாந் [7]துன்பமுறத் தான்கேட்டு
மன்னவனை முகம்நோக்கி மறத்தலைவ னேதுசொல்வான்

[8]என்னமொழி சொன்னீர்காண் யிலங்குசிவ னணஞ்சவரே
முன்னிருந்த மன்னவர்கள் மூதாக்க ளானவர்கள்
மன்னவனே யிப்படித்தான் வரம்புதப்பி நடந்தாரோ?

(சின்னணஞ்சான் பதிலுரை)

வரம்புதப்பி நடக்கலையோ மலையிலொரு குறத்திதன்னை
[9]உரம்பெரிய வடிவேல ருகந்தெடுத்துப் போகலையோ?

கரந்தனிலே மழுவேந்துங் கடவுள்பர மேஸ்பரனார்
பரம்பதில்மீன் போட்டுவிக்கும் [10]பரத்தியைக்கொண் டிருக்கலையோ?

இல்லையோடா மறத்தலைவா யெத்தனைபே ரிப்படித்தான்
[11]நல்லபுகழ் [12]பாண்டிமன்னர் நாடறிய [13]முன்னாளில்

பல்லியங்கள் படித்துவரும் பாடுகிற [14]பரசியிடம்
[15]இல்லத்தில்சென் றவதரித்து யிருப்புதங்கம் சேர்க்கலையோ

[16]இருப்புதங்கஞ் சேர்க்கலையோ யென்னுடைய மறத்தலைவா
கருப்பூத்த சின்னணஞ்சி காரிகையைப் பழித்தாயே

மருப்பூத்த [17]பூந்தோளில் மாணிக்க முத்திருந்தால்
[18]பொருள்படுத்தி வையாமல் போடுவதோ பெரியோர்கள்

பெரியமுடிக் காவலவா பூசணங்க [19]ளானவர்கள்
விரிகடலில் [20]சிப்பியிலே விளைந்தமுத்தைத் தானெடுத்து

வரிசையுடன் பணிசமைத்து [21]மகுடமுடி சேர்க்கலையோ
[22]செந்தாமரை முகத்தாளே சின்னணஞ்சி தன்னையுநான்

(சின்னணஞ்சியை அழைத்துவரச் சொல்லுதலும், மறத்தலைவன் மறுமொழியும்)

பார்த்த[23]கண்ணு மாறுதில்லை பரிதவிப்புந் தீருதில்லை
சீத்தமுட னீயவளைச் [24]சென்றழைத்து வராவிட்டால்
[25]மாய்த்திடுவே னென்னுயிரை மறத்தலைவா தேடாதே

தேடரிய [26]மலைமார்பா சிவனணஞ்ச பெருமானே
பாடதிகம் பறைந்தீரே பரிதவிக்க [27]வேண்டாமே

[28]என்றுசொல்லிப் பூங்குழலா ளிலங்குசின் னணஞ்சிதன்னை
[29]அந்தரமாய் நான்போய்க்கூட்டி யரைநொடியில் வாரேனென்றான்

கூட்டிவருவே னெனவே [30]குளிர்ந்தமொழி பறைந்தபோது
[31]வாட்டமறத் தலைவனைத்தான் மகிழ்ந்துமுத்திப் புகழ்ந்துபொண்டு
நாட்டமுட னுந்தனக்கு நல்விரிசை [32]தருவேனென்றார்.

சுத்துகையில் –சுற்றிலும். **இரகசியம்** –மறை பொருள். **தங்கடம்** –சங்கடம். **அன்னம்** –ஒரு பறவை. **மதிமயங்கி** –அறிவு மயங்கி. **உன்னாணை** –உன்மேலாணை. **மூதாக்கள்** –முன்னோர்கள். **குறத்தி** –வள்ளி. **வடிவேலர்** –முருகன். **மழு** – சிவனுடைய ஆயுதம். **பரமேஸ்பரனார்** – சிவபெருமாள். **பரம்பு** –மூங்கிற்பாய். **பரத்தி** –நெய்தல் நிலப்பெண். **பல்லியம்** –பல்வகை வாத்தியங்கள். **பரசி** –செம்படவப்பெண். **இருப்பு** –மீந்திருப்பவை. **கருப்பூத்த** –கருவில் உருவான. **காரிகை** –பெண். **மருப்பூத்த** –குற்றம் பொருந்திய. **பூசணம்** –ஆபரணம். **விரிகடல்** –பரந்த வடல். **சிப்பி** –கிளிஞ்சல். **பணிசமைத்தல்** –ஆபரணம் உருவாக்கல். **மகுடமுடி** – தலையில் அணியும் கிரீடம். **பரிதவிப்பு** –இரக்கம், வருத்தம். **அந்தரம்** –ஆகாயம். **முத்தி** –முத்தமிட்டு.

பா.வே. 3. நான் உரைக்க கேளு 4. வெள்ளை 5. மதிமசங்கி 6. செய்தியெல்லாம் உன்னோடே 7. துக்கிஷமாய்த் 9. உகம்பெரிய 10. மீன்விற்கும் 12. பட்டிமன்னர் 14. பாடும் பரதேசியிடத்தில் 15. இல்லிடத்தில் அவதரித்து இருப்புதரித் திருக்கலையோ 16. இருப்பூத்த மறத்தலைவா என்னுடைய சேவுகரே 17.பூந்தோளில் மாணிக்கப் பூவிருந்தால் 18. பொருளைப்பத்தி 19. ஆனதிலே 20. சிப்பிதன்னை 21. மகடமதில் 22. பூத்த செந்தாமரை முகத்தாள் பூவையர் 23. கண்ணும் உறங்குதில்லை 24. கூட்டிவராட்டால் 25. மாண்டிடுவேன் 26. மலர்மார்பன் தீரன் சிவனணஞ்சவரே 27. வேண்டாமையா 28. ஏடரிய 29. ஆடரிய மாய்க் கூட்டி 31. வாட்டமில்லா 8மறத்தலைவரை வலிந்துமுத்தி முகந்துகொண்டு 32. நான்தருவேன்.

சு.சொ. 1. வென்றருகளைத்து 2. வாளு 9. எந்தமொழி 11. நல்லபுகள் 13. முன்னாளில் 17. பூந்தோழில் 30. குழிர்ந்தமொழி.

Ci<u>nn</u>ana<u>ñ</u>cā<u>n</u> reveals his grievance to the *ma<u>r</u>ava* leader

"Come near and listen" said **Ci<u>nn</u>anañcā<u>n</u>,**
Bidding the *ma<u>r</u>avā* leader to come nearby,
And asking others who stood around to leave the place
So that **Civa<u>n</u>anañcaperumāl** and the *ma<u>r</u>ava* leader
Could share secrets in confidence
As thus did both in the palace hall remain
Ci<u>nn</u>anañcā<u>n</u> did tell the *ma<u>r</u>avā* leader
"Do please listen to my grievance, Oh! *Ma<u>r</u>avā* leader,
Which I shall reveal to you but discreetly,
In the northern land there is a damsel young,
The daughter of a washerman is she,
Swan like girl by name **Ci<u>nn</u>anañci** of breasts flowery,
Never have I seen such a lovely lass
In this world entire which surrounds us,
Dazed am I in infatuation on seeing her
I love her much
And this is the cause of my grief
I do swear by you"

The *ma<u>r</u>ava* leader's reply

On listening to this statement of king,
The *ma<u>r</u>avā* leader much pained did reply,
"What words have you spoken? Oh! **Civa<u>n</u>anañcār** famous,
Did your ancestors who were king formerly,
Deviate from virtue and their royal limits exceed?

Ci<u>nn</u>ana<u>ñ</u>cā<u>n</u>'s retort

"Did not **Vativēlar** the God mighty,
Take a *kuratti* as his spouse from the mountain?
Has not **Paramēsvara<u>n</u>**[1] who sports a *ma<u>l</u>u* in his hand

Kept company with a *paratti*[2] selling fish spread on bamboo mats?
Are there not so many folk such Oh, *marava* leader
Were there not **panṭiya** kings of yore,
Born to *paracci*[3] proficient in musical instruments,
And hoarded gold and glory?
You devide, **Ciṉṉanañci,** *maravā* leader,
If ruby can be had from a source faulty,
Will wise folk throw away without preseuading it?
Do not crowned kings and counsellors theirs
Collect the pearls from oysters in the ocean vast,
And fix them in crowns for adornment?

Ciṉṉanañcāṉ firmly states that Ciṉṉanañci should be brought

"My eyes that have seen **Ciṉṉanañci,**
Won't see any other woman,
My distress acute leaves me not,
If you do not bring her here quickly now,
End my life I shall Oh *maravā* leader".
The *maravā* leader did reply then,
"Oh! **Civaṉanañcaperumāl** of mountainous chest,
Thou hast declared thy grief acute,
Be not distressed
I shall go now and meet **Ciṉṉanañci** secretly,
And bring her to you in a trice",
On hearing such an assurance soothing,
From the *maravā* leader,
Pleased with those words cool and sweet
Ciṉṉanañcāṉ did gladly kiss the *maravā* leader
And said, "precious gifts I shall offer thee willingly"

1. **Paramēsvaraṉ** - Lord **civā**
2. *Paratti* - Fisher woman
3. *Paracci* - A woman of fishing community

(சின்னணஞ்சியை அழைத்து வந்தால் கொடுக்கப்படும் பொருட்கள்)

93. வரிசையுடன் குதிரைகுடை மாணிக்கமுந் தருவேன்
வடகரையில் நாற்பதுமா நிலமும்விட்டுத் தருவேன்
உரிமையுடன் சின்னணஞ்சி தன்னைக் கூட்டிவந்தால்
ஒன்பது [1]பிடாகைக் குறிச்சூரும் விட்டுத்தருவேன்

தருவேனடா பொற்சரிகை [2]வளையலுங்கை முடுகும்
[3]தண்டிகையுமிட்டுக் கோட்டைத் தலமுமிட்டுத் தருவேன்
விரைவினுடன் கூட்டியெந்தன் முன்னே கொண்டுவிட்டால்
[4]விழிக்குள்வைத்துக் காத்திடுவேன் வெளியில் விடமாட்டேன்

மாட்டோமென்று சின்னணஞ்சி வலுமை பறைந்தாலும்
மடிபிடித்தாகிலுங் கொண்டு வாடா [5]மறத்தலைவா
கூட்டமிட்டு [6]வந்தவர்கள் அநியாய மென்றுரைத்தால்
[7]கோசிமைக்கு நானல்லாதே கேட்பவர் வேறுண்டோ

உண்டான செய்தியெல்லா முரைத்தேன் மறத்தலைவா
உலகிடத்தில் வேறேயொரு [8]பூதரறி யாமல்
வண்டாடுங் [9]குழலாளைக் கொண்டுவரு மட்டும்
மாதுளம்பூ மேடையிலே வழிபார்த் திருப்பேன்

[10]இருப்பேனென்று வார்த்தைசொல்லிச் சிவனணஞ்ச பெருமாள்
இதமுடனே தூதோடும் மறத்தலைவன் றனக்கு
விருப்பத்துடன் திருக்கையினால் சிறப்பதுவுங் கொடுத்து
[11]வீரவாளி பட்டுமொரு பட்டரைஞாண் கொடுத்தார்

(மறத்தலைவன் தூது செல்லுதல்)

கொடுத்த வுடைவாள் சிறப்பாயடுத்து நின்றுவாங்கி
கும்பிட்டு நமஸ்கரித்துக் கொண்டு மறத்தலைவன்

[12]எடுத்தகருமந் தவறாமல் காணவேணு மென்று
[13]ஈஸ்வரனையுந் தொழுது [14]பூசுநீறுஞ் சாத்தி

சாத்துமலர் முடிபுனையு மணஞ்சவ னார்க்காக
சாதிசிறுகுல மடந்தை யானாள்தன் மீதில்
ஏத்தபிரான் [15]சுந்தரர்க்காய்ப் பரவையிடந் தன்னில்
ஈஸ்பரனார் முன்றூது நடந்தவகை போலே

[16]புன்சொல்லா லணஞ்சவனார் சோதிமைய ராலே
பூத்தமலர்க் குழலழகி சின்னணஞ்சி தன்பால்
போகவென்று தூதுவனு மணஞ்சவனார்க் காக
புகழ்ந்துகொண்டு மறத்தலைவன் மகிழ்ந்துதூது போனான்.

நாற்பதுமா –400 குழிநிலம். **பிடாகை** –நாஞ்சில் நாட்டின் உட்பகுப்புப் பகுதிகள் இச்சொல்லால் அக்காலத்தில் வழங்கப்பட்டன. **குறிச்சூர்** –தென்காசி வட்டத்திலுள்ள ஒரு கிராமம். **பொற்சரிகை** –பொன்னூல். **வளையல், முருகு, தண்டிகை** –அணிகலன்கள். **வலுமை** –பலம். **மடிபிடி** – மடிச்சீலையிற் பிடிக்கும் பிடி. **அநியாயம்** –நியாயமின்மை. **கோசிமை** –நியாயந்தீர்க்கின்றவர். **பூதர்** –சாரதர் இவர் பதினெண்கணத்தொருவர். **மாதுளம்பூ மேடை** – மாதளம் பூவால் அலங்கரிக்கப்பட்ட மேடை. **அடுத்து நின்று** – பக்கத்தில் நின்று. **வீரவாழி** –மோதிரம். **அரைஞாண்** –அண்ணாக்கயிறு. **நமஸ்கரித்து** – வணக்கம் செய்து. **கருமம்** –காரியம். **பூசுநீறுஞ் சாத்தி** – திருநீறு அணிந்து. **மடந்தை** – பெண். **சுந்தரர்** –சுந்தரமூர்த்தி நாயனார். **பரவையிடந் தன்னில் ஈஸ்பரனார் முன்றூது** – கமலினி என்பவள் திருக்கைலையில் பார்வதி யாருக்குப் பூத்தொடுத்துச் சாத்தும் தோழியருள் ஒருத்தி. திருவாரூரில் பரவை நாச்சியாராக உருத்திரகணிகையர் குலத்தில் அவதரித்தவள். சுந்தரரைத் திருமணம் செய்து கொண்டவள். சுந்தரர் சங்கிலியைத் திருமணம் செய்ததால் பரவை ஊடல் கொள்ள இவர்களுக்காகச் சிவன் தூது சென்றதைப் புராணம் கூறுகிறது.

பா.வே. 1. வீடாகுறிச்சி 2. வளையலுமுந்தனக்கு 3. தண்டிகையுந் தந்து 4. விழிக்கு முன்னே வைத்திருப்பேன் 5. மறவா 6. வந்தொருவர் அனியாயம் செய்தால் 7. கோதுமைத்து நானல்ல அதைக் கேட்பலர் வேறில்லை 8. சூதறியாமல் 9. பூங்குழலை 10. இட்டமுடனே 12. எடுத்த காரியம் தவறாது 13. ஈஸ்பரனைத் 14. பூசைமிகச்சாத்தி 16. பொன்சொல்.

சு.சொ. 2. வளயலுங் 11. வீரவாழி 15. சுந்தரர்தக்காய்ப்.

The gifts offered for bringing **Ci<u>nn</u>anañci**

"With gifts I shall offer thee
Horses parasols and rubies,
At *Vaṭakarai*[1] forty *mā*[2] of land I shall give
If thou bring **Ci<u>nn</u>anañci** rightfully to me,
Kuṟiccūr of nine *piṭākai*[3] I shall concede
Give I shall gold lace and ornaments.
Like bangles *mutuku*[4] and *tantikai*[5]
If you bring her quickly to me
I shall keep her dearly and protect her like eyelashes
I won't cause her going out for anything.
Oh! *Maṟavā* leader, even if **Ci<u>nn</u>anañci** is adamant,
And refuses to come with thee
Hold her sareefolds and bring her here
If people intercede and state that it is unjust,
Is there any one but me in this land,
To arbitrate and decide?

The *maṟavā* leader goes as an emissary

Holding the sword given to him but properly
And prostrating at the feet of **Ci<u>nn</u>aṉañcā<u>n</u>**
The *maṟavā* leader determined to fulfil the task
Assigned to him without fail,
Prayed to god and smeared *tirunīṟu* on his forehead,
Like lord **Civa<u>n</u>** who did got to **Paravai**[6] long ago
To mediate for the sake of **Cuntarar**[7],
The *maṟava* leader as a messenger earnest,
Of **Ci<u>nn</u>anañca<u>n</u>** of flower decked crown
Gladly did go to **Ci<u>nn</u>aṉañci,**
For the sake of his master,
Who with a low caste woman was infatuated.

1. *Vatakarai* - On the northern side
2. *Ma* - A certain measure of land (of 10 *Kuḻi*)
3. *piṭākai* - Interior village tract of **Nāñcilnātu**
4 - 5. *Tantikai* - Name of an ornament
6. **Paravai** - Lord **Civaṉ** acted as a mediator between **Cuntarar** and his wife **paravai** as there was a tiff when **cuntarar** took **cankili** as his second spouse
7. **Cuntarar** - One of the *Nāyaṉmār*

(தூது செல்லும் மறத்தலைவனின் அலங்காரம்)

94. தூது போக மறத்தலை வீரனும்
[1]தேச மெங்கு மணஞ்சவர்க் காகவே
வாது சொன்ன சின்னணஞ்சி [2]தன்முன்பிலே
வாய்த்த தூது மறத்தலைவன் [3]போகப்

[4]போறே னென்று சடுதியில் நன்றாக
[5]பொங்கார மாக மறத்தலை வீரனும்
[6]மோகமாய் பொற்கச்சை வேட்டி யுடுத்தவன்
முண்டிறுக்கியே [7]சட்டையு மிட்டனன்

கட்டினான் கருங்கச்சை யிடையிலே
[8]கடின முள்ள மறத்தலை வீரனும்
கெட்டினான் பட்டு துப்பட்டிக்கு [9]மேலே
கெம்பீரமாய் [10]வலித்திறுக்கிக் கொண்டான்

உடுத்துக் கெட்டி யுருவின் தொங்கலும்
உல்லாச மான [11]குல்லாவுஞ் சல்லாவும்
எடுத்துப் பூட்டின வெள்ளி [12]யரைஞாணும்
ஏத்த மார்பி [13]லணிமுத்துத் தாழ்வடம்

வடிவ தாகவே [14]தக்க வல்லயம்
வாய்த்த தாயிற்று வெள்ளிக் கட்டி

வடையுந் தாயித்து கைக்கயிறுங் கட்டி
[15]காதில் ரெம்பக் கடுக்க னிலங்கவே
நடையின் பாவனை சிங்கார மாகவே
நல்ல வீரன் மறத்தலைவன் தானும்

சாச்சிக் கெட்டின கொண்டைக்குத் தொங்கலும்
சங்கையான சமுதாடு கொஞ்சவே
பூசுஞ் சந்தனப் பொட்டுங் குறியிட்டு
[16]போட்டான் தோளிலே யேத்தாப்பு தூவட்டம்

தூவட்ட மிட்ட யேத்தாப்புங் கொஞ்சவே
துப்பட்டியின் மடிக்குள்ளே வட்டுவம்
பூவிட்ட [17]விரலாழிகளு மிட்டு
பெருக்க காதில் முருகு மிலங்கவே

இலங்கவே கழுத்திலிட்ட அட்டியல்
எறியும் [18]பாரவளையும் வளைதடி
துலங்க கட்டாரி சொட்டை உடைவாளும்
துய்ய வெள்ளி கெட்டின குறடுமாய்

குறடுங் கையில் வளைதடி சேரவே
கொம்பு போலே முறுக்கின [19]வீசையும்
திருடுங் கள்ளன் மறத்தலை வீரனும்
சேர்த்துக் கொண்டான் சமுதா டிடையிலே

இடையில் சமுதாடு மிலங்கவே
யேத்த கள்ள மறத்தலை வீரனும்
உடையும் பாவினை சிங்கார மாகவே
[20]ஒத்தபட்டுரு மாலுங் கெட்டிக் கொண்டான்.

தலைவனும் [21]சிறுக்கனு மாகவே
தந்திரமாய் [22]வழிநடந் தேகினான்

[23]களப கஸ்தூரி வாடை மணம் வீச
கையில் சிங்கார வில்லு மிலங்கவே

வில்லுந் [24]தோளிலே யம்புறாணிக் கூடுமாய்
வெண்டய மிட்ட பாசக் கயிறுமாய்
செல்லு நேரம் [25]பெருவழி தன்னில்
சின்னணஞ்சி யெதிர்சந்து தோன்றினாள். 25

வாது –சபதம். **சடுதி** –சீக்கிரம். **பொங்காரம்** –மிகுதுக்கம். **மோகம்** –ஆசை. **பொற்கச்சை** –பொன்னாலான இடையாடை. **முண்டு** –சிறுவேட்டி. **தொங்கல்**–தொங்கலிட்டுள்ள ஆடை, முந்தி. **குல்லா** –தலைக்கோலம். **சல்லா** – ஒருவகைச் சீலை. **தாழ்வடம்** –முத்துக் கோவை முதலியன. **வல்லயம்** – ஒரு வகை ஈட்டி. **தாயித்து** –தாயத்து, மந்திரத்தகடு அடங்கிய அணி. **கடயம்** –கடகம், கைவளை. **தூவட்டம்** –ஏத்தாப்பிலுள்ள தொங்கும் அழகிய வேலைப்பாடு. **வட்டுவம்** –வெற்றிலை முதலியன வைக்கும் பை. **ஆழி** – மோதிரம். **முருகு** – காதணியில் ஒன்று. **அட்டியல்** –அட்டிகை. **பாரவளை**–சக்கராயுதம். **வளைதடி** –எறியாயுத வகை. **கட்டாரி** –குத்துவாள். **சொட்டை** –ஓராயுதம். **குறடு** –செருப்பு, மிதியடி. **வீசை** –மீசை. **கள்ளன்** –திருடன். **சிறுக்கன்** –வாலிபன். **களபம்** – சந்தனம். **கஸ்தூரி** –ஒரு நறுமணப் பொருள். **அம்புறாணிக்கூடு** –அம்பறாத் தூணி, அம்புக்கூடு. **வெண்டயம்** –வண்டையம், சதங்கை.

பா.வே. 1. தேசவைக்கும் 2. தனமுன்பிலே 3. போகவே 4. வரையடைந்து சடுதியில் போகவே 5. பொன்தாரமாய் உடுத்துப் பாவித்தான் 6. மேகப்பரகச்சை 7. சொட்டையும் இட்டான் 8. கருமையுள்ள 9. துப்பட்டியுடே 10. யெடுத்தி உடுத்திக் 11. சல்லாலி குல்லாவும் 13. அணிவித்துத் தாவடம் 14. ஒரு வல்லயமாகவே 15. காதிலந்த கடுக்கன் 16. போட்டானே யந்த ஏத்தாப்பித் துப்பட்டா. 17. வேலாளி எனவிட்டு. 18. பாரமுளையத் தடியுமாய் 19. மீசையும் 20. ஒத்தகொட்டும் 21. செறுக்கன் மெய்க்கவே 23. கண்ட கடையத்தூள் வாடை மணல் வீச.

ச.சொ. 12. யரஞானும் 16. தோழிலே 22. வளிநடந் 23. கழப 24. தோழிலே 25. பெருவளி.

The *ma<u>r</u>ava* leader adorns him grandly for the occasion

As the *ma<u>r</u>avā* leader did agree,
To go as a messenger to Ci<u>nn</u>anañci
Who argued against the kings desire
Accordingly did he prepare himself

"I shall leave quickly" said he
The *maravā* leader much excited
Did wear a dhoti gold laced,
And a shirt as well tucked in the *muṇṭu*[1]
A dark band around his waist he tied,
The *maravā* leader tough did then,
Sport a silk cloth as well,
Majestically wound tight over his shawl,
Thus clad with pasts of the dress hanging loose,
And a cap elegant and *calla*[2] to boot,
With a silver band around his waist
And a pearl necklace hanging low on his chest
A spear shapely and proper he did carry,
Sported he a silver bracelet and a talisman too,
With *katukkan*[3] sparkling in his ears,
And with a gait graceful quite,
The *marava* leader who was a warrior veritable
With his leaning tuft bound by a *tonkal*[4]
Sporting a *camutātu*[5] but endeaningly,
And with a sandal *pottu* on his forehead,
He did cover himself with an embroidered *ēttāppu*,
A pouch we had on the shawl over his lap,
His fingers with flowers and ornaments adorned,
He ears sporting studs big,
With an *aṭṭiyal*[6] around his neck,
He did also carry weapons varied
Like *pāravalai*[7] boomerang and dagger,
Cattai[8] and sword too he had on his person,
With weapons such and a horn like moustache,
The *marava* leaders like a dacoit veritable
Had a silk *urumāl* too tied on him
Then along with a youth the leader
Wended his way discreetly on his mission
Smelling of *kastūri*[9] and sporting a bow elegant

And with a rope tied with bells
As thus with the bow and a quiver of arrows on his shoulder
The *maravā* leader did walk on the highway
Ci<u>nn</u>anañci did arrive and appear before him

1. *Muntu* - A small dhoti or towel
2. *Calla* - A thin cloth like a saree
3. *Katukkan̲* - Ears stud
4. *Toṅkal* - A hanging band or ribbon
5. *Cāmutātu* - A weapon like a spear
6. *Attiyal* - Necklace
7. *Pāravalai* - Discus
8. *Cattai* - A weapon
9. *Kastūri* - Musk (a Fragrant substance)

(மறத்தலைவன் சின்னணஞ்சியைக் காணுதல்)

95. [1]தோன்று மாமடமயிலைக் கண்டபொழு தேதான்
தூதோடு மறத்தலைவ னேதுசொல்லு வானாம்
வேண்டுங் [2]கருமமாச்சு தாண்டவனா ரருளால்
விருப்பத்துடன் நாமள்வந்த வேட்டைவாச்சு தென்றார்

சொல்லுவானா மறத்தலைவன் சின்னணஞ்சி யோடே
சொகுசுபெற வந்தரங்க மாகவொரு வார்த்தை
அல்லனைய [3]குழலழகி நில்லுநீ போகாதே
ஆண்டவனாரு பொன்னணஞ்ச [4]பெருமாள்திரு வாணை

(மறத்தலைவன் சின்னணஞ்சியை அழைத்தலும், வாதம் செய்தலும்)

திருப்பயிலும் மலைமார்பா சிறந்த மறத்தலைவா
தேவாதி [5]தேவர் திருவாணை விடுவானோ
[6]கருப்பயிலு மொழியாளே சின்னணஞ்சி நீகேள்
காதல்கொண்டா ரெங்கள் பொன்னணஞ்ச பெருமாளும்

பெருமையுட னீயுமவரிட மதிலே வந்தால்

பூவாலே நாருங்கெதி பெற்றவகை போலே
உருமையுட னுந்தனக்குப் பொன்னுடமை பலதும்
ஒருக்காலே பணமுநல்ல திரவியமுந் தருவார்

தருவார்நல் லணஞ்சவனா ரிடமதிலே வந்தால்
தரணியெல்லா [7]முன்னுடைய சட்டப்படி நடக்கும்
திருவான பூங்குழலே சின்னணஞ்சி கேளு
[8]தேவையுடன் கேளுமுனக் கிச்சையுள்ள தெல்லாம்

கேளுமென்று மறத்தலைவ னுரைத்த[9]மொழி கேட்டு
[10]கெணிதமுடன் சின்னணஞ்சி யேதுமொழி சொல்வாள்
[11]மாளுவேனா னுன்னாலே மறத்தலைவா நீயும்
வம்பதிலே பண்புகெட்ட வார்த்தை பறையாதே

வார்த்தை பறையாதே யென்றசின்ன ணஞ்சிகேளு
மகாமேர்வைச் [12]சேர்ந்திருந்தால் காகம் பொன்னிறமே
ஏத்தமொழி பறைந்து யெந்தன்மனதை யுருக்காதே
[13]இந்தக்கொட்டுக்கும் பாட்டுக்கு மென்மேல் பேய்வராது

(தீண்டாத சாதி என சின்னணஞ்சி கூறல்)

வாரேறு பூந்தனத்தினாளே வார்த்தை சொல்லக்கேளு
மன்னவனா ருனைவிரும்பி யென்னதவஞ் செய்தார்
சீரேறு மலைமார்பா சிறந்த மறத்தலைவா
[14]செட்டுப் பலியாது யென்னைவிட்டு விடுநீதான்

[15]பலியாதோ யெலிபாய்ந்தால் பூனையது விடுமோ
[16]பராக்கிரம மாகவேஒரு வாக்கிரமஞ் சொல்லாதே
[17]சலியாதோ யெனதுடைய மசை கலக்காதே
தலைவா யென்னைத் தலைகுலைந்தநூ லாக்கவேண்டாம்

வேண்டாத வரிசையெல்லாம் வேண்டித் தருவேனே
[18]வேந்தனைச் சார்ந்திருந்த துண்டால்வேறு பயமுண்டோ ?
தீண்டாத சாதியல்லோ ஆண்டவரே நானும்
சிங்கத்தோடே வங்குநரி சேர்ந்து வாழ்ந்திடுமோ ?

வங்கத்துக் காகாத பொன்னைத் தங்கமிடலாமோ ?
[19]வண்ணான்கல் துறைக்குப்போனால் மாணிக்கக் கல்லாமோ ?
[20]பங்கத்துக்கே யெனைவருத்தி பரசி கெடுப்பதுக்கோ
பாதையிட்டா ரென்னோடே முன்சின்னணஞ்ச பெருமாள்.

கருமம் –காரியம். **தாண்டவனார்** –சிவபெருமான். **சொகுசு** –சௌக்கியம். **தேவாதி தேவர்** –கடவுள். **பூவாலே நாருங்கெதி பெற்றவகை போலே** –பூவோடு சேர்ந்த நாரும் மணம் வீசுவதை போல சின்னணஞ்சவருடன் நீ சேர்ந்தால் வளம்பெறுவாய் என்று பொருள். **உருமை** –உரிமை. **திரவியம்** –பொருள். **தரணி** –பூமி. **சட்டபடி** –கட்டளைப்படி. **இச்சை** –விருப்பம், ஆசை. **மாளுவேன்** –சாவேன். இறப்பேன். **வம்பு** –சண்டை. **மேர்வை** – மேரு மலையை. **செட்டு** –எண்ணம். **பராக்கிரமம்** –வீரம். **வாக்கிரம்** –வசனம். **வங்குநரி** –குகையிலுள்ள நரி. **அங்கம்** –உடல். உடம்படுமெய் வந்ததால் அங்கம் வங்கம் ஆனது. **பரசி** –புகழ்ந்து.

பா.வே. 1. தோன்றிய மடமயில் 2. கருமம் ஆட்சி ஆண்ட பரமன் அருளாலே 3. குழலாளே நில்லுநில்லு போகாதே. 4. திருமுன்பில் 5. தேவருட வாணைவிடு6. தருப்பையிலும் சிறியாளே 7. உந்தனுட சட்டமும் நடக்கும் 8. இச்சையுடன் கேளு. 9. மொழிசொல்வாள் 10. எளினமுடன் 11. மாளுகிறேன் 12. சார்ந்திருந்தால் 13 இந்தக் கூத்துக்கும் பாட்டுக்கும் என்னுடை மெய் வராது 14. கொட்டுப் பறையாது 15. பலியாக 16. பாக்கரமாய் வெகு வாக்கினையும் சொல்லி 17. சரியாக என்னுடைய 18. வேந்தரைச் சேர்ந்திருந்தால் வேறபயம் உண்டோ. 19. வண்ணான் கல் மதுரையிலே மாணிக்கக்கல்லாமோ 20. இலைபறித்துப் பரிசளிப் தற்கோ.

சு.சொ. 8. தேவயுடன் 11. மாமுவேனா.

The *maṟava* leader sees Ciṉṉaṉañci

On seeing the damsel peafowl like
The *maṟavā* leader did remark
"The quest is over by the grace of God,
Our desired prey is at hand"
The *maṟavā* leader then did address Ciṉṉaṉañci

Secretly and father glibly,
"Oh! Damsel with locks dainty stop,
Leave not, I swear by **Po<u>nn</u>anañca<u>n</u>ār**"

The *ma<u>r</u>ava* leader argues with Ci<u>nn</u>anañci

"Oh! *Ma<u>r</u>avā* leader of mountainous chest,
Will a leader glorious like you swear like this?"
He replied,
"Oh! **Ci<u>nn</u>anañci**! do listen,
Our king **Po<u>nn</u>anañcaperumāl** is enamoured of you,
If only thou go to him,
As the string is honoured by the flowers tied therein,
Thou will enjoy the privilege of his gifts to you,
Of gold and other assets many,
As well as money and wealth
The world will act at your behest
If you go to **Ci<u>nn</u>anañcar**,
Ask whatever thou desire,
All that you desire will be given unto you"
On listening to the words of the *ma<u>r</u>avā* leader,
Ci<u>nn</u>anañci did reply,
"Oh *ma<u>r</u>avā* leader, speak not words improper,
Utter not in mischief indecency such
I shall die rather than oblige you"
"Oh! **Ci<u>nn</u>anañci** do not argue thus
When a crow reaches *meru* mountain,
Its hue becomes golden"
She did retort
"Melt not my mind with words proper,
I won't be devilish however be your rhythmic song"

Ci<u>nn</u>anañci says that she belongs to an untouchable low caste

"Oh! Damsel of flowery breasts listen towards mine.
What a penance hath the king performed,
Desiring to attain you?"
"Your desire will not be fulfilled, Oh! *Marava* leader,
Leave me please"
He countered
"Won't the desire be fulfilled?
If the mouse leaps and runs
Will the cat ever leave it?
Challenge not in statements thine"
"Aren't you tired of this effort futile?
Disturb not my mind and make me a headless thread"
He said then,
"Even gifts not solicited by you I shall get for thee,
If you are with the king associated,
Is there anything to fear?"
"Don't I belong to a caste untouchable?
Can a cave dwelling fox ever live,
With a lion royal?"
Can gold not malleable be used to make ornaments?
Will a washerman's stone ever become a ruby?
Is it for spoiling me in harassment
That **Ci<u>nn</u>aṇañcaperumāḷ** has paved the way"

(மறத உன்வீட்டுப் தலைவனிடம்பெண்களை அழைத்துப்போ எனல்)

96. பாதையிட்ட தெல்லாமுன் மேலாசை யிருந்தததினால்
பட்சமுடன் கூட்டிவர [1]நிச்செயமாய்ச் சொன்னார்
கூட்டிவரச் சொன்னா லுந்தன் வீட்டில; [2]மடவாரை

கொண்டுபோய்க் கண்டவிலைகூறி வில்லிலும் போம்போம்
வீட்டில் போறதெல்லா முன்னைக்கூட்டிக் கொண்டல்லாதே
விட்டுப்போட்டுப் போறதில்லை சின்னணஞ்சி உன்னை
விட்டுவிடப் போறதில்லை யென்ற தம்புரானே

(சின்னணஞ்சி உன்னை வெட்டிப்போடுவேன் எனல்)

[3]மிஞ்சபறை யாதேயும் போங்கொஞ்சத் தனமாக
கொஞ்சத்தனமோ பறைந்தாய் வஞ்சக்காரி நீதான்
குட்டுப்பட்டுப் பொட்டுக் குலைந்து [4]போகாதே
பொட்டுக் கலைப்பதுக்கு பிள்ளை தள்ளையல்ல
பூத்தானத்தை ஆத்தானத்தில் பேசாதே யுங்காணும்
பேசுமொழி [5]யறியாமல் பேசின துண்டானால்
[6]பெட்டிமகளே உனைநான் வெட்டிப் போடுவேனே
வெட்டிநீ ரிட்ட மொட்டகட்டப் [7]புளிதன்னை
மெத்தப்பத [8]மாச்சிது கத்தாழை காணுமக்கு
[9]கத்தாழையை வெட்டுமுன்னே கையாயுத முன்னை
கண்டிருக்கத் கொண்டுபோறேன் வண்டக்காரி யுன்னை
வண்டத்தன மாக[10]நீங்க ளென்னோடு யெதிர்த்ததால்
மாலையிட்டு [11]வெட்டவெளிக் கொட்டுகொட்டு [12]வாரே
கொட்டுகொட் டென்றேபேசுறாய் பெட்டி மகளேநீ
குத்திப்போடு வேனே வல்லயத்தினாலே நானும்
குத்துவார்த் தல்லவோ நேத்துப்போட்ட புழுங்கல்
கொழியலுங் கப்பியு மாறாமல் கிடக்கிதுகாண்
கப்பியறத்த தீட்டுமுன்னே கைப்பிடித்து வுன்னை

கட்டியடிக் கிறேன்பார் [11]வெட்டவெளி தன்னில்
[13]கட்டியடக்க வுனக்குக் கைவருமே யானால்

மேற்கேவயல்ல போங்கோ கொத்துத் தருவார்கள்
கொத்துத் தருவா ரெவருஞ் சுத்தப்பர மானால்

[14]குல்லாத்தன மானதெல்லாஞ் சொல்லுகிறேன் பாரு
சொல்லும் பல்லியானால் [15]வெகுதெய்வம் நீயலவோ

[16]தேட்டமுள்ள பேர்களுண்டால் பூட்டுத் தருவார்கள்
[17]ஊட்டுக் கொடுத்தாலு முன்மேலாட்டமுங் கொள்ளாமல்

[18]ஒட்டினபேய் விட்டுவிட மாட்டா தும்மாணை
உன்னைப் [19]பிடித்தபிரமன் யென்னைப் பிடித்தாக்கால்

கழிப்பது வேறேயொரு கழிப்புமுறை யுண்டு
[20]களித்துகளித்து விளையாட [21]வல்லோயெங்கள்

காவலவ ராவலாக வுன்னைத் தேடுகிறார்
ஆவலது தீர்த்துக் [22]கழித்துக் கொடுத்தால்

(வாதம் செய்தபிறகு சின்னணஞ்சவரைக் காணுதல்)

அக்கரைக் குண்டானால் செட்டிபைக் காறைக்குள்ளே
பக்கம் பாராமல் துனை வக்கணம் பறைந்தாய்

பாத்திருப்பே னுந்தன் கூத்துப்பாவினைக ளெல்லாம்
கூத்துப்பார்த்து [23]பஞ்சாத்துக்கண் பூத்துப்போய் வந்தாக்கால்

கொஞ்சமாகிலு முறங்கு [24]மஞ்சிக் கரையிலே
மஞ்சிக்கரையில் வருவே னெஞ்சைக் கலக்கவே
வாதுசொல்லி மறத்தலைவன் வந்தாரணஞ்சவர் முன்பதிலே.

பட்சம்– நேசம், அன்பு. **நிச்செயம்** –நிச்சயம். உறுதி. **வில்லும்** –விற்றுக்கொள்ளும் **தன்னை** –மாதா. **பெட்டிமகள்** –விபசாரி மகள். **கத்தாழை** –கற்றாழை. ஒருசெடி. **வண்டக்காரி** –குறும்புக்காரி.

வல்லயம் – ஒரு வகை ஈட்டி. **புழுங்கல்** –புழுங்கல் அரிசி. **கொழியல்** –சத்தற்றது. **கப்பி** –புடைத்தல், சலித்தலில் எஞ்சிநிற்பது. **அறாமல்** –பிரிக்காமல். **கொத்து** – உணவு. **தேட்டம்** –சேகரிக்கப்பட்ட பொருள். **ஊட்டு** –உணவு. **பிரமன்** –நான்முகன். **கழிப்பு** –கழித்தல். **வக்கணம்** –சாமர்த்தியப் பேச்சு. **மஞ்சிக்கரை** –ஓர் இடம்.

பா.வே. 1. சொன்னார் திருமுன்பில் 2. மடவார்கள். 4. போகாதே நீயும் 5. பறையாமல் 6. பெட்டிமயிலே 7. குழிக்குள் 8. மாச்சுதுகாண் 10. நீரும் 12. வாளே 13. கடுகசுடடித்தாக்கால் 14.. பொல்லாத்தான 15. தெய்வநிலை 16. தொட்டபோர்கள் 17. விட்டுக்கொடுத்தாலும் உன்னை ஆட்டங்கொள்ளாட்டால் 18. ஒட்டினவே வெட்டிவிட மாட்டாது நானே 19. பிடித்த பிரமை 21. வல்லயங்கள் உண்டு 23. அஞ்சாது காண் சூத்துப்போல் வந்தால் 24. நெஞ்சுக்கரையிரேதான்

சு.சொ. 3. மிஞ்சபறயாதே 9. கத்தாளை 11. வெட்டவெழி 20. கழித்து கழித்து 22. கழித்து.

Cinnanañci asks the marava leader to take the damsels in his house to the king

"Paved the way he has as he is enamoured of thee,
He has asked me to bring you certainly" said he,
She did retort,
"If he has asked you to bring damsel any,
Take the damsels at your house to him,
And sell them for a price go, go away",
"Oh! **Cinnanañci** only you are to be taken
I won't leave thee"
"Oh! **Tampirāṉ** speak not much meanly like this" said she
"Is it meanness thou deceitful wench" he said
"Don't boast because thou represent the royalty" said she
"If you speak words like this not realizing their import
I shall hack thee with my knife you daughter of a bitch!"
She did reply,
"It would be rather easy for you to cut *kattāḻai*
Than trying your might at a tamarind tree tough and short"
"Ere I cut *kattāḻai* I shall take thee

With my base hands for all to see,
Thou mischievous wench" said he
"If you harass me in hostility such,
People will clamour publicity in *Vettaveli*[1]"
"Too much do you retort repeatedly,
Pin you I shall with my lance said he
"You can as well pound the boiled rice
Left in the mortar yesterday along with *kappi*[2] and *koḻiyal*[3]
Before pouning and winnowing the *kappi*
I shall take thee by your hand and tie you up
And beat you in the open" he threatened
"If thus you can tie up and beat anything,
Where they will pay you wages for such work"
If those who pay wages are folk virtuous,
I shall tell them this mischief wanton"
"If thou turn a ticking lizard such will you become God?
Folk with wealth earned will offer thee food then"
Said the *maṟavā* leader then,
"Our king doth seek you eagerly,
To rejoice in your company playful
If thou appear his desire and make him happy

The *maṟavā* leader meets Ciṉṉanañcar after his arguments with Ciṉṉanañci

Thou will stand to gain if thus interested,
But you speak smartly and argue adamantly
Let me see how far you enact this play"
She did reply
"If your eyes are tired on seeing this play
You may sleep at **mañcikkarai**[4]"
He retorted
"At **mañcikkarai** too shall I disturb thy mind

After thus exchanging words and arguing
The *maṟavā* leader did leave **Ciṉṉanañci**
And arrived the presence of **Ciṉṉanañcār**

1. *Vettaveli* - Open space
2. *Kappi* - The husk that remains after winnowing rice
3. *Koḻiyal* - Chaff
4. **Mañcikkarai** - The name of a place

(தூது சென்ற துயரக்கதை சொல்லுதல்)

விருத்தம்

97. தொழுது [1]பணிந்து மறத்தலைவன் தூது போன துயரமெல்லாம்
எழுதி [2]முசியா தொரு[3]பனை ஓலையில் ஏட்டி லடங்கவு மாட்டாது
முழுதும் உரைக்க வேணுமென்றால் முசியாது ராமர் கதைபோலே
[4]வழுகா தவளை மதிமசக்க மருந்து பலதும் வேணுமென்றார்.

முசியாது -முடியாது. ராமர்கதை -இராமர் கதை அளவில் பெரியது போல் சின்னணஞ்சி கூறிய வர்த்தைகள் அளவிடமுடியாது. வழுகாதவளை -தவறு செய்யாதவளை. மதிமசக்க -அறிவுமயக்க.

பா.வே. 1. வந்து 2. முடியாது 4. வழுவா.

சு.சொ. 3. பனஓலையில்

The *maṟava* leader reports the sad failure of his mission

The *maṟavā* leader did bow in worship before the king
And said" the sad story of my failed mission,
Is so long like the tale of **Rāmar**[1]
Which cannot be narrated in full,
Nor can it be written even in bunches of palm leaves
As she is un relenting and adamant quite,
We have to try some mesmerizing medication
To make her yield"

1. **Rāmar** - Lord **Rāma** an incarnation of **Visnu** a Hindu God

(சின்னணஞ்சியை மயக்க வசிய மருந்து வேண்டும் எனல்)

விருத்தம்

98. வருத்தத் துடனே [1]முரடான வயிர மரத்தைப் பிளந்தாலும்
கருதி னபடி சின்னணஞ்சியுட [2]கசட்டு மனதை உருக்கரிது
துரத்திப் பறைந்த மொழிகளெல்லாம் சொன்னால் எனக்குச் சுணைகேடு
வருத்தி அவளை மதிமசக்க மருந்து பலதும் வேணுமென்றார்.

முரடு –கரடு, பதமின்மை. **வயிர மரம்** –வலிமை மிகுந்த மரம். **கசட்டு** –கசடு, கீழ்மை. **துரத்தி** –பின் தொடர்ந்து. **சுணை** –கரணை.

பா.வே. 1. முகடாக வைர 2. உக்கப்படும் மனதை உருக்காது.

Medication is need to lure Cinnanañci

"Even if one can cleave hardened wood,
It is difficult to melt **Cinnanañci**'s mind
According to our desire,
If I were to narrate what she had spoken
To drive me away it'll he shameful for me
In order to tempt her and torment,
Medications many are needed"

(மறத்தலைவனைச் சின்னணஞ்சான் ஏசுதல்)

99. தூதுசென்ற [1]மறத்தலைவன் [2]றிரியவந்து அணஞ்சவர்முன்
சொகுசுபெற அணஞ்சவனார் சொல்லுவாரா மொருவார்த்தை
வண்டணிசேர் பூங்குழலாள் [3]மங்கையர்சின் னணஞ்சிதன்னை
[4]சென்றுகண்ட தல்லாதே சீக்கிரத்தில் நீயவளைக்
கொண்டுவரக் கண்டிலையே கூடவுந்தன் கையோடே
கையோடே [5]கூட்டிவரக் கண்டிலையோ யென்று சொல்லி
அய்யோடா வுன்திறத்தை யாரோடே சொல்லப்போறேன்

மெய்யோடா நீயுரைத்த [6]விசயமெல்லா மித்தனையோ
[7]பய்யரவுட வாளணியும் பரமனறிவா ரெனவே

(வசிய மருந்து வாங்கச் சின்னணஞ்சவர் மலைநாடு செல்லுதல்)

அறிவுடனே முத்தமிழ்நூ லாராயு மணஞ்சவனார்
சேர்த்தமுகத் தனத்தழகி சின்னணஞ்சி தனைவருத்த
வலுவுடனே யிவ்வூரில் வருத்த மருந்தில்லை யென்ன
வருத்தியவள் [8]மசக்க மருந்ததுதான் வேண்டுதற்கு

[9]கருத்துடைய மறத்தலைவன் கண்ணான சேவகனும்
[10]உருத்துடை சிறுக்கனுட னுச்சாயஞ்சேர் மந்திரியும்
கருத்துடனே நால்பேருங் காஞ்சிபுரம் நாடுவிட்டு
காஞ்சிபுரம் நாடுமிட்டு [11]கரும்புரவி தனிலேறி
ஏத்தபுக ழணஞ்சவனார் [12]இருளனண்ணா வியைத்தேடி
[13]பார்த்தன்பரி நடந்ததுபோல் பரபரெனச் சடுதியிலே

(சோலை, வனம், மலை கடந்து செல்லுதல்)

தேன்சொரியுஞ் சோலைவிட்டு [14]தென்னவர்கள் போகையிலே
பேராறு வாவிகளும் பெருவனமுந் தான்கடந்து
[15]தாரேறுஞ் சோலைவிட்டுத் தட்டவட்டப் பாறைவிட்டு
வட்டநெடும் பாறைவிட்டு மயிலாடுஞ் சோலைவிட்டு
இட்டமுடன் கழுகுமலை யின்பமுடன் பழனிமலை
அட்டகிரி போலுயர்ந்த அருவிமலை குருவிமலை
குருவிமலைச் [16]சருகுமிட்டுக் கொடிபிடித்தான் மலையுமிட்டு
[17]பெருகிய நீரோடும் பொய்கைவனமுங் கடந்து
சோலைவனமுங் கடந்து துலையாத மலையுமிட்டு
வாகுபெற வழகுபெற்ற வடிவ னணஞ்சவனார்
சாலவித மானவித்தை தான்படிக்க வேணுமென்ன

கூடுகொம்பன் மலையும்விட்டு[18] கொடிபடர்ந்தான் மலையுமிட்டு
வந்துசிவ னணஞ்சவனார் மலைவளப்பங் கண்டனராம்
அந்தமலை வளமுரைக்க வம்புவியோர்[19] கேளுமினி

(மலைவளப்பம் கூறல்)

[20]மந்தினங்கள் குதிபாயும் மயிலாடக் குயில்கூவும்
சந்தனங்கள் மாமருது [21]சற்றேமணம் வீசாதோ
விந்தைசெறி வலம்புரிகள் முனிவர்சங்கு முழங்கிடுவார்
கொந்துகொந்தாய்த் [22]தவசியர்கள் கூண்டோமம் வளர்த்திடுவார்
[23]வளமான ஆளிசிங்கம் வரிப்புலி ஓநாய்க்கரடி
உரமான வாவியிலே வொருதுறையில் நீரருந்தும்
அன்னமிருந் தாடல்செய்யு மானைமதம் பொழிந்துநிற்கும்
இன்னஞ்சொல்லத் துலையாது யிந்தமலைப் புதுமைதன்னை
கன்னலுடன் [24]கதலிகளும் கனிவருக்கைப் [25]பழமுதிரும்
புதுமைகண்டு மனமகிழ்ந்து பொன்னணஞ்ச பெருமாளும்
கதின்மையுட னொருவார்த்தை கருத்துடனே சொல்லுவாராம்.

திறம் –சாமர்த்தியம். **விசயம்** –செய்தி. **முத்தமிழ்** –இயல், இசை. நாடகம் என்னும் மூவகைத்த தமிழ். **வருத்தம்** –துன்பம். **மசக்க** –மயக்க. **சேவகன்** –பணியாளன், வீரன். **உருத்து** –அக்கறை. **உச்சாயம்** –உயர்வு. **புரவி** –குதிரை. **இருளன்** –மலையில் வாழுமோர் சாதியான். **பரி** –குதிரை. **பரபரென** –சீக்கிரக்குறிப்பு. **சடுதி** –சீக்கரம். **வாவி** –குளம். **அட்டகிரி** –எட்டுமலைகள். அவை இமயம், மந்தரம், ஏமகூடம், கந்தமாதனம், கைலை, நிடதம், நீலகிரி , விந்தம் என்பன. **துலையாத** –தொலையாத என்பதின் பேச்சுவழக்கு. **வாது** –ஒழுங்கு. **வித்தை** –தந்திரத்தொழில். **மந்தினம்** –குரங்கினம். **மருது** –மருதமரம். **வலம்புரி** –வலம்புரிச்சங்கு. **கொந்து கொந்தாய்** –கூட்டம் கூட்டமாய். **தவசியர்** –தவம் செய்வோர். **கூண்டு** –கூடி. **துலையாது** –தொலையாது. **கன்னல்** –கரும்பு. **கதலி** –வாழை. **வருக்கை** –பலா. **கதின்மை** –திறமை.

பா.வே. 2. தெரியச்சொன்னான் அணஞ்சவர்க்கு 3. வங்கையர் 4. சென்று அங்கே நில்லாது. 5. பிடித்துவர 6. வியனமெல்லாம் 7. பையுடவாள் வெளியுமா 8. மதிமசக்க 10. உருத்துடைய செறுக்கனுடன் உகஞ்சையந்த 11. கடும்புரவி 13. பாஞ்சுபரி நடந்துவர பரமானவர் 14. சிறுபதிமா பேராறு விட்டு 15. காரேறுஞ் 16. *சாரல்விட்டுக்கொடி படந்த* 17. பெரிய நீரோடுகின்ற

பெரியவனங்கடந்து 18. கொடி பிடித்தான் 20. மந்திரங்கள் போய்பாயும் 21. சத்தமுடன்வீச 22. தவத்தியர்கள் கூந்தோந்தம் செய்திடுவார் 25. பலாமரமும்.

க.சொ. 1. மறத்தவைன் 3. மங்கயர் 9. களுத்துடய 10. உருத்துடய 12. இருழன்ணனாவி 19. கேழுமினி 23. வழமான ஆழிசிங்கம் 24. கதலிகமும்.

Cinnanañcan scolds the *maravā* leader

As the *maravā* leader who acted as a messenger,
Did return and report to **Cinnanañci** thus
Anañacavan did remark,
"Thou did only go and meet her,
But could not bring that evil wench,
With you quickly,
Lo! Whom shall I tell thy negotiating skill?
Is all that you have spoken true?
Only the God who wears the snake knows"
After commenting thus **Anañacavan**
Who is proficient in Tamil three fold,

Cinnanañcavar proceeds to Malainātu to buy medication

Realizing that there is no effective medicine at his place
To tempt and torment **Cinnanañci**
The damsel of beautiful breasts
And deciding to procure luring potion such
Did leave **Kāñcipuram** along with the *maravā* leader,
And an attendant and a youth as well.
Thus did all four of them in right earnest
Leave **Kāñcipuram** on dark horse back,
Riding fast like legendary horses of the Sun God,
In search of **Irulan** the mentor.

They pass groves, forests and mountains

The southerners did pass the grove where honey did shower,
Big rivers ponds and jungles vast did they pass.
Leaving the groves and rocks round and flat,
Passed they thus **Kaḷukumalai**[1] but willingly
And **Paḻanimalai**[2] with pleasure they crossed.
Aruvimalai rising to the height of **Attakiri**[3]
They passed and **Kuruvimalai**[4] slope as well,
Kotipiṭittāṉmalai[5] too they did pass
And crossed flooding streams and jungles
Thus passing by jungles and mountains,
The handsome and properly shaped **Anañcavaṉār**
Inclined to learn skills of all kind
Did leave **Kompaṉmalai**[6] and **Kotipatarntāṉmalai**
And did witness the lush mountainous terrain
Do listen oh! Worldly folk to the richness of mountains now.

The lush mountains described

Monkeys leap and peacocks dance
The cuckoos sing as sandal and ***marutu***[7] trees
Spread their fragrance some,
The sages there sound their conchs right whorled,
In groups the saints assemble and feed the fire sacred,
At the pond on one side there at a *tuṟai*,
Swans are found a dancing while elephants too stand,
Oozing musth in showers quite,
Indescribable are the novelties of the mountain
Where sugarcane sweet, bananas and jack fruits drop
Seeing all there things strange
Poṉṉaṇañcaperumāḷ did remark but rightly

1 – 6. The name of the mountain
7. *Marutu* - A hard wood tree

(மலையேறிச் செல்ல அஞ்சுதலும் துணிதலும்)

100. சொல்லுவார் பொன்னணஞ்ச பெருமாளும்
சூரன் மறத்தலை வீர னவனோடே
கல்லுங் குமடும் வனமுங் கடந்து
காஞ்சி புரமிட்டு வந்தோ மித்தூரம்

வந்தோமே யிந்த மலைக்குள்ளே நாமள்
[1]மாயப் பிரமைநான் கொண்டதினாலே
இந்த மலைக்குள் தடந்தெரி யாது
இனிமேல் நமக்குப் [2]பயங்கார முண்டு
பஞ்சமா பாதகரே யிந்தப் பாதை
பயமா யிருக்குதினிப் போத வேண்டாம்

(மருந்து வாங்காது திரும்புவது இல்லை என்று கூறி மந்திரன் இருப்பிடம் தேடல்)

பூத்தான வார்த்தை யணங்சவர் சொல்ல
[3]புத்தி மறத்தலைவ னேது சொல்வாள்
கூத்துக் கோலஞ் சமைத்து வந்தாக்கால்
கொட்டுக்கு [4]நாணிப் பயப்பட லாமோ

வார தெல்லாம் வரட்டும் தம்பிரானே
மருந்து வாங்காதே திரும்புவது மில்லை
சிந்தை கலங்கி [5]சடைக்கவும் வேணாம்
[6]ஏறி யல்லோ மலையேறி வந்தோம்

ஏறாத உச்சமலை யெல்லா மேறி
எங்கெங்கு முள்ள குமடுங் கடந்து

வாறாரே பொன்னணஞ்ச பெருமாள்
　　மந்திர வேல னிருப்பிடந் தேடி

தேடிச் சிவன ணஞ்சபெரு மாளும்
　　சீக்கிரத்தில் கூடு கொம்பன் மலைக்குள்
வாடிச் சடைத்து வருகிற நேரம்
　　மலையிலே வாழுங் குறவர்கள் கண்டார்.

குமடு –மலையுச்சி. **மாயப்பிரமை** –அறியாமை, மயக்கம். **தடம்** –வழி. **பயங்காரம்** –பயங்கரம், அச்சமூட்டுபவை. **பஞ்சமாபாதகர்** –பொய், கொலை, சூது, காமம், களவு என்ற ஐந்தையும் செய்பவர். **பூத்தான** –அருமையான. **புத்தி** –அறிவு. **சிந்தை** –மனம். **சடைக்க** –வருந்த **மந்திரவேலனிருப்பிடம்** –மந்திரவாதி வசிக்கும் இடம்.

பா.வே. 1. மாயப்பராமணன் 2. பயங்களுமுண்டு 3. புத்தமறத்தலைவன் ஏதுமே 4. நாமள் 5. சடையவும் 6. தேறிமலை எல்லாமே.

They fear the mountain initially and then dare to climb it

He did tell the *maravā* leader brave
We have come this far leaning **Kāñcipuram**
After passing and crossing mountains and forests
Reached have we this mountain rather illusorily,
We cannot find our path here in this mountain,
Danger awaits us further
Oh! Sinners five fold, this path is fearsome
Let us not go further"
As **Anañcavar** did counsel thus,
The wise *maravā* leader did observe,
"When one has did donned the costumes,
For playing a role on the stage,
Should he then shy away from the sound of drums,
And back out?

They decide to climb the mountain and find the place of *Mantiram*

Oh! **Tampiraṉ**, Come what may
We should not return without the medication
Be not confused and agitated,
Have we not climbed mountains many
Before arriving at this mountain?"
They did climb tall mountains unclimbed till then
Passed they the rocks found everywhere
Thud did **Poṉṉanañcaperumāl** trek,
Searching for the place of the magician.
As thus **Ciṉṉaṉañcāṉ** walked fast towards **Kompaṉmalai**,
In sheer fatigue and anguish,
The *Kuṟavars* dwelling in the mountains,
Did see the king

(மலைக்குறவரைக் காணுதலும் குறவர் கூறும் மொழிகளும்)

101. கண்ட போது[1]மனங் கொண்டாடிக் கொண்டார்
காரியஞ் [2]சீராக வாச்சு தென்றேதான்
[3]தண்டமிழ் சேரு மணஞ்சவ ராசன்
தடத்தில் குறவ ரிருப்பிடங் கண்டார்

வந்த அணஞ்சவ ராசனைக் கண்டு
மலையிலே வாழுங் குறவர்கள் சொல்வார்
இந்த மலையுங் குமடுங் கடந்து
எங்கிருந் தெங்க ளிடத்திலே வந்தீர்

பட்டாப் பகலே [4]வழிபோக லாமோ
பார்த்திருக்க கடுவாய் கொண்டு போமே
துஷ்ட மிருகங்கள் விட்டு விட்டதோ
[5]சூட்சமாய் வாய்கெட்ட மந்திர முண்டோ

அய்யய்யோ நீங்க [6]ளரிதாய்ப் பிழைத்தீர்
ஆரு மறியா வனத்திலே வந்தீர்
பொய்கையு [7]மாத்தங் கரையுங் கடந்து
பிழைத்தது நீங்க ளருமை யல்லவோ

சந்தோச மாக யுந்தக் [8]குறவர்கள்
சமத்தன்மா ருங்களைப் போலில்லை யென்ன
இருத்தி உபசார வார்த்தையுஞ் சொல்லி
இளைப்பாறத் தேனுங் கனியுங் கொடுத்தார்
கருத்தின் படிவந்த செய்திக ளெல்லாம்
காட்டிலே [9]வாமுங் குறவர்கள் கேட்டார்.

(சின்னணஞ்சவர் குறவரிடம் செய்தியைக் கூறல்)

கேட்ட பொழுதே யணஞ்சவ ராசன்
கெம்பீர மாக மனசு மகிழ்ந்து
வாட்ட மினக்கொன்று வேறில்லை யிப்போ
வம்பு சொன்னாளொரு கொம்பனை யாளும்

வம்பு சொன்னவளை [10]கற்ப ழிக்கவே
வாதுகூறி யெட்டு நாளுண்டு மய்யா
செம்பான் முடியுஞ் செங்கோலு மிருக்க
[11]தேவரீ ருங்களைத் தேடிநான் வந்தேன்.

தடத்தில் – வழியில். **பட்டாப்பகல்** –பட்டப் பகல், மத்தியானம். **கடுவாய்** – கழுதைப்புலி? **துஷ்டமிருகம்** –துட்டமிருகம், காட்டுமிருகம், தீயமிருகம். **சூட்சமாய்** – நுட்பமாய். **ஆத்தங்கரை** –ஆற்றங்கரை என்பதின் பேச்சு வழக்கு. **சமத்தன்** –வல்லவன். **இருத்தி** –நிறுத்தி. **இளைப்பாற** –களைப்புதீர. **வம்பு** –சண்டை. வீம்பு. **வாது** – சண்டை, தருக்கம்.

பா.வே. 1. மண்டபங் கண்டாடி 2. சீராக வாய்த்தது என்ன 5. துச்சமாய் 6. அருதாய்ப் பிழைத்தீர் 7. ஆறும் 8. குறவர்கேட்க 10 பம்பலிக்கவே 11. தேவரே.

க.சொ. 3. தண்டமிள் 4. வளி 6. பிளைத்தீர் 9. வாளும்.

The *Kuṟavar's* habitation in the mountain

On seeing the *Kuṟavar* and habitation theirs,
Aṇañcavāṉār gladdened at heart,
Felt that his mission had been accomplished.
The *Kuṟavar's* remarks to **Ciṉṉaṇañcār**
The *kuṟavar* of that mountainous terrain,
Did tell **Aṇañcavarācaṉ** who had arrived there,
"Where have you come from to our place here
Passing mountains and rocks so many?
Even during broad daylight this is a dangerous path,
Where hyenas will carry you away for all to see,
Is there incantation any to prevent mishap such?
Lo! Rarely have you escaped so far
And arrived at this forest unknown by any
It is indeed a miracle that you have survived
After crossing rivers and tanks thus"

The hospitality of the *Kuṟavar*

The *Kuṟavar* then did happily remark,
"You are really clever ones unlike those we have seen,"
Thus saying they did speak words kind and hospitable
And offered honey and fruits as well
Then they did listen to the king and his men
The *Kuṟavar* of the forest thus did enquire
The purpose and intent of the king's arrival there.

Ciṉṉaṇañcār informs the *Kuṟavar* of his mission

Feeling happy at their kind enquiry;
Aṇañcavarācaṉ quite elated and majestic

Did reply
"I have nothing to grieve over now,
A quarrelsome wench has offended me,
It is eight days since I vowed to molest her"
Though with the authority of my crown and sceptre,
I can but molest her easily.
I have gone over here to seek your help"

(சின்னணஞ்சவர் குறவர்க்குச் சிறப்பு செய்தல்)

102. வந்தே னென்று [1]மனத்தங்கடஞ் சொல்லி
மன்மதன்பொன் னணஞ்சபெரு மாளும்
பந்துபோலத் தங்க முடியுங் கொடுத்து
பட்டுச் சேலை பருவட்டமும் வைத்தார்
கட்டோடே கப்பரைப் புகையிலை வைத்து
கள்ளரக்குக் குத்தி [2]முன்பிலே வைத்தார்
இஷ்டத்துடன் கோழி முட்டையதும் [3]வைத்து
எய்யுங்கணையு மொருவில்லும் வைத்துக் கண்டார்.

(குறவர்கள் சின்னணஞ்சவரை இருளன் இடத்தில் அழைத்துப்போதல்)

இத்தூரம் பத்தாத காரியத்துக் காக
எங்கிருந் தெங்க ளிடத்திலே வந்தீர்
ஆகட்டும் நீங்கள் வந்ததுக் காக
[4]ஆயா னிருளப்ப னண்ணாவி முன்பில்
[5]போகட்டு நாங்கள் கூடவே நீங்கள்
பொன்னணஞ்ச பெருமான் [6]வாரு மென்ன
வாவென் றணஞ்சவ ராசனைக் கூட்டி
மலையிலக் குறவர்களும் வேடன் மாரும்
[7]ஏகமாய் [8]கைவாளு மேந்தித் தரித்து
இருளப்ப னாயா னிடத்திலே வந்தார்

[9]அருள்பதம் பெற்ற யிருளப்ப னாயான்
அண்ணாவி தன்னுட மந்திரத்தி னாலே
பொருப்பிலே வாழும் புலிகடு வாயும்
பேய்பிசாசி வந்து காத்துக் கிடக்கும்

(சின்னணஞ்சான் இருளப்பனாயானுடைய குடிலை அடைதல்)

[10]பொங்கலுக் கான விறகு சுமக்கும்
புலிகடுவாய் வந்து காத்துக் கிடக்கும்
[11]தெள்ளு புகழுயி ளிருளப்ப னாயான்
செவிக்கு மந்திர வித்தை யினாலே
கொள்ளிவாய்ப் பேய்கள் [12]பந்தம் பிடிக்கும்
[13]கூளி காளிவந் தூழியஞ் செய்யும்
காத்ததைப் போலப் பறக்கத் [14]தொழிலும்
[15]கயித்துக்கு மேலே நடக்கத் தொழிலும்
மேகத்தி லாகா சத்திலிவ னோட
வித்தையுஞ் சித்துத் தொழிலுமே வுண்டு.

(இருளப்பனாயனுடைய மந்திரத்திறமையைக் கூறல்)

[16]தந்திர நாவடக்க கண்ம சக்கும்
[17]சரீர காவலு மெதிரேத் துமுண்டு
[18]மந்திர மும்பல மூலியுங் கற்று
[19]மலக்குள்ளே நல்ல குடிலுமே கட்டி
இந்திரமா ஜால வித்தையுங் கற்று
இருந்தார் மலைக்கு ளிருளப்ப னாயான்
அப்படி மந்திர வேல னிருக்க
அணஞ்சவ ராசனு மலைவேடன் மாரும்
எப்படியுங் காரியங் காணவேணு மென்று
இருளப்ப னாயா னிடத்திலே வந்தார்

(சின்னணைஞ்சான் இருளப்பனாயானுக்குச் சிறப்புச் செய்து தொழுதல்)

வந்து இருளப்ப னாயான் தன்முன்னே
வாழை யிலையில் பணமுஞ் சொரிந்தார்
சொரிந்தவுடன் கருங்கச்சை யுருமால்
சதங்கை யிட்டவரைச் சல்லடம் வைத்தார்
இத்தரையும் வைத்தடி யிறைய தாக
இருளப்ப னண்ணாவி தன்னைத் தொழுதார்.

மனத்தடம் –மனச்சங்கடம். **மன்மதன்** –காமன். **பந்துதோல்** –உருண்டையான. **தங்கமுடி** –தங்கத்தாலானகிரீடம். **பருவட்டம்** –பரிவட்டம், சீலை. **கப்பரை** –கிடாரம், பெரிய பானை. **கணை** –அம்பு. ஜெபிக்கும் , செபிக்கும் , செவிக்கும். **கொள்ளி வாய்ப்பேய்** – நெருப்புமிழும் வாயையுடைய பேய். **பந்தம்** –தீப்பந்தம். **கூளி** –குள்ளப்பூதம். **வித்தை** –தந்திரத்தொழில். **மூலி** – மூலிகை, மருத்துவத்தொழில். **குடில்** –குடிசை. **சதங்கை** –சலங்கை, காலணி. **சல்லடம்** –குறுங்காற்சட்டை. **இத்தரை** –இத்தனை என்பதன் மலையாள வழக்கு.

பா.வே. 1. மனச்சங்கடம் 2. கோலம் 3. நூறு 4. ஆளான இருளப்பன் 5. போகவிட்டு 6. வாறோம் 7. ஏறுவாய் 9. அனுபாதமொத்த 10. பொங்கலுக்காக 11. கள்ளம் 12. முன்பந்தம் 13. கூளிவாளி 14. துணியும் 15. கழுகு பிராந்து போல் ஆயத் தொழிலோன் 16. தந்திரமாகவே இருளப்பனாயான் 17. சதிரக் காவலும் ஏத்துக் கொண்டு 18. மந்திரமோக மோடியும் சட்டி 19. மடிக்குள்ளே நல்ல முடிதானுங் கட்டி.

சு.சொ. 4. ஆயானிருழப்பன் 8. கைவாழும் 13. கூழி.

[illegible]nañcavar offers gifts to the *Kuravar*

"Thus have I arrived here"
Said **Ponnanañcaperumāl** the handsome **Manmatan**
And offered a gold ball like crown,
Silk sarees and *Parivaṭṭam* too he gave,
Tobacco in bundles he did place in a *Kapparai*[1]
Offered he *Kallarakku*[2] before them,
Eggs too he gave them.
Along with a bow and arrows as well

The *Kuravar* lead Cinnanañcar to the place of Irulan

The *Kuravar* said,
"To fulfil thy purpose not achieved so far,
You have come to us from far away,
As such trouble you have taken to be here
We will take you to our *Annāvi Irulan*,
Oh! **Ponnanañcaperumāl** follow us,
We will also accompany you"
Thus did the *Kuravar* and hunters many,
Sporting swords in plenty on person theirs
Arrive at the place of **Irulan**.

The *Kuravar* describe the magical skill of Irulan

"By the magical powers of **Irulan** our master,
Who has the grace of God as well,
Tigers and hyenas that in jungles dwell,
And ghosts and devils will wait for his behest.
They will carry fire wood for him to cook,
Tigers and hyenas will wait thus
On account of the incantations uttered by **Irulan**
Who is a mentor famous,
The fire emitting devils will hold torches for him,
Kūli[3] and **Kāli** the deities formidable,
Will render service to him
He knows the art of flying like a crow,
The trick of walking on tight rope,
Knows he how to run in the sky through the clouds,
He can control wagging tongues and cause illusions as well,
Such tricks and miracles he has in plenty"

Cinnanañcan reaches the hut of Irulan

Irulan who had thus mastered many a trick
In the practice of his black magic,

Did construct a cottage for himself in the mountain
There did he reside learning and practising *Intiracālam*
When **Anañcavarācan** along with the hunters of the hills
Arrived there to meet **Irulan**
In order to fulfill their desired task

Cinnanañcan offers gifts and obeisance to Irulan

They did thus arrive before **Irulan** the mentor,
And placing a banana leaf broad it his feet,
Showered money therein,
Then they offered *kaccai* and *urumāl* too
Placing such gifts at his feet,
They paid obeisance to **Irulan** but properly

1. *Kapparai* - A big vessel
2. *Kallarakku* - Toddy or intoxicating liquor
3. **Kūli** - Fierce Goddesses

(சின்னணைஞ்சவர் தொழுதுநின்று செய்தியை உரைத்தல்)

103. தொழுதுநின்று [1]படிப்படியே சொல்லுவாராந் துயரமெல்லாம்
எழுதிவைத்த பழங்கதைபோ [2]லிருளப்பனண்ணா விக்குரைப்பார்
கேளுமெந்த னாயானே கீர்த்தியாய்நான் சொன்ன தெல்லாம்
வாழும்வட நாடதிலே [3]வண்ணாத்தி யென்றொருபெண்

[4]பெண்களிலும் வடிவழகி பூவுலகில் கண்டதில்லை
கண்டவுடன் [5]மதிமயங்கிக் காதல்கொண்டே னவள்மேலே
எண்ணமெல்லா மவள்மேலே யிச்சையுற்று மையலானேன்

மையலான [6]யேதுகொண்டு மறத்தலைவ னினக்காக
ஒயிலாகத் தூதுசென்று வுரைத்தமொழி [7]ரெம்பவுண்டு

[8]தூதுசென்ற தோழனைத்தான் சுளிக்கயவள் வார்த்தை சொன்னாள்
சொன்னாளே [9]வசையதுதான் சுணைகேடு உமக்கல்லவோ

(இருளப்பனாயான் சின்னணஞ்சானிடம் வசிய மருந்து கொடுத்தல்)

வாதுசொல்லி நானுமிந்த மலைக்குளும்மைத் தேடிவந்தேன்
தேடிவந்தே னென்றுசொல்லிச் சிவனணஞ்ச பெருமான்சொல்ல
கோடிமுகம் வாடாதே கொத்தவனே யென்றுரைத்தான்
நாடுமெய்க்க வுந்துனக்கு நல்மருந்து நான்றருவேன்
நால்திசையுங் கீர்த்திபெற நல்லசிவ னணஞ்சவர்க்கு
கூத்துமருத் தானதெல்லாங் கொடுத்தனுப்ப வேணுமென்ன
காத்துப்போலப் பறத்தியையும் கதவுதட்டி யெழுப்பியையும்
வெறுத்தவரை [10]உறவாக்கும் மேகவர்ணப் பச்சிலையும்
[11]மறுத்துமொரு பச்சிலையு மாதருற வாடியையும்
வட்டாரப் பாம்பாட்டி வருத்திவைக்கும் [12]மூலியையும்
[13]தேடிஸ்திரீ யெடுத்துவருஞ் சிவந்தநிழல் வாடியையும்
கூடிப்பிரி யாதநல்ல கோங்குமரத் [14]தின்பிசினும்
நல்லபுரு ஷனைமறந்து நடுநடுக்க மெடுத்துவரும்
[15]கைப்பிரளி மூலிகையுங் கையறுத்தான் பச்சிலையும்
காட்டிலுள்ள மூலிகையுங் காளையின்கோ ரோசனையும்
வாட்டியெல்லாம் பொடியாக்கிக் [16]கொண்டிருள னாயானும்
[17]ஆத்தாமல் அடலெடுத்து யடந்தேறி [18]வாற்பேரை
மாத்திவைக்க வொருமருந்தும் வருத்திவைக்க வொருமருந்தும்
[19]திங்கள்முடி யணஞ்சவனார் திருக்கையிலே தான்கொடுத்தார்
வாங்கியந்த மருந்தையெல்லா மனமகிழ்ந்து யேதுசொல்வார்.

கீர்த்தியாய் –புகழாய். **சொன்னதெல்லாம்** –சொல்வதெல்லாம். **மதிமயங்கி** –அறிவு மயங்கி. **இச்சை** –ஆசை, விருப்பம். **மையல்** –காதல், மயக்கம். **இனக்காக** –எனக்காக. **முகம் சுளிக்க** –வருத்தத்தால் முகம் வேறுபட. **வசை** –இகழ்ச்சிச்சொல். **சுணைக்கேடு** –வெட்கக் கேடு. **வாது** –தருக்கம். **கோடி** –முகம் சுளித்து. **கொத்தவன்** –கொற்றவன் என்பதின் பேச்சு வழக்கு. **நாடுமெய்க்க** –நாடு புகழ. **நால்திசை** –கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு. **கூத்து** –கூற்று. **காத்து** –காற்று. **காத்து போல பறத்தி** – ஒரு பச்சிலை. **மேகவர்ணபச்சிலை** –மேகவண்ணத்தில் ஒரு பச்சிலை. **மாதர் உறவாடி** – ஒரு பச்சிலை. **ஸ்திரி** – பெண். **கோங்கு** – ஒரு மரம். **பிசினி** –பசை. **காளை** –இளவெருது. **கோரோசனை** –ஒரு மருந்து. **பொடி** –சூரணம். பஸ்பம். **அடல்** –வலிமை, பகை.

பா.வே. 1. வளிவளியிலே 3. வண்ணான்மகள் 5. மதிமசங்கி நான் 6. அதை கண்டு மறத்தலைவன் தூதுசொன்னான் 7. மெத்தவுண்டு 8. தூது சொன்ன வார்த்தைகளுக்கு 9. கிளிமொழியும் 10. ஒரு பக்கம் 11. வறுத்துவொரு 12. ஊதியையும் 13. தொட்டார வாடியையும் தூதளம்பூ பச்சிலையும் தேடிவளி தெடுத்துவரும் சிவந்தருள வாடியையும் 14. துகிலும் 15. கற்பிலிழ பச்சிலையும் 17. ஆடாமல் 18. யவர்கள் 19. சிங்கமுடி.

சு.சொ. 2 லிருழப்ப 4. பெண்கழிலும் 16. கொண்டிருழனாயானும்.

Ciṉṉaṉañcaṉ's plaintive prayer to Irulaṉ

Standing before **Iruḷaṉ** in obeisance worshipful
The king did represent his grievance step by step
As an old tale written by him
"Do listen to me keenly Oh! My *Āyāṉ,*
In the northern country a washerwoman is there,
A beautiful damsel the like of whom I have not seen on earth,
On seeing her was I enamoured,
Quite confused have I become in my mind
With all my thoughts converged on her in desire acute,
I did send the *maṟavā* leader as emissary mine
He played his role gracefully quite,
But she turned him down with words harsh

And dent him back in shameful defeat
Is this not an insult to thee as well?"

Irulappan the Āyān gives the medicines to Cinnanañcān

"Swearing that I shall however bring her to me,
Have I gone over to the mountain here,
To seek thy help"
As **Civanañcaperumāl** did thus plead his plight,
The **Irulan** replied,
"Oh! King grieve not with a long face such,
An effective medication I shall give thee
For the entire country to admire".
In order that **Anañcavan** becomes renowned in all directions four,
He did plan to give all the medications spoken of by people,
And mixed and powdered herbs many,
The windy *paratti*[1] and *katavu tatti eluppi*[2] with rousing properties,
The *Mēkavarnappaccilai*[3] which can unite estranged ones
Another herb that will ensure union with women,
The *paccilai* which snake charmers use to harass the reptiles,
Yet another crimson herb which grows in the shade,
And sought after by women,
The gum of *kōṅku*[4] tree which binds but inseparably,
The *Kaippirali*[5] herb which makes a woman,
Forget her husband and become timid in trepidation
The *Kaiyaruttān paccilai*[6] as well
Many other wild herbs and *Kōrōcanai*[7] to boot
All these he did powder and blend
Thus did he prepare a potion
To torment and mesmerize,
Another medication as an antidote he prepared as well
And gave them both to **Anañcavanār** the of moon like crown,

Who did gladly receive the medicines such
And observed,

1. *Paratti* 2. *katavu tatti eluppi* - Medicinal herbs
3. *Mekavarnappaccilai* - The name of a herb
4. *Kōṅku* -A hard wood tree
5 -6. The name of medicinal herb
7. *Kōrōcanai* - Bezoar (An antidote taken from the bodies of cows)

(சின்னணஞ்சவர் மருந்தைச் சோதனை செய்தல்)

104. ஆயானே யிம்மருந்தை யன்பினுடன் தந்தீரே
காயாம்பூ ஒளியாளோர் கன்னிநல்லாள் தந்தனக்கு

தந்தீரே மருந்தினுட தன்பலிப்புச் சோதனைதான்
எந்தவித மாகவென்று யெனக்கறிய வேண்டாமோ

புலசாதி வேடன்தந்த பொய்மருந்தோ மெய்மருந்தோ
அறிவதற்குச் சோதனைதா னணஞ்சவனார் கண்காண

காணாத தடவரையில் [1]காராக்கள் மேய்கையிலே[2]
ஈனாத கிடாரியின்மே லிலக்காக யெறிந்துவிட்டார்

[3]பரியநின்ற [4]பசுக்கள்மேலே பச்சிலையை விட்டெறிந்தார்
மருந்துபட்ட பசுவின்கன்று மறுகுதல்லோ யிவர்மேலே

தன்னினத்தைத் தேடாமல் [5]தளிர்த்தபுல்லு [6]மருந்தாமல்
பொன்னணஞ்ச பெருமாளிட பிறகாலே துடருதென்ன

பிறகே வருமாவினத்தின் புதுமைகண்டு அணஞ்சவனார்
[7]மாத்திவைக்க வேணுமென்று மறுமருந்தைத் [8]தூவிவிட்டார்

மறுமருந்தின் [9]தூளுடைய வாடையது பட்டபோது
முறுக்கிவா லெடுத்தோடி [10]மூண்டிவரைப் பாராமல்

திடமான காவிடத்தே [11]சென்றுநிற்கு மினத்தோடே
இடமான காவிடத்தே யினத்தோடே சேர்ந்ததுவே.

மாடுபட்ட துயரங்கண்டு மனமகிழ்ந்து அணஞ்சவனார்
பாடுபட்ட துயரமெல்லாம் பழுதாகப் போகவில்லை
நாடுதனி லிப்படித்தான் நாமள்கண்ட தில்லையென்ன

[12]பலிப்புநன்றாய் வாச்சுதென்று [13]பாராளு மணஞ்சவனார்
[14]சலிப்பினிமேல் நமக்கில்லைகாண் தங்கடங்கள் தீர்ந்துதென்றார்.

(சின்னணஞ்சவர் நாடு திரும்புதல்)

கூடுகொம்பன் மலையும் விட்டுக் குமடுபல வனங்கடந்து
நாடுதென் காசி புரம் நகர்தனிலே வந்திருந்தார்
வந்திருக்கும் வேளையிலே வாய்த்தநல்ல அணஞ்சவனார்
மருந்துவச மானபோது [15]வாதழிப்பே னென்றுசொல்லி

(சிறுக்கனிடம் வசியமருந்து கொடுத்துச் சின்னணஞ்சியை மயக்கச் செய்தல்)

சிறுக்கன்றன்னை [16]வரவழைத்து சிமிழில்மருந் தைக்கொடுத்து
கருமமது காணவென்று [17]கைமயக்கஞ் செய்துவிட்டார்
ஒருமருந்தை வெத்திலையி லூட்டியவர் கைக்கொடுத்து
வெத்திலையில் மருந்தூட்டி [18]வீதியிலே கொண்டுசென்றார்
[19]வீதியிலே செல்லும்போது விரைவானாள் சின்னணஞ்சி

வண்ணாத்தி யானவளுக்கு மருந்தான பெண்பிள்ளை
கண்ணான சிறுக்கனவன் காத்திருந்து கண்டுகொண்டான்.

பலிப்பு –பலித்தல், பயன்தருதல். **புலசாதி** – ஓர் இனத்தவர். **காராக்கள்** –பசுமாட்டின் ஒரு சாதி. **ஈனாக்கிடாரி** –குட்டி போடாத பசு. **பரிய நின்ற** –தூர நின்ற. **மறுகுதல்** – சுழலல், மனங்குழம்புதல். **துடர்** –தொடர் என்பதின் பேச்சு வழக்கு. **மா** –விலங்கின் பொது. **மாத்தி** –மாற்றி. **தூள்** –பொடி. **கா**–சோலை. **பழுதாகப் போகவில்லை** –

வீணாகப் போகவில்லை. **சலிப்பு** –இளைப்பு. **தங்கடங்கள்** –சங்கடங்கள். **குமடு** – குன்று,மலையுச்சி. **சிமிள்** –சிமிழ். **கருமம்** –காரியம். **வெத்திலை** –வெற்றிலை என்பதின் பேச்சு வழக்கு.

பா.வே. 1. கனகிடாரி 3. பெரியனின்ற 4. கிடாரியின் 6. மேயாமல் 7. மறக்க 8.தூத்திவிட்டார் 10மீண்டுவாப் 11. திரண்டுநிற்கும் 12. பலிப்பது தான் 13. வாறாரே 14. சலிப்பில்லைகாண் 15. கீக்கிரம் மருந்தளிப்பேன் 17. கைமருந்து 18. தெருவதிலே 19. மற்றுமொரு தெருவோடே

சு.சொ. 2. மேய்கயிலே 5. தழிர்த்த 9. தூமுடைய 13. பாராமு 16. வரவளைத்து.

Ci<u>nn</u>anañcavar tests the medicines

"Oh! **Āyā<u>n</u>** this medicine you have given kindly,
To bring round the damsel virgin and flowery,
But should I not know its efficacy
By testing it properly?
To find out whether the *Vēta<u>n</u>s* medicine is genuine or false,
And for **A<u>n</u>añcava<u>n</u>** to see it for himself
In the mountainous terrain wide there,
Where *Kārāmpacu*[1] cows were grazing,
He did throw the medication on a cow,
Which had not calved
And on cows standing far away he did throw herbs ordinary
The young *Kiṭāri*[2] on which he threw the medicine,
In fond excitement towards **A<u>n</u>añcavarāca<u>n</u>**
Not seeking the company of its own herd,
And not grazing the tender grass grown there,
Thus the cow did follow **Po<u>nn</u>a<u>n</u>añcaperumāḷ**
On seeing the novel sight such,
He did sprinkle the antidote on the cow
Smelling the odour of that powder strong,
The cow raising its tail did turn away from him,
And ran vigorously towards the cows of its milk
On seeing the cows plight **A<u>n</u>añcava<u>n</u>**.
Was happy that his efforts were not in vain
"Such medications have we never seen on earth,

Quite effective they are and we need not worry hence
Our troubles are over"
Thus remarked **Anañcavrācan**.

Cinnanañcan returns home

Leaving **Kūtukompan malai**[3] and passing many rocks and jungles,
He did arrive at **Tenkāci** and stay there
He then sent for a *cirukkan*
And in a bowl he did place the medicine
Packing it in a betel leaf he gave it to the youth
And asked to take it to the streets,
To be used on **Cinnanañci**
As the *Cirukkan* walked with potions such,
After waiting for a while he did notice
Cinnanañci the washerwoman passing that way

1. *Kārāmpacu* - A certain breed of cows dark in colour
2. *Kitāri* - A young uncalved cow or heifer
3. **Kūtukompan malai** - The name of a mountain

(சிறுக்கன் வசியமருந்தைச் சிமிழில் அடைத்தல்)

விருத்தம்

105. கொண்டே குரும்புத் தனத்தாளதான்[1] கொடிசே ரிடையாள் வரும்போது
வெண்டா மரைசேர் [2]முகத்தழகு வெள்ள வெத்திலை [3]யும்மெடுத்து
கொண்டே போக வேணுமென்று [4]கூர்மை யுடனே சிறுக்கனவன்
[5]தின்கும் பாக்கு கொடுப்பதற்குச் சிமிழில் மருந்தை [6]யூட்டுவானாம்.

பா.வே. 1. கொடிபோலிடையாள் 2. விழியார்க்கு 3. தானெடுத்து 4. கொடிபோலிடையாள் தந்தனக்கு 5 தின்னும் 6. தானெடுத்தானே.

Cirukkan packs the medicine in a *cimil*[1]

To give the medicine to the mischievous damsel slim waisted
The *Cirukkan* did take a white betel leaf resembling lotus white,
And to give betel nuts as well to chew
He packed the medicine dexterously in a *cimil*

1. *Cimil* - A small bowl

விருத்தம்

106. ஊட்டியே [1]மருந்து தன்னை உபாயமா யடக்கஞ் செய்து
நீட்டியே கொட்டப் பாக்கை [2]நேர்மையாய்ச் சீவிக் கொண்டு
சாட்டியே சீரைக் குள்ளே சட்டமாய் வைத்துக் கெட்டி
காட்டியே கொடுப்ப தற்குக் கற்புடை யாளைக் கண்டான்.

பா.வே. 1. மருந்தினை ஒய்யாரமா 2. நீர்மையாய்

Packing the medicine discretely in a device clever,
And slicing the betel nuts but properly
He tied the medicine neatly in a saree
And saw the virgin to hand it over to her

(சின்னணைஞ்சியைக் கண்ட சிறுக்கனின் நடிப்பு)

107. கண்டான் மனங்குளிர முகங்காட்டியே [1]சந்திப்பு வேட்டையென்ன
மண்டை[2]தலை விரித்துகோண வாய்க்குள்ளே மூக்கு வடிந்தொழுக
[3]புடவைகொடிச் சீலையுள்ளே பொத்திக்கொண்டான் கட்டுவெத்திலையை
சோத்துக் [4]குறையாலே சுள்ளென்று [5]கண்ணும் விறிபார்த்து
கஞ்சிக் கிறக்கமது காலுநடக்க [6]வொட்டாதபடி
முடவித்தடி யூன்றிஅப்போ முன்பில்சிறுக்கனு மேதுசொல்வான்

[7]அம்மா பெரியவளேநா னஞ்சாறு நாளுண்டு கஞ்சிகண்டு
சும்மா தரவேண்டாம் பழஞ்சோத்துக்கு [8]வெத்திலைநான் தாரேன்

உனக்கேற்ற வெத்திலைதான் ஒன்றிரண்டு தாரேன் தின்றுபாரு
[9]புனக்கோல் வாழிமயிலே மெள்ளபோகலாம் வெற்றிலை போட்டுக்கொள்வாய்

(சிறுக்கன் சின்னணஞ்சிக்கு வசிய மருந்து கலந்த வெற்றிலையைக் கொடுத்தல்)

எதிராக நின்றுகொண்டு யெடுத்தான் மடிக்குள் [10]ளடக்கமதை
எதிரேறி பார்த்ததுதான் உனக்கன்றி வேறுஒரு வர்க்கில்லை
கள்ளனவன் சிறுக்கன் கண்காட்டியே [11]சிங்கியைப் பூட்டிவிட்டான்
மெத்தப் பரமாத்தி வெத்திலை யாகிய சத்துருவை

வேண்டிச் சிரித்துக் கொண்டாள் விதியின்பொருட்டால் மதிமறந்தாள்
தீண்டிப் பிடித்தவனுஞ் சீவியவெற் றிலைபாக்குச் சுருட்டி

வாயில் கொடுக்குமுன்னே மாதுக்குக் கொங்கை மதப்படுமாம்
செய்யு மலைமருந்து சள்ளென்று வேகஞ் சுறுக்கிடவே

வேர்வை முகத்துக்குள்ளே விறுவிறுத் தவளுங் கிறுகிறுத்து
பாதியுடை நெகிழ உடல்பறக்கவே கால்களுந் தள்ளாடி
[12]எனக்கோர் படியாச்சே யென்றுசொல்ல அவனேது சொல்வான்.

பொத்தி –மூடி. **கஞ்சி** –உணவுவகையில் ஒன்று. **முடவி** –தள்ளாடி. **தடி** –ஊன்றுகோல், கம்பு. **அஞ்சாறு** –ஐந்து, ஆறு. **அடக்கம்** –மடியில் அடக்கி வைத்த பொருள். **சிங்கி** –குறத்தி. **பரமாத்தி** –பேதை. **சத்துரு** –பகைவன். **மதி** –அறிவு. **தீண்டி** –தொட்டு. **கொங்கை** –மார்பு. **விறுவிறுத்தல்** – விறுவிறுப்புக்கொள்ளல்.

பா.வே. 1. சந்திப்புடன் நின்ற 2. தனைவிரித்து கோணவாய்க்குள்ளே 3. பிடவைகட்டுஞ் சேலைக்குள்ளே 5. கண்டென்றும் வெறியாச்சு 6. ஒட்டவில்லை 7. அடியாமலே பெரியவளே 8. வெத்திலை விக்கவந்தேன் 9. புகழ்போல் 10. அடக்கமதாய் 11. சரியாய்ப் 12. இறக்கும்.

க.சொ. 4. குறயாலே.

The *Cirukkan* pertends and play acts

Elated was he on seeing her.
Like a hunter on seeing his prey
He started pretending to suffer from hunger and want of food,
With his hair dishelvelled on his skull,
And phlegm from his running nose flowing into his crooked mouth,
He did conceal the drugged betel leaves in the saree,
With his eyes in irritation displaying starvation for want of food,
And with his legs unable to walk in a daze of hunger
The staggering *cirukkan* with a stick to support him.
Did tell **Cinnanañci**,
"Oh! Dame elderly,
It is five or six days since I had *kañci*[1] to drink,
Give me *Palañcoru* for which I shall give thee betel leaves,
I have but the proper betel leaf for you,
Just chew and see how nice it is,
Oh! Damsel graceful as a peahen,
You may chew and go slowly afterwards".

The *Cirukkan* gives the drugged betel leaf to Cinnanañci

Standing before her he did take the betel leaf drugged,
The deceitful youth gave her that betel leaf
Winking his eyes he did offer the high quality leaf
Packed with potion inimical,
Even before she did start to chew the betel leaf and nut
She did come under its fateful influence
Dazed was she and her breasts were swollen
And as she chewed the drugged *pān*[2]
She sweated on her face and did become dizzy
With her garments partly loosened she felt like flying

And she staggered on her feet and did exclaim
"I feel rather strange and uneasy"

1. *kañci* - Gruel
2. *Pā<u>n</u>* - The collective package of betel leaves nuts and other ingredients

(சின்னணஞ்சியின் மயக்கத்துக்குச் சிறுக்கன் வேறு காரணம் கூறல்)

108. பாக்குச் [1]சொருகியதோ பாவக் குணங்கள் பலித்ததுவோ
வாக்கு குழறுதம்மா [2]புலமாட னிருளன் புடித்தானோ
பித்தஞ் சிரசில்கொண்டே பேய்போலே [3]நின்று புலம்புதைய்யோ
கொட்டுகள் [4]கேட்குமுன்னே கொட்டாவி கொள்ளுதே ஆடுதற்கு
அய்யன் பிடித்தாரோ வறுகுல மாட னணுகினானோ
கையை நெரிக்குதென்ன காலுமுடம்பும் [5]விரைக்கு தய்யோ
வாடைமணங் [6]காட்டஉங்கள் வண்ணாத்தி மாரைவரச் சொல்லட்டோ
சண்டை விடியாதே சாம்பிராணி புகைக்கச் சம்மதமோ
பொங்கலிடச் சொல்லட்டோ பூப்படை போட்டு விளையாட
துள்ளுமறி வேணுமோ சொல்லடி யம்மாநீ வாய்திறந்து
திரையை வளைப்பதற்குச் [7]சீலைக்கு மூப்பனுக்காள் விடட்டோ
தாங்கிப் பிடிப்பதற்கு தாயார்க்கு [8]ஆள்சொல்லி விட்டிடட்டோ
வண்ணார்க்கு [9]நல்லதெய்வம் மாமிக்கும் பேய்க்கும் வசையாச்சே
[10]நாய்ப்பறை கொட்டுமுன்னே நடுச்சொல் சென்றுவாயைப் பிளக்குதம்மா
[11]இயமன் பிடித்தானோ யெக்கரைத் தெய்வங்க ளிச்சித்ததோ
[12]குளிர்போலே வாட்டுதென்னமுன் கும்பிட்ட தெய்வக் [13]குறைதானோ
முருகன் பிடித்தானோ மூலியில் பேய்கள் குறையுமுண்டோ
சும்மாயிருக் கொட்டில்லை சூத்திரமாகக் [14]கலைக்குதென்ன
முட்டாங்கு யிட்டிடட்டோ உங்கள் மூப்பிட்ட வண்ணாரைக் கூப்பிடட்டோ
[15]கிட்டக்கிளை யாச்சே கிடவாமலே மெல்ல நடவுமென்ன

(சிறுக்கன் சின்னணஞ்சியை அழைத்துவருதலைச் சின்னணஞ்சவர் காணுதல்)

[16]நடந்தா ளிடைதுவள நல்ல சிறுக்கன் [17]வழிகாட்ட
துடந்தாளே சின்னணஞ்சிவெகு தூரத்தில் வாரதை ராசன்கண்டார்
[18]பல்தீட்டிப் பொட்டுமிட்டார் வாயில்
பாக்கிட்டுக் கொண்டையில் [19]பூவுங்கெட்டி
[20]வாடை புழுகணிந்தார் வாராளோ யில்லை யென்றே பார்த்தார்
பத்தியவள் நடையைப் பார்த்துக் கொண்டார் கவிபாடிக் கொண்டார்
அம்மையழகு கண்டு [21]யயிராணி யென்றே சிரித்தா ரவரும்
கண்டார் [22]மனங்குளிர யென்கவ்வை யொழிந்தது யின்றைக் கென்றார்
தைய [23]லழகுரொம்ப தங்கக் கட்டிலில் வாவென்று கைகாட்ட

(சின்னணஞ்சியை மண்டபத்தில் சேர்த்தல்)

வருவேனோ மண்டபத்தில் மாயத்தினால் களவாண்டவனே
தருவேனோ மாத்துனக்கு சீலைதந்தே யனுப்பு சழக்காரா
நிலைமேலே நிற்பேனோ யென்னை நெஞ்சடிக் காச்சலு
நீர்கொட்டுதோ
கருத்து வுன்மேலே வைத்தேன் கட்டிஒரு முத்தந் தாருமென்றார்
பதறாதே பெண்கொடியே பஞ்சணை மீதில் படுத்திருப்போம்
கொஞ்சுங் [24]கிளிமொழியைக் [25]கூட்டிக்கொண் டனுபோகஞ் செய்ய
வாழ்ந்து யிருப்பேனென்று வந்து மடிபிடித்துக் கொண்டு போனார்.

வாக்கு –சொல். **குழறுதல்** –வாய் உளறுதல். **சிரசு** –தலை. **புலம்புதல்** –அழுதல், பிதற்றுதல். **மாடன்** –ஒரு பேய். **வாடை** –வாசனை. **சாம்பிராணி** –ஒரு வாசனைப் பொருள். **பூப்படை** – மலரர்ச்சனை. **சீலை** –சேலை, துணி. **மூப்பன்** – முதன்மைக்காரன். **வசை** –இகழ்ச்சிச் சொல். **இயமன்** –எமன். **எக்கரைத் தெய்வங்கள்** –இஷ்ட தெய்வங்கள். **முட்டாங்கு** –முட்டாக்கு, தலையில் துணியிடல். **மூப்பிட்ட வண்ணார்** –மூத்த வண்ணார். **கிடவாமலே** –படுக்காமலே என்பதின் தென்மாவட்ட வழக்கு. **துடந்தாளே** –தொடர்ந்தாளே என்பதின் பேச்சு வழக்கு. **பல்தீட்டி** – பல்துலக்கி. **பத்தியவள்** –பற்றியவள். **அயிராணி** –இந்திராணி. **கவ்வை** –துன்பம்,

காரியம். **மாயத்தினால்** –தந்திரத்தால், வஞ்சகத்தால். **சழக்காரன்** –தீயவன். **அனுபோகம்** –இன்பநுகர்ச்சி.

பா.வே. 1. சுருக்கியதோ 2. புலமாடனுவந்து 3. மனது 5. வெறிக்குதய்யோ 6. வஞ்சகப் பூசனை 7. சித்துரு நூற்பானை வரச்சொல்லட்டோ 9. நல்லதையோ 10.. நெய்யோ பறை 11. இசமன் பிடித்தானோ இத்தரை 13. ஆட்டுதிப்போ 14. குலுக்குது 15. கிட்ட இறையாளே கீழே நடவாமல் முன்னே 18. வாய் திர19. பூவுமிட்டார்த் 20. கொண்டை 21. இந்திராணி 25. உந்தன் கொண்டை அழகினைப் பார்பேன்.

சு.சொ. 2. இருழன் 4. கேழ்க்குமுன்னே 8. ஆழ்ச்சொல்லி 12. குழிப்போலே 16. நடந்தாழிடைதுவள 17. வளிகாட்ட 22. மணங்குழிர 23. அலகு 24. கிழிமொழி.

The *Cirukkan* assigns different reasons for the dizziness of Cinnanañci

On seeing **Cinnanañci** dizzy and unsteady,
The *Cirukkan* did remark,
"Has the betel nut got stuck or is it due to evil any?
Thy speech falters, Oh! dame has **Pulamātan Irulan**[1] haunted thee?"
She did reply,
"The head has become crazy and a ghost laments therein,
Before the drums beat I yawn as if in a trance"
"Have you been possessed by **Ayyan**[2] or haunted by **Mātan**[3]?
"My hands are strangled and stiff are my legs and body"
"Shall I summon your washerwomen to treat you
With incense fragrant?
Be not vexed art thou willing to inhale *Cāmpirāṇi*[4]?
Shall I ask folk to prepare *ponkal* and shower thee with flowers?
Do you require a leaping goat? Open thy mouth.
And tell me what you need
Shall I send for the *Mūppan* to bring the curtain?
Shall I send for your mother to hold you in support?
Lo! the deity beneficial to washer folk,
Has thus become a ghost despicable
Has **Yaman** haunted thee?
Have the deities favourite desired to posses you?

Why such shivering as if with cold
Is it because of worship faulty
Has **Murukan̲** held you thus
Or is there any grievance for the ghosts?
Unable to keep quite as the disturbance is mysterious,
Shall I cover thy head with a cloth
Or shall I summon elderly washer folk?
We have come near our place
Please walk slowly without lying down"

Cin̲n̲an̤añcān̲ sees Cin̲n̲an̤añci brought by *Cir̲ukkan̲*

She walked with her waist sagging,
As the *Cir̲ukkan̲* guided and as she did proceed thus,
Cin̲n̲an̤añcan̲ did see from a long distance
Her arrival glory with the *Cir̲ukkan̲*
On seeing her **Cin̲n̲anañcān̲** did adorn himself,
He cleaned his teeth and fixed *pottu* on his forehead
Popped betel nuts in his mouth and with flowers tied his tuft,
Smeared fragrant *pun̲uku*[5] on his person,
Looked he eagerly to ascertain whether she was coming or not
He did see her walk holding the youth
Sang he in delight,
He did laugh a she was beautiful like **Intirān̤i**[6]
Thus pleased in mind he did remark
"My anxiety is over as of this day",
As the beauty of the damsel made him
Direct her to his golden cot

Cin̲n̲an̤añci brought to the royal chamber

"Oh! Thou who did steal me with magic deceitful;
Oh! Evil one, send me away with sarees to wash,

Unable am I to stand steadily,
I feel feverish, do embrace and kiss me she said,
"Be not excited, creeper like damsel,
Le us lie on the soft bed" said he
And led the damsel parrot like in her speech
To cohabit with her,
Thus did he take her along to live in her company

1 - 3. Name of deity supposed to haunt and harass human beings
4. *Cāmpirāni* - An incense which causes fragrant smoke
5. *Puṉuku* - A perfume prepared from the secretion
6. **Intirāṇi** - Wife of **Intiraṉ** of Civetact

(சிறுக்கன் மண்டப வாசல் காத்தல்)

109. கொண்டு [1]போயினார் மண்டபத் துள்ளே
[2]கொடிமை யாகிய சிறுக்கன் சொல்லுவான்
வண்டி மலயனும் மண்டபந் தன்னிலே
வண்ணாத்தியும் மண்ட பத்திலே
இனியெல்லோருங் கயிலையில் சேரலாம்
என்று சிறுக்கனும் [3]வாசல் காத்தான்

(சின்னணஞ்சவர் – சின்னணஞ்சி கூடல்)

பொன்ன ணஞ்சவர்சின் னணஞ்சியைப்
பூவின் மெத்தையின்மே லிருத்தினார்
சின்னச் [4]செப்புக்குன் சந்தனமதை
[5]திலர்தம் தீட்டினார் கலகம் காட்டினார்
குத்துமாம் தனத்தி யாகவே
கொண்டை குலையவே குழைகள் பின்னவே
மெத்தை மீதிலே முத்த மிட்டார்
விந்தை யாலொரு சிந்து பாடினார்

கட்டி யிருபேருஞ் சட்ட மாகவே
[6]காச்சல் தீரவே கைநெ கிழ்ந்தனர்
[7]உன்னை விட்டுயினிப் போக வொட்டுமோ
[8]உயிருரண்டு மொன்றாகிப் போச்சுதே

(சின்னணைஞ்சி மண்டபத்தில் நிலையாகத் தங்குதல்)

[9]விசர்த்த வேர்வை சீலை துவைத்திட
விசறியினால் விசர்வை வீசினாள்
வாயில் பாக்குதான் சீவிக் கொடுக்குமுன்
மையல் தீர்ந்தபின் [10]கையை நெரிக்கிறாள்
[11]மனையில் தாய்மாரை நினைந்து தேடுவாள்
வந்து மூன்று [12]நாளாகிப் போச்சுதே
மாயமா யென்னை யேது செய்தீரோ
வீட்டில் போய்முகங் காட்டி வருகிறேன்
வேந்தனே யென்னை விட்டிடுவா யென்றாள்
கெட்டிக் காரிபோல் வெட்டிப் பேசுறாய்
மேவும் வேறொரு ஆசை தானுண்டோ
சொல்லு வாருனைச் சொல்லும் வேளையில்
கொண்ட தாயவர் உண்டு மானாக்கால்
கள்ளப் பேச்சையே தள்ளிப் போடுநீ
கண்டு தாய்மா ரென்று நம்பாதே
கொடிய தாய்தம ருண்டு மென்றாக்கால்
கூட வருகிறேன் வாடி யென்றனர்
கூட வந்திடில் நாடு கொள்ளுமோ
கொச்சைப் பேச்சுக்கோ [13]யிச்சை யாகினீர்
வீடு வேண்டிலேன் நாடுவேண்டிலேன்
வேந்தனே உம்மை மட்டும் வேண்டிலேன்

[14]உடைய நாயகா யடியவர் கிட்ட
ஊர்கடந்திடில் நாட்டி லேசுவார்
வழியில் லாமலே சின்ன ணஞ்சிதான்
மண்டபந் தன்னில் வாழ்ந்திருந்தார்.

கொடிமை –கொடுமை, பொல்லாங்கு. **வண்டிமலயன்** – சிறுதெய்வமாகக் கருதப்படும் சின்னணிஞ்ச பெருமான். **விசர்த்த** –வியர்த்த. **மையல்** –மோகம், மயக்கம். **தமர்** – உறவோர். **கொச்சைப் பேச்சி** – இழிந்த பேச்சு. **ஏசுவார்** –இகழ்வார், குற்றம் சொல்வார். **வடு** –தழும்பு , அடையாளம்.

பா.வே. 1. போனாரே மண்டபந் தன்னில் 2. கொடிய மறவனேது 3. வாசல் தன்னிலிருந்தான் 4. சந்தனந்தன்னையும் 5. தீலாத்தி தீட்டினார் மோகங் காட்டியே 6. காச்சல் சுரம் போலே 7. என்னை விட்டு நீ 8. உயிரும் உடம்பும் போய், ஒன்றாயாச்சுதே 9. அரும்பி வேர்வையை தான் சிரித்து வந்து 10. கையைப் பிரிக்குமாம் 12. மூன்று நாள் பிந்திப் போச்சுதே 13. இட்டப்பட்டு நீர் 14. உடைய நாயகர் அடியாளாகிய.

சு.சொ. 11. மனயில் 14. உடய.

Ciṟukkaṉ stands guard at the entrance of the hall

As the king did take her into the chamber,
The evil *Ciṟukkaṉ* did remark,
"**Vaṇṭimalayaṉ**[1] is in the hall now,
And the washer woman too is there to keep company,
All may unite in **Kayilai**[2] now,
Thus saying did the *Ciṟukkaṉ* stand guard at the entrance.

The mating of Ciṉṉaṉañcāṉ and Ciṉṉaṉañci

Poṉṉaṉañcavar did place **Ciṉṉaṉañci** on the flowery bed,
From a small bowl he did take sandal paste,
And smeared it but teasingly,
With her breasts sharp pricking him,
Their *Koṇṭai* disheveled and their earstud inter twined
They did kiss one another on the mattress,
Sang they a *cintu*[3] rather in fun,

In tight embrace they held themselves,
To dispel their passion feverish
And then their hands they loosened
"Can I ever leave you,
Our lives both have become one now"

Ciṉṉaṇañci stays permanently in the chamber

As she sweated profusely making her saree wet,
She did fan herself with a *viciṟi*[4]
Even before she could slice betel nuts to chew,
Her passion did subside and she snapped her fingers,
In confusion and looked for her mother and other kin
Longing to be at her home
"It is three days since I left
What illusion have thee practiced on me?
I shall go home show up and return
Oh! king please allow me to leave"
As **Ciṉṉaṇañci** spoke thus the king did reply,
"How cleverly did you speak thus
Have you any other desire than company mine?
Whatever people might say,
You need not bother,
Stop talking thus in pretence deceitful
Do not seek relatives thine
If however you want to meet your kith and kin,
Come along, I shall also accompany you"
She did reply,
"If you come with me will the country tolerate and accept,
Do you want to court comments reviling
Home I won't seek and the country too is not for me to seek,
Oh! King I do not seek even thee now,
Having left my wedded husband and my home as well,
People will speak ill of me"

Thus saying did **Ci<u>nn</u>anañci** stay at the chamber,
To avoid stigma any

1. **Vaṇṭimalaya<u>n</u>** - The name of deity attributed to **Ci<u>nn</u>anañca<u>n</u>**
2. **Kayilai** - The divine mountain abode of Civa<u>n</u>
3. *Cintu* - A folk song
4. *Vici<u>r</u>i* - A fan

(வண்ணார்கள் சின்னணஞ்சியைத் தேடுதல்)

110. வாழ்ந்திருக்குங் [1]காலமதில் வண்ணார்கள் [2]தான்கூடி
சூழ்ந்திருந்த கிளைமனுசர் தோகையரைத் தேடுவாராம்
அருங்கான [3]மலைநாடும் ஆறுகுளம் காடுசெடி
[4]குளங்கூவ லாறுகளில் [5]குளியோடித் தேடுவாராம்
வீடுதெரு தென்காசி விடுதியெங்குங் காணாமல்
ஆடுகின்ற அம்பலமும் அவரவர்கள் மனைதோறும்
வாடியந்த வண்ணானும் வழிதோறும் தடம்பார்த்தான்
தேடியவன் தான்திரிந்தான் தேன்மொழியைக் காணாமல்
எங்கேதான் போனாளோ யென்னுடைய [6]வண்ணாத்தி
[7]தாயுடைய வீடதுக்குச் சண்டையிட்டுப் போனாளோ

(வண்ணான் சின்னணஞ்சியைக் காணவில்லை என மாமியார் வீட்டில் கூறல்)

பேய்போல நானலைய பிரமன்விதிப் படிதானோ
மாமியார் வீட்டில்சென்று மருமகன்தா னேதுசொல்வான்
[8]என்னுடைய சின்னணஞ்சி யிங்கேதான் வந்தாளோ
என்மகளைக் கொன்றுவிட்டு யேதுகொண்டு [9]வந்தாயோ
பழிசுமப்பாய் வண்ணானேயென்று பாவைபழி கூறலுற்றாள்
நரைத்தலையை விரித்தழுது நாணங்கெடா தேயென்னை
கரைந்தாளே [10]கூன்கிழவி கண்மகளை யிழந்தேனென்று

நாடுடைய தென்காசி நாடுமட்டுங் காணாமல்
தேடிவந்தே னுன்வீட்டில் செய்தியெல்லாஞ் சொல்லவந்தேன்

(வண்ணான் கலக்கமறிந்த சின்னணஞ்சி சின்னணஞ்சவரைச் சேரமறுத்தல்)

ஓடிவந்தேன் தென்காசி வூரோடே வருகையிலே
திட்டிவாசல் தனிலேநின்று யெட்டியவள் பார்க்கலுற்றாள்
மட்டித்தன மாயவர்க்கு [11]வாக்குமது நான்தொடுத்தேன்
கண்ணான சின்னணஞ்சி கதவருகே பார்த்துநின்று
வண்ணான் படுமறுக்கம் வாய்பிளக்க மாட்டாமல்
[12]வாசமிட்டுப் போகவென்று மனதிலொரு சடவாச்சு
பாசமதை மறந்துவிடப் பகட்டுவித்தை தான்படித்தாள்
வெத்திலையைத் தான்சுவைத்து தாம்பலத்தின்[13] சாரமதை
[14]சுத்தியவ ளுடுத்திருந்த துயிலாடையில் துப்பிவிட்டாள்
மாதவிடை யானேனே மருகாதே யென்னையும்நீர்
[15]சூதகமா யிருக்கிறேன் தொடாதே யென்னையும்நீர்
முட்டாகி யிருக்கிறேன் விட்டுவிடு யென்னையும்நீர்

(சின்னணஞ்சான் வற்புறுத்திச் சேருதல்)

இந்தப்புத்தி ஆருசொன்னா [16]ரேந்திழையே சின்னணஞ்சி
கிட்டாது உன்னைவிட்டால் கிடைக்குமோதென் காசியிலே
கட்டி யெடுத்தவளைக் கனிவாயில் முத்தமிட்டார்
[17]விட்டுப்பிரியாத வேசை ஆசையின்மேல் சிங்கிபூட்டி
பன்னீரு சந்தனம் [18]பரிமளமுங் கமகமென
பைந்தொடியாள் [19]சிலம்பலம்ப பாதமலர் வேர்த்தொழுக
[20]செங்கைவளை வோலமிடச் சென்றுகுறுக் கிடுவாளாம்
மங்கையுட மோகமதை [21]மகராசன் கலக்கிவிட்டார்
[22]வளம்பெறவே யிருபேருட மனதாசை தீர்ந்தவுடன்

[23]வட்டவிழ்ந்து யிருபேரும் கைநெகிழும் [24]வேளையிலே
[25]மட்டுகந்த திருமுகத்தில் மறுவேர்வை வேர்த்திடுமாம்
[26]முந்தியது தனைவிரித்து முகமதிலே வீசுவாளாம்
செந்திருவே வுன்னுடைய சினேகம்விட்டுப் பிரியாது

(மாத்தெடுக்கப் போன சின்னணஞ்சியைக் காணவில்லை என சீவலமாறனிடம் அறிக்கையிடல்)

இவர்களிரு பேருமாக யிருந்துசுகம் பாராட்ட
[27]அவர்களுட கோட்டைகளு மரண்மனை வாசல்கடந்து
தென்காசி சீவலமார்பன் திருமுன்பே [28]யறிக்கையிட்டான்
வன்காசி தென்குமரி மட்டுமர சாளுமன்னா
மாத்தெடுத்து வரப்போன வண்ணாத்தியைக் காணேனே
நால்திசை யெல்லாந்தேடி நானவளைக் காணாமல்
வாட்டமுத்து வந்தேனான் [29]மனக்குறையைத் தீருமென்றான்
[30]தேட்டமுறத் தெள்ளமுதைத் திருடிக்கொண்டு போனாரோ.

கிளைமனுச்சர் –உறவு மனிதர். **கூவல்** –கிணறு. **குளியோடி** –முழுகி. **அம்பலம்** –சித்திரகூடம், விளையாடுகின்ற இடம். **மனை** –வீடு, இல்லம். **தடம்** –வரம்பு, வழி. **பாவை** –பெண். **நாணம்** –வெட்கம். **கரைதல்** –அழுதல். **கூன்கிழவி** –முதுகு வளைந்த கிழவி. **திட்டிவாசல்** –நுழைவாயில். **மட்டித்தனம்** –மடத்தனம். **மறுக்கம்** –துன்பம், மனக்குழப்பம். **வாசமிட்டு** –வசிப்பதை விட்டு. **பகட்டு** –இறுமாப்பு. **சர்கம்** –சாறு. **சுத்தி** –சுற்றி. **மாதவிடாய்** –மாதத்தீட்டு. **மருகாதே** –சேராதே. **சூதகமாயிருத்தல்** –தீட்டாக இருத்தல். **வேசை** –வேசி, விலைமகள். **சிங்கி** –வைப்புப்பாஷாணம். **பரிமளம்** –மிகுமணம். **சிலம்பு** –காற்சிலம்பு. **பாதம்** –கால். **கைவளை** –கடகவளை. **மோகம்** –ஆசை. **முந்தி** –முந்தானை. **செந்திரு** –செந்நிறமுடைய இலக்குமி. **சினேகம்** –உறவு.

பா.வே. 1. நானையிலே 2. அவரோடே 3. மாநிலங்கள் ஆறடவி 4. குளமும் பல கூவலாறுகளில் 5. குளியோடி தான்பார்த்து 6. சின்னணஞ்சி 9. வந்தீரோ 10. பூங்கிழவி கண்மணியை 11. வாக்குதான் 12. வாசமதைத் 13. சாறுமதை 14. சுத்தி உடுத்திருந்த சீலையிலே 15. தூரமதாய் 17. பிரியாத ஆசையினால் 19. சிலம்பு கொஞ்ச 20. கொங்குவளை ஓசையிட 21. மலையரசன் 22. வளமைபெற வெளியவரும் 24. நேரமதில் 25. மற்றும் 26. முந்தியதைத் தானவிழ்த்து 28. அறுதியிட்டான். 29. சங்கடத்தைத் தீருமய்யா 30. தேடரிய.

ச.சொ. 5. குழியோடி 7. தாயுடைய 8. என்னுடைய 16. ரேந்திளையே 18. பரிமழமுங் 23. கட்டவிள்ந்து 27. அவர்கழுட 29. மனக்குறயைத்.

The wahermen search for Ci**nn**anañci

As she did thus stay at the royal chamber,
The washermen and their king did search for the damsel
They searched for her in forests and hilly terrain,
And in rivers, ponds and jungles,
In tanks wells and rivers they dived and searched
In houses streets and habitations at **Teṉkāci**
They searched for her in vain
Not finding her any where
Her husband the washerman did seek her
In the *Ampalam*[1] and at houses all,
He did look for her foot steps in dire grief in every path,
"Where has she gone, my washer woman,
Has she gone to her mother's place in a huff?

The washerman tells his mother in law that Ciṉṉanañci is missing

"Is it my destiny ordained by **Piramaṉ**,
To roam like this like ghost?
He did go to his mother in law's house and said
"Has my **Ciṉṉaṉañci** gone over here?"
She replied
"Oh! washerman have you killed my daughter,
And brought false news here?
You will have to bear the blame for this"
As the old woman thus blamed him he replied,
"Do not cry thus with your grey hair dishevelled
Create not a scene shamelessly here"
But the hunchbacked old hag would not listen

"Oh! I have lost my daughter" she wailed,
He said then,
"I have searched for her in **Tenkāci** entire in vain
And gone over here to inform you"

Cinnaṇañci learns of her husband's distress and refuses to cohabit with Cinnaṇañcān

As the washerman did pass through **Tenkāci**
The damsel standing at the entrance of the royal chamber,
Saw her husband stricken with grief
And unable to bear the sight of his agony acute,
Did feel that she had in utter folly,
Promised to remain with **Cinnaṇañcān,**
And decided in her cleverness to avoid and dispel
Her close union with the king,
She chewed betel leaves with nuts and lime
And spat the red liquid salivary on her saree
To make it look as if stained with blood,
As at her menstrual periods,
Then did she tell **Cinnanañcān**
"I have my monthly period menstrual now
Come not near me now as I am in *Cūtakam*[2]
Leave me" she said
But he would not listen and also said,
"Who suggested you this ruse?
Can I ever have another one like you in **Tenkāci?**"
Saying thus he hugged her and kissed her
In her fruity mouth
Then with sandal paste, rose water and tempting *Cinki*[3]
As used to keep courtesans without leaving
He did smear her all over and kindled her passion
With her anklets jingling and her feet in profuse sweat
Her bangles rattling in lament,

Thus without inhibitions both did mingle
As to make her sweat on her face fine
Even when both relaxe after their tight embrace
As she fanned herself on account of the sweat,
He said, "Oh! *Centiru*[4] our friendship will never cease"

Her husband complains to Civalamāran about the missing damsel Cinnanañci

As both **Cinnanañcān** and **Cinnanañci** were thus in company happy,
Passing the palace and forts thereof
The washerman did approach **Civalamāran** at **Tenkāci**
And complained "Oh! King who rules the land
From **Kāci** in the north to the **Kumari** in the south
My wife a washer woman who had gone,
To collect *māttu*[5] here at **Tenkāci**
Is missing and I am unable to find her
Searched have I in all directions four,
But to no avail.
Hence have I gone over here in great grief,
Please redress grievance mine.

1. *Ampalan* - A decorated hall
2. *Cūtakam* - Menstrual period during which women avoid mating with man
3. *Cinki* - A potion for allurement
4. *Centiru* - Fair goddess (another name of **laksmi** the goddess of wealth)
5. *Māttu* - Clothes collected for washing

(சின்னணஞ்சியைக் கொன்றாரோ, பேய்பிடித்ததோ, வைப்பு வைத்தாரோ எனல்)

111. சோறுதின்று குடல்கொழுத்தோர் தொட்டவளைப் பிடித்தாரோ
[1]மாறுகண்ணி முகம்பார்த்து மருந்துசெய்து மறைந்தாரோ
காதுப்பணிக் [2]காசைகொண்டு கள்ளர்வெட்டிக் கொன்றாரோ
[3]ஏதுவைத்துப் பேய்பிணங்கள் யிடைவழியி லடித்ததுவோ

[4]பெண்ணுடைய வழகுகண்டு [5]பிலக்காரர் பிடித்தாரோ
[6]மண்ணாளும் ராசமக்கண் [7]வைப்புவைத்துக் கொண்டாரோ

கண்ணுமணி பெண்ணரசே [8]கண்டெடுத்த கற்பகத்தை
பொன்மணியை யிழந்தேனென்று புலம்பியவன் பரிதவித்தான்

வல்லாண்மைக் காரரவர் மாத்தெடுக்க வரவேசொல்லி
சொல்லாலே வசப்படுத்தச் சோத்தில்மருந் திட்டாரோ

மருந்துவெறி கொண்டவளை மறுத்துவர வொட்டுதில்லை
குருந்தேறும் ராசமன்னர் கூத்தாட்டு பார்க்கிறாரோ

சாடைசொல்லிப் [10]போய்வருமுன் தான்பேசப் போகாது
ஆடையது வெளுத்துவந்து அஞ்சாறுநா ளுண்டுமய்யா

நாடுவிட்டுப் [11]போனவளை நாகமது கடித்ததுவோ
வீடுவிட்டுப் போனவளை மீண்டுவரக் காணேனே

(சீவலமாறன் சின்னணஞ்சியைக் கண்டுபிடிக்க ஆணையிடுதல்)

எப்படியோ நான்காணேன் யென்றவனும் அடிதொழுதான்
[12]செப்பமுள்ள சீவலமார்பன் செய்தியெல்லாங் கேட்டிருந்து

காவலுள்ள சேவுகரைக் கண்காட்டி [13]வரவழைத்து
[14]வேலைசெய்யும் வண்ணாத்தி யெங்கேயென்று பாருமென்றார்

[15]களவதுநீ புடியாட்டால் கழுவிலுன்னை யிட்டிடுவேன்
[16]செந்நாய்மந்தி நாய்க்கிரையாய் சிரத்தைவெட்டித் தூக்கிடுவேன்

பண்ணுமணி வினையதிலும் பாராத்தியங்கள் மெத்தவுண்டு
எண்ணும்பதி யாளுமன்ன [17]னியம்பல்கேட் டவர்பயந்து

[18]ஒருகாத வழிவரைக்கும் [19]ஓடியங்கே யவர்பார்த்தார்
நாலுதிக்கும் பார்த்தவர்கள் நன்னுதலைக் காணாமல்

பதினாறாம் [20]சாமத்திலே பதிவுவைத்துக் காத்திருந்தார்
சேவுகர்கள் தங்களிலே [21]செய்தியெல்லாஞ் சொல்லுவாராம்

காத்திருந்தோம் மூன்றுநாளாய்க் கண்டுதில்லை தொண்டியரென்றும்
என்றிருந்து காவல்காரர் [22]யிழந்தோம் தலையிழந்தோம்

(சின்னணஞ்சியைக் கண்டுபிடித்தல்)

இப்படியே யவர்கள்சொல்லி யிருக்கின்ற நேரமதில்
[23]செப்பமுள்ள சீவலமார்பன் சிவனணஞ்ச பெருமாளுக்கு

[24]ஆவிசேகமாய்ச் சோறுகறி யாக்கிவுறி மேலேவைத்து
காவிக்கொண்டு வருகையிலே காத்திருந்த சேவுகர்கள்

சீறியந்த மடையனுடன் சேவுகர்க ளேதுசொல்வார்
கொலுவிருக்கும் மண்டபத்தில் கொண்டுவந்து கொடுப்பானேன்

வலுவுடைய வீடிகந்து வாரதுக்கு நேரமில்லை
வாழையிலை ரெண்டுகொண்டு [25]வருவானேன் ஒருவனுக்கு

நாள்வரைக்கு மிருந்தவரை நாங்களுமுன் னறிந்திருப்போம்
உள்ளபடி [26]யெங்களுக்கு வொளியாமல் சொல்லுமென்றார்

அதட்டியவர் [27]கேட்கையிலே யச்சமுண்டாய் நெஞ்சத்திலே
பதட்டியவர் கேட்கையிலே பரமார்த்தஞ் சொல்லிவிட்டார்

[28]வெள்ளிமணி மண்டபத்தில் மேடையிலே சின்னணஞ்சி

அமுக்கெடுத்து வெளுத்தாக்கா லாகாது யென்றுசொல்லி
கொழுப்பெடுக்க வந்திருக்காள் கொடுபோறேன் [29]சோறவளுக்கு

[30]என்றவனுஞ் சொல்லிடவே யேத்தமுள்ள சேவகர்கள்
சென்றுசொன்னார் தென்காசி சீவலமா ராசனுக்கே.

மாறுகண்ணி –மாறுகண் உடையவள். **காதுபணி** –காதில் அணியும் ஆபரணம். **பிலக்காரர்** –பலக்காரர், பலமுடையவர். **வைப்பு**– மருந்து வைத்தல். **சோத்தில்** –சோற்றில். **குருந்து** –மாணிக்கக் கல். **நாகம்** –பாம்பு. **கழுவில் வைத்தல்** – பாறை போன்ற கூரான ஆயுதத்தில் செருகுதல். **செந்நாய்** –ஒரு வகை நாய். **மந்தி** –குரங்கு. **சிரம்** – தலை. **பாராத்தியம்** –துன்பம். **இயம்புதல்** – சொல்லுதல். **காதம்** –நாலு கூப்பிடு கொண்ட தூரம். **நாலுதிக்கு** –நான்குதிசை. **சாமம்** – மூன்றே முக்கால் நாழிகை கொண்ட காலம். **பதிவு** –பதுக்கம். **தொண்டி** –களவு போன பொருள். **சீவலமார்பன்**– சமையற்காரன் பெயராயிருத்தல் வேண்டும். **மடையன்** –சமையற்காரன் **வாரதுக்கு** – வருவதற்கு. **ரெண்டு** –இரண்டு. **ஒளியாமல்** –மறைக்காமல். **பதட்டி** –அதட்டி. **பரமார்த்தம்** –உண்மை. **கொடுபோறேன்** –கொண்டு போறேன்.

பா.வே. 1. மாறுவளி 2. காசைப்பட்டு 3. பார்த்து வைத்துப் பேய்பிடாரி 5. பெலக்காரன் 7. வைத்திருத்திக் 8. கடைந்தெடுத்த 9. சொல்லாலே அகப்படுத்தி 10. பேய்பிசாசுகள் 11. போனாளோ 12. சொற்படியே 14. என்ன செய்வோம் 15. களவதனைப் பிடியாவிட்டால் 17. இசம்பு வார்த்தை 19. ஒடியவர் தடம் பார்த்தார் 20. சாமமட்டும் பதிதனிலே 21. செய்தி பல 22. இழப்போமே தலையை என்று 23. சொற்படியே 24. ஆவுசமாய்ச் சோறுகறி ஆகவுறி மேலடுக்கி 25. வாறதென்ன என்று கேட்க 28. மதனைமணி 30. என்று சொல்ல சேவுகர்கள் இனிபிழைத்தோமென்று சொல்லி.

சு.சொ. 4. பெண்ணுடய 6. மண்ணாமும் 13. வரவளைத்து 16. சென்னாய் 18. ஒருகாதவளி 22. இளந்தோம் தலையிளந்தோம் 26. பெங்கழுக்கு வொழியாமல் 27. கேழ்க்கயிலே 29. சோறவழக்கு.

"Has Ciṉṉaṇañci been killed or haunted by ghosts or confined a as concubine ?"

"Have gluttons fat touched and held her?
Have folk prepared a potion after seeing a squinteyed woman,
And concealed her?
Have dacoits hacked and killed her in their desire
To steal her ear studs?
Have ghosts or corpses afflicted her on her way?
On seeing ht beauty of the damsel,
Have rich people caught hold of her?
Oh! I have lost the apple of my eye,
Queen among women and **Kaṟpakam**[1] of rare find
Was she to me"
Thus did he lament pitiably and said

"Have people of great power asked her
To collect *māttu* at their place
And then drugged her food to lure her with promises false?
Or have kings any prevent the damsel,
Under the strong effect of the drug from refusing their advances
And watch their play whimsical?
It is five or six days since she left,
For washing the clothes and to collect *māttu*
Has any snake bitten the damsel who left the land,
I have not seen her since she left,
Nor has she returned so far"

Civalamāraṉ order his servants to search for Ciṉṉanañci

Thus did the washerman represent to the king,
Civalamāraṉ the virtuous did listen to the washerman's woes
And summoned his servants with a wink of his eyes
And told them,
"Go and find out where the *vannātti* has gone
If you do not apprehend the culprit of this theft
I shall impale you in the *kaḻu*
I shall behead you and make you prey for the wild dogs
If you succeed in tracing her, you will be rewarded,
With plenty of gifts"
The servants frightened by the king's directive
Ran fast and covered a *kātam*[2] in distance
Searching for the damsel in directions four
Not finding the damsel of forehead dainty anywhere
They waited to watch at the sixteenth *cāmam*[3]
The servants discussing among themselves did remark
"Waited have we for three days but have not come across
Any theft or mishap,
Oh! Good grief, we will lose our heads
Incurring the wrath of the king"

The servants find out Ci<u>nn</u>aṇañci

As thus they were discussing their lot
A loyal cook by name **Civaḷamārpa<u>n</u>**,
Arrived there carrying rice and curry in a carrier,
The king's attendants who were there,
Did intercept the cook and asked him menacingly,
"Why have you brought this food here,
To the royal hall where the king holds court?
The Cook replied,
"The king has no time to go to his mansion mighty
The attendants queried,
"Why have you brought two plantain leaves,
For just one person?
Tell us the truth without hiding anything
We will be here till tomorrow and find it out"
As they thus admonished him severely,
The frightened cook confessed the truth,
"In the silvery court hall here,
Ci<u>nn</u>aṇañci the washerwoman is within,
She is not here to wash dirty clothes,
But is there to remove the excessive fat (of the king)
I have brought this food to her"
As the cook did inform **Civalamāra<u>n</u>**'s attendants thus
Of the presence of **Ci<u>nn</u>aṇañci** at the court hall
They in turn passed on the information
To **Civalamāra<u>n</u>** the king

1. **Karpakam** - A divine tree which yields desired things
2. *Kātam* - A distance of ten miles
3. *Cāmam* - A three hour period at night

(சீவலமாறனிடம் சின்னணஞ்சி இருக்கும் இடத்தைக் கூறுதல்)

விருத்தம்

112. சொன்னார் சீவல மார்பனுக்குத் தொழுது சேவகர் பகுத்தறிவாய்
மன்னா யிவ்வூர்க் கதியரசே மருமகன் சிவன ணஞ்சபெருமான்
அன்னா [1]பசும்பொன் மண்டபத்தி லழுக்கெடுக்க [2]வந்ததொரு
[3]பெண்ணார் சின்ன ணஞ்சிதன்னை போக விடாதே யிருத்திக்கொண்டார்.

அன்னா –அதோ, அந்த. **பொன்னார்** –அழகிய பெண்.

பா.வே. 1. பதம்பொன் 2. வந்தவளை 3. பெண்ணான.

Civalamāran is informed of Cinnanañci's sojourn

The *cēvakār*[1] bowed before **Civalamāran**
And told him with discretion,
"Oh! King the lord of our land here,
Your nephew **Civananañcaperumāl** has confined
Cinnanañci the washer woman in his custody
The damsel who has gone over there to collect clothes
Has been prevented from leaving there,
By **Cinnanañcān**

1. *Cēvakar* - Servants or attendants

(சிவனணஞ்சவரை அழைத்துவர சீவலமாறன் மந்திரியை அனுப்புதல்)

113. உரைத்தா ரவருஞ் சிறுக்கனவ னுடனேதான்
உடன்சென்று கூட்டிவரச் சிவனணஞ்ச பெருமாளை
மன்னவர் புகழுஞ்சீ வலமார்பன் [1]மருகா
மாப்பிளை ராசாவே மாமனழைக் கிறார்வாரீர்
[2]மின்னிடை வண்ணாத்தி தன்னைவெளியி லேவிட்டு
மேலுங் கலியாணஞ் [3]செய்யலாம்வா வென்றுரைத்தார்

வண்ணாத்தி யோடேநீ காலங்கடத்தா தேயப்பா
வாய்த்ததோர் தென்காசி வூருக்கெல்லாம் வசையாச்சே

(இன்பக்கனியை விட்டு வண்ணாத்தி மேல் காதல் கொண்டாயே எனல்)

கண்ணொத்த மாமன் மகளான [4]இன்பக்கனியைக்
காதல் கொள்ளாமலே யாசை கொண்டாய் [5]வேப்பங்காய்மேல்
தீண்டாத சாதியைத் [6]தீண்டினா ரென்றுசிரிப்பார்
[7]தீர்த்தமு மாடியமுக்கைத் தொடுவையோ சீசீ
வேண்டாத வார்த்தை [8]பறைகின்ற தாரடாவீணே
வெட்டிப் [9]பட்டிநாயின் குட்டிக்கிடு வேன்[10]விருந்தாய்
மாமன் [11]மகளுக்கு மாப்பிளையில்லை யேயானால்
மாச்சிமைத் தாலியைக்கட்டி மடத்திலே வைப்பாய்
[12]ஏமத்துப் பேய்போ லமுகிறாயே வண்ணாயென்றே
[13]ரெண்டுதுண் டாக்குவே னென்றுஉட வாளெடுத்தான்
பொட்டி மகளோடநீ [14]பட்டுக்கிடக்க வேபோறாய்
புத்தி கெட்டாயென்று [15]மந்திரியப்பாலே போனான்

(சிவணணஞ்சவர் வராததை மன்னனிடம் சொல்லுதல்)

சீவலமார்பன் றிருமுன்பில் சென்று போய்நின்று
[16]செய்திக ளெல்லாம் செப்பினான் தப்பாமலேதான்
வாரந் தவறாத ராசகுமாரனே கேளும்
வண்ணாத்தி யாசை மறவாதவ ரொருநாளும்
புத்திக்குத் தக்கதாய் சித்தமகிழ்ந் தருள்வீர்
[17]பூலோக மாளுகின்ற சீவலமார்பனே யென்றார்
[18]தொட்டவள் தன்னை விடுவேனா நானென்றுசொல்லி
சொல்லத்தக்க பேரைவிட்டுக் காரியஞ் சொல்வீர்

(தங்கை பொன்னுருவியை அழைத்துவரத் தூதனுப்புதல்)

அந்தவுரை தன்னைக் .கேட்டபொழுதி லேராசன்
[19]அழைத்தானே புத்திக்குத் தங்கச்சியா ரவள்தன்னை
தங்கச்சி யாகிய பொன்னுருவித் தாயார்க்கு
சற்றேவோர் நாள்விட் டழைத்தாரே மூத்ததமயன்
பொங்கிச் சினந்தந்த தூதுவன் சொன்னபொழுது
பொன்மணி மண்டபவாச [20]லதிலே புகுந்தாள்
கொலுவி லிருக்குங் [21]கெருவிதமான மகனை
கோவிக்கல் வாசல் குமாரனைக் கூட்டிவருவாய்

(பொன்னுருவி சின்னணஞ்சான் இருப்பிடத்தைக் காணுதல்)

தமயனுரைத்திடும் வாக்குத் தவறாமல் சென்று
சந்தனமேடை சமூகத்தில் சென்றவர் கண்டாள்
விந்தை குலாவிய [22]சின்னணஞ்ச பெருமானே
விரைவாகப் பொன்மணி மேடையை விட்டுவருவாய்
பழிகாரா வுன்னைநான் பாலகனென்று வளர்த்தேன்
பார்த்தபேர்க் கெல்லாம் பழிப்பிடமாச்சு மகனே.

மருகா –மருமகனே. **மின்னிடை** –மின்னலைப் போன்ற மெல்லிய இடையை உடைய சின்னணஞ்சி. **வசை** –இகழ்ச்சிச் சொல், குற்றம். **இன்பக்கனி** –சீவலமாறனின் மகள். **பட்டிநாய்** –காவல் நாய். **மாச்சிமை** –மாட்சிமை, அழகு. **செப்பினான்** –சொன்னான். **சித்தம்** –மனம். **மூத்ததமயன்** –மூத்தோன். **கோவிக்கல்வாசல்** –அரண்மனை வாசல். **சமூகம்** – முன்னிலை. **விந்தை** –ஆச்சரியம். **பாலகன்** –மகன்.

பா.வே. 1. மருமகனுக்கு 2. என்னடா வண்ணாத்தி தன்னை நீ வெளியிலே விரட்டாமல் 3. செய்வதாய்ச் சொல்லிவிட்டார் 4. மாவின் கனியை 5. வேப்பங்கனியை 6. தீண்டுவதோ பாவமே 7. தீர்த்தமாடும் மகளை நீ 8. உரையாதே என்னோடே வீணாய் 9. கடி நாயே 10. உன்னை 12. என்ன ஒன்றும் பேசினாய் வண்ணாத்தியை வெரட்ட 13. இரண்டு துண்டாய் வெட்ட மந்திர வாளை எடுத்தார் 14. பட்டுவிழப் 15.மந்திரி போனான் 16. செப்பமுடன் வந்து யிவர் சென்று போ என்று 18. தொட்ட மகள் 20. அருகே 21. சிருவுற மானமகனை 22. பொன்னணஞ்ச.

சு.சொ. 11. மகமுக்கு 17. பூலோகமாமுகின்ற 19. அளைத்தாரே.

Civalalmāraṉ sends his minister to bring Ciṉṉaṉañcāṉ

Cīvalamāraṉ on hearing what the *cēvakār* said
Did send an emissary to bring **Civaṉanañcaperumāl**
The minister who had thus been deputed,
Met **Ciṉṉanañcāṉ** and told him
"Oh! Māppillairācā[1] nephew of **Cīvalamārpaṉ**
Leave that washerwoman of flashing waist,
Come along you may marry quite another damsel;
Keep not company with a washerwoman
It will be a scandal all over **Teṉkāci**

Lo! You have been enamoured of a washer woman instead of Iṉpakkaṉi

When there is your uncle's daughter **Iṉpakkaṉi**[2]
Dear to you as the apple of your eye
Thou hast chosen to taste neam fruit instead,
People will laugh at you in ridicule
That you have touched an untouchable one,
Will you touch dirt after bathing in waters holy?"
As the minister of **Cīvalamāraṉ** did thus entreat,
Ciṉṉanañcāṉ replied but irately
"Who are you to speak impertinently to me
I shall hack you to pieces and sumptuously feed the pups
Of my watch dog
If there is no proper bridegroom for my uncle's daughter
Tie the *tāli* sacred around her neck
And but place her in the *matam*
If you wail like a ghost before me
I shall cut you into two"
Thus threatening **Ciṉṉanañcāṉ** did draw his sword
The emissary said then,

"You are going to live in mean company
With the daughter of a bitch,
You have become senseless"
Thus saying the minister did leave **Ci<u>nn</u>anañcā<u>n</u>**'s place

The minister informs Civalamāra<u>n</u> of Ci<u>nn</u>anañcā<u>n</u>'s refusal

The emissary did arrive at the presence of **Civala`mārpa<u>n</u>**
And told him of all that transpired,
"Oh! King do please listen,
Ci<u>nn</u>aṇañcā<u>n</u> refuses to leave **Ci<u>nn</u>aṇañci**
He says that he won't leave her whom he has touched
Hence in order to change his mind
Please send someone quite suited to advise him"

Civalamāra<u>n</u> sends for his sister Po<u>nn</u>uruvi

On hearing advice such from the emissary
Civalamāra<u>n</u> the elder brother of **Po<u>nn</u>uruvi**
Did send a messenger to fetch his *tankacci*[3]
As the messenger did vehemently deliver that message
Po<u>nn</u>uruvi arrived at once before her brother
Her brother told her "Go to the court hall golden
Bring him out of the palace gate"

Po<u>nn</u>uruvi meets Ci<u>nn</u>aṇañcā<u>n</u> at his place

Abiding by the instructions of her brother
Po<u>nn</u>uruvi did arrive at her son's court hall
And did address him,
"Oh! **Ci<u>nn</u>aṇañcaperumāḷ** leave this golden hall quickly,
Oh! Scandalous son! I have brought you up,
Like a child adorable,
But thou hast given room for blame
To be mocked at for disgraceful conduct"

1. **Māppiḷḷairācan**-A vocative which denotes a King supposed to be a bridegroom aswell
2. **Inpakkani** - The name of **Civalamāran's** daughter who is the waiting bride to marry
3. *Tankacci* - Younger sister

(வண்ணாத்திக்காகவா உன்னைப் பெற்றேன் எனப்பொன்னுருவி வருந்துதல்)

114. [1]தண்டமிழ் சேரும் சிவனணஞ்ச பெருமாளே
தாய்வார்த்தை கேளாதான் நாய்வாய்ச்சீலை போலானாய்
வண்ணாத்திக் காகவோ [2]கண்ணாளா வுன்னைவளர்த்தேன்
மாதர்கள் சீலைவெளுத்திட வேண்டாம் மகனே
எண்ணாமல் ராசாக்கள் [3]கோவிக்கல் தன்னிலேயேற்றி
[4]இருக்கின்ற பேருக்குச் சற்றாகிலும் ரோசமில்லை
கள்ளியைத் தள்ளாமல் உள்ளாக்கி வைத்துயிருந்தால்
கல்தூணிலே முட்டிச் சாகிறே [5]னென்பழி காண்பாய்
[6]சூத்துவா யெந்தன் வயிற்றில் செனித்தகுமாரா
குமரிகள்மே லாசை வைத்தால் பிரியவொட்டாது
எத்தனைகோடி திரவியந் தன்னை யிழந்தேன்
[7]எந்தனக்கோ வென்றுவுன்னைப் படைத்தார் பிரமன்
[8]வித்தகா யெந்தனக்குத் துணையாய் வந்தவீரா
வீணிலே உன்னையும் [9]ஆளில் அழகனாய் விதித்தார்
சுட்டித் தலையனைப்போல் [10]புத்திகொண்டு திரிந்தால்
சூட்டுக்கோல் கொண்டு சுட்டாலும் ரோசம்வராது
[11]நன்மைசொல்லக் கன்மமென்று நினைத்தாய் மகனே
நாளை வருவது வேளையறிய வொட்டாது
[12]சாலயிளமையில் தாய்சொல்லும் வார்த்தை கேளாதார்
சாத்திக் கழித்திடு மாலைபோல் சந்தியிலாவார்

(சின்னணஞ்சான் தாயிடம்தன் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டல்)

பிள்ளையை யிப்படிப் பேசுவதோ நீயாயம்மா
பெண்சின்ன ணஞ்சிக்கா யுந்தன்வயித்தில் பிறந்தேன்
வண்ணாத்தி யோடவே வாழாம லென்னை மறித்தால்
[13]வாலசன்யாசியைப் போலவே போவேன் மலைமேல்
தொட்டவள் தன்னையும் விட்டுவிட்டால் வெகுதோசம்
தொம்பர வண்ணாத்தி யோடேநீ பங்கப்படுவாய்
இட்டவிதியால் [14]யியமன்கைக் கொள்கிற வேளை
எத்தனையோ பேர்சொல்லிச் [15]சற்றுமயக்கம் வராதே
முட்டிக் குனியாத புத்திநீ யென்னோடே சொன்னால்
மோசப் படாமலு மொன்வசையைத் தள்ளவொட்டாது
கோதை யிவளையும் விட்டுவிட்டால் கிடையாது
குத்தம் பொறுத்தருள்வா யம்மாயென்று பெத்ததாயாரைக் கும்பிட்டான்.

கள்ளி –திருடி. **தள்ளாமல்** –விரட்டாமல். **கூத்துவன்** –கூற்றுவன், எமன். **செனித்த** – பிறந்த. **குமரிகள்** –கன்னிகள். **திரவியம்** –பொருள். **பிரமன்** –முதற்குரு. **வித்தகர்** – அறிஞர், பெரியோர். **சுட்டித்தலையன்** –துட்டன். **சூட்டுக்கோல்** –சுடுங்கோல். **கன்மம்** –வினை, கருமம். **சால** –மிகுதி. **சாத்தி** –சாற்றி. **சந்தி** –பல வழி கூடுமிடம். **வாலசன்யாசி** –வால சந்நியாசி –இளமையில் துறந்தவன். **தொம்பர வண்ணாத்தி** – பலருடன் தொடர்புடைய வண்ணாத்தி. **பங்கப்படுவாய்** –அவமானப்படுவாய். **இயமன்** – எமன். **குத்தம்** –குற்றம். **பெத்ததாயார்** –பெற்ற தாயார்.

பா.வே. 3. கோாிக்க தன்னை எட்டி 4. இருக்க எனக்கு 5. பழிகாப்பாய் 6. கூத்துவ ரெந்தன் தவத்தில் பிறந்த கோராநீ 7. எந்தனைக்கண்டு ஈசுரன் உன்னைப் படைத்தான் 8. விந்தையாய் எந்தன் தவத்துக்கு. 9. ஆளிலிழக்க விதியோ 10. பவுணி 11. நன்மை சொன்னாள் அம்மையென்று 13. வையகந் தன்னிலே பிரமன் என்னை வருத்தார் 14. இசமன் 15. கேட்பதில்லை.

சு.சொ. 1. தண்டமிள் 2. கண்ணாழா 12. சாலையிழமயில்.

Po<u>nn</u>uruvi laments over her son's affair with the washerwoman

"Oh! **Civa<u>n</u>a<u>n</u>añcaperumāḷ** of the famed land of Tamil,
As you did not heed by thy mother's words

Thou hast now become like a saree caught in a dog's mouth
Have I brought you up, Oh! darling
For the sake of a washerwoman?
Do not wash women's sarees thus
If you thoughtlessly confine a damsel like this,
In a royal palace without sending her out
I shall knock my head against a stone pillar
And die, so that the blame of my death
Will fall on you
Oh! **Kūrruvā**son born of my womb,
If one is enamoured of young women it is difficult
To part company with them
How many crores have I lost to beget you,
Has lord **Piramaṉ** ordained such an evil one,
Like you to be my son?
My lord a scholar and warrior who was my consort,
Did leave you as a handsome heir in vain
If you roam like a vicious womaniser,
You won't have any sense of shame,
Even if branded with red-hot iron
While I advise and admonish you for your benefit,
You take it as thy destiny
One may not know what is in store for tomorrow,
Those who neglect their mother's advice
In their blooming youth will languish street corners,
Like discarded garlands removed after wearing.

Ciṉṉanañcāṉ pleads with his mother to forgive his misconduct

"Oh! mother can you talk like this to your son?
I was not born as your son for **Ciṉṉanañci**'s sake,
But if you prevent me from living with that *vannātti*
I shall go to the mountain like a *vālacaṉyāci*[1].
It will be a serious slur,

If I leave that woman already touched by me,
You will suffer disgrace n the company of that washerwoman,
Who had slept with many
At the fatal hour when the lord of death arrives to take one,
Even a lot of advice by many will not convince
If thou tender advice to an unbending son,
I shall be in the horms of a dilemma,
Neither can I discard your advice,
Nor can I leave that damsel
Please pardon me for my lapse, Oh! Mother"
Thus speaking he did now before his mother
And joined his hands in worship.

1. *vālacanyāci* - Young ascetic

(சீவலமாறாசனைப் பொன்னுருவி காணுதலும் செய்தியைச் சொல்லலும்)

115. கும்பிட்ட பாலகன் தன்னையும் விட்டு
கொடுமையோ முன்செய்த கெடுமதிகள் தானோ
தானோ வொருவர் தரணியி லிப்படி
தாய்வார்த்தை கேளாத [1]தவப்பேறு தானோ
பேறோ யிதுவும் பிரமன் விதியோ
[2]பெற்ற தவப்பலனோ யித்தரை யுண்டாச்சு
ஆச்சுதே காரியம் வாச்சுதே என்ன
அழகான [3]சீவலமா ராசன் முன்வந்தாள்
வந்தாள் சிவனணஞ்ச பெருமாள் சொன்ன
வார்த்தை வொளிக்காம லண்ணார்க் குரைத்தாள்

(சின்னணஞ்சவரைப் பிடித்துவரப் படையனுப்புதல்)

மருமகனார் சொன்ன வார்த்தையைக் கேட்டு
வாய்யி ளக்க[4]விசம் மண்டை மட்டேற

ஏறியிரு விழிநீ ரருவி பாய
[5]ஏந்திழை பொன்னுருவித் தாயார் பயந்தாள்
பயந்தவள் நின்றதைக் கண்டு தமயன்
[6]பால சக்கரப் படைதன்னை யழைத்தார்
அழைத்தா [7]ரவருட படைகளை யெல்லாம்
அவனோ டெதிர்த்துப் பொருதுவா வென்ன
வாவென்ற போதிலே சேனை படைவீரர்
வாய்த்தார மிட்டவர் வான்குரவை பாட
வண்ணாத்திக் காகவோ யிப்போது சாக
[8]வந்துதோ உண்சோறு கொல்லுதே யென்பார்
உண்டதோ [9]ருப்புக் குபகாரஞ் செய்வர்
உயிரோடே வெந்நரக வேலையில் வீழ்வார்

(படைவீரர்கள் கொலுமண்டபத்தைச் சுற்றி வளைத்தல்)

விடுவனோ யென்று[10]முன் வீரவாள் காரர்
[11]வில்பரிசை சிங்கார வில்காரர்கூட்டம்
கூட்டமு மாயுத பாணிகள் சேர
கொலுவு மணிமண்டபம் சுத்தி வளைந்தார்
வளைந்த பேர்களை வாவென்று சொல்லி
வாசல் நாலுக்கும் வகுத்தார் படையை

(இருளன் வாசல் கதவைத் திறந்து பார்த்தல்)

படையுடைய ஆரபாரங் கேட்டிருளன்
பையவே வல்லயங் கைதனிலே வாங்கி
வாங்காமல் நாமளிரு பேருஞ் சென்று
வாசல் திறந்துபொர வேணு மென்ன
[13]அடைத்து நாமள்கோட்டைக் குள்ளே யிருந்தால்

அவத்தம் வருமே சிவனணஞ்ச பெருமாள்
[14]என்றிருள னாயன் சொல்லவே கேட்டு
ஏது சொல்லுவராஞ் சிவனணஞ்ச பெருமாள்

(சின்னணஞ்சியை வீட்டிற்குப் போவெனல்)

ஒய்யாரப் பெண்கொடியே சின்ன ணஞ்சி
ஓயாது சேனை வருகுதே யிங்கே
இங்கே யிருக்க வசமில்லை நீயும்
இனத்திடந் தன்னிலே நீபோடி பெண்ணே

(சின்னணஞ்சி பதிலுரை)

பெண்ணேநீ போவென்று சொன்னா லடியாள்
போருக்கு அஞ்சிப் [15]ஊறங்காட்டு வேனோ
போறதில்லை போறதில்லை புண்ணியனே நானும்
போங்காலம் வந்தால்பொன்றிடுவே னையா

(படைவீரர்களுடன் சின்னணஞ்சான் போர் செய்தல்)

[16]இராசாவின் கையில் சமுதா டெடுத்து
இவர்வாங்கி கச்சை யிறுக்கி யழகாய்
அழகொத்த வீர னணஞ்ச பெருமாளும்
அண்ணாவி யிருளனுஞ் சிவனணஞ் சவரும்
தூசிப்படை யோடே வெத்திலைச் சிறுக்கன்
[17]துஞ்சிப் பொரவென் றாயுத மெடுத்தான்
எடுத்தான் சிறுவுடை வாளுங் கேடயமும்
எங்கடா வென்றிவன் வெளியில் வந்தான்

(படைவீரர்கள் களத்தில் மடிதல்)

வந்தவனு மஞ்சாறு பேர்களை வெட்டி
வளைந்து கொண்டானே யெதித்தவரை யெல்லாம்

அவத்தமாய் வந்தோம் களத்தி லகப்பட்டோம்
அய்யயோ வென்று வழிதேடு வாராம்
தேடுவா ரோடுவார் காட்டி [18]லொளிப்பார்
சிவசங் கார கடவுளென்றே நினைப்பார்
ஒளிப்பார் பதுங்குவார் ஒதுக்கிடம் பார்ப்பார்
ஓகோகோ வென்று வுரைகூ றிடுவார்

(போர்க்களத்தில் சின்னணஞ்சியும் சிறுக்கனும் மடிதல்)

இடுவார் படுவார் கெடுவார் களத்தில்
இவரோ டெதிர்க்கப் படாதினி யென்பார்
என்பார் குதிரைத் [19]திரள்கள் நெருங்க
[20]இனிப்போக வொட்டா ரென்றே பொருவார்
போருக் களந்தனில் வெத்திலைச் சிறுக்கன்
பொன்னணஞ்சி சின்னணஞ்சி யும்பட்டார்
பட்டா லினிநா மிருப்பது மில்லை
பரிசை யுடன்வாளது கைதனில் வாங்கி
[21]வாங்கின பொழுதிலே வந்தபேரை யெல்லாம்
[22]வல்லயத் தாலிரு கூறாகச் செய்தார்
செய்யும் படிக்கு ஒருத்தர் உண்டோதான்
செருமியே வாயுதங் கையி லெடுத்தார்
எடுத்த வுடனே யெதிர்நின்ற பேரை
ஏழெட்டுப் பேர்களைக் குத்திச் சரித்தார்

(இருளன் அண்ணாவி புறங்காட்டி ஓடல்)

குத்தி சரித்த படைகள் அத்தனையும்
கூண்டு வண்டியி லேற்றியே குவித்தார்
அப்போது இருளன் அண்ணாவி ஆயானும்

ஆள்வீரன் அணஞ்ச ராசன் அவரும்
அப்போது அணஞ்சவ ராசன் அவர்தானும்
ஆள்வீரன் ஆயான் இருளன் அண்ணாவியும்
மிஞ்ச வந்தபடை தம்மிலே அஞ்சி
வீணாக நாமள் வந்தோமே யென்று
போருக்கு வந்தவர் புறங்காட்டி ஓட
தென்காசி ஊரில் வந்த வண்ணார்கள்
சீவலமார்பன் தனக்குச் செப்பலுற் றாரே.

தரணி –பூமி. **இத்தரை** –இவ்வளவ (மலையாளமொழி). **விசம்** –சினம். **மண்டை** –தலை. **தமயன்** –மூத்தோன். **பாலவக்கரப்படை** –தற்காப்புப் படை. **வாய்த்தாரம்** –வாயால் பேரொலி எழுப்புதல். **உபகாரம்** –உதவி. **நரக வேதை** –நரகவேதனை. **சுத்தி** –சுற்றி. **வல்லயம்** –ஒருவகை ஈட்டி. **அவத்தம்** – ஆபத்து. **சேனை** –படை. **வசமில்லை**– ஒழுங்கில்லை. **அஞ்சி** –பயந்து. **சமுதாடு** –ஈட்டியின் வகை, ஓராயுதம். **தூசிபடை** –குதிரைப்படை. **அஞ்சாறு** –ஐந்து, ஆறு. **திரள்** –திரளை. **பரிசை** –கேடகம். **கூண்டு வண்டி** –கூண்டு போல் மேலே மூடிய வண்டி.

பா.வே. 1. தகப்பேறு 2. பெற்றதால் பாவமோ 3. சீவலமார்பன் 4. விசமந்தான் முட்டேறி 6. பல சொற்காற்படை 7. அளவற்ற 8. வந்தவரும் உண்டோ சொல்லுவீர் என்றான். 9. சோறு 10. வீரமுனி பால்காரர் முன்னேவர 11. விற்பனை செய்ய. 13. அசந்து 16. ஈசாவின் கைலையில் குமரா சமுதாடு. 17. தூசு போலவே 19. தேர்கன் 20. ஏறியே போக ஓட்டவில்லை என்பான். 21. வணங்கினபோது 22. ஒரு சேர எதிர்த்தார்.

சு.சொ. 5. ஏந்திளை 12. வழைந்தார் 14. எனறிருழன் 15. பிறங்காட்டு 18. ஒழிப்பார்.

Ponnuruvi informs Civalamāran of her son's stance

Leaving her son whom thus greeted her in reverence
Ponnuruvi did muse,
"Lo! What evil is this, is it due to misdeeds past ,
Is this the result of penance all"
To have a son who would not listen to his mother's words
Is it the destiny ordained by **Piraman**?
Lo! I have suffered to this extent despite all my penance"
Thus lamenting did she arrive in **Civalamāran**'s presence
And apprised him of all that **Civannañcaperumāl** said

Sending troops to capture and bring Ci<u>nn</u>anañcā<u>n</u>

On listening to **Po<u>nn</u>uruvi** who conveyed the words
Of stubborn refusal of **Ci<u>nn</u>anañcā<u>n</u>**
Civalamāra<u>n</u> did open his mouth in angry disbelief,
And with venomous fury making his head reel,
His eyes welled with tears
On seeing such ire of her brother **Po<u>nn</u>uruvi** was afraid,
As she thus stood in trepidation,
He summoned his bodyguards,
Hand all other regiments as well,
To fight with his nephew
All the soldiers of the army at his bidding,
Started to fight singing *Kuravai*[1]
"Are we to fight and die for a *Vaṇṇātti'* sake?
But it cannot be helped,
As we have to serve loyally our king,
Who has fed us so far
We will go alive to infernal hell if he betray him"

The soldiers surround the court hall

With warriors carrying swords forming the vanguard,
And challenging that they won't spare the enemy,
And a band elegant archers in a row
Assembled along with others who wielded weapons
And surrounded the court hall on sides all,
Placing at the entrances all four the army men
In strategic formation all around,
Irula<u>n</u> opens the door of the hall and sees the soldiers
On hearing the din and bustle of the army
Irula<u>n</u> got up slowly taking a lance in his hand
Saying that "Both of us should go out and fight,

If we confine ourselves to the hall or fort
Oh! **Civa<u>n</u>aṇañcaperumāl** we will have to face
Scorn and disgrace as cowards"
As **Irula<u>n</u>** the mentor spoke thus
Ci<u>nn</u>anañcā<u>n</u> did remark

He asks Ci<u>nn</u>anañci to leave the court hall

"Oh! lovely creeper like damsel **Ci<u>nn</u>aṇañci**
An army is moving in here incessantly
It is not safe for you to be here
Oh! lass go to thy kinsfolk"

Ci<u>nn</u>aṇañci's reply

"If you ask me to leave now,
Will I retreat fearing war?
I won't go, leave I won't Oh! virtuous one
I shall die if I am destined thus"

Ci<u>nn</u>aṇañcā<u>n</u> fights with the soldiers

The king did take a **Camutātu**[2] in his hand
And wearing the *kaccai* tightly and elegantly as well,
The handsome **Civa<u>n</u>anañcaperumāl,**
Along with **Irula<u>n</u>** and the *Ci<u>r</u>ukka<u>n</u>*
Who tempted with betel leaves,
The Prince did fight along with his dust raising Cavalry,
Taking weapons to fight to the finish in the war,
He did wield a small sword and a shield,
And came out daring the enemy to fight,

Soldiers are killed in the battle field

Even as **Ci<u>nn</u>aṉañcā<u>n</u>** stepped out,
He did hack soldiers five or six,
Surrounding all those who opposed him,
They all felt trapped in the field
"Oh, we have come here in our folly,
Lo!" they cried and sought the escape route,
Searched for the way to escaped and ran,
And also hid themselves in the forest,
They considered the prince as **Civa,** god of destruction,
Hid themselves seeking places of concealment and shelter,

Ci<u>nn</u>aṉañci and Ci<u>r</u>ukka<u>n</u> die in the battle field

Laid themselves low, fell dead and distinguished
On the battle field crying we cannot fight with him"
As hordes of cavalry neared them,
They did fight saying" we won't be allowed to leave"
At such juncture in the battle,
The *Ci<u>r</u>ukka<u>n</u>* and **Ci<u>nn</u>aṉañci** fell dead
As they were killed at the battle field
The prince on noticing their death did swear,
"As they are dead we should fight,
No use living hereafter"
Thus proclaiming he took his sword and shield
And cleaved all those who came against him,
With his *Vallayam*[3]
He yielded weapons in such dexterity,
As none else could fight like that,
Even as he took the weapons on hand,
He hacked and felled seven or eight then and there.

Irulan̲ retreats and flees from the field

All the soldiers thus killed and felled,
Were dumped in covered carts
Irulan̲ the mentor and **Anañcavarācan̲**
At such a juncture did see an overwhelming army
Fearing the onslaught of such an army huge,
Thinking that it would be futile to fight
Retreated from the battle field and fled
The washermen who came from **Ten̲kāci**
Did inform **Cīvalalmārpan̲** of the news

1. *Kuravai* - Choral song by way of ululation
2. **Camutātu** - A lance like weapon
3. *Vallayam* - A kind of spear

(ஒட்டனை அழைத்துச் சீவலமார்பனுக்குச் செய்தி அனுப்புதல்)

116. சீவலப ராசனுக்குச் செய்தி செப்பவென்று
சேட்டையுள்ள ஒட்டனைத்தான் கூட்டிவர [1]வழைத்து
செய்தி சொல்ல வேணுமென்று ஒட்டனையும் அழைத்து
செய்தியெல்லாஞ சொல்லியவர் சீக்கிரத்தில் அனுப்ப
வார்த்தைகேட்ட ஒட்டனவன் வாறதந்த நேரம்
எந்தவூரு எந்ததேசம் இங்கவந்த தென்ன
ஏத்தசீவலப ராசன் இசைந்தவருங் [2]கேட்க
ஊருந் தென்காசி பேர்சேட்டையுள்ள ஒட்டன்
உத்தமரே ஓடிவந்து உபசரிக்க வேணும்
வாய்திறந்தே ஒட்டனவன் வளமையெல்லாஞ் சொல்ல
வண்ணாரோட படைகளெல்லாம் வாளால்வெட்டி வெரட்டி
மிஞ்சின படைகளெல்லாந் தஞ்சமென்று வந்த
விவரமெல்லாஞ் சொல்லுதற்கு விரைந்தோடி வந்தேன்.

(சீவலபராசன் படையோடு புறப்படுதல்)

அப்போது சீவலப ராசனவர் தானும்
அன்பாய் ஒட்டாநீ போவென்றார் படைகளெல்லாம்
சீவலபராசன் சிறந்த கொலுவிட் டிறங்கி
காலாளும் கரிபரியும் கம்பமத யானைகளும்
ஆறிலொரு கடமைதண்டி அசையாத மடியுங்கெட்டி
கூடிநின்று குறையாமல் குவலயத்தில் அரசாண்டார்
கொல்லஇரும்பு வண்டிகளும் கூண்டுலெச்சம் காலாளும்
காலாளும் கரிபரியும் கம்பமத யானைகளும்
கொல்லத்துவில் லாளர்களும் கொச்சிக்கோட்டை நாயன்மாரும்
வில்பரிசை விற்கடையும் வெட்டடவு கட்டதிரும்
சீவலப ராசனவன் சென்றபடை நாடுவிட்டு
கடையுங்கடைத்த தெருவுமிட்டு கடந்துபடை முடுகிடவே
முன்னணையை முன்னடத்தி பின்னணையைப் பின்னடத்தி
ஓடிஓடியே யவர்கள் உல்லாசமா யவர்கள்
தந்திரமாய்ப் படைகளெல்லாம் வெற்றிகொள்ள வேணுமென்று
பாச்சலிட்டு வாறாரே பலகோடி படைகளது
பின்னாலே சீவலபராசன் துப்பமனமாய் [3]எழுந்தருள
சிவனணஞ்ச பெருமாளிருக்குஞ் சிங்காசனம் வந்துகண்டு
அண்ணாவி இருளனாயான் அவர்கூடி அங்கிருக்க

(இருபடையும் மோதல்)

சிவனணஞ்ச பெருமாளும் திருநயனம் வடிவதனால்
திருநயனம் வடிவதனால் சென்றுபார்க்கும் வேளையிலே
வருகுதல்லோ மாமன்படை மட்டுதிக் கில்லாதபடை
சபர்தமிட்டு சொன்னதொரு சமயமிது வாச்சுதுகாண்
மாமனுட மனத்திறமோ மருமகனிடம் கைத்திறமோ

முன்புசொன்ன வார்த்தைகளும் முடியாதென்று குறிக்கிறதே
சீவலப ராசாவுன்னை செங்கிடாபோல் பிளப்பேன்.

சேட்டையுள்ள ஒட்டன் –திறமையுள்ள ஒட்டன், ஒற்றன். **உபசரிக்க** – மரியாதை பண்ண. **வெரட்டி** –வெருட்டி, அச்சுறுத்தி. **தஞ்சம்** –அடைக்கலம். **காலாள்** –நால்வகைச் சேனைகளிலொன்று. **கரி** –யானை. **பரி** –குதிரை. **ஆறிலொரு கடமை** –மக்களின் வருமானத்தில் பெறப்படும் ஆறிலொரு பங்கு வரிப்பணம். **தண்டி** –வசூலித்து. **குவலயம்** –பூமி. **கூண்டு** –கூடி. **லெச்சம்** –இலட்சம். **கொல்லத்து வில்லாளர்** –கொல்லும் வலிமையுடைய வில்லை ஏந்தியவர். **பாச்சலிட்டு** –பாய்ந்து. **சிங்காசனம்** –சிங்காதனம். இருக்கை. **திருநயனம்** –கண். **சபர்தம்** –சபதம். **செங்கிடா** – ஆட்டுக்கடா.

க.சொ. 1. வளைத்து 2. கேள்க்க 3. எளுந்தருள.

They send for a messenger to convey the news to Civalamārpan̲

To convey the news to **Civalamārācan̲,**
They sent for and brought a competent **Ottan̲**[1]
And directed him quickly for that task,
And thus directed the **ottan̲** did rush on his mission,
Civalarācan̲ did ask the messenger
Where he came from and the purpose of his errand
The **ottan̲** did reply " I am from **Ten̲kāci,**
My name is **ottan̲**"

The ottan̲ conveys the news

"Oh! good lord please oblige"
Thus entreating the **ottan̲** did convey the news,
That all the men of the army of washermen,
Had been hacked and routed by **Cin̲n̲aṇañcān̲**
And the survivors had fled seeking refuge

Civalaparācan̲ sets out with his army

On hearing message such from the **ottan̲,**
Civalarācan̲ kindly asked the **ottan̲** to leave

And then descending from his seat at the court hall,
He ordered his army for invasion,
His infantry, cavalry, and elephants raging,
Murderous archers and *nāyars*[2] from the fort of **Kocci**[3]
With iron carts one lakh infantry men to kill,
And with bows lances and shields sounding thunderously,
Thus did **Civalarācan̲'s** army leave his place
Leaving the bazarstreet and the shops therein,
The army did move vigorously and fast,
With those in the vanguard led in the front,
And the army in the rear led in the rear,
They did advance in convoys clever,
Gaily did they gallop in millions surging
With **Civalamārācan̲** following them in gear proper
They did arrive and see **Cin̲n̲an̲añcān̲** seated on his throne,
With **Irulan̲** the mentor by his side,

The clash of both armies

When **Civan̲añcaperumāl** did see with his eyes elegant
The army of his uncle thus rushing from directions all
Without end or limit any
He mused,
"My uncle's army it is coming thus,
This is an opportunity fine to meet the challenge
Let me see whether it is my uncle's strong will
Or the dexterity of my hands which gains the upper hand,
Is it destined thus to fulfil the challenges made earlier?
Oh! **Cīvalārāca** I shall cleave you into two
Like a ram for certain"

1. **Ottan** - Emissary or messenger
2. *Nāyars* - A warrior class of **Kērala**
4. **Kocci** - **Cochin**, a port city of **Kērala**

(சீவலபராசனை வெட்டச் சின்னணஞ்சபெருமாள் ஆயுதம் எடுத்தல்)

117. என்றுசொல்லி சபதமிட்ட தின்றுவந்து வாச்சுதுகாண்
என்றுசொல்லி அணஞ்சவனார் இருபேரும் பூரித்துக்கொண்டு
கொண்டாடி ஆயானோடு கூறுவாராம் அணஞ்சவனார்
வெட்டுளியும் அம்பினையும் வேல்கடையம் கையிலெடுத்து
வெகுவாக கையிலெடுத்தார் நகுலணஞ்ச பெருமாளும்
வேட்டைகேடய குந்தங்கள் ஈட்டியோடு வாளாம்
தொட்டெடுத்தார் பதினாயிரம் சூரனணஞ்ச வனாரும்
எடுத்தபடை முடுகிடவே ஏத்தசீவல ராசன்

(இருவரும் மாறிமாறி வெட்டலும் தடுத்தலும்)

வெட்டிடவே [1]எழுந்திருந்து பொன்னணஞ்ச பெருமாளும்
தெட்டனவே படையில் சென்றவர்கள் போர்தொடுக்க
ராசனும் வெட்டவே நல்லபெருமாளும் வெட்டவே
தட்டி வெட்டவே முட்டுக் கம்பதால்
தடுத்துக் கொண்டாரே முட்டுக் கம்பதால்
வெகுவெகெனக் கையிலெடுத்தார் சோட்டையந் தானெடுத்தார்
நாகபாசக் கணையெடுத்தார் நகுலணஞ்ச பெருமாளும்,
ஓங்கி வெட்டவே சீவல ராசனும்
ஒதுங்கிக் கொண்டாரே சிவனணஞ்ச பெருமாளும்
ஏண்டா பயலே இப்போ உன்னைநான்
ரெண்டு துண்டதாய் வெட்டிப் போடுவேன்
மாமன் என்றுன்னை மரியரி பாராமல்
வாளுக்கு இரையாக வாங்கிடு வேனான்
இப்போ பாரடா என்று சொல்லியே
என்னுடைய மருமகன் நீயும் ஆனால்
உன்னை இங்கே சதிக்கிறேன் காணிப்போ

உற்ற [2]தோழன் அண்ணாவி நீயோடா
இருளன் என்ற அண்ணாவி நீதானோ
என்னை வெல்லவும் உங்களா லாமோடா
இருக்கப் பறக்கத் [3]தொழில்களு முண்டு
இங்கித மானபல் வித்தையும் உண்டு
கற்றுக் கொடுத்த இல்லத் தைநான்
கையில் வாளால் ஓங்கற வெட்டுவேன்
என்று சீவல ராசனுஞ் சொல்லவே

(சிவனணஞ்ச பெருமாளும் இருளன் ஆயானும்
சீவல மார்பனுடன் போரிடல்)

வெட்டுப் பட்டால் படாத பச்சலை
வெட்டுப் பட்டால் வெட்டற பச்சலை
குத்துப் பட்டால் குத்தாத பச்சலை
இந்த விதமாய் இருளன் ஆயான்
ஓடி வந்தான் ஒருகூளி போலே
உத்த படையோடே உயிர்கொண்டு போவாயோ
ஆரடா இங்கே வந்து அதட்டுறாய்
அனுபாதஞ் சொல்லி அறியாயோ
சிந்தை மெய்க்குஞ் சிவனணஞ்ச பெருமாளே
சிந்தை யானது சற்றும் அறியாயோ
கொத்தளித்தப் படை தத்தளித்த தெனவே
கூண்டபடை நடுவே கூண்டிப்போர் செய்தாரே
வெட்டுகள் படவே சட்டைகள் அறவே
[4]விரைவாய் ரத்தம் ஆறாய் ஓட
அங்கே வெடிகொண்டு அவர்சுடு வாராம்
குத்துகள் படவே குடல்கள் சரிய
கோராய் ரத்தம் ஆறாய் ஓட

கொலைக்களம் அதிலே விழுவாராம்
சட்டைகள் அறவே முட்டுகள் முறிய
தத்தித் தத்தியாய படைகள் [5]முக்குளித்து
ஒடைகள் அதிலே விழுந்திடு மாமே.
வெட்டுக் [6]காலிழந்து விடுவம்பு தைத்ததுவும்
வீரர்கள் இருமுறி யாகவே
[7]விழுந்தவர் வெடிகொண்டு சுடுவாராம்
திட்டவட்ட மாகவே வெட்டி யவர்முன்
கட்டி வளைந்தவர்கள் முட்டிமுட்டி ஒடுவாராம்

(சின்னணஞ்சான் சீவலராசனின் தலையையறுத்துத் திருப்பாற்கடலில் எறிதல்)

சுழலும் பாணக் கணைதன்னை எடுத்து
சூரன்சிவ னணஞ்ச பெருமாள்
தூசியாக் கியேபடையை வெட்டுளிதன்னை எடுத்து
சீவல ராசனின் விரைந்த தலையறுத்து
திருப்பாற் கடலில் விட்டெறிந் தாரே.

வெட்டுளி –வெட்டுங் கருவியிலொன்று. **அம்பு** –கணை. **வேல்** –சூலம். **கடையம்** –கடகம். **சோட்டையம்** –சோட்டாத்தடி, தடிக்கம்பு. **நாகபாசக் கணை** –பாம்புக்கணை. **மரியாதி** –மரியாதை. **சதிக்கிறேன்** –அழிக்கிறேன். **பச்சலை** –பச்சிலை. **கூளி** –குள்ளமான பேய். **உத்த** –உற்ற. **சட்டை** –அங்கி. **கோறாய்** –கொடுமையாய். **ஓடை**–நீரோடை. **கணை** –அம்பு. **தூசி** –துகள், புழுதி.

சு.சொ. 1. எளுந்திருந்து 2. தோளன் 3. ளொளில் 4. விரவாய் 5. முக்குளித்து 6. காளிளந்து 7. விளுந்தவர்.

Cin̲n̲aṇañcān̲ takes weapons to hack Cīvallalparācan̲

Saying that the vow taken earlier is to be fulfilled now,
Aṇañcavan̲ did feel delighted and told **Iruḷan̲** thus,
And took in his hands weapons several,

Cutting chisel, arrows, spears and shield,
Lances, swords sticks and hunting weapons as well
Aṇañcaperumāḷ the doughty warrior did thus equip himself
And his men rushed to fight **Cīvalarācaṉ**

Both Ciṉṉaṇañcāṉ and Cīvalārācaṉ fight ferociously

As the armies of both kings did fight
And were engaged in fatal combat,
Cīvalārācaṉ and **Ciṉṉaṇañcāṉ** did fight,
Wielding their swords in alternate vigour,
And shielding themselves from the cutting swords
By using propsticks.
As **Cīvalarācaṉ** did raise his sword and strike,
Civaṉaṇañcaperumāḷ did move aside dexterously,
"Cleave you now I shall into two
Thou fellow"
"Unmindful of your being my uncle
Without reverence I shall make you a prey
Of my sword see now valour mine"
"If thou art my nephew veritable,
I shall melt you in a duel here and now,
Oh! Are you **Iruḷaṉ** the mentor?
Can you both ever conquer me?
"Tricks there are many to stay and fly
Devices discreet are there as well,
Whatever I have learnt or not,
I shall with my sword in hand
Hack you now"
As **Civalarācaṉ** did thus proclaim

Iruḷaṉ brings herbs to the battle field

Iruḷaṉ the mentor did bring to the battle field
Like a *kūḷi*[1] he arrived there,

With some herbs as antidote to avoid cuts
And some other herbs to avoid stabbing
"Oh! Will you take away our lives,
With the help of army thine?
Who art thou to thus admonishus?"

Civa̲nanañcaperumāl fights vigorously

As army both struggled for supremacy,
Ci̲n̲n̲anañcā̲n̲ did fight amidst the covering forces,
Cutting the foes with their garments snapped,
With bleed flowing like a river fast
With firearms he did shoot ,
Many were stabbed with their intestines falling out,
They fell in the slaughtering field
In the streams of blood there fell
Rows of armies with noses disfigured
Knee joints cracked and garments torn
As soldiers many lost their legs pierced by arrows,
They did resort to shooting with fire arms
Against those who hacked with swords
In a plan meticulous,
Enemies unable to withstand did crawl on their knees
And ran from the field.

Civalarāca̲n̲ beheaded and his head thrown in Tiruppā̲r̲kaṭal

Civa̲n̲aṇañcaperumāḷ the brave one raising dust
In the thick of the battle thus with an arrow
Revolving and quite powerful,
Did take a *veṭṭuḷi*[2] and severed
The head of **Civalarāca̲n̲** with that weapon
Then he threw that head in **Tiruppā̲r̲kaṭal**

1. *Kūḷi* - A dwarfish ghost
2. *Veṭuḷi* - Cutting Chisel

(சிவனணஞ்ச பெருமாள் திருப்பாற்கடலில் நீராடிச் சிவனைக் காணச் செல்லுதல்)

118. திருப்பாற் கடலில் தீர்த்தம் ஆடி
சிவனணஞ்ச பெருமாள் சிவனிடத்தில் போகவென்று
செப்பமுடனே நடந்து . . . .
அப்புச்சடை அரனிருக்கும் அரங்கையிலே போக
அருளணஞ்ச பெருமாளும் சிறுமனசு கொண்டு
திருநயன மூன்றுடைய சிவனிக்கார ரென்று
சிறந்த மலையாக சிவனிடத்தில் போக
மாடதிலே ஏறுமந்த மகாதேவரைக் கண்டு
[1]மனமகிழ்ந்து பொன்ன ணஞ்ச பெருமாள்

(சிவனணஞ்ச பெருமாளின் பழைய நினைவுகள்)

முன்னொருநாள் மலையதிலே ஏறிவழி நடந்து
முகனையுள்ள இருளரையும் கண்டுவித்தை படித்தார்
இந்திரஜாலம் மந்திரஜாலம் இமயஜால மெல்லாம்
இமைக்கு முன்னே தான்படித்து அந்தமலை இறங்கி
மன்னரசர் வாதுதொழில் வாள்போல அமைந்து
வீரமறவனல்ல பச்சிலையும் வாங்கிக் கொண்டுவந்து
செப்பெடுத்தேன் சிவனெடுத்தேன் சிவமருந்து தானெடுத்தேன்
சேராத பெண்களையும் சேரும்படி தந்தான்
[2]காட்டுவழியே போனால்நம்மைக் கண்டார்கள் அறிவார்கள்
தென்காசி ஊருமிட்டு திப்பரப்புமலையில் வந்தாரே.

அப்புச்சடை அரன் –கங்கை நதியைச் சடையில் தாங்கியுள்ள சிவபெருமான். **அரங்கை** – இடம். **திருநயன மூன்றுடைய** – மூன்று கண்களையுடைய சிவபெருமான். **மாடு** – சிவபிரானின் வாகனம். **மகாதேவர்** –சிவபிரான். **முகனை** –ஆதி. **இந்திரஜாலம்** – அற்புதங்களைக் காட்டும் வித்தை. **இமைக்கும் முன்னே** –சிலநொடியில்.

க.சொ. 1. மனமகிள்ந்து 2. காட்டுவளி.

Civaṉañcaperumāl bathes in Tiruppāṟkatal and proceeds to meet Lord Civaṉ

Civaṉaṇañcaperumāl did bathe in the holy **Tiruppāṟkaṭal**
And deciding to undertake a pilgrimage,
To the abode of Lord **Civaṉ** bearing **Kaṅkai**[1]
On his locks
Inclined to meet Lord **Civaṉ** such he walked but properly
To meet the triple eyed **Civaṉ** in his mountainous resort
Poṉṉanañcaperumāl did thus proceed happily
To meet **Makātēvar** mounted on his bull

Ciṉṉaṇañcāṉ muses over part memories

As he did thus proceed to meet **Civaṉ**
He did recollect how he did once
Walk over mountains to find the **Iruḷaṉ**
And learnt from him many a magical trick
And also found the use of herbs and potions
To lure women to his company amorous
"If I go through that jungle path,
Those who see me there with recognize"
Thus musing he did leave **Teṉkāci** and arrived at
Tipparappumalai

1. *Kankai* - Ganges river supposed to have been held on the head of civan and released later

(சின்னணைஞ்ச பெருமான் பல இடங்களைக் கடந்து வடமலை அடைதல்)

119. திப்பரப்பு மலைகடந்து சிறந்தநல்ல ஆறுமிட்டு
காவலவன் அணைஞ்சவனார் கயத்தாறு தனைக்கடந்து
அடுத்தஆறு தனையுமிட்டு [1]அழகான சுனையருகே

திப்பரப்பு மலையுமிட்டு சிங்கார மலைகடந்து
காக்கழுக்கஞ் சீமையிட்டு கண்ணாடி தேசம்விட்டார்
ஒத்தபாலம் சீமைவிட்டு உருண்டமலை வாரமடைகடந்து
உலக்கையருவி தான்கடந்து உத்தகண்ணாடி சோலைவிட்டு
தெருவெல்லாம் மறுபுகழும் வையகத்தில் கீர்த்திபெற்ற
வைகுண்ட பெருமடம் அனுமான் குதித்தெழும்பும்
அயோத்தி மாமலையும் புவனத்தில் வாழுமலை
பூசகர்கள் வாழுமலை சின்னமா [2]கிரிசூழும்
சித்திரகூட பர்வதத்தில் வந்தாரே
உலக்கையருவி அதிலே வந்து தீர்த்தமாடி
பல்மனையுஞ் சோலைகளும் குண்டுங் குமடுகளும்
பாராரே அணஞ்சவனார் பாராளும் புலிபோலே
அடவுடனே குமட்டில்வர அன்னம் விளையாட
அணில்கள்இசை பாடிவர குயில்கள் குருவூதி
பல்விதமாய் பூட்டிகூட்டி பல்விதமாய்ப் பார்த்துவர
பல்விதமாய் கொத்தப்பாய் பாரில் கரையாளர்
தடமேவர என்றுசொல்லி தானணஞ்ச பெருமாளும்
தாரோடு வடமலையில் வந்தாரே.

கயத்தாறு –நாகர்கோயில் சென்னை நெடுஞ்சாலையில் திருநெல்வேலியிலிருந்து 30 கி.மீ. தொலைவிலுள்ள ஓர் ஊர். கட்டப்பொம்மன் இங்குத் தூக்கிலிடப்பட்டான். **சுனை** –குளம், நீர்நிலை. **கரையாளர்** –நாஞ்சில் நாட்டுக் கரையில் (**கரை** –நாஞ்சில் நாட்டுப் பகுதிகளில்) வரிப்பணம் வாங்குபவர்).

சு.சொ. 1. அளகான 2. கிரிசூளும்.

Ci<u>nn</u>anañcaperumāl reaches vaṭamalai after passing several places

Leaving **Tipparappu malai** and a nice and fine river there
Anañcavan did pass **kayattāṟu**[1]
An adjacent river too did he pass and a beautiful stream nearby,

Then did he pass **Tipparappumalai** and **Cinkāramalai** as well,
Then did he pass **Kākkamūkka ncimai** and **Kannātitēcam**
Leaving **Ottapālam** region he did pass **Uruntamalai** and **Vāramalai**
Passed he then **Ulakkai** falls and **Kannaticcolai**
Then did he arrive at **Vaikuntapperumatam**
The streets of which are famed for wrestling
And the big mountain at **Ayōtti** from where
Anumān sprang in action,
And reached **Cittirakūta** mountain surrounded by hills small,
Where priests live as well
Thus did **Anañcavan** pass groves, mountains
And habitations and jungles too,
He passed all of them like a tiger ruling the world
In the forests and mountains that he passed
He did come across swans playing,
Squirrels singing along with cuckoos,
And with **Karaiyāḷar**[2] there showing the way proper
Thus did **Anañcavanā**'t arrive at **Vaṭamalai**

1. **Kayattāru** - The place where Kattapomman was hanged by the British army
2. **Karayāḷar** - Tax collectors at the borders area of **Nañcil** (**Kanyakumari** region)

(வடமலையின் சிறப்பு)

120. வந்தார் புதியமரச் சோலையிலே
மயிலாடிய சந்தன மாமலையாம்
கூந்தப் பனையாம் குமடுமலையாம்
கூடிநடனங்கள் ஆடியமா மலையாம்
செஞ்சந் தனமாம் புன்னைமா மரமாம்
சித்திர வேங்கையோ டணியாம்
[1]தாழை மணம்வீசும் சோலையிலே
சங்கை யாகிய அணஞ்ச வனார்

[2]ஆணழகர் மல்காரராம் அழகான மாமரமாம்
வளைகளாம் மதுகா ரைகளாம்
மஞ்சாடி சோலைகளும் தோத கத்தியும்
தூங்கு தவஞ்செய்யும் முனிமலையாம்
துடிதோ ரிடையார் சிலையான மலையாம்
கருஞ்சீ ரகமாம் ஜாதிக் காயதுவாம்
கனவுள்ளி மிளகுநல் சீரகமாம்
கறுத்த தேயிலை வருக்கைப்பிலா
கனியாய்க் காய்த்திடும் மாமரம் பூமரம்
கண்டே [3]புகழ்ந்திட அணஞ்சவ ராசன்
கனகாவிலே ஏறியே நடந்தார்
நடந்தனரே அணஞ்சவனார் நல்லதிருப் பாதம்நோக்கி
கடந்தனரே காடுவல காட்டுப்புதூர் மலையும்விட்டு

(காட்டில் கன்னியர்களைச் சின்னணஞ்சான் காணுதல்)

அடுத்தகல் லாறுமிட்டு ஆனைமலை சோலைவிட்டு
கலியுகமாய் கண்டாரே [4]கானில்வாழும் கன்னியர்கள்
பாசமுட னணஞ்சவனார் பகருவாராம் ஒருவார்த்தை
நாட்டமுடன் இவ்விடத்தில் நான்காணா இடமுமில்லை
வையகமே தாழ்ந்ததென்ன மலைகளெல்லாம் ஒசந்ததென்ன
மெய்யாகச் சொல்லுகிறேன் விபரமாக்க கேட்டிடுவீர்
பொய்யாத உலகமதில் பூமியதில் மூன்றிலொன்று
செய்யசிவ னருளாலே சிறந்தகடல் மூன்றிலொன்று
மண்ணுலகில் வாழ்ந்தமலை வையகத்தில் மூன்றிலொன்று
சென்றறிந்து நானுமிப்போ சிவனிடத்தில் போக வேணும்
பரமசிவன் தன்னைக்கண்டு பக்திவரம் கேட்கவென்றார்.

கூந்தப்பனை –பனைமரத்தின் ஒரு வகை. **குமடு** –குவடு, குன்று, மலையுச்சி. **புன்னை** –புன்னைமரம். **வேங்கை** –ஒருமரம். **தாழை** – பூவுள்ள புதர். **வளை** –புற்று. **மதுகாரை** –ஒரு மரம். **தோதகத்தி** –நூக்கமரம். **கருஞ்சீரகம்** –ஒரு சரக்கு. **ஜாதிக்காய்** –ஒரு சரக்கு. **கவுள்ளி** –வெங்காயம், வெள்ளைப்பூண்டு. **மிளகு** –ஒரு சரக்கு. **பிலா** –பலா. **கனகா** –அடர்ந்த சோலை. **பகருவாராம்** – சொல்லுவாராம். **வையகம்** – உலகம். **ஒசந்த** –உயர்ந்த என்பதின் பேச்சு வழக்கு.

ச.சொ. 1. தாளை 2. ஆணைகள் 3. புகள்ந்திட 4. வாளுங்.

The glory of Vaṭamalai

Arrived he at a grove of trees there,
At that sandal mountain where peacocks danced,
With *Kūntapaṉai*[1] palms at it s peak,
Where cuckoos sing and dance in joy,
Red sandal wood and big *Puṉṉai*[2] trees,
Along with *Vēṅkai*[3] trees in picturesque rows,
A grove such smelling of screw pine,
There was **Aṉañcavaṉ** the handsome prince,
Amidst ant hills, herbs, and mango trees,
Groves of *mañcātti*[4] and *tātakatti*[5] trees,
With such groves was there **Muṉimalai** as if in drowsy penance,
A mountain like the statue of a damsel slim waisted,
Black cumin seeds and nutmeg fruits,
Onions, pepper and cumin seeds,
Black tea leaves and *Varukkai*[6] jack fruits
Mango trees yielding ripe fruits directly from flowers
Seeing all these in wondrous appreciation expressed,
Aṉañcavārācaṉ walked along
Towards the beneficial feet of the glorious Lord
Passed he many a forest and left the mountain,
At **Kāṭṭupputūr**

Ciṉṉanañcāṉ sees maidens dwelling in the forest

Leaving next the river **Kallāṟu**
And the grove at **Āṉaimalai,**
He did see there damsels dwelling at the forest

On seeing damsels there at the forest
Anañcavan spoke kindly to them,
"Seen I have so many places on earth
But here I find the earth lowered
And the mountains rising high,
This must be the place graced by **Civan**
A place where a third of the earth and ocean'
Had joined to exist here in this mountain
In order to find out that formula divine
And to seek a boon from Lord **Civan**
Go now I must to **Paramacivan**"

1. **Kuntapanai** - A kind of palm tree
2 - 5. Name of various kinds of tree
6. *Varukka i*- A kind of jack fruit

(காக்காச்சி பொன் மலைச் சிறப்பு)

121. வந்தனரே சிவனணஞ்ச பெருமான் காக்காச்சி பொன்மலை மீதிலே
அந்தமுள்ள கலைமானும் புள்ளியுள்ள கரடியும்
அருவரையில் ஆடும்மலர்ப் பொய்கைகளாம்
பந்தமிட்டு எரியுமடு [1]கருணையாழி கடவுளார்
பால்வானமாம் பெரிய கோபுரமாம்
அணில்கள் இசைபாடிவர குயில்குரு ஊதிவர
[2]அழகுடைய பொய்கைமலை வீதியில்
மாணிக்க மதுவிளையும் கேளிக்கை அழகுபோல்
பருவிதமாய்த் [3]தொழுதுவரும் மகராசன் அணஞ்சவனார்
மந்திர கிரிமலையின் காவதிலே வந்து
சிந்தையுடன் அகத்தியர்கள் சிறப்பாக இருக்கும்
தினந்தவறாமல் மாரிபுரந் தோறும் பெய்யுமலை
தெம்பாக [4]மாரிமழை தப்பாது பெய்யுமலை
மாளாது வாழுமலை தானாக நின்றமலை

பொன்மலை அழகுமலை புகழ்வேடர் வாழுமலை
பூங்காவனம் மாங்காவனம் பூச்சொரியும் மலையாம்
அரனை தவசுசெய்ய அன்புடனே நடந்துவர
கண்டனரே பரமசிவன் மண்டபங்கள் வந்திலங்க
கண்கொள்ளாத பொன்முத்து நின்றிலங்க
காண்கொண்ணாத மாலையொடு பூசனைகள்
தங்கத்தாலம் வந்திலங்கக் கண்டார்
கண்டனரே மாலைபதி ஆயிரங்கள் நின்றிலங்க
கண்டாரே பொன்னணஞ்ச பெருமாள்
பாரதத்தி லெல்லாம் பகவான் ஒளிபோலே
பைம்பொன் மணிமண்டபம் இலங்க
எத்திசையு மேகடலில் முத்துகளும் ரெத்தினங்கள்
வெள்ளிவிளக் காகவொளி வீசவே தவிகமணி மாலைகளும்
தான்மதிக்க வொண்ணாத முத்து
தத்திதத்தி பொத்திதோறு மின்னவே
சங்குமுத்து கன்னல்முத்து கரியாத கோட்டுமுத்து
தானதிலே இலங்கக் கண்டார் பொங்குங் கடலிலே
விளைந்த முத்துபோல் பொன்னிறங்கள் மின்னொளி போலவே
இத்தரையும் தானிலங்க எம்பெருமான் மண்டபத்தில்
[5]இளவழகன் பொன்னணஞ்ச பெருமாள் கல்லும் மலைகடந்து
கருத்தா யுமைத்தேடி வந்தேன்.

கலைமான் –ஆண் மான், **பந்தம்** –தீப்பந்தம். **கேளிக்கை** –விளையாட்டு. **புகழ்வேடர்** –வெற்றிவேடர். **அரன்** –சிவபெருமாள். **பூசனை** –ஆராதனை. **பொத்திபத்தி** –வரிசை.

க.சொ. 1. அளகுடைய 2. அளகுபோல் 3. தொளுது 4. மாரிமளை. 5. இலழகன்.

The glory of Kākkācci ponmalai

Cinnanañcān arrived at **Kākkācciponmalai**
Where spotted deer majestic and dotted bear as well strolled

Ponds in the mountain and burning torches in gorges there,
There stayed the God who doth shower grace
Milky sky and a tower huge,
With squirrels singing and cuckoos accompanying them with music theirs
In that beautiful mountain path strewn with ponds,
Looking so elegant as a show where emeralds grow
Anañcavanār did arrive on his mission of great worship,
Arrived he at **Mantirakiri** mountain grove,
The mountain where **Akattiyars**[1] dwell in glory
And where it rains without fail every day,
At the proper seasons vigorously,
A mountain immortal existing for ever
Which did emerge by itself
A mountain golden and beautiful where the famed hunters live
Flower gardens and mango groves on that mountain where flowers are showered
There did **Anañcavan** walk piously to worship **Aran**[2]
He saw there the *Manṭapam*[3] of **Civan** in splendour theirs,
Where gold and pearl filled beyond eyesight,
Garlands galore marking the worship
A gold plate sparkling was there too
He did see garlands in tens of thousands there
Ponnanañcāperumāl did also witness
The hall of sterling gold as lustrous,
As the halo of God over the entire *Pāratam*[4]
On directions all pearls of the oceans,
And gems shone like silver lamps,
Strings of gold and stones precious
And pearls invaluable did sparkle
In plantain groves amidst bunches of fruits
With a riot of colours golden glittering like pearls
All these were found in the hall of our Lord
Where the handsome **Ponnanañcān** arrived

Saying " I have passed rocks and mountains
In search of Thee"

1. **Akattiyars** - Saints
2. **Ara<u>n</u>** - **Civa<u>n</u>**
3. *Mantapam* - Hall
4. *Pāratam* - India

(சிவணஞ்ச பெருமாள் சிவனிடம் வரம்வேண்டுதல்)

122. [1]கண்முழித்துப்பாருங் கறைக்கண்டரே பொன்னுநல்ல கெண்டியிலே
பூவும் பன்னீருமிட்டு போற்றியந்த அணஞ்ச பெருமாள்
இருந்தடியோன் பொற்பாதத்தை நாளடியோன் [2]தொழுதுகொண்டார்
இங்குவாரும் மன்னவா சிவனணஞ்ச பெருமாளே
கைலாச மானதிலே கறைக்கண்டனார் ஓரகத்தில்
அங்கிருக்கும் பங்கமென்ன அருமையென்ன பெருமையென்ன
பொறுத்திருந்து அணஞ்சவனார் புண்ணியனார் தனைத் [2]தொழுது
செப்பமுள்ள அணஞ்சவனார் திருப்பாதம் போற்றிநின்றார்
திருப்பாதம் போற்றிநின்று சிவனணஞ்ச பெருமாளும்
கல்லு மலைகடந்து கட்டுமந்த வாசல்விட்டு
என்மனத்தைப் பாராமல் இப்படிநீ ரிருப்பதென்ன
பொன்னுநல்ல கெண்டியிலே பூவும் நீருமிட்டு
பரிமளமாங் கஸ்தூரி பொன்மலரும் பூமலரும்
போட்டவரைத் [2]தொழுதுநின்று ஏறிட்டுப் பாராமல்
ஈசுரனார் அங்கிருக்க சக்தியவர் இடமிருக்க
சங்கரனார் வலமிருக்க புத்தியுள்ளோர் இடமிருக்க
பொன்னரனார் வலமிருக்க அன்பாகஇருக்கின்ற கொலுவதிலே
அரனுக்கு அம்மையார் ஏதுசொல்லு வாளாம்
கேட்டருளும் மகாதேவா கிருபையுடன் ஒருவார்த்தை
ஆதிபரன் கைலையிலே அணஞ்சபெரு மாளவரும்

பரமசிவா உம்மைத்தேடி பாரணஞ்ச பெருமாளும்
கமந்ததலை நிமிர்த்தாமல் கமந்துகொண் டிருப்பதென்ன

(சிவபெருமான் அமரர் செய்யும் வேள்வியைச் செய்யச் சொல்லுதல்)

என்றவரும் சொல்கையிலே ஏதுசொல்வார் பரமசிவன்
உன்றனுக்கு ஏற்றபடி உபகாரஞ் செய்திடுவேன்
நான்சொன்ன சொல்படிக்கு அவன்நடந்தா யுண்டானால்
இன்பமுடன் சொல்லுகிறேன் இயலணஞ்ச பெருமாளே
இந்தநல்ல கைலையிலே ஏத்தநல்ல அமரரெல்லாம்
ஆயிரமா யிரம்பேர்கள் கைலாசம் வடசார்பில்
காண்பொருவர் மேல்கைலை சட்டமுடன் [3]வேள்விதன்னைத்
திட்டமுடன் வளர்த்துகிறார் வேள்விக்கு ஏத்ததெல்லாம்
விபரமாகச்சொல்லுகிறேன் ஆறுகோட்டை சாம்பிராணி
அடிவேள்வியில் தாபிப்பார் ஏழுகோட்டை குந்திரிக்கம்
[3]வேள்வியிலே தாபிப்பார்கள் அடுக்கடுக்காய்ச் சூடமும்
அதின்மேலே சந்தனமும் ஆகாசம் பூமியெல்லாம்
அழகுகுமடு யெல்லாம் கைலாச மண்டபத்தில்
கடும்புகையும் உற்றிடவே பரமசிவ னாரிருக்கும்
பாரகை லாசமதில் அண்டமுள்ள [3]வேள்வியாய்
ஆதிபர ராசனும் சங்கடத்தைத் தீர்க்க
இயலணஞ்ச பெருமாளே அப்படியே சிவனணஞ்ச பெருமாளுக்கு
ஆதிபரன் வரந்தா னென்றார்.

(சின்னணஞ்சான் இயலாது எனல்)

இத்தரையும் தானிலங்க எம்சிவனார் மண்டபத்தில்
இயலவன் பொன்னணஞ்ச பெருமாள் கல்லும்மலை கடந்து
கருத்தாயுமைத் தேடிவந்தேன் [1]கண்முழித்துப் பாருங் கறைக்கண்டரே

பொன்னுநல்ல கெண்டியிலே பூவும்பன் னீருமிட்டு
போற்றியிருந்த அணஞ்ச பெருமாள்நான் என்னடியேன் பொற்பாதத்தை
ஏற்றடியேன் போற்றிவந்தேன் என்னரனே பொன்னரனே
ஈசுரரே மகாதேவா ஆனாலும் பரமசிவனே
அமர்செய்து [3]வேள்விதனையழிக்க ஏலாதுபரமசிவா என்று

(சிவபெருமானின் பதிலுரை)

ஏற்றணஞ்ச பெருமாள்சொல் அறிவேன் அறிவேனடா
அணஞ்ச ராசனே மாயமான [4]தொழில்களுண்டு
மந்திர வீரர் களுண்டு மல்லடவு
சிலம்புத் [4]தொழில் வாள்மானம் படித்த துண்டு
உன்னாயான் இருவருண்டு உடையவனா ரழிந்ததுண்டு
மசக்கவித்தை திசக்கவித்தை மாய்மாலத் [4]தொழில்களுண்டு
வேள்வி போயமர்த்தி விரைவாக வந்ததுண்டால்
உன்னையுமே பிறவிசெய்து உந்தனுக்குமே வரந்தருவேன்.

கண்முழித்து –கண்விழித்து. **கறைக்கண்டர்** –தேவரும் அசுரரும் அமுதம் எடுக்கத் திருப்பாற்கடலைக் கடைந்ததேபாது எழுந்த ஆலகால விஷத்தைச்சிவன் அருந்தினார். கழுத்தில் விஷம் இறங்கும் போது உமையம்மை தடுத்ததால் கழுத்தில்விடம் தங்கி நீலகண்டரானார் என்பது புராணம். இங்கு கழுத்தில் தங்கிய விஷத்தை ஆசிரியர் கறைக்கண்டார் என்று கூறுகிறார். **கெண்டி** – கெண்டிகை, நீர்க்கெண்டி, சற்று நீண்டகுழல் போன்ற மூக்குடைய பாத்திரம். **பன்னீர்** –ஒரு வாசனை நீர். **பரிமளம்** – நறுமணம். **ஏறிட்டுப் பாராமல்** – நிமிர்ந்து பாராமல். **அரன்** –சிவன். **கமந்ததலை** – கவிழ்ந்த தலை, குனிந்த தலை. **உபகாரம்** –காணிக்கை. **ஏத்த** –ஏற்ற. **அமரர்** – வானோர். **வேள்வி** –ஓமகுண்டம். **கோட்டை** – 21 மரக்கால் அளவு. **சாம்பிராணி** – ஒரு வாசனைப் பொருள். **குந்திரிக்கம்** –குங்கிலியம். **சூடம்** –கற்பூரம். **சங்கடம்** – துன்பம். **ஆதிபரன்** –எப்பொருட்கும் இறைவன். **ஏலாது** –முடியாது. **அமர்** –போர். **ஏலாது** –முடியாது **மல்லடவு** –மல்யுத்தம், **மசக்க** –மயக்க. **பிறவி** –மறுவிறவி.

சு.சொ. 1. கண்முளித்து 2. தொளுது 3. வேழ்வி 4. தொளில்

Civananañcaperumāl performs penance to seek a boon from Civaperumān

"Open Thy eyes and see, Oh! *Karaikkantar*[1]
Thus pleaded **Anañcaperumāl** and prayed
Towards the golden feet of lord **Civan** who stayed
At Mount **Kailāyam** with his consort (**Umai**)
Wondering at the glory and beauty of that sight divine,
Anañcavanār did wait and worship **Punniyanār**
Hailing the holy feet of the God
Then did he entreat stating,
"I have passed rocks and stones to reach Thee,
Why art thou silent unmindful of my plight?"
With water in a golden kettle and flowers therein,
And fragrant *Kastūri* along with flowers and gold coins
As **Anañcavan** worshiped **Civan** thus and waited
Civan however did remain silent,
Without even seeing the supplicant, when
Cakti the consort of **Civan** placed on the left on the God's person
That goddess who did represent kindness and wisdom,
Did tell **Civan**,
"Oh! **Makātēva** do please listen to me
At this **Kayilai** here, I see **Anañcavaperumāl**
With his head downcast he doth remain here
What is the reason for his presence such here"

Civaperumān directs Cinnanañcān to perform Vēlvi

As **Cakti** did thus ask **Civan**, he replied
"I shall help him as you desire,
If he acts according to my instructions"
Then he did appear before **Cinnanañcān** and tell him,
"Oh! **Civananañcaperumāl** I shall happily guide thee,
At this beneficial **Kailai** many good and divine beings

In thousands perform **Vēḷvi** on the northern side here
Planning meticulously according to the regulations of **Kayilai**"

Civaṉ lists the articles required for the Vēlvi

"I shall tell thee in detail the articles needed,
Six *Kōṭṭai* incense and seven *Kōṭṭai kuntirikkam*[2]
To be offered to the sacred fire
Then camphor in rows many to be burnt as well
And sandal paste to pour over all these,
The smoke from the *kuṇṭam*[3] will rise high above,
Spreading all over the sky earth and mountains,
With smoke thus covering the hall at **Kayilai,**
Oh! **Civaṉanañcaperumāl** if thou perform
Vēlvi such as directed,
I shall grant you the desired boon"
Thus did **Civaṉ** inform **Ciṉṉanañcāṉ**

1. *Kaṟaikantar* - Lord Civan whose throat is stained blue with poison
2. *Kuntirikam* - A substance taken from a tree to prepare medicines and paints
3. *Kuntam* - A structure where five is raised for a *Vēlvi*

(சின்னணஞ்சான் தீர்த்தமாடலும், துணி வெளுத்தலும்)

123. அந்தவார்த்தை கேட்டபோது அருளணஞ்ச பெருமாளும்
செப்பெடுத்தார் [1]சிமிழெடுத்தார் [1]சிமிழ்கூட்டைக் கையிலேடுத்து
வர்ணமான சுனையதிலே வந்துதீர்த்த மாடினார்
தோகைய ரிருபேரும் சுனையதிலே தீர்த்தமாட
வாறதந்த வேளையிலே வண்ணசுனை யானதிலே
வண்ணசுனை கரையருகே வாறாரே ஆயிரம்பேர்
வண்ணானும் கல்லதிலே வாய்த்தசீலை வெளுக்குகிறான்
சீலையினைத் தானுரிந்து தெளிவாகக் கொடுத்தார்கள்
சிறந்த வண்ணா ரெனவேதான் கொடுத்தா ரப்போது

வண்ணானும் சீலைகளை வகைமையுடன் தான்வெளுத்து
சுனையாடி வருவதன்முன் சுத்தமாக்கி வைக்கவேணும்
சிவனணஞ்ச பெருமாளும் சொன்னதுமே வாங்கிக்கொண்டார்

(வெளுக்கும் துணியில் வசியமருந்து வைத்துப் பெண்களை மயக்குதல்)

வாச்சுது வாச்சுதுகாண் மன்னன்சிவ னணஞ்சவனார்
[1]சிமிழிக்கூட்டைத் தான்திறந்து [1]சிமிழ்மருந்தைத் தானெடுத்து
சீலையெல்லாந் தான்துவைத்து சிவனணஞ்ச பெருமாளும்
சிவனணஞ்ச பெருமாளும் சென்றுதான் இருக்க
குளித்துக் கரையேறியவர் குப்பெனவே ஓடிவந்து
வாங்கியதோர் சீலையெல்லாம் வளமையுட னேயுடுத்தார்
உடுத்தவுட னேயவரும் உதவியாக ஆகிவிட்டார்
சிவனணஞ்ச பெருமாளோடே[2] சேயிழைமார் மையல்கொண்டார்.

வர்ணம் –குங்குமம். **சுனை** –குளம். **சுத்தமாக்கி** –சுத்தம்செய்து. **சேயிழைமார்** அழகிய ஆபரணங்கள் பூண்டபெண்கள்.

ச.சொ. 1. சிமிள் 2. சேயிளை

Ciṉṉanañcāṉ bathes in the holy tank and washes clothes

On hearing such advice from Lord **Civaṉ**
Aruḷanañcaperumāḷ did take *ceppu*[1] and *cimiḻ*
And bathed in the holy fountain there
At that time when he had arrived
To have a dip at the *Cuṉai*[2],
On its banks appeared a thousand folk,
Who thinking that there was a good washerman at work
Gave their clothes and sarees to **Anañcavaṉ** for washing,
He also like a washerman veritable did wash,
Abiding by their instructions to clean the clothes
Before they returned from their holy bath.

He lures women by placing Vaciyamaruntu in the women's garments

Gloating over the opportunity which presented itself,
Civa<u>n</u>a<u>n</u>añcā<u>n</u> the king did then open the *cimi<u>l</u>*
And taking the luring potion therein,
Placed it in the washed sarees of the women folk,
As he then did wait on the banks,
Those who had bathed rushed to the banks
And did take their clothes to wear,
Lo! Those who thus wore their sarees
Did fall in love with **Ci<u>nn</u>a<u>n</u>añcā<u>n</u>**

1. *Ceppu*- A vessel
2. *Cu<u>n</u>ai* - A pond

(தேவர்கள் பெண்களைத் தேடிவருதலும், சின்னணஞ்சான் கைலாசம் அடைதலும்)

124. மையல்கொண்டு மடவார்கள் மயங்கிநிற்கும் வேளையிலே
சுனையாடப் போனவொரு தோகையரைக் காணாமல்
வாறாரே அமரவர்கள் [1]வழிதிறந்து சடுதியிலே
சுனையருகே வருமுன்னால் சிவனணஞ்ச பெருமாளும்
பாடியொரு மந்திரத்தில் பாவையரை அதில்நிறுத்தி
தேடிப்போன அமரவர்கள் திரும்பியிங்கே வருவதன்முன்
[2]அஞ்செழுத்து உத்தரித்து அருளணஞ்ச பெருமாளும்
அப்புசடை அரனிருக்கும் [3]அழகுகைலாசம் வந்து
அமரரெல்லாம் சுனையில்வந்தால் அந்தவேள்வி [4]அழிந்திடும்
வேள்வியது போயமத்தி வெளிச்சமாய்த் தெரிந்திடுமாம்
அமரர்கள் சுனையில்வந்தார் அணஞ்சவனார் கைலாசம் வந்தார்

(பரமேசுவரன் சின்னணஞ்சானை அழைத்து என்ன வரம் வேண்டும் எனல்)

கண்டுகொண்டு அணஞ்சவனார் கண்மணியே வருகவென்றார்
கிட்டவாரும் அணஞ்சவரே கீர்த்தியுள்ள வரிசைவகை
அட்டதிக்கு அமரவர்கள் அருவேள்வி அழித்ததனால்
என்னவரம் உந்தனக்கு இப்போது வேணுமென்றார்
வலமதுவும் வேணுமய்யா வாய்த்தபிறவி ஒன்றுவேணும்
என்னாசை தீர்த்ததினால் என்னவரம் உனக்குவேணும்
கிட்டேவா என்றுரைத்து முத்தமிட்டுத் தான்கேட்டார்

(பரமேசுவரன் சின்னணஞ்சானைத் திருத்தொடையில் நிறுத்துதல்)

எடுத்தபர மேசுரனார் திருத்துடையில் தானிருத்தி
மண்டப மலங்கரிக்க வாய்த்தபல சொல்லுவாராம்
முத்துமகா ரத்தினமும் முக்கோடி படித்தரமும்
பாரமாலை சாத்துமாலை இந்திரனும் சந்திரனும்
சாத்துமாலை ஆத்துமாலை சந்திரப் பூவர்ணம்
பொன்மாலை பூமாலை பொன்னரிய மாலைகளாம்
கொண்டைப்பூ மாலைசாத்த கோதையர்கள் குரவையிட
சேர்ந்துகரம்கொட்டுவாரும் திருப்புகழைப் பாடுவாரும்

(திருத்தொடையில் சின்னணஞ்சான் மறுபிறவியாய் பிறத்தல்)

அரகரா இசைபாட அழகுமணி மண்டபத்தில்
சித்திர புத்தரரும் சென்றிருக்கும் கயிலையிலே
அந்தநல்ல கயிலையிலே அருளணஞ்ச பெருமாளை
பரமசிவன் திருத்துடையில் பாவினையாய் பிறவிசெய்தார்
பேருலகில் கீர்த்திபெற்ற பொன்னணஞ்ச பெருமாளும்
ஓரகத்தில் [5]மணிமுழங்க உவகையுள்ளோர் குரவையிட
பரமசிவன் திருத்துடையில் பாவினையாய் பிறவிசெய்ய

பரமசிவன் திருத்துடையில் பொன்னணஞ்ச பெருமாளும்
பாரோர்கள் தானறிய சிவனணஞ்ச பெருமாளும்
பரமசிவன் திருத்துடையில் பிறந்தாரே.

அமரவர் –தேவர். **சடுதி** –விரைவாய். **பாவையர்** –பெண்கள். **அஞ்செழுத்து** –சிவாயநம என்னும் பஞ்சாட்சரம். **அப்புசடை அரன்** –கங்கைநதியைச் சடையில் தாங்கியுள்ள சிவபெருமான் **கைலாசம்** – கயிலை மலை. **அட்டத்திக்கு** –எட்டுதிக்கு. அஷ்டதிக்குப் பாலகர்கள். இந்திரன், அக்கினி, இமயன், நிருதி,வருணன், வாயு குபேரன், ஈசானன் எனபவர்கள். **திருத்துடை** –அழகிய தொடை. **சாத்து மாலை** –சாற்றும் மாலை. **கொண்டை** –கொன்றை. **பிறவி** –பிறப்பு. **பாரோர்** –உலகோர்.

சு.சொ. 1. வளிதிந்து 2. அஞ்செளுத்து 3. அளகுகைலாசம் 4. அளிந்திடும் 5. மணிமுளங்க

Tēvars come in search of their damsels and Ciṉṉaṇañcāṉ reaches kailāyam

As the damsels did remain enamoured of **Ciṉṉaṇañcāṉ**,
Amarars[1] arrived there as their damsels,
Who had gone to bathe in the *cuṉai* did not return,
At such a juncture **Civaṉaṇañcaṉ** chanted a spell,
And made the lured damsels remain near the *cuṉai*
Before the *Amarars* could return after locating their damsels,
Aṇañcaperumāl did chant the **Añceḻuttu** (hailing **Civaṉ**)
And reached **Kailacam** the abode of **Araṉ**
Who had lucks which did accommodate watery *kankai*
As *Amarars* all arrived at the *cuṉai*,
And dowsed the fire of the luminous *Vēlvi* there
As the *Amarars* were thus at the *cuṉai* **Aṇañcavaṉ** arrived at
Kailācam

Paramēcuvaraṉ summons Civaṉaṇañcāṉ and asks what he wants

On seeing **Aṇañcavaṉ** **Civaṉ** did kindly beckon him,
"Oh! **Kaṇmaṇi** thou art welcome" the God said
"Come near **Aṇañcavaṉ** what dost thou need,

Tell me though your *Vēḷvi* has been destroyed by *Amarars*
"As thou hast performed the *Vēḷvi* rituals gloriously,
What is the boon desired by thee, tell me
Come near" said **Civaṉ** and kissed him too

Paramēcuvaraṉ places Ciṉṉanañcāṉ on his lap

Taking **Ciṉṉanañcāṉ** Lord **Civaṉ** did place him on his lap,
And directed to decorate the hall in ways many,
Pearls precious gems and ornaments in crores thrice,
Garlands galore like **cāttumālai** and **āttumālai**,
Golden garlands, flower strings and garlands rare like gold,
Intiraṉ and **Cantiraṉ**[2] too adorning the hall
As *Koṉrai* garlands were offered damsels did ululate
They did clap their hands in unison and rendered **Tiruppukaḻ** in songs

Ciṉṉanañcāṉ born again on the lap of Lord Civaṉ

As the singers raised *arakara* slogans in that elegant hall of gems,
There at **Kayilai** as **Cittiraputtirar** did remain there
Lord **Paramacivaṉ** did recreate **Ciṉṉaṉañcāṉ** on his lap
And made him attain incarnation another
As happy folk did ululate and bells rang on one side
Poṉṉaṉañcaperumāḷ, the glorious one
Was recreated in his birth next
On the holy lap of **Paramacivaṉ**

1. *Amarars* - Divine or heavenly folk
2. **Cantiraṉ** - The moon god

(சின்ன சிவன் என்று பெயரிடல்)

125. பரமசிவன் திருத்துடையில் பவிசையுடன் பிறந்ததினால்
திருத்துடையில் பிறந்ததினால் சின்னசிவனென்று பேருமிட்டு

பேருமிட்டு குரவையிட்டு பொற்பதமாய்த் தான்வளர்த்தார்
அப்புச்சடை யானவருடன் அருளுவாராஞ் சின்னசிவன்
அந்தவார்த்தை கேட்டபோது அருளுவாராம் பரமசிவன்
பேர்பெரிய கயிலையிலே பெரியசிவன் நானிருப்பேன்
சின்னசிவன் என்றபேரும் நானுனக்குத் தந்தேன்
தீரன்சின் னணஞ்சபெருமான் என்றபேருந் தந்தேன்
முப்பேரும் உனக்குத்தந்தேன் முத்திபெற வரமுந்தந்தேன்
சீர்பெரிய சீமையிலே சின்னசிவன் நீபோவாய்
ஏத்தநல் இடமதிலே இருந்துகொள்ள உனக்குவேணும்

(சின்னசிவன் வரம் கேட்டலும் சிவன் கொடுத்தலும்)

நானிருக்கும் இடமதிலே நல்லவ ரிருக்கவேணும்
கோமரமும் குடிமரமும் கூண்டுகுடி வளர்க்கவேணும்
திட்டவட்ட மாகஇந்த தேசத்தோர் வணங்கவேணும்
வினையாக நின்றுகொண்டு [1]நீடுழி வாறதெல்லாம்
வாக்குந் தவறாமல் அருள்நோக்குந் தரவேணும்
நம்புமடி யார்களைநான் துன்பமது தீர்க்கவேணும்
பேய்பிடித்து நாய்கடித்து பிணிபிடித்து இருப்போரை
காச்சல்பிணி [2]கழிச்சலுடன் கண்டசக்கங் கொண்டோரை
எட்டிப்பார்த்தால் ஓடவரம் என்சிவனே தாருமய்யா
மாத்தாரை மதமடக்க வல்லவரை [3]கோல்கிழிய
செறுத்தாரைத் [4]தீயழிக்க சிவனாரும் வரங்கொடுத்தார்
தூங்கிப் பிடித்துக்கொண்டு துரும்புபோல் இருப்பவரைத்
தூக்கி நிறுத்திடவும் தூண்போல ஆக்கவரம்
பித்தமும் பைத்தியமும் பொறுக்கவொண்ணா கழிச்சல்
போக்கிடவே உனக்குவரம் முக்காலும் தந்தேனென்றார்
காச்சலுடன் கழிச்சலுமே கண்பிணியைக் கொண்டவர்கள்

தீர்த்தருளும் எனக்கேட்டால் [5]தான்பிழைக்க வரந்தாரும்
என்றுசிவ னணஞ்சவனார் ஈசனையும் தொழுதுகொண்டு
பொன்னணஞ்ச பெருமாளும் போற்றியவர் தான்தொழுதார்.

(சிவனிடம் எந்தநாடு செல்லவேண்டும் என சின்னசிவன் கேட்டல்)

எந்தநல்ல நாடதிலே எனைவணங்குங் குடிகளுண்டு
சொல்படியே சொல்லுமய்யா சிவனணஞ்ச பெருமாளுக்கு
சிவனணஞ்ச பெருமாள்[6]கேட்க சிவனுமே ஏதுசொல்வார்.

பவிசை –பவுஷ், தகுதி. **சின்னசிவன்** –சின்னணஞ்சபெருமாள். **முப்பேர்** –சின்னசிவன், தீரன், சின்னணஞ்சபெருமாள். **முத்தி** –மோட்சம். **கோமரம்** –அரசன் வாழுகின்ற இடம். **குடிமரம்** –மக்கள் வாழும் இடம். **நீடுழி** – ஊழிகாலம். **வாக்குந்தவறாமல்** –சொன்னசொல் தவறாமல். **அருள்நோக்கு** –அருட்பார்வை. **பிணி** –நோய். **கண்மசக்கம்** –கண்மயக்கம். **மாத்தாரை** –மாற்றாரை. **கோல்கிழிய** –செங்கோல் கிழிதல். **செறுத்தல்** –கொல்லல். **பித்தம்** –முப்பிணியிலொன்று. **முக்கால்** –மூன்றுமுறை.

ச.சொ. 1. நீடுளி 2. களிச்சலுடன் 3. கோல்கிளிய 4. தீயளிக்க 5. தான்பிளைக்க 6. கேள்க்க.

He is named Cin͟n͟acivan͟

As he was born with glory on the lap of **Paramacivan͟**
He was named **Cin͟n͟acivan͟** and hailed
With ululation joyous and brought up with attention appropriate,
Lord **Civan͟** who doth carry watery *kankai* on his locks,
Did utter, " At **Kayilai** great I shall remain,
As **Periyacivan͟** and I do confer on thee,
The name **Cin͟n͟acivan͟** and also another name
Tiran Cin͟n͟an͟añcaperumāḷ as well
Thus you will have three names in all
Including the name given to you at your earlier birth
I have given thee not only appellations three
But also the boon to attain *Mukti*[1]
You may go now **Cin͟n͟acivan͟**
To the country proper where you will flourish"

Ci<u>nn</u>aciva<u>n</u> mentions the desired boon and Lord Civa<u>n</u> grants it

Ci<u>nn</u>aciva<u>n</u> did reply,
"Virtuous folk should live where I live
Kōmaram[2] **Kuṭipari**[3] and **Kūṇṭukuṭi**[4] all
Should be promoted but uniformly,
People of this country should pray and observe
All the rules of worship duly prescribed
The *Vi<u>n</u>ai*[5] that occurs during aeons for ever
Should be tempered with grace divine
So that promises are kept without breach
I shall be enabled to redress the grievances
Of the *Atiyār*[6] who trust me
Oh! My lord **Civa<u>n</u>** grant me the boon,
To relieve those afflicted by haunting shorts and disease
And those bitten by rabid dogs,
Besides the folk who suffer from disease fever and diarrhoea
If I just look at such sufferers their ailments should vanish
Please grant me, Lord , such a boon"
As **Ci<u>nn</u>aciva<u>n</u>** did request **Civa<u>n</u>** to grant a boon such
Civa<u>n</u> was pleased to grant him a boon
That would restrain his enemies' ferocious might
And to break the sceptre of powerful kings
And also to set ablaze those who dared to kill
A boon it would be to prop even folk frail like straw
And to make them strong like pillars,
It will cure as well biliousness and insanity,
And unbearable purging of the stomach
I have given thee such a boon forever
To be effective at times all"
Thus said **Civa<u>n</u>** and **Ci<u>nn</u>aṇañcā<u>n</u>** prayed further
That those afflicted with fever, diarrhoea and disease
Should be allowed to survive if they prayed thus,
Ci<u>nn</u>aṇañcāṉā<u>r</u> did then pray and worship **Civa<u>n</u>**

With great reverence
Then did **Ci<u>nn</u>anañcā<u>n</u>** want to know from **Civa<u>n</u>**
To which good country he should go
And where he would have citizens,
Who would he his loyal subjects and obey him
As **Civa<u>n</u>aṇañcaperumāl** asked thus,
Lord **Civa<u>n</u>** did reply

1. *Mukti* - Eternal bliss or state of eternity
2. **Komaram** - King's abode
3. **Kuṭipari** - The dwelling place of citizens
4. **Kuṇṭikuti** - The people
5. *Vi<u>n</u>ai* - One's deeds
6. *Aṭiyār* - Devotees

(சிவன் வலங்கைபுரத்திலுள்ள மணிக்கட்டிப்
பொட்டலுக்குப் போயெனக்கூறல்)

126. நாடான நாடதிலே நல்லவலங் கைபுரத்தில்
தேசமான தேசத்திலே தெட்சணா புவியதிலே
தெட்சணா புவியதிலே சிறந்தமணிக் கட்டிப்பொட்டல்
சீரான சீமையிலே சின்னசிவன் நீபோவாய்.

(சின்னசிவன் வரம் கேட்டலும் சிவன் கொடுத்தலும்)

வானமது உள்ளளவும் வையகத்தோர் உள்ளளவும்
பரலோகம் உள்ளளவும் புரிசடையோன் உள்ளளவும்
தானமது தவறாது சார்ந்தகுடி தவறாது
ஆனகொல்லம் தொள்ளாயிரத்தி அம்பதாம் ஆண்டதிலே
அந்தபுரி சடையோன்தானும் அருளைக் கொடுக்கவே
மிஞ்சியது தானசைய சடையாண்டி தான்திரும்பி
சிந்தை [1]மகிழவே அணஞ்சவ ராசன்
தேசந்தன்னில் போகவென்று போனார்கள் மணிக்கட்டிப்பொட்டல்

பூசைகொள்ளப் போறேனென் றந்தஈசன் சொல்வாராம்
ஏற்றசிவ னணஞ்சபெருமாள் இன்பமுடன் [2]கேட்க
பொன்னுங்கை லாசம்விட்டுப் பூலோகமே அனுப்ப
[3]எண்ணத்தொழி லாளர்கள் எண்ணாயிரங் கோடி
பொன்னும் பரமசிவனேநீ போவென்று அனுப்புமய்யா

(சின்னசிவன் பரி கேட்டல்)

கால்நடை யாகநானும் போவேனோ காசினியில்
தேசம் புகழுதற்குத் தெய்வப் பரிவேணும்
ஏறுதற்குப் பரிவேணும் இசஞ்சொல்லி அணஞ்சவரும்
ஏற்றசிவ பெருமானும் ஏற்றதொரு பரிவேண்ட
இமைக்குமுன்னே வந்ததுகாண் பரிமளமும் கஸ்தூரி
சந்தனமும் கமகமென பன்னீருஞ் சந்தனமும்
எங்கும் மணக்குதுகாண் தெச்சணா பூமிக்குப்
போகவென்று சொல்லித் தெய்வ ரம்பையர்கள்
கோமரத்தானும் குடிபரியானதுவும் குறிதவறாமேலே [4]கேட்க
கூண்டமதிலும் குடியுங்கிளையும் குத்தம் வராமலேதான்
நாற்றிசையுங் கீர்த்திபெற்ற நாராயணன்நான் கூடவாறனென்றார்.

மணிகட்டிப்பொட்டல் –கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் உள்ள ஊர். **பரலோகம்** – தேவலோகம். **புரிசடையோன்** –சிவன். **கொல்லம்** –கேரளா, கன்னியாகுமரியில் வழங்கும் ஓர் ஆண்டு. **அம்பதாம்** –ஐம்பதாம். **பூலோகம்** – மேலேழுலகில் ஒன்று. **காசினி** –பூமி. **பரி** –குதிரை, **தெய்வரம்பையர்** – தெய்வப்பெண்கள். **பதி** –இடம். **கிளை** –உறவு. **குத்தம்** –குற்றம். **நாற்றிசை** – நான்குதிசை, கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு. **கீர்த்தி** –புகழ். **நாராயணன்** – திருமால்.

சு.சொ. 1. மகிளவே 2. கேள்க்க 3. எண்ணத்தொளி 4. கேக்க.

Civan asks him to go to Māṉikaṭṭippottal in Valankaipuram

"Oh! **Ciṉṉacivaṉ**, in the southern part of the earth,
Among countries many there in a country notable
In that country known as **Valankaipuram**
There is **Mānikattippottal** a region quite proper
You go to that place Oh! **Ciṉṉacivaṉ**

Ciṉṉacivaṉ 's request for a boon granted by Civaṉ

As long as the skies last and people on earth live,
Till the heaven exists and the god with matted locks is there,
Without failing in charity or defaulting in obligations,
To the subjects that depend (on the king)
Thus did **Anañcavaṉār** desire a boon from ***Civaṉ***
At the *kollam*[1] year of nine hundred and fifty
For not breaching charity and responsibility royal,
The Lord with matted locks did confer His grace
Turning towards the supplicant **Anañcavarācaṉ**
Who quite pleased in his mind on receiving the boon
Did go to **Manikaṭṭippoṭṭal** in the country
Then Lord **Civaṉ** did say that he had to go,
To accept worship from his devotees,
Anañcavarācaṉ did request **Paramacivaṉ,**
To provide him with attendants eight thousand
And one crore gold coins as well
As he was leaving for the world on earth,
From the golden world of **Kailācam**

Ciṉṉacivaṉ wants a horse

Then did **Ciṉṉacivaṉ** say,
"Shall I go to the earth on foot?
For the country to hold me in high esteem,
I require a divine horse to ride"

As **Anañcavar** made such a request,
Civaperumāṉ willed accordingly,
And in a trice along with the horse,
Arrived articles of fragrance so many
Musk sandal and rose water fragrant
And it was perfumery all over,
Divine damsels too assembled there
To go to that southern part of the earth
With soothsayer's predicting welfare of the king and his subjects,
Without any mishap to the ramparts and dynasty
Of the royal clan as well,
Lord **Tirumāl** on the auspicious occasion such,
Said that He too would go to that country

1. *Kollam* - Keralite year

(சின்னசிவன் பரியேறி வருதல்)

127. நல்லபரி மீதிலேறி நாடியே புறப்படுவார்
பொன்னணஞ்ச பெருமாளும் பொன்னுங்கை லாசம்விட்டு
கட்டுடனே புறப்படவே கண்மணி வாறாரே
காயாம்பூ மேனியனாம் கட்டுடலாம் அணஞ்சவனார்
பஞ்சவர்க்குத் தூதுசென்ற பாரளந்தோன் கூடவர
பாவினை யாகவே பாருல கத்திலே
பச்சம்வைத்துத் தவறாமல் போவென்று சொல்லிவிட
பொன்னும் பரமசிவன் பொற்பான மணிக்கட்டிப்பொட்டலில்
பூசைகொண் டங்கிருக்க கண்காட்டி பெண்முறைகாரி
தாய்மார்கள் வேண்டிநிற்க கட்டுடைய பெரியபெண்கள்
கட்டடாக் [1]குரவையிட தேடித் திரிந்தாலும்
இத்தரைக்கூடி போறேன் தெச்சண பூமியில்
சீக்கிரத்தில் போவாய் பரமசிவன் வாக்கு
சிவனணஞ்ச பெருமாளும் சீராய்ப் புரவிஏறி

(சின்னசிவன் ஆறு, மலை கடந்து வருதல்)

பரியேறி அணஞ்சவனார் பாவினையாய் வாறபோது
முருக்கான தேசங்கடந்து மூவர்வாழும் தேசம் விட்டு
நாடுபோற்றான் பாறைகடந்து இரண்டுகல்லான் சீமைவிட்டு
முப்பாரம் கீப்பாரம் உடையகுடி சீமைவிட்டு
கல்லாறு புல்லாறு காக்கைபுக்கும் சீமைவிட்டு
பாம்பிருந்து படமெடுக்கும் பச்சைமலை வாரமிட்டு
அடுத்தகல் லாறுமிட்டு ஆனைவாய்ச் சுனையும்விட்டு
அருவாயில் குயில்கூவ ஆனைமதம் [2]பொழிந்துநிற்க
புல்வாயும் கரடிபுல் பற்றி வளர்ந்துவரும்
[3]வரும்வழியில் புதுமையெல்லாம் [4]மனமகிழ்ந்து சந்தோசமாய்
கண்டுசிவ னணஞ்சவனார் வாருங்காண் அணஞ்சவனார்
வார்த்தையொன்று சொல்லக்கேளும் பொங்குமா மலையில்வர
பொன்னணஞ்ச பெருமாளும் சிவனணஞ்ச பெருமாளும்
செம்பக மலையில்வர இருவருக்கும் முன்னால்சென்று

(சின்னசிவன் வருதலைக் கண்டு தூதுவன் நீலராசனிடம் கூறல்)

ஏத்தவரம் வாங்கிவந்து வாறஅந்த வேளையிலே
வடிவன்நீல சுவாமியவர் புரவியேறி நீலராசன்
பொங்கமா மலையில்வர கண்டுஒரு தூதன்கண்டு
காவலவா நீலராசே தீரன்சிவ னணஞ்சவனார்
தெய்வபரி ஏறிவர உத்தரவாய்ப் பூதலத்தில்

(சின்னசிவனை அழைத்துப் போதல்)

பூசைகொள்ள வேண்டாம் தப்பாமல் அடியாரைத்
[5]தாமரைபோல் வளர்க்கவேணும் என்றுசொல்லிக் கூட்டிக்கொண்டு
இன்பமுட னேநடந்து நாங்குமலை கோங்குமலை

நளுகுமலை இளகுமலை எல்லாமலை தள்ளிவிட்டு
திப்பரப்பு மலையில்வந்தார் வேரந்த மலைகடந்து
பெரியநம்பி மலைகடந்து திருக்கணங் குடிகடந்து
திருக்காடும் விட்டார் உப்புக்கண்டம் பொத்தையிட்டு
பூதம் உண்டிடும் ஊரு மிட்டு
சூட்டுக்கோல் கொத்தையிட்டுத் தீவிரமாய்த் தானடந்தார்.

காயாம்பூமேனியர் –விட்டுணு, காயாம்பூ வண்ணன். **பஞ்சவர்க்குத் தூதுசென்ற, பாரளந்தோன்** –பாண்டவர்க்குத் தூது சென்றவனும் உலகத்தை மூன்றடியால் அளந்தவனும் ஆகிய திருமால். **பச்சம்** –நேசம். **தெச்சணபூமி** –தெட்சணபூமி, **புரவி** – குதிரை. **மூவர்** –மும்மூர்த்தி, பிரமா, விட்டுணு, உருத்திரன். **ஏத்தவரம்** –ஏற்றவரம். **நீலராசன்** –ஓரரசன். **பூதலம்** –பூமி **திருக்கணங்குடி** –திருக்குறுங்குடி. திருநெல்வேலி மாவட்டத்தில் வள்ளியூர் அருகே உள்ள ஊர். **உப்புகண்டம் பொத்தை** –'உப்புகண்டான்' என்ற பெயரில் வழங்கப்பெறும் சிறிய குன்று.

சு.சொ. 1. குரவியிட 2. பொளிந்துநிக்க 3. வரும்வளியில் 4. மணைகிள்ந்து 5. தாமரபோல்.

Ciṉṉacivaṉ arrives on horseback

Mounting a good horse he did start
Poṉṉañcaperumāl leaving **Kāilācam** golden
In proper order did he arrive the darling one
Of athletic build and *Kāyāmpū*[1] complexion
With the God who was the *emissary of* **Pañcapāṇṭavar**
And who did measure the world as well,
Accompanying him **Aṇañcavaṉ** did arrive in style,
As he was directed kindly to go to the earthly world
To **Maṇikaṭṭuppoṭṭal** the favourite place chosen by **Paramacivaṉ**
Where the Lord entertains worship,
By elderly mothers for the wellbeing of daughters theirs,
And grown up girls ululated in unison ,
To that place to be sought after such a long search
All over the southern part of the earth

"Go quickly to that place" **Civaṉ** told **Ciṉṉaṇañcāṉ**
Civaṉaṇañcaperumāḷ did accordingly mount on horseback.

Ciṉṉacivaṉ passes rivers and mountains

As **Aṇañcavaṉ** did arrive on horseback in majesty
Leaving the impressive country (of **Kailācam**)
And the country where the divine **Trinity**[2] did abide
Passing the **Nāṭupōṟṟāṉ** rock and **Iraṇṭukallāṉ cimai** as well
And then he left **Muppāram**, **Kipāram** and **Utaiyakuṭi** regions
Crossed he then the rivers **Kallāṟu** and **Pullāṟu**
And passed **Kākkaipukkum Cimai** as well
Leaving then the foothill of **Paccaimalai**
Where snakes abound with raised hoods
Then he passed next **Kallāṟu** and the *Āṉaivāi* fountain
Where cuckoos sang and elephants did shower their musth,
And deer, bears and tigers teemed in dependent growth
Seeing all such sights novel in a happy frame of wind
As thus Lord **Tirumāl** and **Civaṉañcaperumāḷ**
Did arrive at **Poṅkamāmalai** and then
To **Cempakamalai** where a messenger did go ahead of both

The messenger informs Nilarācaṉ of Ciṉṉacivaṉ's arrival

As **Ciṉṉacivaṉ** arrived thus with the boon granted by **Civaṉ**
Nilarācaṉ mounted on his horse and came to **Poṅkamāmalai**
Where a messenger did meet him and said
"Oh! King **Nilarāca**, our protector,
Tiran Civaṉaṉañcavaṉār is arriving on a divine horse
As per the noon of God

Ciṉṉacivaṉ received and guided

"A devotee of God should be received properly
Like a lotus should he be treated to grow"

Thus determined to receive **Cinnacivan** and guide him
Nilarācan did proceed ever so happily
Leaving **Nāṅkumalai, Kōṅkumalai, Nalukumalai**
Ilakumalai and all other mountains as well
Arrived he at **Tipparappu malai** and met **Cinnacivan**
Leaving then that mountain they passed **Periyanampi malai** too,
Left they then on their way **Tirukkanaṅkuti** and **Tirukkātu**
Passed they afterwards the **Uppukanṭam** hill
And the **Cūṭṭukkōl koṭṭai** as well
Thus did they walk on their way vigorously.

1. *Kayampu* - A certain flower
2. **Trinity** - The three Hindu Gods **Piraman** , **Visnu** and **Civan**

(சின்னசிவன் பல ஊர்களைக் கடந்து தாணுலிங்க ஈசுவரனிடம் வரம் கேட்டல்)

128. மணலாற்றின் [1]வழியாக வாறதந்த வேளையிலே
மங்கைபிரம சத்தியம்மை வாணுதலுங் கூடிவந்தார்
சத்திபிரம ராக்குசத்தி தங்கமணி தேரில்வர
பொன்னுருவி அம்மையவள் பொற்பதமாய் வரவே
[2]அகழிஊற்றங் கரைகடந்து ஆனவர்கள் மூபேரும்
வட்டமிட்டு மயிலாடும் வள்ளியூரும் தனைக்கடந்து
மூன்றுமுகம் கொண்டஅம்மை முண்டகக்கண்ணி கோவில்விட்டு
பண்டுமன்னன் சேரனிட்ட பழையகோட்டை [1]வழியாக
கூடமர சோலைவிட்டு குளிர்ந்தமரக் காவும்விட்டு
பரபரென [3]வழிநடந்து பரமன்குளம் தனிலேவந்தார்
பரமன்குளம் தனைக்கடந்து [4]பணகுடிவாழ் எல்லையிட்டு
சிவனணஞ்ச பெருமளும் சிறந்தபொன்னுருவி அம்மையுமாய்
பொன்னுருவி அம்மையுடள் பிரமசத்தி அம்மையுமாய்
சிவனணஞ்ச பெருமாளும் சிறந்தகல் மடங்கடந்து

அணஞ்பெரு மாளுமே [5]ஆரல்வாய் மொழிகடந்து
துட்டணிந்த *சிவனணஞ்சவனார்* தோவாளை தனைக்கடந்து
மூவருமே வழிநடந்து வெள்ளமடம் வந்துகண்டார்
வெள்ளமடம் தனைக்கடந்து [6]விரைவாய்நல் லூரில்வந்து
நல்லாறுந் தனைக்கடந்து நல்லவாவி தான்கடந்தார்
தென்திசையில் கீர்த்திபெற்ற சிவதாணு லிங்கநாதன்
மூங்கிலடி மூடதிலே [7]முளைத்தெழுந்த தாணுலிங்கம்
தாணுலிங்க சுரரைத் தான்[8]தொழுதார் அணஞ்சவனார்
எங்கிருந்து வாறாயோடா இல்லணஞ்ச பெருமாளே
சங்கரனார் இடம்போய் தான்வரமும் வாங்கிவாறேன்
இங்கவந்து உம்மோட உத்தவரம் கேட்கவந்தேன்
சங்கரனார் தந்தவரம் தானுந்தந்து அனுப்பினார்.

பிரமசத்தி –ஒரு தெய்வம். **அகழி** –ஆழமான நீர் நிலை, கோட்டையைச்சுற்றி அமைந்திருக்கும். **மூன்று முகம்** –முத்தாரம்மன் எனும்பெண் சிறுதெய்வம். **வள்ளியூர்** – நாகர்கோயில் சென்னை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்த ஊர். **முண்டகக்கண்ணி** – தாமரை போன்ற கண்ணையுடையவள். **பண்டு** –முன்பு. **கா** –சோலை. **பணக்குடி** – வள்ளியூர் அருகில் உள்ள ஊர். சுசீந்திரம் கல்வெட்டு ஒன்று இவ்வூரை முறந்தாநாட்டுப் பணகுடி என்று கூறுகிறது. ஆரல்வாய்மொழி அருகில் அமைந்த ஊர். **வெள்ளமடம்** – நாகர்கோயிலிலிருந்து வடகிழக்கே 5. கி.மீ. தொலைவிலுள்ள ஓர் ஊர். **நல்லூர்** – நாங்குநேரி வட்டத்தில் உள்ள ஊர்.

சு.சொ. 1. வளியாக 2. அகளி 3. வளிநடந்து 4. பணகுடிவாள் 5. அரல்வாய்மொளி 6. விரவாய் 7. முளைத்தெளுந்த 8. தொளுதார்.

Ciṉṉacivaṉ passes several places and prays for a boon from Tāṇulinka Īcuvarar

As they were passing by *maṇalāṟu*
The goddess **Piramacakti** of elegant brow,
Did appear there in transit on a chariot golden,
And as **Poṉṉuruvi** too joined them there
The trio passed then the banks of a deep moat

Thus they passed in circuit **Vaḷḷiyūr** where peacocks danced,
And also left the temple of **Muṇṭakakkaṇṇi** three face,
Passed they then through old fort erected long ago by a **Cēraṉ**
Left they then a grove of trees dense
And a cool garden wooded as well,
Walked they quite briskly and arrived at **Paramaṉkuḷam**
Leaving **Paramaṉkuḷam** then and the border of **Panakuṭi**
Civaṉaṉañacaṉ along with **Piramacakti** and **Poṉṉuruvi**
They passed **Kalmaṭam** and **Āralvāymoḻi**,
Civaṉaṉañcaperumāḷ left **Tōvālai** then
And all the three of them walked on their way
When they did sight **Veḷḷamaṭam**
Leaving **Veḷḷamaṭam** did they arrive quickly at **Nallūr**
Where they crossed a *Vāvi*[1] good
To reach the shrine of **Tāṇuliṅka Īcuvarar** famed in the south
As the *liṅkam*[2] there emerged by itself
In a bamboo grove
Anañcavaṉ did pray and worship **Tāṇuliṅka Īcuvarar** such,
Who asked him, "Where are you coming from?"
Anañcavaṉ replied,
"I am returning from Lord **Civaṉ**'s abode
After attaining a boon from him
Here have I gone over to request a boon from Thee,"
Tāṇuliṅka Īcar was also pleased to grant a boon
Similar to what **Civaṉ** had already granted

1. *Vāvi* - Pond or tank
2. *Liṅkam*- Symbolic representation of **Civaṉ** in stone or wood

(மதுசூதனப் பெருமாளிடம் சென்று சின்னசிவன் வரம் கேட்டல்)

129. சிங்கார சிவனணஞ்ச பெருமாளே தெச்சணத்தில் நீபோவாய்
தெச்சணா புரியதிலே சிறந்தமணிக் கட்டிப்பொட்டல்
சிந்தையுடன் பூசைகொண்டு சிறப்பாக அங்கயிரு

என்றவரும் அனுப்பிடவே இயலணஞ்ச பெருமாளும்
தென்சுவிந்தா புரியும்விட்டு தெக்குநோக்கி [1]வழிநடந்து
அன்னநடை பிரமசத்தி ஆயிழை நீலியம்மை
தென்சுவிந்நா புரியும்விட்டு சிறந்தகாக்கும் புதூரும்விட்டு
வட்டமிட்டு கெருடபட்சி வயல்வயலாய் பறப்பதுவும்
கரையிலுள்ள வெள்ளாளர் காசினியில் பெரியோர்கள்
ஏருநல்ல தொழிகலக்கி இசைந்துசெந்நெல் நடுவாரும்
நாறடைய குரவையிடும் நல்லரையுஞ் சொல்லிசொல்லி
கடைசியர்கள் குரவையிட கன்னல்சென்னெல் கதிர்விரிய
வட்டமிட்டு கெருடபட்சி வால்பறக்க நாட்டிருந்தார்
மதுசூதனப் பெருமாளுட மண்டபத்தில் வந்தனர்காண்
மண்டபத்தில் வந்துநின்று வார்த்தையேதோ சொல்லுவாராம்
வையகத்தில் கீர்த்திபெற்ற மதுசூதனப் பெருமாளும்
[1]நந்திவழி மீதிருக்க நாதசுரம் ஊதிவர
ஆரடா நந்தியது அதோவந்து நிக்கிறத
அப்போது நந்தி[2]விட் டழைத்துவாடா வென்றழைத்தார்
வார்த்தைகேட்ட நந்திதானும் வாறனென்று தானழைத்தார்
மதுசூதனப் பெருமாளின் வாய்த்தசிங்கா சனமருகே
எங்கிருந்து வாறீர்காண் இசலணஞ்ச பெருமாளே
சங்கரனார் இடமதிலே தான்வரமும் பெற்றுவந்தேன்
எந்தவரம் உந்தனக்கு இப்படியே தந்தார்கள்
தெச்சணா புவியதிலே சிறந்தமணிக் கட்டிப்பொட்டல்
சிறந்தமணிக் கட்டிப்பொட்டல் சீரான செல்வமுடையார்
வையகத்தில் பெற்றவரந் தவறா தவனாம்
மன்னவர்க்கும் அடுத்தவர்க்கும் மணிவிளக்காய் வந்தவர்களாம்
பேருலகில் கீர்த்திகொண்ட பெரியசிவ னணஞ்சபெருமாள்
என்றபெயர் கொண்டவன்காண் ஏற்றபெரிய சிவனணஞ்சபெருமாள்

அவனுடைய குடியதிலே ஆனைகட்டி [3]வாழ்ந்தவன்காண்
யாராரைக் காத்தவன்காண் இடுக்கண்வர விடாதவன்காண்
மாத்தாரை அடுக்கவொட்டான் வாட்போரைச் சாயவொட்டான்
அவனுடைய குடியதிலே அவன்கிளையில் வாழ்வாய்
கொடிபோல இனங்களெல்லாம் [4]கொழுந்து பொடிவீசவரம்
கோமரத்தான் குடிகளையும் கும்பிடும் அடியாரையும்
பேர்பெரிய சிவனணஞ்ச பெருமாள்போய் இருமென்றார்.

(மதுகூதனப்பெருமாள் வரம்கொடுத்தலும், சின்னசிவன் மணிக்கட்டிப் பொட்டலுக்குப் போதலும்)

மன்னவர்க்கும் அடுத்தவர்க்கும் மகனாக உதித்தவர்க்கும்
அவனுடைய இடமதிலே அன்பாகப் போயிரு
என்றனுப்பி விடையும் உகந்து இருந்தரசர் பூசைகொள்ள
மதுகூதனப் பெருமாளும் வார்த்தையேது சொல்லுவாராம்
சிங்காரனார் தந்தவரம் தானுனக்கு நானுந்தந்தேன்
சிங்காரச்செயலணஞ்சவரைச் சிறப்பாக அனுப்பிவிட்டார்
போறேநா னென்றுசொல்லி பொற்பாதம் [5]தொழுதுகொண்டு
மேற்குநோக்கி வழிநடந்து விரைந்துமணிக்கட்டிப் பொட்டலில்வந்தாரே.

தெச்சணாபுரி – தெச்சணாபூமி தென்பகுதி, தென் தமிழ் நாட்டைக் குறித்தது. **தெக்கணம்** –தெற்கு. **கெருடபட்சி** – கருடப்பறவை. **வெள்ளாளர்** –மருதநில மக்கள். **காசினி** –பூமி. **கன்னல்** –கரும்பு. **சென்னெல்** –செந்நெல், நந்நெல். **மதுகூதனன்** –திருமால். **நந்தி** –எருது, காளை. **ஆனை** –யானை. **இடுக்கண்** –துன்பம். **மாத்தார்** –மாற்றார் என்பதின் பேச்சு வழக்கு. **கிளை** –உறவு **உகந்த** –விரும்பிய.

ச.சொ. 1. நந்திவளி 2. விட்டளைத்து 3. வாள்ந்த 4. கொளுந்து 5. தொளுதுகொண்டு.

Cin̲n̲acivan̲ approaches Matucūtan̲apperumāl for a boon

"Oh! **Civan̲an̲añcaperumāl** handsome,
Go to **Maṇikaṭṭippoṭṭal** in the southern region

And stay there gloriously for worship"
Thus said **Tānulinka Īcar** to **Ciṉṉacivaṉ**
And sent him away kindly
Aṉañcaperumāl then did leave **Teṉcuvintāpuri**
And walked southwards on his way,
Along with **Piramacakti** of swan like gait and **Niliammai**
Passed they then **Putūr** witnessing on their way
Kites flying circles from one field to another,
Farmers on the banks and elderly folk of the world,
Tillers ploughing in the slushy fields
And planting paddy seedlings therein
Women ululating good wishes for the dense growth of seedlings in the fields
Sugarcane and paddy stalks in their growth and grains expanding,
The **Karuṭa** bird circling auspiciously above
To the country of such people and prosperity
Did arrive **Aṉañcaperumāl** and others
And a reached the *manṭapam* of **Matucūtaṉapperumāl**
As they stood there thus before that God of great fame on earth
Matucūtaṉapperumāl said,
"Who is he standing like a **Nanti**[1],
When we have already here **Nanti** and *Nātacuram*?
Bring him before me"
thus directed the Lord to his **Nanti**
Who accordingly brought **Aṉañcaperumāl**,
Near the throne of **Matucūtaṉapperumāl**.
"Where do you come from, 'Oh! **Aṉañcaperumāl**?"
Aṉañcavaṉ replied
I am returning from the abode of Lord **Cankaranār**
After attaining a boon from Him"
"Thou hast been given a boon quite proper,
At **Maṉikkaṭṭippoṭṭal** in the southern region
As one who never failed in the obligations of his boon,
Like a beacon for kings and followers theirs,

There was a ruler divine named as **Periya Civananañcaperumāl**
Who reared elephants at his royal household once,
Protected ever so many and prevented mishaps and grief
Would not allow enemies nearby or lose in war,
Thou shall continue in his holy dynasty,
With folk of all races showering incense
Which spreads all over like flags,
And with devotees praying and royal flags fluttering
Like **Periyacivananañcaperumāl** such
You go there and prosper"

Cinnacivan arrives at Manikkattippottal after getting the boon from Matucūtanapperumāl

"In his place you go and remain there
With kindness towards king s and their next of kin,
And to them born as sons theirs"
Thus exhorting **Cinnacivan** and bidding him adieu,
Matucūtanapperumāl said
"I have given thee as similar boon as granted by **Civan**"
And sent him off quite graciously
Cinnacivan did worship the golden feet of the Lord,
And said, "I shall go now"
Walked he then westwards on his way
And arrive at **Manikkattippottal** quickly.

1. **Nanti** - The sacred bull mount of **Civan**

(பெரிய சிவனணஞ்ச பெருமாள் கனவில் வந்து கோயில் கட்டச் சொல்லுதல்)

130. நாளான நாளையிலே நல்லவெள்ளிக் [1]கிழமையிலே
மலைபோல உருவெடுத்து மன்னர்சிவ னணஞ்சவனார்
எல்லோரும் படுத்துறங்கும் ஏற்றநடு சாமத்திலே
பெரியசிவ னணஞ்சபெருமாள் பேருறக்கம் உறங்கும்போது

பிறைசடையோன் உருவதிலே ஒரரவும் கப்பறையும்
பஞ்சாட் சரத்துடனே பரமசிவன் போலவந்து
சிவனணஞ்ச பெருமான்சாமிவந்து தெரிசனத்தில் சொல்லுவாராம்
பெரியசிவ னணஞ்சபெருமாளிடம் பற்பலவுஞ் சொல்லுவாராம்
பரமசிவன் எந்தனுக்குப பாவினையாய் வரமுந்தந்து
உன்னிடத்தில் பூசைகொள்ள உடையவனார் வரமுந்தந்தார்
வந்திருந்து உன்னிடத்தில் வாய்த்தநல்ல கினாவுசொன்னேன்
கோவில்வைத்துக் குடிநிறுத்தி குருபூசை நடத்தவேணும்
என்றுசிவ னணஞ்சவரும் இன்பமுடன் சொல்லுவாராம்

(பெரிய சிவனணஞ்ச பெருமான் கண்டகனவை ஊர் மக்களுக்குச் சொல்லுதல்)

மித்தாநாள் எழுந்திருந்து பேர்பெரிய அணஞ்சவனார்
குடும்பம் குடும்பமாகக் கூட்டியவர் [2]வரவழைத்து
இன்றுஒரு சொப்பனந்தான் நானுறங்கும் வேளையிலே
கண்துயிலும் வேள்ளயிலே கண்டேனான் ஒருசொப்பனந்தான்
கண்டவொரு கினாவையெல்லாம் கட்டுடனே சொன்னபோது
கோவில்வைக்க வேணுமென்று கூடியந்த குடிகளெல்லாம்

(கோயில் கட்ட நல்லநேரம் பார்த்தலும் கால் நாட்டலும்)

நாள்பார்த்து நேரம்பார்த்து நல்லநாள் பார்க்கவென்று
பஞ்சமியாம் அமிர்தயோகம் பண்பாகப் பார்த்துவைத்தார்
ஆசாரி மாரைவைத்து ஆதரவாய் மரஞ்செதுக்கி
திருவோண நட்சத்திரத்தில் திருக்கன்னி கால்நாட்ட
கன்னியந்த மூலையிலே கன்னிக்கால் நாட்டவென்று
கன்னியர்கள் குரவையிட கன்னிக்கால் நாட்டுவாராம்
உத்திரநல் நேரத்திலே உத்தசிவனணஞ்ச பெருமாளுக்கு
உத்திரங்கள் ஏத்திவைக்க சித்திரம்போல் உத்திரத்திற்கு

சீமைப்பலா மரந்தறித்து செப்பமுடன் பணிகள்செய்து
கருத்தாக மரந்தறித்து கட்டுடனே பணிகள்செய்ய
கறுத்தகூடு ஏற்றிவைத்தார் கதிருமணி மண்டபம் பணிப்பித்தாரே. 30

நடுச்சாமம் –நடுஇரவு. **பிறைசடையன்** –சிவபெருமான். **அரவு** –பாம்பு. **கப்பறை** – பிச்சைப்பாத்திரம். **தெரிசணம்** –தரிசனம். **கினாவு** – கனவு. **சொப்பனம்** – கனவு. **மித்தாநாள்** – அடுத்த நாள். **பஞ்சமி** – பௌர்ணமி அல்லது அமாவாசை கழிந்த ஐந்தாம் நாள். **அமிர்தயோகம்** –சுபகாரியங்களுக்கு உபயோகமான வாரமும் நட்சத்திரமுங் கூடிய ஒரு நேரம். **ஆசாரிமார்** – தச்சர். **திருவோணநட்சத்திரம்** –இருபத்தேழு நட்சத்திரங்களில் ஒன்று. **திருக்கன்னி** –பெண்கள். **உத்திரம்** – ஒரு நட்சத்திரம். **உத்த**–உற்ற. **சீமைப்பலா**– ஒருவகைப் பலா.

சு.சொ. 1. *கிளமையிலே.* 2. *வரவளைத்து.*

Periyacivaṉanañcaperumāḷ has a dream in which he is bidden to construct a temple

On a day among days on a certain Friday,
When **Civaṉanañcavaṉ** and all others
Were fast asleep at midnight,
When **Periyacivaṉanañcaṉār** was in deep slumber',
The god of that place did appear in his dream
Taking a shape mountainous like **Piṟaicaṭaiyōn**[1]
With snake and *Kappaṟai*[2] as well
Like the five lettered God **Paramacivaṉ**
And told him several things in his dream
"**Paramacivaṉ** granted me a gracious boon
He had expressed his consent to accept worship mine
"In thy good dream have I told you,
To Construct a temple and conduct *Kurupūcai* as well"
"Thus did **Paramacivaṉ** tell me in my dream,
Said **Civaṉanañcaṉ** with great pleasure

Periyacivanaṉaṇañcaperumāl informs this people of his dream

Waking up the next day **Periyacivaṉaṇañcāṉ**
Did summon his people with their families
One by one to assemble in his presence
And told them that he had a dream
When he was asleep
As the people were informed of the king's dream
His subjects all did decide unanimously
That a temple should be built

Fixing the auspicious time to start work of constructing the temple

They then fixed an auspicious day and a time
On a *Pañcami*[3] *titi* marked by *amirtayōkam*[4] beneficial
Carpenters did cut and carve the wood with care
Planed it but properly as a mast
And installed that *Kannikkāl*[5] in the corner proper
As virgins did ululate hailing the occasion
Then at the auspicious hour marked by *Uttiram*[6] star
They did plan to have *Uttirams*[7] picturesque
To build a temple for the God there
And felled a jack fruit tree for that purpose holy
Then they did carry out further tasks with care
Thus did they raise the shell of the structure
And directed the construction of the *manimantapam*

1. **Piṟaicatayōn** - **Civaṉ** with the crescent moon on is locks
2. *Kappṟai* - A bowl
3. *Pañcami* - The fifth day from the full moon or new moon day
4. *Amirtayōkam* - The most beneficial period of time on a particular day
5. *Kannikāl* - The first mast of pole erected for starting a construction
6. *Uttiram* - The name of one of the twenty seven stars according to Hindu
7. *Uttirams* - Beams (the pun in the use of the wood Uttiram may be noted here)

(கோயில் அமைப்பு)

131. வைத்தார் கோவில் சித்திர மாகவே
வாமடை களும் வைத்து விட்டார்
சித்திர மண்டபம் உருப்பட வைத்தார்
சிறந்த போதிகை [1]எழுப்பிடு வாராம்
பட்டு உத்திரம் வைத்திடு வாராம்
பற்பல சித்திரம் செதுக்கிடு வாராம்
முறுக்கு வாமடை முறுக்கிடு வாராம்
திருக்கு வாமடை திருக்கிடு வாராம்
கோவிலுக்குக் குருபூசை குணமுடனே செய்யவென்று
பெரியசிவ னணஞ்சபெருமாள் பெரியவரை [2]வரவழைத்து

(கோயில் பூசைக்குத் தேவையானதைச் சின்னசிவன் கூறுதலும் பூசையேற்று வீற்றிருத்தலும்)

நாளான நாளையிலே நல்லவெள்ளிக் [3]கிழமையிலே
உறங்கி [4]முழிக்குமுன்னே உடனே சொல்லுவாராம்
எந்தனுக்குப் பூசையது இன்பமுடன் சொல்லுகிறேன்
பிரமசத்தி அம்மனுக்குப் பெரியநல்ல சுத்தபூசை
[5]செங்கோழி செங்கிடாய்கள் சிவனணஞ்ச பெருமாளுக்கு
பாட்டுகூட்டி பவிசியமாய் பாவினயாய் எங்களுக்கு
என்தாயார் பொன்னுருவி என்தாயார்க்குப் பூசைசெய்ய
குலையோடே கதலிக்குலை கூண்டநல்ல குளுவன்குலை
குடமாலை வடமாலை கோப்புவகை ரொம்பவுண்டு
பிள்ளைக்கொரு பூசையுண்டு பெயர்கூறும் பலமுமுண்டு
கன்னிகளே செய்தாக்கால் கண்டதுண்டம் வாங்குவேன்நான்
பாவையர்க்குக் கெட்டுத்தாலி பலமதிலே உண்டுமடா
இப்படியே தந்ததுண்டால் ஏற்றகுடி யானதெல்லாம்

பூவுலகம் உள்ளளவும் புரிசடையோன் உள்ளளவும்
வானமது உள்ளளவும் வையமது உள்ளளவும்
என்தாயார் பொன்னுருவியம்மை [6]ஏந்திழையாள் பிரமசத்தி
பெரியவன் அணஞ்சபெருமாளிடத்தில் பூசைகொண்டு வீற்றிருந்தாரே.

வாமடை – கோயில் பாகங்களுள் ஒன்று. **உத்திரம்** –கூரையைத்தாங்கும் பகுதி. **கதிக்குலை** –வாழைத்தார். **வடமாலை** –வடை மாலை. **கோப்பு** –வரிசை. **பூசை** – ஆவணி, புரட்டாசியில் போது நடைபெறும் வழிபாடு. **கண்டதுண்டம்** –பல துண்டாக அறுத்தல்.

சு.சொ. *1. எளுப்பிடுவாரம் 2. வரவளைத்து 3. கிளமையிலே 4. முழிக்குமன்னே 5. செங்கோளி. 6. ஏந்திளையாள்.*

The structural pattern of the temple

Thus did they erect the temple picturesquely
Installed they *Vāmatai*[1] for deities various
Shaped then a Hall with painted figures therein,
Raised the *Pōti*[2] as well in its best
Silken beams were put in place properly
And carved figures several to adorn
Twisted, turned and screw the *vāmatais* all
In appointed places theirs
Then did **Periya Civananañcaperumāḷ**
Deciding to perform the *Kurupūcai* appropriately
Sent for the elders of the place

Ci<u>nn</u>aciva<u>n</u> prescribes the articles needed for the *pūcai* at the temple

On a day among days on a Friday auspicious
Ere he woke up from his sleep the said at once
Tell you I shall happily how the *Pucai* for me should be,
For **Piramacattiamma<u>n</u>** there must be a proper worship pure,
To **Civa<u>n</u>anañcaperumāḷ** red fowls and rams to be offered,
For both of us songs must be rendered in worship appropriate
To worship my mother **Po<u>nn</u>uruvi** you must provide

Banana bunches, *kuluvan* bunches and *Kutamalai*[3]
Vatamālai[4] and *Kōppu* too there must be for the *Pūcai*
If sons perform the *pūcai* they will acquire strength
And attain renown for bravery personal
If however *Kannis*[5] perform the *pūcai* for me
I shall hack them to pieces
For the married damsels their *tālis* will remain secure
If the *pūcai* is performed as prescribed
All the folk with their families will prosper
As long as the earthly world exists,
And till the Lord of the matted locks exists,
As long as the skies and this world exist,
My mother **Ponnuruvi** as **Piramacatti**
Would accept *pūcai* from **PeriyaCivananañcaperumāl.**
And remain thus forever

1. *Vamatai* - A niche in a temple for minor deity
2. Poti - A class of priests
3. *Kutamalai* - A garland or string parasols or umbrellas
4. *Vatamālai* - A garland made of *vatai* (a kind of snack)
5. *Kanni* - Virgin woman

துணைநூற் பட்டியல்

சுவடிகள்

பதிப்புக்குரிய சுவடிகள்

மாது பொன்னுரவி கதை,
(ஓலைச்சுவடி) எண் –46, ஆசியவியல் நிறுவனம், சென்னை–600 119.

சின்னணஞ்சான் கதை,
(ஓலைச்சுவடி) எண் –47,

சின்னணஞ்சி கதை,
(தாள்சுவடி) எண் –7, ”

ஒப்பிட உதவிய சுவடிகள்

பொன்னுருவி தவநிலை,
(ஓலைச்சுவடி) எண் –176, ஆசியவியல் நிறுவனம், சென்னை–600 119.

அகராதி நூல்கள்

கதிரைவேற்பிள்ளை, நா., தமிழ் மொழியகராதி, ஏசியன் எஜிகேஷனல் சர்வீஸ், புதுடெல்லி 1992.

சிங்காரவேலு முதலியார், ஆ., அபிதான சிந்தாமணி, ஆசியன் எஜிகேஷனல் சர்வீஸ், புதுடெல்லி, 1988.

வையாபுரிப் பிள்ளை, எஸ்., தமிழ் லெக்சிகன், தொகுதி I-VI சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை 1982.

தமிழ் அச்சுநூல்கள்

அருணாசலம். மு., கதைப்பாடல், காந்தி வித்யாலயம், திருச்சிற்றம்பலம், 1976.

அலமேலு, வ., தோட்டுக்காரி கதை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை, 1995.

அன்னகாமு. செ., ஏட்டில் எழுதாக்கவிதைகள், சர்வோதயம் பிரசுராலயம் தஞ்சை, 1960.

இராமராஜன், எஸ்.கே., சீவலமாறன் கதை, டாக்டர் உ.வே. சாமிநாதையர்நூல்நிலையம், சென்னை, 1985.

இராமன், கே.வி., பாண்டியர்வரலாறு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1977.

சதாசிவ பண்டாரத்தார்,டி.வி., பாண்டியர் வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1998.

சுப்பிரமணியம், பூ., சுவடி இயல், ஊலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1991.

சுப்பிரமணியம், சி. நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் காப்பியக் கூறுகள்,
தன்னானே பதிப்பகம்,பெங்களூர், 1997.

செல்வ லட்சுமி, ஜி., நீலசுவாமி கதை,
ஆசியவியல் நிறுவனம்,
சென்னை, 1999.

சோமலே, தமிழ் நாட்டு மக்களின் மரபும், பண்பாடும்,
நேஷனல் புக் டிரஸ்ட்,
புதுடெல்லி, 1961.

தசரதன், ஆ., சிவனணைஞ்சு பெருமாள்
கதைப்பாடல் – சுவடி,
தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம்,
நெ 1/45 முட்டுக்காடு சாலை,
கொட்டிவாக்கம்,
சென்னை – 41.

நிர்மலா தேவி, கு., சின்னணஞ்சான் கதை,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை, 1998.

நிர்மலா தேவி, கு., அரவமுத்து வீரன் கதை,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை, 1998.

நிர்மலா தேவி, கு., முத்தாரம்மன் கதை,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை, 1998.

பெரியசாமித்தூரன், ம.ப., கலைக்களஞ்சியம்,
தொகுதி–3,
தமிழ் வளர்ச்சிக் கழகம்,
சென்னை, 1954.

பெருமாள், அ.நா., தமிழில் கதைப்பாடல்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை, 1987.

ஜெயக்குமார் கி., பெருமாள் எ.கே., தம்பிமார் கதை,
ஆசியவியல் நிறுவனம்,
சென்னை, 1999.

வானமாமலை, நா., கான்சாகிப் சண்டை,
மதுரைக் காமராசர் பல்வலைக்கழகம்,
மதுரை, 1972

வானமாமலை, நா., ஐவர்ராசாக்கள் கதை,
மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகம்,
மதுரை, 1972

வானமாமலை, நா., காத்தவராயன் கதைப்பாடல்,
மதுரைக் பல்கலைக்கழகம்,
மதுரை, 1972

வானமாமலை, நா., தமிழர் நாட்டுப் பாடல்கள்,
என்.சி.பி.எச்.,
சென்னை, 1964.

ஜயலட்சுமி, ஆர். — கர்ணன் போர்,
ஆசியவியல் நிறுவனம்
சென்னை -119, 1999.

ஆங்கில நூல்கள்

Descriptive Survey of the Folk-Culture of Tamil Nadu, Vol-I Kanniyakumari District, Institute of Asian Studies.

Ereud — The Interpretation of Perems Translated from the German and edited by James Starchey Discus, Avon Books.

Kasirajan, R., — Evolutiona and Evaluation of Epics in Tamil Mathy Pathippakam,
Madurai, 1990.

Subramaniam P.(Ed.)., — A Descriptive Catalogue of Palam-leaf Manuscripts in Tamil, Vol-IV,
Institute of Asian Studies,
Chennai, 1999.

கட்டுரை

டாக்டர் சுப்பிரமணியம், பு., (பதி.), — கதைப்பாடல் - சில அணுகுமுறைகள்,
கருத்தரங்கக் கட்டுரை,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை. 26-2-1988.

பாடல் முதற் குறிப்பு

(எண் : பாடல் எண்)

அத்தரிடம்	5	எங்கள் குடி	62
அந்த வார்த்தை	123	எட்டான மாசம்	48
அப்படி போல்	9	எதிர்த்து நின்று	85
அம்பா சமுத்திரம்	44	என்றவர் வாது	88
அனுப்பியே	74	என்று சொல்லி	117
ஆகோவென்று	56	ஏந்தும் குழந்தை	29
ஆத்தங்கரையும்	73	ஒட்டனோடே	54
ஆதித்த பகவான்	16	ஒரு கழஞ்சி	53
ஆயானே	104	ஒடியே	55
ஆலங்குளம்	20	கண்டபோது	101
ஆனைக்கமுத்தி	68	கண்டான் கமல	22
இட்டயெழுத்து	13	கண்டான் மனம்	107
இப்படி வழி	83	கண்டோம்	76
இப்படி விசாரம்	91	கண்விழித்து	122
இரங்கியவர்	57	குடிபுகுந்த	52
இருந்து சாலை	28	கும்பிட்ட	115
இன்பமுள்ள	14	கேட்டவன்	75
இன்னமொரு	66	கேளுமென்று	92
உடையவர் தனக்கொரு	49	கொண்டுபோயினார்	109
உரைத்தாரவரும்	113	கொண்டே	105
உரைத்தாள்	87	கோபுரமும்	24
உரைத்திடவே	15	சிங்கார	129
ஊட்டியே	106	சித்தூர்	33
ஊரிடத்தில்	86	சீர்கிறக்கும்	6

சீவலபராசன்	116	நடந்தாள் சிலம்பலம்ப	182
செட்டிச்சி	26	நடந்தாள் கடந்தானே	37
செந்தூரில்	30	நடந்தாளிள	77
சென்றாளே	31	நடர்தார் தொடர்ந்தார்	32
சேவித்து	34	நடர்தார் பெண்கள்	17
சொல்லுவார்	100	நல்லபரி	127
சொன்னதமிழ்	7	நாடான நாடதிலே	11
சொன்னார் சீவல	112	நாடான நாடதிலே	69
சோறு தின்று	111	நாடான நாடதிலே	126
தண்டமிழ்	114	நாளான நாளை	130
தந்திரமாக	27	நாளை நாள்	81
தருவாயென	4	நில்லென்று	79
தவமே செய்த	58	நின்ற நாளில்	47
தாராட்டி	64	நின்ற மடமயில்	80
திப்பரப்புமலை	119	நொந்தேதிரு	59
திருப்பாற்கடலில்	118	பத்துமாசம்	50
திருவனந்தபுரத்தில்	40	பரமசிவன்	125
துறைதனில்	72	பல்பநாப	39
தூது சென்ற	99	பாக்கு	108
தூது போக	94	பாதைமிட்ட	96
தெப்பக்குளம்	45	பாலன்	61
தேரோடும் வீதி	46	புதல்வன்	60
தொழுது நின்று	103	பொன்னுவதில்	10
தொழுது பணிந்து	97	பொன்னிலங்கு	1
தோன்றுமாமட	95	போற்றி	89
நடர்தந்த	38	போனாள்	23

மங்கையுந்த	25
மணலாற்றின்	128
மயிலாடும்	42
மாணிக்க வலை	63
மாளிகைப்பூ	82
மானூரு	21
முன்னமே	8
முன்னாலென்னை	36
மையல் கொண்டு	124
மையல் கொண்டே	78
வட்டமிட்டு	35
வந்தருள	2
வந்தனரே	121
வந்தார் புதிய	120
வந்தான் குடி	84
வந்தான் மனை	70
வந்தான் வெளி	71
வந்தாளாவம்	19
வந்தேனென்று	102
வரிசையுடன்	93
வருத்தத்துடனே	98
வள்ளிக்கன்று	43
வார்த்தைகேட்டு	51
வாருமம்மா	41
வாழ்ந்திருக்கும்	12
வாழ்ந்திருக்கும்	110
விரசாய் கொலு	90
வீத்திருக்கும்	67
வீற்றிருக்கும்	65
வேரைந்தமிழ்	3
வைத்தார் கோவில்	131

சொல்லடைவு

(எண் – பாடல்எண்)

அகத்தியர் 121
அகத்தீஸ்வர் வாழ்மலை 44
அகதி 35
அகம் 14,58,63
அகம்புடையான் 68
அகரத்தெருவீதி 31
அகழி 128
அங்கம் 14,30,95
அங்கயக்கண்ணி 59
அங்காரநம்பி 23
அச்சங்குளம் 37
அச்சு 18,69
அசல் 55
அசனம் 46
அஞ்சனக்கண் 69
அஞ்சாறு 26,55,107,111
அஞ்சி 47,53
அஞ்சிநாள் 32
அஞ்சி மாசம் 43
அஞ்சி முடி 11
அஞ்சு 64
அஞ்சுகம் 85
அஞ்செழுத்து 64,124
அட்டகிரி 99
அட்டதிக்கு 124
அட்டதிசை 91
அட்டவந்தனம் 26
அட்டி 87
அட்டியல் 94
அடக்கம் 107
அடப்பம் 32
அடவு 64,65,116,119
அடியார் 125,129
அடியாள் 32,45,86
அடுப்பு 73
அடைக்கலம் 40
அடைக்காய் 64
அடையமுது 16
அண்டம் 122
அண்ணார் 115
அண்ணாவி 64,66,99,102,115–117
அணஞ்சபெருமாள் 84,122,123,128,131
அணஞ்சவர் 91,99
அணஞ்சவராசன் 66,68,81,90,101,102,126
அணஞ்சவன் 83
அணஞ்சவனார் 69,95,117,119,120–122
அணில் 119,121
அத்தர் 4,5,50
அத்தியுரி 35
அந்தணர் 91
அந்தரங்கம் 92
அந்தரம் 92
அந்தி 18
அநியாயம் 30,48,93
அப்பன் 30
அப்புச்சடை 118,124,125
அபயம் 24,56,59
அபிராமி 5
அம்பலத்தார் 23
அம்பலம் 110
அம்பாசமுத்திரம் 44
அம்பு 68,117
அம்புறாணி 94
அம்மா 23,43,45,55,107,108,114
அம்மாள் பேட்டை 29
அம்மி 12
அம்மை 18,20,33,43,77,108,122
அம்மை கதை 3

அமரபதி 30
அமரர் 122,124
அமரர்பதிக்கரசன் 31
அமரவர் 124
அமிர்தயோகம் 130
அமுதமொழி 32
அமுது 13,22,32,46,49,64,70
அமுர்தகுணம் 69,85
அமுர்த சம்பா 52
அமைச்சர் 63
அய்யன் 42,45,62,108
அய்யன்கோவில் 29,32
அய்யா 89
அயல் 43
அயன் 85
அயோத்திமலை 119
அரங்கை 118
அரசடிவாழ் பிள்ளையார் 31
அரசிக்கரை 21
அரசு 16,30
அரசுவிளை குடியிருப்பு 69
அரண்மனை 110
அரம்பையர் 126
அரன் 35,58,118,121–123
அரனார் 1
அரி 64
அரிகிருஷ்ணா 26
அரிச்சந்திரராசன் 43
அரிசி 65,73
அரிசித்துறை 35
அரிசிப்பட்டி 89
அரியப்பட்டு 16
அரிவைகுண்டநாதர் 24
அருகு 64
அருந்தவசு 39
அருவரை 121
அருவி 79
அருவிமலை 99
அருள் 50
அருள்மறவன் 77
அருளணஞ்சபெருமாள் 82,118
அரைநொடி 92
அரைவயிறு 47
அலம்பல் 42
அலவாக்கரை 30
அவத்தம் 115
அவல் 42
அவலடை 31
அவிசேகம் 111
அழகன் 68,81
அழகுமலை 121
அழிவு 85
அமுக்கு 69,73,85,111–113
அறம் 69
அறிக்கை 110
அறுகுலமாடன் 108
அறுபது 21
அறுமுகவன் 6
அறை 54,91
அன்னசத்திரம் 27
அன்னசுத்தத்தார் 15
அன்னம் 14,29,47,82,99,119
அன்னையர் 49
அனுமான் 119
ஆகமசாலை 91
ஆகமம் 64
ஆகாசம் 122
ஆசாரசொல் 77,85
ஆசாரம் 43,80
ஆசார வார்த்தை 78
ஆசாரி 130
ஆசாரிமார் 51
ஆசை 14,18,68,86,96
ஆட்டம் 87
ஆட்டுவாணியர் மடம் 38
ஆடரங்கு 85
ஆடை 18,35,111
ஆண் 47,49,54

ஆண்டவர் 95
ஆண்டவன் 13,65
ஆண்டவனார் 25,95
ஆண்டார் மடம் 37
ஆண்டு 37
ஆண்பிள்ளை 18,32,43,57,68
ஆணழகர் 120
ஆணழகன் 69
ஆணிப்பொன் 15
ஆணை 85
ஆத்தங்கரை 69,73,77,101
ஆத்தா 59
ஆத்திச்சுவடி 64
ஆத்துமாலை 124
ஆதி 32
ஆதித்த பகவான் 16
ஆதித்த வேளை 44
ஆதித்தன் 47
ஆதிபரன் 122
ஆந்தல் 17
ஆந்தை 16
ஆபத்து 54
ஆபரணம் 18,43
ஆயத்துறை 52
ஆயான் 64,66,102–104,117,123
ஆயிரங்கால் மண்டபம் 31
ஆயிரம் 58,67,122
ஆயிரம் பொன் 43
ஆயுதம் 51,64,96,115
ஆயுதவித்தை 14
ஆரபாரம் 115
ஆரல்வாய்மொழி 128
ஆரியப்பட்டு 67
ஆரூர் 56
ஆலங்குளம் 18–20
ஆலடிப்பட்டி 21
ஆலத்தி 89
ஆலமரச்சோலை 83
ஆலாத்தி 34
ஆலித்தடிக்காரர் 32
ஆலிலை 47,69
ஆழ்வார்குறிச்சி 45
ஆழி 94
ஆவி 18,30,73
ஆவிளம் 20,69
ஆள் 68,81,92
ஆளிசிங்கம் 99
ஆற்றங்கரை 24
ஆறு 47,53,110,119
ஆறுமுகம் 23,30,31
ஆறுதலை பிள்ளை 23
ஆரேழு 64
ஆனை 29,37,67,68,127,129
ஆனைக்காத்தய்யன் கோவில் 45
ஆனைக்கால் பாலம் 16
ஆனைமலை 120
ஆனைவாய்ச்சுனை 127
இச்சை 95,103,104
இசக்கி 38
இசக்கியமை 37
இசக்கியம்மன் கோயில் 38
இசலணஞ்ச பெருமாள் 129
இசை 119
இஞ்சிவிளை 52
இட்டதுறை 35
இடசாரி 65
இடது 66
இடதுகால் 65,66
இடுக்கண் 129
இடுகாடு 13,77
இடும்பு 57
இடை 46,94
இடைக்கு இடை 31
இடைமணி 49
இதலை மொழி 60
இந்திரன் 124
இந்திர ஜாலம் 102,118
இமயஜாலம் 118

இமை 35.52,118,126
இயமன் 108,114
இயலணஞ்ச பெருமாள் 122,129
இரண்டு 18,37,47,54
இரண்டுகல்லான் சீமை 127
இரவிமதன் 49
இரவு 46
இருநூறு 21
இருப்பு 92
இருபத்தெட்டாம் நாள் 47
இருபத்தேழு நட்சத்திரம் 59
இரும்பு 116
இருளர் 118
இருளப்பனண்ணாவி 102
இருளன் 64,66,108,115
இருளனாயான் 64,102,115,116
இருளி 12
இரை 29
இல்லங்குடி 32
இல்லணஞ்சபெருமாள் 128
இல்லம் 92
இலக்கு 69,104
இலங்கப்புரை 64,104
இலந்தையம்பலம் 39
இலை 55
இளங்கொடியாள் 69
இளந்தோப்பு 77
இளநீர் 29,64
இளநேரம் 47
இளமணல் 13
இளமரத்தோப்பு 73
இளமான் 77
இளவரசர் 12
இளவழகன் 121
இளவாழை 62
இளைப்பு 18
இறகு 9
இறையவனார் 13
இன்பக்கனி 113
இன்பன் 66
ஈசர் 57
ஈசன் 32,44,125,126
ஈசுரர் 123,128
ஈசுவரன் 122
ஈட்டி 117
ஈத்தங்கரை 34
ஈத்துப்புரை 50
ஈரல் 13
ஈஸ்பரன் 12,39,93
உக்கிரம் 87
உகம் 85
உச்சமலை 37
உடம்பு 13,28,47,48,108
உடமை 40
உடல் 48,54,55,69,77,107
உடலம் 57
உடை 68,94
உடையகுடி 127
உடையவர் 48,49,57
உடைவாள் 66,89,93,94,113,115
உண்டி 127
உத்தமர் 116
உத்தமன் 24
உத்தமி 4
உத்தரநாட்டாத்தியம்மன் 26
உத்தரீகம் 49
உத்திரநாள் 59
உத்திரம் 86,131
உத்திரவாத்தை 86
உதிரம் 46,47
உப்பாறு 37
உப்பு 115
உப்புக்கண்டம் 127
உபகாரம் 112,115
உபசாரவார்த்தை 101
உபதேசம் 12,64
உபாயம் 106
உம்பளம் 42

உமை	35
உமைதேவர்	14
உயிர்	48,56,92,117
உரம்	92
உரு	69,94
உருக்கிரும்பு	18
உருக்கையருவி	119
உருண்டமலை	119
உருமால்	71,83,94,102
உல்லாசம்	20,23,94,116
உலகம்	58,120
உலா	64
உலை	49
உலையடுப்பு	49
உவகை	124
உவர்மண்	71,73
உவரச்சாணி	72
உளி	63
உறக்கம்	27,48,82
உறப்பு	55
உறவு	69
உறி	43,111
உறுதி	87
ஊசிமடம்	18
ஊட்டு	96
ஊட்டுபத்து	35
ஊத்தங்கரை	73
ஊதியம்	44
ஊமை	35
ஊழியம்	102
ஊழிவிதி	83,85
ஊற்றங்கரை	128
எட்டாப்பழம்	86
எட்டிச்செட்டி	52
எட்டு	47,53,91
எண்சுவடி	64
எண்ணாயிரங்கோடி	126
எண்ணெய்	54,55,65
எதர்ப்பு	54
எம்பிரான்	91
எம்பெருமான்	121
எருதுவிழுந்தான் பாறை	45
எலி	95
எலுமிச்சித் தோட்டம்	52
எழுகதிர்	49
எழுத்து	13,42,85
எழுத்தாணி	46
எள்	42
ஏகாந்தம்	45,64
ஏடு	46,64
ஏத்தபிரான்	93
ஏத்தாப்பு	69,71,77,94
ஏது	110
ஏந்திழையாள்	12,14,15,31,39,55,86
ஏழடி	65
ஏழு	15,23,37,47,55
ஏழுகோட்டை	122
ஏழ பிடாகை	69
ஏழுலெட்சம்	35
ஏழுலோகம்	20
ஏழெட்டு	23,32,45
ஏழை	42,86
ஐங்கரன்	42
ஒக்கரை	64
ஒட்டிரெட்டி	54
ஒண்டொடியாள்	30
ஒத்தக்கண்பொத்தை	18
ஒத்தபாலம் சீமை	119
ஒருத்தி	29
ஒலி	60
ஒளி	49,121
ஒன்றுரண்டு	107
ஒன்பதாம் திருவிழா	46
ஒன்பது	26,53,55,93
ஓகெடியம்	85
ஓசை	13,16
ஓசைமணி நாயன் கோவில்	83
ஓட்டம்	44,64

ஒட்டன் 54,116
ஒடை 23,26,32,117
ஒநாய் 99
ஒமம் 99
ஒரக்கம் 122
ஒரகம் 124
ஒலை 97
கங்காளி 45
கச்சை 52,64,65,94,102,115
கசுமாலி 80
கஞ்சம் 43
கஞ்சி 44,54,55,73,77,80,107
கட்டச்சி 68
கட்டளைப்பூசை 34
கட்டாரி 94
கட்டி 96
கட்டியம் 89
கட்டியல் 66
கட்டுசாதம் 18
கட்டுந்தறி 69
கடம்பன் 30
கடமை 116
கடல் 41,48,60,120
கடல் கரை 31
கடவுள் 92,115,121
கடன் 34,55
கடுக்கன் 94
கடுவாய் 101,102
கடுவாய்புலி 42
கடை 116
கடைச்சரக்கு 61
கடைத்தெரு 116
கடையத்தூர் 45
கடையம் 83,117
கண் 35,47,48,65,77,102,123,130
கண்ணாடி 42
கண்ணாடி சோலை 119
கண்ணாடி தேசம் 119
கண்ணாளர் 46,51,63,64
கணக்கர் 64
கணக்கு 64,86
கணபதி 1,65
கணவர் 12,13
கணவன் 23,37,43,46.56,69,76
கணை 102
கத்தாழை 96
கதலி 99,131
கதவு 110
கதவுதட்டி 103
கதிர் 46,129
கதிரவன் 21
கதிரோன் 84
கதின்மை 99
கதை 69
கந்தமர் 16,46
கந்தன் 1,19
கப்பம் 91
கப்பரை 102,130
கப்பி 96
கம்பு 64,65
கமலம் 22,69
கமலமுகம் 91,119
கயம் 24
கயிலை 109,124,125
கயிறு 16,56,102
கர்த்தர் 50
கர்நடர் 89
கர்மவினை 45
கரடி 99,121
கரம் 69,92,124
கரமனையாறு 39
கரி 12,116
கரிமுகன் 65
கரிமுகனார் கோயில் 31,82
கரு 36,46,47
கருங்கல் 8
கருங்காடு 32,34
கருங்குரங்கு 42

கருங்குளம் 23
கருங்குறத்தி 46
கருஞ்சீரகம் 120
கருணையாறு 45
கரும்பனையாறு 32
கரும்பு 42,62,69
கரும்புலியூர் 21
கரும்புரவி 99
கருமம் 20,80,93,95,104
கருமலை 42
கருவலம் 69
கருவூலம் 91
கரை 23,69,73
கரையகத்தண்ணல் 26
கரையாளர் 119
கரையாளன் மடம் 18
கல் 12,18,32,73,85,
95,100,121–123
கல்கோட்டை 29
கல்தூண் 114
கல்மடம் 23,128
கல்மாளிகை 32,46
கல்லாறு 45,120,127
கல்வெட்டங்குழி 32
கலகம் 109
கலம் 13,55,58
கலி 37
கலிங்கு 73
கலியாணம் 11,13,14,113
கலியாணி 32
கலியாணியமம்மன் 45
கலியுகம் 120
கலியுகர் 32
கலியுகன் 21
கலியுக வரதர் 32
கலைமான் 121
கலைவாணி 63
கவ்வை 22,35.42,91,108
கவி 108
கவிஞர் 37
கவிவாணர் 89
கவுண்டர் மடம் 29
கழஞ்சி 52,53
கழிப்பு 96
கழுகு மலை 99
கழுத்து 13,32,43,47,67–68,94
கழு 111
கள்ளர் 111
கள்ளரக்கு 102
கள்ளவாள் 64
கள்ளன் 94,107,109
கள்ளி 114
களபதனம் 18
களபம் 94
களம் 115
களரி 68
களவு 111
களியக்காவிளை 39
கற்கண்டு 49,62
கற்பகம் 111
கற்படி 8
கற்பூரம் 34
கறி 44,53,111
கறைக்கண்டர் 122,123
கன்மம் 114
கன்மவிதி 45
கன்று 62,104
கன்னல் 99,121,129
கன்னி 50,68
கன்னிக்கால் 130
கன்னிக்குறிச்சி 32
கன்னிபரமேஸ்வரி 1
கன்னியர் 20,30,32,42,43,46,
54,69,72,89,120,130
கன்னியாகுமரி 35
கனமுதல் 15
கனல் 13
கனவு 29

கனவுள்ளி 120
கனா 35,46
கன 42,62,99,101,120
கஸ்தூரி 94,122
கா 104
காகம் 75,95,102
காக்கழுக்கஞ்சிமை 119
காக்காச்சி பொன்மலை 121
காக்கும் புதூர் 129
காசினி 35,37,126,129
காஞ்சி நாடு 88
காஞ்சிபுரம் 87,99,100
காட்டூர் 39
காட்டாளம்மண் 45
காட்டுப் புதூர் 120
காட்டுவழி 118
காடு 23,26,29,32,110,120
காணி 69
காணிக்கை 15,20,27,32,34,43,68
காதல் 82,85,92,95,103,113
காதவழி 54,111
காது 35,48,64,69,111
காமக்குளிர் 78
காமப்பேய் 69
காமமோகம் 78
காமன் 69,80
காமாச்சி 23
காய் 12,120
காயாம்பூ 104
காயாம்பூமேனி 67,127
கார் 37,131
காரணவர் 43
காரளைக் காயில் 32
காராக்கள் 104
காரிகை 35,42,92
காரிகைமார் 47
காரியம் 15,26,44,101,102,115
கால் 27,29,54,66,107,108,126
காலம் 16,56,76,110,113
காலாள் 67,116
காலி 44
காலை 18
காவலர் 91
காவல் 111
காவல்காரர் 111
காவலன் 32,82
காவி 111
காவியம் 2
காவு 42,82,121
காளை 56,103
காறை 43,120
கிங்கிணி 14
கிஞ்சு 85
கிஞ்சுகம் 85
கிட்டிணர் 21
கிட்டிணாபுரம் 45
கிடாரி 104
கிண்ணி 55
கிணறு 73
கிரி 119
கிருபை 122
கிலேசம் 56,90
கிழங்கு 42
கிழடு 54
கிழவி 44,54
கிளி 29,68,85,
கிளிமொழி 69,74,77
கிளை 129
கிளைமனுசர் 110
கிளைவழி 43
கிறாவி 47
கினா 130
கீர்த்தி 34,103,119,124,126,128
கீழத்தெரு 68,80
குகை 46
குசவன் 75
குஞ்சம் 68
குட்டி 32,112

குட்டை நாடு 27
குடம் 12,29,32,47,61
குடமாலை 131
குடல் 57,111,117
குடில் 42,102
குடி 32,51,52,62,129,130
குடிமரம் 125
குடிவழி 43
குடுக்கை 43
குடும்பம் 130
குடும்பி 64
குடை 16,82
குடைக்காரன் 82
குண்டனி 61
குண்டலம் 64
குண்டோதரன் 83
குத்தாலநாதர் 45
குத்தி 42
குத்துக்கல் 52
குதலைமொழி 60
குதிரை 26,32,43,67,93,115
குதிரைப்படை 67,68
குப்பாயம் 67
குப்பை 54
குபேரன் 77
கும்பம் 49
கும்பிக்கடி 61
குமரப்பன் 30
குமடு 42,100,101,104,119,120,122
குமரன் 31
குமரி 114
குமாரர் பத்து 35
குமாரன் 113
குமிர்தமொழி 85
குமிழ் 69
குமுர்தக்குடம் 58
குயில் 42,77,85,99,120,121,127
குரங்காட்டம் 87
குரலோசை 29
குரவை 16,19.32,37,45,57,60,62,115,124,125,127,129,130
குரவையொலி 35,68
குரு 12,64,82,121
குருநாதன் 123
குருபரன் 39
குருபூசை 32,130,131
குரும்பு 105
குரும்பை 27
குருமுனி 46
குருவி மலை 99
குல்லா 71,94
குலம் 78,82
குலமடந்தை 93
குலை 131
குழந்தை 12,13,18,19,21,25,29,32,54,55,57,61,64,69
குழல் 18,35
குழல்வாய்மொழி 45
குழலார் 14,19
குழலாள் 46
குழலி 82
குழவி 12
குழி 46
குழிதாழி 71,73
குழை 69,109
குழைக்காதன் 26
குழைக்காது 77,78
குவலயம் 116
குளங்கரை 40
குளம் 35,110
குளித்துறையாறு 39
குறட்டாடு 44
குறடு 94
குறத்தி 31,43,92
குறப்பெண்கள் 42
குறமகள் 43
குறவர் 42,100,101,102
குறவர் மகள் 42

குறவன் 32
குறி 16,17,42,43,47,57
குறிச்சூர் 93
குறுக்கெலும்பு 48
குறுணி 23,55
குன்றிமணி 54
குன்னிமலை 32
குன்னிமலை அய்யன்கோயில் 32
கூகையாறு 42
கூட்டம் 14,64,67
கூடம் 86
கூடாரம் 67
கூடு 18,94
கூடுகொம்பன் மலை 104
கூண்ட நோவு 52
கூண்டுவண்டி 115
கூண்டுகுடி 125
கூண்டுசிரம்டம் 66
கூத்தாட்டு 21,57
கூத்து 87,96
கூத்துவன் 58
கூந்தல் 16,120
கூலி 26,27
கூழைப்பிரம்பு 54
கூளி 102,117
கூன்கிழவன் 54
கூன்கிழவி 110
கூன்பல்லி 57
கெட்டிக்காரி 109
கெண்டி 122,123
கெண்டை 35,80
கெண்டைக்கண் 80
கெண்டைக்கால் 48
கெம்பீரம் 68,73,83,94,101
கெர்ப்பம் 46,56
கெருடபட்சி 129
கெருடன் 87
கெருடாழ்வார் 54
கெவுளி 43,74
கேடயம் 64,115
கை 13,20,27,32,35,46,54,55,
61,65,66,69,77 ,83,89,93,96
கைக்கயிறு 94
கைக்குழந்தை 35,37,40
கைப்பிரளி 103
கைமுதல் 43
கையறுத்தான் பச்சிலை 103
கையறுவாள் 52
கையாச்சை 69
கைலாச மண்டபம் 122
கைலாசம் 122,124,126,127
கைலை 122
கைவளை 18,110
கைவாள் 102
கைவிளக்கு 89
கொக்கிறகு 73
கொங்கை 25,29,47,107
கொச்சிக்கோட்டை நாயன்மார் 116
கொச்சை 13
கொச்சைப் பேச்சு 109
கொட்டகை 23
கொட்டப்பாக்கு 106
கொட்டாரத்தூர் 37
கொட்டாரவாசல் 78
கொட்டாவி 86,108
கொட்டு 95,96,100,108
கொடி 46,129
கொடிபடர்ந்தான் மலை 99
கொடிபிடித்தான் மலை 99
கொடிப்பிரம்பு 65
கொடிமரம் 24
கொடை 43
கொண்டிற் கூலி 51
கொண்டை 35,46,68,94,108,109,124
கொத்தவர் 64
கொத்தவன் 103
கொத்தியார் 54,55
கொத்து 40,44,73,96

கொத்துக்கோட்டை	15
கொத்துமலை கோவில்	27
கொந்தகம்	16
கொப்பாடை	61
கொப்பு	49,69,77,78
கொம்பன் மலை	99
கொம்பனரிசி	49
கொம்பனையாள்	83
கொம்பு	63,94
கொல்லம்	116,126
கொலு	67,85,89,90,111,113,115,117,122
கொழுப்பு	111
கொள்ளி	12,13,18,20
கொள்ளிவாய்ப் பேய்	102
கொள்ளை	40
கொற்றவர்	12
கொன்றை	21,57,64
கொன்றைவேந்தன்	64
கோங்குமரம்	103
கோங்குமலை	127
கோசிகனார்	43
கோசிமை	93
கோட்டானை	71
கோட்டாறுப்பட்டணம்	37
கோட்டான்	74
கோட்டி	87
கோட்டை	23,91,110,115,122
கோடாலி	71
கோடி	114,116
கோடிப்பணம்	15
கோடிமுகம்	85
கோதண்டராமன்	44
கோதுகுலம்	49
கோதை	114
கோதைமார்	58
கோதையர்	24,27,30,71,124
கோபாலர்	83
கோபுரம்	24,27,30,121
கோமரம்	125,126,129
கோமான்	78,82,84
கோமேதகம்	15,63,67
கோயில்	27,78
கோரை	44
கோரோசனை	103
கோலம்	13,18,42,57,77,83
கோழை	64
கோவிக்கல்	67,113,114
கோவில்	20,23,34,35,37,43,85,130
கோவில் முகப்பு	44
கோழி	96
கோழிக்குஞ்சு	87
கோழிமுட்டை	102
கோனார்	44
சக்கரம்	87
சகுனி	44
சங்கரனார்	128,129
சங்கிலித்துறை	35
சங்கீதம்	14,89
சங்கீத மண்டபம்	23
சங்கு	64,99,121
சங்கை	35,63
சட்டம்	91
சட்டி	71
சட்டை	67,94,117
சடக்கன் மடம்	29
சடங்கு	14.49,69
சடுதி	62,64,94,99,124
சடை	46
சடையன்	69
சடையாண்டி	126
சடைவு	37
சண்டமிர்தம்	42
சண்டாளப்பேய்	37
சண்டை	61,108,110
சத்தி	43
சத்துரு	107
சதகோடி	13
சதங்கை	13,102

சதயம்	68	சன்யாசிமலை	42
சதுரவளை	51	சனி	43,48,57
சந்ததி	4,15,24,27,30,46	சாடி	61
சந்தனப் பலகை	63	சாடை	111
சந்தனப்பொட்டு	94	சாணாகம்	73
சந்தனம்	68,99,109,110,120,122,126	சாத்தன் குளம்	32
சந்தன மலை	120	சாத்து மலை	124
சந்தன மேடை	113	சாதம்	12
சந்தன வாழ்மலை	42	சாதி	44,80,85,93,95,113
சந்தி	27.87	சாம்பிராணி	42,108,122
சந்திரக்குடை	24	சாமத்தியம்	69
சந்திரப்பூவர்ணம்	124	சாமம்	111
சந்திரன்	124	சாய்வுமலை	42
சந்து	59	சாயங்காலம்	32
சந்நிதி	30,32,37	சாயம்	73
சப்பிரத்தேர்	45	சாயறச்சை	65
சப்பிரம்	24,30	சாலுகை	63
சம்பளம்	42,51	சாலை	16,23,28,32,37,39
சம்பா	46,49	சாலைவழி	83
சம்பிமுகம்	13	சாவு	57
சமத்தன்மார்	101	சாஸ்திரம்	13,36,59,64
சமிர்தம்	116,117	சாஷ்டாங்கம்	23
சமுதாடு	94,115	சிகரம்	46
சமூகம்	113	சிங்கம்	95
சர்க்கரை	42	சிங்களர்	89
சரசோதி	2,4	சிங்களூர்	44
சரணம்	47	சிங்கன்	68
சரப்பணி	29,44	சிங்காசனம்	45,46,89,116,129
சரீரம்	13,56,65	சிங்காரமலை	119
சருகு மலை	42	சிங்கி	68,107,110
சல்லடம்	65,102	சிட்டி	77,83
சல்லா	94	சித்தயோகம்	59
சல்லாரி	71	சித்தம்	50
சலிப்பு	104	சித்தாண்டார்	46
சலுவை	86	சித்திரகாமன்	77
சழன்	48,54,58	சித்திரகூடம்	51,55,119
சற்பம்	46	சித்திரம்	47,73,80,130,131
சன்யாசி	114	சித்திர மண்டபம்	131
சன்னப்போர்	66	சித்திர புத்திரர்	124

சித்துத்தொழில் 102
சித்தூர் 32,33
சிந்தாமணி 70
சிந்து 109
சிநேகம் 42,69,82
சிப்பி 92
சிமிழ் 104,105,123
சிரசு 108
சிரம் 111
சிரம்பம் 64,66
சிலம்பு 16,18,35,45,67,110,123
சிலை 120
சிவகாமி 4,5
சிவசங்கரர் 115
சிவஞானம் 64
சிவஞானமந்திரம் 64
சிவதாணுலிங்கநாதன் 128
சிவந்தநிழல்வாடி 103
சிவப்பு 57
சிவ புத்தர்புரம் 32
சிவபூசை 32
சிவபெருமாள் 40
சிவபெருமான் 126
சிவமருந்து 118
சிவன் 33,42,48,57,58,62,64,79,120,125
சிவனணஞ்சபெருமாள் 62,64–68,78,80, 85,86,89,91–93,100,103, 111–113,116–118,121–129,131
சிவனணஞ்சவர் 64,66
சிவனணஞ்சவராசன் 67
சிவனணஞ்சவனார் 69,77,78,82, 85,92.99,103,104
சிவாலயம் 26
சிறாளி 77
சிறுக்கன் 52,64,77,94,99,104, 105,107,109,113,115
சிறுவன் 31,39,40,46,48,58
சிறுவர் 13
சிறை 91
சின்னசிவன் 125,126
சின்னணஞ்ச பெருமாள் 113–115
சின்னணஞ்சி 69–80,83–87,92–96 99,104,108–112,114,115
சினேகம் 110
சீத்துவக்கேடி 44
சீதப்பாலூர் 23
சீமை 125.126,130
சீமாட்டி 23
சீரகம் 120
சீலை 106,107,108,114,123
சீவலபராசன் 116,117
சீவலமார்பன் 110,111,112,115
சீவலமாறாசன் 111,115,116
சீவன் 23,48
சீனி 49
சுக்கான் 48
சுக்கு 61
சுங்கான் 55
சுங்கான் கடை 38
சுட்டமண் 86
சுண்டைக்காய் 44
சுண்ணாம்பு 71
சுணை 44,98,103
சுத்தரங்கு மாளிகை 35
சுத்துகை 92
சுந்தரநாச்சி 32
சுந்தரப்பிள்ளை 26
சுந்தார் 93
சுப்பிரமண்யசாமி 30
சுமடு 55,65
சுமைதாங்கி 77
சுவடு 65,78
சுவர் 43
சுவாமி 80
சுனை 83,119,123,124
சூட்டுக்கோல் 114,127
சூடம் 122
சூத்திரம் 108

சூதகம் 110
சூரன் 100,117
சூரியப்பிரகாசம் 67
சூரியபகவான் 16
சூரியவட்டம் 67
சூரியன் 7,69
செக்கடியிலீசர் 16
செங்கிடா 116,131
செங்கை 25
செங்கோட்டை 3,6,11
செங்கோடிவாழய்யன் 35
செங்கோல் 101
செங்கோழி 131
செட்டிகுளம் 23,38,45
செட்டிச்சி பிள்ளை 26
செட்டியார் மடம் 18
செட்டு 95
செடி 110
செந்தமிழ் 2,6
செந்தாமரை 19,94
செந்தாமரைமுகம் 92
செந்தில் 1
செந்திலாதிபன் 30
செந்தூர் வேலன் 31
செந்நாய் 111
செப்பு 47,109,123
செப்புத்தனம் 78
செப்பேடு 57
செம்பகமலை 127
செம்பவளம் 63
செம்பவளராசன் 11,43,46,51,58
செம்பு 55
செயலணஞ்சவர் 129
செல்வம் 13
செல்வி 2
செவ்வலரி மாலை 89
செவி 79,102
சேட்டை 116
சேரன் 62.128
சேலை 46,55,61,68,69,71–73,76,77,83
சேவகர் 112
சேவகன் 99
சேவுகர் 67,89,90,111
சேவுமரக்கார் 82
சேனை 52,69,115
சொக்கநாதர் 49
சொக்கர் 49
சொகுசு 95,99
சொட்டை 94
சொப்பனம் 130
சோதனை 37,104
சோதி 77
சோலி 44
சோலை 42,77,82,99,120
சோழர் குலம் 62
சோழன் 62
சோறு 13,38,52,53,111,115
சோஸியன் 36
ஞானவொளி 30
தகட்டுத்துறை 35
தகடத்தொழில் 66
தகடப்பொந்தி 64,65
தகடம் 65,66
தங்கக்கட்டில் 108
தங்கச்சி 113
தங்கப்பல்லக்கு 27
தங்கம் 30,92,95
தங்கமணி 121,128
தங்கமுடி 102
தங்கவளை 35
தங்கை 20
தட்டாரி 64
தடம் 16,101,110
தடவரை 20,42,65,104
தடி 107
தண்டக்காரர் 67
தண்டிகை 66,93
தண்டை 13,16,35,48,67,68

தண்ணீர் 73,82
தந்திமுகம் 42
தந்திரம் 27,32,37,92,94,102,116
தபசு 16
தம்பட்டம் 26
தம்பலம் 110
தம்பிரான் 91,100
தம்புரான் 32,95
தமயன் 113,115
தமிழ் 101
தமிழ்ப்புலவர் 8,9,89
தயிர் 43
தர்ம மடம் 29
தர்மவாட்டி 20
தரணி 82,95,115
தரவு 46
தரிசிமணி 35
தருவை வீதி 29
தரை 42,46,65,70,72
தலம் 73
தலை 13,15,29,32,37,46,53
55,74,77,83,107, 111,112
தலைப்பா 71
தலைமயிர் 47
தலைமுடி 69
தலைவன் 24,94
தலைவிதி 27
தவக்குறத்தி 43
தவசிமுனி 42
தவசு 20,22,38,46,48
தவப்பலன் 115
தவப்பேறு 115
தவம் 15,30,37,120
தள்ளை 12
தளவாபுரம் 35
தனபாரம் 47
தனம் 18,32,68
தாகம் 55,68
தாசி 89
தாசி மடம் 23
தாடாண்மை 69
தாடாளன் 64,66
தாண்டவன் 95
தாண்டுவாங்கயிறு 35
தாணுமாலை நாதன் 3
தாணுலிங்கம் 128
தாதிமார் 63
தாதியர் 49
தாபம் 14
தாமரை 16
தாமரைவோடை 23
தாய் 55,58,114,115
தாய்மார் 57,127
தாயக்காரன் 68
தாயார் 14,39,108
தாயிற்று 94
தார்குழலார் 15
தாரா 29
தாராட்டு 14
தாலி 32,131
தாழ்குழல் 57
தாழ்ந்த குலம் 78
தாழ்வடம் 24,94
தாழை 120
தானம் 23,91
திக்கணம் பொத்தைக்காடு 35
திக்கு 111,116
திங்கள் 47
திங்கள்முடி 69
திட்டுக்கல்லு 35
திண்ணை 13
திப்பரப்புமலை 118,119,127
தியானம் 23
திரவியம் 13,34,43,46,69,80,85,95,114
திரள் 115
திர்சூலி 5,20,45
திருக்கணங்குடி 127
திருக்கூத்து 23

திருக்கை 93,103
திருக்கோவில் 30,43,46
திருச்செந்தூர் 25,30
திருச்செவி 46
திருத்தவசு 46
திருத்துடை 124,125
திருநகரி 25
திருநடனம் 26
திருநயனம் 116,118
திருநாமம் 37
திருநாள் 26,31,32,37,44
திருநீறு 23,82
திருப்பதி 26
திருப்பாதம் 122,124
திருப்பாற்கடல் 117,118
திருப்பூ 47
திருமஞ்சனக்குடம் 44
திருமதில் 23,35,43
திருமால் 1,32,77
திருமுகம் 55,43
திவசம் 49
திருவட்டாறு 39
திருவயிறு 47,49,52,55,59
திருவன்கூறை 55
திருவனந்தபுரம் 39,40
திருவாக்கு 57
திருவாணை 55,95
திருவிழா 31,35.39,46
திருவிளம் 32,44,82
திருவுரு 37
திருவுளம் 57
திருவோணம் 130
திரை 48,108
தில்லை 23
திலர்தம் 109
திறம் 99
தினம் 24
தீ 44,74
தீட்டு 73
தீர்த்தம் 23,26.30,31,35,37, 45.113,118,123
தீரன் 78,92,125
தீரன்சிவனணஞ்ச பெருமாள் 77
துகில் 85
துகிலாடை 54
துஞ்சு 69
துட்டமிருகம் 42,101
துட்டர் குலம் 62
துடியிடை 83
துப்பட்டி 71,73,83,94
துப்பனம் 116
தும்பை மலர் 64
தும்மல் 74
துயில் 83,85,90,130
துயிலாடை 110
துரிதம் 55
துரும்பு 125
துரைமகன் 87
துவரவண்ணாதி 80
துவரவண்ணான் 69,85,92
துளுவன் 131
துறட்டிகொட்டு மடம் 38
துறை 71,72,80,95,99
தூசி 117
தூசிப்படை 115
தூண் 51,114,125
தூண்டுகோல்முர்த்தி 29
தூதன் 127
தூது 68,89,91,93-95, 97,99,103,127
தூதுவன் 52,54,55,62,113
தூபதீபம் 42,64
தூரம் 18,29,32,44,51,64, 90,100,102,108
தூவட்டம் 94
தூள் 104
தெச்சணாபுரி 129
தெச்சணாபூமி 126,127

தெட்சணாபுவி 126,129
தெச்சணை 64
தெப்பக்குளம் 45
தெப்பம் 23,44
தெய்வகம் 21
தெய்வத்தலம் 30
தெய்வப்பரி 126
தெய்வபாண்டி 62
தெய்வம் 24,26,30,43,44,
56,65,96,108
தெய்வமலை 42
தெய்வயானை 2
தெய்வரம்பை 69,83
தெய்வேந்திரன் 77,89
தெய்வேந்திரன் சனை 37
தெரு 13,15,34,64.67,68,77,119
தெலுங்கர் 89
தெள்ளமுது 85
தெற்கு 23
தெற்பக்குளம் 65
தெற்பம் 32
தென்கயிலை 1
தென்கரை 32
தென்காசி 11,15,16,31,32,37,39,
40,43,45,51,64,66,69,
82, 110,111,113.115,116,118
தென்காசி நாதர் 16
தென்காசி பட்டணம் 77
தென்காசிபுரம் நகர் 104
தென்குமரி 35,110
தென்குரும்பை 27
தென்சுவிந்தாபுரி 129
தென்திசை 128
தென்திருப்பதி 26
தென்றல் 18,42
தென்னந்தோப்பு 23
தென்னவர் 99
தேக்கிலை 42
தேங்காய் 49,65
தேசம் 29,32,35,40,43,46,61,
66,68,69,78,116,125,127
தேமல் 47
தேயிலை 120
தேர் 16,30,31,39,46
தேரை 29
தேவச்சுடர் மணி 44
தேவர் 95
தேள் 58
தேன் 42,62,65,85,99,101
தேன்மொழி 21,46,69,110
தையல் 18,39,78
தொங்கல் 94
தொட்டிச்சிகுளம் 35
தொட்டிப்பாலம் 37
தொட்டியர் 89
தொட்டில் 63
தொடுகுறி 79
தொண்டி 111
தொம்ப வண்ணாத்தி 114
தொழிலாளர் 126
தொன்னூல் 64
தோகையர் 37,45,110,123
தோசம் 114
தோட்டம் 52
தோடு 35
தோத்திரம் 90
தோதகத்தி 120
தோப்பு 25
தோரணம் 91
தோவாளை 128
தோழர் 64,88
தோழன் 64,103, 117
தோழன்மார் 65
தோழி 18,25,26,28,29.31,37,38
தோழிமார் 20,24,51
தோழியர் 15,20,30,32,35.38,
39,41,43,48,55 59
தோள் 52,71,94

நகுலணஞ்சபெருமாள் 117
நகை 58,85
நஞ்சு 41,55,56
நட்சத்திரம் 130
நடசாலை 26,35
நடனசாலை 22
நடுசாமம் 130
நடுவயிறு56
நந்தி 129
நந்தி மடம் 78
நந்தூர் 30
நம்பிபத்து 35
நம்பிமார் 46
நம்புறான் 67
நமன் 43
நரகம் 115
நரம்பு 47
நரை 12
நல்குறி 54
நல்லூர் 128
நல்வரிசை 92
நவரெத்தினம் 63
நளுகுமலை 127
நன்னூல் 64
நஷ்டம் 32
நா 55
நாகம் 111
நாகரம்மன் கோவில் 38
நாங்குமலை 127
நாஞ்சி நாடு 37
நாட்கால் 51
நாட்டகம் 15
நாடக சங்கீதம் 18
நாடிவிளக்கு 14
நாடு 37,61,69,99,103,104,109
நாடுபோற்றான் பாறை 127
நாணம் 110
நாதசுரம் 129
நாதர் 16
நாதன் 56,68
நாமம் 52
நாய் 111,125
நாய்ப்பறை 108
நாய்வாய்ச்சீலை 114
நாயகர் 13
நாயகன் 47
நாயகி 30,35
நார் 95
நாராயணர் 16
நாராயணன் 26,37,126
நால்திசை 110
நால்பேர் 87
நால்மாசம் 37,47
நாழிகை 52,82
நாள் 20,26
நாற்பது 93,46
நித்திய கலியாணி 5
நித்தியம் 44
நித்திரை 47,68
நிலம் 42,46,52,60,61,93
நிழல் 42
நிறம் 73
நிறைநாழி 42,49,55,64
நிறைமரக்கால் 54
நீட்டு 64
நீர் 73
நீர்க்குடம் 13
நீர்ச்சாவி 40
நீரருவி 115
நீலசுவாமி 127
நீலம் 57,71,73
நீலராசன் 127
நீலியம்மை 129
நீறு 52
நுதல் 69
நூத்தெட்டு 55
நூபுரம் 14
நூல் 64,99

நூற்றுவர் 43
நூறு 46
நெஞ்சு 44,54,68,111
நெட்டோலம் 13
நெடுமால் 83
நெத்தி 12,52
நெத்திப்பிறை 18
நெய்யாற்றங்கரை 39
நெய்விளக்கு 42
நெல் 40,43,55,129
நெல்பொரி 49
நெல்வயல் 16
நெல்லை 23
நெல்லைப்பதி 23
நெற்றி 68
நேசம் 35
நேமம் 39
நேரம் 47,69,77,82,91,94,100,111,116,130

பக்தி 43,120
பகட்டுவித்தை 110
பகல் 78,101
பகவதி 35,43,59
பகவதியம்மன் 35
பகவான் 121
பகுத்தறிவு 112
பகை 76
பச்சம் 127
பச்சரிசி 71
பச்சிலை 64,103,104,117,118
பச்சை 49,65,67
பச்சைக்கம்பு 65
பச்சைமண் 86
பச்சைமலை 127
பசி 70
பசு 23,46,51,54,104
பசுங்கிளி 85
பசும்பொன் 35
பசும்பொன் மண்டபம் 112
பஞ்சணை 60,61,63,69,108
பஞ்சமி 59,130
பஞ்சவர் 37,127
பஞசவர்கள் காடு 38
பஞ்சாட்சரம் 64,130
பட்சி 129
பட்டணம் 15
பட்டமாஞ்சேரி 32
பட்டரைஞாண் 93
பட்டறை 40
பட்டிநாய் 113
பட்டு 15,35,54,63,93,94,131
பட்டுக்கச்சை 65
பட்டுச்சேலை 102
பட்டுடை 69
படம் 46,48,127
படுவை 32
படை 69,115
படைநாடு 116
படைவீடு 15,43,51,66,69,77
பண் 64
பண்டகசாலை 65
பண்ணை 23
பணக்குடி 128
பணம் 13,23,55,80,95,102
பணயம் 46
பணிக்கன் 64,89
பணிச்சேலை 15,71
பணிப்பட்டு 49
பணிவிடை 44,65,90,91
பத்திரமா காளி 5,20,45
பத்து 26,49,50,53,58
பதர் 40
பதி 35,38,43,64,69,111,126
பதிவு 54,111
பதினாயிரம் 23,117
பதினாறு 25,111
பதினெட்டு 102;121
பந்தம் 64

பந்தல்	13
பந்து	13,102
பம்பரம்	16,87
பயிர்	28
பர்த்தா	15
பர்வதம்	119
பரசி	92,95
பரணி	22
பரத்தி	92
பரதேசி	29
பரம்பு	92
பரமசிவன்	6,120,121,123–127,130
பரமன்	44,99
பரமன்குளம்	128
பரமார்த்தம்	111
பரமாத்தி	107
பரமேஸ்பரனார்	92,124
பரலோகம்	126
பரவை	93
பராக்கிரமம்	95
பராபரத்தெய்வம்	45
பரி	12,69,91,99,116,126,127
பரிகாரம்	53
பரிசை	66,115
பரிசைக்காரர்	89
பரிமளம்	122
பருக்கன்	71
பருமணல்	18
பருமுறி	71
பருவட்டம்	15,54,55,76,83,102
பருவரை	42
பருவாழை	42
பல்	25,108
பல்பனாபப் பெருமாள்	39
பல்பனாபபுரம்	38
பல்லக்கு	67
பல்லி	15,57,96
பல்லியம்	92
பலகாரம்	38
பலகை	49
பலன்	16,31,34,39,41,45
பலா	42,130
பவளம்	49
பவனி	67,68
பவிசை	125
பழங்கதை	102
பழஞ்சோறு	107
பழநூல்	32
பழம்	64,99
பழவினை	32
பழனிமலை	99
பழுத்திலை	42
பழையகோட்டை	128
பழையகோபுரவாசல்	29
பழையபதி	35
பள்ளி	14,62
பள்ளிவாசல்	82
பளிங்கு	42
பறத்தி	103
பன்னகசாலை	91
பன்னிரண்டு	11,69
பன்னீர்	55,110,122,123,126
பனங்காடு	29
பனை	97
பாக்கிசம்	32
பாக்கியம்	4,27,30
பாக்கிலை	82
பாக்கு	18,65,105,108,109
பாசக்கயிறு	94
பாட்டு	95,131
பாட்டோலை	15
பாண்டிமன்னர்	92
பாணக்கணை	117
பாதகர்	100
ரதசரம்	48
பாதம்	15,35,44,45
பாதமலர்	110
பதாள வாசல்	42

பாதை 32,39,96,100
பாம்பன்குளம் 35
பாம்பு 46,127
பாய்மரம் 48
பார் 37,43
பார்ப்பார் 51
பார்வதியாளகரம் 38
பாரச்சாலை 39
பாரணஞ்ச பெருமாள் 122
பாரதம் 121
பாரமலை 124
பாரவளை 94
பாரளந்தோன் 85
பாராத்தியம் 111
பாருலகு 56
பால் 13,23,46,51,54,62,69
பாலக்குளம் 35
பாலகன் 12,13,30,62-64,113,115
பாலகி 30
பாலசக்கரப்படை 115
பாலம் 45
பாலன் 1,12,15,31,42,50,56,61,64
பாவக்குணம் 108
பாவதோசம் 35
பாவநாசத்துறை 44
பாவநாயகர் 44,45
பாவை 38,124
பாவைநல்லாள் 11,12
பாழ்மடம் 43
பாளையங்கோட்டை 23
பானை 49,73
பிச்சி மலர் 18
பிச்சை 26,40,58
பிசாசி 102
பிசானம் 37
பிசின் 103
பிடாகை 93
பிடிகிழங்கு 42
பிடிபலகை 51
பிணம் 111
பிணி 125
பித்தம் 27,108,125
பிரமசத்தி 129,131
பிரமசத்தியம்மை 128
பிரமன் 18,42,78,86,96,110,114,115
பிராமணர் 23
பில்லு 18
பிலக்காரர் 111
பிள்ளை 12,13,15,18,23,26,27,29, 31,33-35,37,43,45-47,55,57, 45-47,55,57-59,61,89,96,114,131
பிள்ளை மடம் 18
பிறந்த நாள் 68
பிறவி 123,124
பிறை 130
பின்னந்தம் 66
பீடை 18,20
புகழணஞ்சவனார் 78
புகை 73,122
புகையிலை 55,102
புடவை 12,18,70,71,73,74,82,86,107
புண்ணாக்கு 55
புண்ணியவாட்டி 20
புண்ணியன் 115
புத்தகம் 46
புத்தன் குறிச்சி 23
புத்தி 29,57,90
புத்திரன் 5,13,27,44,58,64-66
புத்தூர் 33
புதல்வன் 58,60
புதுக்குளம் 32
புதையல் 80
புரவி 127
புரிசடை 126
புருஷம் 66
புருஷன் 13,55,68,103
புல் 104
புல்லாறு 127

புலசாதி 104
புலமாடன் 108
புலி 102,119
புலிக்குட்டி 32
புலித்தோல் 66
புலியக்குறிச்சி 38
புவனம் 119
புவி 14,56,58,99
புழக்கடை 15
புழு 46
புழுங்கல் 96
புள்ளி 121
புள்ளிக்காரி 18,20
புளகிதம் 47
புளி 29,47,61
புளியறைக்கோட்டை 64
புன்னைமரம் 120
பூ 12,35,46,64,66,78,95,121,123
பூங்காவனம் 65,121
பூங்குழல் 69
பூச்சக்கற்றாடை 20
பூச்சியம் 42
பூசகர் 119
பூசணம் 92
பூசனை 121
பூசுநீறு 93
பூசை 24,32,43,46,126,129–131
பூதம் 127
பூதலம் 1,127
பூந்தலவிதானம் 45
பூந்தனம் 69
பூப்படை 108
பூமண்டலம் 34
பூமரம் 120
பூமலர் 122
பூமி 87,120,122
பூலோகம் 68,77,123,126
பூவாடை 55
பூவுலகு 7,10
பூனை 95
பெட்டகம் 12
பெட்டி 15,54,96
பெண் 13,15,17,27,29,32,68,80,92,103
பெண்ணரசி 42,85
பெண்ணரசு 46,111
பெண்பிள்ளை 104
பெண்புத்தி 43
பெரியசிவன் 125
பெரியசிவனணஞ்ச பெருமாள் 129,131
பெரியநம்பி 127
பெரியபட்டணம் 54
பெரியவணஞ்சவராசன் 78
பெரியோர் 10,92
பெரும்படை 67
பெரும்பாதை 23
பெருமாள் 37
பெருமான் 56
பெருமூச்சு 44,82
பெருவழி 35.69
பெருவளம் 99
பெருவிரல் 43,69
பேடி 37
பேடை 29,37,38,69,77
பேதை 33
பேய் 21,43,68,95,102,108,110,111,113,125
பேராழிக்குளக்கரை 82,83
பேராறு 99
பேரிகை 37
பேழை 32
பைந்தமிழ் 89
பைந்தொடி 77
பைம்பொன் 62,121
பொக்கிஷம் 91
பொங்கல் 16,48,49,102,108
பொட்டணம் 71
பொட்டி 113
பொட்டு 68,69,77,96,87,108

பொடி 103
பொத்தையிடையன் குளம் 45
பொதி 71
பொய்கை 101,121
பொய்கை மலை 121
பொய்கைவனம் 99
பொய் மருந்து 104
பொரி 42,49
பொல்லாங்கு 13,56
பொற்கச்சை 94
பொற்கலை 20
பொற்கொடி 69
பொற்சரிகை 71,93
பொற்படி 8
பொற்பணி 69,77,89
பொற்பாதம் 122
பொற்பணி 69,77,89
பொற்பாதம் 122
பொற்றேர் 32
பொன் 13,20,21,31,32,35,37,39, 46,52,53,55,66,80,91,95,121
பொன்கட்டி 55
பொன்மணி 111
பொன்மணி மண்டபவாசல் 113
பொன்மணி மேடை 113
பொன் மலர் 122
பொன் மலை 121
பொன் மாலை 124
பொன்முடி 101
பொன்முடி பாண்டியன் கோட்டை 34
பொன்னணஞ்ச பெருமாள் 68,78,80, 89,95, 99, 100,102,104,117, 118,121,123–125,127
பொன்னணஞ்சவனார் 78
பொன்னணஞ்சி 85,90,115
பொன்னம்மா 58
பொன்னரைஞ்ஞான் 49
பொன்னாங்குருவி 66
பொன்னிறம் 95
பொன்னுருவி 11,14–16,18, 19,21, 22,30,38–40,42, 43, 49–51, 54,55,57,58,60,115,128,131
பொன்னுருவித்தாயார் 16,20,47,113
பொன்னுருவியம்மை 6,31,32,35,37, 39,40,42,45,47,49,131
பொன்னுருவியம்மை கதை 10
பொன்னுலகு 7,10
போசனம் 47
போதம் 68
போர் 66
போர்க்களம் 91
மக்கள் 12,65,80,85
மகமாயி 23,43
மகரதோரணம் 45
மகராசன் 68,110,121
மகள் 42,46,92,113
மகன் 13,14,18,26,30,33,37,54,58,62, 64,113,129
மகாகோடி 14
மகாதேவர் 12,59,118.122
மகுடம் 92
மங்கை 11,23,25,42,46,47, 49,56,74,82,99, 110,128
மச்சினத்தார் 62
மச்சு 15
மஞ்சணவாடை 77
மஞ்சணை 47,55
மஞ்சள் 46,61,62,68,69
மஞ்சள்விளை 52
மஞ்சாடி 120
மடக்கொடி 25
மடந்தை 69,77
மடம் 113
மடவார் 13,14,19,57,68,69,96,124
மடைப்பள்ளி 46
மடையன் 111
மண் 13,35,56,59,61,86
மண்டபம் 45,46,88,92,108,

109,111,121,123,124,
129
மண்டலம் 78,87
மண்டலிகன் 77
மண்டை 20,43,107,115
மண்ணாட்டு 34
மண்ணானை 7
மணலாறு 128
மணவாளன் 31,43,56,68
மணி 15,67
மணிக்கட்டிப்பொட்டல் 126,127,129
மணித்தொட்டில் 14,62,63
மணிபல் வீச்சு 66
மணிமண்டபம் 115,121,124,130
மணிமாடக்கூடம் 51
மணிமாட மண்டபம் 82
மணிமேடை 64
மணிவிளக்கு 129
மத்தாளப்பாறை 45
மத்தாளம் 89
மத்தியானம் 27
மத்தூர் 33
மதகரி 13,67
மதயானை 24,44,63,67,69,116
மதலை 13,14,31,37,43,60
மதன வேந்தன் 81
மதி 27,69,85,92,97,98,103
மதிமுகம் 77
மதில் 35,45,46
மதுசூதனப்பெருமாள் 129
மதுரங்கிளி 34
மதுரம் 29
மதுரமொழி 13
மந்தி 42,99,111
மந்திர கிரி 121
மந்திரம் 101,102,124
மந்திரவாள் 46
மந்திரவித்தை 102,123
மந்திரவேலன் 100,102
மந்திரஜாலம் 118
மந்திரி 51,63,94,99,113
மயில் 29,35,37,38,42,60,69,
77,80,84,99,128
மயிலாடுஞ் சோலை 99
மரக்கால் 40,49
மரகதம் 85
மரச்சோலை 120
மரம் 23,35,46,51,65,77,98,130
மருத்துவம் 52–58
மருதுமலை 32
மருதுமலை அய்யன் 32
மருதுமலை நாயன் 32
மருதூணி 42,52
மருந்து 61,68,97–100,103–106,111
மருமகன் 110,112,115–117
மல்காரர் 120
மல்லடவு 123
மல்லிகை 18
மல்லு 26
மலடி 12,13,21,29,32,33,37,42
மலர் 93
மலரணை 82
மலை 25,41–43,83,92,100,
101–103,118,119,121, 122,130
மலைக்குறத்தி 46
மலைநாடு 110
மலைமார்பன் 82,95
மலைமிருகம் 42
மலைவேடன் 102
மழு 21,92
மழை 13,42
மறத்தலைவன் 89.91–93,95,
97,99,103
மறவன் 89
மன்மதன் 102
மன்னர் 46,62,65,67
மன்னவர் 11,14,15,52,69,92
மன்னன் 6, 7,64, 68,130

மனுசர் 15,55
மனை 13,35,37,51,69,70,109
மனையாள் 46
மனைவி 69
மா 93
மாகாளி 20
மாச்சிமைத்தாலி 113
மாசம் 21,23,26,47,48
மாசாந்த கட்டளை 39
மாசாந்தம் 35
மாடப்பன் 89
மாடம் 118
மாடமண்டகம் 26
மாடவண்ணான் 69
மாடன் 70
மாடு 104
மாணிக்கக்கல் 95
மாணிக்கம் 15,20,27,49,63,92,93,121
மாத்து 30,31,37,73,80,85,111
மாதர் 32,68,83,114
மாதருறவாடி 103
மாதவிடை 110
மாதாந்தக் கட்டளை 31
மாதுபொன்னுருவி கதை 2
மாதா 26
மாதுளம்பூ மேடை 93
மாந்தையர் 46,61,62
மாந்தோப்பு 23
மாநிலம் 12
மாப்பிளை 113
மாபாவம் 12
மாபாவி 14
மாமரம் 120
மாமலை 61
மாமன் 62,113,116,117
மாமி 108
மாமியார் 110
மாயக்குறளி 73
மாயம் 56
மாயன் 16,32,87
மார்பு 44,47,94
மாரன் 78
மாராப்பு 71
மாரி 121
மாலயன் 21,32
மாலணைஞ்ச பெருமாள் 82
மாலை 11,13,16,18,47,56,68,69,96,114,121
மாவினம் 104
மாளிகை 81,88
மாளிகைப்பூ மேடை 82
மாறநதி 21
மான் 21,23,28,32,52,58,80,85
மானூர் 20
மானூரு அம்பலம் 21
மிருகம் 42
மிளகு 61,120
மின்வட்டம் 7
மின்னொளி 121
மீசை 94
மீன் 92
முக்காலி [illegible]
முக்கோடி 124
முக்தி 126
[illegible] [illegible]
[illegible] [illegible]
[illegible] 14,16,21,[illegible]
[illegible]
[illegible] [illegible]
[illegible] [illegible]
[illegible] [illegible]
[illegible] [illegible]
[illegible] [illegible]
[illegible] [illegible]
[illegible] [illegible]
[illegible] [illegible]
[illegible] [illegible]
[illegible] [illegible]
[illegible] [illegible]
[illegible] [illegible]

முத்தம் 12,14,53,68,108,110,124
முத்தமிழ் 44,99
முத்திரி 37
முத்து 13,37,63,92,94,121,124
முதல் 34
முதல்வன் 13
முதலியழகப்பனார் 27
முதியோர் 37
முதுகு 46
முந்தாங்கிச் சேலை 77
முந்தி 46,77.80,110
முப்பத்திரண்டு 12
முப்பது 20,26,37
முப்பேர் 125
மும்மாரி 37
முரசு 21,64
முருகன் 108
முருகு 94
முருங்கை 12,53
முறம் 13
முன்னந்தம் 66
முன்னூல் 36
முனிமலை 120
முனிவர் 99
மூக்கறையர் 69
மூக்கு 69,107
மூங்கில் 37,65
மூதாக்கள் 32,92
மூப்பன் 108
மூப்பியர் 49
மூப்பு 108
மூலி 102,103,108
மூன்று 20,37,47,52,53, 66,109,111,118
மூன்று முகம் 35,128
மெட்டித்தனம் 87
மெத்தை 61,82,109
மெய் 14,16,66,99
மெய் மருந்து 104
மேகம் 67,102
மேகலை 49
மேகவர்ணப் பச்சிலை 103
மேகவர்ணம் 49
மேடை 39,111
மேதினி 12,13
மேரு 41,95
மேளம் 89
மேளவாத்தியம் 67
மேனி 69
மை 18,35,77
மைந்தன் 15,46
மையல் 69,77,78,103,123,124
மைவிழி 16
மொந்தை 47
மொய்குழலாள் 12
மோகம் 68,110
மோகினி 69
மோச்சம் 20,21
மோசம் 8,68,85,114
மோதிரம் 48
மோர் 15,37
யானை 32,85
யானையேற்றம் 67
ரகசியம் 32,92
ரத்தம் 117
ராசகுமாரன் 113
ராசகுலம் 84
ராசதுரை 80
ராச மருத்துவம் 52
ராச மன்னன் 52
ராசன் 108
ராசா 113
ராமர்கவி 89
ராவுத்தன் 89
ரெத்தினம் 15,49,121,124
ரோசம் 114
லெச்சை 47
லெம்பொன் 64

லெஃமி	49
வக்கணம்	96
வங்களர்	89
வங்குநரி	95
வச்சிர மணி	39
வசை	15,16,23,103,113
வஞ்சக்காரி	96
வஞ்சகம்	69
வஞ்சிக்கொடி	71
வட்டக்கோட்டை	35
வட்டநெடும்பாறை	99
வட்டப்பாறை	99
வட்டம்	35,54
வட்டாரப்பாம்பாட்டி	103
வட்டி	12,34
வட்டில்	55
வட்டுவம்	94
வடக்கு	41,82
வடகரை	93
வடநாடு	69,92,103
வடபாதை	45
வடம்	13
வடமலை	119
வடமாலை	131
வடிவன்	69,82,85,92,127
வடிவு	69
வடிவேல்	49
வடிவேலர்	92
வடிவேலன்	31,43
வடுகர்	89
வண்டக்காரி	96
வண்டத்தனம்	80
வண்டர்	69
வண்டி	51,116
வண்டி மலயன்	109
வண்டு	78
வண்ணப்பட்டு	35
வண்ணமணி	24
வண்ணமயில்	9
வண்ணாத்தி	43,73,78,103,104, 108,110,111,113,114
வண்ணார்	70,85,108,110,116
வண்ணான்	69,71–74,82,92,95,110,123
வம்பு	86,95,101
வம்புக்காரி	68
வயசு	11,25,64
வயல்	26,96,126
வயிடூரியம்	15,67
வயிரம்	15,98
வயிரமணி	24
வயிறு	40,46,52,55,69
வர்ணமுகம்	91
வரம்	26,122,128
வரம்பு	69
வரலாறு	46,69
வரிசை	93,95
வரிப்புலி	99
வருக்கை	99.120
வருஷம்	31,39
வரைத்தடம்	15
வல்லயக்காரர்	68
வல்லயம்	94,96,115
வல்லவர்	16
வல்லவன்	80
வல்லாண்மை	85
வல்லாண்மைக்காரர்	111
வல்லாளதேவன்	89
வலக்காரம்	18,34
வலக்கை	13
வலங்கைகுலம்	5
வலங்கைபுரம்	126
வலசாரி	65
வலது	66
வலது கால்	51,65,66,74
வலதுகை	42,43,46
வலம்	16,54,89
வலம்புரி	99
வலம்புரிச் சங்கு	16

வழுக்கன் பாறை 37
வள்ளல் 35
வள்ளி 2,43
வள்ளியூர் 34,35,128
வளை 54,120
வளைதடி 94
வளையல் 69,93
வளையலொலி 13
வன்காசி 110
வன்னியடி மறவன் 89
வன்னியர் 66,69
வனம் 100,101,104
வாக்கு 20,35,43,68,69,71, 78,80,108,113,125, 127
வாகனம் 21,32
வாகைக்குளம் 45
வாசகன் 68
வாசல் 26,30,46,109,110,113,115,122
வாசல் நடை 15
வாட்டம் 43
வாடை 18,42,83,94,104,108
வாணாள் 37,48,68
வாத்தியம் 89
வாத்தியார் 64
வாது 88,96,101,103
வாதுகாரர் 89
வாதுதொழில் 118
வாமடை 131
வாய் 42,44,57,58,61,107
வார் 69
வாரமடை 119
வாரியூர் 35
வால் 129
வாலசிங்கன் 69
வாலைப்பருவம் 71
வாவி 42,99
வாழ்பதி 41
வாழை 12,56
வாழையிலை 58,102, 111
வாள் 51, 117, 123
வாள்சிரம்பம் 64,65
வாள்படை 13
வான்கோழி 9
வானம் 16,51,126
வானலோகம் 68
வாஸ்த்தாரம் 65
விகடம் 64
விசம் 58,115
விசயநாராயணம் 32
விசயம் 99
விசனம் 80
விசாரம் 89,90,91
விசிறி 55,109
விசை 16
விடலை 35,42,64
விடுதி 65,66,110
விணிருத்தூர் 39
வித்தை 99,102,117,118
விதி 13,14,42,43,57,85
விந்தை 99,109,113
விநாயகர் 64
விபரம் 120,122
விமலன் 89
வியளம் 61
விரதம் 20
விரல் 94
விருது 64
விரும் 12
வில் 37,68,69,77,78,94,102,115,116
வில்லங்கம் 23
வில்லாளர் 116
விலாசம் 65
விலை 63,96
விவரம் 116
விழி 29,35,47,69,79,03
விளக்கு 55,121
விளக்கொளி 43
விளையாட்டு 13,18

விறகு 71,72,102
விஸ்தாரம் 50,65,67,90
வீடு 55,82,109,110,111
வீதி 46,77,91,104
வீரமணி 66,67
வீரமறவன் 118
வீரமாகாளி கோவில் 20
வீரர் 91
வீரவர்ணபட்டு 83
வீரவாள்காரர் 115
வீரவாளி 93
வீரன் 89,90,94,100
வீரனணஞ்சபெருமாள் 115
வீரியம் 7
வீறாயக்குளங்கரை 32
வெங்கலப் பேரிகை 26
வெஞ்சாமரை 89
வெட்டுக்கத்தி 64
வெட்டுளி 117
வெட்டுவாளி 46
வெண்சாமரைக்காரன் 82
வெண்டயம் 94
வெண்டாமரை 22,105
வெண்ணை 43
வெத்திலை 46,65,104,107,110,115
வெயில் 27,47,54
வெருகு 75
வெள்ளநரை 25
வெள்ளம் 73
வெள்ள மடம் 128
வெள்ளவெத்திலை 105
வெள்ளாவி 72,73
வெள்ளாவித்துறை 69,73
வெள்ளாளர் 129
வெள்ளி 94,121
வெள்ளிக் கடையம் 49,94
வெள்ளிக்கிழமை 130,131
வெள்ளிமணி மண்டபம் 111
வெள்ளியணை 82
வெள்ளியரைஞாண் 94
வெள்ளைத் தலை 35
வெள்ளை மடம் 18
வெற்றி 116
வெற்றி முரசு 14
வென்னீர் 55
வேங்கை 43,120
வேசம் 46
வேசை 110
வேட்டி 71,73,83,94
வேட்டை 95
வேடர் 121
வேதம் 64
வேதன் 13
வேதியர் 51
வேந்தன் 66,77,80,90,95,109
வேப்பங்காய் 113
வேப்பிலை 69
வேர்வை 18,55,68,107,109
வேல் 13,47,117
வேல்விழி 16
வேலை 27,42,111
வேழம் 7
வேள்வி 122–124
வேளை 30,65,104
வேனல் 18,27
வைகாசி 35
வைகுண்டப் பெருமடம் 119
வைப்பு 111
வையகம் 2,13,23,46,119,120,126,129
ஜாதிக்காய் 120
ஸ்ரீவைகுண்டப்பதி 23,24

Publications from Palm - Leaf Manuscripts

General Editors **Dr. Shu. Hikosaka, Dr. G. John Samuel**

		Editors			
1.	The Wandering Voice (3 Ballads),	Dr. R. Nirmala Devi	1987	Rs.120.00	US $ 32
2.	The Art of Drumming - Mattaḷaviyal	Dr. V.P.K. Sundaram	1988	Rs. 90.00	US $ 20
3.	The Dateless Muse - Veṅkalarājaṉ Katai	Dr. R. Nirmala Devi	1988	Rs. 80.00	US $ 20
4.	The Unsung Melodies, Palavēcañ Cērvaikkāraṉ Katai,	Dr. V. Murugan	1989	Rs. 75.00	US $ 32
5.	The Divine Pilgrimage - Perumāl cāmi katai	M. Shanmukham Pillai	1992	Rs.200.00	US $ 40
6.	A Tale of Romance - Cakuntalai Nāṭakam	Dr. A. Thasarathan	1994	Rs.300.00	US $ 50
7.	Varma Cūtiram	Dr. P. Subramaniam	1994	Rs.400.00	US $ 50
8.	Peṇṇaraciyār Katai	Dr. K. Jayakumar, D. Boominaganathan	1995	Rs.100.00	US $ 20
9.	Nīli Yaṭcakāṉam	Dr. P. Subramaniam	1996	Rs.150.00	US $ 20
10.	A Tale of Nemesis - Nīli Yaṭcakāṉam	Dr. P. Subramaniam	1996	Rs.250.00	US $ 20
11.	The Valorous Virgins - Peṇṇaraciyār Katai	Dr. K. Jayakumar D. Boominaganathan	1996	Rs. 220.00	US $ 35
12.	A Tale of Betrayal - Cāraṅkataraṉ Yaṭcakāṉam	Dr. P. Subramaniam	1996	Rs. 400.00	US $ 65
13.	The Epic Eternal - Irāmar Katai, Part I & II	Dr. K. Jayakumar	1996	Rs. 900.00	US $130
14.	Destiny and Divinity - Vāraṅkaṉ Katai,	M. Parimanam	1996	Rs. 200.00	US $ 30
15.	The vows Fulfilled - Āmaiyar Ammāṉai,	M. Maruthamuthu	1996	Rs. 450.00	US $ 65
16.	Poetic Petals in the Interior Landscape -Uttaṇṭaṉ Kōvai	R. Jayalakshmi	1996	Rs. 400.00	US $ 50
17.	The Defender of the Faith - Marikarutammāḷ Ammāṉai	Dr. K. Jayakumar, R. Jayalakshmi	1996	Rs. 350.00	US $ 40
18.	Where Justice Chimes - Tērūrnta Cōḻaṉ Yaṭcakāṉam	Dr. P. Subramaniam	1997	Rs. 400.00	US $ 50

General Editor **Dr. G. John Samuel**

19.	Tiṅkaḷūr Aruḷmalai Noṇṭi Nāṭakam	M. Maruthamuthu	1998	Rs. 350.00	US $ 30
20.	Tirukkalampakam	M. Parimanan, R. Jayalakshmi	1999	Rs.300.00	US $ 30
21.	Treatise on Mathematics - Kaṇita Nūl	Dr.P. Subramaniam, K. Sathya Bama	1999	Rs. 300.00	US $ 30
22.	The Scorching Guile - Tampimār Katai	A.K. Perumal, K. Jayakumar	1999	Rs.300.00	US $ 35
23.	The Beatitude Undefiled - Nīlacuvāmi Katai	G. Selvalakshmi	1999	Rs. 350.00	US $ 50
24.	The Measure of Eternity - Vaikuṇṭa Ammāṉai,	Dr. K. Jayakumar	1999	Rs.500.00	US $ 50
25.	Kaṇaṉ the Munificent - Kaṇaṉ Pōr	R. Jayalakshmi	1999	Rs. 500.00	US $ 50
26.	Kōlavarait Tuyilaraṅkaṉ Caritam	P. Subramaniam , K. Sathyabama	2000	Rs.600 .00	US $ 45
27.	The Story of Casting the Net	G. Selva lakshmi	2005	Rs. 215.00	US $ 20
28.	Treatise on Mathematics - Part - II	P. Subramaniam , K. Sathyabama	2005	Rs.210 .00	US $ 20
29.	The Misplaced Royal Romance	G. Uthiradam	2005	Rs.400 .00	US $ 40
30.	A Kuravañji of Riṣivintam	M. Maruthamuthu	2006	Rs.335.00	US $ 35
31.	Akatticar Kalampakam	R. Jayalakshmi	2006	Rs. 200.00	US $ 20
32.	The Story of Kusalavaṉ	G. Selva lakshmi, R. Jayalakshmi	2006	Rs.160.00	US $ 20